www.padippakam.com

ஜனவரி 1996

விலை ரூ. 20




# தினமணி

## பொங்கல் மலர் '96



படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

# வணக்கம்

அன்றாட வாழ்க்கையில் எத்தனை துயரங்கள் இருந்தாலும் விழா நாட்களில் அவற்றையெல்லாம் மறந்துவிட்டு மகிழ்ச்சியும், மலர்ச்சியுமாக இருக்க முற்படுவது மனித இயல்பு. உலகெங்கும் மனித குலத்தின் அடிப்படைத் தேவையான உணவுப் பசி நீக்கும் உழவுத் தொழில், அறுவடைத் திருவிழாவாகப் போற்றப்படுகிறது. வளத்துக்கும் புதிய விடியலுக்கும் அடையாளமாக அதைத் தமிழ்ச் சமுதாயம் பொங்கல் பொங்கிக் கொண்டாடுகிறது.

தமிழ் மக்கள் வாழ்வுடன் பின்னிப் பிணைந்திருக்கும் 'தினமணி' நாளேடு சிறப்பாக ஒரு பொங்கல் மலரை வெளியிடுவதில் பெருமை கொள்கிறது. அன்றாட செய்திகளை வெளியிடும்போதுகூட அவை அந்தந்த தினத்தோடு முடிந்து விடுபவை என்று 'தினமணி' கருதியதில்லை. தொடர்ந்து வாசகர் வாழ்வில் இந்தச் செய்திகளுக்கு உள்ள முக்கியத்துவத்தை அலசி ஆராய்ந்து துறைதோறும் ஆழ்ந்த கட்டுரைகளை வெளியிடுவது தினமணிக்கே உரிய சீரிய மரபாகும். பல்வேறு மாறுபட்ட கருத்துக்களை விவாதிப்பதற்கான ஒரு ஜனநாயக அரங்கமாக இன்று 'தினமணி' விளங்கி வருகிறது.

இந்த மரபையொட்டியே இந்தப் பொங்கல் மலரையும் உருவாக்கியுள்ளோம். ஒரே நாளில் புரட்டிப் பார்த்து ஒதுக்கி விடுவதாக இல்லாமல் எப்போது எடுத்துப் பார்த்தாலும் செறிவுள்ளதாக இது அமைய வேண்டும் என்பதே எங்கள் அவா. எனவே ஒவ்வொரு கட்டுரையும் துணுக்கு போல அல்லாமல் விரிவாகவும் ஆழமாகவும் பல்வேறு துறை அறிஞர்களால் எழுதப்பட்டுள்ளது. தமிழகத்தின் சிறந்த படைப்பாளிகளில் பலர் சுவைநயம் மிகுந்த படைப்புகளை மலரில் வழங்கியுள்ளனர். இவை தவிர இருபதாம் நூற்றாண்டு முடிவடைய இன்னும் நான்கே ஆண்டுகள் உள்ள நிலையில் இந்த நூற்றாண்டில்- உலகில், இந்தியாவில், தமிழ்நாட்டில் நிகழ்ந்த வரலாற்று நிகழ்ச்சிகளின் அரிய தொகுப்பை இம்மலரில் அளித்திருக்கிறோம்.

இந்த மலரைக் குறுகிய காலத்தில் 'தினமணி'க்குத் தயாரித்துக் கொடுத்த மலர் தொகுப்பாசிரியர் **ஞாநி**, அவரது குழுவினர் **பெ. கருணாகரன், சுரேஷ் பால்**, மலர்ப் பக்கங்களை வடிவமைத்த **வே.சூரியநாராயணன்**, படைப்புகளைத் தந்துதவிய எழுத்தாளர்கள், அச்சகத் தொழிலாளர்கள், மலரைக் குறைந்த விலையில் தருவதை சாத்தியப்படுத்திய விளம்பரதாரர்கள், தமிழகம் எங்கும் இதைப் பரவலாக விநியோகிக்கும் முகவர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரியது.

எமது புதிய முயற்சியாகிய இப் பொங்கல் மலருக்கு வாசகர்களாகிய நீங்கள் தரும் ஆதரவும் விமர்சனமும் மேலும் மேலும் எங்களுக்கு உற்சாகத்தை ஊட்டும்.

அறமும் வளமும் எங்கும் தழைக்க எமது பொங்கல் வாழ்த்துக்கள்.

வாழிய செந்தமிழ்
வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திருநாடு

V.S. C°
CASH & CARRY
197, rue du Fg St-Denis
75010 PARIS
Tél 40 34 71 65
Fax 40 34 71 66

ஆசிரியர், தினமணி



படம்: என். செல்வன்

☐ அட்டையில் : வீரமும் விவேகமும் ☐ படங்கள் : ஹாரிமில்லர் (மேல்), சார்லஸ் (கீழ்)

Printed and Published on behalf of Indian Express (Madurai) Ltd., by B.B. SINGH at the DINAMANI PRESS, Express Estates, MADRAS -600 002.

படிப்பகம்

www.padippakam.com

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எங்களது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

போன் : 2869.

# M/s. வ.பி. சண்முகம் பிள்ளை
# ஜுவல்லர்ஸ் A/C

## அழகிய 22 காரட் தங்க நகைகள்
## வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.

### தெற்கு ராஜ வீதி, புதுக்கோட்டை-1.


---

நாங்கள் ஆர்டரின் பேரில் அழகிய உத்திரவாதம் உள்ள
தங்க நகைகளை குறிப்பிட்ட நேரத்தில் செய்து தருகின்றோம்.

---

FOR GREAT SAVINGS IN
INVESTMENT, ENERGY & MAINTENANCE COSTS

**Most Aquaculture Projects, Salt Production Units & Agricultural Concerns**
**BIG or SMALL prefer:**



***Viven - Horizontal Axial Flow Belly Pumps***
***Viven - Vertical Axial Flow Pumps***
***Viven - Volute Casing Mixed Flow Pumps***
***Viven - Vertical Mixed Flow Pumps***
***Viven - Aqua Aspirator Aerators***

*Manufactures & Suppliers:*

VIVEN ENGINEERING INDUSTRIES
244 A SETHU ROAD,
VEDARANIAM - 614 810
☏ : 50435

VIVEN PUMPS
SIDCO ESTATE
NAGAPATTINAM
☎ : 7293



படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே

| | | |
|---|---|---|
| சுப்ரமணிய பாரதி | தமிழா, கவனி! | 9 |
| முடியரசன் | தமிழ் காப்போம்! | 10 |
| இந்திரா பார்த்தசாரதி | ராமாநுஜர் | 11 |
| அசோகமித்திரன் | சாமியாருக்கு ஒரு மணப்பெண் | 17 |
| சா. கந்தசாமி | வந்தனா எஸ். ஐயர் | 23 |
| சுந்தர ராமசாமி | நாடார் சார் | 33 |
| கோபி கிருஷ்ணன் | உற்ற நண்பர்கள் | 46 |
| சுரேஷ்குமார் இந்திரஜித் | பீஹாரும் ஜாக்குலினும் | 49 |
| ஆர். சூடாமணி | இனி மீட்சி இல்லை | 53 |
| இரா. முருகன் | பூச்சி | 59 |
| பிரபஞ்சன் | யாசுமின் அக்கா | 65 |
| பொன்னீலன் | ராம்ராம் | 73 |
| அம்பை | கடற்கரையில் ஒரு காவிப் பிள்ளையார் | 81 |
| திலீப்குமார் | அக்ரஹாரத்தில் பூனை | 87 |
| விட்டல்ராவ் | சுழற்சி | 99 |
| வண்ணதாசன் | பெருக்கு | 103 |
| இந்திரன் | மாறிவரும் நவீன கலை | 107 |
| வெங்கடேஷ் சக்ரவர்த்தி | மணிரத்னமும் சினிமா அரசியலும் | 113 |
| கலைஞர் கருணாநிதி | பதில்கள் | 121 |
| எஸ். வைதீஸ்வரன் | விரல் மீட்டிய மழை | 130 |
| ஞானக்கூத்தன் | பூனை | 131 |
| விக்ரமாதித்யன் | ஆஷ்-ட்ரே | 134 |
| வைரமுத்து | தவம் | 135 |
| பழமலய் | பச்சைப் பாலைவனம் | 138 |
| அப்துல் ரகுமான் | சுவாசத்தின் சுவாரஸ்யம் | 139 |
| மு. மேத்தா | என் கவிதை | 142 |
| சிற்பி | இறகு | 143 |
| இன்குலாப் | முழங்கை வளையல் | 145 |
| ஆல்ஃபர்ட் ஜாய்ஸ் கில்மர் | மரங்கள் | 146 |
| கி. ராஜநாராயணன் | கிசி! | 149 |
| க. பஞ்சாங்கம் | பருவத்தில் பட்ட பாடு | 153 |
| நாராயண ரெட்டி | மூடுமந்திரம் உதவாது | 157 |
| ஆர். வித்யாசாகர் | பறிக்கப்பட்ட குழந்தைப் பருவம் | 161 |
| வெ.பா. ஆத்ரேயா | இந்தியா திவாலாகிறதா? | 169 |
| தமிழண்ணல் | ஐந்தில் வளைக்கலாம் | 177 |
| வா.செ. குழந்தைசாமி | கலைச்சொல் வங்கி | 183 |
| மைதிலி சிவராமன் | சிவப்புப் பெண்கள் | 189 |
| ஆனந்தி | கறுப்புப் பெண்கள் | 203 |
| நெடுஞ்செழியன் | நாளை நமதே? | 217 |
| சுரேஷ் பால் | இந்த நூற்றாண்டின் கதை | 227 |

படிப்பகம்

www.padippakam.com



## தங்கமான ருசி தரும்
## தங்கமான பொங்கல் வாழ்த்துக்கள்!



ஆனந்தமான குடும்பம் மிகுந்த ஆனந்தத்துடன் அருந்தும் சுவையான டீ – சக்ரா கோல்ட் டீ. காலை முதல் மாலை வரை அன்பும், சிநேகமும், பரிவும், கனிவும் அக்கறையும் நிறைந்த பொன்னான நேரத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் டீ. மிகச்சிறந்த அஸ்ஸாம் தேயிலைகளின் அற்புதக் கலவை சக்ரா கோல்ட் டீ. சர்வதேச டபிள் ஸீல் பாக்கில் உங்களுக்கு கிடைக்கிறது.




**டாட்டாவின்**
**சக்ரா கோல்ட் டீ**
**தங்கமான ருசி**

TATA TEA LIMITED

A TATA PRODUCT

McCANN/BLR/TTL/15/95 TAM

படிப்பகம்

www.padippakam.com



# தமிழா, கவனி!

**சுப்ரமணிய பாரதி**

உலகத்தில் எங்கு பார்த்தாலும் நிறைந்து கிடக்கும் லாவண்யங்களைத் தமிழர்கள் கவனிப்பது கிடையாது. சனிக்கிழமை சாயங்காலந்தோறும் குளக்கரைகளிற் போய்க் கருடன் பார்ப்பதற்கென்றால் நம்மவர்கள் கூட்டங் கூட்டமாக ஓடுகிறார்கள். சூரியாஸ்தமய காலத்தில் வானத்திலே தோன்றும் அதிசயங்களைப் பார்க்க ஒருவன்கூடப் போவ(கிற) தில்லை. அப்போது வானத்திலே இந்திர ஜால மஹேந்திர ஜாலங்களெல்லாம் நடக்கின்றன. இந்த க்ஷணமிருந்த தோற்றம் அடுத்த க்ஷணம் இருப்பதில்லை. உலகத்திலுள்ள திரவிய முழுவதையும் செலவிட்டு வர்ணக் காட்சிகள் ஏற்படுத்திப் பார்ப்போமானால் (லும்) அது சூர்யாஸ்தமய காலத்தில் வானத்திலே நாம் செலவில்லாமல் பார்க்கக்கூடிய காட்சிகளிலே கோடியிலொரு பங்கு கூடக் காணாது வாண வேடிக்கைகள் பார்க்க ஒரு செல்வன் பதினாயிரக் கணக்கான திரவியம் செலவிடுகிறான். அவனது செல்வத்தினாலன்றோ இந்தக் காட்சி கலபமாகிறதென்று அதைப் பார்த்து ஆயிரம் ஏழைகள் பெருமூச்செறிகிறார்கள். சகோதரா! சூர்யாஸ்தமயத்தின் விநோதங்களைச் சென்று பார். சூரியனைப் பார்த்தால் கண்ணுக்குக் கெடுதி என்ற குருடர் நம்பிக்கையைப் பொருட்டாக்காதே சூரியனைப் பார்ப்பது பாவமென்று சொல்லும் மூடர் சாஸ்திரத்தைக் கண்கொண்டு பார்க்காதே.

சூர்யாஸ்தமயத்தின் அற்புத சௌந்தர்யங்களை எழுதிப் பிறர் மனதில் படும்படி செய்வது சாத்தியமில்லை. (நேரிலே கொண்டு காட்டினாலும் பலருக்கு ஆரம்பத்திலே கண் கூசுவது தான் அர்த்தமாகுமேயல்லாமல், விஷயம் தெரியாது) சகோதரா! நீயாகவே போய்ப் பல தினம் அடுத்துப் பார்க்க வேண்டும். பிறகுதான் உனக்கு அந்தத் தெய்வக்காட்சி சிறிது சிறிதாக விளங்கும். சூர்யோதயத்திலேயும் சூர்யாஸ்தமயத்திலும் வானத்தில் நடக்கும் இந்திர ஜாலக் காட்சியில் க்ஷணந்தோறும் புதிய புதிய விநோதங்கள் மாத்திரமேயன்றி இன்னுமொரு விசேஷமுண்டு. நேற்று இருந்தது போல் இன்றைக்கு இராது. இன்று இருப்பதுபோல நாளை இராது. தினந்தோறும் வெவ்வேறு வியப்புக்கள் வெவ்வேறு உலகங்கள்; வெவ்வேறு மஹிமைகள், வெவ்வேறு கனவுகள், வெவ்வேறு ஆனந்தங்கள், வெவ்வேறு அநிர்வசவீயங்கள்.

சில தினங்களின் முன்பு ஓர் மாலைப்பொழுதில் நான் கண்ட அதிசயங்களை ஒருவாறு இங்குக் குறிப்பிடுகிறேன். அடிவானத்தில் சூர்ய கோளம் தகதகவென்று கழன்று கொண்டிருந்தது. இருபது கோடி மின்னல்களை எடுத்து ஒரு சக்கரமாக வார்த்துச் சுழற்றுவது போலிருந்தது ஆரம்பத்திலேதான் கண் கூசும். சிறிது நேரம் உற்று நோக்கிக் கொண்டிருந்தால், பிறகு கண்கூச்சம் தீர்ந்து போய்விடும். இரண்டு வட்டத் தகடுகள் ஒன்றின் மேலொன்று சுழலும். கீழே இருப்பது சுத்தமான மின்வட்டம். மேலே மரகத வட்டம், பச்சை வர்ணம்! அற்புதமான பசுமை!

பச்சை தகடு பின்புறத்திலிருக்கும் மின் தகட்டை முழுதும் மறைத்துக்கொண்டிருக்கும். ஆயினும் இடையிடையே பின்னுள்ள வட்டத்தின் வயிரக்கிரணங்கள் கண்மீது பாயும்.

பார்! சூர்யனைச்சுற்றி மேகங்களெல்லாம் தீப்பட்டெரிவது போலத் தோன்றுகிறது! ஆஹா! என்ன வர்ணங்கள்! எத்தனை வித வடிவங்கள்! எத்தனை ஆயிர விதமான கலப்புக்கள்! அக்கினிக் குழம்பு! தங்கம் காய்ச்சிவிட்ட ஓடைகள்! எரிகின்ற தங்கத் தீவுகள்!

நீல ஏரிகள்! கரும் பூதங்கள்! எத்தனை வகை நீலம்! எத்தனை விதச் செம்மை! எத்தனை வகைப் பசுமை! எத்தனை வகைக் கருமை! நீல ஏரியின் மீது மிதக்கும் தங்கத் தோணிகள்! எரிகின்ற தங்க ஜரிகைக் கரை போட்ட கரிய சிகரங்கள்! தங்கத் திமிங்கிலங்கள் மிதக்கும் கருங்கடல்! எங்கு பார்த்தாலும் ஒளித் திரள், வர்ணக் களஞ்சியம், போ போ, என்னால் அதை வர்ணிக்க முடியாது.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் காப்போம்

முடியரசன்



பிறந்தநிலம் ஒன்றுண்டு வணங்கல் வேண்டும்
பேசுமொழி ஒன்றுண்டு போற்றல் வேண்டும்
சிறந்தபொருள் இவற்றின்மேல் ஒன்றும் இல்லை
சிந்தித்தே இவைகாக்க முனைவோம் வாரீர்!
கரந்துவரும் பகையுண்டு நினைவிற் கொள்க!
காலமெலாம் அடிமைசெய விழைதல் வேண்டா!
இறந்தபினும் தலைமுறைகள் நம்மை வாழ்த்த
ஏற்றசெயல் ஈதொன்றே காப்போம் வாரீர்!

இந்நாட்டிற் சூரியனவென் றியம்பு கின்ற
ஈரேழு மொழிகளுக்கும் உரிமை வேண்டும்
* வெந்காட்ட ஒருமொழியும் அதன்மே லேறி
வீற்றிருக்க ஒருமொழியும் வேண்டா! வேண்டா!
என்னாட்டிற் கலைக்கூடம் ஆட்சிமன்றம்
எத்துறையும் தமிழ்மொழியின் ஆட்சிவேண்டும்;
இந்நாட்டம் நிறைவெய்த வில்லை என்றால்
இருந்தென்ன வாழ்ந்தென்ன சாவே மேலாம்

ஈன்றெடுத்த தாய்மொழிக்கு வாழ்வு வேண்டி
எடுத்துரைக்க முனைந்ததுமோர் குற்றம் ஆமோ?
ஆன்றவிந்த கொள்கையினார் தமிழ் மொழிக்கே
அரசுரிமை வேண்டியதும் குற்றம் ஆமோ?

ஏன்புகுந்தார் சிறைக்கூடம்? ஆசா னாக
இருந்தசிலர் பதவியையும் ஏனி ழந்தார்?
நான்துணிந்து கூறிடுவேன் பதவி என்ன
நற்றமிழின் உயர்ந்ததுவோ *சீசீ* தூசி!

சிறைசெல்லப் புலவர்சிலர் வேண்டும் இன்று;
செந்தமிழின் உயர்வுதனை வேண்டி நின்று
முறைசெய்யப் பதவிதனை இழப்ப தற்கும்
முனைந்துவரும் புலவர்சிலர் வேண்டு மின்று;
குறைசெய்யும் ஆள்வோரின் கொடுமைக் காளாய்க்
குருதியுடன் உயிரீயப் புலவர் வேண்டும்;
நிறைசெய்ய உயிரீயும் புலவர் தம்முள்
நிற்குமுதற் புலவன்நான் ஆக வேண்டும்;

வீடென்ன மனையென்ன மக்க ளென்ன
வீணுக்கு வாழ்வென்ன பதவி என்ன
நாடென்ன மொழியன்னை நலியும் போது?
நாமென்ன மரமென்று நினைந்தார் போலும்!
* ஓடென்ன மெலிந்தென்ன? நரம்பி லெல்லாம்
ஓடுவது புண்ணீரா? செந்நீர் வெள்ளம்;
ஈடென்ன கண்டதுண்டு தமிழ் மொழிக்கே?
ஈந்திடுவோம் நம்முயிரை; வாகை கொள்வோம்.

* வெந் - முதுகு. * ஓடென்ன - ஓடுபோல



படிப்பகம்

www.padippakam.com



# ராமாநுஜர்

## இந்திரா பார்த்தசாரதி

### தற்போது ஆசிரியர் எழுதி வரும் நாடகத்திலிருந்து ஒரு பகுதி இது

திரை விலகும்போது, மேடையில் ஒளி வெள்ளம். மக்கள் கூடி வீதியில் செல்கின்றார்கள் என்பதற்கான ஒலிக் குறிப்பு.

நாதஸ்வர இசை.

சில விநாடிகளுக்குப் பிறகு, மேடையின் இடப் புறத்திலிருந்து ஓர் ஆணும் பெண்ணும் வருகின்றனர்.

மிகவும் அழகான பெண். பொன்னிறத் திருமேனி.

ஆண், அகன்ற தோளுடைய நெடிய உருவத்தினன். கரிய திருமேனி. போர் வீரரைப் போன்ற தோற்றம்.

அவர் அப்பெண்ணின்மீது வெயில் படக் கூடா தென்பதற்காகக் குடை பிடித்து வருகிறார். காதல் மீதூர அவள் முகத்தையே பார்த்துக்கொண்டு நடக்கிறார்.

அவர்கள் மேடையை ஒரு சுற்று சுற்றிய பிறகு, வலக்கோடியைச் சென்றடையும்போது, இடப்புறத்திலிருந்து, ராமாநுஜரும் இரண்டு சிஷ்யர்களும் வருகின்றனர்.

சிஷ்யர்கள் ஆச்சரியத்துடன் அந்த தம்பதிகளை நோக்குகின்றனர்.

உடையவர் முகத்தில் புன்னகை.

ராமாநுஜரையும், அவர் சிஷ்யர்களையும் அத்தம்பதி கவனிக்கவில்லை. வலப்பக்கமாகச் சென்று விடுகின்றனர்.)

**சிஷ்யன் (1):** யார் அந்தக் கிறுக்கன், பெண்ணுக்குக் குடை பிடித்துக் கொண்டு?

**சிஷ்யன் (2):** (ஏளனக் குறிப்பு) வெயிலாயிருக்கிறதல்லவா,' தேவியின் திருமேனி கருகிவிட்டால்?

**சிஷ்யன் (1):** அவனுடைய சரீரத்தைப் போலவா?

(இருவரும் சிரிக்கின்றனர். உடையவர் அவர்களை கோபத்துடன் பார்க்கிறார். சிஷ்யர்கள் தலைகுனிகின்றனர்.)

**ராமாநுஜர்:** எது கறுப்பு, உங்கள் மனமா, அவருடைய நிறமா?

(மௌனம்)

**ராமாநுஜர்:** அவன் அன்பு செய்யத் தெரிந்தவன். அவன் யாரென்று தெரியுமா?

**சிஷ்யன் (1), (2):** தெரியாது.

**ராமாநுஜர்:** அகளங்கச் சோழனின் மெய்க்காப்பாளன், உறங்காவில்லி. அவள் அவன் மனைவி, பொன்னாச்சி, அழகை உபாசிக்கின்றான், அது தப்பா?

**சிஷ்யர் (1):** ம...னை..வி...? (இழுக்கிறான்)

**ராமாநுஜர்:** மனைவியாயிருந்தால் என்ன, அரங்கனாயிருந்தால் என்ன, அழகு அழகுதான். இந்தப் பெண்ணிடம் உள்ளழகு, புற அழகு இரண்டுமிருக்கிறது. அவர்களிருவரையும் நான் கூப்பிடுவதாக அழைத்து வாருங்கள்.

(இவர்கள் பேசும்போது, நாதஸ்வர இசை தொடர்ந்து மெல்லிழையாய்க் கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

சிஷ்யர்கள் இருவரும் வலப்புறம் நோக்கிச் செல்கின்றனர்.

உடையவர் சிந்தனையிலாழ்ந்து, 'சில கணங்கள் உலாவுகிறார்.

அப்பொழுது திருவரங்கப் பெருமாள் அரையர் இடப்பக்கத்திலிருந்து ராமாநுஜரை நோக்கி வேகமாக வருகின்றார். ராமாநுஜர் அவரைப் பார்த்து புன்னகை செய்கிறார்...)

**ராமாநுஜர்:** அரையரே, என்ன இவ்வளவு அவசரம்?

www.padippakam.com

*அரையர்:* (பதற்றத்துடன்): உடையவரே, நேற்று.... (சொல்ல வந்ததை முடிக்க முடியாமல் கண்கள் பனித்துத் தடுமாறுகிறார்).

(ராமானுஜர் அவர் தோள்மீது கைவைத்துப் புன்னகை செய்கிறார்)

***அரையர்:*** உண்மையா, ஸ்வாமி?

*ராமாநுஜர்* (புன்னகையுடன்): இறைவன் என்னை உடனே அழைத்துக் கொள்ள விரும்பவில்லை. கோயில் அர்ச்சகர்களின் கொலை முயற்சி தோல்வியடைந்தது.

(அவர் கண்களை மூடிக் கொள்கிறார். இருள்... சில விநாடிகளுக்குப் பிறகு மேடையில் நீலநிற ஒளி.

பின் மேடை வலக்கோடியருகே கையில் பிச்சைப் பாத்திரத்துடன் ராமாநுஜர் நிற்கின்றார், பாடுகிறார்)

'உந்துமதக் களிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்தகோபன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாட
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்'

(அவர் பாடி முடித்தவுடன் ஒரு பெண்மணி- நடுத்தர வயது, முகத்தில் எல்லையற்ற சோகம்- கையில் பாத்திரத்துடன் வருகிறாள்.

ராமாநுஜர் புன்னகை.

பெண்மணியின் கை அன்னமிடும்போது நடுங்குகிறது.

கண்கள் பனிக்கின்றன...)

*ராமாநுஜர்:* ஏன் சோகம்! வீட்டில் ஏதாவது...?

(மௌனம். கண்களிலிருந்து நீர் பெருகி ஓடுகிறது. பேச இயலாமல் உள்ளே 'விருட்'டென்று சென்று




படிப்பகம்

www.padippakam.com

விடுகிறாள். ராமாநுஜர் ஒன்றும் புரியாமல் அவள் போன திசையை நோக்குகிறார். கையிலிருக்கும் அன்னத்தைப் பார்க்கிறார். சிறிது அன்னத்தை எடுத்து மோந்து முகத்தில் வேதனையுடன் கண்களை மூடிக் கொள்கிறார். அப்பொழுது பெரியநம்பி அங்கு வருகிறார். ராமாநுஜர் அருகில் வந்து அவர் வேதனையுடன் கண்கள் மூடிய நிலையில் நிற்பதைக் கண்டு திகைக்கிறார்)

**பெரியநம்பி:** உடையவரே.... ஏன் இப்படி....? (ராமாநுஜர் பிச்சைப் பாத்திரத்தை அவரிடம் காட்டுகிறார். பெரிய நம்பி ஒன்றும் புரியாமல் ராமாநுஜரைப் பார்க்கிறார்.)

**ராமாநுஜர்:** நஞ்சு கலந்த உணவு என்னைக் கொல்ல அர்ச்சகர்களுடைய சதி. இந்த வீட்டம்மாளால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கண்ணீரைச் சாட்சியாக்கி உள்ளே போய்விட்டார்.



www.padippakam.com

பெரியநம்பி: (கலவரத்துடன்) ஏன் இந்தச் சதி?

ராமாநுஜர்: அன்று உங்கள் மகள் அத்துழாய் அரங்கனை நடுவீதியில் நிறுத்தி வைத்தபோது அர்ச்சகர்கள் திட்டமிட்ட சதியாக இருக்க வேண்டும். அன்றே நான் சந்தேகித்தேன். உறுதியாகிவிட்டது. மனிதப் பிறவி எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அவ்வளவு சுலபமாக நான் சாக விரும்பவில்லை. (புன்னகை செய்கிறார்).

(இருள் ராமாநுஜரும் அரையரும் முன்பு நின்ற நிலையிலேயே நிற்கின்றனர். ராமாநுஜர் கண்களைத் திறக்கிறார்)

அரையர்: உங்களைக் கொல்லத் துணிந்த அர்ச்சகர்கள் ஊரைவிட்டே ஓடிவிட்டனர். இப்பொழுது தான் காரணம் புரிகிறது.



## அன்புக்குத் தடை உத்தரவு போட இயலாது

ராமாநுஜர்: என்ன காரணம்?

அரையர்: 'குற்றமுள்ள நெஞ்சு......'

ராமாநுஜர்: (இடைமறித்து) அவர்கள் அவ்வளவு கண்ணியமானவர்கள் அல்லர். கோயில் சொத்தை அவர்கள் களவாடி இருக்கிறார்கள். அதற்கான சான்று என்னிடம் இருக்கிறது. கொலைக் குற்றமும் சேர்ந்துவிட்டால் என்ன ஆகுமென்று பயந்து ஓடிவிட்டனர். (அப்பொழுது சிஷ்யர்கள் (1), (2), உறங்காவில்லி, பொன்னாச்சி ஆகிய நால்வரும் வலப்பக்கத்திலிருந்து வருகின்றனர். உறங்காவில்லியும், பொன்னாச்சியும் உடையவர் பாதங்களைத் தொட்டு வணங்குகின்றனர். (ராமாநுஜர் உறங்காவில்லியைத் தொட்டு எடுத்து நிறுத்துகின்றார்.)

ராமாநுஜர்: (புன்னகையுடன்) குடை எங்கே?

உறங்காவில்லி: வெயில் இப்பொழுது சற்றுத் தணிந்திருக்கிறது.

பொன்னாச்சி: அவர் எனக்குக் குடை பிடித்து வருவது எனக்குப் பிடிக்கவில்லை; அவரை என்னால் தடுத்து நிறுத்தமுடியவில்லை, உடையவரே.

ராமாநுஜர்: எதற்காக தடுத்து நிறுத்த வேண்டும்? அன்புக்குத் தடை உத்தரவு போட இயலாது. உறங்காவில்லி அழகை ஆராதிக்கிறவன் அப்படித்தானே?

உறங்காவில்லி: ஆமாம்.

ராமாநுஜர்: பொன்னாச்சியின் அழகைப்போல் வேறு அழகு எதையும் நீ பார்த்ததில்லையா?

உறங்காவில்லி: இல்லை... அப்படி ஓர் அழகு இருக்கவும் முடியாது.

ராமாநுஜர்: என்னுடன் வா காட்டுகிறேன். (உறங்காவில்லி பொன்னாச்சியைப் பார்க்கிறான்...)

பொன்னாச்சி: போய் வாருங்கள். உடையவர் உங்களுக்கு நல்லதைத்தான் சொல்வார்.

ராமாநுஜர்: நீயும் வா... அரையரே, நீங்களும் வாருங்கள். (இருள் சில விநாடிகளுக்குப் பிறகு மேடையின் பின்புறத்தில் நீண்டு சயனித்திருக்கும் அரங்கனின் நிழலுருவத் தோற்றம். முன்மேடை நடுப்பகுதியில் ராமாநுஜர் உறங்காவில்லி, பொன்னாச்சி, அரையர், அந்நிழலுருவத் தோற்றத்தை தரிசித்து நிற்கின்றனர்.)

ராமாநுஜர்: அங்கே பார்... அரங்கனின் கண்களை, தாமரைப் பூவைப் போன்ற அளவிற்றாயினும் கடலினும் ஆழமாய் இருக்கின்றன. அப்பவளச் செவ்வாயை உற்றுப் பார். அந்த நீல மேனி அப்பப்பா.... என்ன காட்சி. அற்புதம்! நீலக்கடல் எரியுண்டது போல், தாமரைக் கைகள், முகம், சுதர்ஸன ஆழி.

(ராமாநுஜர் அரையரைப் பார்க்கிறார். அவர் பாடத் தொடங்கி விடுகிறார். கோயில் மணி)

**'கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்**
**உண்ட வாயன் என்னுள்ளம் கவர்ந்தானை**
**அண்டர்கோன் அணி அரங்கன் என்ன முதினைக்**
**கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே**

(உறங்காவில்லி மெய்மறந்து நிற்கிறார், அவர் கைகள் பொன்னாச்சியின் கைகளை இறுகப் பற்றுகின்றன, பொன்னாச்சியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர்).

ராமாநுஜர்: புவன சுந்தரனே பிரபஞ்சமயமாய் நிற்கிறான்.

(மௌனம்)

ராமாநுஜர்: (தொடர்ந்து) நேசிக்கத் தெரிந்தால் பிரபஞ்சம் அழகு.

(மௌனம்)

ராமாநுஜர்: பிரபஞ்சமே நாம் என்று உணர்ந்தால், பேதத்துக்கே இடமில்லை, இதுவரை குறுகியிருந்த உன் பிரபஞ்சம் இப்பொழுது விசாலமாய்த் தெரிகிறதா, உறங்காவில்லி?

உறங்காவில்லி: (கண்களைத் திறந்தவாறு) ஆம். ஸ்வாமி.

(உறங்காவில்லி உடையவரின் பாதங்களைத் தொட்டு வணங்க முற்படுகின்றார். அவர் தடுத்து நிறுத்துகின்றார்.)

ராமாநுஜர்: சரி, வா - போகலாம்.

இருள் சில விநாடிகளுக்குப் பிறகு, ராமாநுஜர் உறங்காவில்லியின் தோள் மீது தம் கையை வைத்துக் கொண்டு பின் மேடைப் புறத்திலிருந்து வருகிறார். அருகில் அரையர், பொன்னாச்சி முன் வலப்புறத்திலிருந்து சிஷ்யர்கள் (1), (2) வருகின்றனர். ராமானுஜரும், மற்றவர்களும், அவர்களைக் கவனிக்கவில்லை. அவர்கள் இடப்புறமாக வெளியேறுகின்றனர்.

சிஷ்யன் (1): என்ன உடையவர் இப்படி.

சிஷ்யன் (2): ஆமாம் அது தான் புரியவில்லை.

சிஷ்யன் (1): நீராடிய பிறகு மறவன் தோளிலா அவர் கை இருக்க வேண்டும்?

சிஷ்யன் (2): இன்னொன்று தெரியுமா?

சிஷ்யன் (1): காவிரியில் நீராடப் போகுமுன் பார்த்திருக்கிறாயா?

சிஷ்யன் (2): அந்தணர் கூரேசர் தோளின் மீது கை!

சிஷ்யன் (1): நீராடிய பிறகு.

சிஷ்யன் (2): மறவன் தோளில் கை!

சிஷ்யன் (1): கோயிலுக்குப் போய்விட்டு வருகிறார்கள் போலிருக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

**சிஷ்யன் (2):** (வலப்புறம் நோக்கி) அதோ உடையவர் தனியே வருகிறார்.

**சிஷ்யன் (1):** இதைப் பற்றி அவரையே கேட்டு விடுவோம்.

**சிஷ்யன் (2):** எது வேண்டுமானாலும் கேட்கலாமென்று அவரே சொல்லியிருக்கிறாரே.

**சிஷ்யன் (1):** மனத்தடை கூடாது என்பது தானே அவர் சித்தாந்தம்.

**சிஷ்யன் (2):** கேள்வியே அறிவின் ஆரம்பம் என்பது தானே அவர் தத்துவம். (உடையவர் வருகிறார். சிஷ்யர்கள் வணங்குகின்றனர். அவர்களது தோளில் கை வைத்துப் புன்னகை செய்கிறார் அவர்).

**சிஷ்யன் (1):** உடையவரே ஒரு சந்தேகம்.

**ராமாநுஜர்:** நம் தத்துவ தரிசனம் பற்றியா?

**சிஷ்யன் (2):** இல்லை .காவிரியில் நீராடுவதற்கு முன் அந்தணர் கூரேசர் மீது உங்கள் கை.

**சிஷ்யன் (1):** நீராடி பரிசுத்தமான பிறகு, மறவன் உறங்காவில்லி மீது உங்கள் கை

**சிஷ்யன் (1), (2):** இது தான் எங்களுக்குப் புரியவில்லை.

**ராமாநுஜர்** (புன்னகையுடன்): உங்களுக்கு நம்தத்துவ தரிசனமும் புரியவில்லை என்று எனக்குப் புரிகிறது.

**சிஷ்யன் (1):** தத்துவ தரிசனம் புரிகிறது, ஸ்வாமி...

## வாழ்க்கையும் தத்துவமும் வெவ்வேறல்ல. இது உங்களுக்குப் புரியவில்லை

சித், அசித், ஈஸ்வரன்...

**ராமாநுஜர்:** (இடை மறித்து) போதும்... வாழ்க்கையும் தத்துவமும் வெவ்வேறல்ல என்பது உங்களுக்குப் புரியவில்லை. இப்பொழுது நேரமில்லை, பிறகு விளக்குகிறேன்...

(போய்விடுகிறார். அவர் போன திசையை சிஷ்யர்கள் பார்த்துக் கொண்டே நிற்கின்றனர். இருள்...

சில கணங்களுக்குப் பிறகு, வெளிவரும்போது முந்திய காட்சியில் பார்த்த சிஷ்யர்கள் (1), (2) கையில் கிழிந்த வேட்டிகளுடன் கோபத்துடன் நிற்கின்றனர்.

**சிஷ்யன் (1):** என்ன அக்கிரமம், யார் இந்த வேஷ்டியைக் கிழித்துப் போட்டிருக்கிறார்கள்?

**சிஷ்யன் (2):** அவன் யாரென்று தெரிந்தால் சும்மாவிடக் கூடாது.

**சிஷ்யன் (1):** கயவன்.

**சிஷ்யன் (2):** அயோக்கியன்.

**சிஷ்யன் (1):** பொறாமைக்காரன்

**சிஷ்யன் (2):** புது வேட்டி...

**சிஷ்யன் (1):** நஷ்டத்தை யார் ஈடு செய்வது?

**சிஷ்யன் (2):** உடையவரிடம் சொல்வோம், (உடையவர் அப்பொழுது இடப்புறத்திலிருந்து வருகின்றார்.)

**சிஷ்யன் (1), (2):** (கோபத்துடன்) எங்கள் வேட்டி...

**ராமாநுஜர்:** (இடைமறித்து) கேட்டுக்கொண்டு தான் வருகிறேன். உங்கள் கோபம் புரிகிறது. அதைப் பற்றி விசாரிப்போம், சரி எனக்காக நீங்கள் ஒன்று செய்ய வேண்டும்.

**சிஷ்யன் (1):** (சற்று ஏமாற்றத்துடன்) என்ன?

(மௌனம்:)

**சிஷ்யன்: (2):** சொல்லுங்கள்

**ராமாநுஜர்:** இன்றிரவு நீங்கள் இருவரும் உறங்காவில்லியின் வீட்டுக்குப் போய்.... (நிறுத்துகிறார்).

(மௌனம்)

**சிஷ்யன் (1):** போய்....?

**ராமாநுஜர்:** பொன்னாச்சி உறங்கும் போது அவள் அணிந்திருக்கும் நகைகளைத் திருடிக் கொண்டு வர வேண்டும்....

**சிஷ்யன் (1, 2):** (திடுக்கிட்டு) திருட வேண்டுமா? என்ன சொல்லுகிறீர்கள், உடையவரே...

**ராமாநுஜர்:** புரியவில்லையா?

**சிஷ்யர்கள் (1, 2):** உறங்கா வில்லி...?

**ராமாநுஜர்:** அதுதான் உங்கள் ஆட்சேபணையா? பயப்படாதீர்கள், அவன் அகளங்கச் சோழனுக்குப் பாதுகாவலாகச் சென்றிருக்கிறான். இன்றிரவுதான் திரும்புகிறான் அதற்குள் நீங்கள் போய்....

**சிஷ்யர்கள் (1, 2):** எதற்காகத் திருட வேண்டும்?

**ராமாநுஜர்:** சொன்னதைச் செய்யுங்கள். உங்களுக்கு விருப்பமில்லா விட்டால்...

**சிஷ்யர்கள்(1, 2):** செய்கிறோம்...

(இருள்.

சில கணங்களுக்குப் பிறகு மங்கலான ஒளி.

பொன்னாச்சி நடு மேடையில் ஒருக்களித்துப் படுத்திருக்கிறாள்.

தூங்குகிறாள்.

சில விநாடிகளுக்குப் பிறகு பின் மேடை இடப்புறத்திலிருந்து அடி மேல் அடி வைத்து சிஷ்யர்கள் (1), (2) வருகிறார்கள்.

**சிஷ்யன் (1):** (கீழ்க்குரலில்) தூங்குகிறாள்..

**சிஷ்யன் (2):** (பின் மேடை இடப்புறத்து ஓரமாக நின்று கொண்டே கீழ்க்குரலில்) சரி... நான் இங்கிருந்து யாராவது வருகின்றார்களா என்று பார்த்துக் கொண்டு நிற்கிறேன். நீ போய்..

**சிஷ்யன் (1):** (அலுத்துக் கொண்டே) என்ன தர்ம சங்கடம்...!

**சிஷ்யன் (2):** கவனம்... அவளை எழுப்பி விடாதே...

(இவர்கள் வந்திருப்பது, பேசுவது எல்லாம் பொன்னாச்சிக்குத் தெரிந்துவிட்டது போன்ற அவள் முக பாவனை. ஆனால், அவள் அசையாமல் படுத்திருக்கிறாள்.

(சிஷ்யன் (1): அவளருகில் சென்று அவள் கை வளையல்களை மிகவும் கவனத்துடன் கழற்றுகிறான். சிஷ்யன் (2) வெளிப்புற வாசலை பார்த்துக் கொண்டு நிற்கிறான்.

பொன்னாச்சி மெதுவாக மறுபுறம் திரும்பி படுக்கிறாள்.

சிஷ்யன் (1) பயந்து கொண்டு ஓடுகிறான்.

சிஷ்யன் (2) அவன் ஓடி வருவதைப் பார்த்துத் தானும் ஓடுகிறான். பொன்னாச்சி எழுந்து உட்கார்ந்து கொண்டு புன்னகை செய்கிறாள்.

இருள்...

மங்கலான ஒளி வரும்போது சிஷ்யர்கள் இருவரும் படுத்திருக்கும் உடையவர் முன் ஓடி வருகிறார்கள்.

அவர்கள் ஓடி வருவதைப் பார்த்து, உடையவர் எழுந்து உட்காருகிறார்.

சிஷ்யன் (1) வளையல்களை அவரிடம் கொடுக்கிறான்...)

**சிஷ்யன் (1):** திருடியாகி விட்டது.

**ராமாநுஜர்:** விவரமாகச் சொல்

**சிஷ்யன் (2):** நான் காவல் காத்தேன். அவன் திருடினான். அவள் மறுபுறம் திரும்பிப் படுத்தாள் ஓடி வந்து விட்டோம்.

**ராமாநுஜர்:** அவசரப்பட்டு விட்டீர்கள். மறுபடி

www.padippakam.com

யும் போய் அங்கு என்ன நடக்கிறதென்று பார்த்து விட்டு வந்து சொல்லுங்கள்.

**சிஷ்யன் (1), (2):** மறுபடியுமா? (தயக்கத்துடன்)

**ராமாநுஜர்:** ஆமாம். (கண்டிப்பான குரலில்)

(உடையவர் அவர்களிடமிருந்து வேறு எந்த பதிலையும் எதிர்பார்க்காமல் படுத்துக் கொண்டு விடுகிறார். சிஷ்யர்கள் தயங்கிக் கொண்டே போகிறார்கள்.

இருள்

மங்கலான ஒளி வரும் போது, பின் மேடை இடப்புறக் கோடியில் சிஷ்யர்கள்.

நடு மேடையில் உறங்காவில்லியும், பொன்னாச்சியும். உறங்காவில்லி கோபத்துடன் காணப்படுகிறார்.

**உறங்காவில்லி:** (கோபத்துடன்) மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டாயா?

**பொன்னாச்சி:** இன்னொரு கை வளையல் கொடுக்கலாமென்றுதான் பாவம், ஏழை...

**உறங்காவில்லி:** (இடைமறித்து) உன் வளையல், இன்னொருவருக்குக் கொடுக்கின்றோம் என்ற உன் திமிரினால் அவர்கள் பயந்து ஓடி விட்டார்கள்!!

**பொன்னாச்சி:** என்ன சொல்லுகிறீர்கள்?

**உறங்காவில்லி:** உன் அகந்தை அவர்களை விரட்டி விட்டது.

**சிஷ்யன் (1), (2):** (பார்க்கிறார்கள் ஒருவரையொருவர்)

**பொன்னாச்சி:** (வருத்தத்துடன்) தவறு என்னுடையதுதான் ஸ்வாமி. அடக்கம் கற்றுக் கொடுத்து வராது. இயல்பாக வர வேண்டும்.

(சிஷ்யர்கள் இருவரும் போகின்றனர். இருள்.

காலை ஒளி...

ராமாநுஜர் முன் மேடை இடப் பக்கத்திலிருந்து வருகிறார். அவருடன் அரையர்

முன் மேடை வலப் பக்கத்திலிருந்து சிஷ்யர்கள் ஓடி வந்து, அவர் பாதங்களில் விழுந்து இறுகப் பற்றுகிறார்கள். அவர்கள் முகத்தில் தவறு செய்து விட்டோமென்ற குற்ற உணர்வு).

**ராமாநுஜர்:** என்ன நடந்து விட்டது, எழுந்திருங்கள்.

**சிஷ்யர்கள்:** (ஒரே குரலில் )நேற்றிரவே சந்திக்க முயன்றோம், நீங்கள் தூங்கிவிட்டீர்கள்.

**ராமாநுஜர்:** என்ன விஷயம்?

**சிஷ்யன் (1):** நேற்றிரவு உறங்காவில்லி வீட்டுக்குப்





போன போது, அவர் பொன்னாச்சியைக் கோபித்துக் கொண்டிருந்தார்.

**ராமாநுஜர்:** 'என்னுடைய பொருள், கொடுக்கின்றேன்' என்ற அகந்தையினால் பொன்னாச்சி திரும்பிப் படுத்ததுதான் எங்களை விரட்டி விட்டது என்றார்.

**சிஷ்யன் (1):** எப்பேர்ப்பட்ட மாமனிதர் அவர்!

**ராமாநுஜர்:** (ஏளனக் குரலில்) மறவர்!

**சிஷ்யன் (2):** மன்னிக்க வேண்டும். உடையவரே

**ராமாநுஜர்:** (ஏளனக் குரலில்) நீங்கள் அந்தணர்கள்?

**சிஷ்யன் (1), (2):** (நிற்கின்றனர் தலை குனிந்து.)

**ராமாநுஜர்:** (ஏளனம்) மறவன் தோள் மீது நான் நீராடி பரிசுத்தமான பிறகு கை வைத்துக் கொண்டு வருவது தப்பு!

மௌனம்

**ராமாநுஜர்:** பரிசுத்த அந்தணர்களாகிய நீங்கள் சாதாரண வேட்டி ஒன்றைக் கிழித்தவன் மீது எவ்வளவு கோபம்!

மௌனம்

**ராமாநுஜர்:** (புன்னகையுடன்) வேட்டிதான் உங்கள் தத்துவ தரிசனம்.

(மௌனம்)

**ராமாநுஜர்:** (புன்னகையுடன்) வேட்டியைக் கிழித்தவன் கயவன், அயோக்கியன் பொறாமைக்காரன்.

(மௌனம்)

**ராமாநுஜர்:** பிரும்மத்தை உணர்ந்தவர்கள், ஒரு வேட்டி கிழிந்ததற்காகக் கூச்சலிடுகிறார்கள். சாபம் கொடுக்கிறார்கள்... ஆனால் ஒரு மறவன், அகந்தை ஏதுமில்லாமல் பொன்னணிகளை ஏன் தந்திருக்கக் கூடாதென்று மனைவியைக் கோபிக்கிறான்! பிரும்மத்தை உணர்ந்தவன் யாரென்று இப்பொழுதாவது தெரிகிறதா?

(மௌனம்)

**ராமாநுஜர்:** வைஷ்ணவ சமுதாயத்தில் பிராமணன் என்றும் மறவன் என்றும் யாரும் இல்லை... இப்பொழுதுதாவது உணர்ந்தீர்களா?

(அப்பொழுது உறங்காவில்லியும், பொன்னாச்சியும் அங்கு வருகிறார்கள். சிஷ்யர்கள் உறங்காவில்லியின் கால்களில் விழுந்து வணங்குகிறார்கள். அவர் திடுக்கிட்டு, ராமானுஜரைப் பார்க்கிறார். ராமாநுஜர் புன்னகை செய்கிறார். அரையர் பாடுகிறார்...)

'அமர வோரங்க மாறும் வேதமோர் நான்கும் ஓதி
தமர்களில் தலைவராய சாதி அந்தணர்களேலும்
நுமர்களைப் பழிப்பராகில் நொடிப் பதோரளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலும் அரங்கமா நகருளானே

(இருள்...)



படிப்பகம்

www.padippakam.com



# சாமியாருக்கு ஒரு மணப்பெண்

அசோகமித்திரன்

"ஜூலியன் சாமி கல்யாணம் பண்ணின்டுடுத்தாமே?" ரகுநாத்ராவ் சொன்னான்.

எனக்குத் தெரியும். "அப்படியா?" என்றேன்.

"கான்பூர்லேயோ லக்னோவியோ ஒரு முஸ்லிமைப் பண்ணிண்டுடுத்தாம்." இதையும் ரகுநாத்ராவ் வெறும் தகவலாகத்தான் சொன்னான். விமரிசனமாக அல்ல.

"இரண்டு ஊரும் இல்லை. ஆக்ராவிலே. அப்புறம் அந்தப் பொண் முஸ்லிம் இல்லை. அவ ஒரு சிந்திப் பொண்."

"அப்போ உனக்குத் தெரியுமா?"

"நானும் கேள்விப்பட்டது தான். கிஷன்சந்த் பாய் தான் சொன்னார்."

"இனிமே அது இந்தப் பக்கமெல்லாம் வருமா, அங்கேயே இருந்திடுமா?"

"அது தெரியாது, ஆனா வந்தது எனக்குத் தெரிஞ்சா உனக்குச் சொல்லறேன். உனக்குத் தெரிஞ்சா நீ எனக்குச் சொல்லு."

ரகுநாத்ராவ் போன பிறகு எனக்குச் சிரிப்பு வந்தது. ஜூலியனை அது இது என்று அஃறிணைப் பொருளாகத்தான் பேசுகிறோம். ஆனால் யார் என்று தெரியாத அந்த சிந்திப் பெண் உயர்திணையாகி விடுகிறாள்!

நிஜமான சந்நியாசிகளுக்கு நான், எனது எனக் கிடையாதல்லவா? மாமிசப் பிண்டம், வெறும் தேகம், கட்டை, காற்றடைத்த தோல் பை, சோற்று மூட்டை, குயவனது மண் பாண்டம் இவற்றை அது இது என்றில்லாமல் வேறெப்படிக் கூறுவது?

ஜூலியனை அவ்வாறு குறிப்பிட எனக்கு அதிக நாள் பிடித்தது. அவரை முதலில்ஒரு ஜே. கிருஷ்ணமூர்த்தி கூட்டத்தில் பார்த்தேன். ஒல்லியான ஆறடி உயரம். பொன்னிற உடலில் காவி வேஷ்டி, தோளில் ஒரு காவித் துண்டு. நீண்ட முடி, தாடி, அவர் மெதுவாக நடந்து வந்த போது இரண்டாயிரம் ஆண்டுகள் முன்னால் உலவிய ஒருவரின் நினைவு தான் வந்தது. ஜே. கிருஷ்ணமூர்த்தி கூட்டங்களில் நண்பர்களே ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளமாட்டார்கள். அறிமுகமே இல்லாத வெள்ளைக்காரரோடு எப்படிப் பேச்சைத் துவக்குவது? ஆனால் மௌனமே பிரதானமாக இல்லாத இன்னொரு கூட்டத்தில் ஜூலியனைப் பார்த்த போது பேசித் தெரிந்து கொண்டேன். சென்னையிலேயே ஆசிரமம் போலிருந்த ஒரு வீட்டில் தங்கியிருப்பதாகச் சொன்னார். பின்னர் அந்த வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்தேன். அவர் தென்னாப்பிரிக்காவிலிருந்து ஹடயோகம் பயிலுவதற்காகவே

இந்தியா வந்திருக்கிறார். வயது
இருபத்தைந்து இன்னும் முடி
வில்லை. அப்பாவின் அப்பா ஜெ
மானியர். அம்மா பெல்ஜியத்தி
ருந்து வந்தவர். ஆப்பிரிக்காவி
பாதி ஐரோப்பாவைப் பார்க்கலா
என்று ஜூலியன் சொன்னார். ஆ
கிலேயர், பிரெஞ்சு, ஜெர்மானிய
பெல்ஜியம் நாட்டவர், ஸ்பெயி
காரர்கள், இத்தாலியர்கள் ... இந்
சூழ்நிலையில் ஜூலியன் கட
ளைத் தேடிப் போனார். அதிக
பிரபலமில்லாத ஒரு இந்துச் சா
யார் ஜூலியனுக்குப் பஞ்சாட்சர
உபதேசித்திருக்கிறார். இன்னு
யாரோ யோகம் பயின்றால் மந்
ரம் சித்திக்கும் என்று கூறிருக்
றார்கள். அந்த நேரத்தில் தியோ
பெர்னார்டு என்பவர் எழுதியிருந்
ஹடயோக நூலை ஜூலிய
பார்த்திருக்கிறார். இருபத்திரண்ட
வது வயதில் இந்தியாவுக்கு வந்
விட்டார்.

ஆப்பிரிக்காவில் மதங்கள், கு
மார்கள், கிடையாதா என்று என
குக் கேட்கத் தோன்றியது. எ
கேள்வியை எதிர் பார்த்தது போ
"யோகத்தில் மௌனம் மிகவு
முக்கியம். எனக்கு அது இந்திய
வில் தான் கிடைக்கும் என்
தோன்றியது," என்றார்.

எங்களுடைய முதல் சந்திப்புக
இந்த உலகத்தைப் பற்றிய
யில்லை. வெள்ளைக்காரப் பைய
ஒருவன் கடவுளைத் தேடுகிறே


படிப்பகம்

www.padippakam.com

என்று இந்தியாவுக்கு ஓடி வருவது ஒரு விதத்தில் சிறு பிள்ளைத்தன மாகக் கூட இருந்தது. எல்லாத் தத் துவக் கேள்விகளுக்கும் அந்த வய திலேயே முறையான பதில்களை அவர் படித்திருந்தார். இவ்வளவு படிப்பே யோகத்துக்குத் தடையாக இருக்குமே என்று கூட நினைத் தேன்.

நான் இரண்டாம் முறை ஜூலிய னைப் பார்க்கச் சென்ற போது அவர் ஆசனங்கள் செய்து கொண் டிருந்தார். அரை மணி நேரத்துக் குள் ஐம்பது அறுபது ஆசனங்கள் முடித்தார். வியர்வையையே தைலம் போலத் தேய்த்துக் கொண் டார். "நாங்கள் எவ்வளவு தலைமு றைகள் எவ்வளவு விதவிதமான மிருகங்களைத் தின்றிருக்கிறோம்! இந்த ஜன்மத்துக்கு இந்த நாற்றம் போகாது" என்றார். அப்புறம் "அது என்ன?" என்று கேட்டார்.

என் கையில் பளபளவென ஒரு பெரிய காகித உறை இருந்தது. அந்த நாளில் இந்திப் படத் துறை யின் பெரிய தயாரிப்பாளர்கள் எல் லாரும் ஆளுக்கொரு கொள்ளைக் காரன் படம் எடுத்தார்கள். பூபத் என்ற சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளைக்காரன் பாகிஸ்தானுக் குத் தப்பிச் சென்று விட்டான். ஆனால் மான்சிங் என்பவன் காவல் துறையினரோடு நேர்ந்த சண்டையில் சுடப்பட்டு இறந் தான். அவனுடைய பிரேதத்தைக் காவல் துறையினர் பல மைல்கள் தள்ளியிருந்த ஊருக்குத் தூக்கிச் சென்ற போது வழி நெடுக இருந்த கிராமங்களில் பலர் கண்ணீர் விட்டு அழுதிருக்கிறார்கள். என் கையிலிருந்த உறை திலீப்குமார் தயாரித்த 'கங்கா - ஜமுனா' என்ற படத்தின் துவக்கக் காட்சிக்கு அழைப்பிதழ். திலீப்குமார் தான் கொள்ளைக்காரன். நான் அந்த உறையை ஏதாவது ஒரு மூலையில் போட வேண்டும் என்று நினைத்தி ருந்தேன். ஆனால் ஜூலியன் சாமி யாரின் கண்ணில் பட்டு விட்டது.

"இதெல்லாம் உங்கள் பாதைக்கு நேர் எதிரானது சாமி. சினிமா. அதுவும் நன்றாயிருக்காது" என் றேன்.

"நீ பார்த்து விட்டாயா?" என்று கேட்டார்.

"நாளைக்குத்தான் ஆரம்பமே"

"அப்போது எப்படி நன்றாயிருக் காது என்றாய்?"

"முன் அனுபவத்தினால்"

"இது புதிதாக இருக்கக் கூடாதா?"

இறுதியில் அந்த அழைப்பிதழை எடுத்துக் கொண்டு ஜூலியன் சாமியார் 'கங்கா ஜமுனா' திரைப்ப டம் பார்த்துவிட்டு வந்தார். ஒரு சாதாரண இந்தியன் அதை இன் னொரு திலீப்குமார் சினிமாவாகத் தான் பார்த்திருப்பான். ஆனால் ஜூலியன் சாமியாரை அது உலுக்கி எடுத்து விட்டது. அப்ப டம் போய் வந்த பின் மூன்று நாட் கள் அவர் சாப்பிடவில்லை, தூங்க வில்லை என்று அந்த வீட்டுக்காரர் கள் சொன்னார்கள்.

ஜூலியனுக்குச் சம்பல் பிரதேசம் பற்றியும் மத்தியபிரதேசத்து மக்கள் பற்றியும் நிறையவே தெரிந்திருந் தது. 'கங்கா - ஜமுனா' படம் சாமி யாருக்குக் கற்பனைக் கதையாகத் தோன்றவில்லை. காலம் காலமாக மனித இனத்துள்ளேயே தர்மத்துக் கும் அதர்மத்துக்கும் தொடர்ந்து நடந்துவரும் ஒரு குரூரமான யுத் தத்தின் ஒரு சிறு பகுதியாகத் தோன்றியிருக்கிறது. ஒரு இந்தியத் திரைப்படம் இவ்வளவு தீர்க்கமான அனுபவத்தை அளிக்கக் கூடியதா என்று எனக்கு ஆச்சரியமாக இருந் தது.

ஜூலியன் சாமியாரின் உலகம் வெகு வேகமாக விரிவடைய ஆரம் பித்தது. அவர் கண்களில் தென் பட்ட எதைப் பற்றியும் அவரால் சுயமான ஒரு நிர்ணயம் தர முடிந் தது. அவர் கையெழுத்தே ஓவியம் போல இருக்கும். நிறையக் கவிதை கள் ஆங்கிலத்தில் எழுதினார். ஒரு கவிதை ஒரு பெண்மணி துணி உலர்த்துவது பற்றி இருந்தது. "இது உங்களூர் காட்சியா?" என்று கேட் டேன்.

"நாளை பதினொரு மணிக்கு இங்கு வர முடியுமா?" என்று கேட் டார்.

"ஆபீஸ் இருக்கிறது"

"பத்து நிமிஷம் வந்து விட்டுப் போக முடியாதா?"

"சரி வருகிறேன்"

அடுத்த நாள் பதினொரு மணிக்கு அந்த வீட்டுக்குச் சென் றேன். வழக்கமான இடத்தில் சாமி யார் இல்லை. "மொட்டை மாடி யில் இருக்கு" என்று அந்த வீட்டு அம்மாள் சொன்னாள்.

நானும் மொட்டை மாடிக்குப் போனேன். நல்ல வெயிலில் ஜூலி யன் கண்ணை மூடி மல்லாக்கப் படுத்துக் கொண்டிருந்தார். நான் அருகில் சென்றதும் கண்ணைத் திறந்தார்.

"என் கவிதையைக் காட்டுகி றேன்" என்று சொல்லிக் கைப்பி டிச் சுவருகே சென்றார். அங்கி ருந்து பார்த்தோம். வரிசையாக வீடுகளின் கொல்லைப்புறம் தெரிந் தது. "அந்த மூன்றாவது வீட்டைப் பார்" என்றார்.

அந்த வீட்டுக் கிணற்றடியில் ஒரு மாது துணி தோய்த்துக் கொண்டி ருந்தாள். தோய்த்து அலசிய பின் துணிகளைக் கொடியில் உலர்த்தி னாள். "பார், பார்" என்று ஜூலி யன் சொன்னார். எனக்கு முதலில் குறிப்பிடத் தக்கதாக ஏதும் தெரிய வில்லை. சுமார் பதினைந்து துணிக ளைக் கொடியில் விரித்து உலர்த் திய பின் அந்த அம்மாள் உள்ளே போய் விட்டாள். அதன் பிறகு தான் அந்தத் துணிகள் ஓர் அழகிய கோலம் போலத் தெரிந்தன. புடவை வேஷ்டிகளை அளவெ டுத்து மடித்தது போல ஒரு கோணல், ஒரு பிசிறு இல்லாமல் கொடியில் போட்டிருந்தாள். நடு நடுவே சிறு துணிகள். இதெல்லாம் அந்த அம்மாள் திட்டமிட்டுச் செய்யவில்லை. வாளியில் கையை விட்டு எடுத்த துணியை அப்ப டியே உலர்த்தினாள். அந்த எளிய அன்றாடப் பணியிலும் ஒரு நேர்த் தியும் அழகும் அவளால் உண்டு பண்ண முடிந்தது.

இதற்குப் பிறகு எனக்கும் ஜூலி யனுக்கும் பேச நிறைய விஷயங்கள் இருந்தன. தத்துவ விஷயங்கள் தான் நழுவத் தொடங்கின. அவர் முகத்தில் நிறையச் சிரிப்பைப் பார்க்க முடிந்தது. இன்னும் நிறை யக் கவிதைகள் எழுதினார். நிறை யப் படங்கள் வரைந்தார். யாரோ அழைத்தார்கள் என்று மதுரைக் குப் போனார். இரு நாட்களுக்குப் பிறகு அவர் மதுரையில் கைது செய்யப்பட்டுக் காவலில் இருப்ப தாகத் தகவல் வந்தது. சென்னை யில் ஒரு நீதிபதிக்கு ஜூலியனைத் தெரியும். அவரிடம் சொல்லி ஒரு வழியாக ஜூலியனை விடுவித்துச் சென்னைக்கு அழைத்து வந்தோம்.

ஜூலியன் அயல் நாட்டவர். இந் தியாவில் தங்குவதற்கு உரிய இலா காவின் அனுமதி பெற்றிருக்க வேண்டும். பாஸ்போர்ட் வைத்தி ருக்க வேண்டும். தென்னாப்பிரிக் காவுக்கும் இந்தியாவுக்கும் ராஜிய உறவு இல்லாததால் பல தகவல்க ளுக்கு டில்லிக்குப் போக வேண் டும்.

அந்த நாளில் சென்னையில் சாஸ்திரி பவன் அமைக்கப்பட வில்லை. அரசு அலுவலகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மூலை யில் இருந்தன. நானும் ஜூலியனும் அடையாறில் இருந்த குடியேற்றப் பிரிவு அலுவலகத்திற்குப் போனோம். முதலில் அயல் நாட்டி னர் பதிவு இலாகாவுக்குப் போக வேண்டும் என்றார்கள்.

அது நுங்கம்பாக்கத்தில் இருந் தது. அவர்கள் ஜூலியன் முதலில் பாஸ்போர்டைப் புதுப்பிக்க வேண்டும் என்றார்கள். அங்கிருந்த ஒருவர் ரகசியமாகச் சொன்னார், "சாமியைத் தாடி காவியெல்லாம் எடுத்துட்டு சாதாரணமா இருக்கச்



படிப்பகம்

www.padippakam.com

சொல்லுங்க. இப்ப இருக்கிறமாதிரி இருந்தா பளிச்சுனு அடையாளம் தெரியும். எல்லாரையும் போல இருந்தா இவ்வளவு பெரிய தேசத்திலே கூட்டத்தோடு கூட்டமா மறைஞ்சு இருந்துடலாம். எவ்வளவு வருஷம் வேணும்னாலும்."

ஜூலியன் சாமியார் பிரச்னைகளைத் தீர்க்கக் கூடிய அனுபவமோ செல்வாக்கோ எனக்குக் கிடையாது. அவர் ஏன் மூன்று நான்கு தனித் தனி இலாகாக்களிடமிருந்து ஒப்புதல் வாங்க வேண்டும், அயல் நாட்டவர் பதிவு என்றால் என்ன என்றெல்லாம் எனக்குப் புரியவில்லை. ஆனால் அவர் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தார் என்பது அவர் அந்த அதிகாரிகளோடு பேசும்போது வெளிப்பட்டது. அப்படியானால் ஏன் நிலைமை இவ்வளவு தீவிரமடையும் வரை ஒன்றுமே செய்யவில்லை?

இதையே நான் அவரையும் கேட்டேன். அவர் புன்னகையுடன், "நான் சாமியாரில்லையா?" என்றார்.

"நீங்க உங்க நாட்டிலேயே சாமியாராக இருக்கக்கூடாதா?"

"இங்கே இப்படி ஒரு துண்டோடும் வெறுங்காலுடனும் இருக்கிறேன். அங்கே ஒரு நிமிடம் சூட், ஜோடு இல்லாமல் இருக்க முடியுமா? இந்த இடத்தைவிட அங்கே தான் என்னை முதலில் ஜெயிலில் அடைத்து விடுவார்கள். அங்கே வெள்ளைக்காரர்கள் வானத்திலிருந்து இறங்கி வந்தவர்கள் போல இருந்தாக வேண்டும். அந்தச் சித்திரவதையைத் தாங்க முடியாது."

"இங்கே மட்டும் மதுரையில் போலீஸ் உங்களை அடிக்கவில்லையா?"

"அடித்தார்கள். அப்புறம் அவ
களே காளில் வீழ்ந்து அருள் பு
யக் கேட்டார்கள்."

"நாளைக்கு நான் வர முடியாது
நீங்க அந்த ஜட்ஜைக் கட்டாய
பாருங்க,"

"பாக்கலாம்."

நான் கிளம்பியும் விட்டேன்
அப்போது அவர் சொன்னார்
"ஒரு வெள்ளைக்காரன் இந்திய
னாகி விடலாம். ஆனா ஒரு வெ
ளைக்காரச் சந்நியாசி இந்தியனா
முடியாது. சந்நியாசிகள் மட்டு
அவரவர்கள் ஊர் போய்
தான் சாக வேண்டியிருக்
றது."

நான் இரு நாட்கள் கழித்
அவரைப் பார்க்கச் சென்
போது அவர் கிளம்பி
போய்விட்டார் என்றார்கள்.

பத்து நாட்கள் கழித்
ஜூலியன் என் வீட்டுக்கு வ
தார். இரவு ஒன்பது மணி
ருக்கும். வெளியே மழ
பெய்து கொண்டிருந்தது.

"இதைப் பார்த்தாயா?
என்று துணியினால் சுற்றி
ஒரு சிறு கட்டைக் காண்பி
தார்.




படிப்பகம்

www.padippakam.com

"என்ன?"

"எனக்குத் தெரிந்த தஸ்தாவேஜுகள் எல்லாம் தயார் செய்துவிட்டேன். இதைச் சொல்லும்போது அவர் முகம் வேதனையைக் காட்டியது.

"சாப்பிடுகிறீர்களா?"

"வேண்டாம். இங்கே பக்கத்துக் கொட்டகையில் ஒரு படம் ஓடுகிறது அதை நான் பார்க்க வேண்டும். என்னை அழைத்துப் போகிறாயா?"

நான் கிளம்பினேன். அது ஆங்கிலப் படம். எட்கர் ஆலன் போ என்ற எழுத்தாளனின் மூன்று கதைகளைப் படமாக எடுத்திருந்தார்கள். எட்கர் ஆலன் போ எழுதிய கதைகளைப் படிப்பதற்கே சற்று உறுதியும் தைரியமும் வேண்டும்.

கொட்டகையில் கூட்டம் இல்லை. காட்சி ஆரம்பமாகியது. முதல் படம் 'மோரெல்லா'. ஊருக்கு வெளியே ஒரு மாளிகை மாளிகை இடி தாக்கிப் பற்றி எரிகிறது. அப்பா, அம்மா இருவர் உடல்களும் எரிந்து சாம்பலாகின்றன.

நாங்கள் காட்சி முடிந்து வெளியே வந்த போது நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. நனைந்தபடியே வீடு வந்து சேர்ந்தோம். ஜூலியனுக்கு என் வேஷ்டியொன்றை எடுத்துக் கொடுத்தேன்.

"வாழ்க்கையில் ஒரே ஒரு தவறு செய்து விட்டேன் என்று யாரும் சொல்லிக் கொள்ள முடியாது. ஒன்று செய்து விட்டால் அப்புறம் அடுத்தது அடுத்தது அடுத்தது என்று சாகும் வரை அது தொடர்ந்து கொண்டிருக்கும்."

"இல்லை, சாமி. எட்கர் ஆலன் போவுக்குக் கொஞ்சம் விபரீதமான கற்பனை"

"கற்பனை இல்லை. இதெல்லாம் கற்பனையேயில்லை."

அப்போது நான் கேட்டேன்.

## இப்போது நான் நிஜமான சந்நியாசி. எனக்குப் பேர், ஊர், அட்ரஸ் ஏதும் கிடையாது

யில் வாழும் ஒருவனுக்கு அவன் மனைவி மீது வெறுப்பு வந்து அவள் நோய் கண்டு படுத்திருக்கும் போது விஷத்தை மருந்தாகக் கொடுத்து அவளைக் கொன்று விடுகிறான். நகரத்தில் படித்துக் கொண்டிருக்கும் மகள் வருவதற்குள் சவ அடக்கம் நிகழ்ந்து விடுகிறது. தகப்பன் மகளுக்கு ஒரு பெரிய மரப் பெட்டியைப் படுக்கையாக அமைத்திருக்கிறான். அன்றிரவு பெரிய புயல் அடிக்கிறது. காற்று 'மோரெல்லா, மோரெல்லா' என்று அலறுகிறது. அதுதான் அவன் மனைவியின் பெயர். மகளுக்கு அவள் அம்மா ஆவியுருவில் தோன்றி அவள் படுத்திருந்த பெட்டியைத் திறக்கச் சொல்கிறாள். மகள் திறக்கிறாள். அதில் அவள் அம்மாவின் பிரேதம் கிடக்கிறது. இப்போது அவள் அப்பா மகளையும் கொல்ல வருகிறான். மகள் மாளிகையை விட்டு வெளியே புயலில் ஓடுகிறாள். போகும் போது வாசல் கதவை வெளியே தாளிட்டு விடுகிறாள். அவள் அப்பா கதவை உடைத்து வெளியே வருவதற்குள்

"உங்கள் தஸ்தாவேஜுக் கட்டு எங்கே?"

"கொட்டகைக்கு வெளியேயே தூக்கி எறிந்து விட்டேன்"

"ஐயயோ! எங்கே? எங்கே?"

"இருட்டில் என்ன தெரியும்? சாக்கடையில் போட்டு விட்டேன்."

நான் குடை எடுத்துக் கொண்டு அந்த இருட்டிலும் மழையிலும் அவருடைய தஸ்தாவேஜுக் கட்டைத் தேடிப் போனேன். தெருவோரச் சாக்கடையில் தண்ணீர் வெள்ளமாக ஓடிக் கொண்டிருந்தது. சினிமாக் கொட்டகையருகில் சாக்கடையில் இறங்கி காலால் துழாவிப் பார்த்தேன். 'இது என்ன பைத்தியக்காரத்தனம்' என்று தோன்றியும் தேடினேன். காலில் ஒரு தகரத் துண்டு காயப்படுத்தியது தான் மிச்சம்.

ஜூலியன் தூங்காமல் விழித்திருந்தார். நான் கோபத்துடன் ஈரத் துணியை அவிழ்த்துப் போட்டுத் தலையைத் துடைத்துக் கொள்ளத் துவங்கினேன்.

"அது என் கவலை. உனக்கென்ன வந்தது?" என்று ஜூலியன் கேட்டார்.

"தெரியாது"

"உன் மாதிரி ஒரு ஆள் அதை எல்லாம் தயாரித்துக் கொடுத்தான். அது போனதே நல்லது. தவறு, தவறு, தவறு என்று நான் தொடர்ந்து தவறுகளே செய்து கொண்டிருக்கும்படி இருக்கும். இப்போது நான் நிஜமான சந்நியாசி. எனக்குப் பேர், ஊர், அட்ரஸ் ஏதும் கிடையாது."

விடிவதற்கு முன்னால் ஜூலியன் கிளம்பிப் போய்விட்டார். அவருடைய காவித் துணி உலர இரண்டு நாட்களாயிற்று.

பாய்க்கடைப் பக்கம் போன போது கிஷன்சந்த்பாய் கேட்டார், "ஜூலியன் சாமி இப்போ எங்கே இருக்கு தெரியுமா?"

"தெரியாது. பாத்து மூணு மாசம் ஆறது.

"ஆக்ராவிலே இருக்கு. என் உறவுக்காரப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிண்டுடுத்து"

"நீங்க கல்யாணத்துக்குப் போகலையா?"

"எனக்குத் தெரியாது. தெரிஞ்சாலும் ஆக்ரா போறது அவ்வளவு சுலபமா?"

அந்த நாளில் டில்லிப் பக்கம் போக கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் ஒன்று தான் இருந்தது. எனக்குத் தெரிந்திருந்தால் போயிருப்பேன். ஜூலியனோடு அரசு அலுவலகங்கள் சென்றிருந்ததில் எனக்கு ஒரு தகவல் கிடைத்தது. அயல் நாட்டினராக இருந்தாலும் இந்தியப் பிரஜையைக் கல்யாணம் செய்து கொண்டால் இந்தியப் பிரஜையாகி விடலாம். ஜூலியன் கல்யாணம் செய்து கொண்டது அதற்காகத் தான் இருக்க வேண்டும்.

ரகுராத் ராவும் கிஷன்சந்த் பாய் கடைக்குச் சென்று ஜூலியனின் முகவரி வாங்கி வந்தான். நாங்கள் இருவரும் ஹோலி முடிந்த பிறகு ஆக்ரா போவதாகத் திட்டமிட்டோம். ஆனால் அதற்குள் ஜூலியன் இறந்து விட்டதாகத் தந்தி வந்தது. யோகாசனங்கள் செய்யும் போது சாமி அப்படியே உட்கார்ந்து விட்டதாம். அநேகமாகக் கேசரி முத்திரை செய்யும் போது நிகழ்ந்திருக்க வேண்டும். அந்த முத்திரை பழகுவதற்காக ஜூலியன் நாக்கைக் கீழ்த்தாடையோடு இணைக்கும் சதையைத் தினமும் சிறிது சிறிதாக வெட்டிக் கொண்டது எனக்குத் தெரியும். ஜூலியனின் சம்சார வாழ்க்கை சில வாரங்கள் கூட நீடிக்கவில்லை. அது இந்தியப் பிரஜையாக மாற முடியாவிட்டாலும் ஓர் இந்தியப் பெண்ணை விதவையாக மாற்றி விட்டது. ▲



படிப்பகம்

www.padippakam.com

# Here is something of utmost INTEREST to you

# 15% P.A.

## CRISIL RATING 'FAA–' Indicating

# HIGH SAFETY

- PART OF THE Rs. 500 CRORE BANNARI AMMAN SUGARS GROUP
- OVER Rs. 60 CRORES IN DEPOSITS




- FIXED DEPOSITS
- HIRE PURCHASE
- LEASING
- CORPORATE FINANCE
- OTHER FINANCIAL SERVICES
- PERSONALISED SERVICE

ANNAMALLAI FINANCE LIMITED COIMBATORE

## ANNAMALLAI FINANCE LTD

Regd Office : 252, Mettupalayam Road, Coimbatore - 641 043

Branches and Telephone Nos: ● **Bombay**: 2843602 ● **Bangalore**: 2227365 ● **Coimbatore**: 232015 ● **Delhi**: 5752417 ● **Ernakulam**: 372226 ● **Erode**: 79400 ● **Gobichettipalayam**: 22924 ● **Karaikudi**: 23029 ● **Kozhikode**: 58837 ● **Madurai**: 540450 ● **Madras**: Spencer Plaza Branch: 8522538 Anna Nagar Branch: 6263447 T.Nagar Branch: 4340248 Mylapore Branch: 4992993 ● **Pondicherry**: 38507 ● **Pollachi**: 25909 ● **Pune**: 627178 ● **Salem**: 419513 ● **Sathyamangalam** : 20420 ● **Tirunelveli**: 25144 ● **Trichy**: 43304 ● **Vellore**: 26371 ● **Villupuram** 23780

**YOUR PROSPERITY IS OUR CONCERN**



படிப்பகம்

www.padippakam.com





**ஆவின்** பால் மட்டுமே பதப்படுத்தப் பட்ட பால் ! சாதாரணப் பாலை கொதிக்க வைப்பதால் மட்டுமே தீய கிருமிகள் அனைத்தும்அழிவதில்லை ! பாலை பதப்படுத்துவது ( *Pasteurisation* ) மிக அவசியம் ! பாலின் தூய்மையிலும் உங்கள் குடும்பத்தின் நலனிலும் **ஆவின் பங்கு இதுவே!**

உங்களுக்கு **இனிய பொங்கல் வாழ்த்துக்கள்** வழங்கும்

**பெரியார் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளார்கள் ஒன்றியம் லிட்**

வாசவி கல்லூரி அஞ்சல், ஈரோடு - 638 316



**இனிய பொங்கல் வாழ்த்துக்கள்**

தோல் வலிக்க மாவை ஆட்டவும் வேண்டாம் !
கைவலிக்க உரலை கழுவவும் வேண்டாம் !!
வாய்வலிக்க கல் இட்லியை மெல்லவும் வேண்டாம் !!!
துன்பங்களுக்கு விடை கொடுங்கள் 'சௌபாக்யாவை' வரவழையுங்கள்

இல்லத்தரசிகளின் இனிய தோழி

**சௌபாக்யா வெட்கிரைண்டர்**




**SOWBAGHYA The Grinder People**

**ராஜ்கணேஷ் எண்டர்பிரைசஸ்**

314, பெருந்துறை ரோடு, ஈரோடு - 638 011. Ph: 216965, 220945.




படிப்பகம்

www.padippakam.com



# வந்தனா எஸ்.ஐயர்

சா. கந்தசாமி

அவன் வாசல் கதவுக்கு மேல் இருந்து தொங்கிக் கொண்டிருந்த கயிற்றை ஒரு முறை பிடித்திழுத்தான். வீட்டின் உள்ளே கலகலவென்று மணியொலிப்பது மெதுவாகக் கேட்டது.

"இது என்ன புதுசா இருக்கு?" என்றபடி வந்தனா எஸ். ஐயர் பின்னால் இருந்து முன்னே வந்தாள்.

அவன் திரும்பி அவளைப் பார்த்து லேசாக ஒரு சிரிப்புச் சிரித்தான்.

"சொந்த வீடா?" "குவார்ட்டஸ். கொஞ்ச நாளைக்கு இருக்கலாம்."

"அடிக்கடி மாத்திடுவாங்களா?".

"மூனு வருஷத்திற்கு அப்புறம். இந்த முறை வடக்க தூக்கிப் போட்டுடுவாங்க".

"பரவாயில்ல. சர்க்கார் செலவில நீ இந்தியாவையே ஒரு சுற்று சுற்றி வந்திடப் போற" வலது தோளில் இருந்து சரிந்த துப்பட்டாவை இழுத்து மேலே போட்டுக் கொண்டாள் வந்தனா.

ஒரு சின்ன சப்தத்தோடு கதவு திறந்தது. தேன்மொழி உள்ளே இருந்தபடி தலையை வெளியே நீட்டிப் பார்த்தாள். இவனையும் அவளையும் பார்த்துவிட்டு ஓரடி முன்னே எடுத்து வைத்து, "வாங்க" என்றாள், புன்னகைப் பூத்தபடி.

அவன் முன்னே சென்றான். வந்தனா தோளில் தொங்கிய லெதர் பையை கையில் எடுத்துக் கொண்டு பின்னால் நடந்தாள். மொசைக் போட்ட பெரிய ஹால். சுவற்றையொட்டி வலது பக்கமாக ஒரு சோபா. சோபாவிற்கு எதிராக இரண்டு பிரம்பு நாற்காலிகள். நாற்காலிக்குப் பக்கத்தில் ஒரு வட்டமான மேசை. மேசை மீது தினசரி பேப்பர். பேப்பருக்கு மேலாக நான்கைந்து புத்தகங்கள்.

வந்தனா சோபாவில் சாய்ந்து உட்கார்ந்து லெதர் பையை எடுத்து மடியில் போட்டுக் கொண்டு துப்பட்டாவால் மூஞ்சியைத் துடைத்துக்கொண்டாள். பார்வை எதிர்ச் சுவர் பக்கம் சென்றது. படம் இல்லாத ஒரு தினசரி காலண்டர். காலண்டருக்குப் பக்கத்தில் ஒரு தஞ்சாவூர்த் தட்டு.

"தேன்மொழி, இப்படி உட்கார்" வந்தனா அவள் கையைப் பிடித்தாள்.

"உங்களைப் பற்றி ரொம்ப சொல்லி இருக்கிறாங்க".

"ரொம்ப. அப்படியின்னா?"

தேன்மொழி தலையை இப்படியும் அப்படியுமாக அசைத்தாள்.

"ரொம்ப கெட்டப் பொண்ணு. ஊர் ஊராகச் சுத்திக்கிட்டே இருக்கும். வாய திறந்தால் மூடாமல் பேசிக்கிட்டே இருக்கும். அதனால ரொம்ப ஜாக்கிரதையா இருக்சணும். அப்படி இப்படித்தானே".

"ஐய்யய்யோ... அப்படி எல்லாம் இல்ல. ரொம்ப படிச்சவங்க. பெரிய அறிவாளி. நல்ல தைரியசாலி... அப்புறம் நீங்க பெண்கள் மாநாட்டிற்கு சைனாவுக்குப் போயிட்டு வந்ததைப் பத்திக்கூட சொன்னாங்க—"

ஓ! அவ்வளவு தூரத்திற்கு விஷயம் பரவி இருக்கிறதா. உட்கார்ந்து நீ ஒன்று விடாம சொல்லு".

அவள் மெதுவாக நகர்ந்து பின்னால் சென்றாள்.

"என்ன? நாயகருக்கு முன்னா உட்கார மாட்டீயா?"

"நீங்க முதல்ல என்ன குடிக்கி றீங்க"

"சாயந்திரத்தில் என்ன குடிக்றது" என்று வந்தனா அவனை திரும்பிப் பார்த்தாள். அவ பூட்ஸ் நாடாவை அவிழ்த்து கொண்டு இருந்தான்.

"காபி... டீ"

www.padippakam.com

"ஒரு நல்ல டீ கொடு, தேன் மொழி"

அவள் திரும்பி அவனையும் அவளையும் ஒரு பார்வை பார்த்து விட்டு உள்ளே சென்றாள். அவன் எழுந்து பூட்ஸை எடுத்துக் கொண்டு போய் கதவுப் பக்கத்தில் போட்டுவிட்டு வந்தான்.

"சித்தார்த், உன் ஒயிப் கருப்பா இருந்தாலும் நல்ல அழகா இருக்கிறா".

அவன் தலை நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தான்.

"முகம் ரொம்ப லட்சணமாக இருக்கிறது யோகா கத்துக்கொடு. இல்லாவிட்டால் சீக்கிரத்தில் என்ன மாதிரி குண்டா ஆகிடுவா. குண்டா ஆகிட்டால், கொஞ்சம் கஷ்டம்".

மேல் சட்டையை கீழே இழுத்து விட்டுக் கொண்டான்.

"சொந்தமா? அக்கா பொண்ணா. இல்ல மாமா பொண்ணா?"

"ரெண்டும் இல்ல"

"அப்படியா? அப்புறம்? லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக்கிட்டியா?"

"கல்யாணம் பண்ணிக்கிட்டு இப்ப லவ் பண்ணிக்கிட்டு இருக்கேன்..."

"பரவாயில்லையே. ஜோக் எல்லாம் நல்லா அடிக்கற. புதுக்கவிதை எழுதற ஆட்களுக்கு ஜோக் எல்லாம் அடிக் முடியாது என்று இனிமேல் சொல்ல முடியாது... ஆமாம்.. உங்கதிலே சொந்தத்தில் தானே ரொம்ப பேர் கல்யாணம் பண்ணிக்கொள்ளுவாங்க—"

"சொந்தம் இல்லாமலும் கல்யாணம் உண்டு".

"சொந்தத்தில் கல்யாணம் நடக்கறதுக்கு என்ன காரணம், தெரியுமா? நிலம் என்கிற சொத்துப் பிரிஞ்சிடப் போகக் கூடாது என்பதுதான். அதனால் திருமணம் என்கிற உறவு ஒரு வட்டத்திற்குள்ளேயே நெடுங்காலமாக இருந்து வருகிறது".

"எல்லார் கிட்டேயுமா?"

"நிலத்தை சொத்தாக நம்பி இருக்கிற மக்களிடம், சரித்திரத்தை கொஞ்சம் அலசி பார்த்தால் உண்மை தெரியும். ஆனால் தமிழ் நாட்டில் சரித்திரம் படிக்கிற ஆட்களையே காண முடியறது இல்ல. அதோடு ஒவ்வொருவருக்கும் சரித்திரத்தில் பெருமைப்பட வைக்கிற அம்சந்தான் தேவையாக இருக்கிறது. ஆனால் சரித்திரத்தில் பெருமை தருகிற அம்சத்தைவிட இம்சை கொடுக்கிற அம்சந்தான் அதிகமாக இருக்கிறது".

அவன் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

வந்தனா பின்னால் நகர்ந்து துப்பட்டாவை எடுத்து தோள் மீது போட்டுக்கொண்டு, "எந்தக் குடும்பத்தில் இரண்டு தலைமுறை சரித்திரம் சொல்லக் கூடியதாக இருக்கிறது. ஏதாவது ஓரிடத்தில் சறுக்கல். அது மாதிரிதான் சமூக சரித்திரம். ஆனால் சறுக்கலைப் பெரிதாக நினைத்துக்கொண்டு பெருமைப்பட வைக்கிற அம்சத்தைக்கூட விட்டு விடுகிறோம்—"

'....'

"நான் ரொம்ப பேசறேன் இல்ல"

'....'

"ஆமாம்.. நீ என்ன படிச்ச"

"டிப்ளமா, சிவில்"

"பரவாயில்ல. சிவில் படித்துவிட்டு புதுக்கவிதை எழுதற. ஒரு நூற்றியம்பது வருஷத்திற்கு முன்னால கவிதை செத்துவிட்டது என்று பெரிதாக கோஷம் போட்டுக்கிட்டு தான் கதை எழுத ஆரம்பித்தார்கள்".

"இங்ககூட அப்படி சொல்லுறது உண்டு".

தேன்மொழி ஒரு தட்டை அவள் பக்கம் நீட்டினாள். தட்டு நிறைய பிஸ்கெட். பிஸ்கெட் பக்கத்தில் பெரிதாக இரண்டு கப். வந்தனா ஒரு கையில் டீ கப்பையும், இன்னொரு கையில் இரண்டு பிஸ்கட்களையும் எடுத்துக் கொண்டாள். கப்பில் டீ நிறைந்து வழிவது மாதிரி இருந்தது.

"இவ்வளவு டீ எல்லாம் கொடுக்கக் கூடாது" என்றபடி வந்தனா டீயை ஒரு மிடறு குடித்தாள். நன்றாக இருப்பது மாதிரி இருந்தது. இன்னொரு மிடறு குடித்தாள். அப்புறம் பிஸ்கட்டை ஒரு கடி கடித்தாள். ஒரு துண்டு சோபாவில் விழுந்தது. அதை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு திரும்பிப் பார்த்தாள். அவன் தலை குனிந்தபடி டீயை குடித்துக் கொண்டிருந்தான். பக்கத்தில் தேன்மொழி அவிழ்ந்த ஜடையைப் பின்னிக் கொண்டிருந்தாள்.

"தேன்மொழி. இப்படி நல்லா எப்படி டீ போடுற சொல்லு —" என்று கையை முன்னே நீட்டினாள். பின்னிய ஜடையைப் பின்னால் தள்ளிக்கொண்டு முன்னே வந்தாள்.

"வா... இப்படி உட்கார்" அவள் பக்கத்தில் தேன்மொழி உட்கார்ந்தாள்.

"மல்லிகைப்பூ இங்க ரொம்ப கிடைக்குமா?"

தலை நிறைய இருக்கும் மல்லிகைப்பூவை ஒருமுறை தடவி பார்த்துக்கொண்டு சிரித்தாள்.

"கேட்டால் பதில் சொல்லணும். சிரிக்கக் கூடாது".

"டீச்சர். அடிச்சிடுவாங்க" என்றபடி அவன் டீ கப்பை கீழே வைத்தான்.

"டீச்சர் இல்ல. லெக்சரர். அப்புறம் இப்ப டீச்சர் எல்லாம் அடிக்க முடியாது. புதுடில்லி கிண்டர் கார்டன் ஸ்கூல்ல ஒரு சின்ன பொண்ண டீச்சர் ஒரு தட்டுத்தட்டிட்டா. அது கர்னல் பொண்ணு. அழுதுகிட்ட அப்பாக்கிட்ட சொல்ல, கர்னல் கார்ல வந்து



இறங்கி ஸ்கூல்ல பெரிசா கம்ப்ளெய்ண்ட் பண்ணிட்டார். பாவம் டீச்சர்க்கு மெமோ..."

"இப்படி எல்லாம் நடக்குமா?"

"ஆமாம், தேன்மொழி நீ என்ன படிச்சி இருக்க".

அவள் திரும்பி அவனைப் பார்த்தாள்.

"அங்க என்ன பார்வை. பர்மிஷனா? வெட்கப்படாம என்ன படித்திருந்தாலும் சொல்லு. படிப்பதால் மட்டும் யாரும் அறிவாளி இல்ல."

அவனும் அவளும் மாறிமாறி பார்த்துக் கொண்டார்கள்.

"சித்தார்த். கவிதை எல்லாம் தேன்மொழிக்கு படிக்கக் கொடுக்கறதுதானே".

"தேன்மொழி தமிழே படிக்கறது இல்ல...

"ஏன். தெலுங்கா" அவள் பக்கம் நெருங்கி உட்கார்ந்தாள்.

'....'

"சரி, தேன்மொழி ரொம்ப வெட்கப்படுறாள். நீ சொல்லு சித்தார்த்... என்ன படிச்சு இருக்கா"

"எம்.எஸ்சி"

"என்ன... என்ன?"

"எம்.எஸ்சி. கெமிஸ்டரி".

"எம்.எஸ்சி. கெமிஸ்டரி படிச்சிட்டா, ஒன்னும் தெரியாதது மாதிரி உட்கார்ந்து இருக்கிற..." என்று எட்டி அவள் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"படிப்பில் என்ன இருக்கு?"

"ஆனாலும் தேன்மொழி இவ்வளவு அழுத்தம் கூடாது" வந்தனா அவள் பக்கம் திரும்பிச் சிரித்தாள்.

வந்தனா எஸ். ஐயர் பூர்வீகம் செம்பனார் கோயில். தாத்தா காலத்தில் சென்னை. அப்பா காலத்தில் பம்பாய். அவள் டில்லி வாசி. பேசும்போது வேறு வேறு மொழி எல்லாம் சேர்த்து வருகி


படிப்பகம்

www.padippakam.com



றது. அது மட்டுந்தானா? புதுக்கோட்டைக்குப் போய் இருந்தபோது ஒரு எழுத்தாளர் சொன்னார். "உங்கள் பேச்சில் உங்க முகமே தெரியவில்லை" என்று. அதுபற்றி கூட ஒரு கட்டுரை எழுதினாள். கல்லூரியில் வேலை பார்க்கும் பஞ்சாபி பேராசிரியர் அம்ருத்கௌர் 'எங்களுக்கும் இதுதான் பிரச்சினை' என்றாள். அப்புறம் ஊருக்குப் போனால், 'நாங்கள் பேசுவதைப் பார்த்துவிட்டு எல்லோரும் சிரிக்கிறார்கள்' என்றாள். அவள் பத்திரிகையில் எழுதியதே எதிர்பாராமல்தான் நடந்தது.

எட்டு வருஷமாக வீட்டில் வேலை செய்யும் சேலத்து மாரியம்மாளைப் பற்றி மனுஷிக்கு ஒரு கட்டுரை எழுதி அனுப்பினாள். மூன்றாவது மாதம் அது பிரசுரமாகியது. பேட்ரியட் அதை ஞாயிறு மலரில் மறு பிரசுரம் செய்தது. அதன் பின்னர் சில பத்திரிகையாளர்கள் சிநேகிதம் அவளுக்குக் கிடைத்தது. சின்ன சின்ன பத்திரிகைகளுக்கு தமிழ்நாட்டுப் பெண்கள் பற்றி எழுதிக்கொண்டு வந்தாள். பின்னர் நான்கைந்து முறை தமிழ்நாட்டில் பல ஊர்களுக்கும் சென்றாள். புதுக்கவிதை, கதைகள் எழுதிக் கொண்டிருந்த பல இளைஞர்களின் பழக்கம் ஏற்பட்டது. முற்போக்கு எழுத்தாளர்கள் கதைகள் கவிதைகள் அனுப்பி வைத்தார்கள். அவற்றின் வேகம் பிடித்திருந்தது. ஐந்தாறு கவிதைகளை மொழிபெயர்த்துக் கொடுத்தாள். மித்ரு உடனடியாகப் போட்டது. புதுடில்லி வட்டாரத்தில் தமிழ்நாட்டைப் பற்றி புதிதாகச் சொல்லக்கூடியவள் என்ற ஒரு பெயரும் அவளுக்கு வந்துவிட்டது.

பெண் சிசுக்கள் கொலை பற்றி செய்தி வந்ததும் பேட்ரியட் அவளைக் கூப்பிட்டு தமிழ்நாட்டிற்கு நேரில் போய் ஒரு ரிப்போர்ட் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டது. புறப்படுவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தபோது, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் நாகர்கோவிலில் இருந்து டில்லிக்கு வந்துவிட்ட எழுத்தாளர் சிவசண்முகம் நினைவுக்கு வந்தார். அவர் சமூகவியல் ஆராய்ச்சியாளர் இல்லை என்றாலும், சொந்தமாக அபிப்பிராயம் சொல்லக்கூடியவர். 'சொந்த அபிப்பிராயம் சொல்லக் கூடியவனே டில்லியில் இல்லை. எல்லோரும் முன்னூறு வருஷத்திற்கு முன்னே செத்துப் போய்விட்டார்கள்' என்று ஒரு அபிப்பிராயம் சொன்னார்.

வீட்டிற்குச் சென்றபோது உற்சாகமாக வரவேற்றார். அது மற்றவர்களை உற்சாகப்படுத்தும் உற்சாகம்.

"வாம்மா, என்ன விஷயம்"

"மாமா. உசிலம்பட்டி பெண் சிசுக் கொலை".

"சிசுக் கொலையா? அது பத்தி

www.padippakam.com

காசி பில்டர்ஸ் வழங்கும்

# காசி குரூப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்

**முதல் மாதத் தவணையில் சிறப்புத் தள்ளுபடி 31-1-96 வரை**

**காசி குரூப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீமின்** வெற்றிகரமான 18-வது குலுக்கல் சென்னையில் 25.02.96 அன்றும், மதுரை (25.12.95), திருச்சி (01.01.96 புத்தாண்டு), கோவை (18.02.96) ஆகிய இடங்களில் முதல் குலுக்கல்களும் நடைபெற உள்ளது என்பதை **"காசி பில்டர்ஸ்"** நிறுவனம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது.

இத்திட்டத்தில் ரூ.1,500/- முதல் ரூ.5,000/- வரை மாதத் தவணைகளாகச் செலுத்தி குலுக்கல் மூலம் 300 முதல் 1000 சதுரடிகள் வரையிலுள்ள வீட்டினை தேர்ந்தெடுத்து சொந்த வீடாக்கிக் கொள்ளலாம். மீதித் தொகையை வாடகை போல் வீட்டிலிருந்து கொண்டே செலுத்தலாம்.

இத்திட்டத்தில் வீடு பதிவு செய்பவர்களுக்கு முதல் மாதத் தவணைத் தொகையில் 50% தள்ளுபடி வழங்கப்படும்.

## சுலபத் தவணை சுபமங்களா திட்டம்

இத்திட்டத்தில் ரூ.10,000/- மட்டுமே முன்பணமாகச் செலுத்தி சொந்த வீடு பெறலாம். மீதமுள்ள தொகைக்கு நாங்களே அங்கீகரிக்கப்பட்ட நிதிநிறுவனங்கள் மூலமாக கடனுதவி ஏற்பாடு செய்கிறோம். **சென்னையில் வீடு கிடைக்கும் இடங்கள்;-** சென்னை கே.கே. நகர் மேற்கு, விருகம்பாக்கம், வளசரவாக்கம், சாலிகிராமம், வடபழனி, போரூர் ஆகிய இடங்களில் வீடுகள் கட்டித் தருகிறோம். **மதுரையில் வீடு கிடைக்கும் இடங்கள் ;-** எல்லீஸ் நகர், அண்ணாநகர், S.S. காலனி, T.V.S. நகர், அழகப்பா நகர், வேல்முருகன் நகர் மற்றும் மதுரையின் பிரதான இடங்களில், **திருச்சியில் வீடு கிடைக்கும் இடங்கள் ;-** ஸ்ரீரங்கம், திருவெறும்பூர், கே.கே. நகர், கிராஃபோர்டு, T.V.S. டோல்கேட், மன்னார்புரம் மற்றும் திருச்சியின் பிரதான இடங்களில். **குண்டூரில் வீடு கிடைக்கும் இடங்கள் ;-** விகாஸ் நகர், வித்யா நகர்; சியாமளா நகர், சந்திர மவுலி நகர், பட்டாபிபுரம் மற்றும் குண்டூரின் பிரதான இடங்களில். **கோவையில் வீடு கிடைக்கும் இடங்கள் ;-** பேரூர், மருதமலை, பீளமேடு, வடவள்ளி, துடியலூர், ராமநாதபுரம் மற்றும் பல இடங்களில்.

**ஓர் முக்கிய அறிவிப்பு:-**

**1-1-96 முதல் சென்னை, மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் சதுர அடியின் விலைகள் உயர உள்ளது.**

| இடம் | 31.12.95 வரை 1 சதுர அடியின் விலை | 1.1.96 முதல் 1 சதுரஅடியின் விலை |
|---|---|---|
| சென்னை | ரூ. 500/- | ரூ. 600/- |
| மதுரை | ரூ. 500/- | ரூ. 550/- |
| திருச்சி | ரூ. 500/- | ரூ. 550/- |

**எனவே 31.12.95குள் உங்கள் வீட்டினை பதிவு செய்து பயன் பெறுங்கள்.**

**கோவையில் ஒரு சதுர அடியின் விலை ரூ.700**

## காசி பைனான்ஸ் & கிரெடிட் கார்பொரேஷன்

**18% முதல் 27% வரை வட்டி** + **2% முதல் 5% வரை ஊக்கத் தொகை**

**காசி பாண்டு** : உங்கள் முதலீடு 3 வருடங்களில் இரட்டிப்பாகிறது **+ 4%** ஊக்கத்தொகை

**கோல்டன் பாண்டு** : உங்கள் முதலீடு 5 வருடங்களில் மும்மடங்காகிறது **+ 5%** ஊக்கத்தொகை

**சிறப்பு ஊக்கத்தொகை 31-1-96 வரை**

இத்திட்டத்தில் குறைந்த பட்ச வைப்புத் தொகை ரூ.5,000/-மும் அதற்கு மேல் ரூ.1000/- மடங்குகளில் **புரோக்கர்களுக்கும், வைப்பு நிதி ஏஜெண்டுகளுக்கும் 2% அதிக ஊக்கத்தொகை** வழங்கப்படும்.

*மேலும் விபரங்களுக்கு:-*

**காசி பில்டர்ஸ்,**
**காசி ஹவுசிங் & டெவலப்மெண்ட் லிட்,** மற்றும்
**காசி பைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்**

ஞாயிறு அன்றும் அலுவலகம் உண்டு

KGC

காசி தியேட்டர் காம்பளக்ஸ் நெ.91,92 ஜவஹர்லால் நேரு சாலை, அசோக்நகர், சென்னை-83.
✆ : 4822206, 4821969, 4825506, 4896373, 4896409. Fax : 044-4825606

**கிளை அலுவலகங்கள்:** **சென்னை:** 13, கிழக்கு ஜோன்ஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-15. ✆ 456464 **திருச்சி:** 5/B, 25, ஜென்னி பிளாசா, 5, பாரதியார் சாலை, கன்டோன்மெண்ட், திருச்சி-621 001. டேப் காம்பளக்ஸ், 32B/2, 3வது மாடி, வில்லியம்ஸ் ரோடு, கன்டோன்மெண்ட், திருச்சி-1 **மதுரை** : ;246A நாயக்கர் புதுத் தெரு, (முதல் மாடியில்) (சக்தி சிவம் தியேட்டர் எதிரில்) மதுரை-625 001. ✆ 541190 **பெங்களூர்;** 33, 2வது மாடி, கார்ப்பரேஷன் நம்பர் 400, ஒலிகா காம்பளக்ஸ், சம்பைக் ரோடு, (8வது குறுக்குத் தெரு அருகில்) மல்லீஸ்வரம், பெங்களூர்- 560 003 ✆ 363351 1532, 39வது E கிராஸ் 4வது "T" பிளாக், ஜெய நகர், பெங்களூர் 560 041 ✆ 6652480. **குண்டூர்** No.11-1-15, ஸ்டேஷன் ரோடு, நரசராவ்பேட் பர்னிச்சர் மார்ட் (மாடியில்) நாஸ் சென்டர், குண்டூர் 522001. போன் : 221424, 220014. **கோவை** ; ஒப்லி டவர்ஸ், 594/4, டி.பி. ரோடு, ஆர்.எஸ். புரம், கோயம்புத்தூர்-641 002. ✆: 444656. **மைசூர்:** 20, முதல் மாடி, தேவராஜ ஆர்ஸ் சாலை, மைசூர்-570 009. **விசாகபட்டினம்** : ஸ்ரீமுகா காம்பளக்ஸ் (Ground Floor) துவாரகா நகர், விசாகபட்டிணம்-530 016.



படிப்பகம்

www.padippakam.com

ரிக்கை கிளப்பிவிட்ட புரளி. கருத்த டைக்குக் கோடி கோடியா செலவு பண்ணுற சர்க்கார் இந்த மாதிரி செய்கிறவர்களுக்கு மாலைப் போட்டு மரியாதை செய்யணும். பெரிய விழா எடுத்து பாராட்டுக் கூட்டம் நடத்தணும்; தமிழ்நாட்டில் அரசியல்வாதிக்கு கட்அவுட் வைக்கறது மாதிரி கட்அவுட் வைக்கனும். அதை எல்லாம் விட்டுட்டு ஜெயில்ல போடுவேன்னு பயமுறுத்தரது சுத்த அயோக்கியத்தனம்."

"மதுரை பக்கத்து அட்ரஸ் கொஞ்சம் வேணும் மாமா-"

அவர் எழுதிக் கொடுத்தார்.

"மாமா, யூனிவர்சிட்டியில யாரைப் பார்க்கணும்"

"தமிழ்நாட்டில யூனிவர்சிட்டிப் பக்கம் போயிடாத. அங்கு அறிவுக்குப் பயங்கர பஞ்சம். துணைவேந்தர்ல இருந்து பேராசிரியர் பியூன் எல்லாம் ஒரே ரகம். அதாவது அறிவில்."

"தமிழ்நாட்டிற்கே நீங்க போறது இல்லீயா, மாமா-"

"ரெண்டு வருஷத்துக்கு முன்னால ஒருமுறை போய் இருந்தேன். கூட ஒரு ஜெர்மன் எழுத்தாளன். அவனுக்குத் தமிழ்நாட்டைப்பார்க்கனுமென்று ஆசை. ஆனந்தகுமார சுவாமி எல்லாம் படித்தவன். இரண்டு பேரும் வடலூர் ராம லிங்க சுவாமி மடம் தொடங்கி சிதம்பரம், திருவையார், தஞ்சாவூர், ஸ்ரீரங்கம் எல்லாம் பார்த்துவிட்டு மதுரைக்குப் போனோம். மதுரையில் ஒரு கூட்டம் கொடும்பாவி எரித்துக் கொண்டிருந்தது. கொடும்பாவி எரிப்பதன் தத்துவத்தைப் பற்றி நான் சொல்லச் சொல்ல அவன் எல்லாவற்றையும் படம்பிடித்துக் கொண்டான். கொஞ்ச நேரத்திற்கு அப்புறந்தான் ஒரு கட்டுரைக்காக என்னோட கொடும்பாவி எரிப்பது தெரிந்தது. அது எரிஞ்சி சாம்பலா ஆகற வரையில் நின்னு கொண்டே இருந்தேன்."

"உங்கள ஒருத்தருக்கும் அடையாளம் தெரியலீயா மாமா"

"கூடல் மாநகர் அதிசயங்கள் நிகழ்கிற இடமில்லையா? பெருமான் அன்று பிட்டுக்கு மண் சுமந்தான். தூங்கி பிரம்படி பட்டான். அப்புறம் எழுதி எரிந்தான். எல்லாம் சொக்கன் திருவிளையாடல்.

"நான் புறப்படுறேன் மாமா"

"நீ பயப்படாமல் மதுரைக்குப் போ. சொக்கன் ஏதாவது ஒரு ரூபத்தில் வந்து உதவி செய்வான். இதை எல்லாம்விட அவனுக்கு இப்ப வேற வேல கிடையாது."

வந்தனா ஒரு பெரிய பெட்டியைத் தூக்கிக் கொண்டு மதுரைக்கு வந்தாள். ஒட்டலில் பெட்டியைப் போட்டுவிட்டு தாசில்தார் ஆபீஸுக்குச் சென்றாள். நெற்றி நிறைய விபூதியைப் பூசிக் கொண்டு உட்கார்ந்த தாசில்தார் சொக்கலிங்கச் செட்டியாரைப் பார்த்தாள்.

"நான் ஒண்ணும் பண்ணமுடியாது அம்மா. இது அரசாங்கம் சம்பந்தப்பட்டது. நீங்க சென்னைக்குப் போய் பர்மிஷன் வாங்கிக்கிட்டு வாங்க. நான் எல்லா உதவியும் செய்யறேன்."

அவள் செட்டியாரை குத்திட்டு ஒரு பார்வைப் பாத்தாள்.

"இப்பத்தான் பி.பி.சி.யில ஒரு லேடி வந்தாள். அவளுக்கு அதைத்தான் சொன்னேன். அவள் வெளியில போய் ஒரு மணி நேரத்தில் ஒரு ஃபேக்ஸ் பேப்பரை எடுத்துக்கிட்டு வந்துட்டாள். ஒரு டெப்புடி தாசில்தாரை அனுப்பி வைத்தேன்."

"சார். அது பி.பி.சி. உடனே எல்லோரும் ஆடுவாங்க. நான் இந்தியக்காரி. போனா ஒண்ணும் நடக்காது."

"நான் உனக்கு உதவி பண்ணினா எனக்கு வேலை போயிடும். குழந்தை குட்டி சம்சாரத்தோடு தெருவில நிக்கணும்."

"ஒரு சின்ன இண்டர்வியூதான் பண்ணப் போறேன். இதில் அரசாங்க ரகசியம் ஒண்ணும் இல்ல; நான் வெளிநாட்டுக்கும் எதையும் விற்கப் போறதும் இல்ல".

"நீ குழந்தை. ஒன்னும் தெரியாமல் பேசற. நீ எவ்வளவு பெரிய விஷயத்தைப் பத்தி பேசப் போற, உனக்குத் தெரியுமா"

அவள் தாசில்தார் முகத்தையே பார்த்தபடி இருந்தாள்.

"சரி. ரொம்ப தூரத்தில் இருந்து வந்திருக்கற. கஷ்டந்தான். ஒன்று பண்ணலாம். ஒரு விண்ணப்பம் எழுதிக் கொடு. டெப்புடி கலெக்டர் கிட்ட அனுப்பி வைக்கிறேன். அந்த அம்மா பார்த்து பண்ணினா உண்டு. நான் ஒண்ணும் பண்ணறதுக்கு இல்ல—" என்றபடி ஒரு பேப்பரை எடுத்து மேசை மீது வைத்தார்.

"ஊர்ல ஒண்ணு நடந்தால், எங்களுக்குத் தெரியறதுக்கு முன்னால உங்களுக்குத்தான் தெரியுது. கேமிரா, விடியோன்னு தூக்கிக்கிட்டு வந்துடுறீங்க. பாவம். ஏழை. நிஜத்தைப் பேசுது. அதை எழுதி அரசாங்கத்தை வம்புல மாட்டிவிட்டுடுறீங்க. கடைசியிலே நாங்கதான் பதில் சொல்ல வேண்டி இருக்கு".

"இல்ல. இதில ஒண்ணும் பிரச்சினை வராது..."

"உனக்கு என்ன தெரியும்? நீ எப்படி பிரச்சினை வராதுன்னு சொல்லுற. இது எங்க ஊர். இதில என்ன பிரச்சினை இருக்குன்னு எனக்கில்ல தெரியும்".

"அப்ப என்ன பண்ணலாம்".

"எழுதி கொடு, என்ன தேவை. என்ன பண்ண போறதுன்னு மேல அனுப்பி வைக்கறேன். பர்மிஷன் கொடுத்தால், ஒரு வாரம் என்ன? ஒரு மாதம்கூட இருக்கலாம்".

"நான் அப்புறம் வர்றேன்" என்று வெளியில் வந்தாள். பையில் கைவிட்டு டையரியை எடுத்தாள். அதில் சிவசண்முகம் கொடுத்த முகவரியை எல்லாம் பார்த்தாள். ஆண்டித்தேவர் பெயர் கண்களில் பட்டது. தல்லா குளத்திற்குச் சென்றாள்.

"உசிலம்பட்டி விஷயமா? இரண்டு மாசத்துக்கு முன்னால அமெரிக்காவில் இருந்து கேமிராவ தூக்கிக்கிட்டு வந்தாங்க. நான்கூட பேட்டி கொடுத்தேன்... உங்களுக்கு சரியான ஆளு ஆறுமுகசாமிதான். பி.ஏ. படிச்சி கதை கட்டுரையின்னு எழுதிக்கிட்டு இருக்கறான். அவன் தங்கச்சியகூட உசிலம்பட்டியில தான் கட்டிக் கொடுத்து இருக்கு. அறிவொளி இயக்கத்திலகூட சேர்ந்திருக்கிறான்... அவன்தான் சரி".

ஆறுமுகசாமி ஒரு வாரம் அவள் கூடவே இருந்தான். பை, ஃபைல் எல்லாம் தூக்கிக்கொண்டு எது கேட்டாலும் ஒரு சிரிப்பு. ஒரு நாள் தங்கை வீட்டிற்கு அழைத்

## தமிழ்நாட்டில யூனிவர்சிட்டி பக்கம் போயிடாத. அங்கு அறிவுக்குப் பயங்கர பஞ்சம்

படிப்பகம்

www.padippakam.com


100 X 7 = 700
350 + 350 = 700
1400

இது என்ன கணக்கு?

420 X 7 = 2940
1500 + 3100 = 4600
7540

இதுவும் என்ன கணக்கு?

# இவைகள்

# பயனுள்ள கணக்குகள்

கரூர் PRC கார்மெண்ட்ஸாரின் "புதுமைத்திட்டம்" மற்றும் அதன் "புதிய இணைப்புத் திட்டத்தில்" சேர்ந்து பயன் பெற்று வரும் உங்கள் நண்பர்களிடமிருந்து இந்த "பயனுள்ள கணக்குகள்" பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளலாம்

அல்லது

கீழ்க்கண்ட முகவரியில் செயல்பட்டுவரும் எங்கள் நிறுவனத்திற்கு கடிதம் மூலம் தொடர்பு கொண்டு விவரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

PRC கார்மெண்ட்ஸ்

No. 26, 1/380, பிரதட்சணம் ரோடு, A பிளாட்,
கரூர் - 639 002. Ph : 21946



படிப்பகம்

www.padippakam.com

நாள் தங்கை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனான். வாழை இலைபோட்டு சாப்பாடு. அவன் தங்கை விழுந்து விழுந்து உபசரித்தாள். மதுரை வரையில் கூடவே வந்தான். ஓட்டல் அறையில் விட்டு விட்டு பையில் இருந்து ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து நீட்டினான். புரட்டிப் பார்த்தால். பச்சை மையில் வரிவரியாகக் கவிதை.

சென்னைக்கு வந்ததும் மூன்று கவிதைகளை மொழிபெயர்த்து மித்ரு பத்திரிகைக்கு அனுப்பிவைத்தாள். நான்கு மாதம் கழித்து இரண்டு கவிதைகள் பிரசுரமாகின. ஆறுமுகசாமி முகவரிக்கு அனுப்பி வைத்தாள். ஒரு வாரம் கழித்து அவன் கிணற்றில் தவறி விழுந்து இறந்து போய்விட்டான் என்று ஊரில் இருந்து கடிதம் வந்தது.

பாண்டிச்சேரி சென்றிருந்த போது ஆறுமுகசாமி கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டுவிட்டான் என்று ராஜ ராஜ சோழன் சொன்னான். அவளுக்கு நம்பவே முடியவில்லை. ஆச்சரியமாகப் பார்த்தபடி இருந்தாள்.

"உங்கள் ஆராய்ச்சி எப்ப முடியும்?"

"இது என்ன சயின்ஸா? நாலு பேர பார்த்துவிட்டு ஒரு மாதிரி எழுதிவிடுவோம்".

"அப்படியா?"

"ஆராய்ச்சி எல்லாம் இப்படித்தான்"

"நீங்க ஊருக்குப் போறதுக்குள்ள ஒரு நாளைக்கு நம்ப வீட்டுக்குச் சாப்பிட வரணும்"

"ஒரு நாளைக்குன்னு பொதுவா சொல்லக் கூடாது. திங்கள்கிழமை வரணுமா? புதன்கிழமை வரணுமான்னு திட்டமா சொல்லணும். எனக்கு சாப்பாடுன்னா ரொம்பப் பிடிக்கும். உடம்பைப் பார்த்தாலே தெரியும்".

தேன்மொழி சிரித்தாள்.

"ஆனால் நெத்திலி கருவாடும் மொச்சைக்கொட்டையும் போட்டு குழம்பு வச்சுப் போடணும்".

"நீங்க சாப்பிடுவீங்களா?"

"ஏன்? எதுக்கு"

"இல்ல. கேட்டேன்"

"கருவாட்டுக் குழம்புதான் இன்னும் சரியா வைக்க வர்ல. ஆனால் சிக்கன் பிரியாணியில நல்லா தேறிட்டேன். நாளைக்கு ரெண்டு கோழி வாங்கிக்கிட்டு வா, நான் பிரியாணி பண்ணிப் போடுறேன். அதுவும் மொகல் பிரியாணி".

"நீங்க நிஜமாதான் சொல்லுறீங்களா?"

"ரெண்டு கோழி. ஒரு கிலோ பாஸ்மதி ரைஸ். அப்புறம் ஏலக்காய், கிராம்பு — ஒரு லிஸ்டு தர்றேன். வாங்கி வைத்துடு. ரெண்டு மணி நேரத்தில் நல்ல பிரியாணி கமகமன்னு —"

"நிஜமா தானா?"

"ஏன்? நம்ப மாட்டேங்கற".

"தேன்மொழிக்குக் கருவாட்டுக் குழம்பே சரியா வைக்கத் தெரியாது".

"இதுதான் கலாச்சார சீரழிவு. பேசறது, எழுதறதில் போலித்தனம் வந்தது மாதிரி உடுக்கறதிலும் சாப்பிடறதிலும் வந்து இருக்கிறது. சொந்த மரபை விட்டுட்டு மேல இருக்கறதைக் காப்பி அடிக்க ஆரம்பித்ததின் விளைவு இது"

அவன் கால்மீது கால் போட்டு அவளையே பார்த்தபடி இருந்தான்.

"ருக்மணி சதிரை பரத நாட்டியம் ஆக்கினாள். சிவராம்காரந்த் யட்ச கானத்தைத் திருப்பிப் போட்டார். முருகாண்டி சித்தார்தன் ஆகவியா... அப்படித்தான். பேசினால் முடிவே இருக்காது" அவள் எழுந்து நின்றாள்.

"நாளைக்குப் பதினொரு மணிக்கு நீங்க வர்றீங்க".

அவன் அவளை ஒரு பார்வை பார்த்தான்.

"ஒயிப்ப, ரொம்ப மிரட்டக் கூடாது". அவள் ஒரடி முன்னே எடுத்து வைத்து தேன்மொழி தோள்மீது கைபோட்டாள்.

அவன் எழுந்து போய் ஷூவை மாட்டிக்கொள்ள ஆரம்பித்தான்.

"குன்றும், மலையும் மரங்களும் பார்க்க ரொம்ப அழகு. சூரியன் மறையறதுக்குள்ள ஒரு சின்ன சுத்து. நீயும் வா தேன்மொழி".

"இல்ல. சமைக்கணும். சாப்பாடு சூடா இல்லாட்டா சாப்பிட மாட்டாங்க".

"ஒவ்வொரு வீட்டிலும் தனியா எரிகிற அடுப்பை அணைத்தால் தான் பெண்களுக்கு நிஜமான சுதந்திரம் கிடைக்கும்"

அவன் பூட்ஸை மாட்டிக் கொண்டு அவள் பக்கம் வந்து நின்றான்.

"தேன்மொழி. தேனீர் ரொம்ப பிரமாதம்?"

"ராத்திரிக்கு வாங்க சாப்பிடலாம்"

"சொக்குப்பிள்ளை வீட்டில் ரெண்டு நாளா தங்கி இருக்கிறேன். ஒரு வேளை கூட சாப்பிடவில்லை ராத்திரி அவர் வீட்டிலதான்"

அவன் முன்னே அடியெடுத்து வைத்தான். பின்னால் அவள் சென்றாள். தேன்மொழி அவர்கள் போவதை ஒரு பார்வைப் பார்த்து விட்டு உள்ளே சென்றாள்.

மேட்டில் இருந்த அவன் வீட்டில் இருந்து பாதை கீழே இறங்கியது. இரண்டு பக்கத்திலும் லண்டன் புல். அப்புறம் செடி கொடிகள் தூர தூர உயர உயரமான மரங்கள்.

"சித்தார்த் இடம் ரொம்ப ரம்மியமாக இருக்கு"

"கொஞ்ச நாளைக்குத் தான். எண்ணை கிடைக்க ஆரம்பிச்சதும், ஒரேயடியா மாறிப் போயிடும்"

"எண்ணையே கிடைக்கக் கூடாதுன்னு சுவாமிய வேண்டிக் கொள்ளுறேன்" என்று வேகமாக நடந்தாள். கொஞ்ச தூரம் சென்றதும் லண்டன் புல்லைப் பிடித்துக் கொண்டு நின்றாள். "சித்தார்த்... உன் ஒயிப்பு ரொம்ப புத்திசாலி. படித்து இருந்தாலும் கர்வமே இல்லாமல் இருக்கா"

அவன் தலையசைத்தான்.

"கல்யாணம் ஆகி எத்தனை வருஷம் ஆகுது"

"மூணு வருஷம் முடியப் போகுது"

"ஜாலியா இருக்கணுமேன்னு ரொம்ப கட்டுப்பாடா"

அவளையேபார்த்துக் கொண்டிருந்தான்.

"முதல்ல அபார்ஷன் பண்ணிடாத. அப்புறம் ரொம்ப கஷ்டம்"

அவன் முன்னே சென்றான். சாலை ஒற்றையடிப் பாதையாக மாறியது. இடது பக்கமாக ஒரு பெரிய மரம் ஓங்கி வளர்ந்து மேல் நோக்கிக் கிளைகளைப் பரப்பிக் கொண்டிருந்தது. மரத்தடியில் கால்களை நீட்டி உட்கார்ந்தான். வலது பக்கத்தில் கிடந்த ஒரு கொட்டையை எடுத்து மேலே தூக்கிப் போட்டு பிடித்துக் கொண்டு இருந்தான். பின் பக்கமாக வந்த அவள் கொட்டையைப் பிடித்தபடி முன்னே வந்து, "என்ன இது" என்று கேட்டாள்.

"கடுக்கா"

"கடுக்காவா" மாறி மாறி பார்த்தாள்.

"கடுக்காதான் இங்க ரொம்ப"

"அப்பா, அவனுக்குக் கடுக்கா கொடுக்கப் போறேன். இவனுக்குக் கடுக்கா கொடுக்கப் போறேன்னு அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பார். இப்ப நான் அவருக்கே கடுக்கா கொடுக்கறேன்" என்றபடி கடுக்கா கொட்டையை பையில் போட்டுக் கொண்டாள்.

அவன் எழுந்து நின்றான். கடுக்காய்க் கொட்டையைத் தேடிக் கொண்டு பின்னால் சென்றாள். லண்டன் புல்லுக்குக் கீழாக ஐந்தாறு அடி நீளத்திற்கு ஏதோ மின்னியது. தோலா, பிளாஸ்டிக்கா - அவளுக்குத் தெரியவில்லை. அவன் கையைப் பிடித்திழுத்து வந்தாள்.

"என்ன? என்ன இது?"

"பாம்பு தோல். ரெண்டு மூனு

www.padippakam.com

நாளைக்கு முன்னதான் பாம்பு தோல் உறிச்சிட்டுப் போய் இருக்கு"

"இங்க எல்லாம் பாம்பு இருக்குமா?"

-என்றபடி அவன் தோளைப் பிடித்துக் கொண்டாள். உடம்பு நடுங்குவது போல இருந்தது.

"வீடு எல்லாம் வந்த அப்புறம் பாம்பு கொஞ்சம் குறைஞ்சி இருக்கு"

"பாம்புன்னா எனக்கு ஒரே பயம். நீ வா" அவன் கையைப் பிடித்தபடி முன்னே நடந்தாள்.

சாலை. சாலையில் வண்டி. சைக்கிள், மாடுகள், மனிதர்கள், புளிய மரத்தடியில் ஒரு ஆள் பஞ்சு மிட்டாய் செய்து விற்றுக் கொண்டிருந்தான். அவனைச் சுற்றிலும் ஐந்தாறு பையன்கள்.

வந்தனா பஞ்சு மிட்டாய்காரன் பக்கத்தில் போய் நின்றாள். மிட்டாய்க்காரன் அவசர அவசரமாகச் சக்கரத்தைச் சுற்றினான். நூலிழையாக மாறும் மிட்டாயை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு குச்சியில் பெரிய பந்தாக மிட்டாயைச் சுற்றி அவளிடம் நீட்டினான். அதை வாங்கிக் கொண்டு குதூகலத்தோடு அவன் பக்கம் திரும்பி, "உனக்கு?" என்றாள்.

"இல்ல வேணாம்" அவன் காசு கொடுத்தான். அப்படியும் இப்படியும் சுற்றிச் சுற்றி மிட்டாயைப் பார்த்தபடி இருந்தாள்.

"இதெல்லாம் இந்தத் தலைமுறை நகர குழந்தைகளுக்கு இல்லாமல் போய்விட்டது"

சாலை வளைந்து திரும்பியது. எங்கும் நியான் விளக்குகள். ஒரே வெளிச்சம். ஆட்கள்... சைக்கிள்கள்... பல வர்ணத்தில் பெரிய பெரிய போஸ்டர்கள். கதாநாயகன் மார்பு மீது இரண்டு பெண்கள் சாய்ந்தபடி சிரிக்கிறார்கள். ஒரு குரங்கு மரத்தின் மீது ஏறிக்கொண்டிருக்கிறது. சிரிப்பு நடிகரை சிரிப்பு நடிகை மூஞ்சியில் குத்தப் போகிறாள்.

வந்தனா சினிமா போஸ்டரை சந்தோஷமாகப் பார்த்தபடி இருந்தாள். அவன் பக்கத்தில் சென்றான்.

"புதுப் படமா?"

"ஒரு வாரமா ஓடிக் கொண்டு இருக்கிறது"

"தமிழ் சினிமா பார்க்கற ஆள் தானா?"

அவன் பேசாமல் இருந்தான்.

"நல்லா இருக்கும் மாதிரிதான் இருக்கிறது. ராத்திரிக்குப் பார்க்கலாம்"

"சரி"

"என்ன? சொரத்தையைக் காணோம்? தமிழ் சினிமா மேல் விரோதம் இல்லீயே"

"நானும் தேனும் மாசம் ஒரு சினிமா பார்த்துடுவோம்"

"இந்திய சினிமாவில் தமிழ் சினிமா அப்படியொன்றும் மோசம் இல்ல. மதுரையில் நானும் ஆறுமுகசுவாமியும் தினம் தினம் சினிமா பார்த்துக்கிட்டே இருந்தோம். நைட் ஷோ தான். வாயே திறக்காமல் சினிமா பார்த்துக் கொண்டே இருப்பான் பாவம்"

"அவனுக்கு சினிமா டைரக்டராக ஆகனுமென்னு ரொம்ப ஆசை"

"ஆறுமுகசுவாமி செத்த அப்புறம் அவன் பெட்டிய திறந்து பார்த்தால், பெட்டி நிறை லவ் லட்

## மனைவிகூட மட்டும்தான் நீ சினிமாவுக்கு போவியா

டர் எனக்கு எழுதி போஸ்ட் பண்ண தைரியம் இல்லாமல் அடுக்கி வைத்து இருக்கிறான்.... இடியட்..."

அவன் ஓரடி முன்னே எடுத்து வைத்து தோரணம் மாதிரி தொங்கிக் கொண்டிருந்த பத்திரிகைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"நீ என்ன மனைவி கூட மட்டுந்தான் போய் சினிமா பார்க்கறதா?"

"ஏன்? எதுக்கு?"

"இல்ல. சும்மாதான் கேட்டேன்."

"தேனுக்கு சினிமா பார்க்கறதுல எல்லாம் ரொம்ப இஷ்டம் இல்ல"

"நம்ப ரெண்டு பேரும் சினிமாவுக்குப் போறோமென்னு தேன்மொழி கிட்ட சொல்லிட்டு வந்துடு"

அவன் தலையசைத்தான்.

"தேன் மொழி ஒன்னும் சொல்ல மாட்டா, இல்ல"

"ஏன்? என்ன சொல்லுறது"

"மெட்ராஸில நானும் பொன் வண்ணனும் சேம்பர்ல ஒரு பிரஞ்சு சினிமா பார்க்கப் போய் விட்டோம். அது அவன் மனைவிக்குத் தெரிந்து அவ மண்ணெண்ணையை தலையில் ஊத்திக்கிட்டு கொளுத்திக்கற வரையில் போய்ட்டா"

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? ஒரு வாரம் கழித்து தமிழ் சினிமா கதாநாயகன் மாதிரி தாடி மீசையோடு வந்து நின்றான். பார்க்கவே சகிக்கவில்லை. சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தேன். டில்லிக்கு விடாமல் லட்டர் போடுறான். ஆபீஸ் அட்ரஸ்க்குப் பதில் போடச் சொல்லி. அப்புறம் நாலு முறை போன் கூட பண்ணிப் பார்த்துட்டான். மெட்ராஸ் போனா கூட அவனை பார்க்கறது இல்லை."

கையைப் பின்னால் கட்டிக் கொண்டு அவள் கூடவே நடந்தான்.

"எட்டு மணிக்கு சொக்குப் பிள்ளை வீட்டில் சாப்பாடு. அப்புறம் எட்டரை மணிக்கு டி.வி.யில் தமிழ்ச் செய்தி. நீ தேன்மொழி கிட்ட சொல்லிட்டு ஒன்பது மணிக்கெல்லாம் வந்துவிடு"

"சரி"

"ஸ்கூட்டர் வாங்கல"

"ரெண்டு மூனு மாசத்தில வந்துடும்"

"ஸ்கூட்டர் இருந்தால் உன்ன பின்னால உட்கார வைத்துக் கொண்டு ஊரையே ரெண்டு சுத்து சுத்தி வந்திருப்பேன்" என்று இவனைப் பார்த்து ஒரு சிரிப்பு சிரித்து விட்டு முன்னே சென்றாள்.

மணி ஒன்பது அடித்தது. டி.வி. பார்த்துக் கொண்டிருந்த வந்தனா திரும்பிப் பார்த்தாள். வாசலில் அவன் செருப்பைக் கழட்டிப் போட்டுக் கொண்டிருந்தான். அவள் எழுந்து ஆணியில் மாட்டி இருந்த லெதர் பையை எடுத்து தோளில் மாட்டிக்கொண்டு வெளியில் வந்தாள்.

"சாப்பிட்டாச்சா"

"பருப்பு சாம்பார். மிளகு ரசம். ஒரு வெட்டு வெட்டிட்டேன். நாலய்ந்து நாளைக்கு அப்புறம் வயிறு நிறைஞ்சது மாதிரி இருக்கிறது"

பவள மல்லி மணம் எங்கும் நிறைந்திருந்தது.

சாலையில் அரை குறை வெளிச்சம். இரண்டு எருமை மாடுகள் ஒன்றோடு ஒன்றாகச் சென்றன.

"சித்தார்த் உன் மனைவி கிட்ட சொல்லிட்டுத் தானே வந்த"

"உம்"

"என்ன சொன்னா?"

"ஒண்ணும் சொல்லல"

"நிஜமாவா?"

அவன் ஓரடி எடுத்து முன்னே வைத்தான்.

"சொல்லு. என்ன சொன்னா?"


"நைட் ஷோ பார்த்துட்டு நடு ராத்திரியில வீட்டுக்கு வரவேணாம். எங்கேயாவது படுத்துக் கிடந்துட்டு காலையில வந்தால் போதுமுன்னா"

▲


படிப்பகம்

www.padippakam.com






படிப்பகம்

www.padippakam.com


தினமணி வாசகர்களுக்கு

எமது மனமார்ந்த

புத்தாண்டு மற்றும்

# பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## எஸ் டி அசோஸியேடட் பில்டர்ஸ் லிட்.,

( ஃபிளாட் & சொத்து உருவாக்குனர்கள் )

எமது தற்போதைய திட்டங்கள்

- ★ தி.நகர்
- ★ அண்ணா நகர்
- ★ நங்கநல்லூர்
- ★ வேளச்சேரி
- ★ டிரஸ்ட்புரம்

CREATORS

NOT JUST BUILDERS

## எஸ்டி அசோஸியேடட் பில்டர்ஸ் லிட்.,

2-வது மாடி, 26 ரங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை - 600017

தொ.பே. : 434 0224 / 4340210 (R)234 5244 டெலி ஃபேக்ஸ் : 91-44- 2344333




படிப்பகம்

www.padippakam.com



# நாடார் சார்

சுந்தர ராமசாமி

இப்போதெல்லாம் அடிக்கடி நாடார் சாரை பற்றிய ஞாபகம் வருகிறது. எனக்கும் முதுமை ஏறிக் கொண்டிருப்பதால் அவரை அள்ளிக்கொண்டு போன மரணம் போகிற போக்கில் என் மீதும் உரசிவிட்டு, மீண்டும் வரப் பதுங்கிக் கொண்டிருப்பதுபோல் ஒரு கற்பனை தோன்றிக்கொண்டிருக்கிறது. உறவிலும் நட்பிலும் நெருக்கமான எவ்வளவோ ஜீவன்களை இழந்து விட்டேன். அரை மணி நேரப் பயணத்தில் சந்தித்துவிடும் படி - அதிகம் பார்த்துக்கொள்ளவில்லை என்ற பச்சாதாபம் இப்போது மனதில் கவிழ்கிறது என்றாலும் - சார் கிராமத்தில் இருந்து கொண்டிருக்கிறார் என்ற எண்ணமே எனக்கு எவ்வளவோ ஆறுதலைத் தந்து கொண்டிருந்தது. இப்போது நானும் தனிமையும் கடந்த கால நினைவுகளும் மட்டும்தான்.

ஐம்பது வருடங்களுக்கு முன் நடந்த சம்பவங்கள். நான் சேது பார்வதி பாய் பள்ளியில் பத்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த காலம். இ.ஆர்.எஸ். தான் எங்களுக்கு கணக்கு வாத்தியார். (பட்டப்பெயர் காராப்பூந்தி). அந்த மாதக் கணக்குப் பரிட்சையில் பதிமூன்று மாணவர்கள் - நான் உட்பட - பூஜ்ஜியம் வாங்கி இருந்தோம். 'கேடுகெட்ட சனியன்களா! இந்த வாரத்தோட உங்களைக் கையைக் கழுவிடறேன். ஏகாம்பர நாடார் வர்றார். உங்களைக் கட்டிண்டு அவர் மாரடிக்கட்டும்' என்று கத்தினார் இ.ஆர்.எஸ்.

நாடார் சாரை பற்றிப் பல கற்பனைகள் எங்கள் மனங்களில் ஓடத் தொடங்கின. அவர் சைக்கிளில் வருவார் என்றான் ஒரு மாணவன். நம்பவே முடியவில்லை. எங்கள் ஆசிரியர்கள் பலரும் குடையைப் பிடித்தபடி நடந்துதான் வருவார்கள். குடையை விரித்தால்தான் அவர்களால் நடக்கவே முடியும். ஒரு சில சோனி ஆசிரியர்கள் குதிரை வண்டியில் வருவார்கள். போரில் காயமடைந்ததுபோல் காலில் பெரிய கட்டுப் போட்டுக் கொண்டிருக்கும் எஸ்.பி. சார் ஒற்றைக்காளை வண்டியில் வந்து வராண்டாவில் தவழ்ந்து நாற்காலியில் சிரமப்பட்டு ஏறுவார்.

தெருவில் சைக்கிளை மிதித்துக் கொண்டு போவது ஒரு ஆசிரியருடைய கௌரவத்திற்கு குறைவல்லவா? ஏன் நாடார் சாருக்கு இது கூடத் தெரியவில்லை?

நாடார் சார் வகுப்புக்கு வந்தார். அவரைப் பார்ப்பதற்கே வேடிக்கையாக இருந்தது. எங்கள் மனங்களில் படிந்திருந்த ஆசிரியர்களின் தோற்றங்களே வேறு. குடுமி அல்லது கிராப். சந்தனப்பொட்டு அல்லது விபூதிப்பூச்சு. கோட்டும் பஞ்சக்கச்சமும் அல்லது இரட்டை வேட்டி. தலைப்பாகை. மணிக்கட்டின் அடிப்பக்கம் கைக்கடிகாரம். அல்லது சங்கிலியில் தொங்கும் பாக்கெட் கடிகாரம். முகத்தில் கடுகடுப்பு. குத்தல் பேச்சு. மதிப்பெண்கள் எவ்வளவு வாங்கினாலும் திருப்தியில்லாத விமர்சனங்கள். கட்டைவிரலின் கீழ் எங்கள் எல்லோரையும் அமுக்கி வைத்துக் கொண்டிருக்கும் சாமர்த்தியம்.

நாடார் சார் வகுப்புக்குள் நுழைந்ததுமே எல்லோரும் சிரித்தார்கள். மாணவிகள்கூட இடது கையால் வாயைப் பொத்தித் தலையைக் கவிழ்ந்தபடி சிரித்தார்கள். தெருவழியாகப் போய்க்கொண்டிருந்த யாரோ ஒருவர் நுழைகிற இடத்தின் கௌரவம் தெரியாமல் வந்து நிற்பது மாதிரி இருந்தது. குச்சி குச்சியாக நிற்கும் தலைமயிர் வலது கைக் கட்டை விரலுக்குப் ஆட்காட்டி விரலுக்கும் இடையே நெற்றியைக் கொடுத்து கையை அமுத்திப் பின்னால் நகர்த்திக் கொண்டு போகும்போது நிமிர்ந்து விடுதலைபெறும் குச்சி மயிர்கள் முன்னால் ஓடி வருவதுபோல் தோன்றும். ஆனால், தான் வேடிக்கையாக இருப்பது சாருக்கு மட்டும் தெரியவில்லை. மேலே பார்க்கத் துடித்துக் கொண்டிருக்கும் முறுக்கிய மீசையின் ஊசி முனைகளை மூக்கோரம் விழிகளை ஒதுக்கிப் பார்க்க முயல்வார். கதர் வேட்டி, கதர் ஜிப்பா. முரட்டு டயர் செருப்பு. கைக்கடிகாரம் இ



படிப்பகம்

www.padippakam.com

லாத மணிக்கட்டின் வெறுமை யைத் தாங்கிக் கொள்ளவே முடிய வில்லை. பேனாவுக்குப் பதில் இரு புறமும் சீவிய பென்சில். (மறுபக் கம் பென்சிலைச் சீவக்கூடாது என்று எத்தனை முறை எங்களை அடித்திருக்கிறார்கள் ஆசிரியர்கள்).

'முன்னப்பின்னச் சொல்லாம கணக்குல தூக்கிப் போட்டுட் டாங்க. சுத்தமா மறந்து போய்க் கிடக்கு. இப்பம் நான் படிக்கணம் முதல்ல' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் சார்.

நாங்களும் சிரித்தோம்.

'உன் கணக்கு நோட்டெ எடம்மா' என்று முன்னால் உட் கார்ந்திருந்த விலாசினியிடம் கையை நீட்டினார்.

மாணவியை அவர் 'அம்மா' போட்டு அழைத்தது எங்களுக்கு நூதனமாக இருந்தது. மீண்டும் சிரிப்பலைகள் எழுந்தன.

'என்னைக் கண்டாலே சிரிப் பாணி பொங்குதா உங்களுக்கு?' என்று கேட்டபடி அவரும் சிரித் தார்.

கணக்கு நோட்டை ஒவ்வொரு பக்கமாகத் திருப்பிக்கொண்டே வந்தார்.

'என்ன டேய் இது? ஒவ்வொண் ணும் பயங்கரமாட்டு இருக்கு' என் றார்.

சிரிப்பலைகள் நாற்புறமும் சுவ ரில் போய் மோதின. சார் எங்க ளைப் பார்த்து திருதிருவென்று விழித்தபடி நின்று கொண்டிருந் தார்.

'அவ்வளவு கஷ்டம் இல்லே சார். ஈசியா போட்டுப் பளகிக்கிடலாம்' என்றான் நாகராஜன்.

சார் நாகராஜனின் முகத்தைக் கூர்ந்து கவனித்தார்.

'கணக்குல எவ்வளவு மார்க் எடுப்பே தம்பி?' என்று கேட்டார்.

'நூறு' என்றான் நாகராஜன்.

'எப்பமும்'

'எப்பமும்'

'நூறுக்குக் குறைவாட்டு அவன் எடுத்தது இல்லே சார்' என்று கத் தினான் திருமலை.

'அப்போ உணக்கு லகுவாட்டுத் தானேடேய் இருக்கும்' என்றார் சார்.

ஏதோ ஒரு அதிசயத் திரவத்தில் வகுப்பே கரைந்து கொண்டிருப் பது போல் எங்களுக்குத் தோன்றத் தொடங்கிற்று.

'நீங்க பத்தாம் வகுப்புல எவ்வ ளவு வாங்கினீங்க சார்?' என்று கேட்டான் சக்ரபாணி.

வகுப்பிலேயே பெரிய கோழை அவன். என்ன கேள்வி போடுகி றான். நம்பவே முடியவில்லை. ஒரு நிமிடத்தில் ஒரு யுகம் தாண்டிவிட் டதா? ஆசிரியரிடம் அவர் வாங் கிய மதிப்பெண்ணைக் கேட்கி றான் மாணவன். அதுவும் சேது பார்வதி பாய் பள்ளியில். அதுவும் தலைமையாசிரியர் ராஜம் அய்ய ரின் தூள் பறக்கும் ஆட்சியில்.

'வெளில சொன்னா கொறச்சலு' என்றார் சார்.

மீண்டும் மாணவர்கள் சிரித்தார் கள்.

'இன்னிக்கு கணக்குப் பாடம் எடுத்துக்கிடுவேன்னு தோணல. சில வெளயாட்டுக்களைப் பத்திச் சொல்லுதேன். கணக்கு நாளைக்கு' என்றார்.

'வகுப்புல வெளயாட்டைப் பத் திப் பேசலாமா சார்?' என்று கேட் டான் சேஷன்.

'அதுல ஒண்ணும் தப்பில்லே டேய். வெளயாட்டும் ஒரு படிப்புத் தானே!'

கால்பந்து விளையாட்டைப் பற் றிச் சொல்ல ஆரம்பித்தார். வெகு உற்சாகமாகச் சொல்லிக்கொண்டு போனார். சொல்லச் சொல்ல அவ ருக்கு வகுப்பு என்பதே மறந்து போய்விட்டது. இரு கைகளையும் வேகமாக ஆட்டத் தொடங்கினார். அந்தரத்தில் வந்த பந்தை தலை யால் முட்டுக் கொடுத்துத் தள்ளி னார். அது மாடியிலிருந்து தோட் டத்துக்குள் போய் விழுந்ததுபோல் வெட்டவெளியைப் பார்த்து முறைத்தார். காலை உதைத்து எதிர்க் கட்சிக்கு தொடர்ந்து கோல் போட்டபோது கதர் வேட்டி கிழிந்துவிடுமோ என்று எங்களுக்குப் பயமாக இருந்தது.

பையன்களால் உற்சாகத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. 'கோல்', 'கோல்' என்று கத்தத் தொடங்கிவிட்டார்கள். சார் ஒரு சிறுவனைப்போல் வகுப்பின் வாசலை நோக்கிப் பதுங்கிப் பதுங் கிச் சென்று தலையை நீட்டி எட் டிப் பார்த்தார்.

மாடியில் முன் பக்கம் பெரும் தூண்கள் மீது நிற்கும் கற்களின் கம்பீரமான கட்டுமானம் அது. தன் உறுதியை வானத்துக்குப் பறைசாற்றுவது போல் நிற்கும் பெரிய அறை. மூன்று பக்கங்களி லும் திடமான உருட்டு கம்பிக ளைக் காட்டிக் கொண்டிருக்கும் மிகப் பெரிய ஜன்னல்கள். அதில் கடும் பச்சை நிறப் படுதாக்கள். தலைமையாசிரியரின் அறையின் வாசல் முன்னும் அகன்ற உயர மான பச்சைத் தட்டி இருக்கும். ஒரு ஆள் நெளிந்து நுழையும்படி சுவரோடு ஒட்டிப் போடப்பட்டி ருக்கும்.

சார் கூர்ந்து கவனித்து விட்டு எங்களைப் பார்த்து குறும்பாகச் சிரித்தார்.

'சத்தம் போடாதீங்க டேய். கண்ண நோண்டி எடுத்துடுவாரு' என்றார் தலைமையாசிரியரின் அறையைப் பார்த்து கையைக் காட்டியபடி.

'எங்களால கால்பந்துலே கார் மல் ஸ்கூலே தோக்கடிக்க முடிய லையே சார்' என்றான் கோவிந்தன் குட்டி.

'ஏன் டேய்? அவுங்களுக்குக் கொம்பு இருக்கா?' என்று கேட் டார் சார். அப்படிக் கேட்டபோது இடது கை ஆட்காட்டி விரலை யும் பாம்பு விரலையும் விரித்து நெற்றிக்கு மேல் வைத்துக்கொண் டார்.

'பயிற்சி வேணும் டேய். நெஞ்சுல வைராக்கியமும் வேணும்' என்றார்.

'கார்மல் ஸ்கூலே எங்களால தோக்கடிக்க முடியுமா சார்? என்று மீண்டும் கேட்டான் கோவிந்தன் குட்டி.

'வெளயாட்டுக்கு மூளையும் ஒளுங்கும் வேணும்டேய். உங்க கிட்டே என்ன இருக்கு? மூளை இருக்கா? ஒடம்பு இருக்கா? ஒளுங்கு இருக்கா? வைராக்கியம் இருக்கா?' என்றார் சார்.

ஒவ்வொரு கேள்வியும் எங்கள் உச்சி மண்டையைத் தாக்குவது போல் இருந்தது.

'நீங்க சொல்லித் தந்தா நாங்க அளகாட்டு வெளயாடுவோம் சார்' என்றான் வள்ளிநாயகம்.

'எல்லாரும் மேலிடத்திலே உத்த ரவு வாங்குங்க டேய், மொதல்ல' என்று தலைமையாசிரியரின் அறை யைப் பாாதது கையைக் காட்டி னார்.

'பயமாயிருக்கு சார்' என்று எல் லாப் பையன்களும் கத்தினார்கள்.

'அப்பம் பயந்தாங்கொள்ளிக ளுக்கு ஒரு வெளயாட்டு கண்டு பிடிக்கட்டு. பெறகு பார்த்துக்கிட லாம்' என்றார் சார்.

சாருக்கு கோபமும் வரும் என் பது அப்போது எங்களுக்குத் தெரிந்தது. மணியடித்தது. சார் கையை விசிறியபடியே வேகமாக விடை பெற்றுச் சென்றார்.

எங்கள் மனங்களை உசுப்பி விட்டு விட்டுப் போய்விட்டார் நாடார் சார். நாங்கள் எவ்வளவு அவமானங்கள் பட்டிருக்கிறோம். விளையாட்டு என்று சொன்னாலே கோபம் பொத்துக்கொண்டு வரும் ஆசிரியர்கள் நிறைந்த பள்ளியில் நாங்கள் எப்படி அந்தக் கலையைக் கற்றுக்கொள்ள முடியும்? நாங்கள் ரோஷம்கூட இல்லாமல் ஆகிவிட் டோமே. அதுதான் எங்களுக்கு மிகப் பெரிய கஷ்டமாக இருந்தது.

ஒவ்வொரு வருடமும் கிறிஸ்து மஸ் விடுமுறை விடுவதற்கு முந்திய நாள் எங்களுக்கு அவமானம் காத்




படிப்பகம்

www.padippakam.com

துக்கொண்டிருக்கும். கார்மல் பள்ளி எங்களை விளையாட்டுப் போட்டிக்கு அழைக்கிறது என்றால் அவர்களுக்கு அதற்குத் தகுதி இருக்கிறது. எங்கள் தலைமையாசிரியர் எதற்கு ஒப்புகொள்கிறார்? இந்தக் கேள்விக்கு எங்களுக்கு விடையே தெரியவில்லை. குமாரவேல் சாரிடம் போய்ச் சொன்னோம்.

'போட்டி வேண்டாம் சார். அவமானம் தாங்க முடியலே' என்றோம்.

'அது எப்டிடா முடியும்? திருவிதாங்கர்லேயே நம்ம ஸ்கூல்தானே பெரிசு. ராணியம்மா ஆசைப்பட்டு வெள்ளிக் கோப்பையெ நமக்குத்




படிப்பகம்

www.padippakam.com

# TAMIL NADU PEOPLE'S BENEFIT FUND (PURASAWALKAM) LTD.,

TNPBF

79, Perambur Barracks Road, Purasawalkam, Madras 600 007.

Central Government Approved (Reg. No. 18-21907/91) Ph.: 6414536, 5323360

## DEPOSIT SCHEME

| FIXED DEPOSIT | 46 Days | 3 Months | 6 Months | 1 Year | 2 Year | 3 Year | 5 Year |
|---|---|---|---|---|---|---|---|
| | 15% | 16% | 17% | 18% | 19% | 20% | 21% |

**21 %** — FOR SENIOR CITIZEN SPECIAL SCHEME for Rs. 10,000/- and above 1 Year

## PENSIONERS' REINVESTMENT DEPOSIT

| RATE OF INTEREST | Minimum Deposit | 1 Year | 2 Years | 3 Years | 40 Months |
|---|---|---|---|---|---|
| 21 % | Rs. 10,000 | Rs. 12,315 | Rs. 15,165 | Rs. 18,675 | Rs. 20,000 |

## SPECIAL FIXED DEPOSSIT SCHEME

**21 %** for Rs. 50,000/- and above 1 Year and above

**TNPBF Happy Day Money Back Scheme**

Pay Rs. 1,000/- on your happy day continously for 4 years and take Back Rs. 1,250/- every year on your happy day from the 5th year onwards for life long.

## YOUR DEPOSIT DOUBLES IN 42 MONTHS TRIPLES IN 70 MONTHS

| CASH CERTIFICATE | Rs. | 1 Year | 2 Year | 3 Year | 42 Months | 70 Months | 84 Months |
|---|---|---|---|---|---|---|---|
| | 1,000 | 1,195 | 1,450 | 1,760 | 2,000 | 3,000 | 4,000 |
| | 5,000 | 5,975 | 7,250 | 8,800 | 10,000 | 15,000 | 20,000 |

## "TAMIL MAHAL SELVAKALANCHIYAM" SCHEME

| CASH CERTIFICATE | Rs. | 10 Years | 15 Years | 10 Years |
|---|---|---|---|---|
| | 1,000 | 6,000 | 18,000 | 30,000 |
| | 5,000 | 34,500 | 90,000 | 1,50,000 |
| | 10,000 | 69,000 | 1,80,000 | 3,00,000 |

## "TAMILARASAN PORKUVIYAL" SCHEME

| CASH CERTIFICATE | Rs. | 15 Years | Rs | 5 Years |
|---|---|---|---|---|
| | 7,500 | 1,30,000 | 25,000 | 70,000 |
| | 9,000 | 1,60,000 | 35,000 | 95,000 |

## "SENTAMIL SELVAKUVIYAL" SCHEME

| Rs | 21 Years |
|---|---|
| 500 | 40,000 |
| 250 | 20,000 |

## மங்கையர் திருமண திட்டம்

மாதம் ரூ. 100/- வீதம் 60 மாதங்கள் மட்டும் செலுத்தி 20ம் ஆண்டு முடிவில் ரூ. 1,50,000/- பெறலாம்.

| RECURRING DEPOSIT | Rs | 12 Months | 24 Months | 36 Months | 48 Months | 60 Months |
|---|---|---|---|---|---|---|
| | 50 | 660 | 1,450 | 2,400 | 3,600 | 5,030 |
| | 100 | 1,320 | 2,900 | 4,800 | 7,200 | 10,060 |

**கடன்**

நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ. 325 வழங்கப்படும்.
சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள்பேரிலும் வழங்கப்படும்.

**உடன் வழங்கப்படும்**

**SAVING DEPOSIT INTEREST RATE 10.5 % P.A.**

கொடுக்கல் வாங்கல் ரூ. 1/- செலுத்தி பங்குதாரர்களாகிறவர்களிடம் மட்டும்

**WE WORK ALL DAYS**

Working Hours : Week Days : 8.30 a.m. to 5 p.m. Sunday : 8.30 a.m. to 1.00 p.m.

| V. KRISHNAMOORTHY, B.A., B.L., | A. THIYAGARAJAN, M.A., | R. SUBRAMANIAN, B.Sc., B.L., |
|---|---|---|
| Secretary | Executive Director | President |



படிப்பகம்

www.padippakam.com

தானே அனுப்பி வைக்கிறாங்க. ஜெயிக்கிறவங்களுக்கு அதைக் கொடுக்க வேணாமா?' என்று கேட்டார் குமாரவேல் சார்.

'கார்மலுக்கு கோப்பையைத் தூக்கித் தாறதுக்காக நாங்க வருஷம் தோறும் தோத்துக்கிட்டே இருக்கணுமா சார்?' என்று நாங்கள் கேட்டோம்.

'அவுங்க அளகாட்டு வெளயாடுறாங்க. கோப்பையெத் தட்டிட்டுப் போறாங்க. சோனி உடம்பெ வச்சுக்கிட்டு வெளயாடக் களியுமாலே உங்களாலே' என்றார் குமாரவேல் சார்.

'இந்த வருஷம் நாங்க வெளயாட வரலே சார்' என்று நாங்கள் சொன்னோம்.

'உங்க பேரை எல்லாம் ஹெச்.எம். நோட்டீஸ் போர்டுல போட்டாச்சே. மறுத்துப் பேசற

இரவல் வாங்கிட்டு வாறதுக்கு உங்களுக்கு சாமர்த்தியமில்லே. வாய் கிளியுது.' என்று இரைந்தார் குமாரவேல் சார்.

'டேய் ஒண்ணு சொல்லுதேன் கேட்டுக்கிடுங்க. படிப்பு வாரவங்களுக்கு வெளயாட்டு வராது. வெளயாட்டு வாரவங்களுக்கு படிப்பு வராது. திருவிதாங்கூர்லேயே படிப்புல நம் ஸ்கூல்தானேடே முதல்ல நிக்கு' என்றார் குமாரவேல் சார்.

நாங்கள் பதில் சொல்லத் தெரியாமல் நின்று கொண்டிருந்தோம்.

குமாரவேல் சார் சொன்னார்: 'நான் ஒரு ஐடியா சொல்லுதேன் கேளுங்க. பூப்போல கார்மல் ஸ்கூலுக்குப் போய் அங்கன கோச்சிங் தாராங்கள்ளா. அந்த டெக்னிக்க படிச்சிக்கிட்டு வாங்க டேய். ஒரு மண்ணும் செய்யவும் களியாது. செயிக்கவும் வேணும். நல்லசதெ

## வெளயாட்டுங்குது ஒரு தங்கச் சுரங்கம் டேய். பாளம் பாளமாக வெட்டி எடுத்துக்கிட்டே இருக்கலாம்

துக்கு ஒரு மீசை மொளச்ச பயல் இருக்கானா ஒங்க கூட்டத்திலே' என்று சத்தம் போட்டுக் கேட்டார் சார்.

'மறுத்துச் சொல்லுறதுக்கும் பயமாட்டு இருக்கு சார். நீங்க சொல்லுங்க சார்' என்றோம் நாங்கள்.

'நான் போய் சொன்னா, 'அப்போ வெள்ளிக் கோப்பையை நீங்க உங்க வீட்டுக்குத் தூக்கிட்டுப் போகப் போறீங்களா?'னு திருப்பிக் கேட்பாரே' என்றார் சார்.

போட்டி நடக்கும் தேதியும் முடிவாகிவிட்டது.

'என்ன சார் இது? என்ன சார் இது?' என்று நாங்கள் குமாரவேல் சாரிடம் முறையிட்டுக் கொண்டே இருந்தோம்.

'முழுசாட்டு மூணு நா கோச்சிங் தாரேன்டேய். போதுமா?' என்றார் குமாரவேல் சார்.

'பந்தில்லையை சார்' என்றோம்.

'பந்து ஒரு பாடு இருக்குடேய். எளவு ரூம் சாவி தொலஞ்சி போச்சு. பூட்ட உடைக்கலாமான்னு கேட்டு ஹெச்.எம்.திருவனந்தபுரம் இனஸ்பெக்டர் ஆபீஸுக்கு எளுதியிருக்காரு. பாவிக பதில் தாராமில்லே. ஒரு பந்தெ

என்றார்.

மறுநாள் நாங்கள் மூன்றுபேர் சென்றோம். நான், சுப்பிரமணிய சர்மா, இம்மானுவேல். கார்மல் பள்ளியில் நுழைந்ததுமே ஐந்தாறு பையன்கள் எதிரே வந்தார்கள். அவர்களைப் பார்ப்பதற்கே பயமாக இருந்தது. ஒவ்வொரு பையனும் எங்களைவிட ஒரு அடி அதிக உயரம். முகத்தைத் தூக்கிப் பார்க்க வேண்டியிருந்தது. நெஞ்சு விரிசல்களில் அவர்கள் அணிந்திருந்த பனியன்கள் கிழிந்துவிடுமோ என்று தோன்றும். மொந்தன் வாழைத் தண்டு மாதிரி நல்ல சதை திரண்ட தொடைகள். இரும்பால் அடித்தது போல் முழங்கால்கள். பூட்ஸ் அணிந்திருந்தார்கள். அடிப்பக்கம் முள்ளாணிகள் இருக்கும்' என்று கேள்விப்பட்டிருந்தோம்.

'கீரத்தண்டு ஸ்கூல் பிள்ளைகள் தானே' என்று கேட்டான் அவர்களில் தலைவன் போலிருந்தவன்.

நாங்கள் மௌனமாக இருந்தோம்.

'கோச்சிங்கைக் கண்காணிக்க வந்தீங்களோ' என்றான்.

கிண்டல், குரலிலும் முகத்திலும் வழிந்தன.

எங்கள் மனதிலிருந்ததை அந்தப் பாவியிடம் யார் போய்ச் சொல்லிவிட்டார்கள். தலைவன் தொண்டையைக் கனைத்துவிட்டுச் சொன்னான்: "கை கால் ஜாயிண்டை அக்கக்கா களட்டிருவேன். மரியாதையா ஓடிப்போயிடுங்க.'

நானும் சர்மாவும் இம்மானுவேலின் முகத்தைப்பார்த்தோம். இம்மானுவேலுக்கு சிறிது குஸ்தி தெரியும். அவன் முகம் சிவந்திருந்தது.

'வசமாட்டு ஒரு நா என் கையில சிக்குவே. அண்ணைக்குக் காட்டித் தாறேன் நான் யாருன்னு' என்றான் இம்மானுவேல்.

'போலே நாய்க்குப் பொறந்த பயலே' என்றான் தலைவன்.

நான் இம்மானுவேலின் சட்டையை இலேசாக இழுத்தேன். மூன்று பேரும் நிதானமாக நடந்து வெளியே வந்தோம்.

'ஒரு துக்கடாக் காரியத்தைச் செய்யக் களியல மடசாம்பிராணிகளுக்கு. வெள்ளிக்கோப்பை மட்டும் வேணும்' என்று குமாரவேல் சார் எங்களைத் திட்டினார்.

எங்கள் பள்ளியில் ஆறேழு கால் பந்து விளையாட்டு மைதானங்கள் இருந்தன. திருவிதாங்கூர்லேயே சிறந்த மைதானங்கள் அவைதான். பந்துகளும் எங்களிடம் ஏராளமாக இருந்தன. அறைச் சாவி தொலைந்து போயிருந்ததால் எங்களால் அந்தப்பந்துகளை நெடுங்காலமாகவே பார்க்க முடியாமல் இருந்தது.

இரவல் பந்து வாங்கி நாங்கள் மூன்று நாட்கள் காலையிலும் மாலையிலும் விளையாடினோம். எங்கள் விளையாட்டைப் பார்க்க சமஸ்கிருத முன்ஷிகூட ஒரு நாள் வந்திருந்தார். நெய் ஜாடியின் மூடி போன்ற தன் குடுமியைத் திருகிவிட்டபடியே பார்த்துக் கொண்டிருந்தார். நாங்கள் வேகமாக ஓடும் போது 'பாத்து பாத்து' கீழே விழுந்து கையைக் காலை ஒடிச்சுக்கப்படாது' என்று கத்துவார். ஆசிரியர்களுக்குக்கூட கொஞ்சம் ரோஷம் வந்தததுபோல் இருந்த்து. குமாரவேல் சார் மூன்று நாளும் கூடவே இருந்தார். அவருக்கு அதிக ரத்த அழுத்த நோய் இருந்ததால் எங்களுடன்சேர்ந்து விளையாட முடியவில்லை. ஆனால், 'பந்தை வெட்டியெடு, தட்டு, மூதேவி அடிடேய் கோலுக்குள்ளே' என்றெல்லாம் கத்துவார். ஜோஸப் சாரும் வந்திருந்தார். அவர் சிறு வயதில் கார்மல் பள்ளியில் கால்பந்தில் பயிற்சி பெற்றிருந்தவர். அந்தக் காலத்தில் அவர் கொடுத்திருந்த கோல்களைப்பற்றி

www.padippakam.com



எப்போதும் பேசிக் கொண்டிருப்பார். ஆச்சரியம். 'தலைமையாசிரியர்கூட வந்து பார்த்தார். ஆனால் அவர் வராண்டாவில் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தார். விளையாட்டு முடிந்ததும் நாங்கள் தலைமையாசிரியர் முன்னால் போய் நின்றோம்.

'எல்லோரும் நன்றாக விளையாடினீர்கள்' என்று ஆங்கிலத்தில் சொன்னார் தலைமையாசிரியர்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு 'எங்களுக்கு ஒரு பந்து வேணும் சார்' என்று நாங்கள் சொன்னோம்.

தலைமையாசிரியர் ஜோஸப் சாரைப் பார்த்தார். 'நாளைக்கே ஸ்கூல் இன்ஸ்பெக்டருக்கு ஞாபகப்படுத்தி ஒரு அஞ்சல் எழுதணும். மறந்துடப்படாது' என்றார். போட்டி நடக்கிற அன்று எல்லோரும் மாலையில் நேந்திரப் பழம் சாப்பிட்டுவிட்டு வர வேண்டும் என்று குமாரவேல் சார் சொல்லியிருந்தார். அப்போதுதான் ஊக்கமாகப் பந்தை அடிக்க முடியுமாம். நாங்கள் எல்லோரும் ஒரு குலை நேந்திரப் பழம் வாங்கி ஆளுக்கு இரண்டு சாப்பிட்டுவிட்டு மைதானத்துக்கு வந்தோம். மைதானத்தை ஒட்டி விஸ்தாரமான மேட்டுப்பாங்கான ஒரு திடல் இருந்தது. அதில் நாற்காலிகளை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தார்கள் பியூன்கள் அருணாசலமும் சொக்கலிங்கமும். சமஸ்கிருத முன்ஷி, ஜோஸப் சார், குமாரவேல் சார் மலையாள முன்ஷி உன்னிக்கிருஷ்ணன் நாயர், இ.ஆர்.எஸ்., வீரபத்திரன் செட்டியார், சிவராமகிருஷ்ண அய்யர், ஆர்.எல்.கேசவ அய்யர், அரபி முன்ஷி, சர்வோத்தம ராவ், சிவன் பிள்ளை, பன்னிருகைப் பெருமாள், அச்சம்மா தோமஸ், காந்திமதி டீச்சர் என்று நிறைய ஆசிரியர்கள் நின்று கொண்டிருந்தார்கள். பள்ளியின் முன்பக்க கேட்டுக்கு முன்னால் போட்டியில் கலந்து கொள்ளும் கார்மல் பள்ளி மாணவர்கள் ஒரு குழுவாக நின்று கொண்டிருந்தார்கள். சீருடை அணிந்திருந்தனர். நீலநிற அரை நிஜாரும், மஞ்சள் நிற பனியனும். அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து வெளிப்பட்ட கூட்டுப்பலம் எங்கள் நெஞ்சைக் கரைத்துக் கொண்டிருந்தது.

'போட்டி தொடங்க பத்து நிமிஷம்தான் இருக்கு. ஏன் அங்கேயே நின்னுண்டிருக்கா?" என்று அதட்டலாகக் கேட்டார் தலைமையாசிரியர்.

'அவங்களுக்குப் பயிற்சி கொடுக்கும் பாதர் சேவியர் வந்ததும் பொறவுதான் அவங்க வருவாங்க' என்றார் குமாரவேல் சார்.

'என்ன ஜபர்தஸ்து' என்று முகத்தை வலித்தார் தலைமையாசிரியர்.

மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. முன்வாசல் கேட்டில் நுழைந்து மேட்டில் ஏறி வேப்பமரத்தடியில் வந்து நின்றது அந்த மோட்டார் சைக்கிள். அதிலிருந்து இறங்கிய சேவியர் பாதிரியார் அவருடைய வலது கையைப் பிடித்துக் குலுக்கினார். இப்போது விளையாட்டில் கலந்து கொள்ளும் பையன்கள் அணிவகுத்து உள்ளே வந்தனர். அந்த அணிவகுப்பின் கச்சிதமான தன்மை எங்கள் மனச்சுவர்களை மேலும் இடித்தது.

'உட்காருங்கள் ஃபாதர்' என்றார் தலைமையாசிரியர்.

தலைமையாசிரியரும் பாதரும் அடுத்தடுத்து உட்கார்ந்து கொண்டார்கள். நாங்கள் தலைமையாசிரியர் பக்கமும் கார்மல் பள்ளி வீரர்கள் பாதர் பக்கமும் நின்று கொண்டிருந்தோம். அந்தப் பழைய தலைவன் எங்களைப்பார்த்து ஒரு தினுசாக முறைத்துக் கொண்டிருந்தான். எங்கள் ஆசிரியர்கள் முன்னால் எங்களை சுட்டு விரலால் சுண்டக்கூட அந்தப் பயலுக்கு தைரியம் இருக்காது.

'முதல் விசில் கொடுக்கலாமா?' என்று கேட்டார் குமாரவேல் சார்.

'கொடுக்கலாம்' என்றார் தலைமையாசிரியர்.

அப்போது தலைவன் பாதிரியாரைப் பார்த்து, 'பாதர், எவ்வளவு கோல் கொடுக்கணும்?' என்று கேட்டான்.

ஃபாதர் ஒயிலாகத் தலையைத் தூக்கி, 'போன தடவை எவ்வளவு கொடுத்தோம்?' என்று கேட்டார்.

'ஒம்பது' என்றான் தலைவன்.

'அப்படீனு சொன்னா அதே கணக்குல போட்டு. கூடவும் வேண்டா; கொறையவும் வேண்டா' என்றார் பாதிரியார்.

நாங்கள் தலைமையாசிரியரின் முகத்தையும் ஆசிரியர்களின் முகத்தையும் பார்த்தோம். தலைமையாசிரியர் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டிருந்தார். அவருடைய உதட்டில் ஒரு கொசு ஒட்டிக் கொண்டிருப்பதுபோல் ஏதோ சேஷ்டைகள் காட்டினார். எங்கள் பள்ளி ஆசிரியர்கள் தலைகளைக் கவிழ்த்தபடி ஒருவருக்கொருவர் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார்கள்.

இடைவேளைக்கு முன்னால் எட்டு கோல்கள் எங்களுக்குக் கிடைத்தன. இடைவேளையின் போது ஒரு பெரிய தோல் பெட்டியைத் திறந்து சலவை செய்த தேங்காய்ப்பூத் துண்டுகளை ஆளுக்கொன்றாக எடுத்து தங்கள் முகங்களையும் கைகளையும் துடைத்துக் கொண்டார்கள். கார்மல் பள்ளி

www.padippakam.com

வீரர்கள். பாட்டில்களை டப் டப் பென்று உடைத்து கலர் குடித்தார்கள். எங்களுக்கு தகர வாளியில் தண்ணீர் வைக்கப்பட்டிருந்தது. நாங்கள் தகரக் குவளையில் தண்ணீரை மொண்டு குடித்துக் கொண்டிருக்கும்போது கார்மல் தலைவன் எங்களிடம் வந்து, 'கடைசி கோலை வெளயாட்டு முடியறதுக்கு மூணு நிமிஷம் முன்ன போடுவோம். கிரத்தண்டுகளா, ஓடியோடிச் செத்துப் போயிடாதீங்க' என்று சொல்லிவிட்டுப் போனான்.

அவனுடைய வாக்கு நாணயத்தை மெச்ச வேண்டும். போட்டி முடிந்து பார்த்தபோது தலைமையாசிரியரும் ஆசிரியர்களும் உட்கார்ந்திருந்த நாற்காலிகள் எல்லாம் காலியாக இருந்தன. குமாரவேல் சாரையும் காணவில்லை.

'நம்ம ஸ்கூலே இடிச்சித் தரை மட்டமாக்காட்டா என் நெஞ்சு வேகாது' என்று கத்தினான் இம்மானுவேல்.

அன்று வகுப்பில் சில புகைப்படங்களையும் நற்சான்றிதழ்களையும் எங்களிடம் காட்டினார் நாடார் சார். அவர் கல்லூரி நாட்களில் ஆடிய கால்பந்தாட்டக் குழுக்களின் படங்கள். ஒவ்வொன்றிலும் கோப்பையை கையில் வைத்துக் கொண்டிருக்கிறார் அவர். ராணியின் பக்கத்தில் பெரிய கோப்பையுடன் அவர் நிற்கும் படத்தைப் பார்த்தபோது எங்கள் கண்களையே நம்ப முடியவில்லை. என்ன அழகான சிரிப்பு ராணியின் முகத்தில்.

சார் சொன்னார்: "இன்னிக்கு மதியத்துக்கு மேல் மூணு மணிக்கு ஹெச்.எம்.என்னைப் பாக்குதாட்டுச் சொல்லியிருக்கிறாரு. கால்பந்தாட ஆசைப்படற பிள்ளைகளெல்லாம் பேரைத் தாங்கடேய்' என்றார்.

'என்ன தகுதி சார்?' என்று நாங்கள் கேட்டோம்.

சார் சொன்னார்: 'இரண்டு காலும் முட்டுத் தட்டாம ஒளுங்கா இருக்கணும். கடுமையா ஒளைக்கணும். இந்த வருஷம் தோத்துப் போனா உசிர் அந்த மைதானத்துலேயே பிரிஞ்சு போட்டு அப்பிடீங்கற வைராக்கியம் வேணும். அவுங்க எல்லாம் பேரைத் தரலாம்' என்றார்.

பிற்பகல் இரண்டே முக்காலுக்கே பச்சைத் தட்டியின் முன்னால் வந்துவிட்டார் சார். நாங்களும் காத்துக் கொண்டிருந்தோம். தலைமையாசிரியர் அறையில் மின் விசிறியின் சிறகுகள் பயந்து பயந்து மெதுவாகச் சுற்றுவதுபோல் தோன்றிற்று. சுவரில் பெண்டுலம் இல்லாத பெரிய கடிகாரம். நீள விநாடி முள் துள்ளித் துள்ளிப் போகிறது. நாங்கள் யாருமே அன்று வரையிலும் தலைமையாசிரியரின் அறையைப் பார்த்ததில்லை. இன்னும் சில விநாடிகளில் அந்த அறையின் தரையில் எங்கள் பாதங்கள் பதிந்து முன்னேறும் என்பதையும் அங்கு கையைக் கட்டியபடி நாங்கள் நின்று கொண்டிருக்கும்போது, முழு அறையும் எங்கள் கண்களில் வழியும் என்பதையும் நினைத்த போது பீறிட்ட உணர்ச்சியை எங்களால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

சரியாக மூன்று மணிக்கு 'ஏகாம்பரம், ஏகாம்பரம்' என்ற குரல் கேட்டது. 'சார், சார்' என்று சொல்லிக் கொண்டே சார் தட்டியின் இடைவெளியில் உடம்பை நுழைக்கத் தொடங்கினார். சட்டென்று பின் திரும்பி 'யாரும் ஒரு வார்த்தை பேசப்படாது' என்றார்.

தலைமையாசிரியர் சொன்னார்: 'ஏகாம்பரம், இந்த வருஷம் சில்வர் கப்பை நாம தட்டி எடுத்துடணும். என்ன செய்வீளோ, ஏது செய்வீளோ எனக்குத் தெரியாது. செலவப்பத்தி துளி விசாரம் வேண்டாம். உங்க பின்னால நான் நிக்கறேன்; நின்னுண்டே இருக்கேன்' என்றார்.

'சார், போட்டோவும் சர்டிபிகேட்டும் கொண்டு' வந்திருக்கேன்' என்றார் சார்.

'எனக்கு ஒண்ணும் பாக்க வேண்டாம். புட்பால்னு சொன்னா ஏகாம்பர நாடார். ஏகாம்பர நாடார்னு சொன்னா புட்பால். இது திருவிதாங்கூர் முழுக்கத் தெரியும்' என்றார். எங்களைப் பார்த்து, 'சார் சொல்றதெக் கேட்டு ஒழுங்கா வெளயாடலைன்னா காலை ஒடிச்சுடுவேன்' என்றார்.

'வெளயாட்டுல ரொம்ப ஆசையுள்ள பையன்ங்க' என்றார் சார் எங்களைப் பார்த்து. அதன்பின் தலைமையாசிரியரைப் பார்த்து, 'ஒரு விண்ணப்பம் சார்' என்றார்.

'என்ன?' என்று கேட்டார் தலைமையாசிரியர்.

'ஒரு நல்ல நா பார்த்துச் சொன்னீங்கன்னா அன்னைக்கே கோச்சிங்கை ஆரம்பிச்சிருவேன்'

'நல்ல நாளாவது கெட்ட நாளாவது. இன்னிக்கே இந்த நிமிஷமே கோச்சிங்கை ஆரம்பிக்கிறேள். கடைசி வகுப்பு என்னடா?' எங்களைப் பார்த்தார் தலைமையாசிரியர்.

'சரித்திரம்.'

'யாரு?' சர்வோத்தம ராவ்தானே?'

'ஆமா.'

'அவனைப் பாத்து நான் சொல்லிக்கிறேன். ஓடுங்கோ மைதானத்துக்கு. இந்த வருஷம் மட்டும் விளையாட்டுல தோத்துட்டு வந்தேள்னா ஒரு கழுதையைக்கூட பரிட்சையில் ஒக்கார விடமாட்டேன்' என்றார்.

ஏகாம்பர சார் வராண்டா வழியாக நிதானமாக நடந்து சென்றார். நாங்களும் பின்னால் சென்றோம். பெரிய படிக்கட்டுகளில் இறங்கி ஏணிப்படியின் அடியில் இருந்த குட்டி அறை முன்னால் வந்து நின்றார். பூட்டை இழுத்துப் பார்த்தார். இரண்டு எட்டுப் பின்னால் சென்று ஓடி வந்து வலது காலால் கதவை எட்டி மிதித்தார். பூட்டு தெறித்தது. 'பந்தையெல்லாம் அள்ளி வெளிய போடுங்கடேய்' என்றார். ஒவ்வொன்றாக வெளியே எடுத்து போட்டோம். சிறிதும் பெரிதுமாக பதினேழு பந்துகள் இருந்தன.

என் வீட்டிலிருந்து பள்ளிக்கு வரும் வழியில்தான் நாடார் சாரின் வீடு இருந்தது. இம்மானுவேல் சாந்தான் செட்டிவிளையிலிருந்து. காலையில் சூரியோதயத்திற்கு முன்னால் எங்கள் வீட்டு முன் வந்து வாயில் விரலைக் கொடுத்து ஒரு விசில் அடிப்பான். காத்துக் கொண்டிருக்கும் நான் பாய்ந்து வெளியே குதிப்பேன். சார் அரைக் காக்கி நிஜாரும் வெள்ளைப் பனியனும் அணிந்து அவர் வீட்டு வாசலில் நின்று கொண்டிருப்பார். தொலைவில் எங்களைப் பார்த்ததுமே படியிறங்கி நிதானமாக ஓடத் தொடங்குவார். உடற்பயிற்சி ஓட்டம். அவர் கற்றுத் தந்த விதமாகத்தான் நாங்கள் ஓடுகிறோமா என்பதை அறிய அடிக்கடி பின்னால் திரும்பிப் பார்ப்பார். 'தலையைத் தூக்கி' என்று கத்துவார். பள்ளி மைதானத்துக்குப் போய்ச் சேரும்போது ஏழெட்டு சைக்கிள்கள் வேப்பமரத்தடியில் நின்றுகொண்டிருக்கும். இருபது பையன்களுக்குக் குறையாமல் வந்திருப்பார்கள். சாரும் கூடவே விளையாடுவார். சில சமயம் நாங்கள் விளையாடுவது அவருக்கு முழுமையாகத் தெரிய கோவில் போய் நின்று கொள்வார்.

விளையாட ஆரம்பித்ததிலிருந்து கடைசி நிமிஷம் வரை எங்களுடைய ஒவ்வொரு அசைவும் எப்படித்தான் அவருடைய மூளையில் பதியுமோ அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். விளையாட்டு முடிந்ததும் ஒரு மைதானத்திலிருந்து மற்றொரு மைதானத்துக்கு இறங்கும் பெரிய படிக்கட்டுகளில் வரிசையாக உட்கார்ந்து கொள்வோம். பந்தை மாறி மாறி இரு கைகளுக்கும் நகர்த்தியபடி சார் படிக்கட்டில் முன்னால் நின்று

படிப்பகம்

www.padippakam.com


# வாழ்வில் வசந்தம்

## அபிராமியின் தேக்கு மரத்திட்டம்

ரூ. 540/- = ரூ. 75,000/-

ரூ. 1080/- = ரூ. 1.5 லட்சம்

ரூ. 5400/- = ரூ. 7.5 லட்சம்

ரூ. 10800/- = ரூ. 18 லட்சம்

ரூ. 21600/- = ரூ. 36 லட்சம்

ரூ. 55000/- = ரூ. 1 கோடி

✪ செலுத்தும் பணத்திற்கு உத்திரவாதமாக இலவச நிலம் / கேஷ் சர்டிபிகேட் ✪ இலவச விபத்துக்காப்பீடு ✪ திட்ட காலம் 20 ஆண்டுகள் ✪ தவணை முறையும் உண்டு ✪ 3 மாதங்களுக்கு ஒரு பரிசுக்குலுக்கல் மூலம் தொடர்பு ✪ மேற்படி திட்டத்தின் தொகை 31.01.96 வரை மட்டுமே!

தஞ்சாவூர் தேக்கு கேரளா தேக்கை விட 15% உயர்வானது நன்றி : HINDU - 14/02/93

# அபிராமி தேக்கு யூனிட்ஸ்

# அபிராமி HIGH இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

இன்ஸ்டண்ட் முதலீட்டுத்திட்டம்

100% அசையா சொத்து உத்திரவாதம்

**குறைந்த பட்ச முதலீடு ரூ. 10,000/- காலம் 12 மாதங்கள்**

| காலம் | வட்டி | ஊக்கப்பரிசு | திட்ட முடிவில் | 10 சென்ட்/ 4356ச.அடி நிலம் |
|---|---|---|---|---|
| 12 மாதங்கள் | 24% P.A. | 1 கிராம் தங்க காசு | 3% போனஸ் | |

**குறைந்த பட்ச முதலீடு ரூ. 1000/- காலம் 12 மாதங்கள்**

| காலம் | வட்டி | ஊக்கப்பரிசு | திட்ட முடிவில் | 10 சென்ட்/ 4356ச.அடி நிலம் |
|---|---|---|---|---|
| 12 மாதங்கள் | ரூ. 2,400 | 2% | 2% போனஸ் | |

சூப்பர் டெபாஸிட் திட்டம்

**குறைந்த பட்ச முதலீடு ரூ. 10,000/- காலம் 60 மாதங்கள்**

| காலம் | வட்டி | ஊக்கப்பரிசு | போனஸ் |
|---|---|---|---|
| 60 மாதங்கள் | 24% P.A. Bi-Montly | 2400 Sq.ft. Plot or 15% | பதிவு செலவு |

✿ மாத வட்டி தொகையை முன்தேதியிட்ட காசோலை மூலம் வழங்கப்படும்

அஷ்ட லெட்சுமி டெபாசிட் திட்டம்

ரூ. 3,000/- = செலுத்தி ரூ. 1,08,000/- பெறுவீர் 15 வருடங்களில்

பதிவு அலுவலகம்: சித்ரா காம்ப்ளக்ஸ், சத்திரம் பஸ்ஸ்டாண்ட், திருச்சி - 2. © 31467

கிளைகள் : ● 49/21, முருகன் காம்ப்ளக்ஸ், பிருந்தாவன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை – 33. © 4840258 ● Y-219, IInd அவென்யூ, பேஸ்மெண்ட் யமஹா ஷோரூம், அண்ணா நகர், சென்னை – 40. © 6214407 ● 55/B, சின்னையா காம்ப்ளக்ஸ், ஐந்து ரோடு, கௌரி தியேட்டர் அருகில், சேலம் – 4. © 445037. ● 307, மூன்றாவது தளம், ராஜராஜேஸ்வரி டவர், டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர் – 18. ● 545, அருணா காம்ப்ளக்ஸ், இரண்டாவது தளம், கவின் மருத்துவமனை எதிரில், பெருந்துறை ரோடு, ஈரோடு–11. © 220781.




படிப்பகம்

www.padippakam.com

அரை மணி நேரம் பேசுவார் சார். சுய ஞாபகமே இருக்காது. நாங்கள் ஒவ்வொருவரும் விளையாடும்போதும் என்ன என்ன தவறுகள் செய்தோம் என்பதையும் அவற்றைச் சரி செய்து கொள்வது எப்படி என்பதைப் பற்றியும் சொல்வார். ஒரு வசை, ஒரு திட்டு இருக்காது.

'வெளயாடுது கால்க மட்டுமில்லேடேய். ஒடம்பு முளுக்க வெளயாடுது. கண் வெளயாடுது. மூளெ வெளயாடுது. காது வெளயாடுது. இன்னொன்னு. வாற இருப்பதெ முன்னால காணணும். நொடியில் வியூகம் வகுக்கணும் மனசு. நாம சொல்லுத கேக்கக் காத்துக்கிட்டு இருக்குடேய் பந்து. காட்டாத ஒரு பலம் கையிருப்பிலே இருந்து கிட்டே இருக்கணும். எதிரியை இவ்வளவுதான்னு அளக்க விட்டிரப்படாது.'

குண்டு குண்டாகச் சொற்கள் வந்துகொண்டே இருக்கும்.

பொங்கலிலிருந்து கிறிஸ்துமஸ் விடுமுறை வரையிலும் ஒரு நாள் தவறாமல் விளையாடினோம். காலையிலும் மாலையிலும். இதற்கு மேல் வாரத்தில் மூன்று நாட்கள் உடற்பயிற்சி. ஓட்டப் பயிற்சி. எங்களாலேயே எங்களுடைய விளையாட்டை நம்ப முடியவில்லை. உடலுக்கும் எங்களுக்குமான இணக்கமும் எங்களுக்கும் பந்துக்குமான இணக்கமும் வெகு இங்கிதமாகக் கூடிக்கொண்டிருந்தன. பந்து மாதிரி ஒரு அனுசரணை உள்ள பொருளை கடவுள் படைத்ததேயில்லை என்று சார் சொல்வது எவ்வளவு உண்மை. நாங்கள் ரொம்பவும் தாண்டிச் சென்றுவிட்டோம் என்று நினைக்கும்போதெல்லாம் சார் சொன்னார்: 'இப்பதான்டேய் மொத படியிலே காலை வச்சிருக்கோம். நினைப்பு வந்துரப்படாது. இன்னும் கடக்க ஒருபாடு தூரம் இருக்குடேய்' விளையாடும்போது எங்களுக்குள் உருவான மனமொழி வெட்ட வெளியில் நாள்தோறும் கனம் பெற்று வந்தது. எதிரே வருபவனிடம் மோதி பந்தை எடுத்து பக்கத்தில் தட்டினால் அந்த இடத்தில் பந்தை அணைக்க நாங்கள் விரும்பும் கால்கள் கட்டாயம் இருக்கும். அங்கிருந்து அந்தப் பந்து நேராக கோலைப் பார்த்துப் பறக்கும். அங்கு எங்கள் தலைகளில் ஒன்று அதை முட்டி கோலுக்குள் கணக்காகத் தள்ளும்.

ஒரு நாள் சேஷன் சாரிடம் சொன்னான்: 'சார் வெளயாட்டுங்கறது வெளயாட்டில்லை சார். அது வேறென்னமோ ஒண்ணா இருக்கு' அவனுக்கு அதற்கு மேல் சொல்ல வரவில்லை.

சார் சொன்னார்: 'வெளயாட்டுங்குது ஒரு தங்கச் சுரங்கம்டேய். பாளம் பாளமாக வெட்டி எடுத்துக்கிட்டே இருக்கலாம்.' அவர் அப்படிச் சொன்னது எங்கள் மனதிலும் இருந்ததைக் கண்டு சொன்னது போல் இருந்தது. மாலைப் பயிற்சியைப் பார்க்க சக ஆசிரியர்களை சார் ஒவ்வொரு நாளும் அழைப்பார். ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட வியப்புக்கு அளவேயில்லை. எல்லோரும் எங்களை உற்சாகப்படுத்தினார்கள். 'ஈர்க்குச்சிகளெயெல்லாம் ராமபாணங்களாக மாத்திட்டேளே ஏகாம்பரம். செப்பிடுவித்தையான்னா இருக்கு' என்று சமஸ்கிருத முன்ஷி சாரை புகழ்ந்தார்.

பள்ளிக்கு அது இருபத்தி ஐந்தாவது வருடம் என்பதால் வெள்ளி விழா கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார் தலைமையாசிரியர். ராணியை எப்படியும் வரவழைத்துவிட வேண்டும் என்பது அவருடைய திட்டம். அதற்கான முயற்சிகளை ரகசியமாகச் செய்து கொண்டிருந்தார். ராணி கையிலிருந்தே கோப்பையை வாங்கிட வேண்டும். அதைவிடப் பெருமை தரும் விஷயம் வேறு என்ன இருக்க முடியும். போட்டி நாள் அன்று பிற்பகல் ஒரு காலி வகுப்புக்கு வரச் சொல்லி எங்களிடம் பேசினார் சார். இன்னும் சிறிது நேரத்தில் சாமி வந்து தீ மிதிக்கத் தொடங்கி விடுவோம் என்று எல்லோருக்குமே தோன்றத் தொடங்கியிருந்தது. எங்களுக்கு ஊக்கம் அளித்துப் பேசிக் கொண்டே வந்தார்; 'இன்னைக்கி கண்டிப்பா ஜெயிக்



www.padippakam.com

கப் போறேங்கடேய். எள்ளுப் போல சந்தேகம் இல்லே எனக்கு' என்றார். 'திரும்பவும் சொல்லுதேன். மன தைரியம் தான் முக்கியம் டேய். அசரவே அசரப்படாது. வெளயாட்டுத் தொடங்கி அஞ்சு நிமிஷத்துக்குள்ளே ஒரு கோலைத் தட்டிப் போடணும். உசிரு போனாலும் சரி அதை அடைக்க விடப்படாது' என்றார்.

மைதானத்தில் இறங்கும் போது எங்களுக்கு உடல் பற்றிப் பிரக்ஞை இருக்கவில்லை. காற்றில் மிதப்பது போல் இருந்தது. கிளர்ச்சியூட்டும் மின்சாரம் உள்ளங்காலில் இருந்து உச்சந்தலை வரை வியாபிப்பது போலிருந்தது. தோற்றால் உயிர் பிரியட்டும் என்று மனம் புலம்பிக் கொண்டே இருந்தது.

போட்டி ஆரம்பித்து மூன்று நிமிஷத்திற்குள் முதல் கோல் கொடுத்தோம். அந்தச் சூழலே - மரங்கள், கட்டிடங்கள், ஆட்கள், ஆகாயம் எல்லாம்- எகிறிக் குதிப்பது போல் இருந்தது. நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்த பாதர் ஆங்கிலத்தில் ஏதோ கத்தியபடி மைதானத்தைச் சுற்றி ஓடினார். பெரிய விஷயம் நடந்த மாதிரியே எங்களுக்குத் தோன்றவில்லை. எதிராளிகள் அறுந்து தொங்கும் சிலந்தி வலைபோல் எங்கள் கால்களுக்குத் தெரிந்தார்கள். உடனடியாக ஒரு கோலை தந்து தீர்க்க ஆவேசம் கொண்டு ஆடினார்கள். பந்தை எங்கள் பகுதிக்கே கொண்டு வர முடியவில்லை அவர்களால். அவர்களுடைய ஆவேசத்திற்குள்ளேயே ஆட்டம் கண்டு விட்ட நிலையை எங்களால் உணர முடிந்தது. எங்கள் மனங்கள் எஃகு குண்டுகள் போல் இருப்பதையும் அந்த குண்டுகளிலிருந்து வெளிவரும் ஆவியைத் தாங்க முடியாமல் எதிராளிகள் வாடுவதையும் எங்களால் நன்றாக உணர முடிந்தது. பந்தை எடுக்க அவர்கள் உடலோடு உரசிய போதெல்லாம் அந்த உடல்களிலிருந்து பலவீனத்தின் செய்திகள்தான் எங்கள் உடல்களுக்குள் ஊடுருவின.

இடைவெளியின் போது சாரால் பேசவே முடியவில்லை. அவர் கண்கள் நிறைந்திருந்தன. தட்டுத்தடுமாறி 'அளகாட்டு ஆடினீங்கடேய்' என்றார். 'கூட ஒண்ணு கொடுத்துரணம். வசக்கேடா ஒண்ணு வாங்கிட்டாலும் நெளிச்சிக்கிட்டு போக விட்டிடப்படாது' என்றார்.

'இன்னொண்ணு கொடுக்கலாம்னு நிச்சயமா நம்பிக்கை இருக்கு சார்' என்றான் இம்மானுவேல்.

சார் எங்கள் முகங்களையெல்லாம் பார்த்தார். எங்கள் கண்களிலிருந்து நம்பிக்கையின் ஒளி அவரைத் தாக்குவது போல் தோன்றிற்று. இடைவெளி முடிந்து போட்டி தொடங்கி ஐந்தாவது நிமிஷத்தில் மீண்டும் ஒரு கோல் கொடுத்தோம்.

கூட்டம் பயங்கரமாக ஆர்ப்பரித்தது. எங்கள் ஆசிரியர்கள் தங்கள் கௌரவங்களை மறந்து துள்ளிக் கொண்டிருந்தார்கள். சின்னக் குழந்தைகள் மாதிரி நாற்காலிகள் மேல் ஏறி நின்று கத்தத் தொடங்கிவிட்டார்கள். தலைமையாசிரியர் இரண்டு கைகளையும் தூக்கி வீசிக் கொண்டிருந்தார். போட்டி முடிந்ததும் தலைமையாசிரியரும் ஆசிரியர்களும் மைதானத்துக்குள் ஓடி வந்தார்கள். கூச்சமில்லாமல் எங்களை மாறி மாறித் தழுவிக் கொண்டார்கள்.

'ஏகாம்பரம், முழு கௌரவமும் உங்களைச் சார்ந்தது' என்று தலைமையாசிரியர் ஆங்கிலத்தில் கத்தினார்.

'பையன்ங்க நல்ல வெளயாடினாங்க' என்றார் சார்.

எங்கள் பள்ளி மாணவர்கள் நின்று கொண்டிருந்த மூலையிலிருந்து 'ஏகாம்பர சாருக்கு ஜே' என்று சத்தம் கேட்டது. அப்படி கத்திய பகுதியில் மாணவர்கள் மேலும் திரண்டு அந்தக் கூட்டம் ஒரு ஊர்வலமாக மாறி மைதானத்தைப் பார்க்க வந்து கொண்டிருந்தது. ஏகாம்பர சார் தலைமையாசிரியரின் முகத்தைப் பார்த்தார். ஆசிரியர்களின் முகங்களையும் பார்த்தார். அவர் உரத்த குரலில் 'சேது பார்வதி பாய் ஸ்கூலுக்கு ஜே' என்று கத்தினார். ஆனால் அவருடைய கத்தல் பையன்களுடைய காதில் விழவில்லை. அவர்கள் தங்கள் கோஷத்தை மாற்றவுமில்லை.

அந்த வாரம் திருவனந்தபுரத்திலிருந்து பள்ளி இன்ஸ்பெக்டர்கள் வந்தார்கள். அவர்களுடைய வருகையை எதிர்கொள்ள எங்களை இரண்டு மூன்று நாட்கள் தயார்படுத்தினார்கள் ஆசிரியர்கள். சுத்தமாகத்தான் இருந்தது பள்ளி. அதை மேலும் எப்படி சுத்தப்படுத்த முடியும்? ஜன்னல் ஓரங்களிலும் அறைகளின் மூலைகளிலும் இருந்த சிறு சிறு அழுக்குகளை ஆசிரியர்கள் கண்டுபிடித்து எங்களை சுத்தம் செய்யச் சொன்னார்கள். மாலை நேரங்களில் நாங்கள் தோட்டங்களில் பாத்தி பிடித்து விட்டோம். ஒரு களை இல்லாமல் பிடுங்கினோம். தோட்டத்து மரவேலியில் கறுப்புச் சாயம் புதுசாகத்தான் இருந்தது. அமங்கல நிறம் என்று சொல்லி பச்சை வர்ணம் பூசச் சொன்னார் தலைமையாசிரியர்.

எங்கள் வகுப்பாசிரியர் இ.ஆர்.எஸ். அன்று பதற்றமாக இருந்தார். முதல் வகுப்பில் ஆங்கிலம் எடுத்துக் கொண்டிருந்போது எங்கள் அறைக்கு இன்ஸ்பெக்டர்கள் வரவிருக்கிறார்கள் என்று அவர் சொன்னார். ஆனால் அவர்கள் வருவதற்கு முன் முதல் மணி அடித்து விட்டது. பன்னிருகைப் பெருமாளின் தமிழ் வகுப்பின் போது இன்ஸ்பெக்டர்கள் வந்தார்கள். அவர்கள் மூவருக்குமே தமிழ் தெரியாது. அவர்களில் ஒருவர் 'திருவள்ளுவர் எழுதியுள்ள திருக்குறளை நன்றாகப் படிக்கிறீர்களா?' என்று ஆங்கிலத்தில் கேட்டார். நாங்கள் 'ஆமாம்' என்று சொன்னோம். எங்களுக்கு பாடத்தில் மூன்று குறள்கள் இருந்தன. 'சரி' என்று சொல்லிவிட்டு மூன்று இன்ஸ்பெக்டர்களும் போய்விட்டார்கள்.

பிற்பகல் ஏகாம்பர சார் கணக்கு எடுத்துக் கொண்டிருக்கும்போது மூன்று இன்ஸ்பெக்டர்களும் மீண்டும் வந்தார்கள். இதை சாரோ நாங்களோ எதிர்பார்க்கவே இல்லை. இன்ஸ்பெக்டர்களுடன் தலைமையாசிரியரும் வந்தார்.

'உங்களிடம் சில விஷயங்களைச் சொல்வதற்காக வந்தோம்' என்றார் ஒரு இன்ஸ்பெக்டர் சாரைப் பார்த்து. அவர் அதைச் சொன்ன முறையில் கண்டிப்புத் தொனித்தது.

'ஏன் கணக்கில் எல்லாப் பிள்ளைகளும் குறைவாக மார்க் வாங்குகிறார்கள்?' என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

'அப்படியில்லையே சார்' என்றார் ஏகாம்பர சார்.

மூன்றாவது இன்ஸ்பெக்டர் கையில் ஒரு பெரிய வெள்ளைத் தாளை வைத்துக் கொண்டிருந்தார். அவர் அதை மேஜை மீது விரித்தார். அதைப் பார்த்தபடியே அவர் சொல்லிக்கொண்டே போனார். 'இதற்கு முன் இந்த வகுப்பில் நூற்றுக்கு நூறு வாங்குபவர்கள் ஏழு. இப்போது ஆறு'

மூன்று இன்ஸ்பெக்டர்களும் சாரின் முகத்தைப் பார்த்தார்கள். மிகுந்த ஆச்சரியத்துடன் தலைமையாசிரியரும் சாரின் முகத்தைப் பார்த்தார்.

'இதற்கு முன் சராசரி மார்க் 54. இப்போது 51.'

சார் தலைமையாசிரியர் முகத்தைப் பார்த்தார்.

'எப்போதும் 90-க்கு மேலே வாங்கக் கூடிய பல பிள்ளைகள் இப்போது 85-க்கு மேல் தாண்டவே இல்லை'

சார் தலைமையைக் கவிழ்த்தபடி

www.padippakam.com


*SEASON'S GREETINGS*

# SIV INDUSTRIES LIMITED

1078 'VISCOSE TOWERS', Avinashi Road
Coimbatore-641 018.
**Post Box No.3780, Phone: 218020 to 29 (10 Lines)**

**PULP & FIBRE DIVISION**

**STERLING OILS**

**IAEC BOILERS LIMITED**

**MICO FARM CHEMICALS**

**SIV MAGCOBAR LIGNINS LTD**

**BHAVANI SEEDS & AGRO PRODUCTS LTD**




படிப்பகம்

www.padippakam.com


எண்ணங்களுக்கு ஏற்ப வண்ணத் துணிகளை
தேர்ந்தெடுக்க வருகைதாரீர் பாண்பேப்'க்கு......!

பாண்பேப்
பொங்கல்
கைத்தறி கண்காட்சி

இடம் : அண்ணா திடல், பாண்டிச்சேரி



விழாக்காலங்களில்
20%
தள்ளுபடியும்

புத்தம் புதிய துணி வகைகள்

- சேலைகள்
- வேட்டிகள்
- கைலிகள்
- டவல்கள்
- ரெடிமேடுகள்
- படுக்கை விரிப்புகள்
- தலையணை உறைகள்
- டெர்ரி டவல்கள்
- கலம்காரி துணிகள்

மற்றும் பல

# பாண்பேப்

எண்ணங்கள் எங்களின் வண்ண இழைகளில்

முத்தைய முதலியார்பேட்டை, பாண்டிச்சேரி - 605 003

ஷோரும் : 163, மிஷன் வீதி, பாண்டிச்சேரி - 605 001.

www.padippakam.com

நின்றார்.

முதல் இன்ஸ்பெக்டர் சாரை பார்த்து 'இன்னும் நீங்கள் பொறுப்புடன் சொல்லிக் கொடுக்க வேண்டும்' என்றார்.

சார் மிகுந்த அவமானத்துடன் தலையைத் தூக்கிப் பார்த்தார்.

ஏன் தலைமையாசிரியர் ஒன்றுமே சொல்லவில்லை? அவருக்கு சொல்ல ஒன்றுமே இல்லையா?

'இன்னும் இரண்டு மாதம் அவகாசம் தருகிறோம். பழைய இடத்துக்கு மாணவர்களைக் கொண்டு வந்துவிட வேண்டும்' என்று முதல் இன்ஸ்பெக்டர் எச்சரிக்கை செய்தார்.

சார் தலையை அசைத்தார்.

இன்ஸ்பெக்டர் போனபின்பு சாரால் அன்று சரியாகப் பாடம் எடுக்கவே முடியவில்லை.

'நான் நல்லா பாடம் எடுக்காதது போல உங்களுக்குத் தோணுதாடேய்?' என்று எங்களைப் பார்த்துக் கேட்டார் அவர். குரல் பரிதாபமாக இருந்தது.

'இல்லே சார். நல்லாதானே எடுக்குறீங்க' என்றோம்.

நாங்கள் ஆமோதித்த போது சாருக்கு மேலும் வருத்தம் வந்தது. அவர் ஜன்னல் வழியாக வெட்ட வெளியை வெறித்துப் பார்த்தார்.

அன்று பள்ளி முழுக்க ஏகாம்பர சாரைப் பற்றித்தான் எல்லா ஆசிரியர்களும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அன்று மாலை சாரை தலைமையாசிரியர் கூப்பிட்டு விட்டாராம்.

'எல்லாரைப் பற்றியும் நல்ல குறிப்பு எழுதியிருக்கிற இன்ஸ்பெக்டர்கள் உங்களைப் பற்றி மட்டும் சரியா குறிப்பு எழுதலை' என்றிருக்கிறார் தலைமையாசிரியர்.

'நீங்க என்னைப் பத்தி என்ன நினைக்கிறீங்க சார்?' என்று கேட்டாராம் ஏகாம்பர சார்.

'அவர்கள் புள்ளி விபரம் தரும் போது நாம் அதை ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டியிருக்கிறது ஏகாம்பரம்' என்றாராம் தலைமையாசிரியர்.

பள்ளிக் கூடமே பார்ப்பதற்கு ஜெகஜ்ஜோதியாக இருந்தது. மாலை மாலையாகத் தொங்கும் வண்ண விளக்குகள். எங்கு பார்த்தாலும் தோரணங்கள். இருபுறமும் வாழைக்குலைகள் கட்டிய பல வளைவுகள். ஒரு தூசி துரும்பு பார்க்கக் கிடைக்கவில்லை. கால்பந்தாட்ட மைதானத்தில் மிகப் பெரிய பந்தல். மிகப் பெரிய மேடை. ராணி மேடையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார் சிரித்தபடி. தலைமையாசிரியர் அவருடைய நாற்காலியை ஒட்டி நின்று கொண்டிருக்கிறார். ஒன்றுக்கு இரண்டு தடவை தலைமையாசிரியரை உட்காரச் சொல்லியாயிற்று. சொன்னது தன் காதில் விழாதது போல் பாவித்தபடி நின்று கொண்டிருக்கிறார் அவர்.

நிகழ்ச்சி நிரல்படி காரியங்கள் வரிசையாக நடந்து கொண்டிருக்கின்றன. இசைப் போட்டிகள், நடனங்கள், மாறு வேடப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள், குழந்தைகளுக்குப் பரிசுகள்.

ராணி திடீரென்று தலைமையாசிரியரைப் பார்த்து 'ஸ்ரீமான் ஏகாம்பர நாடார் எங்கே?' என்று மலையாளத்தில் கேட்டார்.

தலைமையாசிரியர் சுற்றும் முற்றும் பார்த்தார். 'மிஸ்டர் ஏகாம்பரம், மிஸ்டர் ஏகாம்பரம்' என்று கத்தினார் அவர். முன் வரிசையில் உட்கார்ந்திருந்த ஆசிரியர்களைப் பார்த்து 'ஏகாம்பரம் எங்கே?' என்று அதட்டினார். ஆசிரியர்கள் சுற்றும் முற்றும் பார்த்தார்கள். ஏகாம்பர சாரை காணவில்லை. தலைமையாசிரியர் இ. ஆர். எஸ். - ஐ பார்த்து 'இன்னும் ஒரு நிமிஷத்துல அவர் இங்கே வரணும்' என்றார். இ.ஆர்.எஸ். நாங்கள் இருக்கும் பக்கம் ஓடி வந்து இம்மானுவேலிடம், 'நீ சைக்கிளில் போய் சாரை கூட்டிண்டு வா' என்றார். இம்மானுவேல் சைக்கிளில் ஏறியபோது நானும் பின்னால் ஏறிக் கொண்டேன். 'சைக்கிளை சாருட்ட கொடுத்துட்டு அவரை வரச் சொல்லு முதல்ல' என்று கத்தினார் இ.ஆர்.எஸ்.

சாரின் வீட்டுக்குள் நுழைந்தோம். நார்கட்டிலில் சட்டையணியாமல் படுத்துக் கொண்டிருந்தார் சார்.

'என்ன சார் இது?' என்றான் இம்மானுவேல்.

'தலை நோவு. அதான் வரலே' என்றார் சார்.

'கோப்பையை யார் சார் வாங்குது?' என்றான் இம்மானுவேல்.

'ஹெச்.எம். வாங்கலாம். தப்பில்லே' என்றார் சார்.

'சார், ராணி உங்களைக் கேட்டாங்க சார்' என்றேன் நான்.

'நீங்க வராம எப்படி சார்?' என்றான் இம்மானுவேல். அவனுக்குத் தொண்டை அடைத்தது.

'நல்லா படிங்கடேய். அதான் முக்கியம்' என்றார் சார்.

நாங்கள் இருவரும் சாரின் முகத்தைப் பார்த்தோம். அது அவருடைய முகமாகவே இருக்கவில்லை. இருள் அப்பிக் கிடந்தது.

'சார், வேறு யாருக்காக இல்லையின்னாலும் எங்களுக்காக வாங்க சார்' என்றான் இம்மானுவேல்.

படிக்கட்டில் நிழல்கள் ஆடின. திரும்பிப் பார்த்தோம்.

சேஷன், வள்ளிநாயகம், கோவிந்தன்குட்டி, மணிகண்டன் எல்லோருடைய முகங்களும் தெரிந்தன.



ஜன்னல் வழியாக இன்னும் சில முகங்கள் தெரிந்தன. ஒவ்வொரு முகத்திலும் ஏமாற்றம் வழிந்தது.

சாரின் மனைவி அடுக்களை நிலைப் படியில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தார்.

'இந்தப் பிள்ளைங்களுக்காகத் தானே ராப்பகல் உசிரே விட்டீங்க. கூப்பிடறாங்க இல்லை' என்றாள்.

சார் அமைதியாகப் படுத்தபடி இருந்தாள்.

'அப்டீனு சொன்னா நாங்களும் போகல சார்' என்றான் இம்மானுவேல்.

சார் எங்கள் முகங்களை ஒவ்வொன்றாகப் பார்த்தார்.

சாரின் மனைவி சுவரில் ஆணியில் தொங்கிக் கொண்டிருந்த ஜிப்பாவை எடுத்து சார் கையில் தந்தாள்.

சார் எழுந்திருந்தார்.

▲



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com



# உற்ற நண்பர்கள்

## கோபிகிருஷ்ணன்

"அப்புறம் ராதாவப் பாத்தியா?"

"ஓ, பாத்தெனே."

"என்ன பேசுனா?"

"நீங்க எப்படி இருக்கீங்கன்னு கேட்டா."

"அதுக்கு நீ என்ன சொன்னே?"

"நா நல்லா இருக்கேன்னு சொன்னேன்."

"அதுக்கு அவ என்ன சொன்னா?"

"சந்தோஷம்னா."

"அப்புறம் நீ என்ன கேட்டே?"

"நீ எப்படி இருக்கேன்னு கேட்டேன்."

"அதுக்கு அவ என்ன சொன்னா?"

"எனக்கென்ன கொறெ? நா நல்லாத்தான் இருக்கேன்னா."

"கல்யாணம் ஆயிருச்சான்னு கேட்டியோ?"

"கேட்டேன்."

"அதுக்கு அவ என்ன சொன்னா?"

"இப்பதான் கல்யாணம் ஆச்சு அதான் சந்தோஷமா இருக்கேன்னா."

"அதுக்கு நீ என்ன சொன்னே?"

"காலேஜ்லெ படிக்கிறப்ப கூட எங்களோடயெல்லாம் சிரிச்சிப் பேசிக்கிட்டு சந்தோஷமாகத்தானே இருந்தேன்னு கேட்டேன்."

"அதுக்கு அவ என்ன சொன்னா?"

"அது வேற மாதிரி சந்தோஷம்னா."

"அதுக்கு நீ என்ன சொன்னே?"

"சந்தோஷத்த வகைபிரிக்கற ஆளு நீ ஒருத்தியாத்தான் இருக்கணும்னேன்."

"அதுக்கு அவ என்ன சொன்னா?"

"அவ பேசுறதுக்கு முன்னாடியே நானே கேட்டேன்."

"என்ன கேட்டே?"

"கல்யாணமானதுக்கு வாழ்த்துக்கள்னேன்."

"இது கேள்வி இல்ல.... ஒரு ஸ்டேட்மெண்ட்..."

"சரி... அப்படியே வச்சுக்க."

"நா வச்சிக்குறேன். மேக்கொண்டு என்ன கேட்டே?"

"ஒங் கல்யாணம் ரகசியக் கல்யாணமான்னு கேட்டேன்."

"அதுக்கு அவ என்ன சொன்னா?"

"இல்லியேன்னு ஆச்சரியப்பட்டா."

"அவ ஆச்சரியப்பட்டதெ நீ எப்படி எடுத்துக்கிட்டே?"

"என்னெயெல்லாம் கூப்பிடலியே. அதான் கேட்டேன்னு சொன்னேன்."

"அதுக்கு அவ என்ன சொன்னா?"

"அட்ரஸ் நோட்புக் தொலஞ்சிரிச்சுன்னா."

"அதுக்கு நீ என்ன சொன்னே?"

"என் அட்ரஸெச் சொல்லி இனி சுப காரியங்க நடந்தா அவசியம் தெரிவிக்கணும்னேன்..... டே கிருஷ்ணா!"

"என்ன கோவாலு?"

"நீதாண்டா என் உண்மையான நண்பன்."

"எப்பிடிச் சொல்றே கோவாலு?"

"என் வாழ்க்கை, எனக்கு நடக்குற சம்பவங்களெப் பத்தியெல்லாம் எவ்வளவு அக்கறையோட விசாரிக்குறெ. ஒன்னெ என்னாலெ வாழ்நாள் முழுக்க மறக்க முடியாது."

"வுட்டுரு கோவாலு. மறக்காதே. நானும் ஒன்னெ மறக்க மாட்டேன்."

"அப்ப ஒருத்தரெ ஒருத்தர் வாழ்நாள் முழுக்க ஞாபகம் வச்சிக்குவோங்கறெ."

"ஆமா கோவாலு. எனக்கு நீ. உனக்கு நான்."

"எனக்கு நீ. உனக்கு நான். கிருஷ்ணா!"

"என்ன கோவாலு?"

"தத்துவம் பேசி நாளாச்சு, கிருஷ்ணா. இந்த நான் நீ வச்சுப் பேசுவமா?"

"ஓ."

"எனக்கு நீ. உனக்கு நான். எனக்கு நான். உனக்கு நீ."

"எனக்கு என். உனக்கு உன். உனக்கு என். எனக்கு உன்."

"ரொம்பப் புகழாதெ கோவாலு. எனக்கு என்னமோ புல்லரிக்கிற மாதிரி ஆயிரும்."

▲

www.padippakam.com


# அன்றும், இன்றும், என்றும்
# 24% வட்டியை அளிக்க முடியும் என்கிற அனுபவ் உத்தரவாதத்தின் 5 ரகசியங்கள்

எந்த ஒரு நிதி நிறுவனத்திற்கும் அது என்ன வட்டி அளிக்கிறது என்பதை சொல்வது எளிது. ஆனால் அதை சொன்னபடி செய்வது மிகவும் கடினம். அப்படி இருக்கும்பொழுது, அனுபவ் உத்திரவாதம் மட்டும் டெபாசிட்தாரர்கள் முழு நம்பிக்கையைப் பெற்றதன் காரணம் என்ன?



**ரகசியம் 1:**
தனது அடிப்படை கொள்கைகள் மற்றும் திட்டங்களை கண்டிப்புடன் கடைப்பிடித்தல்.



**ரகசியம் 2:**
1000-க்கு மேற்பட்ட, பல தொழிற்துறைகளில் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் கொண்ட நிர்வாக அமைப்பு



**ரகசியம் 3:**
எந்தவித அபாயமும் இன்றி, அதிக ஈட்டுத் தொகையை உத்திரவாதம் செய்யும் வகையில் அனுபவ் குரூப்பை சேர்ந்த கட்டிடத் தொழில் மற்றும் ஏற்றுமதி தொழில்களில் நிதிகளை பயன்படுத்துதல்.



**ரகசியம் 4:**
அனுபவ் குரூப் கம்பெனிகளின் நிரூபணமான லாபகரமான செயல்திறன்.



**ரகசியம் 5:**
அனுபவ் நிறுவனங்களின் சிறப்பான வளர்ச்சியைக் கண்டு சர்வதேச நிறுவனங்கள், அதனுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள முன் வந்துள்ளன.

ஐந்து ரகசியங்கள். ஐந்து உறுதிப்படுத்தும் உண்மைகள். இவை சுட்டிக் காட்டுவது ஒன்றேதான்.

**அனுபவ் உத்திரவாதம் என்பது முழுமையாக நம்பக்கூடிய உத்திரவாதம்**

குறிப்பு: ரிசர்வ் வங்கி சட்டம் அத்தியாயம் IIIC பிரிவு 45s-ன் கீழ் விதிக்கப்பட்டுள்ள வரம்புக்குட்பட்டு டெபாசிட்டுகளை பெறுகிறோம்

## அனுபவ் டெபாஸிட் ஸ்கீம்

| குறைந்தபட்ச முதலீடு | வட்டி விகிதம் | |
|---|---|---|
| ரூ. 10,000/- | 24% PER ANNUM | வட்டி மாதாந்திர பின் தேதியிட்ட செக்குகள் மூலம் முன்னதாகவே தரப்படும் |

## அனுபவ் பாண்ட்

| குறைந்தபட்ச முதலீடு | காலம் | முதிர்ச்சி கால ஈட்டுத் தொகை |
|---|---|---|
| ரூ. 25,000/- | 3 1/2 ஆண்டுகள் | ரூ. 50,000/- (உங்கள் முதலீடு 3 1/2 வருடங்களில் இரட்டிப்பாகிறது) |

## அனுபவ் ஃபைனான்ஸ் அண்டு இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

**பதிவு அலுவலகம்:** அனுபவ் சென்டர், 11, சோமசுந்தரம் தெரு, தி.நகர், சென்னை - 600 017. போன்: 8254155 / 8282629 / 8282833 / 8283316 ஃபேக்ஸ்: 8284967.

**கார்ப்பரேட் அலுவலகம்:** 15/2, ஹனுமந்த ராவ் தெரு, எல்ரிச் லேபாரட்டரி எதிரில், பாலாஜி நகர், ராயப்பேட்டை, சென்னை - 600 014. போன்: 8241828 8241829 8241830 8241831 ஃபேக்ஸ் 8241832.

***சென்னை கிளைகள்***

• சேத்துப்பட்டு: 67, ஸ்பர் டேங்க் ரோடு, போன்: 8267248/8265669 • அடையார்: பி2, பே காஸ்டில், பத்மநாப நகர், பெசன்ட் அவென்யூ ரோடு, போன்: 4916489/4916619 • அண்ணா நகர்: "W" பிளாக், 53-K, போன்: 6261376/6216276 • நந்தனம்: 40, முதல் மெயின் ரோடு, இரண்டாவது மாடி, C.I.T. நகர், போன் 452721. • தேனாம்பேட்டை: 13, H.D. ராஜா தெரு, எல்டாம்ஸ் ரோடு, போன்: 456427 • நுங்கம்பாக்கம்: 139, கோடம்பாக்கம் ஹைரோடு, போன்: 8256070/8260688. • தாம்பரம்: B.R. காம்ப்ளெக்ஸ், இரண்டாவது மாடி, 12, ராமகிருஷ்ணா தெரு, நேஷனல் தியேட்டர் எதிரில், போன்: 2366658/2366484.

*இதர கிளைகள்:* • பாண்டிச்சேரி (போன்: 43086) • சேலம்: (போன்:446981). • திருச்சி, (போன்: 463091) • மதுரை: (போன்:33214). • கோயம்புத்தூர். • திருநெல்வேலி, (போன்: 337960). • விருதுநகர் • நாகர்கோவில் • ஹைதராபாத், (போன்: 394735/394741). • விசாகப்பட்டினம், (போன்: 60160) • வாரங்கல் (போன்: 73719) • விஜயவாடா, (போன்: 74646) • பெங்களூர் (போன்:5591483) • மைசூர் (போன்: 31981/26965) • கொச்சின் (போன்:372118/374156) • திருவனந்தபுரம் (போன்:75117). • கோழிக்கோடு, (போன்:58912) • பம்பாய் (போன்: 4309554/4379467). • புதுடெல்லி, (போன்:6434084/6434085)

ADWAVE/AR/5022 TAM A

*திறமையுடன் செயலாற்றுகின்றோம். அதிக வட்டி தருகின்றோம்.*




படிப்பகம்

www.padippakam.com



# பீஹாரும் ஜாக்குலினும்

**சுரேஷ்குமார இந்திரஜித்**

க்ரையோஜெனிக்ஸ் பற்றிய ஒரு கருத்தரங்கில் கலந்து கொள்ள பாரீஸ் வந்திருந்த நான், அங்கிருந்த ஒரு புத்தகக் கடையில் 'India A Mysterious Country' என்ற புத்தகத்தை வாங்கினேன். இந்தப் புத்தகம் ஹெர்மன்ஸ்டாடிங்கர், ஜாக்குலின் ஆகிய இருவர் ஜெர்மன் மொழியில் எழுதி ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. அதில் 18-ம் பக்கத்தில் காணப்பட்ட பகுதி என்னைத் திடுக்கிட வைத்தது.

"....... கோயில் பெரியதாக இருந்தது. கோபுரங்கள் கண்களை உறுத்தும் செயற்கையான வண்ணப் பூச்சுகளால் அழகற்றதாக இருந்தன. கோயிலில் இருந்த சிற்பகங்களின் அழகு, நுட்பங்கள் பற்றிய பிரக்ஞையின்றி மக்கள் வணங்கிச் சென்று கொண்டிருந்தனர். வெளி மதிற்சுவர் ஓரம் ஒரு சாமியார் ஒன்றுக்கிருந்து கொண்டிருந்தார். கோயிலின் ஒரு பகுதியில் கடைகள் இருந்தன. கடைக்காரர்கள் எங்களைக் கண்டதும் தத்தம் கடைகளுக்கு வருமாறு அழைத்தனர். அவர்கள் அழைப்பில் நாகரீகமற்ற தன்மை இருந்தது. கோயிலுக்கு வெளியே எங்களை பிச்சைக்காரர்களும் சிறுவர் சிறுமியர்களும் சூழ்ந்துகொண்டனர். காசு கொடுத்தால் கூட்டம் கூடி தப்பிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை அனுபவத்தில் உணர்ந்திருந்ததால் நாங்கள் காசு கொடுப்பதில்லை. வெள்ளையர்களை மக்கள் ஏன் வேடிக்கைப் பொருளாகப் பார்க்கிறார்கள் என்று ஒரு கல்லூரிப் பேராசிரியரை நேற்று சந்தித்த போது கேட்டோம். 'உங்களின் நிறம், உயரம், தோற்றம். தவிர வெள்ளையர்கள் எங்களை ஆண்டார்கள்.' என்றார்.

நெருக்கடி மிகுந்த இந்தச் சாலையில் மக்கள், நின்றுகொண்டும் நடந்து கொண்டும் சாப்பிட்டுக் கொண்டும் குடித்துக் கொண்டும் தூங்கிக் கொண்டுமிருந்தனர். இடையே மாடுகளும் நாய்களும் அலைந்து கொண்டிருந்தன. சாப்பிட்டவர்கள் இலைகளையும் கழிவுகளையும் சாலைகளில் எறிந்து கொண்டிருந்தனர். பொரிகடலைக் கடை ஒன்றில் ஸ்டாலின் படமும், காந்தி படமும் அருகருகே பெரிய வடிவத்தில் மாட்டப்பட்டிருந்தன. ஜாக்குலின் இதை எனக்குச் சுட்டிக் காட்டினாள். அக்கடைக்கு அருகே இருந்த டீக்கடையில் இந்துக்கடவுள் படம் பெரியதாகவும் ஒரு புறத்தில் கிறிஸ்து படமும் இன்னொரு புறத்தில் மசூதி படமும் சிறியதாக மாட்டப்பட்டிருந்தன. அக்கடையில் டீ சாப்பிட இருவரும் சென்றோம். இங்குள்ள டீக்கடைகளில் அனைத்து நேரங்களிலும் யாராவது குடித்துக் கொண்டிருப்பதை நாங்கள் பார்த்திருந்தோம். அந்த டீக்கடையருகே 'எம்போரியம்' என்ற பெயரில் வீடு போன்றிருந்த அந்தக் கட்டடம் ஒரு சினிமா தியேட்டர் என்பதை சுவரொட்டி மூலமாக அறிந்தோம். ஒரு இந்துக் கடவுளின் முன் சதைப்பிடிப்பான ஒரு பெண் கேளிக்கை விடுதியில் ஆடும் பெண்ணின் உடைகளுடன் ஆடிக் கொண்டிருக்கும் பெரிய சுவரொட்டி சுவரில் ஒட்டப்பட்டிருந்தது. நுழைவுச் சீட்டு கொடுக்கும் இடத்தில் மக்கள் கும்பலாக நெருக்கி நின்று கொண்டிருந்தார்கள்.

டீ குடித்துக் கொண்டிருந்த போது அக்கடையின் ஓரத்தில் நின்று புகைத்துக் கொண்டிருந்த லுங்கி அரைக்கைச் சட்டை அணிந்த ஒரு பையன் எங்களை நோக்கி வந்தான்.

'நீங்கள் எந்த தேசத்திலிருந்து வருகிறீர்கள்?' என்றான்.

'நாங்கள் ஜெர்மனி' என்றாள் ஜாக்குலின்.

'கிழக்கு ஜெர்மனியா?' என்றான்.

'அங்கிருந்து வெளியே வருவது சுலபமல்ல. நாங்கள் மேற்கு ஜெர்மனி.


படிப்பகம்

www.padippakam.com

'அப்படியானால் நீங்கள் சார்த்தர் பிறந்த தேசத்திலிருந்து வந்திருக்கிறீர்கள். வாழ்த்துக்கள்' என்றான்.

ஜாக்குலின் சொன்னாள்: 'சார்த்தர் பிரான்ஸைச் சேர்ந்தவர். ஜெர்மனி அல்ல'

அவன் சிகரெட்டை கீழே போட்டு அணைத்துவிட்டு 'இந்தியாவை நீங்கள் விரும்புகிறீர்களா' என்று கேட்டான்.

'இந்தியாவைப் பற்றி இன்னும் அறியவில்லை' என்றாள் ஜாக்குலின்

அவன் கையசைத்து விடைபெற்றுக்கொண்டு அருகிலிருந்த சினிமா தியேட்டரின் கவுண்டரை நோக்கிச் சென்றான்....'

-இப்பகுதி என்னைத் திடுக்கிட வைத்ததற்குக் காரணம் இதில் குறிப்பிடப்பட்டிருந்த பையன் நான்தான். 1975-ம் ஆண்டு இந்தச் சம்பவம் நடந்தது. அப்போது நான் பட்டமேற்படிப்பு படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் ஊரின் மிக மோசமான சினிமா தியேட்டரான எம்போரியத்தில் தெலுங்கு டப்பிங் படம் பார்க்க வந்தபோது இந்தச் சம்பவம் நடந்தது.

அந்தச் சமயத்தில் தொலைபேசி ஒலித்தது. எடுத்தேன். இரண்டு மாணவர்கள் சந்திக்க வந்திருப்பதாகத் தெரிவித்தார்கள். நான் வரட்டும் என்றேன். கருத்தரங்கிற்கு தயார் செய்ததிலிருந்து கருத்தரங்கு முடியும்வரை ஏற்பட்டிருந்த பதட்டத்திலிருந்து தற்போது விடுதலை பெற்று கேளிக்கையை விரும்பும் மனோ நிலையிலிருந்தேன். இந்தச் சமயத்தில் மாணவர்களைச் சந்திப்பது எனக்கு அலுப்பூட்டியது. வந்திருந்தவர்களில் அடால்ப்ஃவின் டாஸ் என்ற பெயர் கொண்டிருந்தவன் ஹீலியம் வாயு பற்றி ஆய்வுக் கட்டுரை எழுதியிருப்பதாகக் கூறி அக்கட்டுரையை என்னிடம் தந்து அதை நான் படித்துப் பார்க்க வேண்டும் என்று விரும்புவதாகத் தெரிவித்தான். அவனுடைய ஆர்வம் எனக்குப் பிடித்திருந்தது. அவர்கள் விடைபெற்றுச் சென்ற பின்னர் சற்று நேரம் சும்மா உட்கார்ந்திருந்தேன்.

பிறகு தொலைபேசி மூலம் எனக்குப் பெண் துணை வேண்டும் என்றும் இந்தியப் பெண்ணாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தேன். முயற்சி செய்கிறோம் என்று பதில் வந்தது.

சற்று நேரத்தில் அழைப்புமணி- கதவைத் திறந்தேன். ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அவள் மரியாதையுடனும், புன்னகையுடனும் எனக்கு முகமன் கூறி உள்ளே வந்தாள். தயாரிக்கப்பட்ட உற்சாகத்துடன் அவள் பேசினாள்.

'நீங்கள் இந்தியாவின் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்?' என்று கேட்டேன். தனது பூர்வீகம் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள திருநெல்வேலி மாவட்டம் என்றாள். தன்னுடைய பாட்டி பாண்டிச்சேரியிலிருந்த போது ஒரு பிரஞ்சுக் கனவானை மணந்து பிரான்ஸ் வந்து குடியமர்ந்ததாகத் தெரிவித்தாள். தமிழ் தெரியுமா என்று நான் கேட்டதற்கு, தெரியாது என்றும் தமிழ் நாட்டுடன் தொடர்பில்லை என்றும் தெரிவித்தாள்.

நான் வங்காள மாநிலத்திலுள்ள பங்குரா மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்றும் எனது கொள்ளுத் தாத்தா தாதாபாய் நெளரோஜியிடம் உதவியாளராக இருந்தவர் என்றும் என் தந்தை அமர்தியா ஒரு கவிஞர் என்றும் தாயார் ஒரு நாடக நடிகை என்றும் தெரிவித்தேன். பிறகு நான் இங்கு வந்ததற்கான காரணம் பற்றி சுருக்கமாகக் கூறினேன்.

**ஓசையுடன் ஷட்டர் சுருண்டது. துப்பாக்கி, லத்தியுடன் போலீசார் ஓடி வந்தனர்**

'..... சுப்பிரமணிய பாரதி, தாகூர் ஆகிய இரு கவிஞர்களைத்தான் தெரியும்' என்றாள் அவள். நான் மிக்க நல்லது என்று கூறினேன்.

தொலைபேசி ஒலித்தது. எடுத்தேன். மறுமுனையில் என் நண்பன் ராமச்சந்திரமேனன் பேசினான். அவன் இந்தியாவின் ஒரு மத்திய இணை அமைச்சரின் கூடுதல் செயலாளராகப் பதவி வகிப்பவன். 'எப்போது பாரீஸ் வந்தாய்?' என்று கேட்டேன். 'இன்று காலையில் தான்' என்றான். 'எப்படி என் இருப்பிடத்தைக் கண்டு பிடித்தாய்?' எனக் கேட்டேன். 'அரசாங்கத்திலிருப்பவர்களுக்கு இதெல்லாம் கடினமில்லை' என்றான். 'வருகிறாயா ஒயின் சாப்பிடுவோம்'என்றான்.

'திருநெல்வேலி மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இந்தோ - பிரெஞ்சு பெண் ஒருத்தி இங்கிருக்கிறாள்' என்றேன். அவன் இதைக் கேட்டுப் புன்னகைத்தான். 'அவளையும் கூட்டிக் கொண்டு வருகிறாயா? ' என்றான் மேனன். 'அவள் முன்னால் நான் கேலிச் சித்திரமாக மாறிக் கொண்டிருக்கிறேன். நீயும் அவ்வாறு ஆக விருப்பமா?' என்று நான் மலையாளத்தில் கூறினேன். 'அத்தகைய ஒருத்தியை நான் பார்க்க விரும்புகிறேன்' என்றான் மேனன். 'நீ இங்கு வருகிறாயா?' என்றேன். 'என்னைச் சந்திக்க இன்னும் சற்று நேரத்தில் ஒரு எழுத்தாளர் வருகிறார்' என்றான். 'யார் அவர்?' என்றேன். 'அவர் பெயர் ஜாக்குலின். ஆய்வுக் கட்டுரைகள் எழுதுபவர். இந்தியாவைப் பற்றிச் சில புத்தகங்கள் எழுதியிருக்கிறார். தற்போது Criminal Face of Indian Politics என்ற புத்தகம் எழுத உத்தேசித்திருக்கிறார். அது சம்பந்தமாக என்னைச் சந்திக்க விரும்புகிறார். அரசாங்கத்திலிருந்து கொண்டு நான் என்ன உதவி செய்ய முடியும் என்று தெரியவில்லை' என்றான்.

'India -A Mysterious Country' என்ற புத்தகம் எழுதியவரா? அவர் இன்னொருவருடன் சேர்ந்து அப்புத்தகத்தை எழுதினாரா?' என்றேன்.

'ஆமாம். அவர் ஜாக்குலின் கணவர் ஹெர்மன் ஸ்டாடிங்கர். Religion and caste in Indian Politics என்ற புத்தகத்திற்கான களப்பணியில் இருந்தபோது பீகாரில் அவர் கொல்லப்பட்டுவிட்டார். ஜாக்குலின் காயங்களுடன் தப்பினார். அப்போது இந்திய அரசாங்கம் ஜாக்குலினுக்கு உதவி செய்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் அவருடன் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது' என்றான் மேனன்.

'நான் அவரைப் பார்க்க முடியுமா?' என்றேன். 'தாராளமாகப் பார்க்கலாம். அப்படியானால் இந்தோ பிரெஞ்சுக்காரியை என்ன செய்வது?' என்றான் மேனன். 'நான் பிறகு அதற்கு ஏற்பாடு செய்கிறேன்' என்று தொலைபேசியை வைத்தேன்.

நான் அவளைப் பார்த்து இந்தியாவின் மத்திய இணை அமைச்சருடன் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து தொடர்பு கொள்ள வேண்டியிருப்பதால் வெளியே செல்ல வேண்டியிருக்கிறது என்றும் மீண்டும் அவளைச் சந்திக்க மிகவும் விருப்பம் கொண்டிருப்பதாகவும் கண்டிப்பாக அழைப்பதாகவும் தற்போது அவளை விட்டுச் செல்லும் சூழ்நிலை மிக்க வருத்தத்தை எனக்கு ஏற்படுத்துவதாகவும் கூறினேன்.

அவள் அலுப்புடன் எழுவதாகத்


படிப்பகம்

www.padippakam.com



தோன்றியது. ஆனால் பேசும்போது எப்போதும் புன்னகையுடனேயே பேசும் வழக்கத்தை அவள் கொண்டிருந்தாள்.

**நா**ன் காரில் சென்று கொண்டிருந்தேன். 1975-ம் ஆண்டு நான் டீக்கடையில் சந்தித்த அந்த வெள்ளைப் பெண்ணை நினைவு கூர முயன்றேன். சுவரில் சாய்ந்து டீயை உறிஞ்சிக் கொண்டிருக்கும் வெள்ளைப் பெண்மணியின் குதூகலமான தோற்றம் மட்டும் நினைவுக்கு வந்தது. பீஹாரில் பாட்னாவில் வாடகைக் காரில் நான் சென்று கொண்டிருந்தபோது கும்பலால் மறிக்கப்பட்டு கொல்லப்பட்ட டிரைவர் என் நினைவுக்கு வந்தார். நான் அப்போது உயிர் தப்பி ஓடினேன். அடுத்தடுத்து வாகனங்களைக் கொளுத்துவதில் கும்பல் ஆசையும் உற்சாகமும் கொண்டிருந்தது. வாகனங்கள் ஓட்டி வருபவர்களையும் தாக்கிக் கொண்டிருந்தது. தாக்குதலில் ஏதோ ஓர் நிலையில் உயிர் இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. நான் கால்கள் வெடவெடக்க ஷட்டர் இழுக்கப்பட்ட ஒரு கடையின் உள்ளே அங்கிருந்த மூன்று நபர்களுடன் நின்று கொண்டிருந்தேன். ஒருவரோடு ஒருவர் பேசாமல் வியர்வை வழிய இருந்தோம். கும்பலில் யாரோ ஒருவன் இந்தக் கடையை நோக்கிக் கும்பலின் கவனத்தைத் திருப்பினால் எங்கள் உயிருக்கும் உடலுக்கும் என்ன வேண்டுமானாலும் ஏற்படலாம். ஷட்டரைத் தூக்கினால் கும்பலின் கவனம் திரும்பலாம் என சுற்றிலும் திகில் அதிரமற்ற மூன்று நபர்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். பிறந்த ஊரின் நினைவு: உறவுகளின் நினைவு, என் அலுவலகத்தில் பாக்கி வைத்திருந்த வேலை நினைவு ஏற்பட்டன. திடீரென ஏற்பட்ட சப்த மாறுதலிலிருந்து காவலர்கள் வந்ததை உணர்ந்தேன். கும்பலைக் காவலர்கள் சந்திப்பதை சப்தங்கள் உணர்த்தின. சப்தங்களின் ஆரவாரம் குறைந்து நிலைமை மாறிவிட்டது என்பதை நாங்கள் உணர்ந்த சமயம், மற்ற மூவரும் தங்களுக்குள் மெதுவான குரலில் பேசிவிட்டு பின் என்னைப் பார்த்து பீஹாரி மொழியில் ஒருவர் பேசினார். அவர் சைகையிலிருந்து, அவர் என்னை ஷட்டரைத் தூக்கச் சொல்கிறார் என்று உணர்ந்தேன். நான் தயங்கினேன். மீண்டும் அவர் அவ்வாறே கூறினார். நான் மேலும் யோசிக்காமல் ஷட்டரைத் தூக்கினேன். நான் எதிர்பாராதபடி ஓசையுடன் ஷட்டர் சுருண்டது. வெளியே தெரிந்த காட்சியின் வெளிச்சத்தில் கண்கள் கூசின. காவலர்களின் தலைகள் இந்த இடம் நோக்கித் திரும்பின. துப்பாக்கி, லத்தியுடன் இருந்தவர்கள் என்னை நோக்கி ஓடி வந்தனர். நான் கைகளை உயரே தூக்கிக் கொண்டேன்.

புத்தரைக் கண்ட, மௌரியர்களைக் கண்ட, அசோகரைக் கண்ட, ஷெர்ஷானைக்கண்ட பின்னர் வங்காள நவாபிற்குச் சொந்தமான 1764-ம் ஆண்டு நடைபெற்ற பக்ஸார் போரில் பிரிட்டிஷாருக்குக் கை மாறி சுதந்திர இந்தியாவில் உள்ள இந்தப் பூமியில் நான் கைகளைத் தூக்கி கொண்டே வெளியே வந்தேன்.

**கா**ர் நின்றது. ராமச்சந்திர மேனன் இருக்கும் அறையை விசாரித்து, அந்த அறையை அடைந்தேன். மேனன் கதவைத் திறந்தான். அறைக்குள் சென்று உட்கார்ந்த சில நொடிகளில் 'ஜாக்குலின் எப்போது வருவார்'? என்றேன். 'இப்போதுதானே செல்கிறார்' என்றான் மேனன். நான் பதட்டத்துடன் அவரைப் பார்க்க வேண்டுமென்றுதான் வேகமாக வந்ததாகக் கூறினேன். மேனன் வேகமாக எழுந்து ஜன்னலருகே சென்றான். என்னை அழைத்தான். ஜன்னலினூடே காரை நோக்கிச் சென்று கொண்டிருந்த மெலிந்த தலை நரைத்த ஒரு பெண்ணைக் காண்பித்தான். 'நல்ல வேளை இன்னும் போகவில்லை. ஜாக்குலினைப் பார்த்துவிட்டாய்' என்றான். மெலிந்த தலை நரைத்த அந்தப் பெண் காரினுள் நுழைந்து கொண்டிருந்தாள்.

**கை**களைத் தூக்கிக் கொண்டே வெளியே வந்த என்னைக் காவலர்கள் சூழ்ந்து கொண்டனர். ஒருவர் என் கையை முறுக்கினார். நான் அவர்களிடம் ஆங்கிலத்தில் நான் யாரென்பதை விளக்க முயன்றேன். கையை முறுக்கியவர் விட்டுவிட்டார். வெள்ளை ஆண் ஒருவர் கத்திக்குத்துக் காயங்களுடன் கிடந்த இடத்தில் காயங்களுடன் அழுது கொண்டிருந்த ஒரு வெள்ளைப் பெண்ணிடம் பேசிக் கொண்டிருந்த அதிகாரி முன்னால் என்னை அழைத்துச் சென்று நிறுத்தினார். அவரிடம் நான் என்னைப் பற்றிக் கூறினேன். அப்போதிருந்த நிலையில் நான் அந்த வெள்ளைப் பெண்ணை சரியாகக் கவனிக்கவில்லை.

நான் தற்போது ஜாக்குலினைச் சந்தித்திருந்தாலும் அல்லது இனிமேல் சந்தித்தாலும் அந்த வெள்ளைப் பெண்தான் இவரா என்று எனக்குக் கூற இயலாது. ஆனால் 1975-ம் ஆண்டு டப்பிங் சினிமா பார்க்கச் சென்ற சமயம் ஜாக்குலின் சுவரில் சாய்ந்து நின்றிருந்த அந்த குதூகலமான தோற்றத்தை என்னால் மறக்க இயலாது. ▲


படிப்பகம்

www.padippakam.com


# PRINCE

## STAINLESS STEEL KITCHEN SINKS

PRINCE

*Fit for the princess of the kitchen. Without paying a king's ransom.*

- Lifelong guarantee
- Made from Salem Steel
- Made from single-piece, jointless steel for a long life
- Wide range available



Manufacturers & Exporters:

**VALLI STEEL INDUSTRIES, NAGERCOIL-629 001**

Phone: 31084, 32084, Fax (04652)31842

Distributor: MADRAS ☎ 8267617, Bangalore ☎ 6632804

Sales Depot: THIRUVANANTHAPURAM ☎ 76557

**Available with all leading Dealers in Tamil Nadu, Kerala, Karnataka & Pondicherry**




படிப்பகம்

www.padippakam.com



# இனி மீட்சி இல்லை

## ஆர். சூடாமணி

முகத்துக்கு நேராகக் கையைத் தூக்கும்போது மெலிந்த கையில் வரிவரியாய்த் தெரியும் கோடுகள். வறண்டு தொய்யும் தோலைக் கிள்ளி இழுத்தால் சிறிது நேரம் தோல் அப்படியே பாத்தி கட்டியது போல் தூக்கிய நிலையிலேயே நின்றுவிட்டு மெள்ள மெள்ளத்தான் சமனாகிறது. இந்தக் கிழக்கரம் தன்னுடையது என்று உடனே ஒப்புக்கொள்ள மனம் கூசுகிறது.

நினைவு தெரிந்த நாள் முதல் மனசில் தொடர்ச்சி ஓடிக்கொண்டிருப்பதால் மூப்பு வருவதைத் தனியாய் உணர முடிவதில்லை. திடீரென்று ஒரு நாள் நிலைக்கண்ணாடி மாறிப் போகிறது. உள்ளே இருக்கும் இளமையைப் பிரதிபலிக்கமாட்டேன் என்று சதி செய்கிறது. முன்பெல்லாம் தெருவில் நடந்தால் திரும்பிப் பார்த்த தலைகள், இன்று அவளைக் கண்டு எவ்வித பாதிப்புமின்றி நடை வேகம் குறையாமல் மேலே செல்லும்போது, வெள்ளைத் தலை முடியும் மூக்குக் கண்ணாடியும் மூன்று செயற்கைப் பற்களும் சுருக்கென்று ஞாபகம் வருகின்றன.

இந்தச் சின்னங்களுக்குரிய பெயர் முதல் முதலாக ஒலித்த சந்தர்ப்பம் நினைவிருக்கிறது.

புரசைவாக்கம் கடை வீதியில் சலுகை விலையில் வீட்டுக்கு இரண்டு பெட்ஷீட்டுகள் வாங்கி ஜோல்னாப் பையில் போட்டுத் தோளில் தொங்கவிட்டுக் கொண்டு, நகரும் 29-ம் எண் பஸ்ஸில் ஓடி வந்து ஏறியபோது கால் தடுக்கியது.

"பாட்டி, மெள்ள, மெள்ள!"

யாரையோ சொல்கிறார்கள் என்றுதான் முதலில் நினைத்தாள். ஆனால் முழங்கையை ஒரு கரம் பற்றி பஸ்ஸுக்குள் நுழைய உதவியபோது அந்தச் சொல் சட்டென்று அவளோடு இணைந்துவிட்டது.

ஒரு நொடிப் பொழுதில் ஒரு யுக அதிர்ச்சி.

"தாங்க் யூ. ஐ கேன் மானேஜ்" என்று சொல்வதற்குள் ஒரு மாபெரும் மாறுதலை உட்கொள்ள வேண்டியதாயிற்று.

இளைஞன் வியப்புடன் பின் வாங்கினான். தலை நரைத்த பெண்கள் ஆங்கிலம் பேசினால் ஏன் எல்லாரும் - குறிப்பாக இளையவர்கள் - ஆச்சரியப்படுகிறார்கள்?

இன்று அறுபது வயதிருக்கக்கூடிய பெண்களின் இளமைக்காலத்திலேயே கூட பெண் கல்வி சகஜமாய்த்தானே இருந்தது? ஒரு பி.ஏ. கூடவா படித்திருக்க மாட்டார்கள்?

வாலிபனின் குழப்பத்தைப் பார்த்து இரக்கம் கொண்டு அவள் தமிழுக்கு மாறினாள்.

"ஓடி வந்து பஸ் ஏர்றது எனக்குப் பழக்கம்தான் தம்பி."

"அதெல்லாம் சின்ன வயசுக்கு சரிதான் பாட்டி. இப்ப நீங்க கொஞ்சம் நிதானமாயிருக்க வேணாமா?"

என்ன பேச்சுக்குப் பேச்சு பாட்டி என்கிறான்?

சிரித்துக்கொண்டே தன் ஆட்சேபத்தை வெளியிட்டாள். "பாட்டின்னு ஏம்ப்பா சொல்றே? ஆன்ட்டின்னு சொன்னாப் போதுமே! ஏர்றபோது செருப்பு தடுக்கிடுத்து. அதான் பயந்துட்டே போல."

பாட்டி என்று அழைக்கப்பட்டது அன்றுதான் முதல் தடவை. நாள் முடிய திகைப்பாயிருந்தது. திடீரென்று என்ன ஆகிவிட்டது

படிப்பகம்

www.padippakam.com

இருபது இருபத்திரண்டு வயதுப் பையன் பாட்டி என்று கூப்பிடும் படி?

வீடு திரும்பிய பிறகு கூட அந்த மனநிலை மாறவில்லை. பிள்ளையும் மருமகளும் மாலையில் வெளியே போகும்போது விடை பெற்றதுகூட சும்மா காதில் உரசிச் சென்றது.

கண்ணாடியின் முன் போய் நின்றாள். அப்படி ஒன்றும் உருவத்தில் பெரிதாய் மாறுதல் தெரியவில்லையே. கொஞ்சம் கொஞ்சமாய், ஒவ்வொரு நாளாய், கடியாரத்தின் மணி முள் போல் நகர்வது தெரியாமல் நகர்ந்து வந்து காலம் மேலே மூடிக்கொண்டபோது பழகிய கண்களுக்கு வித்தியாசம் தெரியவில்லை. அன்றாடம் பார்த்து வரும் பரிச்சயத்தில் நரையும் சுருக்கமும் புதுச்செய்தி ஏதும் சொல்லவில்லை. எல்லாச் சின்னங்களும் சேர்ந்த ஒரு முத்தாய்ப்புக்கு முற்றும் புதிய கண்கள் பாட்டி என்று பெயர் சூட்டிய போதுதான் திடுக்கிட்டுப் போனாள்.





படிப்பகம்

www.padippakam.com

தடிப்பயல். கொழுப்பைப் பாரு! பாட்டியாம்.

□

அன்று அந்தச் சொல் காதுக்கு அன்னியமாயிருந்தது. பிறகு வாரங்கள் மாதங்கள் என்று காலம் செல்லச் செல்ல எத்தனை முறை எத்தனை முறை...

அவளுக்குப் பிடித்த கலைப் படத்தைப் பார்க்க (அவள் கணவருக்குக் கலைப் படங்கள் பிடிக்காது) மகனும் மருமகளும் அவளை அழைத்துக்கொண்டு திரையரங்கம் சென்ற தினம் ஹாலுக்குள் அவளும் வேகமாய்த் தான் நடந்து சென்றாள். டிக்கெட் பரிசோதகர் டிக்கெட்டுகளை அவள் மகனிடமிருந்து வாங்கிப் பார்வையிடும்போது சிறு தவறு நேர்ந்திருப்பது தெரிந்தது. இவர்கள் இருக்கைகளில் வேறு மூன்று பேர் உட்கார்ந்திருந்தார்கள். சீட்டு எண்களில் குளறுபடி. அதை விளக்கி அந்த மூவரை எழுந்திருக்கச் செய்யும் வரை இவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அந்தப் பரிசோதகர் நிமிர்ந்து பார்த்து விட்டு மிகவும் இரக்கத்துடன் "பாவம், பாட்டியம்மா நின்னுகிட்டே இருக்காங்களே! பாட்டி, இந்த மிஸ்டேக்கை சரி பண்ணி இவங்களை எழுப்பற வரைக்கும் நீங்க அதோ அந்தக் காலி சேரில் உக்காந்து வெய்ட் பண்ணுங்க" என்றான்.

"அதெல்லாம் ஒண்ணும் வேணாம். என்னால நிக்க முடியும்" என்றாள் வெடுக்கென்று. வீடு திரும்பியதும் "என்ன மட்ட படம்! சகிக்கலே" என்றாள். பிறகு திடீரென்று 'இந்த நாள் பசங்களுக்கெல்லாம் திமிர் ஜாஸ்தியாயிடுத்து' என்றாள். பெரியம்மா அல்லது மேடம் என்று கூப்பிட்டால் என்ன? நடுத்தர வயது இருக்கும். இவனுக்குக் கூடவா நான் பாட்டி?



□

**கோ**விலில் கூட்டம். பங்குனி உத்திரம். கங்காதரேசுவரரையும் பங்கஜாட்சி அம்மனையும் கல்யாண உற்சவக் கோலத்தில் தரிசித்துவிட்டு வெளியே வந்தபோது எதிரே கூறு கட்டி விற்றபடி வரிசையாய்க் காய்கறிக்காரிகள். பச்சைப் பசேல் என்று பளிச்சென்று ஓவியர். 'பாலட்' போல் வகை வகையான நிறங்களில் காய்கறிகள். உள்ளே ரசம் ஓடப் பொன்னிற சூரிய ஒளிப் புள்ளியுடன் செக்கச் சிவந்த பெரிய தக்காளிகளைப் பார்த்தபோது நாவில் நீர் ஊறியது.

"ஏம்மா, தக்காளி விலை எப்படி?"

"நாலு ரூவா."

"கால் கிலோவா?"

"இருநூறு கிராம்." "என்னது! கிலோ இருபது ரூபாயா! பகல் கொள்ளையாயிருக்கே! மூணு ரூபா வச்சிக்கோ."

"அதெல்லாம் முந்தி பாட்டி! இன்னிக்கு வெல இதான். பேய் மழ. ஊட்டியிலேர்ந்து காய்கறி லாரிங்க சரியா வரல்லே. ஒரே வெல, இருவது ரூபா. வாங்கறியா பாட்டி?"

"உன் காயை நீயே வச்சிக்கோ. பகல் கொள்ளை. முக்கால் கிழவியாயிருக்கே. இதில் என்னை என்ன, பாட்டின்னு?"

சிறிது தூரம் தள்ளி இன்னொரு காய்க்காரி தெரிந்தாள்.

"தக்காளி வாங்கறீங்களா?"

"எப்படி வில?"

"நாலு ரூவாங்க."

"கால் கிலோவா?"

"இரு நூறு கிராம்."

"பகல் கொள்ளையாயிருக்கே!"

"என்னங்க செய்யறது! இப்ப காயே சரியா வரதில்லையே! அதான் இப்படி. வாங்கறீங்களா பெரியம்மா?"

"நல்லவளாயிருக்கியே! கால் கிலோ போடு."

கோவிலுக்கு எடுத்து வந்திருந்த, இப்போது காலியான, அர்ச்சனைக் கூடையில் தக்காளிகளைப் போட்டுக்கொண்டு திரும்பியபோது எதிரே ஒரு தெரிந்த முகம். கமலா மாமி. கோயில் சந்திப்புகளில் பரிச்சயம். அவளுடன் பதினேழு பதினெட்டு வயது சொல்லக்கூடிய ஒரு பெண் சுடிதார் உடையில் இருந்தாள்.

"என்ன மாமி, சௌக்கியமா?" கமலா நின்னு விசாரித்தாள். "இதென்ன, கோவிலுக்குப் போகாம இங்க காய் வாங்கிண்டு நிக்கறேள்?"

"சுவாமி தரிசனம் முடிச்சுட்டு வந்துட்டேன்."

"அப்படியா! நானும் கோவில்லேருந்துதான் வரேன். உங்களைப் பார்க்கலையே?"

"கூட்டத்தில் தெரியாம இருந்திருக்கும். இங்க தக்காளி நன்னாயிருந்துது. பிள்ளை, நாட்டுப்பெண் ரெண்டு பேருக்கும் பிடிக்குமேன்னு வாங்கினேன்."

"ஓ, நாட்டுப்பெண் பிரசவமாகி வந்துட்டாளா?"

"வந்து ரெண்டு மாசம் ஆறதே!"

"ஆம்புளைக் குழந்தைதானே?"

"இல்லே. பொண்ணு."

"விடுங்கோ சொல்றேன். இந்த



படிப்பகம்

www.padippakam.com

நாளில் ஆணாவது பொண்ணா வது! எல்லாம் ஒண்ணுதான்."

"இது யாரு?"

"பக்கத்தாத்துப் பொண்ணு. சுமின்னு பேரு. என்னோட கோவி லுக்கு வரேன்னா, அழைச்சுண்டு வந்தேன்."

"கோவிலுக்கும் இந்த டிரெஸ் தானா!' என்று நினைத்துக்கொண் டாள். "ஏண்டியம்மா சுமி, என்ன படிக்கறே?"

"ப்ளஸ் டூ பாட்டி."

"அதென்ன, நறுக்குனு 'பாட்டி'?" சிரிக்க முயன்றாள்." கமலாவை எப் படிக் கூப்பிடுவே நீ?"

"ஆன்ட்டின்னு."

"என்னையும் அப்படியே கூப்பி டேன். நான் அவ சிநேகிதிதானே! எதுக்கு பாட்டி கீட்டின்னெல் லாம்?"

□

எந்தப் பக்கம் திரும்பினாலும் துரத்துகிற வார்த்தை. கடைகளுக் குப் போனால் "வாங்க பாட்டி, என்ன வேணும்?" குடும்பத்தினர் எல்லாருமாய் விருந்தாளிகளோடு உரையாடிவிட்டு விடை தருகை யில் சொத்தைப் பல்லில் ஐஸ் தண் ணீர் பட்டது போல் ஓர் இளசு சொல்கிற "பைபை, பாட்டி!" கண் ணாடியின் முன் இன்னும் சற்று நேரம் நின்றால் கண்ணாடியே "ஹலோ பாட்டி!" என்று சொல் லப் போகிறது.

அவள் கணவருக்கு இந்தப் பிரச்னை இல்லை. தலை அதிகம் நரைக்காத குடும்பவாகு. நல்ல உய ரமாயிருப்பதால் உச்சந்தலை வழுக்கை பலர் கண்ணில் படுவ தில்லை. வெளி மனிதர்கள் யாரும் அவரை இன்னும் தாத்தா என்று கூப்பிடவில்லை. தெரிந்த இளசுக ளுக்கு அங்கிள். கடை விற்பனை யாளர்களுக்கு ஸார். கொடுத்து வைத்த ஜன்மம்.

ஒரு பெண்ணுக்குத் தலை நரைத் தால் மட்டும் பாட்டியா?

"நீங்க கேட்ட மாதிரி விளக்கு ஷேட் இதோ இருக்கு பாட்டி, பாருங்க" என்று கடைக்காரர் பையன் சொன்னபோது என்று மில்லாத ஆத்திரம் வந்தது.

"முதலாவது, இது நான் கேட்ட மாதிரி லாம்ப்ஷேட் இல்லை. இந்த மாதிரி பச்சையும் ஊதாவுமா நான் கேக்கலை. அழகா வெள்ளை ஷேட் கேட்டேன். ரெண்டாவது, நான் உன் பாட்டியில்லை. மேடம்னு சொல்லு, புரியறதா? டு யூ அண்டர்ஸ்டாண்ட், யங் மேன்?"

"யெஸ் மேடம்" என்பதற்குள் பையன் வேர்த்து விறுவிறுத்துப் போனான்.

மாலை ஆறு மணி அளவில் பக் கத்து வீட்டுக் குழந்தைகள் வந்தார் கள். அவளும் அவள் கணவரும் வராந்தா பிரம்பு நாற்காலிகளில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந் தார்கள்.

"பாட்டி!" என்றான் பெரியவன். எட்டு வயது இருக்கலாம். பக்கத் தில் அவன் தங்கை.

அவள் பதில் சொல்லாமல் முறைத்தாள்.

"எங்க வீட்ல டிவி ரிப்பேர். நாங்க இங்க வந்து 'ஒளியும் ஒலி யும்' பார்க்கலாமா பாட்டி?"

தங்கையின் முகமெல்லாம் பெரிய கண்கள்.

## நான் உன் பாட்டியில்லை. மேடம்னு சொல்லு, புரியறதா?

"எடு செருப்பை. முளைச்சு மூணு இலை விடலே, ஒளியும் ஒலியும் பார்க்கணுமா? உங்க அப்பா அம்மா பார்க்க விடுவாங்களா?"

"அவங்களும் எங்க கூட உட் கார்ந்து பார்ப்பாங்க பாட்டி!"

"பலே, ரொம்ப நன்னாயிருக்கு. அதெல்லாம் ஒண்ணும் இங்க பார்க்கக் கூடாது. எடத்தைக் காலி பண்ணுங்க. எத்தனை தடவை சொல்லியிருக்கேன், பாட்டின்னு கூப்பிடக் கூடாதுன்னு?"

"ஸாரி பாட்டி - இல்லை, ஆன்ட்டி. மறந்து போய்ட்டேன். இந்த ஒரு தடவை மட்டும் பார்த் துட்டுப் போயிடறோம் ஆன்ட்டி.

"ப்ளீஸ் ஆன்ட்டி!" என்றது ஐந்து வயது மழலை.

"ப்ளீஸ் ப்ளீஸ் ஆன்ட்டி!" என் றான் பையன்.

"சரி, ஏதோ பிள்ளைக் கேக்கற தால ஒத்துக்கிறேன். ஆனா இந்த ஒரு தடவை மட்டும்தான், என்ன?

"சரி"

"எப்படி பதில் சொல்லணும்?"

"சரி ஆன்ட்டி."

"ஏழரை மணிக்கு வாங்க"

கணவர் அவளைப் பார்த்துச் சிரித்த போது அவருக்கும் ஒரு முறைப்பு கிடைத்தது.

தனக்கு ஒரு வெற்றி கிடைத்து விட்டதாய் அவள் மகிழ்ந்து கொண்டாள். நிகழ்ச்சி முடிந்து "குட் நைட் ஆன்ட்டி" என்று சொல்லி விடைபெற்றுச் சென்ற குழந்தைகள் வாசல் 'கேட்'டைத் தாண்டியதுமே திரும்பி நின்று உரத்த முணுமுணுப்பாய் "பாட்டி, பாட்டி" என்று சொல்லிவிட்டு ஓடியது அவளுக்குத் தெரியாது.

குழந்தைகளுக்குத்தான் மறந்து போகும். பெரியவர்களுக்குமா? காலை பத்து மணிக்குத் தபால்கா ரன் வந்து நின்று "பாட்டி, உங்க ளுக்கு லெட்டர்!" என்று கத்தா விட்டால் என்ன கேடு?

"வரேம்ப்பா, வரேம்ப்பா" என்று எரிச்சலுடன் வந்தாள். "என்ன அவசர சேதி வந்திருக்கு பாட் டிக்கு, இப்படி சத்தம் போடறே?"

"கோச்சுக்காதீங்க, தப்பாச் சொல்லிட்டேன். லெட்டர் வந்தி ருக்கு பெரியம்மா. இப்படித் தானே சொல்லணும்?"

"புரிஞ்சா சரி"

எல்லோரையும் அந்தப் பெயரை மாற்றி வேறு பெயர் சொல்ல வைத்த திருப்தியுடன் கடிதத்தை வாங்கிக் கொண்டு உள்ளே போனாள். சோபாவில் அமர்ந்து கண்ணாடியை சரி செய்து கொண்டு கடிதத்தைப் பிரித்தாள்.

உள் அறையிலிருந்து ஒரு வடி வம் ஹாலுக்குள் மெல்ல நுழைந்து கொண்டிருந்தது. சின்ன வடிவம். அவள் திரும்பிப் பார்த்த போது கண்களைச் சந்தித்துத் தவழ்ந்து வரும் வடிவம்.

பத்து மாதக் குழந்தை. கண்களில் குறுகுறுப்பும் கன்னத்தில் ரோஜா வும் காலில் கொலுசுமாய் அவளை நோக்கிச் சிரிப்புடன் தவழ்ந்து வந் தாள். அவள் காலைப் பிடித்துக் கொண்டு எழுந்து, நின்று இது வரை கற்றிருந்த ம்மா, ப்பாவைத் தவிர இன்று புதிதாய்க் கற்ற மூன் றாம் சொல்லை அவளைப் பார்த்து மழலையாய்ச் சொன்னாள்.

"பாத்... தி!"

அவள் திகைத்து விட்டாள். சில கணங்கள் குழந்தையை மௌன மாய் வெறித்துப் பார்த்தாள். பிறகு தலையை சோபாவில் பின்னுக்குச் சாய்த்துக் கொண்டு தாளமாட்டா மல் சிரித்தாள். சிரிப்பு எளிதில் அடங்கவில்லை. உதட்டைப் பிதுக் கித் தலையை மெல்ல ஆட்டிக் கொண்டாள்.

முன்னே எட்டி பேத்தியை அள்ளி எடுத்து மடியில் வைத்து அணைத்துக் கொண்டாள்.

▲


படிப்பகம்

www.padippakam.com

# இந்த வெண்மையின் பொலிவில் நிறைந்திருக்கிறது ஸ்டெயின் கார்ட் பாதுகாப்பு !

அறிமுகம் ! ஜான்ஸன்ஸ் ஸ்டெயின் கார்ட் வேஷ்டிகள் !!




கைநழுவும்காப்பிக் கோப்பை, சாலைகளின் சகதி, எண்ணெய்க்கறை போன்றவற்றில் இருந்து, உங்கள் கம்பீரமான தோற்றத்தை காத்து நிற்பவை ஜான்ஸன்ஸ் ஸ்டெயின்கார்ட் வேஷ்டிகள். இதன் ஸ்டெயின் கார்ட் தன்மை, வேஷ்டியில் கறைகள் படியாமல் காத்து நிற்கும். மீறிக்-கறைகள் படிந்தாலும், சாதாரண சலவை சோப்பில் அலசினால் போதும். கறை காணாமல் போகும்.

**Jansons**
**D H O T I E S**

கறைபடியாத கம்பீரம்!

FREE! Jansons Dew Drops TOWEL

A product from:
**JANSONS INDUSTRIES LTD.,**
Thiruchengode

*இந்த ஸ்டெயின் கார்ட் பாதுகாப்பு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும். சலவை செய்யும் முறையைப் பொறுத்து, இதன் நீடித்துழைக்கும் தன்மை, ஒவ்வொருவருக்கும் மாறுபடும்.

● வேஷ்டிகள் ● லுங்கிகள் ● சூட்டிங்ஸ் ● ப்ளவுஸ் மெட்டீரியல்ஸ் ● ஸ்கூல் யூனிபார்ம்கள் ● டெர்ரி டவல்ஸ்



படிப்பகம்

www.padippakam.com

*With best compliments from*



# PROGRESS TRANSPORT

120, Rue Lal Bahadur,

**Pondicherry - 605 001.**

Phone : 36165



படிப்பகம்

www.padippakam.com



# பூச்சி

இரா. முருகன்

பீடி வாடை போல இருந்தது.

ராத்திரி எட்டு மணி.

என்னைத் தவிர ஆபீஸில் ஈ காக்கை கிடையாது. நாள் முழுக்க டையைக் கட்டிக் கொண்டு, கருப்புப் பெட்டியும் கையுமாகத் தெருப் பொறுக்கி விட்டு வந்து, மாய்ந்து மாய்ந்து சால்ஜாப்பு கடுதாசி அடித்துக் கொண்டிருக்கிறேன்... பிழைப்பு அப்படி....

கம்ப்யூட்டர் கம்பெனியில் விற்பனை அதிகாரியாக இருப்பதை விட, ரங்கனாதன் தெருவில் குச்சியில் கோர்த்துத் தொங்கப் போட்டுக்கொண்டு சவுரிமுடி விற்கப் போகலாம்...

'ஐயா... பெண்டியம் பதித்த மினி கம்ப்யூட்டர் வாங்கிலியா... அம்மா... மல்ட்டி மீடியா பி.சி. வாங்கலியா' என்று அலைய வேண்டியது... இதர பலான கம்ப்யூட்டர் கம்பெனியின் கருப்புப் பெட்டி-டை ஆசாமிகளோடு போட்டி போட்டு ஆர்டர் பிடித்து, 'அடுத்த ஒண்ணாந்தேதி கம்ப்யூட்டரைக் கொண்டாந்து இறக்கிடறேன்...' என்று சத்தியம் செய்து அட்வான்ஸ் வாங்க வேண்டியது...

அப்புறம், 'ஏன் இன்னும் வந்து சேரலே?' என்று கிடுக்கிப்பிடி போட்டு நெருக்குகிறவர்களுக்கு, 'வருது... வந்துட்டு இருக்கு...' என்ற ரீதியில் பதில் எழுதி இங்கிலீஷில் தலையைச் சொரிய வேண்டியது...

என்ன செய்ய... ஆர்டரை ஹரியானா எல்லையில் எங்கள் தொழிற்சாலைக்கு அனுப்பின பிறகு தான் நட்டு, போல்டு எல்லாம் தேடி எடுத்துச் சிரத்தையாகக் கம்ப்யூட்டர் செய்ய உட்காருவார்கள் மகாபாவிகள். கேட்டால், "பதினஞ்சு நாளைக்குத் தேவையானதுக்கு மேலே கச்சாப் பொருளைக் கையிலே வச்சுக்க முடியாத தொழில் நம்மளது... இங்கே லேட் ஆகத்தான் செய்யும்... இன்னும் பத்து நாள் பொறுத்துக்கச் சொல்லுய்யா'" என்பார்கள் படு காஷுவலாக.

பொறுத்துக் கொள்ள முடியாதபடி உக்ரமாக பீடி வாடை...

எக்குத் தப்பாக எங்கேயாவது பற்றிக் கொண்டால், அடுத்த ஒண்ணாந்தேதி சம்பளம் வாங்க ஆபீஸ் இருக்காது.. ஆபீஸ் கிடக்கட்டும்.. இது ஏழாவது மாடி... வெளியே குதிச்சா, அப்புறம் போன வாரம் அடித்து வந்த ஆயிரம் பிளாஸ்டிக் விசிட்டிங் கார்டையும் அஸ்தியோடு சேர்த்துக் கரைக்கக்கூட முடியாது...

வெளியே வந்து எட்டிப் பார்த்தேன். வராந்தாவில் யாரையும் காணோம். பின்னே, எங்கே இருந்து இப்படிப் புகையைக் கிளப்பி உயிரை வாங்குகிறார்கள்?

ஏ.சி. பிளாண்ட் அறைக் கதவு லேசாகத் திறந்து இருந்தது.

சாயந்திரம் ஐந்து மணிக்குச் சட்டமாக ஏ.சியை நிறுத்தி விடுகிற வாடிக்கை. இன்றைக்கு இன்னும் அணைக்கவில்லை... அறைக்குள்ளே யார்?

உள்ளே குட்டையாக கட்டையாக ஒரு மத்திய வயசுக்காரன். மர நாற்காலி போட்டுக் கொண்டு உட்கார்ந்து புகைவிட்டுக் கொண்டிருந்தான். அரையிருட்டில், அவன் உடம்பைச் சுற்றி மலையூர் மம்பட்டியான் போல ஏதோ துப்பட்டியைச் சுற்றி இருந்தது தெரிந்தது. பக்கத்தில் ஒரு பழைய டிரான்சிஸ்டர் 'நான் யார் தெரியுமா?' என்று கொரகொரப்பாகப் பாடிக் கொண்டிருந்தது.

"யாருப்பா அது... இங்கே என்ன பண்ணிட்டு இருக்கே?"

"ஏ.சி. பிளாண்ட் ஆபரேட்டருங்க...'

எந்தக் கம்பெனியில் ஏ.சி. ஆபரேட்டருக்குப் போர்வையை யூனிபாரமாகக் கொடுக்கிறார்கள்.

அவன் டிரான்சிஸ்டரைச் செல்லமாக அணைத்துத் தூக்கிச் சத்தத்தைக் குறைத்தபடி எழுந்து நின்றான்.

"அஞ்சு மணிக்கு டூட்டி முடிஞ்சுடுத்துங்க..."

முடிந்திருக்கலாம். காலில் சக்கரத்தை மாட்டிக் கொண்டு சுற்றிக் கொண்டே இருப்பதால், ஆபீஸிலே முகம் கூடப் பரிச்சயமில்லை. இதுவும் ஒன்று...

படிப்பகம்

www.padippakam.com

"வீட்டுக்குப் போகலியா.."

கொஞ்சம் குரலைத் தாழ்த்தினேன்.

அவன் டிரான்சிஸ்டரைக் கீழே வைக்கக் குனிந்தபோது, போர்வை நழுவ, பெற்று மேலுடம்பில் பூரான் ஊர்ந்த மாதிரி திட்டுத் திட்டாகப் படையோ எதுவோ...

"இங்கேதாங்க தங்கிக்கறது..."

அவன் உட்கார்ந்திருந்த நாற்காலிக்குக் கீழே கொசு மொய்த்துக் கொண்டு காண்டீன் எவர்சில்வர் சாப்பாட்டுத்தட்டு... சாம்பார்க் கிண்ணம்.. கடலைத் தோல்... பீடிக் சுட்டு...

"ஏ.சி. பிளாண்ட் ரூமுக்குள்ளே உக்காந்துக்கிட்டு பீடி வலிக்கறீங்களே... ஆபீஸ் முழுக்க பீடி வாடை சுத்திச் சுத்தி வருது... உள்ளே உக்கார முடியலே.."

கழற்ற வராத மோதிரத்தை நெருக்கிக் கழற்ற முயற்சி செய்வது போல அவன் விரலைக் குடைந்தபடி பரிதாபமாக விழித்தான். விரலிலும் சொரிந்து சொரிந்து ஏகமாக ரணம்...

"பீடி சிகரெட்டெல்லாம் வெளியே தான் கொளுத்தணும்.. தீ பிடிச்சா.. உள்ளே கோடிக்கணக்

கொண்டு பணிவாகச் சிரிக்கத்தான் எனக்குச் சம்பளம் தரப்படுகிறது.

எதற்கும் இருக்கட்டும் என்று கூட வேலை பார்க்கிற ஜ்யோத்ஸ்னாவையும் கூட்டிக்கொண்டு போனேன். அவளுக்கு முன்னால் ஆத்திரப்பட்டு முகத்தை அஷ்டகோணலாக்கிக் கொள்ள யாருக்கும் மனசு வராது. லட்சணமான பெண்...

"இன்னும் ஏழு நாள்லே டெலிவரி ஆகாட்டி, ஆர்டரை கேன்சல் செஞ்சு, லீகலா புரசீட் பண்ண வேண்டி இருக்கும்... அடுத்த திங்கள்கிழமை வந்து பாருங்க..."

பேங்கில் பெண் அதிகாரி. வாங்கிக் கட்டிக்கொண்டு, ஆட்டோ பிடித்து ஆபீஸ் வர, ஆறு மணி.

"அடுத்த வாரம் எங்க அக்கா டெலிவரி... நான் லீவு போட்டுடுவேன்... நீதான் ஒத்தையாப் போய்த் தேவுடு காக்கணும்... அனேகமாக சிசேர்யன் தான் உனக்கு..."

ஜ்யோத்ஸ்னா வெறுப்பேற்றிக் கொண்டு வர, உள்ளே நடந்த போது, ஏ.சி. பிளாண்ட் ரூம் வாசலில் ஒரு பெண் நின்று இரைந்து கொண்டிருந்தாள். கண்ணில் ஏகமாக மையும், முகத்தில் நிறையப்

பைப் பார்த்தியா.. அவன் பேட்டையிலே இவதான் அழகு ராணி போல..."

ஜ்யோத்ஸ்னா விஷமமாகக் கண் அடித்தபடி கதவைத் தள்ளித் திறந்தாள்.

"ஏ.சி. ஆபரேட்டர் வீட்டுக்காரியா?"

கருப்புப் பெட்டியை மேஜையில் வைத்தேன். ஏ.சி. என்ன ஆனது?

"ஆமா... பூச்சிக்கு இப்படி ஒரு ஷோக்கான பொண்டாட்டி... அவன் தலையெழுத்தைப் பாரேன். பெரிசா ஏதோ சீக்கு பிடிச்சு இங்கேயே விழுந்து கெடக்கான். அதான் யார் கண்ணுலேயாவது பட்டா கரப்பான் பூச்சி மாதிரி ஓடி ஒளியறான்..."

பூச்சி காரணப் பெயராகத்தான் இருக்க வேண்டும். அட்டெண்டென்ஸ் ரிஜிஸ்தரில் தேடினால் நிஜப் பெயர் கிடைக்கலாம். கிடைத்து எனக்கு என்ன ஆக வேண்டும்?

மேஜை மேல் கைப் பையை வீசி எறிந்து விட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டாள் ஜ்யோத்ஸ்னா.

"இடியட்... அஞ்சு மணியானா ஏ.சி.யை நிறுத்திடுவான்..."

"நான் போய்ப் போடச் சொல்றேன்..."

அவனோடு ஒரு நாள் பழக்கம். சொன்னால் கேட்பான்.

## பூச்சியோட சம்சாரம்... மேக்கப்பைப் பார்த்தியா... பேட்டையிலே இவதான் அழகு ராணி போல...

கான ரூபாய்க்கு சரக்கு இருக்கு... தெரியுதா?"

"சரிங்க.."

சொரிங்க என்று வெளியே வந்த வினாடியில் அவனை மறந்து போனேன். அது ஒரு பத்து நாள் போல.

"உடனே வா.." என்று பேங்குக்காரர்கள் அன்பொழுக ஃபோனில் கூப்பிட்ட சுபதினம் அது...

எதிர்பார்த்ததுதான்...

நாற்பத்தெட்டு டெர்மினல்கள், நூற்று இருபத்தெட்டு மெகாபைட் மூளையோடு பெரிய கம்ப்யூட்டருக்கு ஆர்டர் கொடுத்து விட்டு இரண்டு மாதமாகக் காத்திருக்கிறார்கள். இப்போது பொங்கி எழுந்து முகத்தில் உமிழாத குறையாகத் திட்டப் போகிறார்கள்.

உமிழ்ந்தாலும் துடைத்துக்

பவுடருமாக அவளைக் கம்ப்யூட்டர் கம்பெனிக்குள் பார்க்கக் கொஞ்சம் வினோதமாக இருந்தது.

"உனக்கு என்னய்யா ஆச்சு... வீட்டுக்கும் சரியா வர்றது இல்லே... வந்தாலும் தங்கறது இல்லே... பொளுதன்னிக்கும் இங்கேயே உக்காந்துக்கிட்டு.. உன் புள்ளையானா உன் கிட்டேப் போகணும் போகணும்னு சாடையிலே சொல்றான்.. அதான் கூட இட்டாந்தேன். முதல் வாட்டி உன் ஆபீசுக்கு வரான். கூட்டிப்போய் பலகாரம் வாங்கித் தாயேன்.."

ஆபீஸ் டாய்லெட்டைப் பார்த்து இரைந்து கொண்டிருந்தவள் என்னைப் பார்த்ததும் நிறுத்திக் கொண்டாள்.

உள்ளே சடசடவென்று தண்ணீர் விழுகிற சத்தம்.

"பூச்சியோட சம்சாரம்... மேக்கப்

டாய்லெட் முற்றத்தில் ஒரு ஏழெட்டு வயதுப் பையனை நிற்க வைத்துத் தலையைத் துவட்டிக் கொண்டிருந்தவன் என்னைப் பார்த்து, இரண்டு கையையும் நடுவில் அழுக்குத் துண்டோடு உயர்த்திக் கும்பிட்டான். குளித்துவிட்டுச் சொட்டச் சொட்ட நின்ற பையன் வெட்கத்தில் நெளிந்தான். பூச்சியின் சம்சாரம் கண்ணில் படவில்லை.

"என்னப்பா... இங்கேயே குடும்பம் நடத்த ஆரம்பிச்சுட்டியா?"

அவனை உற்றுப் பார்த்தபடி கேட்டேன்.

பையன் மூக்கிலிருந்து விரலைத் தட்டி விட்டு, என்னைப் பார்த்துக் காவிப் பல் தெரியச் சிரித்தான்.

"வூட்லே தண்ணிக் கஷ்டம் சார்... ஊரு முளுக்க அதானே... ஒரு வாரமாப் புள்ளையைக் குளிப்பாட்டாம வச்சிருக்கா... இப்படியே விட்டு என்னை மாதிரி ஆயிட்டா..."

அவன் குரல் பிசிறடித்தது. ஈரத் துண்டு மூடிய கையோடு பையனைச் செல்லமாக அணைத்துக் கொண்டான்.

"பேரு என்னடா தம்பி?"

பையன் என் பேச்சு புரியாதது போல விழித்தான்.

"எந்த சன்மத்துலே என்ன

www.padippakam.com



பாவம் பண்ணினேனோ... ஒரே
புள்ளை. ஊமையாப் படைச்சுட்
டான். போவுது... நம்ப விதின்னு
வேலையைப் பார்க்கலாம்னா...
பாருங்கசார்... ரெண்டு வருஷமா
றது.. உடம்பெல்லாம் இப்படி
அரிச்சுப் பிடுங்கி..."

பையனை விட்டுச் சட்டென்று விலகி, வெறி கொண்டது போல மார்பிலும் கையிலும் மாறி மாறிச் சொரிந்து கொண்டான்.

"கூட்டிப் போய்த் தோள்லே கை
போட்டு உறை வாங்கிக் கொடுத்த
வன் எல்லாம் இப்ப வியாதின்னு
விலகி விலகிப் போறான்... பேரு
கூட வச்சுட்டானுங்க சார்... பூச்சி
யாம்... இவனுக மூஞ்சியிலே
முளிக்க வேண்டாம்னு ஓடறே
னில்லே... பூச்சிதான்"

"டாக்டர் கிட்டே காட்டறது தானே..."

நான் கண்ணாடியில் பார்த்துத்

படிப்பகம்

www.padippakam.com

தலைமுடியைச் சரி செய்து கொண்டே கேட்டேன்.

"தானே சரியாயிடும்... மாத்தி ரையை விடாம முளுங்கு... களிம் பைத் தேய்ன்னு பாத்த போதெல் லாம் சொல்றாரு... தேச்சுத் தேச்சு உடம்பே எண்ணை மொளுகின மாதிரிப் போச்சு... செத்தா சீக்கிரம் வெந்துடும்..."

சிரிப்பு வராமல் அவன் சிரித்தது பரிதாபமாகத் தெரிந்தது.

"எதுவும் எப்படியும் போகட் டும்... டியூட்டி முடிஞ்சு வீட்டுக்குப் போய் நிம்மதியா ரெஸ்ட் எடுக்க வேண்டியதுதானே?"

நான் கேட்டபடி ஏ.சி. ரூம் வாச லில் நிற்க, அவன் பையனின் கையைப் பிடித்து வரிசையாகக் கம்ப்ரஸ்ஸர்களை 'ஆன்' செய்ய வைத்தான்.

"எங்க சார் வீட்டுக்குப் போக... திரும்பி என்னைப் பார்த்தான். "எல்லோரும் போல அவளுக்கு டும் கெட்டுப் போகட்டும் என்று அன்றைக்குப் படியிறங்கிப் போன தற்கு அப்புறம் எண்ணி ஒரே ஒரு நாள் தான் பூச்சியைப் பார்த்தது...

பேங்குக்காரர்களுக்கு ஒரு வழி யாகக் கம்ப்யூட்டர் போய்ச் சேர்ந்து, ஒரு மத்தியானத்தில் திரும்பக் கூப்பிட்டார்கள்.

"என்னய்யா நெனச்சுட்டு இருக் கீங்க... வந்திருக்க கம்ப்யூட்டர்லே பாதி மெமரி காணோம்... சி கம் பைலர் இல்லே... அடாஸ் ஓல்டு கீ போர்டு... டேப்பைப் போட்டா உள்ளே மாட்டிக்குது... உன் சங் காத்தமே வேணாம்... எல்லாத்தை யும் தூக்கிட்டு போ..."

எல்லா தெய்வத்தையும் துணைக்கு வரச் சொல்லிக் கூப் பிட்டபடி கிளம்பினால் வாசலில் சின்னக் கூட்டம்.

செக்யூரிட்டி ஆசாமி நாதமுனி யும் மற்ற பாதுகாப்பு சகாக்களும், யாரையோ அடிக்கக் கையை ஓங்கி

## பூச்சி... சட்டென்று வாயில் வந்துவிட்டது. சொல்லியிருக்கக் கூடாதுதான்...

பயம் வெளிக்காட்டிக்க மாட்டா தான்... சாப்பாடு போடுவா...

குடிக்க வென்னீர் வச்சுக் கொடுப்பா... வேறே என்ன கேக்க முடியும் அவளை... சொல்லுங்க... வாரம் ஒரு தடவை போவேன்.. பணம் கொடுக்க... பிள்ளையைப் பார்க்க..."

கண் நிறைந்து போக நின்று கொண்டிருந்தவன் சலங்கை சத்தம் கேட்டுத் தலையை உயர்த்தினான்.

அவன் வீட்டுக்காரிதான். கையில் சவுக்காரத்தோடு படியேறி வந்து கொண்டிருந்தாள்.

பையன் வினோதமான சத்தம் எழுப்பியபடி அவளிடம் ஓடினான்.

"இவனை நெனச்சாத்தான் கவ லையா இருக்கு... வாயுள்ளவனே கஷ்டப்படற உலகம்... இப்படிப் பொறந்து வச்சு... பொளுதன்னிக்கும் தெருவுலேதான் வெளையாட்டு..."

உலகத்தில் கவலைப்பட எத்த னையோ விஷயம். முக்கியமாக பேங்குக்காரர்களுக்கு அடுத்த வாரம் கம்ப்யூட்டர் போய்ச் சேரா விட்டால் கட்டி வைத்து அடிப் பார்கள்.. பூச்சியும் புழுவும் எக்கே யபடி கத்திக் கொண்டிருந்தார்கள்.

"பைப்பு திருட வந்திருக்கான் சார்.. முளிக்கறதைப் பாரு... இதுக் குன்னு ஒரு கூட்டமே இருக்கு. சின் னப் பசங்களை நேக்கா உள்ளாற அனுப்பிச்சு, லைட்டு பல்பு, பைப்பு, பிட்டிங்னு கிளப்பிட்டுப் போய் வித்துடறது... யாருடா உன்னை அனுப்பிச்சது... சொல்றானா பாரு... பிடரியிலே போடுடா..."

ஏதோ பிராணி வதைபடுவது போல் தீனமான சத்தம். அவசரமா கக் கூட்டத்தை விலக்கிப் பார்த்த வன் பதறிப் போனேன்.

"விடுங்கய்யா அவனை... தெரிஞ்ச வன் தான்... திருட வந்தவன் இல்லை. பூச்சியோட பிள்ளை..."

நான் சொல்லிக் கொண்டிருந்த போதே. பூச்சி எங்கேயோ இருந்து ஓடி வந்தான். பாய்ந்து பையனைக் கட்டிப் பிடித்துத் தூக்கிக் கொண்டு யாரோடும் எதுவும் பேசாமல் ஏ.சி. பிளாண்ட் ரூமுக் குள் போகும்போது என்னைப் பார்த்த பார்வையில் சந்தோஷம், வருத்தம், சோகம், துக்கம் எல்லாம் கலந்து தெரிந்தது.

பூச்சி... சட்டென்று வாயில் வந்து விட்டது. சொல்லியிருக்கக் கூடாதுதான்... பெயரைத் தெரிந்து கொள்ளாமல் போய்...

சுவாரசியமான சினிமா பாதியில் முடிந்தது போல கூட்டம் கலைந்து போக, நான் பூச்சியின் பெயர் என்னவாக இருக்கும் என்று யோசித்துக் கொண்டு மோட்டார் பைக்கைக் கிளப்பி னேன்.

பேங்குக்காரர்கள் மனதில் உருட்டி விழித்தார்கள். பூச்சியைத் துடைத்தெறிந்து விட்டுக் கிளம்பிய அடுத்த நாள் என்னை ஆபீஸில் புவனேஷ்வருக்கு அனுப்பி விட் டார்கள். யாரோ மொண்டல் கால் கடுதாசி கொடுத்துவிட்டு அந்நிய தேசத்துக்கு ஓடி இருக்கிறான்... எங் கள் தொழிலில் இது சகஜம்தான். வேறு ஆள் கிடைக்கிற வரை, நான் தான் ஒரிசா இன்சார்ஜ்...

இரண்டு மாதம் ஓடிசி ஆடி விட்டு, ஒரு மொஹபத்ரா கையில் பொறுப்பைப் பிடித்துக் கொடுத்து விட்டுத் திரும்ப இங்கே வந்த போது, ஆபீஸே தலைகீழாக மாறிப் போயிருந்தது.

ஜ்யோத்ஸ்னா போட்டிக் கம்பெ னியில், இன்னும் இரண்டாயிரம் அதிகச் சம்பளத்துக்குச் சேர்ந்து விட்டிருந்தாள். அவள் இடத்தில் புதிதாகச் சேர்ந்திருந்த பஜாஜ் இன்ஸ்டிட்யூட் தங்கப் பதக்க எம்.பி.ஏக்காரி கண்ணாடியைத் தூக்கி விட்டுக் கொண்டு என்னை அற்பமாகப் பார்த்தாள்.

பேங்குக்காரர்கள் இன்னும் நாலு கம்ப்யூட்டருக்கு ஆர்டரும், அட்வான்ஸும் கொடுத்துவிட்டு, 'இன்னும் நாலு நாள்லே மிஷின் வராமப் போனா...' என்று வழக்கம் போல மிரட்ட ஆரம்பித்திருந்தார் கள்.

வழக்கம் போல இருட்டு வேளையில், சால்ஜாப்பு கடிதம் தயார் செய்ய ஆரம்பித்த போது, நெடு நெடுவென்று ஒரு வழுக்கைத் தலையன் உள்ளே வந்து, "சார் ஏ.சி.யை நிறுத்திடட்டா?" என்று வினயமாகக் கேட்டான்.

பூச்சி எங்கே?

"பூட்டான் சார்... மூட்டைப் பூச்சி மருந்து குடிச்சுட்டான்... ரெண்டு மாசமாச்சு... பையன் சொல்லாமக் கொள்ளாம வீட்டு லேருந்து கிளம்பி அப்பனைப் பாக்க வந்திருக்கான். அவனை வீட் டுலே விட்டுட்டு வரப் போயிருக் கான்... அங்கே அவன் பெண்சாதி..." சொல்லிக் கொண்டே வெளியே போனான்.

ஏ.சி. நின்று போய்ப் புழுங்க ஆரம்பித்தது.

▲

www.padippakam.com

# PBF பார்க் டவுன்

## பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம் 1985 Post Box No: 2806

223, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-3 போன்: 582676, 564354

கிளை அலுவலகங்கள்: 2 கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை-41 போன் 413582

P-995, இரண்டாவது அவென்யு, 12-வது மெயின்ரோடு ஜங்ஷன், அண்ணாநகர், சென்னை-40 போன் 6262656



### பிக்சட் டிபாசிட்

| 46 நாள் | 90 நாள் | 6 மாதம் | 1 ஆண்டு | 2 ஆண்டு | 3 ஆண்டு | 4 ஆண்டு | 5 ஆண்டு ★ |
|---|---|---|---|---|---|---|---|
| 13% | 14% | 15% | 17% | 18% | 18.5% | 19% | 20% |

**21%** 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

### PB பாண்டு

| முதலீடு | காலம் | திரும்பப் பெறும்தொகை |
|---|---|---|
| ரூ.25,000 | 60 மாதம் | ரூ.70,000 |

### குழந்தைகள் கல்வி நலத்திட்டம்

L.K.G. முதல் கல்லூரி தொடக்கம் வரை

வைப்புத் தொகை ரூ. 5,100/-

3-ஆம் ஆண்டு நிறைவிலிருந்து தொடர்ந்து 12 ஆண்டுகள் ரூ.500/- பெறலாம். திட்ட டெபாசிட் காலத்திலிருந்து 16, 17-வது ஆண்டுகளில் தலா ரூ.1,000/- வீதமும், 18-ம் ஆண்டு துவக்கத்தில் ரூ.75,000/-ம் வழங்கப்படும்.

நலத்திட்டத்தின் 5% மாணவர்களுக்கு +2 அரசுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ரூ.25,000/- பரிசாக ஒவ்வொருவருக்கும் நிதி நிறுவனம் வழங்கும்.

திட்டத்தின்பயனை உங்கள் மழலைச் செல்வங்களுக்கு வழங்கி மன நிம்மதி பெறுவீர்! மகிழ்ச்சி அடைவீர்!!

### கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/- முதலீடு செய்வீர்
10ஆம் ஆண்டு முடிவில் ரூ.50,000/- பெறுவீர்
அடுத்த 20ஆம் ஆண்டு முடிவில் ரூ.1 கோடி பெறுவீர்

### காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

| டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள் | 5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை | 10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை | 15ம் ஆண்டு பெறும் தொகை |
|---|---|---|---|
| Rs.6,320 | Rs.6,000 | Rs.6,000 | Rs.56,320 |

### வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர்.
252 மாதங்கள் நிறைவில் ரூ.2 லட்சம் பெறுவீர்.

### செல்வக்களஞ்சியம்

| டிபாசிட் | காலம் | வருவாய் |
|---|---|---|
| Rs.7,500 | 15 Yrs | Rs.1,25,000 |
| Rs.9,000 | | Rs.1,50,000 |

### பொற்குவியல் திட்டம்

| டிபாசிட் | காலம் | வருவாய் |
|---|---|---|
| மாதா மாதம் ரூ.100/- | 25 Yrs | Rs.3,00,000 |

### மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

| டிபாசிட் | 12 மாதம் | 24 மாதம் | 45 மாதம் | 60 மாதம் |
|---|---|---|---|---|
| Rs.1,000 | Rs.1,184 | Rs.1,430 | Rs.2,000 | Rs.2,535 |



**பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a**
ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

**தங்க நகை கடன்**
Rs. 3,000 PER 10 GRAM
வீடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)

**சேமிப்புத் திட்டம் 10% P.a**

நிர்வாக இயக்குனர்
**P.பாலசுப்பிரமணியம், B.Sc.**
முதன்மை அறங்காவலர்,
கந்தகோட்டம், சென்னை-3.

இயக்குனர் குழுத் தலைவர்:
**R. விவேகானந்தன், B.Com.**

❒ ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ❒ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ❒ வெள்ளி விடுமுறை



படிப்பகம்

www.padippakam.com


தரமானது! உறுதியானது!! நீடித்து உழைப்பது!!!

துருப்பிடிக்காது, பொருத்துவதற்கும், எடுப்பதற்கும் சுலபமானது

# 'ஸ்ரீ விக்னேஷ் பைப்'களே!



விக்னேஷ் பைப் இண்டஸ்ட்ரீஸ்





திருச்சி மாவட்டத்தில் தரமான பைப் தயாரிப்பில்
பெயர் பெற்ற நிறுவனம்

IS 4985

# ஸ்ரீ விக்னேஷ் பைப் இண்டஸ்ட்ரீஸ்

(அட்லஸ் ரிஜிட் P.V.C. பைப் தயாரிப்பாளர்கள்)

| | |
|---|---|
| *தொழிற்சாலை:-* | *விற்பனை அலுவலகம்:-* |
| திருச்சி ரோடு, | 12-A, தாக்கர் சத்திரம் லேன், |
| **துறையூர் - 621 010.** | மேற்கு பொலிவார்டு ரோடு, |
| | **திருச்சிராப்பள்ளி - 620 008.** |
| **Phone : 22648.** | **Phone : 700277** |



படிப்பகம்

www.padippakam.com



# யாசுமின் அக்கா

பிரபஞ்சன்

யாசுமின் அக்கா, மிகுந்த சந்தோஷத்தில் இருந்தாள். சற்றைக்கு முன்புதான் அந்தச் செய்தி வந்திருந்தது. அன்சாரி வரப் போகிறார் என்கிற செய்திதான் அது. 'யாரசூலே' என்றபடி, ஒரு கணம் மெய்மறந்து நின்றாள். அப்புறம், சுதாரித்துக் கொண்டாள்.

'ஏடி... ஹஜீருக்குட்டி... இங்கன வா. அத்தா வரப் போறார்...' என்று கூப்பாடு போட்டாள். குரல் உயர்த்திப் பேசி அறியாத யாசுமின் அக்கா, இப்படி ஏழூருக்கும் கேட்கிறது மாதிரி சப்தம் போடுவதாவது. சமையல்காரப்பெண் லட்சுமி, தோட்டக்காரர் முனிசாமி எல்லோரும், என்னவோ ஏதோ என்று குழுமிவிட்டார்கள்.

'என்னம்மா, என்ன?' என்றாள் லட்சுமி, பதற்றத்துடன். முனிசாமி, முண்டாசை அவிழ்த்துத் தலையைச் சொறிந்துகொண்டு நின்றார். அம்மா முன்னிலைக்கு வரும்போதெல்லாம், அவர் தலை அரிக்க ஆரம்பித்துவிடுகிறது.

யாசுமின் அக்காவுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. தான், பெரிய சப்தம் எழுப்பிவிட்டதை உணர்ந்தாள். வெட்கத்தோடேயே சொன்னாள்.

'ஹஜீருக்கு அத்தா வரப் போறாகடி. சேதி வந்திருக்கு."

"ஹை அப்படியாம்மா... சவாசு..." என்றாள் லட்சுமி.

ஹஜீருக்கு அப்பா, சாமர்த்தியம் பண்ண, அசல் தேசத்துக்குப் போய்த்தான் எத்தனை வருஷங்கள் ஓடிப் போய்விட்டன. ஹஜீரு, சின்னப் பாவாடையும், சட்டையும் போட்டுக்கொண்டு மெல்ல நடந்து பயின்றபோது போனவர். இப்போ, ஹஜீரு, வயசுக்கு வந்து, பெரிய மனுஷியாட்டம் அல்லவோ ஆகிப் போனாள். அவள் கண்களில் போட்டுக்கொண்டிருந்த மைக்குப் பின்னால் ஜொலிக்கும் அந்தப் பெரிய கண்களில் எத்தனை புதுப் புது சங்கேதங்கள் பிறக்கின்றன.

ஹஜீரா, 'என்னம்மா' என்றபடி வந்தாள்.

"உங்க அத்தா வறாக. இப்பத்தான் போன் வந்துச்சு."

துள்ளிக் குதித்தாள் மகள்.

"எப்போம்மா?"

"அடுத்த கிழமைக்குள்ளே... ஞாயிற்றுக்கிழமை வரலாம்ங்காக."

யாசுமின் அக்கா, கொஞ்சம் பூசின உடம்புக்காரி. 'இந்தச் சைத்தான், இப்படி வாரிப் பூசிக்கிட்டு வரலேன்னு யார் அழுதாக? கிடந்து, ஆட்டுக்குக் கொழுப்பு

ஏறுகிற மாதிரி ஏறுதே' என்ற
அடிக்கடி சொல்லிக்கொள்வாள்
யாசுமின் அக்கா, சைத்தான் எ
றது, சதை போட்டுவிட்டதை
தான். கடற்கரைக்குப் பக்கத்தி
தான், இத்தனைக்கும் அக்கா வீ
இருந்தது. 'காலையிலும் மாலை
லும் நடையேன்' என்று ஜெகா
பாய் அடிக்கடி சொல்லத்தா
செய்தார். 'எங்கே ஒழிகிறது?' எ
பாள் யாசுமின் அக்கா. கா
தூங்கி எழுந்ததும், விடிந்தும் வி
யாததுமாகப் பலகாரக் க
வைக்க வேண்டி இருக்கிறது. கு
தைகள் பசியாற வேண்டுபே
ரெண்டு தெரு தள்ளி யாசுமி
பெரியம்மா மகள் இருக்கிறாள்
அவள் பிள்ளைகள் கூடப் பசியா
அக்கா வீட்டுக்குத்தான் வரு
(அல்லா, அந்த வீட்டின் பக்க
கண் திறக்கவில்லையே, என்
செய்ய) சொந்தப் பிள்ளைகளை
கூடப் பட்டினி போடலாம். அ
தப் பிள்ளைகளைப் பட்டி
போடலாமோ? கடவுளுக்
பொறுக்காதே. பலகாரம் ஆக
தாமதம் ஆனால், அந்தப் பிள்
கள் என்ன நினைக்கும்? பாவ
அல்லவா? பலகாரக் கடை முடி
தால், இருக்கவே இருக்கிறது சோ
றுக்கடை. அப்புறம் காபிக்கடை
அப்புறம் ராத்திரிக்கு ஏதானு

படிப்பகம்

www.padippakam.com

சய்யத்தானே வேண்டியிருக்கிறது. நடக்க எங்கே ஓய்வு? சரிதான் ாங்கள். இனி, சிக்கென இருந்து ன் யாரை மயக்க வேணும்? கல் ணம் ஆச்சு. குழந்தை குட்டிக ளப் பெத்தாச்சு. பேரன் பேர்த்தி ரப் போறாக. இன்னும் என்ன லுக்கு. நான் என்ன சினிமாவிலே டிக்ட்' கொடுக்கப் போறவளாக் ம்...' என்று ஜெகான் பாயிடம் சான்னாள் அக்கா. பாய்க்கு இந்த ஷயத்துல வருத்தம்தான்.

அக்காவுக்கு, மாமாவைக் றித்து இந்த விஷயத்துல, பருமை மட்டாய் இல்லை. அது டும்ப வாகு. வழித்துவிட்டாற் பால், இருப்பார், ஜெகான் பாய். ரு பிடி சதை கூடுதலாக இருக்க வண்டுமே! வயது ஐம்பத்திரண்டு ன்று அவர் சொல்லி ஆச்சர்யப் ட்டவர்கள் உண்டு. தலையோ,

## யார் பாத்திமா யாரிடம் போய் கேட்பது?

டியோ ஒரு நரை இருக்க வேண் மே. இல்லை. எல்லாம் நெருப் பக் குளிப்பாட்டின நிறம். ஒரு ன்னப் பையனைப் போன்ற துறு றுப்பு. ஒரு நிமிஷம் சும்மா ருக்க மாட்டார். ஜன்னல் கம்பிக ன் கீழே புழுதி படிந்திருப்பதைச் த்தப்படுத்திக்கொண்டு இருப்பார். ல்லையென்றால், டிரான்சிஸ்ட ரச் சுத்தமாகப் பிரித்து, பழுது ார்த்துச் சரிப்படுத்திக் கொண்டி ப்பார். இல்லையென்றால் இருக் வே இருக்கிறது, அலமாரிகளைச் பண்ணும் வேலை. துணிகளை ழுங்காக வைத்திருப்பது. சட்டை டுக்கு, கைலி அடுக்கு, கைக் ட்டை அடுக்கு எல்லாம் தெளிவு. ன்றுடன் ஒன்று கலக்கக்கூடாது. அதன் அதனுக்கு உரிய நீதி அத க்கு!

மையல் பெண்ணை அழைத்து க்கா சொல்லிக்கொண்டிருந்தாள். "நல்லா கேட்டுக்கோடி லட்சுமி. ஜீருக்கு அத்தா வர இருக்காக. வுகளுக்குத் தேங்காப்பால் சாதம் ண்ணோனும். அது அவுகளுக்கு ஷ்டம். நல்ல நெத்தா, முத்தின ங்காயா பாத்து அம்பது வாங் போட்டு வச்சுக்கோ. அப்புறம், கடற்கரை செட்டியாரண்டைக்குச் சொல்லி அனுப்பி பெரிய எறா எவ்வளவு கிடைச்சாலும் இங் ஙனே அனுப்பச் சொல்லு. அப்பு றம், கசாப்புக் கடை இசுமாயில் மாமாவுக்குச் சொல்லி அனுப்பி, தினத்துக்கும் மூனு கிலோ நல்ல தொடை இறைச்சியா கொடுத்து அனுப்பச் சொல்லிவுடு. மீனு, வவ்வா, வஞ்சிரம்னு பெரிசா வாங்கி, பிரிஜ்ஜிலே வையி. அப்பு றம் நீயி, இப்படி. அடுப்புக் கறி பூசிக்கிட்டு பங்கரையாட்டம் அவுக முன்னால வந்து நிக்காதே. வேணும்கிற புடவை சாக்கெட்டு என் அலமாரியைத் திறந்து எடுத் துக்கோ. என்ன நான் சொல்றது?"

சொல்வதற்கு என்ன இருக்கிறது. யாசுமின் அக்கா கொடுப்பதில் எத் தனைப் பிரசித்தம்! அக்கா வீட் டுக்கு வந்து கையை நனைக்காமல் எவர்தான் போக முடியும். கிழிச லும், கோரமுமாய் வந்த உறவினர் கள் புதுசு உடுத்திக் கொள்ளாமல் திரும்பியது உண்டா? லட்சுமியே கூட வெறும் தகர டிரங்க் பெட்டி யோடு மட்டும்தான் வந்து சேர்ந் தாள். இன்று கர்ப்பிணி வயிறு மாதிரி பெட்டி துணிமணிகளால் பிதுங்குகிறதே!

"போக்கா! நல்ல ஒஸ்தி, ஒஸ் தியா புடவை எடுத்துக் கொடுத் துட்டு, அதுகளை கட்டிக்கிட்டு சமையல் கட்டுக்குப் போயி நிக்க மனசே வரமாட்டேங்குது." என்று லட்சுமி சிணுங்கினாள்.

யாசுமின் அக்காவுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. உடம்பு குலுங்க நகைத்தாள் அக்கா.

"உடுத்துக் களையத்தானேடி புட வையும் சாக்கெட்டும்? பழசானா புதுசு மாத்திக்கிட வேண்டியது தானே? இருக்குருக்கொள்ளோ அனு பவிக்க வேணுமடி"

மாமா வருகிற நாள். அதிகா லமே எழுந்து வீட்டையும் எழுப்பி விட்டு விட்டாள், அக்கா. மாமா சீக்கிரம் சகல சவுகர்யங்களுடன் திரும்ப வேண்டும் என்று எத்த னைப் பிரார்த்தனைகளைச் செய்தி ருக்கிறாள் அக்கா. நாகூர் ஆண்ட வர் தொடங்கி காட்டு பாவா வரைக்கும் பல தர்க்காக்களில் நேர்த்திக் கடன் செய்து கொண்டி ருந்தாள் அக்கா. பக்கிர்களுக்கு விருந்து படைப்பதாகப் பிரார்த் தனை. ஒவ்வொரு முறையும் மாமா வந்து சில மாதங்கள் இருந்து போவார். அப்போதெல்லாம் அக்கா சொல்வதுண்டு:

"இன்னொரு வாட்டியும் வெளி தேசம் போறியளா? நமக்கு இருக் கும் பணம் காசு இதுகள் போதாதா? குட்டிக்கு நிக்காஹ் பண்ணி வைக்க வேணாமா? அவ ளுக்கும் வயசாகுது இல்லையா? இன்ஷா அல்லாஹ். இந்த வருஷ மாச்சும் கல்யாணம் முடிச்சிடு வோமே...." என்பாள். மாமா வழக்க மாக ஏதாவது சொல்வார். காலில் சுடுதண்ணீர் ஊற்றியது மாதிரி உடனே திரும்பி ஊருக்குப் போய் விடுவார்.

அக்காவுக்கு நம்பிக்கை இருந்தது. இந்த முறை, அவரைத் தக்கவைத் துக் கொண்டு குட்டிக்குக் கல்யா ணத்தை முடித்துவிட வேண்டும்.

யாசுமின் அக்கா புதுப் பச்சைப் புடவையில் இருந்தாள். பூப் போட்ட பச்சைப் புடவை. கரும் பச்சை நிறத்தில் ஜாக்கெட் அணிந் திருந்தாள்.

"ஏடி... குட்டி.... தேத் தண்ணி ரெடியா இருக்கா....?"

"இருக்கும்மா"

"சுக்குப் பொடி போட்டிருக் கில்லே?"

"போட்டு இருக்கேம்மா"

"ஏலக்காயைப் பொடி பண்ணி வச்சிருக்கேல்லியா?"

"இருக்கும்மா"

"அவுக வந்தவுடன் தேத் தண்ணி கேப்பாக. வெறும் தேத் தண்ணி கொண்டாறப்படாது. கூட ரெண்டு முறுக்கு, ரெண்டு பொரி விளங்காய் உருண்டை, ரெண்டு தேங்கா பர்பி இதுகளோடு கொண்டு வரனும். தெரிஞ்சுதா?"

"சரிம்மா"

அக்காவின் உடம்பின் சதை பகு திகளும் ஆடிக்கொண்டிருந்தன. டிரைவரை அழைத்தாள்.

"அம்மா" என்றபடி வந்து நின் றார் அவர்.

"காரச் சுத்தமா துடைச்சு வச்சி ருக்கீரா"?

"இருக்கும்மா"

"அவுக வந்ததும் சிநேகிதக் காரங்களைப் பார்க்கப் போவாக"

அக்கா வாசலுக்கு வந்து நின் றாள். கார்கள் போவதும் வருவது மாக இருந்தன. மாமா வரும் கார் மட்டும் வராமல் சுணங்கியது. விமானம் தாமதமாகி இருக்கும். அல்லது கார் பழுதடைந்திருக் குமோ? சைத்தான் மக்கள். விமா னத்தைச் சுத்தமாகத் துடைத்து எண்ணெய் போட்டு வைத்துக் கொள்கிறதுக்கு என்ன கேடு?



காட்டு பாவா, பக்கீர் ஷேக் முக மது எல்லோரையும் அழைத்து, அவுகளைப் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்க்கும்படி வேண்டிக் கொண்டாள். உலகம் கெட்டுப் போய்விட்டது! கண்ட கண்ட இடத்தில் எல்லாம் 'ஜின்'கள் அட் டகாசம் தலைவிரித்து ஆடிக் கொண்டல்லவா இருக்கிறது. கடை சியாக மாமா வந்து இறங்கினார்.


படிப்பகம்

www.padippakam.com


# பொங்கல் வாழ்த்துக்கள்

# 1996

BALUSSERY BENEFIT CHIT FUND PVT. LTD.
50
GOLDEN JUBILEE
YEARS

BALUSSERY CHIT FUNDS
OVER FOUR DECADES OF SERVICE

**தி பாலுசேரி பெனிஃபிட்**
**சிட் பண்ட் பி.லிட்.,**

**தலைமை மற்றும் பதிவு அலுவலகம் : "பாலுசேரி பில்டிங்ஸ்", 30 சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. தொலைபேசி : 8541194, 8541062**
**கிளைகள் : பம்பாய் ● புதுடெல்லி ● கல்கத்தா ● பெங்களூர்**

***"Build Better Savings through Balussery's"***




படிப்பகம்

www.padippakam.com






படிப்பகம்

www.padippakam.com

யாசுமின் அக்கா அதிர்ச்சிக்கு உள்ளானாள். அவள் எதிர்பார்த்தது போல மாமா இல்லை. அவர் கறுத்தும் இளைத்தும் போய் இருந்தார். நடக்கவும் சிரமப்படுபவர் போல இருந்தது. மாமா அக்காவைப் பார்த்துச் சிரித்தார். அதில் ஜீவன் இல்லை.

"இறைவனுக்கு நன்றி சொல்வோம். ஒருவழியாகப் பத்திரமாகதான் வந்து சேர்ந்தேன்."

தனியாக அவரைச் சந்தித்த போது அக்கா கேட்டாள்.

"உங்களுக்கு சுகக் கேடா?"

"உம்..... அப்பிடித்தான். அங்கே ரொம்பவும் சிரமப்பட்டுவிட்டேன். அதோடு யுத்தம் வேறு தொடங்கி விட்டதா? ரொம்ப கலகலத்துப் போய்விட்டது வாழ்க்கை. உசுரோடு ஊர் திரும்புவேன் என்று நான் எதிர்பார்க்கவில்லை." என்றார் மாமா.

அவர் வெளியில் போவதை நிறுத்தினார். உணவும் குறைந்துபோய் விட்டது. மாமாவுக்கு தேங்காய்ப் பால் சோறும், ஆட்டுக் கறி குருமாவும் பிடிக்கும். அதுவும் செல்லுபடியாகவில்லை. உடம்பு காய்ந்தது. நாளாக நாளாக படுக்கையே அவர் இருக்கை என்றானது. டாக்டர்கள் வந்து போனார்கள். மாமாவுக்கு அடிக்கடி மயக்கம் போட்டது. மயக்கத்தில் பிதற்றினார். அக்கா, அவர் சொல்லும் வார்த்தைகளைக் கூர்ந்து கவனித்தாள். 'யாசுமின் ஹஜிர்..' என்பார் சிலவேளை. அடிக்கடி 'பாத்திமா' என்றார். தெளிவாக மிகுந்த நேயத்தோடு அதை அவர் சொல்வதாகப் பட்டது.

யார் பாத்திமா? யாரைக் கேட்பது?

மாமா, அதைச் சொல்லும் நிலையில் இல்லை. அந்த நிலையில் அதைக் கேட்பது,அவரைத் துன்புறுத்துவதாக இருக்குமோ என்று அஞ்சினாள் அவள். யாரைக் கேட்பது? மண்டையைக் குழப்பிக் கொண்டாள். கடைசியில் ஈரானி அத்தையைக் கேட்பது என்று முடிவு பண்ணினாள். அத்தை ரொம்பக் காலமாக அந்த தேச தில இருந்து, அண்மையில்தா இங்கு வந்தவள். அந்தத் தேசத்தி மாமா வீட்டுக்குப் போக்குவர தும் கொண்டிருந்தவள் அவள் அவளுக்குத் தெரியாதது எதுவு இருக்க முடியாது.

அக்கா பர்தாவை எடுத்து போர்த்துக் கொண்டாள். மகளை கூப்பிட்டு, "அத்தா பக்கத்திலே இரு. அஞ்சு 'நிமிட்'டுலே வந்து றேன்" என்றாள். அறைக்குள் எ டிப் பார்த்து மாமா உறங்குவ நிச்சயம் செய்துகொண்டு புறப்ப டாள்.

வெயில், உக்ரமாக இருந்தது.

தெருச் சொறிநாய் ஒன்று அச யுடன் நிமிர்ந்து பார்த்து, 'அட



www.padippakam.com

ம்ம பாயம்மா' என்கிற புரித
லோடு மீண்டும் படுத்துக் கொண்
டது. மூன்றாம் தெருவில்தான்
இருந்தாள் அத்தை. இருந்தாலும்
அதற்குள் அவளுக்கு வேர்த்து விட்
டிருந்தது. அல்லாவின் கருணை.
அத்தை, வீட்டில் இருந்தாள். இவ
ளைக் கண்டதும், "வா யாசுமின்...
மா... என்ன இந்த வேகாத வெயி
லிலே..." என்றபடி வரவேற்றாள்.

"எங்கே பொண்ணு?"

"நெல்லு மிஷின் வரைக்கும்
போயிருக்கா...."

"ரொம்ப சரி..."

நல்ல வேளை. அத்தை தனியா
த்தான் இருந்தாள். பர்தாவை
விலக்கிக் கொண்டு அமர்ந்தாள்
அக்கா.

"என்ன விஷயம் யாசுமின். உன்
புருஷன் சுகம்தானே!"

"சுகம்தான் அத்தை. ம்.... அத்தை
ஒரு விஷயம் விளங்கனும். நீங்க
அந்த தேசத்துல இருந்தவக. எங்க
ஹஜீருக்கு அத்தாவுக்குப் பாத்தி
மான்னு யாரேனும் உறவு...."

"பாத்திமாதானேடி.... உனக்குத்
தெரியாதா? அங்க பாத்திமாவை
நிக்காஹ்' பண்ணி இருந்துச்சு உன்
வீட்டுக்காரரு. உனக்குத் தெரிஞ்சி
ருக்கனும்னு நெனைச்சேனே..
என்ன நடந்துச்சுன்னே எனக்குத்
தெரியாது.... அப்புறம் தலாக் பண்
ணிடுச்சு தம்பி. சொத்து பணம்
கொடுத்துத்தான்.... எனக்குத் தெரி
யும் அவளை. ரொம்ப அழகான
பெண். செம்பருத்திக் கொடி
மாதிரி இருப்பா.... இந்த வெயி
லிலே இதுக்காகவா வந்தே?"னு
அத்தை சொன்னதும் யாசுமின்
அக்காவுக்கு நிம்மதி ஆயிற்று. அந்
தப் பாத்திமாப் பெண்ணைத் தான்
பார்க்க முடியாமல் ஆயிற்றே
என்று வருந்தினாள்.

நிக்காஹ் முடித்து ஹஜீரும் புரு
ஷனும் புறப்பட்ட நாலாம் நாள்.
மாமா மவுத்தானார். அல்லா அவ
ரைச் சுவனத்தில் சேர்ப்பானாக.
அக்காவைச் சவுகர்யமாக விட்டுச்
சென்றிருந்தார் மாமா. கார் இருந்
தது. சுமார் இருபது லட்சம் பெறு
மான வீடு தோட்டம் இருந்தது.
நகைகள் பல லட்சத்துக்குக்
காணும். ரொக்கம் மட்டும் பத்து
லட்சத்துக்குக் காணும். மாமா
மவுத்தான சில நாட்களுக்குப்
பிறகு அக்கா ஒரு காரியம் செய்
தாள். வெளிநாட்டுத் தபால் காகி
தத்தையும் பேனாவையும் அட்டை
யையும் எடுத்துக் கொண்டு
மாட்டை மாடிக்கு வந்தாள்
அக்கா. மாடியின் ஒரு பகுதி நிழ
லில் இருந்தது. சில்லென்று காற்று
வந்தது. அக்கா, எழுத ஆரம்பித்
தாள்.

ஹிஜ்ரி 1413, ரஜப் மாதம் 9-ம்
தேதி என் பிரியத்துக்குரிய சகோ
தரி பாத்திமாவுக்கு சகல சவுகரியங்
களும் அல்லா அளிக்க என வேண்
டிக்கொண்டு எழுதுவது:

என்னை உனக்குத் தெரிந்திருக்
கும். என் கணவர் ஜனாப் ஜெகான்
பாய். கடந்த மாதம் மவுத்தானார்
என்பதைத் துக்கமுடன் தெரிவித்
துக் கொள்கிறேன். இருந்தவரை
மிகுந்த அன்பான மனுஷராக
இறையச்சம் கொண்டவராக என்
கணவர் இருந்தார். அவருக்குச் சுவ
னத்தில் இடம் இருப்பது நிச்சயம்.

சகோதரி! நீ சிறிது காலம் என்
கணவருக்குப் பெண்டாக இருந்த
தைக் கொஞ்ச காலத்துக்கு முன்பா
கத்தான் தெரிந்து கொண்டேன்.
உன்னைப் பற்றி என் அத்தை
ரொம்பவும் உயர்வாகச் சொன்
னார். அவர்தான் உன் முகவரியை
யும் சம்பாதித்துக் கொடுத்தார்.

சகோதரி! என் கணவர் எனக்கு
மிகவும் சவுகரியங்களைச் சம்பா
தித்துக் கொடுத்துவிட்டுத்தான்
போயிருக்கிறார். நான் சௌகரிய

**ரொம்ப அழகான பெண். செம்பருத்திக் கொடி மாதிரி**

மாக இருக்கிறேன். நீ எப்படி
என்று எனக்குத் தெரியாது. உனக்
கும் ஒரு பெண் குழந்தை இருக்கிற
தாக அறிகிறேன். உன் பொருளா
தார நிலைமை எனக்குத் தெரிய
வில்லை. அதோடு என் கணவர்
நியாயமான முறையில் உனக்கு
வழி செய்து வைத்து 'தலாக்' செய்
திருப்பார் என்று எனக்குத் தெரி
யும். அவர் மரணப் படுக்கையில்
ஸ்மரணை இழந்து இருந்தபோது
உன் பெயரைப் பல முறை உச்சரித்
ததை நான் பலமுறை கேட்டேன்.

உனக்கு நான் ஏதேனும் செய்ய
வேண்டும் என்று இன்ஷா அல்
லாஹ் நினைக்கிறேன். எனக்குள்ள
ரொக்கப் பணத்தில் பாதியான
ஐந்து லட்சத்தை உனக்குத் தர
வேண்டும் என்று என் மனம்
சொல்கிறது.

எந்த வழியாக யார் மூலம்
பணத்தை எந்த வகையில் அனுப்ப
வேண்டும் என்பதைத் தயவு
செய்து எழுத வேணுமாய்க் கேட்
டுக் கொள்கிறேன்.

இறைவனுக்கு முன்னால்
நானோ, என் கணவரோ நீயோ
எந்த அச்சமும் இல்லாமல் தீர்ப்பு
வழங்கும் நாளில் நிற்க வேண்டும்
என்பதே என் ஆசை. தயவு செய்து
என் வேண்டுகோளை நீ ஏற்றுக்
கொள்வாய் என்று மனப்பூர்வமாக
நம்புகிறேன். உன் சகோதரி என்கிற
முறையில் கேட்டுக் கொள்கிறேன்.
நல்ல பதிலை எதிர்நோக்கும்,

உன் சகோதரி யாசுமின்....."

கடிதத்தைப் பெட்டியில்
போட்ட பிறகுதான் யாசுமின்
மனம் சாந்தி அடைந்தது.

சரியாகப் பத்தாம் நாள் பாத்தி
மாவிடம் இருந்து பதில் வந்தது.

அன்பான அக்கா,

இறைவன் உங்களுக்குச் சகல சவு
கரியங்கள் தந்தருளட்டும். உங்கள்
கடிதத்தைப் படித்து திக்பிரமை
அடைந்தேன். அக்கா, உங்களுக்குத்
தான் எத்தனை பெரிய மனசு. மனு
சர்கள் இப்படியும் இருக்கிறதை
நினைக்க எவ்வளவு சந்தோஷமாக
இருக்கிறது. அக்கா. தங்கள் கணவர்
என்னை மணந்ததும் எங்களுக்கு
ஒரு பெண் குழந்தை (பெயர்
கஜீதா) இருக்கிறதும் உண்மை.
இரண்டு பேரும் மனசு ஒத்து
'தலாக்' பண்ணிக் கொண்டோம்.
தங்கள் கணவர் எனக்குப் போது
மான சவுகரியங்கள் செய்த பிறகே
'தலாக்' செய்தார். நான் சந்தோஷ
மாக இருக்கிறேன்.

அக்கா என்னை தயவு பண்ணி
மன்னியுங்கள். தங்கள் பணம் எனக்
குத் தேவைப்படும் நிலைமை
இல்லை. அது, எனக்கு உரியதும்
அல்ல. எனக்கு உரிமையில்லாத
பணத்தைப் பெறுவது 'ஹராம்'
அல்லவா அக்கா?

தயவு செய்து என்னை மன்னி
யுங்கள். அக்கா தங்களை நினைக்க
நினைக்க எனக்கு அழுகை வருகி
றது. அக்கா இக் கடிதத்தை அழுது
கொண்டுதான் எழுதுகிறேன்
அக்கா. நீங்கள் ரொம்பவும் பெரிய
வர் அக்கா.

கடவுள் உங்களுக்கு ஒரு குறை
யும் வைக்க மாட்டார்.

உங்கள் சகோதரியாக என்றும்
இருக்க ஆசைப்படும்,

பாத்திமா.

கடிதம் பல இடங்களில் ஈரம்
பட்டு எழுத்து கலங்கி இருந்தது.
பாத்திமாவுக்கு எந்த வகையில்
பணத்தைச் சேர்க்கலாம் என்று
யோசிக்கலானாள் யாசுமின் அக்கா.

▲

www.padippakam.com


Drape yourself
in the latest and
the most fashionable



*Exclusive range of salwars, fancy tops, jeans, ghagras, chaniacholis, cosmetics and accessories*

Wink • BOUTIQUE

33 D B Road, R S Puram,
Coimbatore - 641 002

ALL MAJOR CREDIT CARDS ACCEPTED




படிப்பகம்

www.padippakam.com

ஓம் ஸ்ரீ நடனகோபாலாய நம:

அனைவருக்கும் மங்களகரமான பொங்கல் வாழ்த்துக்கள்

**For Traditionally Reputed and Distinctive**



RANI. V. SUNDAR RAO
FOUNDER OF RANEE SAREES

# RANEE SAREES
# SUNGUDI SAREES
# &
# R.S.S.
# SUNGUDI SAREES

Please Visit

# Ranee Sarees (A/C)
# SHOW ROOM

## பத்மாவதி டெக்ஸ்டைல்ஸ்

76, தெற்கு மாசி வீதி, மதுரை - 625 001.

☎ கடை : 24688
வீடு : 535650

## ராணி சாரீஸ் சுங்குடிப் புடவைகளில்

கீழ்கண்ட இரண்டு உத்திரவாதமுள்ள துணி லேபிலும், R.V.S. போட்டோ ஸ்டிக்கரும் உள்ளதா என்பதைக் கவனித்து வாங்குங்கள். ராணி சாரீஸ் சுங்குடிப் புடவைகள் சலவைக்கும் சாயம் போகாது என்பதற்கு உத்திரவாதம் அளிக்கிறோம்.

எங்களதுசேலையின் அடித்தலப்பில்

RANEE SAREES
R.S.S.
MADURAI-20.

துணி லேபிளும்

சேலையின் மேல்பாகத்தில்



RANI.V.SUNDARAO
FOUNDER OF
"RANEE SAREES"

"ராணி சாரீஸ்"
"RANEE SAREES"
MADURAI
SPECIAL QUALITY
COLOURS ARE
GUARANTEED
FOR DHOBI WASH

R.V.S. போட்டோ ஸ்டிக்கரும்

**1st** குவாலிடி
குறைந்த விலையில் சூப்பர் டிசைனில் பல வர்ண கலர்களில் தயாரிக்கப்பட்டது

**R.S.S. சுங்குடிப் புடவைகள்**

RSS
MADURAI

R.S.S. சுங்குடி புடவைகள் அடித் தலைப்பில் மேற்படி முத்திரையும் உள்ளதா என்பதை பார்த்து வாங்கவும்

☛ குறிப்பு : மற்றவை நம் தயாரிப்பு அல்ல



படிப்பகம்

www.padippakam.com



# ராம்... ராம்...

பொன்னீலன்

நடுச்சாமம் ஆகியும் அண்ணாசாமிக்குத் தூக்கம் வரல்ல. கைகள் இரண்டும் தலைக்கு அடியில் மடங்கிக் கிடக்க, தூக்கி நிறுத்திய இடது முழங்கால் மேலே வலதுகால் யோசனையோடு ஊசலாட, மண்டிக் கிடக்கிற இருட்டுக்குள்ள முங்கிப்போன காந்தி படம் வாசப்படி மேலே... சுவர்ல... கண்ணுக்குத் தட்டுப்படுதான்னு வெறிச்சுப் பார்த்தபடி மல்லாக்கப் படுத்துக் கிடந்தார். அங்குமிங்குமாத் திடுக், திடுக்குன்னு கிளம்பும் நாய் குரைப்புக்கள், திமுதிமுவெனத் தெருவில கடந்துபோகும் காலடி ஓசைகள், இறுக்கமான வார்த்தைகள்... குரூரமான சிரிப்புக்கள்... இவைகளுக்குப் பின்னணியாகச் சுடுகாட்டுத் திக்கிலிருந்து வரும் சாக்குருவியின் சோகமான அழுகை...

"...கேள்விப்பட்டதெல்லாம் நிசந்தானா? அறிகுறிகளைப் பார்த்தா அப்பிடித்தானே தோணுது! சாதிக் கலவரப் பேயி இங்கேயும் நுழைஞ்சிடும் போலிருக்கே... பகவானே..." வெம்பிப் பெருமூச்சு விட்டார் அண்ணாசாமி.

எண்பத்தி நாலு வயசாகுது அவருக்கு. இதுவர சாதிக் கலவரம் இந்த ஊருக்குள்ள நுழைஞ்சதில்ல... சாதிக் கலவரத்தில எந்தப் பெண்ணும் தாலியறுத்ததில்ல... இப்பிடிச் செத்தவங்கள நெனச்சி நடுச்சாமத்தில வெடிச்சுக் கிளம்புமே மனச அறுக்குற ஓலம்... இந்த ஊர்ல அது இதுவர கிளம்பினதில்ல. 'பக்கத்து ஊர்கள்ல சாதிக் கலவரம் வெடிச்சா அடைக்கலந் தேடி சனங்க இங்கதான் ஓடி வருவாங்க. சமாதானம் பண்ண என்னயத்தான் கூப்பிடுவாங்க... இன்னிக்கி... என் குடும்பமே கலவரத்துக்குப் பயந்து வேத்தூருக்கு ஓடிட்டுது.. பாபூ... ஒங்க தொண்டன் என்கிற தகுதிய இழந்திடுவேனா!'

கண்ணீர் பெருகிச் செவிகளில் வழிய, அவர் ஏக்கத்தோடு மௌனமாகக் கிடந்தார்.

தன் கடந்த கால வாழ்க்கை அவர் நினைவில் நிழலாடியது.

தான் சந்தைக்குப் பருத்தி போட வண்டிகொண்டு போனது, தற்செயலாக நாற்சந்தியில் அன்னியத் துணி எரிப்புக் கூட்டத்தை உத்துப் பார்த்தது, பெயர் தெரியாத அந்த தேச பக்தரின் உணர்ச்சியில சிக்கி உடுத்தியிருந்த வெளிநாட்டு கிளாஸ்கோ மல்வேட்டியை அவிழ்த்து நெருப்பில் வீசிவிட்டு, யாரோ ஒரு தொண்டர் கொடுத்த, முரட்டுக் கதர் வேட்டியைக் கட்டிக் கொண்டது... தேச பக்திக் கனல் பற்றி காந்திஜியின் அரிசனத் தொண்டில் ஈடுபட்டது... உள்ளூர் அரிஜன சகோதரன் கருப்பண்ணன் வீட்டில் சாப்பிட்டு ஊரார் கிட்ட உதைவாங்கிப் பக்குவப்பட்டது... மதுரை தமுக்கம் மைதானத்தில காந்திமகானைக் கண்ணாரக் கண்டுகளிச்ச ஜனத்திரள்ல தானும் கரைஞ்சுபோனது... பிறகு வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் தடியடிபட்டு ஜெயிலுக்குப் போனது... தேச விடுதலையோடு வெடிச்சு உலகையே நடுநடுங்க வச்ச மதக் கலவரத்தை அணைக்க ஊர் ஊராக அலைஞ்சது... எல்லாமே கனவுதானா?

"பாபூ... நவகாளிய விடவும் ஒரு கலவரமா? தேசப் பிரிவினையில் ஏற்படாத பயங்கரமா? தன்னந்தனியாத் துணிஞ்சு போனீங்களே! இருட்டுக்குள்ள விளக்குபோல எல்லாருக்கும் வெளிச்சங் குடுத்தீங்களே! நூறு மதமும் ஆயிரம் ஜாதியுமாப் பிரிஞ்சு கெடக்கிற இந்த சனங்களச் சேர்ந்து வாழ வழிகாட்டினீங்களே! பாபூ, எங்ககிட்ட இப்ப அந்த வெளிச்சம் இல்லியா? எங்க பார்த்தாலும் இருள் மண்டிக் கிடக்குதே! எங்க ஒளியே, நீ எங்கே போன?" புலம்பிக்கிட்டே படுத்திருந்தார் பெரியவர்.

திடீரென ஒரு ஓலம். குத்துப்பட்டு அலறுவது போல... என்ன சத்தம் இது! சே, இந்த நாய்ச் சனி

www.padippakam.com

யனுக்கு ஊளயிட வேற நேரமே கிடைக்கல் லியா.... இது என்ன நிசப்தம்... ரொம்ப பயங் கரமாயிருக்கே... காதத் தீட்டி அண்ணாசாமி கூர்ந்து கவனிக்கிறார்.

திமுதிமுவென ஆளுக தெருவில ஓடுற சத் தம். பூமி நடுங்குது. காத்து நடுங்குது. அண் ணாசாமி மனமும் நடுங்குது. தெரு முழுவ





படிப்பகம்

www.padippakam.com


# TAMILNADU

## The land of giant temple towers, and


# THE TOWERING INDUSTRIAL GIANT...

# SPIC.

*Matching the glory and splendour of the land through several giant strides in the industrial scene.*

*SPIC, the legendary pioneer in the fertiliser industry, has over the years diversified into multi-pronged operations viz., Biotechnology and Seeds, Shipping, Project Management Services, Engineering & Construction, Heavy Chemicals, Fine Chemicals, Petrochemicals, Drugs & Pharmaceuticals and Electronics — all of which have enabled SPIC to make a significant contribution to the Nation's industrial growth.*

*SPIC, the top-notch conglomerate with dynamic vitality and vision is poised for yet some more spectacular achievements.*




**SPIC**

**Group Companies**




படிப்பகம்

www.padippakam.com

HAPPY PONGAL

## THE PRIDES OF TEMPLE CITY

- ★ A/C DINING & CONFERENCE HALL AT DINDIGUL ROAD. Ph: 24087
- ★ CATERER'S FIRMS AT GOPALA KOTHAN St., Ph: 26549
- ★ MESS AT DHANAPPA MUDALI St., Ph: 26549
- ★ HIGH CLASS REFRESHMENT THE MODERN RESTAURANT DELUXE AT HOTEL DUKE BUILDING, NORTH VELI St., Ph: 33757

VMS MR

**47** Years of Tireless Service

# THE MODERN RESTAURANT

160, Dindigul Road,
Madurai - 625 001.
Phone: 543757.

FOUNDER. VMS



**WHERE QUALITY IS A WAY OF LIFE!**

YOURS

# பாண்டெக்ஸ்

## கைத்தறியின் கை வண்ணங்கள்

### பாண்டெக்ஸ் துணிவகைகள்

- ✤ பட்டு சேலைகள்
- ✤ பாலியெஸ்டர், காட்டன் சேலைகள்,
- ✤ வேட்டிகள், சர்ட்டிங்ஸ்,
- ✤ கைலிகள், படுக்கை விரிப்புகள்,
- ✤ தலையணை உறைகள் டவல்கள்,
- ✤ பனியன்-ஜட்டிகள், ரெடிமேட்
- ✤ சட்டைகள், சுரிதார் வகைகள்,
- ✤ மற்றும் ஃபர்னிஷிங்குகள்.

விழாக்காலங்களில் சிறப்பு தள்ளுபடி 20% to 50%

**எமது கிளைகள்:**

பாண்டிச்சேரி. காரைக்கால். மாஹே, ஏனாம், மன்னார்குடி, மதுரை, சென்னை(தி.நகர்), சென்னை(மண்ணடி), கல்கத்தா, கொச்சின், திருத்துறைப்பூண்டி, கும்பகோணம். கோயம்பத்தூர், கடலூர், நெய்வேலி (டவுன் ஷிப்), விழுப்புரம், நாகர்கோயில், சேலம், சிதம்பரம், நாகூர், ராஜபாளையம்.

Gv graphics Ph:41191

தலைமை அலுவலகம்: **புதுவை மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கம்**
தொழிற் பேட்டை, தட்டாஞ்சாவடி, புதுவை-9.



படிப்பகம்

www.padippakam.com

தும் நாய்க் குரைப்பு...

"எங்க ஓடுறானுக? அந்த எளிய துக ஏதாவது சிக்கிக்கிட்டுதா?

படக்குன்னு உடம்பை உயர்த்தி எந்திரிக்கப் பார்க்கிறார். எண்பத்தி நாலு வயசு முதுமை அவரக் கீழே தள்ளுது. சிரமப்பட்டு ஒரு பக்கமா புரண்டு ரெண்டு கையையும் ஊனி எந்தி க்கிறார். தலை சுத்தி அவரக் குப்புறத் தள்ளுது. சுவர்ல கையை ஊனி சமாளிக்கிறார். ஸ்விட்சப் போட்டார். விளக்கு எரியல்ல. தேடித் தடவித், தடிச்சம்ப எடுத்து, வாசலத் திறந்து, வெளியே வர்ற துக்குள்ள தெருவே அடங்கிப் போச்சு. நாய்க சத்தம் சோளக் காட்டுக்குள்ள கேக்குது. வீடுகள்ல யும் ஒண்ணுலகூட விளக்கில்ல. ஆனா பாதி திறந்த ஜன்னல்கள்ல யும் கதவுகள்லயும் ஆளுக நிக்கிறது தெரியிது...

"சித்தப்பா."

நாலாவது வீட்ல இருந்து ஒரு உருவம் துண்டப் போர்த்திக்கிட்டு வெளியே வருது.

"வாப்பா ராமலிங்கம். ஒன்னத் தேடித்தான் வர்றேன்." சொல்லு முன்னே குரல் கம்முது அண்ணா சாமிக்கு. ராமலிங்கமும் காந்தியச் சிந்தனையில் ஊறினவந்தான். ஒரு காலத்தில் அண்ணாசாமியோட வலதுகை அவரு. உள்ளூரில் ஆசிரி யராயிருந்து, சமீபத்தில்தான் ஓய்வு வெற்றவர். அவரச் கட்டிக்கிட்டு அழணும்போலிருந்தது அண்ணா சாமிக்கு. தன்னக் கட்டுப்படுத்திக் கிட்டார்.

"ஒரு கூட்டம் சாதிப் பேயி இந் தப் பக்கமா ஓடிச்சே... அதுதான்..." அண்ணசாமிக்குத் தொண்டைய அடைத்தது. செருமினார்.

"இந்த வயசில வெட்டுப்பட்டுச் சாகணும்னு தலையெழுத்தா, பேசாம வீட்டுக்குப் போங்க!" அடிக் குரலில் உறுமினார் ராம லிங்கம். "சித்தப்பா, வெள்ளம் அணைதாண்டி வருது. தடுக்க முடி யாது! நேத்து அவனுக செய்தது மகாதப்பு. நம்மாளுக ரெண்டு பேரும் பஸ்சுக்காகக் காத்து நின்ன வங்க. ரொம்ப அப்பாவிகளாம். ரெண்டு பேரையும் ஓட ஓடத் துரத்தி வெட்டியிருக்கானுக..."

ராமலிங்கம் வாயிலிருந்து 'நம்மா ளுக' என்ற வார்த்தையை அண் ணாசாமி எதிர்பார்க்கவில்லை. அதிர்ந்து வாய் பிளந்தார். "என்ன பேசுறப்பா நீ?"

"ரெண்டு பக்கமும் தப்பு இருக்கு சித்தப்பா. ஆனா நேத்து..."

கடுமையான கோபம் அண்ணா சாமிக்கு. ஆறடி உயரக் கருப்பு உடம்பு நடுங்கியது. "நேத்து அவன் செய்வான், முந்தாநாள் இவன் செய்வான். நியாயம் பார்த்து ஒரு பக்கம் சேருவ நீ... ஆக அழிஞ்சு போறவன்...? என்னப்பா நீ, இது தான் காந்தியமா?

"என்ன சித்தப்பா சொல்றிய?"

"ரெண்டு பக்கமும் ஒரே ரெத்தம் தாண்டா ஓடுது!" அவர் கத்தினார். "ரெண்டு பக்கம் பத்தி எரியறதும் ஒரே நெருப்புத்தான். ஜாதி வெறி நெருப்புல வெந்து சாம்பலாகுறது வீடும் வைக்கப்போரும் மட்டுமா? நம்மோட மனுசத்தன்மைடா! ஆயி ரமாயிரம் வருசமாப் பார்த்துப் பார்த்து வளர்த்தோமே... அந்த மனு சத்தன்மை! அத அழிய விடலாமா?"

"அதுக்கு நாம என்ன பண்ண முடியும்?" ஒட்டும் உறவும் இல்லா மல் ராமலிங்கம் பதில் சொன் னாரா, படுபயங்கரமாகக் கோபம் வந்திடிச்சி அண்ணாசாமிக்கி. கிழச் சிங்கம் உறுமுது:

நெருப்ப நெருப்பால அணைக்க முடியாதுடா தம்பீ, குளிர்ச்சியால தான் அத அணைக்க முடியும்! நெருப்புப் பிடிக்காத தூய்மையான அன்பாலதான் முடியும். நெருப்பு அந்தரத்தில எரியாது. எந்தப் பக்கம் நீ சேர்ந்தாலும் அதுக்கு விறகாயி டுவ. மனசுக்குள்ள நினைச்சாக்கூட அது விடாது. நெருப்பு நடுவே, நெருப்புப் பிடிக்காம நிக்கிற ஆற் றல்... அதுக்குள்ள நின்னு நெருப்புப் பரவாமத் தடுக்கிற ஆற்றல்... அது தாண்டா காந்தியம்! ஒரு காந்தியவா தியா இருந்திட்டு 'நம்ம'ங்கிற சொல்லப் பயன்படுத்திட்டியே..."

"இப்ப என்ன செய்ய போறீங்க?" ராமலிங்கத்தின் குரல் கம்மியிருந் தது.

"நான் காந்தியவாதி. ஊர் அம்மன் கோயில் முன்னாடி நாளயில இருந்து சமாதானத்துக்காக உண்ணா நோன்பு இருக்கப்போ றேன்..." முன்பின் யோசிக்காம டக் கென்று சொன்னார் அண்ணாசாமி.

எதிர்ப்பக்கமிருந்து நாலஞ்சு பேர் வர்றது தெரிஞ்சது. அதட்ட லான பேச்சு. முரட்டுத்தனமான நடை... உறுமல்... அதட்டல்... நெருங்கி வரவர அவங்க கைகளில் அரிவாள்களும், விறகுக் கட்டைக ளும் இருக்கிறது மங்கலாத் தெரி யிது... கொஞ்சம் முன்னாடி ஓடி னானுகலே -அவனுகதான்... அவங் கள வழி மறிச்சார் அண்ணாசாமி.

"எங்கடாப்பா போயிட்டு வர் றீக?"

"........ பயலுக ரெண்டுபேரு டவுன்ல இருந்து ஊருக்கு நடந்து வந்துக்கிட்டிருந்ததாகத் தகவல் கிடைச்சுது தாத்தா. ஓடிப் போய்ப் பார்க்கிறதுக்குள்ள காட்டுக்குள்ள பூந்து தப்பிச்சுட்டானுக. நாயிக.... மைனர் செயின், கைக்கடிகாரம், பைக்கு, டி.வி... நாய்களோட திமிர இதோட அடிச்சிப் போடுறம்பா ருங்க!

நொறுங்கிப் போனார் அண் ணாசாமி. குற்ற உணர்வு, கூச்ச உணர்வு கொஞ்சங்கூட இல்லாம எங்கிட்டவே இப்புட்டுத் தோர ணையாப் பேசுறானுகளே, அப்ப நான்... நான் ஒண்ணுமே இல்லியா?

"தப்புடா" குரல் தழுதழுக்கக் கெஞ்சினார் பெரியவர். "இந்த மண்ணுல நம்மோட முளைச்சி, நம்மோட வளர்ந்தவண்டா அவன். நம்ம சகோதரன்!"

"போங்க தாத்தா!" நாலாமவன் கேலியாக அரிவாளை ஆட்டி னான். "ஓங்க சமாதானமெல்லாம் எடுபடாது!"

பேசிக்கொண்டே அவர்கள் போவதை ஏக்கத்தோடு பார்த்துக் கிட்டு நின்னார் அண்ணாசாமி.

"ராமலிங்கம்!"

"சித்தப்பா"

"நாளகாலையில நான் தொடங் குற உண்ணாவிரதத்துக்கு நீ ஒரு உதவி செய்யணும். செய்வியா.

"என்ன உதவி?"

"வேற ஒண்ணுமில்லே... நான் உக் கார்றதுக்கு நீதான் பாய் தரணும். ஆனா ஒரு நிபந்தனை!"

"என்ன?"

"நீ தரும்போது உன் மனசில நீ இன்ன சாதிக்காரன் என்கிற உணர்ச்சி ஒரு அணுகூட இருக்கப் படாது!"

'.......'

"நல்லா யோசிச்சுக்க. அப்பிடிப் பட்ட மனநிலை உனக்கு வரு மானா எங்கிட்ட வந்து சொல்லு. காலம்பற எட்டு மணிக்கு மாரியம் மன் கோயில் முன்னால உன் பாயி லதான் உக்காருவேன். இல்லன்னா தரைதான்.... சரி வர்ரேன்!"

வீட்டைவிட்டு வெளியே வரும் போது அண்ணாசாமி இப்படி ஒண்ணும் யோசிச்சிருக்கல்ல, தற் செயலாகப் பேசி... பேச்சு வளர்ந்து... இப்போ மனசுக்குள்ளே ஒரு வேகம்.... சொன்னதைச் செயல் படுத்தியே தீர்றதென்கிற வைராக்கி யம்..... தன்னந்தனியாத் தடிக்கம்ப ஊனிக்கிட்டு ஒடுக்கப்பட்ட உடன் பிறப்புக வாழுற பகுதிக்கு நடந் தார். அங்கேயும் அவருக்கு ஒரு சீடன் உண்டு. கருப்பன் என்கிற கருப்பண்ணன். ராமலிங்கம்போ லவே அவரும் ஆசிரியர் தொழில்ல இருந்து சமீபத்திலதான் ஓய்வு பெற்றவர்.

".......பாபூ, ஏதோ நீங்க தந்த துணிச்சல்ல களத்தில இறங்குறேன். வெற்றியோ, தோல்வியோ - லாபமோ, நஷ்டமோ.... எல்லாமே உங்க காலடியில...."

தன் வீட்டு வாசப்படிக்கு மேலே மாட்டியிருக்கிற காந்தியோட புன் னகை முகம் அவர் மனசில பளிச்

www.padippakam.com

சின்னு தெரியிது. மனசில புதிய தைரியம். பெரிய தெருவைத் தாண்டி மாரியம்மன் கோயில் முன்னே போனார். ஊன்று கோலை இரண்டு கையாலயும் புடிச்சிக்கிட்டு கண்கள மூடினார்..... கோயிலினுள்ளும் காந்திதான் தெரிகிறார்.... மனசில மேலும் தெளிவு....

அம்பேத்கர் நகருக்குள்ள நுழையும்போது அவர் மனம் சலனமற்று ஸ்படிகம்போல் இருந்தது.

"யாரது?"

"நான்தான்... அண்ணாசாமி"

"இங்க என்ன வேலை?"

"உங்களையெல்லாம் பார்க்கத்தான்"

"ஏன்? நாங்க இன்னும் உயிரோட இருக்கிறமான்னு பார்க்கவா? போம்வே வெளியே!"

"அதுக்கு வரல்ல தம்பிகளா...." பெரியவர் குரல் மென்மையாக ஒலித்தது." நாம் சமாதானமா வாழ ஏதாவது வழி கிடைக்குமான்னு பார்க்கத்தான் வந்திருக்கேன்!"

இருட்டுக்குள்ள இருந்து ஏழெட்டுபேர் வெளிப்பட்டு அவரைச்

## உங்க சமாதானத்துக்கு இனி அர்த்தமே இல்ல!

சூழ்ந்தாங்க. கருஞ்சிறுத்தைகளைப் போல..... கண்களில் கரு நெருப்பு.... ஆயிரமாண்டுகள் மண்ணுக்கு அடியில் அமுங்கி அமுத்தங்கண்ட கருப்பு அக்கினி...

"அஞ்சு நிமிசத்துக்கு முன்னதான் எங்க ஆளுக ரெண்டுபேரைக் கொலை செய்ய ஒங்க ஆளுக அருவா வேல் கம்போட தொரத்தியிருக்கானுக... கிழவா என்ன வேவு பார்க்கிறியா?"

"போ கிழவா வெளியே!" விடலைப் பையன் ஒருவன் பிடிச்சுத் தள்ள அண்ணாசாமி தடுமாறிக் கீழே விழுந்தார். வலது தோள்பட்டையிலும் முழங்கையிலும் நல்ல அடி. ஆனால் அவருக்கு வலிக்கல்ல. சந்தோஷமாககூட இருந்தது. காலம் காலமாக இந்த சகோதரர்களுக்குச் செய்யப்பட்ட கொடுமைக்கு ஓரளவுக்காவது பரிகாரம் செய்ய முடிஞ்சுதே என்கிற நிறைவு. சிரமப்பட்டு நிமிர்ந்து தரையிலே சம்மணமிட்டு உக்கார்ந்தார். சுற்றிலும் கால்கள் ... இருண்ட கால்கள் ... "லே... லே... லே .... நாய்க்கிப் பொறந்த பயலுகளா, இது

முடியல்ல. நம்ம ஊரும் ஜாதி வெறிக்குப் பலியாகிறதா? பிறகு நாம வாழுறதில என்ன அர்த்தம் இருக்கு?" அண்ணாசாமியால் பேச முடியல்ல. அழுகையை பலவந்தமாக விழுங்கினார்.

இருவரும் மாரியம்மன் கோயில் வரை மௌனமாக நடந்தார்கள்.

தொண்டையைக் கனைத்தார் கருப்பண்ணன். "எத்தனையோ நூற்றாண்டுகளா எங்கள அடக்கி ஒடுக்கினீங்க. அடிமைப்படுத்தினீங்க. அடங்காதவங்களை நெருப்புல போட்டீங்க — இன்னிக்கி நாங்க ரொம்ப சிரமப்பட்டு எந்திரிக்க முயற்சி பண்ணினா இப்பவும் அடிச்சி, ஒடுக்கி, அவமானப்படுத்தி - சொல்லுங்க, சமாதானம் என்கிற வார்த்தைக்கு என்ன அர்த்தம்? நாங்க இன்னும் அடிமையாவே இருக்கணும் என்கிறதா? இல்ல! இன்னிக்கி மனுசத்தனம் என்கிறது எங்களோட சேர்ந்து நிக்கிறது தான்! ஒங்க சமாதானத்துக்கு இனி அர்த்தமே இல்ல! அது எங்க வளர்ச்சியத் தடுக்குறதுக்கு நீங்க செய்யிற சூழ்ச்சி!"

என்னடா வேலே? நிறுத்துங்கடா!" தூரத்தில் கருப்பண்ணனின் பெருஞ்சத்தம். தொடர்ந்து இளைஞர்களோட ஆரவாரம். நாய்களோட குரைப்பு.

"இந்தாவாராரு ஒரு காந்தியவாதி! இவரையும் கொல்லுங்கடா!

"காந்தியந்தாண்டா நம்மக் கெடுத்தது!"

இளைஞர்களை இடித்துத் தள்ளிவிட்டு உள்ளே நுழைந்து அண்ணாசாமியைத் தூக்கி நிறுத்தினார் கருப்பண்ணன். அவர் கைத்தடியையும் ஒரு இளைஞனிடமிருந்து பிடுங்கிக் கொடுத்தார்.

திட்டிக்கிட்டே கலைந்து போனாங்க இளவட்டங்க.

"இந்த நேரம் நீங்கவரலாமா? ஊர் நெலமை மோசமா இருக்கே!" கருப்பண்ணன் மிகுந்த விசனத்தோடு அண்ணாசாமியுடன் நடக்கத் தொடங்கினார்.

"ஒன்னத் தேடித்தாம்பா வந்தேன்".

"என்னத் தேடியா?"

"ஆமாப்பா. நிலைமையப் பார்த்துட்டு என்னால சும்மா இருக்க

அண்ணாசாமி வாயடச்சுப் போனார். அந்த 'நீங்க' என்கிற வார்த்தை அவரைத் அவரைத் தீயாய்ச் சுட்டது.

"சரி, நீங்க தேடி வந்தது எதுக்கு?"

அண்ணாசாமி கனிவோட சொன்னார்:

"ஊர் சமாதானத்துக்காக நாளை நான் உண்ணாவிரதம் தொடங்குறேன்பா... நம்ம அம்மன் கோயில் முன்னால. முழு மனசோட நீ என் கையைப் பிடிச்சு உக்கார வைப்பியா? முழு மனசோட- அதுதான் முக்கியம்! நல்லா யோசிச்சுக்க. மனசிருந்தா வா. நம்ம ராமலிங்கத்துக்கும் சொல்லியிருக்கேன். ரெண்டு பேரும் வராட்டாலும் நான் தொடங்கத்தான் போறேன். கருப்பண்ணா, தீ இருக்கத்தான் செய்யும்! உலகத்த விட்டு அது ஒருநாளும் போகாது! ஒரு ரூபத்தில இல்லைன்னா இன்னொரு ரூபத்திலே வாழும்! அத்துமீறிப் பரவவிடாமத் தடுக்க நாம இருந்தா.... அந்தத் தீயே நம்மள வளர்க்கும்பா... வாப்பா...."

கருப்பண்ணன் பதில் சொல்லாதது பற்றியும் அண்ணாசாமி வருத்தப்படவில்லை. தன் அளவில் அவருக்கு ரொம்பத் திருப்தி. தோள்பட்டையில கசிஞ்சிக்கிட்டிருந்த காயத்தத் தொட்டுப் பார்த்தார். இந்த வயசிலயும் நமக்கு ஒரு விழுப்புண்ணா! ஆனந்தமாக முறுவலித்தபடி வீட்டுக்கு நடந்தார். கட்டில்ல உக்கார்ந்து வாசலுக்கு மேலே பார்த்தார். இருள் கொஞ்சம் விலகியதுபோல... அந்தப் பொக்கை வாய்க் குமிழ் சிரிப்பு லேசாகத் தெரிந்தது.

"பாபூ.... என்னை ஆசீர்வதியுங்க!"

உடம்பே லேசாகிவிட்டது அண்ணாசாமிக்கு. காயமெல்லாம் மாறிவிட்டது. கட்டில்ல படுத்ததும் தூங்கிப் போனார். ஆனந்த நித்திரை...

யாரோ கதவை மெல்லத் தட்டுவது போலிருந்தது... மென்மையான விழிப்பு. திரும்பவும் கதவு தட்டும் சத்தம். "யார் வந்திருப்பா? ராமலிங்கமா, கருப்பண்ணனா? யார் வந்தாலும் நல்லதுதான். பாபூ..." மனம் பூவாய் மலர்ந்தது.....

மெதுவாக எழுந்து, மெதுவாக... முறுவலித்துக்கொண்டே நடந்து, கதவைத் திறந்தார்.

"யாருப்பா, வா உள்ளே..."

மின்னல் போல ஒளி. என்ன இது? வழுக்கைத் தலையில்... எலும்பு புடைத்த புஜத்தில், நெடிய கழுத்தில்... சரமாரியான வெட்டுகள்.

வாசலிலேயே.... ஒரு பூக்குவியலாய்ச் சுருண்டு விழுந்தார் அண்ணாசாமி.

▲

www.padippakam.com



# CONCRETE BLOCK MAKING MACHINES AND MIXERS


MEC






BEST INDUSTRILIST AWARD
TO Mr. J. WILLIAMS
BY CINEMA KALAI MANDRAM











## MACHINES & ENGINEERING COMPANY


7th St, 385 SANGANOOR MAIN ROAD, RATHINAPURI
NEAR RAILWAY GATE, COIMBATORE-27. PHONE: 530248




படிப்பகம்

www.padippakam.com

உழைத்து
ஈட்டிய உங்கள்
ரூபாய் 500
உருத்தெரியாமல்
சிதறவிடாதீர்கள்
அதை தங்க
கோழிப் பண்ணை
திட்டத்தில்
முதலீடு செய்து
மும்மடங்கு
ஆக்கிக்
கொள்ளுங்கள்




தங்க கோழிப் பண்ணை
ஓர் உரையாடல்

## "முத்து வார்த்தை ஒண்ணொன்னும் முத்துதாம்பா"

முத்து : அண்ணே, பொங்கல் வந்திருச்சில்லே என்னண்ணே விசேஷம்...

மாணிக்கம் : வௌச்சல்லே பணம் வந்திருச்சு, முதலீடுசெய்ய அருமையான திட்டமும் கிடைச்சிடுச்சு

முத்து : தங்க கோழிப் பண்ணை திட்டத்தை தானண்ணே சொல்றீங்க. நான்கூட 40 யூனிட் போட்டிருக்கேன்.

மாணிக்கம் : ஆமாம் அருமையான திட்டம், ரூ.500/- முதலீடு செஞ்சா மூன்று வருஷத்துல ரூ.1500/-தராங்க, அதுவும் பின் தேதியிட்ட காசோலையா..

முத்து : கோழிப்பண்ணை நம்ம கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி தாலுக்காவில் கோவில்பாளையம் பஞ்சாயத்துல, மேட்டுப்பாளையம் கிராமம், காளியண்ணன்புதூர்ல 33 ஏக்கர் நிலத்துல அமைய போவது தெரியுமா..

மாணிக்கம் : [illegible] துணையில்லாம எல்லாமே அதிநூதன எந்திரங்களை, ஹாலந்து நாட்லேர்ந்து வரவைச்சு நிர்மாணிக்க போறாங்களாமே..

முத்து : போன மாதம் தினமணியில் கோல்டன் குரூப் மேலாண்மை இயக்குநர் ஹாலந்துக்கு இதற்காக போயி வந்தாருன்னு போட்டிருந்தது..

மாணிக்கம் : சொன்னபடி செயல்படறதுனால இந்த திட்டம் நல்லாயிருக்கும் சந்தேகமே இல்லே..

முத்து : ஏற்கனவே இந்த கோல்டன் குரூப்பிலே, கோல்டன் ஹில் ப்ராடக்ட்ஸ் இந்தியா லிட்., கோல்டன் அட்வர்டைசர்ஸ் (பி) லிட்., சிறப்பா செயல்பட்டு கிட்டுருக்கில்லே.

மாணிக்கம் : தமிழ்நாடு முழுதும் கிளைகள் சிறப்பா செயல்படுதாம். சரி சரி இப்பவே நானும் நூறு யூனிட் போட்டுறேன். காசோலையை ஜி.எச்.பி. பவுல்ட்ரி இந்தியா லிட் கோயம்புத்தூர்ல மாத்தற மாதிரி தானே எடுக்கனும்.

முத்து : 100 யூனிட்டுக்கான 5% ஊக்கத்தொகை ரூ.2500/- கழிச்சிட்டு அனுப்பிச்சா போதும்மண்ணே..

மாணிக்கம் : சரி.. சரி.. ரொம்ப நன்றிண்ணே,, முத்து வார்த்தை ஒவ்வொண்ணும் முத்துதாண்ணே. எது சொன்னாலும் சரியாகத்தான் இருக்கும் நன்றியண்ணே பொங்கல் வாழ்த்துக்கள்.

முத்து : ஆமாண்ணே, மறுபடியும் சொல்றேன், இதுல முதலீடு செய்ய சரியான நேரம்தான். இந்த தங்க கோழிப்பண்ணை திட்டத்திலே எல்லோரும் முதலீடு செஞ்சா சந்தோசமாக இருக்கலாம். பொங்கல் வாழ்த்துக்கள்..

மாணிக்கம் : ஆமாம். சரி வரண்ணே.

**ஹாலந்து தொழில்நுட்பத்தோடு அதிநவீன தானியங்கி இயந்திரங்களின் செயல்பாட்டோடு நிறுவப்படப்போகும் தங்க கோழிப் பண்ணை திட்டத்தில் முதலீடு செய்யுங்கள்**

## தங்க கோழிப் பண்ணை

**முதலீடோ ரூ.500/-மட்டும் மூன்றே ஆண்டுகளில் மூன்று மடங்காகும் ஒரு நலம் பயக்கும் திட்டம்... அல்லது 18, 27, 36 மாதங்களில் நல்லதோர் தொகையாக பெறும் வாய்ப்பும் உண்டு.**

### திட்டம் 1

| | | |
|---|---|---|
| முதலீடு (யூனிட்1க்கு) | : | ரூ. 500/- |
| காலம் | : | 3 வருடம் |
| திரும்ப பெறும் தொகை | : | ரூ.1500/- |

### திட்டம் 2

முதலீடு (யூனிட்1க்கு) : ரூ. 500/-

கிடைக்கும் தொகை

| | | |
|---|---|---|
| 18ம் மாதத்தில் | : | ரூ. 200/- |
| 27ம் மாதத்தில் | : | ரூ. 400/- |
| 36ம் மாதத்தில் | : | ரூ. 600/- |

**அதிக யூனிட்டுகள் முதலீடு செய்பவர்க்கு அதிரடி ஊக்கத்தொகை**

| | | |
|---|---|---|
| 2 - 4 | : | 2% |
| 5 - 7 | : | 3% |
| 8 - 10 | : | 4% |
| 11க்குமேல் | : | 5% |

**பின் தேதியிட்ட காசோலைகள் உடனுக்குடனேயே**

மேலும் விபரங்களுக்கு

## GHP POULTRRY (INDIA) LTD.

**(A UNIT OF GOLDEN GROUP OF COMPANIES)**

**Admn. Office :** "Selvam Buildings", Post Box No. 1137, 988, Thadagam Road, R.S. Puram (Po), Coimbatore - 641 002. Phone : 438408, 438498, Fax : (91) 422-432386, Grams : "SABOL", Telex : 546 EMPR IN.

**Regional Office :** Blue Diamond, Rajaji Road, Block -19, Neyveli - 607 803. Phone : 22444, 22668. ● No.61, 3rd Main Road, Kasthuribai Nagar, Adayar (Near Adayar Bus Stand), Madras - 600 020. Phone : 4917207.

**Branch Offices :** No. 102, S.M. Complex, Kalavai Road, Arcot - 632 503. ● No.3, Municipal Buildings (Opp. Gandhi Market), Palayamkottai - 627 002. ● B-3, K.B. Mansions, 5 Roads, Salem - 4. ☎ 448747 ● No.2-C, Karthikeyan Road, Arani - 632 301. ● No. 7-A, E.B. Colony, Thiruvalluvar Salai, Dindigul - 624 003. ● No. 2, Raman Lodge, Square Market, Mettur Dam. ● No.10-A/3-2, Hospital Road (Upstair), Opp. Highways Office, Tirukovilur-605757. ● 37B/1, Muthukrishna Street, Gidangal, Tindivanam-604 001. ● C-13, Vikrampuri Colony, Secunderabad - 500 009. Andhra Pradesh.

GOLDEN ADS.



படிப்பகம்

www.padippakam.com



# கடற்கரையில் ஒரு காவிப் பிள்ளையார்

அம்பை

விழிப்பு வந்ததும் அன்று மலாட் போக வேண்டும் என்பது நினைவுக்கு வந்தது. இருநூற்றுப் பத்து எண் பேருந்தைப் பிடித்துப் போகலாம். ஆனால் அது இருதளப் பேருந்து. கொஞ்சம் மெள்ளப் போகும். ஊரைச் சுற்றிச் செல்லும். பத்து நிமிட தூரத்தில் வர்ஸோவாவின் காயல்புரம் போனால் படகைப் பிடித்து அக்கரையிலுள்ள மத்தீவிலிருந்து கிளம்பும் பேருந்தைப் பிடித்துப் பத்தே நிமிடங்களில் மலாட் போய் விடலாம். கடற்கரையைப் பார்த்தபடி காயல் வரை நடக்கும் கொசுறு சுகம் வேறு உண்டு.

முதலில் பாலில்லாத தேநீர் தயாரித்து இரு சொட்டு எலுமிச்சைத் துளிகள் விட்டுக் குடித்தவாறே, தேவையான காகிதங்களையும், புத்தகங்களையும் தோள் பையில் போட்டாள். குளித்து விட்டு, தேன் நிறத்தில் பழுப்புக் கோடுகள் சிலந்தி வலை போல் பிரியும் பதிக் வேலை செய்த ஸல்வார் கமீஸ் அணிந்து கொண்டு, நடப்பதற்கு வாகாகத் தோல் செருப்பைப் போட்டுக் கொண்டு, பையைத் தோளில் மாட்டிக் கொண்டு கிளம்பினாள்.

கட்டிடத்தை விட்டு வெளியே வந்ததும் தெருவைத் தாண்டி அந்தப் பக்கம் போனாள். காயல் புரத்தை நோக்கி நடக்கலானாள். இடது புறம் அடுக்கு மாடிக் கட்டிடங்கள். அவற்றின் தோட்டங்களின் இடைவெளிகள், கார்கள் நிறுத்தும் பகுதியில் உள்ள பெரிய தூண்கள் இவற்றின் ஊடே துண்டு, துண்டாய்க் கடல் தெரிந்தது. மென் நீலமும், சாம்பலும் கலந்த நிறத்தில், காலை வேளை மஞ்சு இன்னும் சூழ்ந்திருக்க, கடல் புரண்டு கொண்டிருந்தது. நடக்கையில், ஒவ்வொரு முறை தெரியும் துண்டுக் கடலும் ஒரு தனி ஓவியம் போல இருந்தது. கட்டிடத்தின் விலாவிலிருந்து நீண்ட துணி உலர்த்தும் கொடிகளிலிருந்து தொங்கிய துணிகள் ஒரு பக்கம் ஆட, வெள்ளைப் படகொன்றின் மூக்கு இன்னொரு பக்கத்திலிருந்து நுழைந்தவாறிருக்கும் ஒரு துண்டுக் காட்சி. ஐந்தெட்டு நடந்து பின் பார்த்தால், பாசிப் பச்சை மாருதியும், சிவப்பு டாட்டா ஸியாராவும் முன்னணியில் இருக்க, சற்றுப் பின்னே, கட்டிடத்தின் கைப்பிடிச் சுவர் மேல், காலையிலேயே கீழே வர வேண்டும் என்று சண்டி செய்துக் கடலைப் பார்த்தபடி அமர்ந்திருக்கும், நீலக் கம்பளிக் குல்லாய் அணித்த குழந்தையின் பின் புறமும், கீழே புல் வெளியில் அதன் தள்ளு வண்டியும், எதிரே நீலக் கீற்றாகக் கடலும் தெரியும் காட்சி. இன்னும் பத்தடி நடந்தால் சிவந்த பூக்கள் மலர்ந்த குல்மோஹர் மரங்களூடே தெரியும் கைப்பிடிச் சுவரில் ஓடிக் களைத்த கறுப்பு நாயொன்று இறைத்தவாறு பரப்பிப் படுத்திருக்க, பின்னால் பாய் மரம் விரித்த படகுகளின் அணிவகுப்பு. வெவ்வேறு தினங்களில் நடக்கும் போது வெவ்வேறு விதங்களில் தெரிந்தது மனதில் உறைந்து போகும் காட்சிகள். இதிலெல்லாம் தான் இந்த நடையின் சுகம்.

கடைசி இரு கட்டிடங்களும் பத்து வருடங்களுக்கு முன் முளைத்தவை. அதற்கு முன்னால் அங்கே ஒரு ஓடு வேய்ந்த பெரிய பங்களா இருந்தது. சுற்றிலும் தென்னை மரங்கள். எப்போதாவது ஒரு மூலையில் முணுக்கென்று மங்கலாக ஒரு விளக்கு எரியும் பங்களா. பேய் பங்களா என்று அதற்குப் பெயர் வைத்து, பேய்க் கதைகள் சொல்லி, இந்தி சினிமா பாணியில், "வர்ஸோவா பங்களாவில் இரவு பதினோரு மணிக்குச் சந்திக்கலாம்" என்று மீசையும், கன்னத்தில் கொட்டைப் பாக்களவு மச்சமும் உடைய, திடகாத்திரமான முரட்டுக் கள்ளக் கடத்தல்காரர்கள் பேசிக் கொள்ளும் வசனங்களை எழுதிய நாடகங்களைப் பகல் பொழுதில் இங்கு அரங்கேற்றம் செய்து, இங்குள்ள பலரின் பள்ளிப் பருவங்கள் கடந்திருந்தன.

கடைசி இரு கட்டிடங்களைத் தாண்டியதும் காயல் பகுதியை எட்டும் வரை கரையும், கடலும் நீண்டு தெரியும். வெய்யில் காலங்க

படிப்பகம்

www.padippakam.com

ில் மூங்கில் கம்புகள் நடப்பட்டு, ின்கள் தொங்கும் வெய்யிலில் லர்ந்தபடி. கடல் பக்கம் தலை யைத் திருப்பியபோது, முந்தைய ாள் பிள்ளையாரைத் தண்ணியில் பாடும் விஸர்ஜன் தினமாக இருந் து என்பது நினைவுக்கு வந்தது. டலில் அமிழ்த்தப்பட்டிருந்த ண்ணற்றப் பிள்ளையார் சிலைக ில் பல, அலைகளால் மோதப் பட்டு, உடைந்தும்; உடையாமலும், ிரிந்தும், நசுக்கப்பட்டும், குப்புற ும், மல்லாக்கவும், பக்கவாட்டி ும், கரையில் விழுந்து கிடந்தன. லைகளும், மகுடங்களும், கால்க ளும், கைகளும், தும்பிக்கை படிந்த தொப்பைகளும் சிதறிக் கிடந்தன. போர் நடந்து முடிந்த ரணகளம் போல் இருந்தது கரை. அத்துடன் ுசைப் பூக்கள் திணிக்கப்பட்டு அமிழ்த்தப்பட்டிருந்த ப்ளாஸ்டிக் பைகளும் காற்றில் பறந்தபடி கரை யெல்லாம். காலையிலும், மாலையி லும் கடற்கரையில் நெடுந்தூரம் டிப் பயிற்சி எடுக்கும் கோலிச் மீனவ) சிறுவர்கள் அவற்றைக் உருவமும் மாறிவிட்டது. கம்பிகள் உள்ளே வளைக்கப்பட்ட, காகிதக் கூழால் செய்த பெரிய, பெரிய ஐந் தடி முதல் பதினைந்திருபதடி சிலை கள். பல்வேறு வடிவங்களில் கணக் கின்றிச் செய்யப்பட்டன. தாமரை மேல் பிள்ளையார், தும்பிக்கைக ளில் மாலைகளை உயரப் பிடித்த படி, இரு புறமும் யானைகள் நிற் கும் பிள்ளையார், சிவ பார்வதியு டன் பிள்ளையார், புல்லாங்குழலு டன் பிள்ளையார், நடனமாடும் பிள்ளையார். என்று கற்பனைக்கேற் றபடி பிள்ளையார். "கைத்தல நிறை கனி அப்பமோடவல்பொரி" பாட் டும், மூஞ்சூறும், மோதகமும் இணைந்த பிம்பங்களாய் மனதில் வரும் பிள்ளையாரையெல்லாம் துடைத்தெறிந்து விட்டு வந்த பிள் ளையார்கள் இவை. விஸர்ஜன் தினத்தன்று மாலையும், இரவும், நெடுக லாரிகளில் பல்வேறு பிள் ளையார் சிலைகள், சினிமாப் பாட்டு, நடனம், ஓட்டகங்கள், குதி ரைகள் இவற்றுடன் ஊர்வலம் வந்து, பல்வேறு பகுதிகளில்

## பிள்ளையார் மல்லாக்கக் கிடந்தார். உடலின் பல பகுதிகள் உடைந்து கம்பிகள் துருத்திக்கொண்டு நின்றன

ாலால் இடறாதபடி ஓடிக் கொண்டிருந்தனர். சிலர் சில துண் களைப் பொறுக்கி எடுத்து, றிது தூரம் கடலில் நீந்திப் போய் அமிழ்த்தி விட்டு வந்தனர்.

இது ஒவ்வொரு ஆண்டும் நடை பெறும் நிகழ்ச்சி. இதற்கு முன்பு ின்னக் களிமண் பிள்ளையார்கள் டலில் அமிழ்த்தி விட்டு வந்ததும் ரைந்து விடும். "கணபதி பப்பா மாரியா, புருசா வர்ஷி லெளகரி ா" (எங்கள் கணபதியே அடுத்த ருடம் சிக்கிரமே வா) என்று த்தி விட்டு வந்து மறந்து விட ாம். இப்போது மற்ற பல விஷயங் ளைப் போல, பிள்ளையாரும் அர யல் கட்சிகள் மற்றும் தனி நபர்க ின் வலிமையின் நிரூபணம் மற் ும் பிரகடனமாகவும், பணமுள்ள ர்கள் கறுப்புப் பணத்தைச் சலவு செய்வதற்கு வாகானவராக ம், ஓலமிட்டுச் சிலர் வலியுறுத் ம் அடையாளச் சின்னமாகவும் ாறிவிட்டார். அதற்கேற்ப அவர் விசைப் படகுகளில் ஏற்றப்பட்டு, கடலில் அமிழ்த்தப்படும். மறுநாள், கரைய மறுத்த சிலைகள் உடைந்து சிதறிய ரணகளமாய்க் கரை.

முன் தினம் மாலையும் வழக்க மான ஊர்வலம் நடந்திருந்தது. "சோலி கே பீசே க்யா ஹை?" மற் றும் "ஜப்பி கோயி லட்கி தேகே..." என்று தொடங்கும் 'ஓலே ஓலே' பாடல் போன்ற பிரம்மச்சாரிக் கடவுளுக்கேற்ற பாடல்களின் ஓலங்களுடன் ஏகப்பட்டக் கணப திகள் லாரிகளில் போயிருந்தனர். கடைசியாக எப்போதும் வரும் அந்தக் காவி வண்ணப் பதினைந்து இருபதடிப் பிள்ளையார் இரவு பனிரெண்டு மணி வாக்கில் வரும். ஒரு பெரிய துணிக்கடைக்காரரின் தரப்பிலிருந்து, அவர் பகுதியிலி ருந்த எல்லா வியாபாரிகளும் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்யும் பிள்ளையார் வைபவச் சிலை. காவி வண்ண எண்ணைப் பூச்சு செய்த சிலை. லாரியில் நேர்வாக்கில் வைக் கப்பட முடியாமல், பக்கவாட்டில் வைக்கப்பட்டபடி வரும் காவிப் பிள்ளையார். உட்கார்ந்த நிலையில் இருக்கும், அதிகப்படியான அலங் காரப் பூச்சுகள் இல்லாத இந்தக் காவிப் பிள்ளையார் தெரு வழியே செல்வது அநேகமாக விஸர்ஜன் முடிவடைவதற்கான அறிகுறியாக இருக்கும். படகில் ஏற்றி, நடுக்கடல் வரை சென்று அமிழ்த்தி விட்டு வருவார்கள். முந்தைய இரவு காவிப் பிள்ளையார் வர வெகு நேரமாகிவிட்டிருந்தது.

நடந்து போகையில் கரை நெடு கச் சிலைத் துண்டுகள் கண்ணில் பட்டன. வர்ஸோவா கிராமத்து நுழைவிடத்தில் மீன்கள் ஏற்றிச் செல்லும் லாரிகள் தயாராக நின் றன. கண்ணைத் துளைக்கும் ஊதா வும், பழுத்த சிவப்பும், பச்சையும், மஞ்சளுமாய், பின் பகுதி இடுக்கில் இறுகச் செருகிய சேலைகளும், பிடித்தமான ரவிக்கைகளுமாய், தலையை இறுக முடிந்து கொண்டை போட்டு, ஒற்றைப் பூவோ, பூச்சரமோ செருகிக் கொண்டு கோலிப் பெண்கள், ஐஸ் கட்டிகள் மேல் வைத்த மீன்கள் உள்ள கூடைகளை லாரிகளில் ஏற்றி, தாங்களும் ஏறிக் கொண்டி ருந்தனர். வியாபாரத்துக்குப் போகும் வேகம்.


லாரிகளைத் தாண்டிப் போகும் போது ஒருத்தி இவளைப் பார்த்து, "லாரியில் ஏறுகிறாயா?" என்பது போல் கையைக் காட்டினாள் சிரித் தபடி. மீன் கூடைகளைச் சுட்டிக் காட்டி, மூக்கைப் பிடித்து நாற்றம் என்று சைகை செய்தாள் இவள். "ஆயிக..." என்று கூவி விட்டுச் சிரித் தனர் அதற்கு. ஒருத்தி பெரிய மீனை எடுத்து ஆட்டி, "உப்பு, பசுமஞ்சள், காரம் போட்டு ஊற வைத்து, தேங் காய், கசகசா வைத்து அரைத்த மசாலாவில் சமைத்துச் சாப்பிட்டுப் பார் தெரியும்" என்று சிரித்துக் கொண்டே கூவினாள் லாரி கிளம் பிப் போக ஆரம்பித்ததும்.

சற்று வேகமாக வீடுகளையும், சிறு கடைகளையும், மீன் காய்கறிச் சந்தையையும் தாண்டி, படகுகள் கிளம்பும் முனைக்குப் போனாள். கூட்டம் அதிகம் இல்லை. சில கிறித்துவக் கோலிக் குடும்பங்கள் அக்கரையில் மத்திவிலுள்ள மாதா கோவிலுக்குப் போகப் பளிச்சிடும் உடைகளில் நின்றனர். ஒரு இளம் பெண்ணின் கையில் மஞ்சள் ஸாடீன் துணியில் பொதியப்பட்ட ஒரு சின்னஞ்சிறு குழந்தை இருந் தது. ஸாடீன் துணியில் குழந்தை அப்புறமும் இப்புறமும் திரும்பும் போது மீன் போல் வழுக்கியது. சிரித்துக் கொண்டே அதன் இளம் தாய் விழாதபடி பிடித்துக் கொண்

www.padippakam.com

டாள். ஏதாவது குடும்ப வைபவத்திற்காக மாதா கோவிலுக்குப் போகிறார்கள் போலும்.

"மரியம், மரியம்" என்று யாரோ அழைத்தார்கள்.



"ஜோஸப் கூப்பிடுகிறான்" என்றாள் ஒருத்தி.

மரியம் என்று அழைக்கப்பட்டவள் குரல் வந்த திக்கை நோக்கி நடந்தாள். ஓரிரு வினாடிகளில் எல்லோரும் அங்கே போயினர். இவளும் சென்று பார்த்த போது, சற்றுத் தூரத்தே இடுக்காக இருந்த கரையில் காவிப் பிள்ளையார் மல்லாக்கக் கிடந்தார். உடலின் பல பகுதிகள் உடைந்து கம்பிகள் துருத்திக் கொண்டு நின்றன. முள் முடி என்றில்லாமல் உடம்பெல்லாம் முள் தரித்துக் கொண்டது போல் கிடந்தது சிலை. நேற்றிரவு ஆழ்கடல் வரை சென்று அமிழ்த்தவில்லை போலும். சுற்றிலும் சாமரம் வீசுவது போல் பறக்கும் ப்ளாஸ்டிக் பைகள்.

கசமுசவென்று சில நிமிடங்கள் பேசிய பின்னர், ஜோஸப்பும், மாதாகோவில் செல்வதற்காக நின்ற இன்னும் சில ஆண்களும் விசைப் படகைக் கிளப்பி, சிதைந்த காவிப் பிள்ளையாரை அதில் வைத்து, கடலுக்குள் விரைந்தனர். வெகுதூரம் போவது தெரிந்தது. காவி வண்ணம் கடலில் அமிழ்வது நிழல் மாதிரித் தெரிந்தது.

அவர்கள் திரும்பியதும், அக்கரை போகப் படகேறினர் எல்லோரும். ஜோஸப்பின் உடை நனைந்திருந்தது.

''என்ன ஜோஸப், நனைஞ்சு போயிட்டியே'' என்று யாரோ சொன்னார்கள்.

"என்ன செய்ய முடியும்? அதுவும்யாரோடோ சாமி" என்றான் ஜோஸப்.

ஒரு பத்து வயதுச் சிறுமி ஏதோ சொல்ல வருவதும், இவள் பக்கம் சைகை காட்டி, 'சொல்லாதே' என்று அவளை ஜாடை காட்டி அடக்குவதும் தெரிந்தது.

அவளை நோக்கி, "துமிபோலா" (நீ சொல்லு) என்றாள்.

அந்தப் பெண் மடமடவென்று அவள் முன் வந்து நின்று கொண்டு, தலையில் கட்டிய ரோஜா வண்ண ரிப்பன் காற்றில் பறக்க, கண்களை மலர்த்தித் தலையாட்டியபடி பேசினாள்.

''அந்த சாமிக்குள்ள இருக்கற கம்பி இல்ல கம்பி, அது மீனோட வாயைக் கிழிச்சிடும். வாயெல்லாம் ரத்தமா, வயிறெல்லாம் ரத்தமா வர மாதிரி மீனைக் கீறி விட்டுடும். அப்பறம்... அப்பறம்... அந்த ப்ளாஸ்டிக் பையைச் சாப்பிட்டா மீன் செத்துடும். தண்ணில மொதக்கும்... "மளமளவென்று சொல்லிவிட்டு நிறுத்தினாள்.

அவள் தோள் மேல் கை வைத்துத் தன் மேல் சாய்ந்து நிற்கும்படி இருத்திக் கொண்டு, ஜோஸப்பைப் பார்த்த போது அவன் கடலை வெறித்தபடி இருந்தான். சிறுமி அவள் மேல் வாகாகச் சாய்ந்து கொண்டு நின்றாள். ▲

www.padippakam.com




புதுச்சேரியில்
பட்டுச்சேலைகளுக்கு
பாரம்பரியப்
பெருமைப்
பெற்ற
நிறுவனங்கள்...

தேர்ந்தெடுக்க
வாருங்கள்..

முத்து சில்க் ஹவுஸ்

314, நேரு வீதி புதுச்சேரி

முத்து டெக்ஸ்டைல்ஸ் பசார்

94 & 96 நேரு வீதி புதுச்சேரி.



விக்னேஷ் அவென்யூ



கங்கா, யமுனா, காவேரி
குடியிருப்பு வளாகம்
பாளையம் பஜார், உறையூர், திருச்சி 3.

சிறப்புகள்

அங்கீகாரம் எண் 37228 / 95
இனிய குடிநீர்
ஒன்று, இரண்டு டிலக்ஸ்
படுக்கையறை குடியிருப்புகள்
லிப்ட் வசதி
வாகனங்கள் நிறுத்த மேல் கூரையிட்ட தனியிடம்
டிஸ் ஆண்டனா
ஆட்டமேடிக் ஓவர்ஹெட் டேங் வாட்டர் லெவல் கண்ட்ரோலர்
ஹால் மற்றும் சாப்பிடும் அறையில் செராமிக்க
டைல்ஸ் பதிப்பு
நகரின் மத்தியில்
பள்ளி, கல்லூரிகளுக்கு அருகில் உள்ளது
LIC,HDFC போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து
கடன் வசதி ஏற்பாடு

தங்களுடைய தேவைக்கு அணுகவும்

விக்னேஷ் பிளாட்ஸ் & உறவுசிங் புரமோட்டர்ஸ்
16. காந்தி சாலை, ஸ்ரீரங்கம், திருச்சி 6.
தொலைபேசி : அலுவலகம் 432677 வீடு 433677 பணி இட அலுவலகம் 467401

VIJAY ADVTG




படிப்பகம்

www.padippakam.com


பிற நிறுவனங்களில் உங்கள் முதலீடு எவ்வாறு உபயோகப்படுத்தப் படுகிறது என்பது தெரியாமலேயே இருந்திருப்பீர்கள்.

ஆனால் நீங்கள் எங்களிடம் செய்யும் முதலீடு, உங்களின் கண்களை திறக்கும் என்பது திண்ணம்.



பல நிறுவனங்கள், நீங்கள் முதலீடு செய்யும் தொகையை எவ்வாறு பயன்படுத்தி, இலாபகரமாக செயலாற்றுகிறார்களா என்று சொல்வதில்லை. பல சமயங்களில், போதுமான பாதுகாப்பில்லாத, நஷ்டம்டையக் கூடிய தொழில்களில் உபயோகப் படுத்தலாம். ஆனால் எங்கள் நிறுவனத்தில் நீங்கள் முதலீடு செய்யும் பணம் ஸ்டீல் பொருட்கள் தயாரிப்பதில் செலுத்தப்படுகிறது. நாங்கள் ஏற்கனவே இலாபகரமாக செயலாற்றுவதால், உங்களுக்கு அதிக வட்டியும், உடனடி ரொக்கத் தொகையும் மற்றும் பரிசுப் பொருட்களும் கொடுக்க முடிகிறது. ஆகவே உங்கள் பணத்தை எங்களிடம் முதலீடு செய்யுங்கள். **உறுதியான இலாபத்தை பெறுங்கள்.**



**பென்ஷன்தாரர்களுக்கு**
**ரூ.10000 மற்றும் அதற்கு மேல்**
**12 மாதங்கள் முதலீடு செய்பவர்களுக்கு**
**1% கூடுதல் வட்டியும் 24 மாதங்கள் முதலீடு**
**செய்பவர்களுக்கு 2% கூடுதல் வட்டியும் தரப்படும்**

**24% வட்டி**

**¼ கிலோ தங்க நகைகள்**

இந்திய ரிசர்வ் வங்கியின் சட்டம்,
(1934) செக்ஷன் 45-S க்கு உட்பட்டது.

***Main Office:*** 633/6, P.H. Road, Aminjikarai (Near Anna Arch), Madras-29. **Ph: 6216238.**
***Head Office:*** BADMA HOUSE, Venugopal Nagar, Thirumullaivoil. **Ph: 682095.**
***Factory:*** BADMA HOUSE, Balaji Nagar, Avadi Road, Ambattur. **Ph: 681076.**

# BADMA
## INVESTMENTS & INDUSTRIES
(A UNIT OF BADMA INDUSTRIAL GROUP)

**AMBATTUR:** Selvam Sweet Complex, Ambattur O.T. Bus Stand.
**CHROMPET:** 207, Radha Nagar (Near Canara Bank) Madras.
**MYLAPORE:** Shanti Vihar Complex, Luz Corner (I Floor).
**PERAMBUR:** Near Madha Church Complex (II Floor)
**TIRUVALLUR:** 57, J.N. Road. Near Oil Mill Bus Stop.
**SALIGRAMAM:** 72, Arunachalam Road, II Floor, Opp. AVM Studio, (adj. Sooriya Hospital)
**PURASAWALKAM:** Palace Tower, No. 6, Purasawalkam High Road. Opp. Deensha Selva Mahal
**NANGANALLUR:** Jain College Road, Near Prince Convent.
**T.NAGAR:** Perinbaraj Complex (I Floor), No.30, Natesan St. Opp. Vivekananda Tutorials.
**PARRYS:** Ibrahim Sahib, II Lane. Ph: 5230602.
**PORUR:** Opp. Gopalakrishna Theatre.
**TAMBARAM:** Opp. MEPZ.
**PADI:** Opp. Annai Hardwares, Near Lucas TVS.



படிப்பகம்

www.padippakam.com

பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# சாந்தோம் மெடிக்கல் சென்டர்

**மது அடிமைகள் மறுவாழ்வு மையம் இணைந்தது**

**வட்டம் ஜங்ஷன், திருவிதாங்கோடு, குமரி மாவட்டம்.**

மது போதை பழக்கத்திற்கு அடிமையானோர் பலர்.
அதிலிருந்து மீள நினைப்பவர் சிலர். முறையான சிகிச்சை பெற்று
பத்தே நாளில் மதுபோதை பழக்கத்திலிருந்து விடுபடலாம்.

### சிறுநீரக கல்நோயை குணமாக்கும் சித்த மருத்துவம்

சிறுநீரக கல் இருந்தால் ஆங்கில மருத்துவ முறையில் அறுவை மூலம் அகற்றி வந்தார்கள். இப்பொழுது ஒலிக்திர் மூலமாகவே (அல்ட்ராசவுண்ட் - லிதோடிரிப்ஸி) கற்களை கரைக்கும் முறை வந்துள்ளது. இந்த ஆங்கில மருத்துவத்திற்கு செலவு அதிகம் மட்டுமின்றி கற்கள் மீண்டும் தோன்றாமல் தடுக்க இதில் வழியில்லை

இந்த குறைபாடுகளை சித்தமருத்துவம் நீக்குகிறது சித்த மருத்துவத்தால் **எத்தகைய கற்களையும் ஒரே நாளில் மூன்றே வேளை மருந்தில் கரைத்து** சிறுநீருடன் வெளியேற்றி விட முடியும். நாற்பது நாட்களில் முழு குணம் பெற்று விடலாம். மீண்டும் கல் உருவாவதில்லை. சித்த மருத்துவம் தாது உப்புகளை ஏற்கும் ஆற்றலை நம் உடலுக்கு கொடுக்கிறது.

**அறுவை சிகிச்சையின்றி குணப்படுத்துகிறோம்** **ஆயுட்காலம் உத்திரவாதம்**

# கல்லடைப்பு (Kidney Stones), சதையடைப்பு (Growth)

*கீழ்க்கண்ட வியாதிகளுக்கு சிறப்பு சிகிச்சையளிக்கிறோம்*

அல்சர் (குடல்புண்). தீராத வயிற்றுவலி. அலர்ஜி. ஆஸ்துமா. ஈஸ்னோபிலியா. டி.பி பிரைமரி காம்ளக்ஸ், ஆரம்பகால யானைக்கால் வியாதி. காலாணி. மயிர் புழுவெட்டு. நீர்தரிப்பு. நீரொழிவு. கல்லடைப்பு (Kidney Stones) சதையடைப்பு. பிளட் பிரஸர். பிளட் கொலஸ்ட்ரால். பிளட் யூரியா. விஷக்கடி. வெண்படை. சோரியாஸிஸ். எக்ஸிமா. மூலமுளை. மூல பௌத்திரம். இரத்த மூலம். மூலக்கிருமி. மஞ்சள் காமாலை. மார்குலை. வெள்ளை ஒழுக்கு. மாதவிடாய் ஒழுங்கீனம். விந்துவில் உயிரணு குறைவு. ஆண்மை குறைவு. நரம்பு தளர்ச்சி. குழந்தை பாக்கியம் இல்லாமை. தீராத ஜலதோஷம். மூக்கடைப்பு. காதடைப்பு. காது இரைச்சல். காது கேளாமை. டான்ஸிலெப்ஸ். அடினாய்டு. ஒற்றை தலைவலி. சைனஸிட்டிஸ். தீராத தலைவலி. பல் கூச்சம். பல் சொத்தை. வர்ம நோய்கள். உள்வர்மம். ஒடிவு. முறிவு. தீராத நெஞ்சுவேதனை. இரத்தவாந்தி. ஹிஸ்டிரியா. சித்தப்பிரமை. மனநோய். நரம்புக் கோளாறு. காக்கைவலி. நரம்புவாதம். மூட்டுவாதம். பக்கவாதம். பாலவாதம். உடல் பருமன். ஊளை சதை மற்றும் நாள்பட்ட அனைத்து தீராத நோய்களுக்கும் அனுபவ மருந்துகளால் சிகிச்சை அளிக்கிறோம்.

**பார்வை நேரம்**
**காலை 9 மணி முதல் 1 மணி வரை**
**மாலை 5 மணி முதல் 9 மணி வரை**

**Dr.SANTHOM'S ALCOHOL AND DRUG DE-ADDICTION AND REHABILITATION CENTRE**



Dr.M.சாந்தப்பன்



படிப்பகம்

www.padippakam.com



# அக்ரஹாரத்தில் பூனை

## திலீப்குமார்

“இந்தக் கிழட்டு முண்டைக்கு ஒரு சாவு வர மாட்டேன் என்கிறது. இதோடு இது ஏழாவது தடவை!" பப்லிப் பாட்டி தாழ்ந்த குரலில் அட்சரசுத்தமான குஜராத்தியில் கறுவினாள்.

சமையல் கட்டிலிருந்து வெளியே வந்த மதூரி பால் கிண்ணியைப் பார்த்ததும் புரிந்து கொண்டாள். “குடித்துவிட்டுப் போய்விட்டதா -மறுபடியும்!"

“பீடை, ஒரு நிமிஷம் இந்த வீட்டில் இப்படி அப்படி நகர முடிகிறதா...." என்ற பப்லிப் பாட்டி சட்டென்று, "அது சரி மகாராணி, திறந்த வீட்டில் பூனை நுழைந்தது கூட தெரியாமல் அப்படி சமையற் கட்டில் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்களோ?" என்று தன் மருமகளைப் பார்த்து மொழி நயத்துடன் வக்கணை செய்தாள்.

கிழவிக்கு இதற்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை என்று மதூரிக்குத் தெரியும். ‘நான் பூஜை முடிப்பதற்குள் கடலை மாவு பிசைந்த முருங்கைக்காய் கறியை செய்து முடித்துவிடு' என்று அவள் தான் சற்று முன் கூறியிருந்தாள். கடலை மாவு கமகமவென்று வறுபட்ட வாசனையைக் கிழவி மோப்பம் பிடிக்காமலா இருந்திருப்பாள்.

சமையலறைக் கதவருகே தன் முக்காட்டை நழுவவிடாமல் இரு விரல்களால் பிடித்தபடி வழக்கமான கோணத்தில் வழக்கம்போல் அமைதியாக நின்றாள் மதூரி.

“சரி... சரி... என்ன பார்க்கிறாய்? போ. இன்னொரு கிண்ணம் பால் எடுத்து வா......! இன்று நட்டூ வந்ததும் இந்த பூனை சனியனுக்கு ஏதாவது வழி செய்ய வேண்டும்" என்றாள் பப்லிப்பாட்டி.

பப்லிப் பாட்டி வீட்டின் சலசலப்பு கேட்டதும் அந்த முதல்மாடி முற்றத்தில் ஜட்டி அலசிக் கொண்டிருந்த கோபால்பாயும், பாத்திரம் விளக்கிக் கொண்டிருந்த சாரதா பெஹ்னும் வந்து எட்டிப் பார்த்தார்கள். "கெட்டிக்காரப் பூனை தான்! நான் பார்க்க பார்க்க நொடியில் மாயமாக மறைந்து விட்டதே" என்று தாடையில் கைவைத்து நாசூக்காய் அங்கலாய்த்தாள் சாரதா பெஹ்ன். பப்லிப் பாட்டி பதில் சொல்லாமல் பூஜை அலமாரிப் பக்கம் திரும்பிக் கொண்டாள்.

ஏகாம்பரேஸ்வரர் அக்ரஹாரம் தங்கசாலை தெருவில் ஏகாம்பரேஸ்வரர் கோயிலுக்கு பின்புறம் தெப்பக்குளத்தைச் சுற்றி ‘ப' வடிவில் இருந்தது. பொதுவாக ஏகாம்பரேஸ்வரர் அக்ரஹாரத்தில் பூனைகளே நுழைவதில்லை. கடந்த 50 / 60 ஆண்டுகளில் அக்ரஹாரத்தி
ஒரு பூனைகூட நுழைந்ததில்லை
என்றுதான் சொல்ல வேண்டும்
அக்ரஹாரவாசிகளும் பூனைகளை
அவ்வப்போது தங்கசாலைத் தெ
விலோ கோவிந்தப்ப நாய்க்கன்
தெருவிலோ அல்லது கொண்டி
தோப்பிலோ தான் பார்க்க நேரி
டது. ஏகாம்பரேஸ்வரர் அக்ரஹா
ரத்தில் பூனைகள் நுழையாததற்
சூழலியல் காரணங்கள் என்பதை
டவும் தத்துவார்த்த காரணங்க
தான் ஏதாவது இருக்க வேண்டு
என்று தோன்றுகிறது. ஏனெனி
அக்ரஹாரவாசிகளில் பெரும்ப
லோர் புஷ்டி மார்க்கி வைஷ்ணவ
கள். தென்கலை வைஷ்ணவர்
ளுக்கு பூனைகளின் மீது இருக்க
கூடிய அபிமானம் புஷ்டி மார்க்
களிடம் இருக்க வேண்டிய கட்ட
யம் கிடையாது. ‘பாலகிருஷ்ண
பிரதானமான புஷ்டி மார்க்கத்
லும் "பஷி பட்சிகளிடம் அன்ப
என்ற உபகோட்பாடு இருப்ப
வாஸ்தவம்தான். ஆனாலும் அ
லும் பாலித்தின் பைகளையு
சினிமா போஸ்டர்களையும் தின்
கண்ட இடத்தில் சாணிபோடு
மாடுகளுக்குத்தான் முக்கியத்துவ
அதிகம். கிருஷ்ண பரமாத்மே
ஒரு மாட்டுக்காரன் தானே! பூனை
களின் உள்ளுணர்வு இந்த பேரு

படிப்பகம்

www.padippakam.com


**K. ராமசாமி**
சேர்மன்,

# லட்சுமி அம்மாள் பாலிடெக்னிக்
# நேஷனல் பொறியியற் கல்லூரி

கே.ஆர். நகர், கோவில்பட்டி



**LAKSHMI AMMAL EDUCATIONAL**
CHARITABLE TRUST
**Nalatin Puthur**

**NATIONAL EDUCATIONAL CHARITABLE TRUST**
**Nalatinputhur.**

**சாரதா திருமண மண்டபம்**
கிருஷ்ணன் கோவில் அருகில்

**ரகுராமன் திருமண மண்டபம்**
மெயின்ரோடு, கோவில்பட்டி.

**ஹோட்டல் ரகு A/c**
3, டவுண் ஹால் ரோடு மதுரை.
☎ 34566, 36655, 33950

**Hotel**
**RAGU INTERNATIONAL**
Upperlake, Kodaikanal ☎ 40186, 40187

**K.R. & SONS**
Contractors Private Ltd.,
M. Duraisami Puram
**Nalatinputhur-P.O., Kovilpatti**

**விஸ்வநாதர் ஜின்னர்ஸ்**
**பிரைவேட் லிமிடெட்,**
மன்னார் கோட்டை ரோடு,
சாத்தூர் ☎: 376

**KAYAAR EXPORTS PRIVATE LIMITED**
M. Duraisamipuram
**Nalatinputhur-P.O., Kovilpatti**

**AL-KULAIB & RAMASAMY CONTRACTING COMPANY**
Post Box No: 25034
**SaFat, Kuwait.**

## RAMASAMY & COMPANY (P) LTD.
Plot No: 1, E-Block No. 2, Samarat Complex,
**(Opp.) Secretariat, HYDRABAD-500004**




படிப்பகம்

www.padippakam.com


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்களது
இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

அருள்மிகு ஐந்து வீட்டு சுவாமிகள் துணை
Since: 1940

ALL INDIA REGD. No. 223777
திடம் "நந்தி மார்க்"

கடலை மாவு
T.V.A ®

நந்தி டால் & பிளவர் மில்
T.V. அருணாசலநாடார்
சேலம்-2.

ஸ்தாபகர்:

T.V. அருணாசல நாடார்

நந்தி மார்க்:

★ ஸ்பெஷல் ஜிலேபி பருப்பு ★ புத்தம் புதிய குண்டு உளுத்தம் பருப்பு ★ திடம் கடலை மாவு (100% PURE) ★ துவரம் பருப்பு Etc.,

கேட்டு வாங்கி பயனடையுங்கள்

NANDHI DALL MILLS

நந்தி டால் மில்ஸ்

298, மெயின் ரோடு, சேலம்-638 002.
போன்: STD: 0427, கடை: 52863.
மில்: 52804. வீடு: 53003.

சுவையான சமையலுக்கு
வாங்கி உபயோகிப்பீர்...

SRI VASAVI

ஸ்ரீ வாசவி பிராண்ட்

"அக்மார்க்" உளுத்தம் பருப்பு
ஜிலேபி பருப்பு, கடலை மாவு

தயாரிப்பாளர்கள்

ரவிக்குமார் டால்மில்
இண்டஸ்ட்ரீஸ்
நெத்திமேடு, சேலம்-2.
போன்: ஆபீஸ்: 50487, மில்: 270681

இனிய புத்தாண்டு பொங்கல் வாழ்த்துக்கள்




அனைத்து வகையான பிளாஸ்டிக் கேன் கருப்பு, வெள்ளையில் 5 லிட், 10, 20, 35 லிட்டர்களிலும், நைலான் குடங்கள் பேபி 13, 15, 18 லிட்டர்களிலும் கிடைக்கும்

தரமான நைலான் குட தயாரிப்பாளர்கள்

ஈரோடு பிளாஸ்டிக்ஸ்

23 - வாட்டர் ஆபீஸ் ரோடு,
ஈரோடு - 638 003. Ph: 213182.




படிப்பகம்

www.padippakam.com

மையை செம்மையாக விளங்கிக் கொண்டிருந்தது போலும் -அஃதாவது சென்ற ஏப்ரல் மாதம்வரை.

மே மாதம் மேற்கூறிய கிழட்டுப் பெட்டை பூனை எதேச்சையாக அக்ரஹாரத்தில் நுழைந்ததை யாரும் எதேச்சையாகவே கவனிக்கவில்லை. அக்ரஹாரத்தின் 24 மத்தியதர வர்க்க குஜராத்தி குடும்பங்கள் வாழும் 25-ம் எண் கட்டிடத்தில், முதல் மாடியில் 9-ம் எண் வீட்டின் முன்னறையில் பப்லிப் பாட்டி பூஜைக்கு பால் எடுத்து வைத்துவிட்டு பாலகிருஷ்ணனுக்காக பீடா தயாரிக்க வெற்றிலையை கழுவ உட்கட்டுக்கு சென்ற ஓரிரு நிமிடங்களின்போது துல்லியமாக பிரசன்னமாகி தயக்கமின்றி உட்புகுந்து ஒரு முழு கிண்ணி பாலை நக்கித் தீர்த்துவிட்டு எதுவுமே நடக்காததுபோல் திரும்பிக் கொண்டிருந்தபோது தான் முதல் முதலாகக் கண்ணில் பட்டது.

**மதூரியைப் பொறுத்தவரை 'கிழவி லேசுப்பட்டவள் இல்லை' என்ற எண்ணமே இருந்தது**

பூனையை பார்த்ததும் பப்லிப் பாட்டிக்கு முதலில் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. "அரே... அரே.... பிலாடி பிலாடி. மதூ பிலாடி.... மதூ பிலாடி....." (பிலாடி -பூனை. மதூ -மதூரி) என்று சத்தமாக குஜராத்தியில் உளறினாள். சத்தம் கேட்ட பூனை திரும்பிப் பார்த்து சலனமின்றி ஓரிரு கணங்கள் நடுக்கூடத்தில் நின்று பாட்டியை கண்ணுக்குக் கண் பார்த்தது. பின் அலட்சியமாக நடந்து சென்றது. கதவருகே இருந்த மடிகோலை பாட்டி சட்டென்று எடுத்து பூனையை நோக்கி தாறுமாறாக எறிந்தாள். பூனை லாவகமாக நகர்ந்து மறைந்தது.

குழாயடியிலிருந்து ஈரக்கையுடன் ஓடி வந்த மதூரிக்கு தன் மாமியாரின் கலவரமடைந்த முகத்தைப் பார்த்ததும் முதலில் சிரிப்புத்தான் வந்தது. ஆனால் சிரிக்கவில்லை அவள். பப்லிப் பாட்டி உதட்டை மடித்து ஆதங்கத்துடன் நின்று கொண்டிருந்தாள். "போனால் போகிறது விடுங்கள் பாவம்; வாயில்லா ஜீவன்" என்ற மதூரியை, "ச்சீ வாயை மூடு மலட்டுக் கழுதை" என்று வன்மத்துடன் இரைந்தாள். சிறுமைப்பட்டு நின்றாள் மதூரி.

சற்று முன்கோபியாக இருந்தாலும் பப்லிப் பாட்டி அடிப்படையில் நல்லவள்தான். பாரியான சரீரம். நரைத்திட்டான சிறு கொண்டை. நீண்ட பெரிய மூக்கு. மெலிதான எஃகு ஃப்ரேம் போட்ட மூக்குக் கண்ணாடி. கழுத்தில் துளசி மாலை. செக்க செவேலென்று பழம்போல் இருப்பாள்.

அதிகாலையில் 4 மணிக்கு எழுந்து குளித்து வெள்ளைப்புடவை அணிந்து பாழும் நெற்றியோடு ஐந்து கட்டிடம் தள்ளியிருந்த ஹவேலிக்கு (புஷ்டி மார்க்கர்களின் கோயில்) சென்றால் 10 மணிக்குத்தான் திரும்பி வருவாள். வந்தபின் தன் குடும்ப விக்ரஹங்களுக்கு விஸ்தாரமாக பூஜை செய்யத் துவங்குவாள். சமையலறை கதவருகே இருக்கும் கண்ணாடி சட்டமிட்ட ஒரு தேக்கு அலமாரி முன் உட்கார்ந்து கொள்வாள். அலமாரியைத் திறந்தால் சின்னச் சின்ன விக்ரஹங்கள் ஜரிகைத் துணிகள் அணிவிக்கப்பட்டு குட்டிக் குட்டி மெத்தைகள் மேல் உட்கார்ந்திருக்கும். பாட்டி எல்லாவற்றையும் முறையாக வெளியே எடுப்பாள். ஜரிகை உடைகளை கழற்றிவிட்டு விக்ரஹங்களுக்கு ஸ்நானம் செய்விப்பாள். வெல்வெட் துணியால் அவற்றைத் துடைத்து பின் பெரிய பிஸ்கெட் டப்பாவிலிருந்து புதிய வஸ்திரங்களை எடுத்து நிதானமாக அணிவிப்பாள். பிரதான விக்ரஹமான பாலகிருஷ்ணனுக்கு கட்டைவிரல் சுற்றளவில் ஒரு ஜரிகைத் தொப்பியும் இருக்கும். குங்குமப் பொட்டு வைத்து முடித்தபின் மீண்டும் அவற்றை குட்டிக் குட்டி மெத்தைகள் மேல் உட்காரவைப்பாள். பிறகு அலமாரிக்கு முன் ஒரு பலகைமேல் ஒரு பெரிய தாம்பாளத்தில் அன்றைய உணவு வகைகள் எல்லாவற்றையும் சிறு சிறு கிண்ணங்களில் வட்டமாக அடுக்கி வைப்பாள். ஒரு சிறு கிண்ணத்தில் சின்னச் சின்ன பீடாக்கள் கூட இருக்கும். சற்றுக் கழித்து தீபாராதனை காட்டி மணி அடித்து 'ஜெய ஜெகதீஸ்வர ஹரே' மெட்டில் ஒரு பஜனை பாடி அலமாரியை மூடிவிடுவாள். அதற்குப் பின்தான் பச்சைத் தண்ணீர்கூட குடிப்பாள்.

பப்லிப் பாட்டியை முன்னிட்டு ஏகாம்பரேஸ்வரர் அக்ரஹாரத்திற்கு அபார பிரக்யாதி ஏற்பட்டிருந்தது. ஆன்மீக விஷயங்களில் கரை கண்டவள் என்று பெயரெடுத்திருந்தாள். அதிலும் குறிப்பாக புஷ்டி மார்க்க நியம நிஷ்டைகளில் அவள் பேச்சுக்கு மறு பேச்சு கிடையாது. என்ன பிரச்சினைக்கு என்ன விரதம். என்ன பூஜைக்கு என்ன பலன். சிரார்த்தத்திற்கு, திருமணத்துக்கு, வளைகாப்புக்கு, நவராத்திரிக்கு, நலங்குக்கு என்று எல்லா வைபவ விதிமுறைகளும் பரிகார உப விதிமுறைகளும் அவளுக்கு அத்துப்படி. பாகவதத்தை தலைகீழாக ஒப்பிப்பாள். தத்துவ விசாரத்தில் கூட அதன் நுட்பமான எல்லைகள் வரை சென்று வாதிடுவாள். சில வாரங்களுக்கு முன்பு புஷ்டி மார்க்கம் குறித்து முனைவர்பட்ட ஆய்வு செய்து கொண்டிருந்த ஒரு மாணவி பரோடாவிலிருந்து வந்து இவளுடன் பேசி தெளிந்துவிட்டுப் போனாள். ஒரு விசேஷத்திற்கு பப்லி வந்திருக்கிறாள் என்றால் அங்கு மந்திரம் சொல்ல வந்திருக்கும் பிராமணர்கள்கூட உஷாராக இருப்பார்கள்.

பப்லிப் பாட்டி இவ்வளவு அருமை பெருமைகளுடன் திகழ்ந்து கொண்டிருந்தாலும் அவளது மாட்டுப் பெண்ணான மதூரி அவற்றை பிடிவாதமாக ஏற்க மறுத்தாள். மதூரியைப் பொறுத்தவரை "கிழவி லேசுப்பட்டவள் இல்லை" என்ற எண்ணமே இருந்தது.

என்றாலும் தன் மாமியாரின் பூஜைக்கு இப்படி அடிக்கடி பங்கம் ஏற்படுவது குறித்து அவளுக்கும் வருத்தம்தான். சென்ற ஆறு முறையும் இப்படித்தான் நிகழ்ந்தது. விளக்கு திரி எடுக்க, பருப்பு சாதம் பிசைய, பழங்கள் நறுக்க, தீப்பெட்டி எடுக்க என்று பப்லிப் பாட்டி உட்கட்டுக்குள் மறைந்த ஓரிரு நிமிடங்களில் சொல்லி வைத்தாற்போல் வந்து கண் இமைக்கும் நேரத்தில் காரியத்தை முடித்துவிட்டுப் போய்விட்டது அந்த கில்லாடிப் பூனை.

அன்று மாலை பப்லிப்பாட்டியின் ஒரே மகன் நட்டூ என்கிற நட்வர்லால் அலுவலகம் முடித்து வீடு திரும்பியதும் அவனிடம் பாட்டி பூனையைப் பற்றி புகார் செய்தாள்.

"நட்டூ, நீ என்ன செய்வாயோ ஏது செய்வாயோ எனக்குத் தெரியாது. ஆனால் அந்தக் கிழட்டுப் பீடையை எப்படியாவது ஒழித்துவிடு"

நட்டூ பார்ப்பதற்குத்தான் போலீஸ்காரன்போல் வாட்டசாட்டமாக இருப்பானே ஒழிய சரியான அசமந்தம். சத்தம்போட்டு பேசக்கூட பயப்படுவான். செம்பு



படிப்பகம்

www.padippakam.com



தாஸ் தெருவில் ஒரு மார்வாரி வியாபாரிக்கு 2-ம் நம்பர் கணக்கு எழுதுகிறவன். வருமான வரி அதிகாரிகளுக்கு 1-ம் நம்பர் கணக்குதான் காட்டுவார்கள். நட்டு 1-ம் நம்பரில் ஆயிரமும் 2-ம் நம்பரில் ஆயிரமும் சம்பளம் வாங்குகிறான். வம்பு -தும்பு, பீடி சிகரெட், சினிமா -டிராமா எதுவும் கிடையாது. அவன் உண்டு, அவன் வேலையுண்டு. அலுவலகம் விட்டு வீடு திரும்பியதும் உடைமாற்றி டீ சாப்பிட்டுவிட்டு ஹவேலிக்குப் போய்விடுவான். இரவு 8 மணிக்கு மேல்தான் திரும்புவான். சனிக்கிழமை மட்டும் இரவு 10 மணிக்கு பஜனைக்குப் போவான். குஜராத்தி வருஷப்பிறப்பு அன்று மதூரியை சினிமாவுக்கோ பீச்சுக்கோ அழைத்துச் செல்வான்.

"என்ன சொல்கிறாய்! பூனையைக் கொல்வது பாவமில்லையா" என்று பதறினான் நட்டு.

"அட உப்பில்லாதவனே, பூனையை கொல்லவா சொன்னேன். அநத கழுதையை எங்காவது விரட்டி விட்டுவா என்கிறேன். பூனையை கொல்வது பாவம் என்று எனக்குத் தெரியாதா.... பேசுகிறான் பார்"

"எங்கென்று போய் விரட்டுவது. விரட்டுவதற்கு முதலில் அது கண்ணில் பட்டால் தானே. எல்

படிப்பகம்

www.padippakam.com

# INDIAN INSTITUTE OF CATERING TECHNOLOGY & HOTEL MANAGEMENT

P-147, GOPALAPURAM, ESWARINAGAR, THANJAVUR-613 004.

## ADMISSION NOTICE FOR III BATCH – 1996-97

**Immediate Job Oriented Courses Through**

**Correspondence Education**

| COURSES OFFERED | ELIGIBILITY |
|---|---|
| a. Diploma in Catering Technology – 6 Months | H.Sc |
| b. Diploma in Hotel Management – 6 Months | H.Sc |
| c. Diploma in Catering Technology & Hotel Management – 1 Year | H.Sc |

Prospectus and Application Forms may be obtained by sending Demand Draft for Rs. 50/- in favour of THE DIRECTOR, INDIAN INSTITUTE OF CATERING TECHNOLOGY & HOTEL MANAGEMENT, THANJAVUR.

For more details contact THE DIRECTOR/PRINCIPAL.

**AN INSTITUTION FOR EMPLOYMENT GENERATION**

---

நம்பிக்கை! நாணயம்!! கைராசி!!!

# சதர்ன் சிட்ஸ் (தமிழ்நாடு) பிரைவேட் லிமிடெட்

*1762, ஸ்ரீ அம்மன் டவர்ஸ்,*

*மானோஜியப்பா வீதி,*

**தஞ்சாவூர் -613 009.**

வாழ்க்கையின் வழிகாட்டி! வெற்றியின் திருப்புமுனை!!

*எங்கள் நிர்வாகத்தில் மாத ஏலச்சீட்டுகள் மத்திய சீட்டு சட்டம் 40/82 தமிழ்நாடு சிட்பண்ட் சட்ட விதிகள் 23/84ன் படி பதிவு செய்யப்பட்டு நடத்தி வருகிறோம்.*

**பதிவு அலுவலகம்**

*1762 மானோஜியப்பா வீதி*

**தஞ்சாவூர்**

**தலைமை அலுவலகம்**

*3 பெருமாள் கோவில் தெரு*

**வடபழனி, சென்னை -26.**

**கிளை நிறுவனங்கள்**

ஸ்ரீ வாசு பைனான்ஸ் (இந்தியா) லிமிடெட்

ஸ்ரீ வாசு எக்ஸ்போர்ட்ஸ்

ஸ்ரீ வாஸ் ஏஜென்சீஸ் (மருந்து மொத்த வியாபாரம்)

சதர்ன் பைனான்ஸ்

முரளி பைனான்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ்


படிப்பகம்




www.padippakam.com

www.padippakam.com

லாம் உன் அஜாக்கிரதையினால் தான். பூஜை பண்ணுகிறேன் என்று, ஊருக்கு முன்னால் பால் கிண்ணத்தை எடுத்து வந்து நடுக்கூடத்தில் வைத்துவிட வேண்டியது. அப்புறம் "ஹாய்" "ஹாய்" என்று அலற வேண்டியது." (ஹாய் - அய்யோ)

"போதும் போதும் ரொம்ப சமர்த்தாகாதே. பூஜை எப்படி பண்ணுவது என்று இனி நான் உன்னிடம் தான் கற்றுக்கொள்ள வேண்டும் போல் இருக்கிறது."

"சரி, சரி, விடு. சூரியிடம் சொல்கிறேன். அவன்தான் இந்த மாதிரி வேலைக்கு லாயக்கு."

"உன் மூளை பிசகிதான் விட்டது! போயும் போயும் அந்த துஷ்டப் பயலா. அந்த அக்கிரமி பூனையை நிஜமாகவே கொன்றாலும் கொன்று போட்டுவிடுவான். ஜாக்கிரதை."

"நீ அதைப் பற்றி கவலைப்படாதே. எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்." என்றான் நட்டு தீர்மானமாக.

சூரி -பப்லிப் பாட்டியின் தம்பி ரஞ்சித்சிங்கின் மூத்த மகன் சுரேந்திரன். வேலை வெட்டி இல்லாதவன். பளிச்சென்ற உடைகள் அணிந்து, நண்பர்கள் புடைசூழ, கல்கத்தா பீடாக்களை ஓயாமல் குதப்பிக்கொண்டு உற்சாகமாக திரிந்து கொண்டிருப்பான். குஜராத்தி மற்றும் தமிழ் மொழிகளின் எல்லா கெட்டவார்த்தைகளையும் சரளமாக பயன்படுத்துவான். கடவுளையும், பணக்காரர்களையும் அவனுக்குப் பிடிக்காது. ஆனால் அன்புக்குக் கட்டுப்பட்டவன். அக்ரஹாரத்தின் எல்லா தப்பு -தண்டாவுக்கும் அவன்தான் கட்டைப் பஞ்சாயத்து. 'நீதிக்கு பின்தான் சாதி' என்ற அடிப்படையில், சில நாட்களுக்கு முன்பு அக்ரஹாரத்திற்கு பூ விற்க வந்த பெண்ணை வம்பு செய்த ஒரு குஜராத்தி நடுவயதுக்காரரின் சைக்கிளை சேறும், பாசியும் படிந்த கோயில் தெப்பக்குளத்திற்குள் தூக்கி 'கடாசி' விட்டான்.

சமையலறையில் சப்பாத்திக்கு மாவு பிசைந்து கொண்டிருந்த மதூரிக்கு தாயும் மகனும் பேசிக்கொண்டது காதில் விழுந்தது. அவள் அந்த வெள்ளை பூனையை நினைத்துக்கொண்டாள். அந்த வயதான பூனை முகம் தளர்ந்து, தோல் சுருங்கி, ரோமம் உதிர்ந்து சாகக் காத்திருக்கும் பாவனையில் பரிதவித்து காணப்படும். அது உற்று பார்த்தபோது திடீரென்று ஏதாவது பேசத் துவங்கிவிடும் என்று கூட தோன்றும்.

அவளுக்கு பப்லிப்பாட்டி வீட்டில் இல்லாத பல சமயங்களில் அது முன் கதவருகே வந்து களைத்துப் போன குரலில் 'மியாவ்' என்று வாயை பிளந்து காட்டும். தவறாமல் ஒவ்வொரு முறையும் அதற்குப் பால் கொடுத்திருக்கிறாள் மதூரி. ஒரு வகையில் தனக்கும் அந்த பூனைக்கும் அதிக வித்யாசமில்லை என்று நினைத்தாள். அந்தப் பூனை போலவே தானும் பதுங்கி பதுங்கியே வாழ்வதாகப்பட்டது.

> **ஒரு வகையில் தனக்கும் அந்த பூனைக்கும் அதிக வித்யாசமில்லை என்று நினைத்தாள். அந்தப் பூனை போலவே தானும் பதுங்கி பதுங்கியே வாழ்வதாகப்பட்டது**

அந்த பூனைக்குக் குட்டிகள் இருக்குமா? நிச்சயம் அதன் பருவத்தில் அது ஓரிரு குட்டிகளையாவது ஈன்றிருக்கும். அல்லது ஒரு வேளை அதுவும் தன்னைப் போல் மலடு தானா? அதன் நிராதரவான சின்ன வாழ்க்கையின் சின்ன சாகஸங்களைப் போல்தான் தன் வாழ்க்கையிலும் என்று நினைத்தாள் மதூரி.

பூனைக்கு ஒரு கிண்ணம் பால் என்பது தனக்கு ஒரு புடவை அல்லது கடற்கரையில் ஒரு மாலை அல்லது ஒரு இந்திப்படம். அந்தப் பூனையைப் போலவே தானும் ஒரு நாள் முதிர்ந்து சிதைந்து விடுவோம் என்று தோன்றியது. அந்தப் பூனைக்குப் போலவே தன்னையும் ஒரு நாள் தனிமை வாட்டிவிடும். அன்புக்கான சந்தர்ப்பம் வயோதிகத்தில் நிச்சயம் இருக்காது. செலுத்துவதற்காக மண்டியா கிடக்கிறது அன்பு. அப்படியானால் யாருடைய இதயத்தில்? பப்லிப்பாட்டியின் இதயத்திலா, தன் கணவன் நட்டுவின் இதயத்திலா? எங்கே? எங்கே பதுங்கி கிடக்கிறது அன்பு என்ற அபத்தம்? அந்த கிழட்டுப் பூனையின் பழுப்பு நிற கண்களிலா?

பிசைந்த சப்பாத்தி மாவைத் திரட்டி தட்டில் ஓங்கி அறைந்தாள் மதூரி.

நட்டுவுக்கு பூனை விஷயம் பெரிதாகப் படவில்லை. அவன் அதை உடனே மறந்து விட்டான். ஹவேலியிலிருந்து திரும்பும் போது சூரியை பார்த்ததும்தான் ஞாபகம் வந்தது.

"மகனே கயி தீத்துந்தே நட்டு பாய்! சம்ஜோ தமாரு காம் தய்க்யூந்." (என்னிடம் சொல்லி விட்டீர்கள் அல்லவா, நட்டு அண்ணா. உங்கள் காரியம் ஆகிவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள்.) சூரி உற்சாகமாக கூறினான். "நீங்கள் சொன்னால் அந்தப் பூனையை அக்ரஹாரத்தை விட்டு என்ன அமெரிக்காவிற்கே கூட 'பாக்' செய்து அனுப்பி விடுகிறேன். அத்தைக்காக நான் இதைக்கூட செய்ய மாட்டேனா என்ன?"

நட்டு கலவரத்துடன், "அதெல்லாம் வேண்டாம். 25ம் நம்பர் பக்கம் வராமல் செய்து விடு. அது போதும்." என்றான்.

"டன், நட்டு அண்ணா டன்" என்று ஆங்கிலத்தில் உறுதி அளித்தான் சூரி.

மறுநாள் காலை பாட்டியின் மாப்பிள்ளை ஹன்ஸ் ராஜ் வேலை விஷயமாக கொச்சியிலிருந்து வந்து இறங்கினார். அவர் எப்போதும் இப்படித்தான். சொல்லாமல் கொள்ளாமல் திடுதிப்பென்றுதான் வருவார்.

பப்லிப் பாட்டி தன் மாப்பிள்ளையை ரொம்பவும் உயர்வாகத்தான் மதித்தாள். அவரிடம் அவளுக்குப் பிடிக்காத விஷயம் அவர் பொடி போடுவார் என்பதுதான். ஹன்ஸ்ராஜிக்கு 38 வயதுதான். பாகவதர் கிராப்போடு முகத்தை மறைக்கும் அடர்ந்த தாடி மீசையுடன் 'பேண்ட்' போட்ட சாமியார் போல் இருந்தார். கல்யாணத்திற்கு பின்புதான் இப்படி ஆகிவிட்டார் என்று எல்லோரும் சொல்வார்கள்.

பப்லிப் பாட்டியின் மகள் நிம்மு கல்யாணத்திற்கு முன் சாதாரணமாக இருந்தவள் கல்யாணம் ஆனவுடன் திடீரென்று உடல் பருக்க ஆரம்பித்துவிட்டாள். முதலில்

www.padippakam.com

ஏதோ கல்யாணமான சந்தோஷத்தில்தான் உடல் பருக்கிறது என்று நினைத்தார்கள். பின்பு, கொஞ்சம் கொஞ்சமாக அவள் ரொம்பவும் குண்டாகிபோன போதுதான் அது எதோ வியாதி என்று தெரிந்தது. ஹன்ஸ்ராஜிக்கு பூர்வீக சொத்தும் இருந்ததோடு அவரும் நிறைய சம்பாதித்தார். தன் மனைவிக்காக பணத்தை தண்ணீராக செலவழித்தார், பயன் இல்லை. நிம்மு 30 வயதில் அசாத்திய குண்டாகி விட்டாள். ஜாக்கெட் தைக்க 2¼ மீட்டர் துணி தேவைப்பட்டது. ஆட்டோவில் அவள் ஒருத்திதான் உட்கார முடியும். பத்து அடி நடப்பதற்குள் மூச்சு வாங்கும். வீட்டில் கூட அவள் உட்கார்ந்தோ தவழ்ந்தோதான் காரியங்களை செய்வாள். அவளது உடல்வாகிற்கு அனுகூலமான வகையில் சமையல் கட்டையே மாற்றி அமைத்திருந்தார் ஹன்ஸ்ராஜ்.

நிம்மு தன் பருமனைப்பற்றி அதிகம் கவலைப்படமாட்டாள். சிரிக்க சிரிக்க எல்லோரிடமும் அன்பு பாராட்டுவாள். அவளுடன் 10 நிமிடம் பழக நேர்பவர்கள்கூட நெகிழ்ந்து துடித்து விடுவார்கள். விருந்தினர்கள் வரும்போது, சமையலறைக்குள் ஒரு சிறு குழந்தையைப் போல் தவழ்ந்து தவழ்ந்து காரியங்கள் செய்து உபசரிப்பாள். அதிகம் போனால் அவள் இன்னும் 10 ஆண்டுகள்தான் உயிர் வாழ்வாள் என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள். "நான் செத்தால் என்னை தூக்குவதற்கு 16 பேர் தான் வரவேண்டும்" என்று சொல்லி "கெக் கெக் கெக்கெ" என்று சத்தமாக சிரிப்பாள் நிம்மு. ஹன்ஸ்ராஜிக்கு தன் நிம்மு மீது உயிர்.

ஹன்ஸ்ராஜ் தங்கியிருந்த ஒரு வாரமும் பூனை பப்லிப் பாட்டி வீட்டுப் பக்கம் வரவில்லை. மாப்பிள்ளைக்கு உபசரணை செய்யும் மும்முரத்தில் பாட்டிகூட அதை மறந்துவிட்டிருந்தாள்.

ஹன்ஸ்ராஜ் ஊருக்குக் கிளம்பும் போது நிம்முவுக்குப் பிடித்த பட்சணங்களை ஒரு பெரிய டப்பாவில் போட்டுக் கொடுத்தாள்.

"இந்தத் தீபாவளிக்காவது நிம்முவை அழைத்து வர முடியுமா என்று பாருங்கள்" என்றாள்.

"அவள் நிலைமைதான் உங்களுக்குத் தெரியுமே. அவள் வருவதென்றால் 'வேன்' வைத்துதான் அழைத்து வர வேண்டும். அதற்கு நீங்களே பேசாமல் கொச்சிக்கு வந்து ஒரு வாரம் தங்கிவிட்டுப் போங்களேன். உங்களுக்கும் மாறுதலாக இருக்கும்."

"என்ன மாறுதல் போங்கள். நீங்கள் சொன்னால் ஆகிவிட்டதா? நான் கிளம்பிவிட்டால் வீட்டை யார் பார்த்துக் கொள்வார்கள்? இவளுக்கும் துப்பு கிடையாது. கவர்னர் பட்வாரிக்குக் கூட நேரம் கிடைத்துவிடும். எனக்கு எங்கே?" என்று மருகினாள் பாட்டி.

வாசல் பக்கம் நட்டுவை பார்த்ததும், "சரி நீங்கள் கிளம்புங்கள். நட்டு ரிக்ஷாகூட கூட்டி வந்துவிட்டான்"

வாசல் வரை வந்து வழியனுப்பிய பாட்டி, தன் மகளை நினைத்து வந்த அழுகையை அடக்கிக் கொண்டாள். "போய் வருகிறேன் சகோதரி" என்று மதூரியை பார்த்து சொல்லிவிட்டுக் கிளம்பினார் ஹன்ஸ்ராஜ்.

பத்து நாட்கள் கழித்து திடீரென்று ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை 25-ம் எண் கட்டடத்துக்கு சூரி வந்தான். அந்தக் கிழட்டுப் பூனையுடன். பப்லிப்பாட்டி வீட்டுக் கதவருகே வந்ததும் குழந்தைகளும் பெரியவர்களும் அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். சூரியின் மடக்கிய இடது கைக்குள் அவன் மார்பில் தலைசாய்த்து ஒரு குழந்தையைப்போல் ஒடுங்கி கொண்டிருந்தது பூனை.

"என்ன ஜாலம்டா இது! திருட்டுச் சனியன் உன்னிடம் இப்படி குழைகிறதே" என்று வியந்தாள் பப்லிப் பாட்டி.

"அதுதான் சூரி! தெரிந்து கொள்ளுங்கள். இந்தப் பத்து நாட்களில் 5 லிட்டர் பாலையும் எட்டு டபுள் ஆம்லெட்டுகளையும் விழுங்கியிருக்கிறது இது. பூனையை வசியம் செய்வது என்றால் சும்மாவா! கொண்டுபோய் விடுவதற்கு முன் உங்களிடம் காண்பித்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். சொல்லுங்கள் அத்தை.எங்கே கொண்டுபோய் விடட்டும்.... திருவொற்றியூரிலா, திருவான்மியூரிலா?"

சூரி தன் வலது கையால் அதன் முதுகை தடவி கொடுக்கக் கொடுக்க பூனை புதுப்பெண் போல் கூச்சத்துடன் நெளிந்து நெளிந்து காட்டியது.

பூனையையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த பப்லிப்பாட்டி ஏதோ தீர்மானித்தவள்போல், "டேய் சூரி போய்விடாதே, இதோ வருகிறேன்" என்று உள்ளே சென்றாள். தன் மாப்பிள்ளை மறந்து விட்டுச் சென்ற பொடி டப்பியைத் தேடினாள்.

அவசரமாக திரும்பி வாசலுக்கு வந்தாள். ரகசிய பாவத்துடன் கையசைத்து சூரியை அருகே வரச் சொன்னாள். பின் தாழ்ந்த குரலில் பூனையைத் தன்னருகே கொண்டு வரும்படி சொன்னாள். சூரி பூனையின் வயிற்றைப் பிடித்தபடி, அதை பாட்டிக்கு முன் நீட்டினான். பாட்டி சட்டென்று இடுப்பில் வைத்திருந்த மூடிய கையை பூனையின் முகத்தருகே கொண்டு வந்து அதே நொடியில் உள்ளங்கையைத் திறந்து அதிலிருந்த மூக்குப் பொடி முழுவதையும் பூனையின் மூக்கில் வைத்து அழுத்தமாக தேய்த்துவிட்டாள்.

மறுகணம், மின்சாரம் தாக்கியது போல் பூனை சூரியின் கைகளிலிருந்து எகிறி மல்லாக்கக் கீழே விழுந்தது. அதற்குப் பொறி கலங்கியிருக்க வேண்டும். பூனை எழுந்து நிற்க முனைந்ததும் மறுபடியும் எம்பி தாறுமாறாக விழுந்தது. முற்றத்தின் குழாயடி சாக்கடை, சுழி வறை சுதவு என்று மாறி மாறி மோதி விழுந்தது. அது எழுப்பிய வினோதமான குரல் பயங்கரமாக இருந்தது. ஒவ்வொரு முறையும் அது சமாளித்து எழுந்து நடக்க யத்தனித்தபோது கால்கள் குழைந்து விழுந்தது. தன் சிறிய தலையை இப்படியும் அப்படியுமாக திருப்பி பரிதாபமாக தும்மி தும்மி விழுந்தது.

பப்லிப் பாட்டி கையை உதறினாள். பூனைக்குப் போக எஞ்சியிருந்த மூக்குப் பொடி காற்றில் பறந்து குழுமி இருந்தவர்கள் பலரும் சூரி உட்பட தும்ம ஆரம்பித்தார்கள். தள்ளி நின்று கொண்டிருந்த சில ஆண்களும் சிறுவர்களும் பூனை தும்மி விழுவதைப் பார்த்து குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்கள். பூனை அந்த முதல் மாடி விளிம்பின் ஒற்றைக்கல் சுவற்றில் ஏறி, மீண்டும் தும்மி சத்தத்துடன் கீழ்த்தளத்தில் விழுந்தது. பின் மெல்ல எழுந்து கட்டடத்தை விட்டு ஓடியது.

சிரித்துக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து மிக மிக ஆபாசமான ஒரு வசையைக் கத்திவிட்டு சூரி பூனையைத் தொடர்ந்து கீழே ஓடினான்.

திடீரென அங்கு ஒரு நிசப்தம் படர்ந்தது. ஒவ்வொருவராக எல்லோரும் கலைய ஆரம்பித்தார்கள். பாட்டி வீட்டின் உட்புறம் திரும்பியதும் நடுக்கூடத்தில் மதூரி நின்று கொண்டிருந்தாள். பாட்டி சட்டென்று தலைகுனிந்து முன்னே நகர்ந்து அவளைக் கடந்தாள்.

அன்று மாலை பாட்டியை பார்க்க யாரோ வந்தார்கள். பப்லிப் பாட்டி ஆரம்பித்தாள்: 'புஷ்டி மார்க்கம் என்ன சொல்கிறதென்றால் ......

▲

படிப்பகம்

www.padippakam.com





**கல்யாண ஸ்வீட்ஸ், சீர்முறுக்கு, சீர்வரிசை பட்சணங்கள் எவ்வளவு தேவை ஆனாலும் அர்ஜெண்ட் ஆர்டர் பேரில் தயார் செய்து தருகிறோம்.**

- சுத்தமான நெய்யில் தயாராகும் ஸ்வீட் வகைகள்
- சுத்திகரிக்கப்பட்ட, கொலஸ்ட்ரால் தொல்லை இல்லாத தாவர எண்ணெயில் தயாராகும் கார வகைகள்
- அதிகப்படியான எண்ணெய் அகற்றப்படுவதால் நீண்ட நாள் கெடாமல் இருக்கும் தென்னிந்திய பட்சணங்கள் (Free of Oil)
- Instant-இட்லி மிக்ஸ், தோசை மிக்ஸ், அடை மிக்ஸ், வடை மிக்ஸ், புளியோதரை மிக்ஸ் etc.

**OUR SPECIALITIES:**

- புழுங்கலரிசி கைமுறுக்கு, தட்டை, சீடை மிக்ஸர் (Free of Oil) etc.
- மைசூர் பாகு, போளி, லட்டு, கோதுமை அல்வா, etc.

# SUSWAAD

***The Delicious Home made Sweets and Savouries***

**1/2, Venkatraman Street, (Near Kasi Arcade, Pondy Bazaar), T.Nagar, Madras - 17. Ph: 8282324 PP**

**EXPORT ORDERS & ENQUIRIES FOR TECH. KNOWHOW SOLICITED**



உணவே மருந்து, மருந்தே உணவு, இதுவே சித்த வைத்தியம்

# அரவிந்த் ஹெர்பல் லேப்ஸ் லிமிடெட்

NATURE CURE

255. மாடசாமி கோவில் தெரு
**இராஜபாளையம் . 626 117**

| Phone : | | |
| --- | --- | --- |
| Clinic | : | 23288 |
| Medicals | : | 21288 |
| Lab | : | 21280 |
| Resi | : | 22589 |

நாற்பது ஆண்டுகள் அனுபவமிக்க டாக்டர் P. ராஜாலிங்கம் அவர்களின் அனுபவ ஆராய்ச்சியால் உருவாக்கப்பட்ட 140-க்கு மேலான மூலிகை சித்த மருந்துகள் தயாரிப்பாளர்கள்.

எமது தயாரிப்புகளில் சில -

**அரவிந்த் ஹெர்பல் டீ** = காபி-டீ-பழக்க வழக்கத்தை மாற்றி புத்துணர்ச்சியும், நோய் எதிர்ப்பு தன்மையும் அளிக்கும். முற்றிலும் மூலிகைகளினால் உருவாக்கப்பட்ட சுவையான டீ -

**செம்பருத்தி கூந்தல் தைலம்** = செம்பருத்திபூ -மருதாணி, கருவேப்பிலை, பொன்னாங்கன்னி, கரிசலாங்கன்னி -அவுரி, கற்றாலை, நெல்லிக்காய் மற்றும் பல மூலிகைகள் அடங்கி கூந்தல் வளர்ச்சி மற்றும் கருமையான கூந்தலுக்கு -

**அரவிந்த் பிருந்தா பல்பொடி** = பற்களின் உறுதி, ஆரோக்கியத்திற்கு மூலிகைகள் மட்டுமே அடங்கிய மென்மையான பல்பொடி -

**அரவிந்த் மூலிகை குளிக்கும் தூள்** = சோப், ஷாம்பு இவைகளில் உள்ள ரசாயனக் கலவைகளால் சருமத்திற்கும், கேசத்திற்கும் ஏற்படும் கேடுகளை போக்க, இயற்கை மூலிகையிலான தூள் -

நித்தம் உபயோகிக்கும் ரசாயன பொருட்களிலிருந்து விடுதலை பெறுங்கள். இயற்கை மூலிகைகள் பயன்படுத்தி நோயின்றி இன்பமாக வாழ அரவிந்த் அழைக்கிறது-

சென்னையில் மருத்துவ ஆலோசனைக்கு-
**டாக்டர் P. ராஜாலிங்கம்** அரவிந்த் ஹெர்பல் கியூர்.
**9-C. ஸ்பென்ஸர் பிளாசா. 2 வது மாடி மவுண்ட் ரோடு - சென்னை.**




படிப்பகம்

www.padippakam.com

உ

சரவண பவ

தினசரி காலை டிபன், காபி, 2 வேளை பிராமணாள் உணவு, தங்குமிடம் உள்பட சுற்றுலாக்கள்.

## மலைநாட்டு திருப்பதிகள் — ஆழ்வார் நவ திருப்பதிகள்

மலைநாட்டு திருப்பதிகள் (கேரளா) நம்மாழ்வார் நவதிருப்பதிகள். (நெல்லை). குருவாயூர் – காலடி – சோட்டாணிக்கரை – திருவனந்தபுரம். 24–1–96 முதல் 5 நாட்கள் டீலக்ஸ் பஸ் சுற்றுலா ரூ. 790

## வடஇந்தியா - இமாலய சுற்றுலா.

மதுரா – ஆக்ரா – டெல்லி – ஹரித்துவார் – ரிஷிகேசம் – காசி – கயா – அயோத்தியா – திரிவேணி 11.2.96 மற்றும் 15.3.96 மற்றும் 2.5.96 முதல் 12 நாட்கள் தூங்கும் வசதி ரயில் சுற்றுலா ரூ.2590. (இத்துடன் கூடுதலாக 6 நாட்கள் சேர்த்து, கல்கத்தா – பம்பாய் – பார்த்து வர ரூ.3990.) 2.5.96ல் புறப்படும் சுற்றுலாவில், மேலும் 9 நாட்கள் சேர்த்து (மொத்தம் 27 நாட்கள்) கேதார்நாத் – பத்திரிநாத் – நேப்பாள் – பார்த்து வர ரூ.5990.

## காசி - கல்கத்தா - பூரி

பூரி – கோனார்க் – புவனேஸ்வர் – கல்கத்தா – கயா – காசி – திரிவேணி – 15.3.96 மற்றும்15.4.96 மற்றும் 2.5.96 மற்றும் 18.5.96 முதல் 10 நாட்கள் தூங்கும் வசதி ரயில் சுற்றுலா ரூ.1990.

## நவஜோதிர்லிங்கம் - பஞ்சதுவாரகா

திரியம்பகம் – பீமசங்கர் – வைத்தியநாத் – கிருஷ்ணேஷ்வர் – சோமநாத் – நாகநாத் – உஜ்ஜனி – ஓம்காரம் – ஸ்ரீசைலம் – பஞ்சதுவாரகைகள் – பம்பாய் – ஹைதராபாத் – அஜந்தா – எல்லோரா – நாசிக் – 9.2.96 முதல் 18 நாட்கள் 3 TIER ரயில் & பஸ் சுற்றுலா ரூ.3990.

# குமரன் டிராவல்ஸ்

20 வடக்கு சித்திரை வீதி, மதுரை - 625 001. போன் : 621519.

படிப்பகம்

www.padippakam.com

## பொங்கல் வாழ்த்துக்கள்

# தூத்துக்குடி துறைமுகம்

### இந்தியாவின் தென்கோடி நுழைவு வாயில்

192 மீட்டர் நீளமும் 8.24 மீட்டர் ஆழமும் கொண்ட கப்பல்களை நிறுத்துமளவு அமைந்துள்ள ஆறு பக்கவாட்டுத் தளங்கள்.

மூன்று மில்லியன் டன் நிலக்கரியை தூத்துக்குடி அனல்மின் நிலையத்திற்கு அளித்து வரும் பிரத்யேகமான கரித்தளம்.

10 இலட்சம் டன் எண்ணெய் கையாளுமளவுக்கு அமைக்கப்பட்ட எண்ணெய் தளம்.

சாலை மார்க்கமாகவும், புகைவண்டி மார்க்கமாகவும் எளிதில் தொடர்பு கொள்ளுவதற்கேற்ற போக்குவரத்து வசதி.

குறைந்தபட்ச கட்டண விகிதங்களும், சரக்குகள் கையாளும் சலுகை கட்டணங்களும் விரைந்த தொழிற்திறமை.

ஒருங்கிணைந்த உழைப்பாளர்களும், உயர்ந்த உற்பத்தி திறனும்.

சரக்குகள் கையாளுவதில் மிகுந்த கவனம்.

குளிர்பதன கன்டெய்னர்களைக் கூட கையாளும் வசதி.

இத்தனை வசதிகளுடனும் உங்களின் சேவைக்காக என்றும் காத்திருக்கும் இளையதுறைமுகம் தூத்துக்குடி துறைமுகம்.

**எம்.ஜே. குரியன்,**

*தலைவர்,*

**துறைமுக பொறுப்புக் கழகம்,**

**தூத்துக்குடி-4.**

*தொலைபேசி -52290*

*(23 லைன்ஸ்)*

*தொலை அச்சு -0434-243*

*தொலைப்பதிவு -52301.*



படிப்பகம்

www.padippakam.com



# சுழற்சி

விட்டல் ராவ்

புனித மார்க் பள்ளிக் கட்டிடத்தின் பாசிப் பச்சைப் படர்ந்த கள்ளிக்கோட்டை ஓட்டுக்கூரை தெரியத் தொடங்கும்போது அமலாவுக்கு ஞாபகம் வந்தது. அடடா, மறந்து போயிட்டனே - என்று மிகவும் கோணித்துக் கொண்டது அவள் மனம். நேற்று காலை இறை வணக்கத்தின் போதே தலைமையாசிரியையும் கன்னியாஸ்திரியுமான மேரி மகதலின் தாயார் அறிவித்து விட்டிருந்தாள். வருடா வருடம் அறிக்கப்படுவதே அது. முன்னே பின்னே என்றிருந்தாலும், இந்த மாதத்தில் தான் அந்த அறிவிப்பு வரும். அறிவிப்பைத் தொடர்ந்து ஒரு வார காலத்துக்குள் அந்த பெண்மணிகளின் வருகை இடம் பெறும். ஒன்பது வருடமாய் தொடர்ந்து இதே பள்ளியில் படித்து வரும் அமலா இதுவரை மேரி மகதலின் தாயாரின் வேண்டுகோளை இந்த முறை போல உள் வாங்கிக் கொண்டதில்லை. அவள் குடும்பச் சூழலைப் பார்க்கும் போது இந்தப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து படிக்கிறதே ரொம்பப் பெரிய விஷயம். ஒவ்வொரு செலவின் போதும் அவளுடைய அம்மா புலம்புவதுண்டு.

"இந்தப் பள்ளிக் கூடத்துல சேர்த்திருக்கவே கூடாது அதுக்கிதுக்குனு அப்பப்ப பிடுங்கிகிட்டேயிருக்காங்க. கவர்மெண்ட் ஸ்கூலா பார்த்து சேர்த்திருக்கணும்."

அப்பா உடம்புக்கு வந்து வேலையில் நீடிக்க முடியாதென்ற நிலையேற்பட்டபோது அவர் தானாக முன்வந்து வேலையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார். ஓய்வு பெறும் வயதில்லை. தம்பிக்கு வயது ஐந்து. அவளுக்கும் அவனுக்குமிடையே போலியோவால் சற்றே ஊனமுற்ற பெண் ஒன்று. அம்மாவுக்கு அதே அலுவலகத்தில் ஒரு வேலை போட்டுக் கொடுத்தார்கள். அப்பா பார்த்து வந்த பகுதிதானென்றாலும் அவர் பார்த்த வேலைக்கு மிகவும் குறைந்த நிலையிலுள்ளதாகும் அது. அம்மாவின் கல்வித் தகுதிக்கு அதுதான் கிடைத்தது என்பதோடு அதற்குத் தக்கபடி ஊதியமும் குறைவு. கௌரவமும் சற்று குறைவுதான். என்றாலும் இதை வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ள முடியாது. அதே சமயம் இந்த கௌரவப் பிரச்சினையை மாத்திரம் அம்மாவால் மிகவும் எளிதாகத் துடைத்து அப்பால் எறிய
முடிந்தது.

அமலாவுக்கு துணிமணிச் செல
வுகளையெல்லாம் அம்மாவால்
தாராளமாகக் கவனிக்க முடிய
வில்லை. நல்ல வேளையாக பள்
ளிச் சீருடைத் திட்டம் நடைமு
றையிலிருப்பது எவ்வளவுக்கோ
ஒப்பேற்றியனுப்ப ஏதுவாயிருக்கி
றது. ஆனாலும் வீட்டுக்கு வந்த
டன் அமலாவின் மற்றொ
சொந்த உலகம் விழித்து
கொண்டு விடுகிறது. அடுத்த வீட்
டுச் சிறுமிகள், எதிர் வீட்டுச் சிறு
மிகள் என்று ஒப்பிட்டுப் பேசி
கேட்கத் தோன்றுகிறது.

அம்மாவுக்கு, அவள் பணிபுரியு
- சில ஆண்டுகளுக்கு முன் அப்ப
பணிபுரிந்து வந்த - அலுவலகத்தி
இரக்கமும் தர்ம சிந்தனையுமிக்
பெண் ஊழியர்கள் கொஞ்ச
உண்டு. அவர்களில் அனேகர் அ
பாவுக்குச் சமமான உத்தியோகத்
லிருப்பவர்கள். சிலர் அப்பாவை
காட்டிலுமே உயர் படிப்பு படித்
வர்கள். அப்பா, கீழேயிருந்து படி
படியாக பதவியில் உயர்ந்திரு
வர். அத்தோடு பெண் சிப்பந்திக
வீட்டு வருவாய் பயணத்தி
"டபுள் எஞ்சின்" ஓடக்கூடிய செ

படிப்பகம்

www.padippakam.com



ரியம்.

"தப்பா நினைச்சிக்காதீங்க, சம்பூர்ணம், எங்க பொண்ணுக்கு இது சின்னதா போயிட்டது. எம்பொண்ணு கிடு கிடுனு வளந்திட்டு வருது. இதை ரெண்டு மூன்று தடவைதான் போட்டிருப்பா. நல்ல மட்டீரியல்...", என்று சொல்லிக் கொண்டே அந்த சட்டையை எடுத்துக் காட்டும் போது அமலாவின் அம்மாவால் நிராகரிக்கவே வராது. நிச்சயம் தன்னால் அமலாவுக்கு அது போன்ற தினுசை வாங்கித் தர இயலாது என்பது அவளுக்குத் தெரியும். எனவே பெருமூச்சுக்கு எத்தனை அர்த்தம் இருந்தாலும் உள்ளுக்குள்ளேயே விட்டு விட்டு, சட்டையை வாங்கிக் கொள்ளுவாள். அமலாவுக்கு அனேகமாய் அது கச்சிதமாகவே அமையும். அவ்வாறில்லாவிடினும் தன் தையல் இயந்திரத்தில் அதை அமலாவின் அளவுக்கு சரி செய்து விடுவாள் அம்மா.

ஒன்று மட்டும் நிச்சயமாய் அமலாவுக்கு விளங்கும் - இது அம்மா கடையில் வாங்கினதல்ல, யாரோ கொடுத்தது - என்று. விசேஷ காலங்களில் அக்கம் பக்கத்திலிருந்து தின் பண்டங்கள் வீட்டுக்கு கொடுத்து விடுகின்ற விதமாகவே இது விஷயத்திலும் அவள் மனம் சகஜமாயிருக்கும். ஆனாலும் சினேகிதிகள், "புது சாடி, ரொம்ப நல்லாயிருக்கு", என்று கேட்கும் போது ஒன்றும் பதில் சொல்லமாட்டாள். அம்மா கொண்டு வந்தாங்க - என்று கூறும் போது தனக்கு


படிப்பகம்

www.padippakam.com

நன்கு தெரிந்ததை தான் வெளியில் சொல்லாமல் மறைப்பதும் அவளுக்கு நன்றாகவே தெரிகிறது. ஆம், அம்மாவுக்கு சகஜமாய்ப் போய்விட்ட கௌரவப் பிரச்சினை இவளுக்கு இப்போதிலிருந்த மனதில் குறு குறுக்கும் ஒன்றாக இருக்கிறது.

இவள் உடல் வாகு, வளர்ச்சி குன்றியே இருந்தாள். இவளுக்கென்றே சொல்லி வைத்தாற்போல அம்மாவின் சினேகிதிகள் வீட்டுக் குழந்தைகள் கிடுகிடுவென வளர்ச்சியடைந்து விடுவதாய் இருந்தது. அந்த வகையில் போனவாரம் அம்மா கொண்டு வந்து வைத்திருக்கும் சட்டை ஒன்று இவளுக்கு ஏற்றாற் போல் அங்கிங்கே சிற்சில திருத்தங்கள் செய்யவென தையல் இயந்திரத்தின் மேல் கிடந்தது. அற்புதமான துணி, கண்ணைப் பறிக்கும் வண்ணம், அதி நவீன மோஸ்தர், ரெடிமேட் சட்டைக் கடையின் கண்ணாடிக் காட்சிக் கூண்டில் நிறுத்தப்பட்ட பொம்மைகள் அணிந்திருக்கும் தினுசுகளில் ஒன்று என்பது அமலாவுக்குத் தெரியும். அவர்கள் வீட்டு தையல் இயந்திரத்தில் என்னவோ பழுதேற்பட்டிருந்தது. அதைச் சரி பார்க்க ஒருவனை அம்மா அழைத்திருந்தாள். இன்னும் வரக்காணோம். வந்து விடுவான். அதனால் அந்தச் சட்டை அப்படியே மடிந்த வாக்கில் கிடந்தது.

வருடா வருடம் ஒவ்வொரு வகுப்புக்கும் அந்தச் சுற்றறிக்கை வரும். வகுப்பாசிரியை மாணவிகளுக்காக அதை உரக்கப் படித்துக் காட்டுவாள்.

கடைசியாக சுற்றறிக்கை அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டு விடும். பிறகு அந்தப் பக்கமாய் போய் வரும் சமயமெல்லாம் மாணவிகள் நின்று எம்பியெம்பிப் பார்த்துப் படிப்பார்கள்.

வழக்கமாய் இரண்டு பெண்மணிகள் வருகை தருவார்கள். ஒருத்தி முதியவள். கண்ணாடியணிந்திருப்பாள். ஒவ்வொரு தடவையும் இவள் தவறாது வருவாள். கீச்சென்ற குரல். அனேகமாய் இவள் தான் எதையும் பேசுவாள். எதிர்படும் மாணவிகளையெல்லாம் நிறுத்தி வைத்து தொட்டுத் தொட்டுப் பேசுவாள். இன்னொருத்தி இளம் வயதினளாயிருப்பாள். அதிகம் பேசிக் கொண்டிருக்கமாட்டாள். இந்த வருடம் வருபவள் அடுத்த முறையும் வருவாள் என்பது நிச்சயமில்லை. என்றாலும் வேறு ஒருத்தியே இவளுக்கு பதிலாக வந்தாலும், இளம் வயதினளா கவே இருப்பாள். அப்படி ஒரு ஏற்பாடு போலும். இவர்கள் நார்வே தேசத்திலிருந்து வருகை தருவதாக வகுப்பாசிரியையும் தலைமையாசிரியையும் ஒவ்வொரு முறையும் அறிமுகப்படுத்துவார்கள். சுற்றறிக்கையிலும் அவ்வாறு குறிப்பிட



படிப்பகம்

www.padippakam.com

பட்டிருக்கும்.

"போனவாட்டி நம்ம ஊர் துணிகளையெல்லாம் பீகாருக்கு அனாதைப் பசங்க விடுதிகளுக்கு அனுப்பிச்சாங்களாம். இந்தத் தடவை எதியோபியாவுக்கு அனுப்பறாங்களாம்," என்று வகுப்பாசிரியை கூறினபோது, எதியோபியா எங்கே இருக்கிறது என்ற கேள்வியில் பிள்ளைகள் இறங்கினார்கள். உலகப் படத்தில் அதன் இருப்பைக் காட்டிக் கொடுத்தாள் ஆசிரியை.

சுருக்கமாகவும் அவசரத்துக்காகவும் அந்த அயல் நாட்டுப் பெண்களை, "வறிய சகோதரிகள்" என்றே குறிப்பிடுவார்கள்.

இதுவரை அமலா, வறிய சகோதரிகளின் நலனுக்காக தன் சார்பில் துணிமணி எதையும் அளித்ததில்லை. அப்படியான உணர்வு சமீபத்தில் தான் அவளில் விழித்துக் கொண்டிருக்கிறது. அம்மா தனக்காக எங்கிருந்தோ கொண்டு வரும் துணிமணிகளை ஏற்கும் சமீப காலத்தில்தான் அவளில் இவ்வுணர்வு குடைந்து வருகிறது. அப்ப



**பிச்சையெடுத்ததாம் பெருமாளு, அதைப் புடுங்கிச்சாம் அனுமாருனு, இதையேண்டி போய் தானம் பண்றே?**

டியும் அவ்வுணர்வில் எவ்விதத்திலும் முதிர்ச்சி எதுவும் இருக்கவில்லை என்றாலும், இயலாமை, இல்லாதவர்கள், கொடுத்து உதவுதல் என்பனவற்றின் அர்த்தம் புரிபட்டிருந்தது. தன் கால்களிலேயே முடிந்த வரை நிற்கவேண்டும் என்ற உறுதிப்பாடு, உதவிகளை ஏற்பதில் கௌரவப் பிரச்சினையாக அந்தச் சிறுமியை சங்கடப்படுத்தத் தொடங்கிற்று.

"அம்மா, இந்தச் சட்டைய ஸ்கூலுக்கு எடுத்திட்டுப் போய் புவர் ஸிஸ்டர் ரீலீஃப் சாரிடிக்கு குடுக்கவா?" என்று அனுமதி கேட்டுவிட்டு சட்டையைக் கையில் எடுத்தாள்.

பெரும்பாலும் நேற்றே எல்லோரும் எதையெதையோ துணிமணிகளாகக் கொண்டு வந்து பள்ளியில் சேர்த்துவிட்டார்கள். வறுமை அமலாவுக்கு ஓரளவுக்குப் புரிந்திருந்தது. உலக வறுமைக்காகத் தானும் ஏதாவது உதவவேண்டும் என்பதை விட, எல்லோரும் தருகிறார்கள், நாம் மட்டும் சும்மாயிருப்பதா, நாமும் ஏதாவது தரவேண்டும் என்பதே அவளுக்கு கை வந்த இரக்க உணர்வாக இருந்தது.

ஆனால் அம்மாவுக்கு சரிப்படவில்லை. "பிச்சையெடுத்ததாம் பெருமாளு, அதைப் புடுங்கிச்சாம் அனுமாருனு, இதையேண்டி போய் தானம் பண்றே?", என்றாள் சற்று காட்டமாக.

"எனக்கு வேணாம்மா இது," என்றாள் அமலா பிடிவாதமாக. அம்மா ஏறிட்டுப் பார்த்தாள்.

தன் பெண் வேண்டாமென்று சொல்லிவிட்டதாகக் கூறி திருப்பித் தருவது நல்லதல்ல. கௌரவம் பார், கௌரவம் - என்று எடுத்துக் கொள்வார்கள். இன்று வரை தன் பாலுள்ள கருணை இரக்கமெல்லாம் அடிபட்டுப் போகும் என்றெல்லாம் அம்மாவின் எண்ணம் வளர்ந்தது. அதே சமயம் அதை எடுத்து பள்ளிக்கூடத்துக்கு தானம் பண்ண அவளுக்கு மனம் ஏற்கவில்லை.

"போனவாட்டி செஞ்ச மாதிரி ரெண்டு ரூபா கொண்டு போய் குடுத்திடுடி. அது போதும்," என்று சொல்லிப் பார்த்தாள்.

"வேணாம்மா, சட்டை ஒண்ணு கொண்டு வர்ரதா சொல்லிட்டேன்," என்றாள் அமலா.

அம்மா பதில் ஏதும் சொல்லவில்லை.

"அம்மா," என்றழைத்த பெண்ணை ஏறிட்ட போது, "இனிமே யார் கிட்டேயும் எதையும் கேட்டு வாங்கிட்டு வர வேணாம்," என்றாள்.

"நானா போய் யாசகம் கேட்கிறதில்லேடி. அவங்களாகவே பாவம் பார்த்து கொண்டு வந்து தர்ரது தான். என்ன திடீர்னு இப்ப உனக்கு வந்தது."

"அவங்களா குடுத்தாலும் வேணாம். மட்டமாயிருந்தாலும் சரி. கடையில காசு குடுத்தே வாங்கித் தா ...'

அம்மா பெருமூச்சு விட்டாள். சட்டென்று மகளை மடக்கினாள்.

"கடைத் தேங்காய எடுத்து வழிப் புள்ளயாருக்கு உடைக்கிறாப்பல, யாரோ குடுத்த இதை நீ கொண்டு போய் ஓங்க வீட்டுதுனு சொல்லி குடுக்கிறதா ...," என்று ஒரு மாதிரி சிரிப்பை வரவழைத்துக் கொண்டவளாய் கேட்டாள்.

அமலாவுக்குத் தடுமாற்றமாய் போனது. அந்தளவுக்கு ஜெயித்து விட்ட உணர்வுடன் அம்மா மகளைத் தட்டிக் கொடுத்தவாறு கூறினாள்.

"பரவாயில்லை, கொண்டு போய் குடு...'

"மாட்டேன்.. இதைக் கொண்டு போய்த் தரமாட்டேன்," என்றாள் அமலா.

அம்மா அலுவலகம் புறப்பட்டு போனாள். சாயங்காலம் வீட்டுக்கு வரும் வழியில் நடைபாதையில் குப்பையாகக் குவித்து வைத்துக் கொண்டு ஒருவன் "ஃபாரின்... எல்லாம் ஃபாரின்... இருபதே ரூபா," என்று கூவினான். பெரியவர், சிறியவர், ஆண், பெண் குழந்தைகளுக்கு மிருந்தது. பருத்தி, பட்டு, கம்பளி என்று. ஒரு சட்டை வாங்கிக் கொண்டாள். வீட்டுக்குப் போனதும் அமலா கூறினாள்.

"நாளைக்குத் தான் கடைசியாம். நீ அஞ்சு ரூபா குடுத்திடு கொண்டு போய் குடுத்திடறேன்."

"அதுக்குத் தான் இதை பிளாட்பாரத்திலேந்து புடிச்சாந்தேன். கொண்டு போய் குடுத்திடு," என்று காசு கொடுத்து வாங்கிய பெருமையுடன் நீட்டினாள் சட்டையை. மகளின் உணர்வையும் மதிக்க வேண்டுமென்ற எண்ணம் அவளுக்கு இல்லாமலில்லை. அமலா அதை வாங்கிக் கொண்டு பள்ளிக் கூடம் போனாள். சாய்வு நாற்காலியில் மௌனமாய் இருந்தார் அப்பா.

சாயங்காலம் வீடு திரும்பின அமலா சோர்வுடன் காணப்பட்டாள்.

"ஏண்டி," என்றாள் அம்மா.

"புவர் சிஸ்டர்ஸ் வர்லே. போயிட்டாங்களாம் ... பரவாயில்லே, அடுத்த தபா குடு - அப்படினு சொல்லிட்டாங்க ...' என்றாள் அமலா.

▲


படிப்பகம்

www.padippakam.com



# பெருக்கு

**வண்ணதாசன்**

ராமலிங்கம் சித்தப்பா வீட்டுக்குள் இருக்கிற மர ஏணி வழியாகத்தான் சிரமப்பட்டு ஏறி வருவார்.

செங்குத்தான அந்தப் படிகள் தவிர, தொங்குகிற கயிற்றைப் பிடித்து உந்தி வேறு மேலே ஏற வேண்டும். சொல்லப் போனால் சித்தப்பா அப்படி வருவதுதான் எனக்குக்கூடப் பிடித்திருந்தது.

தண்ணீருக்குள் முங்கிக் கிடந்து எழுந்திருப்பது போல, அந்த ஏணிப் படிக்கட்டின் உச்சியில் இருந்து சித்தப்பா தலை திடீரென்று வெளிப்படுகிற நேரம் நன்றாகவே இருக்கிறது எப்போதும்.

'மகன் என்ன செய்துக்கிட்டு இருக்கான்?' -சித்தப்பா மூன்றாவது நபர் ஒருவரைக் கேட்பது போல இருக்கும். அது என்னைத்தான். என் பெயரைச் சொல்லி, 'நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்' என்று கேட்பது சித்தப்பாவின் வழக்கமே இல்லை.

ராமலிங்கம் சித்தப்பா அப்படி ஒன்றும் உயரமும் தண்டியுமான ஆளில்லை. ஆனால் அந்த ஒல்லியான உடம்பைப் போர்த்துகிற அளவுக்குக்கூட மேல் துண்டு இருக்காது. 'பெரிய துண்டாகப் போர்த்துக்கிட்டா என்ன' என்று நான் ஒருபோதும் கேட்கப் போவது இல்லை. ஆனால் அப்படிக் கேட்டு விடுவேனோ என்பது போல,

'நான் இருக்கிற யோக்யதைக்கு இதுவே ஜாஸ்தி' என்று மேல்துண்டைக் கழுத்தைச் சுற்றிப் போட்டுக் கொள்வார். ராமலிங்கச் சித்தப்பாவைச் சட்டையுடன் பார்ப்பது அபூர்வமே தவிர, மற்றப்படி அவர் வேலைபார்க்கிற பள்ளிக்கூடத்திலும் சரி, வெளியிலும் சரி நல்ல பெயர்தான்.

'நல்ல பெயரை வச்சு என்ன பண்ண?' -சின்னம்மை ஏதோ ஒரு கஷ்டத்தில் இதைச் சொல்லியிருக்க வேண்டும். மூத்த குழந்தை பெண் குழந்தை. அது கூடப் பரவாயில்லை. வாய் பேச முடியாததால் போய்விட்டதுதான் அநியாயம். பிறவியில் இருந்தே பேச்சு வரவில்லை. இரண்டாவதும் மூணாவதும் பையன்கள். அவர்களுக்கும் படிப்பு வருவேனா என்றது. சின்னம்மை வருத்தப்படாமல் என்ன செய்வாள்.

'எங்க அம்மை பேரு விட்டவனாவது முன்னிலைக்கு வந்தானே'- எனக்கு வேலை கிடைத்தபோது சித்தப்பா அப்படித்தான் சொன்னார்கள்.

'உனக்கு வேலை கிடைச்சதில சந்தோஷம்ப்பா. நல்லா இருன்னு சொல்லித் திருநீறு பூசிவிட்டால் என்ன! -சின்னம்மை திருநீற்று மர வையைக் கையில் வைத்தபடி சொன்னாள்.

அவர்கள் வீட்டுக்குள் நான் நிற்கிறேன்.

'வேற ஏதும் இனிப்பு இல்லை' என்று சின்னம்மை சீனி போட்டு நனைத்துக் கொண்டு வந்த அவல் ஸ்டூலில் இருக்கிறது. நான் வேலை கிடைத்ததாகச் சொன்னதும், 'இரு வந்திருதேன்' என்று சின்னம்மை ஏற்றின விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

சித்தப்பா எனக்குத் திருநீறு பூசினதும் இல்லை. நேரடியாக எதையும் சொன்னதுமில்லை. பக்கத்தில் வந்து என் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டார்.

திடீரென்று சித்தப்பா என்னை அவருடைய சிநேகிதன்களில் ஒருதனாக அந்த நிமிடத்தில் இருந்து உயர்த்திவிட்டது போல இருந்தது. பத்து நாட்கள் கழித்து ஒரு சனிக்கிழமை ராமலிங்கச் சித்தப்பா வ

படிப்பகம்

www.padippakam.com

தார்.

'உன்கிட்டே சைக்கிள் இருக்குல்லா?' என்று கேட்டார். அப்படிக் கேட்டால் 'சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்படு' என்று அர்த்தம்.

'ஒரு துண்டு இருந்தால் நல்லது' என்றார். நான் குளிக்கிறதுக்குத் தோதுவாக ஒரு துண்டையும் சோப்பு டப்பாவையும் எடுத்துக் கொண்டேன்.

'சோப்பு வேணுமா?' என்றார். வேண்டாம் என்று நான் வைத்துவிட்டுச் சைக்கிளை எடுக்கையில் அம்மா வந்து,

'எங்கே புறப்பட்டாச்சு அப்பாவும் புள்ளையும், இந்த அடைமழையில' என்று கேட்கும்போது ராமலிங்கம் சித்தப்பா சிரித்தார். முகம் அபூர்வமாக இருந்தது.

'மேலக்குளம் பெருகியிருக்கிறதாம்' -சித்தப்பா என் தோள்மேல் கையை வைத்துக்கொண்டு சொல்லும்போது நிறைந்து தளும்பிக் கொண்டு இருந்தார்.

'எல்லாத்தையும் விற்றுத் தலைமுழுகின பிறகு, பெருகினா என்ன, பெருகாவிட்டால் என்ன' -அம்மா சட்டென்று கோபப்படுகிற குரலில் சொன்னாள். வருத்தம்தான் அப்படி இருந்தது.

'எவ்வளவு வருஷம் ஆச்சு பெருகி' -சித்தப்பா மறுபடியும் சொல்லிவிட்டு நடையை விட்டு இறங்கினார். தெருவாசலில் அவர் சைக்கிள் இருந்தது.

சித்தப்பா அவருடைய துண்டைத் தலைப்பாகையாகக் கட்டிக் கொண்டார். இரண்டு சிகரெட்கள் வாங்கி மடியில் வைத்துக் கொண்டார். எனக்கு முன்னால் மிதித்துக் கொண்டே போய்க் கொண்டிருந்தார்.

திருக்கல்யாண மண்டபம் தாண்டி, அல்லா கோவில் தாண்டி, பெரியகுளம் பக்கம் வரும்போது 'பார்த்தியா' என்றார்.

சைக்கிளை நிறுத்தவில்லை. பெரியகுளம் நிரம்பியிருந்தது. செம்மண் கலரில் புதுத் தண்ணீர் அலையடித்துக் கிடந்தது. கெட்டியாகத் தெளிவற்றுத் தத்தளித்துக் கொண்டிருந்த குளத்தைச் சித்தப்பா ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை.

இரண்டு இடங்களில் பெரிய தண்ணீர்ப் பாம்புகள் அடிபட்டுக் கிடந்தன. ரோடு ரொம்ப மோசமாக இருந்தது. ஆலமரங்கள் வரிசையாக இருந்தன. ஒருகாலத்தில் மிகப் பெரியதாக இருந்து, வயது காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறுகிவிட்டதுபோல், மரப்பல்லி நிறம்போல ஒரு வகையில் உப்புப் பொரித்து நிற்கிற மரப் பட்டைகளுடனும் விழுதுகளுடனும் குறுகலான பாதையில் முகத்தை உரசிக் கொண்டிருந்தன அவை.

கிருஷ்ணப்பேரி பச்சேரியில் யாரும் இறந்து போனார்களோ என்னவோ. இசக்கி அம்மன் கோவில் பக்கத்தில் ஆட்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

'டவுன் பஸ் வந்துக்கிட்டிருக்கா தெற்கே இருந்து' என்று எங்களிடம் கேட்டார்கள். அவர்களைத் தாண்டி முப்பதடி தூரத்தில் இன்னொரு சுடலைமாடன் கோவில். குங்குமம் அப்பின பீடத்தின் முன்னால் மரணம் சுழன்று சுழன்று சாமியாடிக் கொண்டிருந்தது.

ஒரு ரயில்வே கேட் வந்தது.

'சௌக்கியமா சுப்பையா' என்று சித்தப்பா கேட்டார். கேட் கீப்பர் ரொம்ப சந்தோஷமாகப் பதிலுக்கு விசாரித்தார். பக்கத்தில் எருக்கலஞ் செடிகள் அம்பாரமாக வளர்ந்து கிடந்தன. ரோட்டோர வயலில் தரைமட்டத்துக்குக் கிணற்றுத் தண்ணீரில் மேகம் நகர்ந்தது.

'குளம் பெருகியிருக்கா' -சித்தப்பா கேட்டார்.

'மறுகால் போகுது' என்று பச்சைக் கொடியுடன் சுப்பையா பதில் சொல்லும்போது தூரத்தில் குட்ஸ் வண்டி வர ஆரம்பித்தது. ஒரு குதூகலத்துடன் ஒவ்வொரு பெட்டியும் நகர்ந்து போய்க் கொண்டே இருந்தது.

'கார்டு தெரிஞ்ச பையன்தான்' என்றார் சித்தப்பா.

ஏற்கனவே மழை பெய்திருந்து, இன்னும் மழை பெய்யப் போவது மாதிரியான வேளையில், சந்தோஷமாக நத்தைகள் நகர்ந்து போய்க் கொண்டிருக்க, அந்த ரயில்வே கேட் திறந்த விதம், குட்ஸ் வண்டி போனதால் ஒருவகையாகக் கதகதப்பாகியிருந்த காற்று எல்லாம் எங்களை இன்னோர் இடத்துக்குக் கொண்டு போயிருந்தது.

'போயிட்டு வாரோம்' என்று சித்தப்பா சைக்கிளில் காலை தூக்கிப் போடும்போது, அவரும் நானும் இரண்டு பறவைகள் போல் ஆகிவிட்டிருந்தோம். நூற்றுக்கணக்கான பனைகள் திடகாத்திரமாக நிற்க, ஒற்றையடித் தடங்களில் பறந்துகொண்டே இருந்தோம். நேற்றோ முந்தின நாளோ மழைத் தண்ணீர் இப்படித்தான் ஓடியிருக்க வேண்டும்.

சலசலப்பே அற்ற, நனைந்து கிடக்கிற பனந்தூர்கள் விலகி விலகி வழி கொடுத்துக்கொண்டே வர, பனை ஓலைகளுக்கிடையே வானம் எங்கெங்கோ தப்பித்துப் போய்க் கொண்டிருந்தது.

சித்தப்பா சைக்கிள் நின்ற இடத்தில் அம்மன்கோவில் இருந்தது. சிவப்பு வஸ்திரம் இருந்தது. சித்தப்பா கண்ணைத் துடைத்துக் கொண்டிருந்தார்.

'பேராச்சி. நம்ம குலதெய்வம். கும்பிட்டுக்கோ' என்றார்.

குளத்தங்கரையில் இருந்து குளிர்ந்த காற்று, நகர்ந்து வந்து கொண்டிருந்தது. கருவை மரங்க




படிப்பகம்

www.padippakam.com

ளில் தொங்கின பச்சைப் பாம்பு கள் அந்தக் குளிர்ந்த காற்றையும் வெய்யிலையும் தங்கள் மேல் பூசிக் கொள்வதுபோல், அவ்வப்போது திரும்பிக் கொண்டிருந்தன.

மருகால் பாய்கிற சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டு இருந்தது. அந் தச் சத்தத்தை நோக்கி ஒவ்வொரு எட்டாக வைத்த மைனாக்கள், விரட்டப்பட்டது போல் திரும்பிக் கொண்டிருந்தன. தட்டான்கள் பறந்து பறந்து, புற்களின் நீண்ட பூக்குஞ்சங்களுக்கு விளையாட்டுக் காட்டுவது போலத் தாழ்வாக இடம் மாறின.

சித்தப்பா சாவிக்கொத்து, சிக ரெட், தீப்பெட்டி எல்லாவற்றையும் கரையில் வைத்தார். தும்பைச் செடிகளுக்குள் பொன்வண்டு அப் பிக் கிடந்தது. பிரண்டைக் கொடி கள் செம்மண்ணில் படர்ந்து இலந் தைப் புதர் வரை போயிருந்தது. இலந்தை மூட்டில் சடைசடையாக நத்தைக் கூடுகள். முட்களில் செருகி உறைந்து நூற்றாண்டு கால மாகக் கிடப்பதுபோல் மழைத் துளிகள்.

சித்தப்பா அரைஞாண் கொடி யில் வெள்ளித் தாயத்து தொங்கி யது.

குளத்தில் சித்தப்பா இறங்க இறங்க இடுப்பில் உடுத்தியிருந்த துண்டில் செம்மண் காவியுடன் தண்ணீர் படர்ந்தது.

'யம்மா' ராமலிங்கச் சித்தப்பா நாக்குக் குழறியதுபோலச் சத்தம் போட்டுக் கொண்டே தண்ணீரில் அமிழ்ந்தபோது சட சடவென்று பனங்காட்டுக்குள் இருந்து சூரியன் ஒவ்வொரு பனையாகத்தாண்டி ஓடிவந்து கொண்டிருந்தது.

இரண்டு மூன்று குஞ்சுத் தவளை கள் உள்ளே குதிக்க, சற்றுத் தள் ளிப் போய் நான் இறங்கினபோது ஊமத்தம்பூக்களைத் தாண்டித் தூரத்தில் என் சைக்கிள் சக்கரம் மெதுவாகச் சுழன்று கொண்டிருந் தது. ஒரே ஒரு காகம் சித்தப்பா வின் சைக்கிள் சீட்டில் உட்காரப் போவதுபோல வந்துவிட்டு அப்பு றம் பறந்தது.

ஒரு விதை சிறிக்கொண்டு முளைக்கிறதுபோல சித்தப்பா அப் படித் தண்ணீருக்குள் இருந்து வெளிப்பட்ட விதம்தான், பின் னால் அவர் ஏணிப்படி ஏறிவருகிற போதும் எனக்கு ஞாபகம் வந்தி ருக்க வேண்டும். ஆட்டுக் குட்டி கள் கத்துகிற சப்தம் கேட்க ஆரம் பித்து விட்டிருந்தது.

□

ராமலிங்கச் சித்தப்பாவும் நானும் அதற்கப்புறம் நான் முதல்



படிப்பகம்

www.padippakam.com

# என்னிடம் இப்படியெல்லாம் பேசலாமா சித்தப்பா?

சம்பளம் வாங்கின பிறகு கல்லூர்ப் பிள்ளை கடையில் இட்டிலி சாப்பிட்டோம். 'வா எங்கேயாவது போவோம்' என்று சித்தப்பா கூப்பிட்டார். ரயில்வே பீடர் ரோட்டு வழியாக என்னைக் கூட்டிக் கொண்டு போனார். மந்திரமூர்த்தி ஹைஸ்கூல் வழியாக வரப்புகளில் நடந்து சென்று அடைந்த இடம் அறுப்புக் களம்போல் இருந்தது. ஒரு பெரிய பூவரச மரம்.

'கொஞ்சம் உட்கார்ந்திருப்போம்' என்றார். மேல்துண்டை உதறிக் கீழே விரித்தார். 'நீயும் உட்கார்' என்றார்.

'அந்தக் கிணற்றைப் பார்த்தியா' என்று காட்டினார். செங்கல் கட்டுமானம் உள்ள சதுரக் கிணறு. தெப்பக்குளம் மாதிரி இருந்தது. செங்கல்கள் மக்கிப் பொடிந்து உருவம் இழந்து கூழாங்கற்களைப் போலத் துருத்திக் கொண்டிருந்தன. கொடுக்காப்புளி மரத்தில் காக்காய், கிளி ஏதோ கொத்தியதில் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே லாடம் மாதிரி ஒரு கொடுக்காப்புளி நெற்று தண்ணீரில் விழுந்து, சற்று நேரம் அசைந்துகொண்டே இருந்தது.

'பேராச்சி இப்படித்தான் மிதந்தாள்' என்றார்.

நான் சித்தப்பாவிடம் யார் பேராச்சி என்று கேட்கவில்லை. கொடுக்காப்புளி நெற்று சுழன்று சுழன்று பேராச்சியாக மிதந்து சித்தப்பாவையே பார்த்துக் கொண்டிருந்ததில் எல்லாம் சொல்லப்பட்டு விட்டிருந்தது.

'பெரியவளுக்குப் பேச்சு எப்படி வரும் பின்னே' என்றார். எனக்கு மூச்சுத் திணறுவதுபோல இருந்தது. எங்கெங்கிருந்தோ இரண்டு நுனிகளை எடுத்து முடிச்சுப் போட்டு என் முன்னால் வீசிக் கொண்டே போகிற ராமலிங்கச் சித்தப்பா.

'உங்க தாத்தா இதுக்கெல்லாம் சேர்த்துத்தான் கிடையில கிடந்து அழுந்திச் செத்தாரு கடைசியில' என்றார். எப்போது இரண்டுபேருமே எழுந்திருந்தோம் எனத் தெரியவில்லை.

திரும்பிப் பார்த்தபோது சித்தப்பா, களத்தில் விரித்திருந்த துண்டு ஒரு சுருக்கமும் இல்லாமல் பாளம்போல அப்படியே கிடந்தது. சித்தப்பா ஒரு பூவரசம்பூவைப் பறித்து அந்தத்துண்டில் போட்டார். போட்ட அதிர்ச்சியில் பூ சற்றுத் திகைத்து கொஞ்ச நேரம் மஞ்சளாகப் புரண்டு மறுபடி அசைவற்றதாயிற்று.

'எப்படி இருக்கு பார்' என்றார். சித்தப்பா ஒரு எளிய பரவசத்தில் இருக்கிறதாகவே பட்டது.

இதே வார்த்தைகளைத்தான் அவர் பின்பு இன்னொரு முறை சொன்னார்.

□

அவ்வப்போது சித்தப்பா வருகிற சமயம், அலுவலகத்தில் இருந்து நான் எடுத்து வருகிற பத்திரிகைகளைப் படிப்பது உண்டு. அதை எடுத்துக் கொண்டு ஜன்னல்பக்கம் போய்த் தரையில் உட்கார்ந்து கொள்வார்.

'நீ ஏதாவது ஜோலியிருந்தால் போயிட்டு வா. நான் இருந்து படிச்சுட்டுப் போறேன்' என்று புத்தகத்திலிருந்து நிமிராமல் சொல்வார். நான் போனபின்னால் சித்தப்பா புத்தகங்களைப் படித்துக் கொண்டு இருப்பதோ நான் வருவதற்கு முன்பே ஜன்னலின் பக்கம் வாசித்துக் கொண்டு இருப்பதோ புதியது ஒன்றுமில்லை.

அன்றைக்கு நான் வரும்போது, கதவு லேசாகத் திறந்திருந்தது. நெல் வெந்துகொண்டிருந்ததால் உலராத ஒரு வாசனை அடித்தது. நெல்லைக் கொத்திக் கொண்டிருந்த குருவிகள் ஏழெட்டுப் பறந்தன. இடதுபக்கம் வழியாக நிஜக் குருவிகளும் வலது பக்க நிலைக் கண்ணாடியில் குருவிகளின் பிம்பங்களும் பறந்து' கொண்டு இருக்கையில் ராமலிங்கச் சித்தப்பா அந்த ஆங்கிலப் புத்தகக்தைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

நிறைய நிறையப் புகைப்படங்களுடன் வெளியாகியிருந்த ஆண்டு மலர் அது. இதுபோன்ற புத்தகங்களில் அடிக்கப்பட்டிக்கிற பின்களை நான் ஏற்கனவே அகற்றிவிட்டிருந்தேன்.

என்னைப் பார்த்ததும் சித்தப்பா கூச்சப்பட்டு அந்தப் புத்தகக்தை மூடவில்லை. பார்த்த பக்கத்தோடு வைத்துவிட்டு எழுந்து வேறு ஏதாவது பேச்சுக் கொடுக்கவில்லை. மேற்கொண்டு ஒவ்வொரு பக்கமாகப் பார்க்க ஆரம்பித்தார்.

சில பக்கங்கள் குறுக்குவாட்டில் பார்க்க வேண்டியிருந்தது. மடக்கி வைக்கப்பட்டிருந்த சில படங்களை விரித்து பெரிய அளவில் சற்றுத் தள்ளிவைத்துப் பார்க்க வேண்டியதிருந்தது.

பறந்துபோன குருவிகள் திரும்பி வர ஆரம்பித்தன. ஜன்னல் கதவில் இருந்ததும் ஊஞ்சல் கம்பியில் இருந்ததும் நிலைக் கண்ணாடி ஆணியில் இருந்ததும் இறங்கி நெல்லைக் கொறிக்க ஆரம்பித்து விட்டன. சித்தப்பா அடையாளத்துக்கு ஒன்றிரண்டு படங்களில் விரல்களைச் செருகினவராக மேற்கொண்டு கடைசிவரை திருப்பிக் கொண்டிருந்தார்.

சொர சொரப்பான நெல் முனைகளில் வெளிச்சம் குத்திக் கொண்டு வெளியே போன மற்றக் குருவிகளும் வரக் காத்திருந்தது. எல்லாவற்றையும் பார்த்துவிட்டு அடையாளத்திற்கு விரல்களை வைத்திருந்த பக்கங்களை விரித்து, என் பக்கம் காட்டி ராமலிங்கச் சித்தப்பா 'எப்படி இருக்கு பார்' என்றார்.

பூவரசம்பூ துண்டில் விழுந்து கிடந்தது மறுபடி ஞாபகம் வந்தது. முழுவதும் நீட்டின அவர் கைகளில் புத்தகம் இருக்க நான் நின்று கொண்டிருந்தேன். என்னால் பார்க்க முடியவில்லை.

ரொம்பத் தனியா இருக்கும்போது உங்க சின்னம்மையைப் பேராச்சின்னுதான் கூப்பிடுவேன்' என்றார்.

'என்னிடம் இப்படியெல்லாம் பேசலாமா சித்தப்பா?' கேட்கவில்லையே தவிர அப்படித்தான் ஏறிட்டுப் பார்த்தேன். சித்தப்பா ஒன்றும் சொல்லாமல் புத்தகத்தை மூடி மேஜையில் வைத்தார்.

படித்துறையில் இருந்து தண்ணீருக்குள் இறங்குவதுபோல ஏணிப் படிகளில் இறங்க ஆரம்பித்தார். கொஞ்சம் கொஞ்சமாகக் கசத்துக்குள் இறங்கி முங்கிக் கொண்டே போவதுபோல் அவருடைய இடுப்பு, தோள், தலை எல்லாம் மறைந்து கொண்டு இருந்தது. ▲


படிப்பகம்

www.padippakam.com



"ஒரு கலைஞன் தன் வேர்களை இழந்துவிடும்போது அவன் தனது கலைப்படைப்பில் நிறைய மதிப்பீடுகளை இழந்து விடுகிறான்."

# மாறிவரும் நவீன கலை

இந்திரன்

கலை என்பது வற்றாத நதி. அது நில்லாது ஓடிக் கொண்டிருக்கிறது. அதனை, காவிரி என்றும், கொள்ளிடம் என்றும், அகண்ட காவிரி என்றும் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு பெயரிட்டழைக்கிறோம். ஆனால் நதி இவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அது சதா நகர்ந்து கொண்டேயிருக்கிறது.

இப்படித்தான் நவீன கலையும்: கியூபிசம், எக்ஸ்பிரஷனிசம், சர்ரியலிசம், பாய்ன்ட்டிலிசம் என்று நவீன கலையின் பல்வேறு போக்குகளைப் பல்வேறு பெயரிட்டழைக்கிறோம். மனிதனின் வாழ்க்கை சதா மாற்றத்தைச் சந்தித்து கொண்டிருக்கிற வரையிலும் கலையும் இப்படித் தான் மாறும் என்பது விதி.

இந்தியாவைப் போன்ற மூன்றாம் உலக நாடுகளிலும் கூட தொழில்நுட்பம் தனது தலையை நீட்டி விடுகிறது. மாடு கட்டி பிணையல் அடித்து நெல்மணிகளை நெற்பயிரிலிருந்து பிரித்துக் கொண்டிருந்தவர்கள் கூட இன்று நெடுஞ்சாலைகளில் அறுவடை செய்தவற்றைப் பரப்பி மோட்டார் வாகனங்களின் ஓட்டத்தில் அதனைச் சாதித்துக் கொள்கிறார்கள். மாட்டு வண்டிகளின் சக்கரங்களுக்குள் தொழில் நுட்பத்தினால் கிடைத்த 'பால் பேரிங்குகள்' வந்து உட்கார்ந்து கொள்கின்றன. சக்கரத்தைச் சுழற்றி களிமண்ணைப் பிசைந்து வைத்து, விரல்களால் தொட்டுத் தடவி பானைகள் செய்யும் குயவனின் கரங்களிலிருந்து, ஒன்றைப் படைப்பதால் ஏற்படும் உன்னத மகிழ்ச்சி பறிக்கப்பட்டு விடுகிறது. பிளாஸ்டிக் பானைகள் கிராமத்து குடிசைகளுக்குள்ளும் குடியேறி விடுகின்றன.

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி கலையின் புனிதத் தன்மையைச் சூறையாடி விடுகிறது. தமிழனின் வாழ்வில் கலைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் புராண வழிபாட்டு ஆற்றலை அது உடைத்து நொறுக்குகிறது. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் கலைச் செல்வங்களைத் தாங்கிய மண்டபங்களும், சிற்பத் தூண்களும் இன்றைக்குக் கடைவீதிகளாக மாற்றப்பட்டு இருப்பதை நாம் காண்கிறோம்.

இது பற்றி அழுது புலம்புவதற்கு ஒன்றுமில்லை. பிரெஞ்சு கலை விமர்சகர் மிக்கேல் டப்ரென் இது பற்றி கூறுகிறார். "கலையின் புராண, வழிபாட்டு, கவிதை இயல்பு மறைந்துவிட்டது தேவை தான் என்று நினைக்கிறேன். இதனால் கலை, தனது நாகரிகத்திற்

படிப்பகம்

www.padippakam.com



முரளிதரன்


கேற்ற ஒரு புதிய, தொழில்நுட்பப் பண்பைப் பெற முடிந்தது. எனவே நவீன கலை, மனிதனுக்கும் உலகிற்கும் உள்ள அடிப்படைத் தொடர்பைப பேசும் ஆற்றல் பெற்றுவிட்டது.

எனவே நமது ஓவியர்களையும், சிற்பிகளையும் எடுத்துக் கொண்டாலும் அவர்கள் தற்காலத்து உளவியலைப் பேசுகிறார்கள். அறிவியலை எடுத்துரைக்கிறார்கள்; தத்துவத்தை கலைப் படைப்புகளாக வெளிப்படுத்துகிறார்கள். மொத்தத்தில் அவர்களது நவீன படைப்புகள் அவர்கள் வாழும் காலத்தைப் பேசுகின்றன.

தமிழ்நாடு உலக உருண்டையின் இருண்ட மூலையாக இப்போது இல்லை. தென்னிந்தியாவுக்கான லலித் கால அகாடமி, சென்னையில் தான் உள்ளது. 'பிரிட்டிஷ் கவுன்சில்', 'அல்லயன்ஸ் ஃபிரான்சே', 'மாக்ஸ்முல்லர் பவன்', 'அமெரிக்கன் சென்ட்டர்' போன்ற வெளிநாட்டுத் தூதரகங்களின் பண்பாட்டுக் கிளைகள் இங்குள்ளன. இவை மேற்குலகின் பண்பாட்டு கலைத் துறைகளின் தற்கால போக்குகளை உடனுக்குடன் நமக்குத் தெரிவிக்கின்றன.

ஓவியர்கள் ஆதிமூலம், தட்சிணாமூர்த்தி, பாஸ்கரன், இளங்கோ போன்ற பலர் பிரிட்டீஷ் மான்யத்துடன் இங்கிலாந்து சென்று வந்தவர்கள். கிராஃபிக் கலையில் தேர்ந்த இராம. பழனியப்பன் அமெரிக்காவிலுள்ள டாமரின்ட் நிறுவனத்தின் பட்டறைகளில் பங்கெடுத்தவர். சோழ மண்டல ஓவியர் கிராமத்தைச் சேர்ந்த நந்தகோபால், கே.எம். கோபால், சேனாதிபதி, டக்ளஸ், ராகவன் போன்ற பல கலைஞர்கள் மேலை நாடுகளுக்குச் சென்று வந்தவர்கள். சென்னை ஓவியக் கல்லூரியில் முதல்வரான அல்போன்சோ பல ஐரோப்பிய நாடுகளில் ஓவியக் கண்காட்சிகளை நடத்தியவர். முரளிதரன் ஸ்காட்லாண்டுக்கும், ஸ்டாக்ஹோம் கலைக் கல்லூரிக்கும் சென்று வந்தவர். எனவே உலகம் முழுவதும் உள்ள கலை, இலக்கிய, பண்பாட்டு போக்குகளின் நேரடி தாக்குதலுக்கு தமிழகம் மிக

வசுதா தொழூர்





படிப்பகம்

www.padippakam.com



சந்ரு

வும் உட்பட்டதாகவே உள்ளது.

இங்கு ஏராளமான கலைஞர்கள் கலை உலகில் சலியாது இயங்கி வருகிறார்கள். (தங்கள் படைப்பு களை விற்பனை செய்வது குறித் தும், விருதுகள் பெறுவது குறித் தும் தங்களுக்குள்ளேயே வெட்டி குத்திக் கொள்வதை நான் இங்கு குறிப்பிடவில்லை) தங்களது கலைத்தேடலினால் நவீன வெளிப் பாட்டு முறைகளைக் கண்டெ டுத்து இருக்கிறார்கள் என்பதையே குறிப்பிடுகிறேன்.

புதியதொரு படைப்பு சக்தி கொண்ட ஒரு தலைமுறை இன்று நமது கலையுலகில் இயங்கி வருகி றது. இந்த புதிய தலைமுறையின் மிக முக்கியமான ஓவியர் இராம.பழனியப்பன். 20-ம் நூற் றாண்டின் கலை சாதனம் என்று

படிப்பகம்

www.padippakam.com

கருதப்படுகிற 'கிராஃபிக் ஆர்ட்' எனப்படும் அச்சுப் பதிவுக் கலையில் தனக்கென தனி முத்திரை பதித்தவர். இவரது பதிப்போவியக் கலை அறிவியலோடு அதிகம் தொடர்பு கொண்டது.

பௌதீக ரீதியான கவனிப்புகள் மட்டுமின்றி அதையும் கடந்த காலம், இடம் சார்ந்த உளவியல் புரிதல்களையும் தனது படைப்புக்குள் கொண்டுவர வேண்டும் எனும் இவரது அதிதீவிர அக்கறை குறிப்பிடத்தகுந்தது. 1980- களில் 'பறத்தல் வரிசை' எனும் படைப்புகளை இவர் செய்யத் தொடங்கிய போது, இந்த மொத்த பிரபஞ்சம் குறித்த பிரக்ஞையினால் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தார். காலம், வெளி ஆகியவை குறித்த ஆழமான சிந்தனைகள் இவரது படைப்புகளுக்கு உலக அளவில் இவருக்கென ஒரு இடம் பெற்றுக் கொடுத்தன. தொடக்க நாள்களில் இவரது படைப்புகளில் இருந்த ஆகாய விமானம் போன்றவற்றின் விசாரணைகள், அறிவியல், தொழில்நுட்ப சிந்தனைகளின் பாதிப்பினால் அம்புக் குறிகளாகவும், குறியீடுகளாகவும், எண்களாகவும் அரூபநிலையை நோக்கி இவரைப் பயணப்பட வைக்கின்றன. இவரது படைப்புகளில் துளைகள், அரக்கு முத்திரைகள், நூலினால் தைக்கப்பட்ட பகுதிகள் என்று கலவையான சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவரது தற்போதைய பழுப்புநிற (Brown) படைப்புகள் அபௌதீக மதிப்பீடுகளைப் பற்றிய ஜியோமிதி முறையிலான வெளிப்பாடுகளாகும்.

இவரைப் போலவே கலைபற்றிய ஆழமான கேள்விகளை சதா எழுப்பிக்கொண்டும், அதனை தனது படைப்புகளில் பரிசீலித்துக் கொண்டும் இருக்கும். மற்றொரு ஓவியர் சந்ரு. சென்னை ஓவியக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரியும் இவர் வரைகலை ரீதியாக படம் பிடிக்கப்படும் உருவங்களின் புறத்தோற்றங்களைக் கடந்து, அவற்றின் சாரமாக எது இருக்கிறதோ அதனை நோக்கிய தேடலைக் கொண்டவர். சந்ரு என்று பரவலாக அறியப்பட்ட ஜி. சந்திர சேகரன் தமிழ் மண்ணின் ஓவிய / சிற்ப மரபுகளை உள்வாங்கி ஜீரணித்துக் கொண்டவர். இதனாலேயே இவரது படைப்புகள் ஆழமான வரைகலையும், பளிச்சிடும் வண்ணத்தேர்வும் கொண்டிருக்கின்றன. இவரது 'புலிவேஷம் எனும் ஓவியம் மனித உடற்கூற்று இயலை சிலர் புரிந்து கொண்டசிறப்பை விளக்கக்கூடியது. புலிவேஷம் ஆடுபவனின் இயக்கத்தின் சாரத்தை அதிலே காணலாம். ஆனால் ஒரு கலை படைப்பின் உன்னதம் கலைஞனின் வடிவத் தொழில் நுட்பத்தால் மட்டுமே நிர்ணயிக்கப்படுவதில்லை. அக்கலைப்படைப்பின் மூலம் வெளிப்படுத்தப்படுகிற கலைஞனின் அழகியல் லட்சியம் என்னவாக இருக்கிறதோ அதைப் பொறுத்தே அப்படைப்பு உயர்வடைகிறது. அத்தகைய சுய விமர்சன வினாக்களை ஏராளமாய்க் கொண்டிருக்கிற சந்ருவின் படைப்புகள் தற்காலத் தன்மை கொண்டவை.

நவீன கலை தன்னை ஓய்வு ஒழிச்சலின்றி விமர்சனம் செய்து கொண்டு நாள்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. இதனால் இந்த மண்ணின் பண்பாட்டுக் கூறுகளாக இருப்பவற்றைப் பரிசீலித்து அவற்றை தற்காலத் தன்மை உள்ளவையாகவும் மாற்றிக் கொள்கிறது. "ஒரு கலைஞன் தனது வேர்களை இழந்து விடுகிற போது அவன் தனது கலைபடைப்பில் நிறைய மதிப்பீடுகளை இழந்து விடுகிறான்" என்று குறிப்பிடுகிறார் ஓவியர் முரளிதரன்.

முரளிதரனின் ஓவியங்கள் தனக்கெனத் தனியான ஒரு அபூர்வ பாணியைக் கொண்டவை. ஒரு குழந்தையின் களங்கமற்ற எளிமை நிறைந்த மழலை போன்ற ஓவிய மொழியில் இவர் இந்த மண்ணின் தொன்மத்தை மறு உயிர்ப்படைய வைக்கிறார். 29 வயது நிரம்பிய இந்த ஓவியர் தனது படைப்புகளில் தமிழில்தான் கையெழுத்திடுகிறார். கீழை உலகம், மேலைஉலகின் கலைப் போக்குகளினால் பாதிக்கப்பட்டது போலவே, மேலை உலகமும் கீழை உலகின் போக்குகளினால் பாதிக்கப்பட்டுள்ளது. ஸ்டீபன்காக்ஸ் (Stephencox) எனும் பிரிட்டிஷ் ஓவியர் மாமல்லபுரத்து சிற்ப வெளிப்பாடுகளால் ஈர்க்கப்பட்டு தமிழகத்திற்கே வந்து தங்கி படைப்புக் கலையில் ஈடுபடுகிறார். இதனால் புதிய சர்வதேச கலைமொழி ஒன்று உருவாக்கப்படும் சகலவிதமான வாய்ப்புகளும் இன்றுள்ளன. இத்தகைய காலகட்டத்தில் முரளிதரன் போன்றவர்களின் நவீன ஓவிய பரிசோதனைகள் மிக முக்கியமானவையாகும்.

குறிப்பாக இந்தியாவைப் போன்ற ஒரு வெப்ப நாட்டில் வாழ்பவர்களின் ஓவியங்கள் அந்த மண்ணில் காணப்படும் வண்ணக் கலவையான தாவரங்களைப் போன்ற பளிச்சிடும் வண்ணங்களைப் பயன்படுத்துவது இயல்பாக நிகழ்வதாகும். அண்மையில் தேசிய விருது பெற்ற ஓவியரான விஸ்வத்தின் படைப்புகள் நீலம், பச்சை, சிவப்பு, மஞ்சள் என்று பார்வையாளர்களைக் கவர்ந்து இழுப்பவை. இளமையில் கிராமத்து இயற்

## தமிழ்நாடு உலக உருண்டையின் இருண்ட மூலையாக இப்போது இல்லை


விஸ்வம்


பழனியப்பன்


ரஃபீக் அகமது


சந்ரு


படிப்பகம்

www.padippakam.com


வல்சன் கொலேரி


வசுதா தொழூர்


முரளிதரன்

# புதியதொரு படைப்பு சக்திகொண்ட ஒரு தலைமுறை இன்று நமது கலையுலகில் இயங்கி வருகிறது


சீனிவாசன்

கையை உட்கொண்டு வளர்ந்த இவரது இன்றைய தைல வண்ண ஓவியங்களிலும் இயற்கையே அரூப வடிவம் கொண்டு விளங்குகிறது. மொத்த பிரபஞ்சத்தில் மனிதனின் இடம் என்ன என்பது குறித்தும், மனிதனின் இருத்தல் குறித்தும் கேள்விகள் பலவற்றை எழுப்பும் இவரது படைப்புகளில் மனிதன் என்பவன் ஆதிகால குகை ஓவியங்களில் விவரிக்கப்பட்டது போன்றே விவரிக்கப்படுகிறான். திருச்சியில் 'புலம் பெயர்ந்தோர் மாநாடு' ஒன்று நடந்தபோது, அதில் பங்குகொண்ட விஸ்வம் பார்வையாளர்களின் முன்னிலையில் இருபது நிமிடங்களில் ஒரு ஓவியத்தைத் தீட்டிக் காட்டினார். பலவித அரசியல் காரணங்களால் உயிர்ப்பிச்சைத் தேடி பல்வேறு நாடுகளில் தஞ்சம் புகும் தமிழர்களின் நிலையைப் பற்றிய மாநாட்டு நிகழ்வுகளினால் உணர்வெழுச்சியடைந்திருந்த விஸ்வம், உடனே அந்த ஓவியத்தைத் தீட்டிக் காட்டியபோது, பார்வையாளனுக்கும், ஓவியனுக்கும் இடையிலான ஒரு கூட்டுப் படைப்புணர்வு அங்கே பரவியிருந்ததை நான் கண்டேன்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் தீட்டப்படும் ஓவியம் நுண்கலை சார்ந்ததா அல்லது வெறும் தொழில் திறமை சார்ந்ததா என்கிற கேள்வியைச் சிலர் எழுப்ப நேரலாம். தமிழகத்தில் வாழ்ந்துகொண்டு தனது அபூர்வமான நவீன சிற்பங்களைச் செய்துவரும் வல்சன் கொலெரி கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

"நான் ஓவியக் கல்லூரியில் முதன்முதலில் புகுந்தபோது, கலை/தொழில் திறமை (Art / Craft) ஆகிய இரண்டிற்குமிடையே தற்கால கலை என்பதின் பெயரால் தீர்க்கமான கோடு கிழிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தேன். இது நமது பழமையான மரபுகளைக் கட்டிக் காப்பதற்குத் தடையாக உள்ளதென்றும், அம் மரபுகளை இன்றைய சிற்பக் கலையில் பயன்படுத்த வேண்டிய அவசியத்தை மறுக்கிறதென்றும் உணர்கிறேன்."

தன்னம்பிக்கை மிக்க இந்த வார்த்தைகளை வல்சன் கொலெரியின் நவீன சிற்பங்களைப் பார்க்கிறவர்கள் மேலும் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். இவரது படைப்புகளில் ஒன்றான 'வெண்கல காலம்' எனும் இவரது சிற்பத்தில் உருண்டுகிடக்கும் சிதிலமடைந்த ஒரு பழைய கல்லுரல், இந்த ஊரிலிருந்து மரபு ரீதியான வடிவமைப்பு கொண்ட ஒரு உலோகத் தூண், இதன் நுனியில் சில அரூப வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சிற்பம், தனது எடை, பருமன், வெப்பம், குளிர், ஆகியவை குறித்த அக்கறையுள்ள மனிதன், தன்னைச் சூழ்ந்துள்ள சூழலுடன் சமநிலையில் நிற்கப் போராடுவதை வெளிப்படுத்துவதாக இவர் படைத்திருக்கிறார்.

ஒரு படைப்பு ஒரு குறிப்பிட்ட கருத்தைத்தான் சொல்ல வேண்டும் என்று நவீன ஓவியன் கருதுவதில்லை. அது பார்வையாளர்களின் அனுபவம், பின்புலத்திற்கேற்ப பல புதிய அனுபவங்களைத் தரவேண்டும் என்றே அவன் விரும்புகிறான். பல நேரங்களில் தனது படைப்பின் பன்முக அர்த்த தளத்தை விரிவு செய்வதற்காகவே அவன் அரூப வெளிப்பாட்டை நாடுகிறான். இத்தகைய அரூப வெளிப்பாட்டை மிகச் சிறப்பாகச் செய்யும் இளம் ஓவியர் சீனிவாசன். ஓவியத்திற்குள்ளிருக்கும் கோடுகளின் ஓட்டம், அவற்றின் அடர்த்தி, வண்ணம், போக்கு ஆகியவற்றைக் கொண்டே சீனிவாசன் தனது வெளிப்பாட்டை மேற்கொள்கிறார். இந்த ஓவியங்களைச் செய்ய இவர் சம்பிரதாயமான தூரிகை, ஓவியம் தீட்டும் கத்தி ஆகியவற்றைப் பயன்படுத்துவதில்லை. மாறாக தலைவாரிக்கொள்வதற்காகப் பயன்படுத்தும் சீப்பு இவரது கையில் கலைசாதனமாகிறது. சித்தானின் வண்ணப் பரப்பில் சதுரம், வட்டம், முக்கோணம் போன்ற ஜியோமிதி வடிவங்களை சீராக ஓடும் கோடுகளோடு படைக்கிறார். இவரது ஆரம்பகால ஓவியங்கள் கடல், வெள்ளம் வசந்தகாலம் என்ற பொருள்களில் இருந்தன. ஆனால் நாளடைவில் அரூபமொழியே மிகவும் சுதந்திரமானதாக இவர் உணரத் தொடங்கிவிட்டார். இவரது படைப்புகள் போலந்து, பிரேசில், ஸ்பெய்ன், ஜப்பான் ஆகிய நாடுகளின் மியூசியங்களில் இடம் பெற்றுள்ளன.

சென்னை ஓவியக் கல்லூரியிலும், இங்கிலாந்திலும் கலைபயின்ற முக்கியமான பெண் ஓவியர் வசுதா தொழூர் இவரது தைல வண்ண ஓவியங்களில் அரூபமும், உருவமும் கலந்து கனவுகளுக்குள் இருக்கும் அபத்தமான ஒரு தர்க்க நியாயத்துடன் காட்சி தருகின்றன. தூரிகையைக் கையிலெடுத்து தனது மனோலயத்திற்கேற்ப நனவோடை உத்தியாகத் தனது ஓவியங்களை இவர் படைக்கிறார். பாதி மறந்தும், பாதி நினைவிலுமாக நிற்கும் கனவில் அர்த்தங்களைத் தேடுவது போன்று இவரது படைப்புகளைப் பார்க்கும் பார்வையாளனைச் செயல்பட வைக்கிறார். இவரது ஓவியங்களில் மார்கழி மாதத்துப் பனிகலந்து புரள்வதுபோல கவிதைத்தனமான ஒரு வெளிப்பாடு கலந்து புரள்கிறது. படிமங்களாகவும், குறியீடுகளாக

படிப்பகம்

www.padippakam.com



வல்சன் கொலேரி

வும் இவரது நவீன வெளிப்பாடு சிறக்கிறது.

நவீன வெளிப்பாடு என்பது பாணிகளின் கண்டுபிடிப்பு மட்டுமல்ல. அது புதிய கலை சாதனங்களின் கண்டுபிடிப்பும் ஆகும். இன்றைய தொழில்நுட்ப சமுதாயம் பல புதிய வெளிப்பாட்டுச் சாதனங்களையும் பயன்படுத்துமாறு தற்கால கலைஞர்களை வற்புறுத்துகிறது. இதன் ஒரு வெளிப்பாடாக மதுரையில் வாழும் ஓவியரான ரஃபீக் அகமது தனது படைப்புகளை 'கொலாஜ்' முறையில் படைத்து வருகிறார். தோல் துண்டுகள், ஓலைச் சுவடிகள், கோணித்துண்டு, கடிகாரத்தின் பழுதடைந்த பாகங்கள் போன்ற பலவற்றையும் தனது கலை வெளிப்பாட்டுக்கான சாதனமாக்கிக் கொள்கிறார். இவரது படைப்புகளில் அதீதமான அதிர்ச்சியூட்டும் காட்சி அனுபவம் நிறைந்துள்ளது. சுயமாக ஓவியம் கற்றவரான ரஃபீக் அகமதுவின் படைப்பில் காணப்படும் உருவங்கள் ஒன்றிற்கொன்று தொடர்பற்றவை. ஆனால் அவற்றிற்குள் ஒரு ஒருமையைக் கொண்டு வருவதிலேயே இவரது கலையின் வெற்றி அடங்கி இருக்கிறது.

ரஃபீக் அகமது



இவ்வாறு தற்காலிகமான கலை சாதனங்களைப் பயன்படுத்துவது என்பது, நவீன கலையின் ஒரு புதிய புகுதலின் அடையாளம் ஆகும். இன்றைய கலையினுள் ஒரு நிரந்தரமற்ற நிலை இருப்பதை இது காட்டுகிறது. இது குறித்து மார்ஷல் டுஷாம்ப் எனும் மேலைக் கலைஞர் சொன்னார்: "இது ஒரு ஓவியனின் தற்கொலைக்குச் சமமானதாகும்". இதே மார்ஷல் டுஷாம்ப் வேறோர் இடத்தில் தனது பிரபலமான 'படியிறங்கும் நிர்வாண நங்கை' எனும் ஓவியம் 20 ஆண்டுகளுக்குப் பிறகு பார்வையாளர்களை அழகியல் பரவசத்தில் ஆழ்த்தும் தன்மையை இழந்துவிட்டது' என்று குறிப்பிடுகிறார். "நிர்வாண நங்கை' இறந்துவிட்டாள்" என்று அவர் தனது ஓவியம் பற்றி அறிவித்தார்.

இது தற்கால உளவியலின் ஒரு வெளிப்பாடு ஆகும். தற்கால உலகில் ஓவியம் என்பதின் இடம் மியூசியங்களிலும், கலை அரங்குகளிலும் உள்ள இருண்ட மூலைகள் அல்ல. கலை புத்தகங்கள், ஓவியக் கண்காட்சிகளுக்கான கையேடுகள், தொலைக்காட்சி, சினிமா ஆகியவையே ஓவியம் / சிற்பத்திற்கான சிறந்த இடம் என்று ஆகிவிட்டது.

ஒரு கலைப் படைப்பு அது படைக்கப்பட்ட சாதனத்தின் பௌதீகத் தன்மையினால் சில ஆண்டுகளின் அதன் புத்துணர்ச்சியை இழந்துவிடலாம். அதே படைப்பு ஒரு ஓவிய புத்தகத்தின் பக்கங்களை அடைகிறபோது அதனது பௌதீகமான பரிமாணங்கள் பலவற்றை அது இழந்து விடுகிறது. ஆனால் அந்த படைப்பு கலை வரலாற்றின் ஒரு பகுதியாகிவிடுகிறது. நவீன சிந்தனையின் ஒரு போக்காகவே மாறிவிடுகிறது.

இன்றைய கலையின் பரிசோதனைகளாக இருக்கிற புதிய தலைமுறையின் படைப்புகள் தமிழகத்துக் கலைவரலாற்றின் பக்கங்களை அலங்கரிக்கப் போகின்றன.

அப்படி ஒரு இடத்தைப் பிடிக்க வேண்டுமெனில் நமது கலைஞர்கள் தொழில் தேர்ச்சி சம்பந்தப்பட்ட வெறும் பாணிகளை கண்டுபிடித்தால் மட்டும் போதாது. படைப்புகள் தற்காலத்தின் சிந்தனைகளாக இருக்க வேண்டும். அப்படைப்புகள் கலைக் கோட்பாடுகள் உருவாவதற்கான அடிப்படையான கேள்விகளை எழுப்பும் வேட்கை கொண்டவையாக இருத்தல் வேண்டும். தமிழகத்தின் புதிய தலைமுறை கலைஞர்கள் நவீன கலையின் புதிய எல்லைகளைக் கண்டுபிடிப்பார்கள் என்கிற நம்பிக்கை துளிர்க்கிறது. ■



படிப்பகம்

www.padippakam.com



**இன்றைய தமிழ் சினிமாவை வடிவமைக்கும் சக்திகளாக ஹாலிவுட் பாணி வியாபாரம், மாநில அடையாளங்களை அழிக்கும் மறு தேசியவாதம் இரண்டும் உள்ளன.**

# மணிரத்னமும் சினிமா அரசியலும்


வெங்கடேஷ் சக்கரவர்த்தி

இயக்குநர், திரைக்கல்வி ஆசிரியர்


"சினிமாவைப் புரிந்துகொள்வது சுலபம்; ஆனால் அதற்கு விளக்கம் அளிப்பது கடினம்"
—கிறிஸ்டியன் மெட்ஸ்.

இந்தியா முழுவதும் புகழேணியின் உச்சியில் நிற்கும் ஒரு பெயர் மணிரத்னம். 'ஏ' கிளாஸ் என்று குறிப்பிடப்படும் நடுத்தர வர்க்க ரசிகர்களிடம் ஓர் அதீத தொழில்நுட்ப சாதனையின் பிரதிபிம்பமாக அந்த பெயர் விளங்குகிறது. மற்ற எல்லா திரைப்படங்களும் எட்டிப்பிடிக்க வேண்டிய ஒரு முன்மாதிரியாகவும், அளவுகோலாகவும் அந்த சாதனை நமது பத்திரிகைகளில் எடுத்துரைக்கப்படுகிறது. இந்த பிரதிபிம்பத்தின் காலச்சுவட்டை 'மணிரத்ன யுகம்' என்று அடையாளம் கூறி பெருமைப்படாதவர்கள் நம்மிடையே குறைவு. சினிமா ஆய்வாளர்களிடைய இது ஒரு பெரிய சர்ச்சைக்குரிய பெயராகவும் இருக்கிறது.

மணிரத்னத்தின் புகழுக்கு காரணமாயிருப்பவை அப்பெயருடன் தொடர்புள்ள திரைப்படங்கள். அவரது திரைப்படங்களே அந்த சாதனையின் வெளிப்பாடுகள். அந்த வெளிப்பாடுகளை நாம் இங்கு அலசும் முன்பு ஒன்றை தெளிவுபடுத்துவது அவசியம்.

ஒரு படைப்பு, ஒரு மொழி, ஒரு கலாச்சாரம் இவற்றை ஒரு தனி மனிதன் ஒரு கட்டுக்குள்ளே அடக்கிவிட முடியாது என்பதால் அவற்றிற்கு அந்த படைப்பாளியே ஒரே மூலகர்த்தாவாக இருக்க முடியாது; காரணம், ஒரு படைப்பின் வழியாக பேசுவது ஒரு கலைஞன் மட்டுமல்ல, ஒரு கலாச்சாரமே பேசுகிறது. அதன் பின்னணியாக விளங்கும் ஆதிக்க அல்லது ஆதிக்க மற்ற அமைப்புக்களும் பேசுகின்றன. தனி மனித திறமைகளைவிட இவற்றை அடையாளம் காணுவது ஓர் ஆய்வின் ஜனநாயக பொறுப்பு.

மணிரத்தின யுகமும் அந்த யுகத்தை சார்ந்த தொழில் நுட்ப சாதனையும் எண்பதுகளின் இறுதியில் எவ்வாறு சாத்தியமாகின? நடுத்தரவர்க்க பார்வையாளர்களிடம் அதிகமான வரவேற்பை பெற்றுவரும் ஹாலிவுட் ரியலிசத்திற்கும் (Hollywood Realism) இந்த யுகத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? ஹாலிவுட்டை எட்டி பிடித்துவிட்டோம் என்ற எண்ணம் மமதையா, நிஜமா? நிஜமென்றால் ஹாலிவுட் இலக்கணத்தில் சூழ்ந்துள்ள அரசியல் – கலாச்சார – சிந்தாத்த வடிவங்கள் நமது சூழலில் மறுபிரதி செய்யப்படுகின்றனவா? அல்லது நமது சினிமா கலாச்சாரத்தில் ஆழமாக புதைந்து செயல்படும் சில அம்சங்கள் ஹாலிவுட்டையும் எங்கள் பாணியில் கொடு, இல்லையென்றால் வெளியேறு என்று சொல்கிறதா? இந்த புதியயுகம் தமிழ் சினிமாவின் சரித்திர ஓட்டத்தின் ஒரு தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியா? அல்லது அத் தொடர்ச்சியில் ஏற்பட்ட பல முக்கியமான முறிவுகளில் பிளவுகளில் இதுவும் ஒன்றா? அப்படியென்றால் தமிழ் சினிமா என்ற பொது மன்றத்தில் (Public Sphere) ஒரு புதிய ஆதிக்க மாயையை இந்த யுகம் துவங்கி வைக்கிறதா? என்று பல கேள்விகள் எழுகின்றன.

இந்தியா விடுதலை பெற்ற சூழலில் ஹாலிவுட்டை நோக்கி தமிழ் சினிமா விரைந்து கொண்டிருந்தது. ஒரு பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

**திராவிட இயக்கத்தின் போக்கை சித்தாந்த ரீதியிலும் வியாபார ரீதியிலும் 'ஔவையார்' என்ற ஜெமினியின் படம் திசைதிருப்ப முயன்றது**

அமெரிக்கரான எல்லிஸ் ஆர்.டங்கன், மறு பக்கம் தென் இந்தியாவின் மிகப் பெரிய ஸ்டுடியோவான விஜயா - வாகினியின் பி.என்.ரெட்டி, பலமுறை வெளிநாடு சென்று திரும்பி மாடர்ன் தியேட்டர்ஸை நிறுவிய டி.ஆர்.சுந்தரம். இந்த மூவரின் திரைப்படங்களிலும் பிம்ப அமைப்பு மற்றும் பிம்பத் தொடர்ச்சிகளில் ஹாலிவுட் இலக்கணமும் அணுகுமுறைகளும் பரவலாகத் தென்படுகின்றன. இவையே தொழில்நுட்ப ரீதியில் தென்னிந்திய சினிமாவிற்கு ஒரு முக்கிய அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தன. இந்தச் சூழலில் ஹாலிவுட் அணுகுமுறைகளை நிர்வாக ரீதியாகக் கூட கதை - இலாகா, ஜூனியர் - ஆர்டிஸ்ட் தேர்வு, பிரம்மாண்டமான கூட்டங்கள், செட்டிங்குகள், காட்சியமைப்பு போன்றவை கொண்ட ஒரு சினிமா தொழிற்சாலையாக சிசில் பி.டெமிலின் பாணியை முன்னிறுத்தி செயல்பட்டது ஜெமினி ஸ்டுடியோ. பெருங்கூட்டங்களையும் பிரமாண்டமான காட்சியமைப்பும் கொண்ட எஸ்.எஸ்.வாசனின் சந்திரலேகா (1948) என்ற படம் ஏற்படுத்திய ரிகார்டை இன்னும் தென்னிந்தியாவில் வேறு எந்தப் படமும் முறியடிக்கவில்லை. பம்பாயில் கே. அசிப் இயற்றிய 'மொகலே ஆஜம்' (1960) என்ற படம்தான் அதனை முறியடித்தது. ஆனால் இன்றும் தமிழ் சினிமாவில் சந்திரலேகா ஏற்படுத்திய ரிகார்ட்டை முறியடிக்க பல முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. 1948-க்குப் பிறகு கிட்டத்தட்ட நாற்பது வருடங்கள் கழிந்து இம்முயற்சிகள் தோன்றுவதற்கான காரணங்கள் என்ன? இடைவெளியில் என்ன நடந்தது? மேற்கூறிய மூவர் ஏற்படுத்திய இலக்கண மரபுகள் என்னவாயின?

1949-ல் திரைக்கு வந்தது அறிஞர் சி.என்.அண்ணாதுரை எழுதிய வேலைக்காரி. அதில் ஊற்றாகப் பிறந்த திராவிட இயக்கப்படங்களின் பாணி கலைஞரின் கைவண்ணத்தில் 1952-ல் பராசக்தி என்ற படத்தின் மூலமாக ஒரு வெள்ளமாக உருவெடுத்தது. மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்ற திராவிட அலையை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள இந்த இயக்கத்திற்கு அப்பாற்பட்ட பலர் துடித்தனர். இம் முயற்சியில் வெற்றி கண்டவரில் ஒருவர் மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர். சுந்தரம். இவர் இயற்றிய திரும்பிப்பார் (1953) என்ற படத்தில் ஹாலிவுட் பிம்ப அமைப்பும் தொடர்ச்சியும் இருப்பினும் கலைஞரின் வசனம் முன்நின்றது. திராவிட இயக்க வசன பாணி மொழியை விரிவுபடுத்தி ஒரு புதிய பேச்சு வகையை (New Speech genre) ஏற்படுத்தியது. இன்றும் தமிழ் சினிமாவில் வசனத்திற்கு ஒரு இடமிருக்கிறது. என்பதற்கு 1994-ல் வெளிவந்த 'நாட்டாமை' ஒரு சான்று. ஆக பிம்பம் பின்வாங்க சொல் முன்நின்றது. வசனமில்லையேல் வரவேற்பில்லை என்பது ஊர்ஜிதமாயிற்று. இதற்கு கொஞ்சம் முரணாக இயங்கியவை எம்.ஜி.ஆரின் படங்கள். இருப்பினும் இவருடைய படங்களில் திராவிட இயக்கக் கருத்துகள் நிறைந்திருந்தன. எழுத்து ரீதியில் திராவிட இயக்கத்திற்கு அக்காலத்தில் ஒரு முக்கிய பங்காற்றிய கவிஞர் கண்ணதாசன் தீட்டிய மதுரை வீரன் (1956), எம்.ஜி.ஆரை ஒரு பாட்டாளி வர்க்க, மற்றும் தாழ்த்தப்பட்ட சாதிகளின் கதாநாயகனாக மாற்றியதில் முக்கியமானது. ஆக இயக்குநர்கள் பின்வாங்க, எழுத்தாளர்கள் முன்னணியில் நின்றார்கள்.

திராவிட இயக்கத்தின் போக்கை சித்தாந்த ரீதியிலும் வியாபார ரீதியிலும் 'ஔவையார்' (1953) என்ற ஜெமினியின் படம் திசைதிருப்ப முயன்றது. பிரம்மாண்டமான புராண படமான இது வியாபார ரீதியாக வெற்றி பெற்றாலும் திராவிட அலையை அடக்கவில்லை. காரணம் சினிமாவிற்கு அப்பாற்பட்டும் இந்த இயக்கம் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கம். மேலும் இதன் விளைவால் சினிமா உலகில் இருபெரும் நட்சத்திரங்கள் உருவாகி விட்டனர். இரண்டாம் உலகப் போரின் ஒரு விளைவாக உருவாக்கப்பட்ட நட்சத்திர அமைப்பை (Star System) முழுமையாக நிலைநாட்டி ஆண் நட்சத்திர ஆதிக்கத்தை வலுப்படுத்தி வியாபார தர்க்கத்தை அதற்கு அடிமைப்படுத்தி தமிழ் சினிமாவை 25 ஆண்டுகள் ஆட்டி வைத்தனர் இவ்விருவரும். ஒருவர் சிவாஜிகணேசன். அடுத்தவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆதரவைப் பெறாத நிறுவனங்கள், தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், சில காலத்தில் மறைந்துபோயினர். இவர்களின் ஆத்திரத்திற்கு ஆளான சக நடிகர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் அழிந்தே போயினர். ஜெமினி ஸ்டுடியோ கூட இவர்களிடம் ஒரு கால கட்டத்தில் உறவு ஏற்படுத்திகொள்ள வேண்டியிருந்தது.

திராவிட பாணி திரைப்படங்களில் ஒரு புறம் நாத்திகமும், பொது உடமை கருத்துக்களும் வெளிப்பட்டாலும் தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரம், தமிழர் அடையாளம் போன்றவைதான் ஆழமாக வெளிப்பட்டன. திராவிட இயக்கத்தின் நாத்திகத்தை முழுமூச்சுடன் எதிர்த்தாலும் 'நாம் தமிழர்' என்ற அடையாளத்தை நிலைநிறுத்தியதில் கணிசமான பங்கு ஏ.பி.நாகராஜனின் பல ஜனரஞ்சக புராணப் படைப்புகளுக்கு உண்டு. இன்றும் ஆடி வந்தாலும், அமாவாசை வந்தாலும் தவறாமல் ஒலிபரப்பப்படுகிறது 'திருவிளையாடல்' படத்தின் வசன / இசைத்தட்டுகள். இவ்வாறு திராவிட பாணி படங்களுடன் சேர்ந்து ஏ.பி.என். எடுத்த திரைப்படங்கள் ஏற்படுத்திய தாக்கத்தில் ஒரு முக்கிய அறிகுறியாக மகாகவி காளிதாஸ் (1966) என்ற படத்தை எடுத்து கொள்ளலாம். இதில் நாயகன் தமிழில் பேச ஔவையார் வடிவத்தில் (கே.பி.சுந்தராம்பாள்) சக்தி உருவெடுத்து புறநானூறு பாணியில், 'சென்றுவா மகனே வென்றுவா....' எனப் பாடுகிறார். சிவாஜியின் நடிப்பிலும் வசன உச்சரிப்பிலும் தமிழ்ப் புலமையை பிளந்துகட்டும் இந்த காளிதாஸை தமிழ் திருக்கோயில்களை சுற்றியே முடித்துவிடுகின்றனர். ஏதோ சப்பைக் கட்டாக அங்குமிங்கும் சில வடக்கத்திய பெயர்கள். அந்நாளில் இம்மாதிரியான முயற்சி ரியலிசத்திற்கு எதிராக உள்ளதே என்று குரல் எழும்பியிருந்தால் அவை சொற்பமாகவே இருந்திருக்க வேண்டும்.

இந்த தாக்கத்தின் அரசியல் - கலாச்சார பின்னணியை அறிய மேலும் ஒரு படத்தை அடையாளம் காண வேண்டும். அது 1939-ல் கல்கி எழுதி கே.சுப்ரமணியம் இயற்றிய தியாகபூமி. ஹரிஜன மக்களின் பிரச்சினையை முன்வைத்து சாதிக் கொடுமையையும் அத்துடன் வறுமையை முன்வைத்து ஜமீன்தாரியத்தையும் தாக்கியது காந்தியம். இந்தக் காந்தியத்தை பிரச்சாரம் செய்த காங்கிரஸ் வேகமாக முன்னேறி பரவலாக எங்கும் வரவேற்பை பெற்றது. தியாகபூமி இந்த பிரச்சாரத்தின் ஒரு வெளிப்பாடு. ஒருபுறம் அது ஜமீன்தாரியத்தை தாக்கி ஜஸ்டிஸ் கட்சி உறுப்பினர்களை கேவலப்படுத்தி கேலி செய்தது. மறுபுறம் ஹரிஜன மக்களை சுய ஆற்றல் இல்லாதவர்களாகவும் மேலிருப்பவர்களின் போதனையால் மட்டும் முன்னேறக் கூடியவர்களாகவும் சித்தரித்தது.

இதற்கெதிராக தலித்துகளை ஆக்கமும், ஆற்றலுடையவர்களாகவும் காட்டியது 50-களில் வெளிவந்த மதுரைவீரன்.



படிப்பகம்

www.padippakam.com

கம்யூனிஸ்ட்கள் ஒடுக்கப்பட்டதால் அவர்களிடம் இருந்த தொடர்பு மூலம் திரும்பிப்பார் படத்தில் பாட்டாளி வர்க்கப் பிரச்சினை வெளிப்பட்டது. என்.எஸ்.கே.யின் 'நல்லதம்பி'யில் ஜஸ்டிஸ் கட்சி ஜமீன்தாரியத்திலிருந்து விடுபட்டு காந்தியத்தை உள்வாங்கி, 'வேலைக்காரி' 'பராசக்தி' மூலம் ஒரு சமூக அமைப்பை எதிர்த்து கேள்வி கேட்கும் துணிச்சலையும் ஏற்படுத்தி திராவிட இயக்கம் வேகமாக முன்னேறியது. அதாவது 1930 – 40களிலும் வெளிவந்த தேசியவாத படங்கள் காலனிய ஆட்சியை எதிர்த்து அதன் வழியாக கலாச்சாரத்தை விரிவடைய செய்தன. திராவிட இயக்கப் படங்களோ அந்த



'கூண்டுக்கிளி' படத்தில் சிவாஜி, எம்.ஜி.ஆர். : 25 வருட நட்சத்திர ஆதிக்கம்

தேசியவாதம் மழுங்கடித்த அம்சங்களையும் மாநில அடையாளத்தின் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தி அக்கலாச்சாரத்தை மேலும் விரிவடைய செய்தன. திராவிட இயக்கத்தின் தர்க்கத்தை பல படங்கள் முழுமையாக முறியடிக்க நினைத்தாலும் அவை அதை செய்யாமல் போனதற்குக் காரணம் தேசியவாதத்தை கேள்விக்கு உட்படுத்தாததுதான். இந்த வரிசையில் சோவின் 'முகமது பின் துக்ளக்', கே.பாலசந்தரின் 'அச்சமில்லை அச்சமில்லை' போன்ற படங்கள் முக்கியமானவை. இவற்றிற்கு மாறாக நடைமுறையில் திராவிட இயக்கம் ஏற்படுத்திய சில இன்னல்களை ஓர் ஆழமான விசாரணைக்கு உட்படுத்தியதில் பங்கு பாரதிராஜாவின் 'என்னுயிர்த் தோழனு'க்கு உண்டு.

ஒரு ஜனநாயக அமைப்பில் தேசிய அடையாளம் (National Identity) பிரச்சினைக்குள்ளாக்கப்பட வேண்டியது அவசியம் என்றால் 'தமிழர் அடையாளமும்' விமர்சிக்கப்பட வேண்டியது அவசியம். மண்டல் கமிஷனுக்குப் பிறகு இந்திய சினிமாவில் மறுபடியும் தேசிய அடையாளம் பல மாற்றங்களுடன் முன் வைக்கப்படுகிறது. 'வானமே எல்லை, ரோஜா, ஜென்டில்மேன், ஐ லவ் இந்தியா, பம்பாய், இந்திரா, ஆசை' போன்ற படங்கள் இந்த வரிசையில் வருகின்றன. ஒருவிதத்தில் மணிரத்தின யுகம் ஒரு மறு தேசியவாத யுகம் எனலாம்.

திராவிட இயக்கப் படங்கள், ஏ.பி. நாகராஜன், கே.எஸ். கோபாலகிருஷ்ணன், கே. பாலசந்தர், பி. மாதவன், விசு முதலானோர் திரைப்படங்கள் மூலம் தமிழ் சினிமாவில் வசனம் முன்னின்று இயங்கியது. ஏ. பீம்சிங், சி.வி. ஸ்ரீதர், கிருஷ்ணன் – பஞ்சு போன்றவர்களின் படங்களில் டங்கன், சுந்தரம் போன்றவர் ஏற்படுத்திய ஹாலிவுட் பிம்ப அமைப்பு இலக்கணம் தொடர்ந்தது. ஆனால் 50-களில் இந்தியாவில் நடந்த முதல் திரைப்பட விழாவின் விளைவாக பிரம்மாண்டத்தை அகற்றி மனித நேயத்தை முன் நிறுத்தி தத்ரூபமாக நடைமுறை வாழ்க்கைச் சிக்கல்களை எடுத்துரைக்கும் ஐரோப்பிய கலை சினிமாவின் தாக்கம் இந்திய சினிமாவில் பிரதிபலிக்கத் துவங்கியது. பிமல்ராய், ராஜ்கபூர், குருதத் போன்றவர்கள் இந்தி சினிமாவில் இந்த தாக்கத்தைக் கொண்டு வந்தனர். வங்காளத்தில் சத்தியஜித்ரேயும் ரித்விக் கடக்கும் இதற்கு காரணமாயிருந்தனர்.

60-களில் ஒரு புதிய முயற்சி அலை வீச ஆரம்பித்தது. பல காரணங்களால் இந்தப் புதிய அலை தமிழ் சினிமாவில் பெருமளவில் காணப்படவில்லையென்றாலும், அதன் பாதிப்புகள் பல படங்களில் வெளிப்பட்டன. தென்னிந்தியாவைப் பொறுத்தவரை ராமு காரியத் இயக்கி மார்க்கஸ் பார்ட்லே ஒளிப்பதிவு செய்த 'செம்மீன்' என்ற மலையாளப் படம் இந்த வரிசையில் முக்கியமானது. இதன் அபார வெற்றி ஒரு பக்கம் அதனுடைய தத்ரூபமான காட்சியமைப்பு நடைமுறை வாழ்க்கையை ஒட்டிய கதையமைப்பு இரண்டையும் வலியுறுத்தியது. ஆயினும் தொழில்நுட்ப ரீதியில் வெளிப்புற காட்சிகளுக்கும் கலர் பிலிமுக்குமுள்ள ஒரு தொடர்பைத்தான் அது ஆணித்தரமாக முன்னிறுத்தியது. இந்த புதிய அலையின் விளைவாக கே.பாலச்சந்தரின் அரங்கேற்றம், பீம்சிங்கின் சில நேரங்களில் சில மனிதர்கள், ஜான் ஆபிரகாமின் அக்கிரகாரத்தில் கழுதை, ருத்ரைய்யாவின் அவள் அப்படித்தான், பாபு நந்தன் கோடின் தாகம், தேவராஜ் மோகனின் அன்னக்கிளி, மகேந்திரனின் உதிரிப்பூக்கள், ஜெயபாரதியின் குடிசை, ராபர்ட் ராஜசேகரின் பாலைவனச்சோலை போன்ற படங்கள் இம்மியளவாவது சாத்தியமாயின. இதற்கு இன்னொரு முக்கியக் காரணம் முன்சொன்ன இரு பெரும் நட்சத்திரங்களுக்கும் மிகவும் வயதாகிவிட்டதால் வியாபார ரீதியில் அவர்கள் மவுசு குறைந்ததே ஆகும். இவர்கள் இருவரும் காலி செய்த இடத்தில் வேறு யாரும் உடனடியாக முழுமையாக வரவில்லை. இவர்களை வைத்துப் பண முதலீடு செய்யும் வியாபார தர்க்கம் ஆட்டம் காண தமிழ் சினிமாவில் 25 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு பெரிய இடைவெளி ஏற்பட்டது. பெரும் நிறுவனங்கள் தங்கள் தலையை சொரிய ஆரம்பித்தன. ஏவி.எம்., விஜயா, வாகினி மௌனம் சாதித்தன. ஜெமினி வலிவிழக்கத் தொடங்கிவிட்டது. ஒரே ஒரு சிறிய நிறுவனம் மட்டுமே வேகமாக முன்னேறியது. அது பிரசாத் ஸ்டுடியோஸ். கருப்பு – வெள்ளை வெளியேறி கலர்ப் பட காலம் தொடங்கி வட்ட காலகட்ட மாற்றத்தை புரிந்துகொண்டு பிரசாத் கலர் பிலிம் லெபாரட்டரி அமைத்தது.

கலர் பட வளர்ச்சிக்கு ஒரு பக்கம் ரசிகர்களிடம் கிடைத்த வரவேற்பும் மறுபக்கம் இதை சாத்தியமாக்கிய தொழில்நுட்ப கலைஞர்களும்தான் காரணம். பழைய ஒளிப்பதிவாளர்களில் பலர் கலர் பிலிமை நன்கு அறிந்திருக்கவில்லை. இதில் தேர்ந்தவர்களான மார்கஸ் பார்ட்லேயும் வின்ஸன்ட்டும் கோடாக் பிலிம் தவிர மற்ற எந்த கச்சா பிலிமுக்கும் முக்கியத்துவம் அளிக்கவில்லை. இந்நிலையில் பிலிம் இன்ஸ்டிட்யூட் மாணவரான நிவாஸ் மலிவான ஆர்வோ (Orwo) பிலிமில் துணிச்சலுடன் 'பதினாறு வயதினிலே' என்ற படத்தை ஒளிப்பதிவு செய்து வெற்றி கண்டார். ஆனால் காட்சியமைப்பில் ஹாலிவுட் தாக்கத்தைவிட செம்மீனில் தொடங்கிய ஐரோப்பிய தாக்கம்தான் பிரதிபலித்தது. இந்த தாக்கத்திற்கு பாலுமகேந்திராவும், அசோக்குமாரும் மேலும் மெருகேற்ற ஒளிப்பதிவில் திரைப்படக் கல்லூரி மாணவர்கள் நிரந்தர இடத்தைப் பிடித்தனர். பாரதிராஜாவின் நுணுக்கங்களிலும் ஹாலிவுட் தொடர்ச்சிக்கு எதிரான காட்சியமைப்புகளும் அவருக்குரிய வரவேற்கத்தகுந்த பாணியில் அமைந்தன. இங்கு எம்.டி.வி. வருமுன்னே அவர் படப் பாடல்களின் மூலம் அந்த ஹாலிவுட் தொடர்ச்சியை அவர் கைவிட்டது முக்கியம் வாய்ந்தது.



படிப்பகம்

www.padippakam.com



ரஜினி : ஸ்டார் ஆதிக்கம்

பாரதிராஜாவின் மண்வாசனை கலந்த வசன, பிம்ப மாற்றங்களுக்கு சரிசமமாக சவால்விட்டது இளையராஜாவின் இசை. காஸட் (Cassette) தொழில்நுட்பத்துடன் அவரின் இசை ஒன்று சேர்ந்ததும் ஒரு ஆடியோ தொழில் வளர்ச்சிக்கு அஸ்திவாரத்தை அமைத்துக் கொடுத்தது.

இந்த இடைவெளிக் கால கட்டம் பல புதுமுகங்களும் நடிப்பாற்றல்களும், இயக்குநர்களும் தோன்ற சாத்தியமாக இருந்தது. அப்பொழுது மீண்டும் இரு பெரும் நட்சத்திரங்கள் தோன்றுவதற்கான சாத்தியக் கூறுகள் ஏற்பட, நீண்ட இடைவெளிக்குப் பிறகு வேட்டியை வரிந்துக் கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியது ஏவி.எம். இவர்களின் தயாரிப்பிலிருந்து ரஜினிகாந்த் 'முரட்டுக் காளை' மூலம் சூப்பர் ஸ்டார்-1 ஆகவும் கமல் 'சகலகலாவல்லவன்' மூலம் சூப்பர் ஸ்டார் -2 ஆகவும் உருவானார்கள். நட்சத்திர வியாபாரம் தலையை தூக்க, புதிய வாய்ப்புகளுக்கு மீண்டும் கதவுகள் தாளிடப்பட்டன. இதன் விளைவாக மாற்றங்கள் வரவேண்டுமானால் அது தொழில்நுட்ப ரீதியில்தான் என்பது ஊர்ஜிதமானது. விரைவில் வீடியோ பூம் துவங்க வீடியோ பைரசி (Piracy) தலைதூக்க ஆரம்பித்தது. இதனால்



கமல் : ஹாலிவுட் ஆசை

திரைப்படத் தொழில் பாதிக்கப்பட்டது. மேல் நாட்டில் இத்தகைய பாதிப்பை பிரம்மாண்ட தயாரிப்புகள் புதிய தொழில்நுட்ப உதவியுடன் (ஸ்டீல்பெர்க் போன்றவர்களால்) மேற்கொள்ளப்பட்டன. இங்கு பிரசாத் அந்த முயற்சியில் இறங்கியது. பல நவீன தொழில்நுட்ப கருவிகளை இறக்குமதி செய்தது. 70 எம்எம் ஒலிப்பதிவு தியேட்டரை உருவாக்கி நவீன காமிராக்களையும் அதைச் சார்ந்த லென்சுகள், ஸ்டெடி காம், புதிய வண்ண உஷ்ண (Colour temperature) எச்.எம்.ஐ. விளக்குகளையும் அறிமுகம் செய்தது.

அதுவரை மௌலி இயக்கிய படங்களில் மட்டும் பணியாற்றி தான் அறிந்த தொழில்நுட்ப நுணுக்கங்களைப் பயன்படுத்த முடியாமல் இருந்த ஸ்ரீராம் இக்கருவிகளின் உதவியுடன், பிரதாப் போத்தன் இயக்கிய 'மீண்டும் ஒரு காதல்



'கருத்தம்மா' : பாரதிராஜாவின் மண்வாசனை

கதை' வழியாக அக்ஃபா கேவார்ட் (agfa gevart) பிலிமிலும் கைதேர்ந்த ஒளிப்பதிவையும் தனக்குரிய நுட்பங்களையும் செழுமையாக வெளிப்படுத்த முடியும் என்று செய்துகாட்டினார். இந்தப் படத்தின் இயக்கத்திலும் ஒளிப்பதிவிலும் ஐரோப்பிய சினிமாவின் தாக்கம் தான் அதிகம். இந்தத் தாக்கத்திற்கு செம்மீன் ஒரு துவக்கம் என்றால் சியாம் பெனகலின் ஆங்கூர் (1973), மந்த்தன் (1976) போன்ற படங்கள் அந்த தாக்கத்தை நிலைநிறுத்தின.


'மீண்டும் ஒரு காதல் கதை'க்குப் பிறகு இரண்டு வருடம் கழித்து திரைப்படக் கல்லூரியிலிருந்து ஆபாவாணன் குழுவினர் 1986-ல் விஜயம் செய்து ஹாலிவுட் பிரம்மாண்டத்தை இங்கு மறுபிரதி செய்வதற்கான ஒரு அடிக்கல்லை 'ஊமை விழிகள்' படம் மூலம் நிறுவினர். சினிமாஸ்கோப்பில் தயாரான இந்த படத்திற்கு அது தயாரிப்பு நிலையில் இருந்தபொழுது வரவேற்பில்லை. இதற்கு முன்னே 'இராஜராஜ சோழன்' என்ற படம் படுதோல்வியடைந்ததால் சினிமா ஸ்கோப் ராசியில்லை என்று நிர்ணயித்தது நமது சினிமா உலகம். எனவே இக்குழுவினர் படத்தை வெளியிடும்முன் அந்த தியேட்டருக்குள் சென்று அங்கு ப்ரொஜக்டர்களில் சினிமா ஸ்கோப் லென்ஸுகளைப் பொருத்தினர். இப்படத்தில் திரைக்கதை பழைய பாணியில் இருந்தாலும் அகலத் திரையும் அதைச் சார்ந்த காட்சியமைப்புகளின் புதுமையும் ஒரு பெரிய வரவேற்பை ஏற்படுத்தியது. இன்று திரைப் படங்கள் என்றால் அவை சினிமா ஸ்கோப்பில் இருக்க வேண்டும் என்பது ஐதீகமானது. ஆனால் ஊமை விழிகள் என்ற படத்தின் மூலம் ஹாலிவுட் ரியலிசத்தை வெளிக்கொண்டுவர ஒரு முயற்சி செய்யப்பட்டாலும் அது முழுமையாக வெற்றி பெறவில்லை.

இம்மாதிரியான முயற்சிகள் ஒருபுறமிருக்க 80-களில் வேறுவிதமான ஒரு தாக்கமும் இங்கு சென்னையில் நடக்க ஆரம்பித்தது. தொலைக்காட்சியின் முன்னேற்றத்தினால் விளம்பரப் படங்களின் தேவை அதிகரிக்க நிறுவனங்கள் பம்பாய்க்கு அப்பாலும் தொழில்நுட்ப கலைஞர்களைத் தேட ஆரம்பித்தன. அதாவது அறுபதுகளிலும் எழுபதுகளிலும் பெரிய விளம்பரப் படத்தை தயாரித்தவர்கள் யாரும் இங்கு கிடையாது. சிறு சிறு படங்களே இங்கு உருவாயின. 80-களின் தேவைக்கேற்ப இந்த விளம்பர வளர்ச்சியில் இங்கு முதலில் இறங்கியவர் டெலிவிஷுவல் பரத் என்பவர். இதனால் மது அம்பாட், ஸ்ரீராம் போன்ற வித்யாசமான கலைஞர்களுக்கும் வாய்ப்புகள் பெருகின. சினிமாவிற்கு மட்டும்தான் விளம்பரம் என்று இருந்த வேளையில் பலநுகர் பொருள் நிறுவனங்கள் தாங்கள் என்றோ தயாரித்த விளம்பரப் படங்களையே மறுபிரதி எடுத்து வெளியிட்டுக் கொண்டிருந்தன. ஆனால் தொலைக்காட்சியின் வருகையால் அதை அடிக்கடி மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால்



படிப்பகம்

www.padippakam.com





அற்புதமானது வாழ்க்கை - அதை ஆனந்தமாய் வாழ்ந்திடுங்கள்

SANMAR FINANCIAL

வைப்பு நிதி

ஓவர்சீஸ் ஸன்மார் ஃபைனான்ஷியல் லிமிடெட்

என்றும் உங்களுடன்

திருப்பி அனுப்பக்கூடிய அடிப்படையில், இங்கு தங்கி வசிக்காத இந்தியர்களிடமிருந்து (NRI) நாங்கள் டெபாசிட்டுகளை ஏற்றுக்கொள்கிறோம்.

ஃபிக்ஸெட் டெபாசிட் சென்டர்: 75, கதீட்ரல் சாலை, சென்னை-600 086. தொ: 8278754 / 8263548 • மதுரை : தொ: 542251 / 541646. • கோவை : தொ: 446865 / 443537. • சேலம் : தொ: 448120 / 449620. • வேலூர் : தொ: 23008. • பெங்களூர் : தொ: 2240730 / 31. • மங்களூர் : தொ: 32726 / 32848 • கொச்சி : தொ: 361389. • கோழிக்கோடு : தொ: 61456 / 7 • பம்பாய் : தொ: 2875299 / 2841057. • ஹைதராபாத் : தொ.: 231078 / 79.

மேலும் விவரங்களுக்கு 5.9.95 அன்று மக்கள் குரல் தினசரியில் வெளியான விளம்பரத்தை காணவும்.

▲VEHICLE FINANCE ▲CORPORATE FINANCE ▲FIXED DEPOSITS ▲MERCHANT BANKING ▲SECURITIES TRADING

FIFTH ESTATE : 2522 : TAM


படிப்பகம்

www.padippakam.com

ரப் படங்களின் தேவை பன்மடங்காக அதிகரிக்க மேலும் பல நிறுவனங்கள் தோன்றின. ஒளிப்பதிவாளர் ஸ்ரீராமும் ஜயேந்திராவும் துவக்கிய ஜெ.எஸ். நிறுவனமும், ராஜீவ் மேனன் துவங்கிய ராஜீவ் அஸோஸியேட்ஸ் என்று நிறுவனமும் இவற்றில் சில. இந் நிறுவனங்கள் தயாரித்த விளம்பரப் படங்களுக்கு இசையமைத்ததில் ஏ.ஆர்.ரஹ்மானுக்கும் மகேஷிற்கும் முக்கிய பங்கு உண்டு.

விளம்பரப் படங்கள் தொழில்நுட்ப ரீதியில் போட்டிபோட வேண்டிய கட்டாயத்தால் கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் போன்ற பல சாதனங்களை இங்கு இறக்குமதி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்வாறு இறக்குமதி செய்யப்படாத சூழலில் படத்தை மட்டும் இங்கு ஒளிப்பதிவு செய்துவிட்டு பம்பாய் சென்று மற்ற வேலைகளை முடித்துக் கொண்டனர். இதிலும் சென்னையில் முந்திக் கொண்டது பிரசாத் நிறுவனம். வீடியோ அனிமேஷன் மற்றும் கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் தளத்தை நிறுவியது. தொழில்நுட்ப அமைப்புகளும் (Technological Infrastructure) தொழில்நுட்ப அறிவும் (Technical Knowledge) மற்றும் அதை செயலாக்கம் செய்யும் கலைஞர்களை உருவாக்கக்கூடிய திரைப்படக் கல்லூரிகளும் ஏற்பட்டுவிட்ட பின்னணியினால் மணிரத்னயுகம் பிறப்பதற்கான எல்லா வாய்ப்புகளும் ஏற்பட்டன இன்று மணிரத்னத்தையும் தாண்டி சங்கர் போன்றவர்கள் அறிமுகமாவதற்கும் அது வழி செய்துள்ளது.

மிகுந்த பொருட்செலவில் உருவாகும் இவர்களின் படைப்புகளுக்கு பொருளாதார ரீதியிலும் வியாபார ரீதியிலும் வாய்ப்புகள் என்ன என்பது நமது அடுத்த கேள்வி. எதற்கும் இணங்காமல் அதீத உஷாரான நிலையில் இயங்கும் வியாபார உலகில் புதிய முயற்சிகளுக்கு என்றும் முட்டுக்கட்டை உண்டு. ஆனால் இப்படி படமெடுத்தும் பணம் சம்பாதிக்க முடியும் என்ற நிலையை உருவாக்கினால் ஒரு தயாரிப்பாளர் படையே பின்னால் திரண்டு வரும். உதாரணமாக 'நாயகன்' படத் தயாரிப்பாளர் முக்தா சீனிவாசனுக்கும் மணிரத்னத்திற்கும் செலவு பற்றி எழுந்த வாக்குவாதம் முற்றி படத் தயாரிப்பே நின்றுவிடும் நிலையில் ஜீவி. உதவியால் படம் முடிந்து பின் வெற்றியைத் தழுவியது என்பது பரவலான செய்தி. ஒரு பெரிய நடிகரை வைத்து ஹாலிவுட் ரியலிச அடிப்படையில் எடுக்கப்பட்ட 'நாயகன்' ஒரு குறிப்பிட்ட முயற்சி என்றால் அதே பாணியில் புதுமுகங்களையோ அல்லது அதிகம் பணம் வாங்காத, ஆனால் ஓரளவு திறமையுள்ள நடிகர்களை வைத்து மிகுந்த பொருட் செலவில் காட்சியமைப்புகளை உருவாக்குவது வேறுவிதமான முயற்சி. முதல் வகையை சேர்ந்த படம் 'ரோஜா'. இரண்டாம் வகையைச் சேர்ந்த படம் 'ஜென்டில்மேன்'. குறிப்பாக 'காதலன்' படத்திற்கான செலவை விட 'ரோஜா'வின் செலவு குறைவானாலும், 'வானமே எல்லை' என்ற படத்தின் செலவு அதனினும் பாதிதான் என்பதை நினைவு கொள்ள வேண்டும்.

'ரோஜா', 'காதலன்', 'பம்பாய்' என்ற மூன்று படங்கள் தமிழ் சினிமா வியாபார தர்க்கத்தை இன்று மாற்றியுள்ளன. இந்த மூன்று படங்களின் ஆடியோ காஸெட்டுகளின் உரிமை தமிழில் மட்டும் ஒரு கோடியிலிருந்து இரண்டு கோடிவரை சம்பாதிக்க முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. அதனால் உரிமையைத் தனக்கே தரவேண்டும் என்ற நிபந்தனையில் இயங்கிவந்த இளையராஜா கொஞ்சம் முரட்டுத்தனமாக பின் தள்ளப்பட்டுள்ளார். ஒரு தமிழ்ப்படம் வியாபார ரீதியில் நல்ல தகுதியுடையதாக இருந்தால் அதனுடைய தெலுங்கு, இந்தி டப்பிங் உரிமைகளை இரண்டு கோடிக்கு விற்க முடியும். ஆக விநியோகஸ்தர்களிடம் மேற்கூறிய உரிமைகளின் மூலம் இம்மாதிரியான படத்தின் மொத்த வரவு 7½ கோடிவரை செல்ல வாய்ப்புண்டு. இம்மாதிரியான படத்திற்கு சராசரி செலவு வட்டியுடன் சேர்த்து 4½ அல்லது 5 கோடிகளாகும். இதில் லாபம் 2.5 கோடி என்பது 50 சதவிகிதத்தை எட்டி விடுகிறது. நேரடியாக தயாரிப்பு நிறுவனமே விநியோகம் செய்தால் 9 கோடி வரை எட்டலாம். ஆனால் சினிமா வட்டாரத் தகவலின்படி 'ரோஜா' விற்கு ஏற்பட்ட செலவு 80 லட்சம். இதன் வரவு என்ன என்பதை வாசகரின் கணிப்பிற்கே விட்டு விடுவோம்.

முன்பு தமிழில் ஒரு படம் வெற்றி பெற்றால் அதை தெலுங்கிலும் பிறகு இந்தியிலும் தயாரிக்கும் வழக்கத்தை ஜெமினி, ஏவி.எம்., விஜயா வாகினி, பிரசாத் போன்ற நிறுவனங்கள் கடைப்பிடித்து வந்தன. இதற்கு மாறாக ஒரே சமயத்தில் மூன்று மொழி ரசிகர்களையும் கவரக்கூடிய முகங்களையோ திறமைகளையோ கலந்து கதையையும் அதற்கேற்றாற்போல் அமைத்தால் ஒரே கல்லில் மூன்று மாங்காய் என்ற நிலை 'ரோஜா', 'காதலன்', 'பம்பாய்' என்ற படங்களினால் உருவானது. இம்மாதிரியான முயற்சிக்கு செலவு 5 கோடி என்றால் வரவு 13 கோடிக்கும் மேல் செல்ல வாய்ப்புண்டு. இது உரிமைகளுக்குப் பெறும் தொகை மட்டுமே தவிர இதைத் தவிர சினிமா கொட்டகைகளில் வரும் நிஜமான வசூல் அதையும் தாண்டிய ஒரு பெரிய தொகையாகும். 'பம்பாய்' படம் இந்தியா மற்றும் வெளிநாட்டு வரவிலிருந்து 30 கோடி வசூல் செய்ததாக கேள்வி. இம்மாதிரியான வியாபார தர்க்கத்திற்கு இன்னொரு காரணம் தமிழை மட்டும் நம்பி அதிக தொகை செலவு செய்து எடுத்தபடம் படுத்துவிட்டால் பலபேர் கையை சுட்டுக் கொள்ள நேரிடும். ஒரே சமயத்தில் மூன்று மொழி என்றால் தயாரிப்பாளருக்கும் ஒரு பாதுகாப்பு இருக்கிறது.

இந்த புதிய வியாபார தர்க்கத்தினால் ஒரு கலாச்சார கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மும்மொழி படங்களும் வெற்றி பெற வசதியான, ஒரு பொது தேசிய அடையாளம் (Convenient national identity) தேவையாகிறது. இத்தேவையால் மாநில வித்யாசங்களும் அடையாளங்களும் (Regional differences and identities) வெளியேற்றப்படுகின்றன. அல்லது மாநில அடையாளத்தையும் தேசிய அடையாளத்திற்குள் சுருக்கிவிடும் நிலை ஏற்படுகிறது. இன்றைய அரசியல் மற்றும் பொருளாதார சூழல் தேசத்துக்கே பொதுவானது. இத்துடன் நேருவின் சோஷலிசம் கைவிடப்பட்டதின் ஒரு நேர்முக எதிரொலியாக புதிதாக வந்துள்ள 'வியாபாரத்துக்கு வசதியான தேசிய அடையாளம்' செயல்பட ஆரம்பித்துள்ளது. மண்டல் கமிஷனும் பாபர் மசூதித் தகர்ப்பும் வடக்கே பெரியார் அலையைக் கிளப்பவே, அதை சித்தாந்த ரீதியில் இந்து தேசியவாதமும் பொருளாதார அடிப்படையில் தாராளமயமாக்குதல் என்ற தத்துவமும் கட்டுப்படுத்தப் பார்க்கின்றன.. இன்று பல மாநி



'பராசக்தி' படத்தில் சிவாஜி : திராவிட அலை



படிப்பகம்

www.padippakam.com

லங்களில் வெடித்தெழும்பும் உரிமைக் குரல்களை சிறுபான்மையினரின் தேசிய விரோத தீவிரவாதம் (Minority anti-national terrorism) என்று பெயரிட்டு கட்டுப்படுத்தப் பார்க்கின்றன. இதற்கேற்ப இன்றைய சினிமாவின் தர்க்கம் செயல்பட்டு ஒரு பன்முக ஜனநாயக அடையாளத்தை அகற்றி நடுத்தர வர்க்க ஆசைக்கேற்ற தேசிய அடையாளத்தை நிலைநிறுத்த உதவுகிறது. இந்த மறு தேசிய வாதத்தின் பிரதிபிம்பமாக 'ரோஜா' மற்றும் 'பம்பாய்' போன்ற படங்களை அடையாளம் காணலாம்.

திராவிட இயக்கப் படங்களின் தாக்கத்தால் சொல் முன் நின்று பிம்பம் பின் நின்ற காலம் மாறிவிட்டது. குறிப்பாக தமிழ் சினிமாவில் பாலுமகேந்திராவின் 'அழியாத கோலங்கள்' 'மூடுபனி' 'மூன்றாம்பிறை' போன்ற படங்களில் வசனம் குறைக்கப்பட்டு பிம்பத்திற்கும் காட்சியமைப்பிற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பார்வையாளர்களிடையேயும் இந்த பிம்ப அமைப்புகள் வரவேற்பைப் பெறத் தொடங்கின. பாலு மகேந்திராவின் இந்தப் பாணி மணிரத்தினத்தின் படத்திற்கு ஒரு முன்னோடி என்றாலும் அடிப்படையில் ஒரு வித்தியாசம் உள்ளது. பாலுவின் பிம்ப அமைப்பில் முன் நிற்பது ஐரோப்பிய தாக்கம். இதற்கு எதிராக மணிரத்தினத்தின் பிம்ப அமைப்பில் முன் நிற்பது ஹாலிவுட் ரியலிசத்தின் தாக்கம். இருவருக்கும் பொதுவான பாணி வசன குறைப்பு. ஆக மணிரத்தினத்தின் படங்களில் வரும் ஒவ்வொரு பிம்பத்திற்கும் ஏற்படும் செலவு பாலுவின் படங்களில் ஏற்படுவதைவிட பல மடங்கு அதிகம். நாம் ஹாலிவுட் ரியலிசம் என்று இங்கு எதைக் குறிப்பிடுகிறோம்? கொளுத்தும் வெய்யிலில்கூட நகரத்தின் ஒரு பகுதியை வெள்ளைபனி படர்ந்த இடமாக மாற்றக்கூடியது ஹாலிவுட். முக்கியமாக இதனுடைய அணுகுமுறையின்படி படத்திற்காக போடப்படும் செட்டிங் செயற்கையாகத் தெரியக்கூடாது. இந்த அடிப்படையில் தான் ரமேஷ் சிப்பியின் 'ஷோலே' உருவாக்கப்பட்டு பெங்களூர் அருகே ஒரு கிராமத்தையே அமைத்தது. தமிழில் இந்த அணுகுமுறை 'நாயகன்' படத்திற்காக அமைக்கப்பட்ட பம்பாய் சேரி ஒன்றின் செட்டிங்ஸ் வழியாக அறிமுகமாகிறது. ஹாலிவுட் ரியலிசத்தின் கதையமைப்பு என்பது நேர்கோடானது. இதில் தமிழ் சினிமாவிலிருப்பது போல் உப கதையாடல்கள் கிடையாது. இந்த உப கதையாடல்கள் (பாடல்கள், காமெடி டிராக்) ஆதிக்கக் கருத்துக்களை எதிர்க்கும் சக்தி வாய்ந்தவை. கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் முதல் தமிழ் சினிமாவில் ஸ்பெஷல் நாடகத்தின் ஒரு பாதிப்பாக தொடர்ந்து வரும் மரபு இது. பார்வையாளர்களுக்கு தேவை என்பதால் மணிரத்தினத்தின் படங்களில் பாடல்களை வெளியேற்ற முடியவில்லை. காமெடி டிராக்குகளை பொறுத்தவரையில் ஸ்பெஷல் நாடக பரிச்சயம் இல்லாதவர் என்பதால் மணிரத்னம் பட காமெடியில் சராசரிப் படங்களையும் விட மட்டமான கருத்துக்களே வெளிவருகின்றன. அதாவது சமுதாயத்தில் கீழ்த்தளத்தில் உள்ளவர்கள் ப்ளூ-பிலிம் பார்ப்பவர்கள், உரத்த குரலில் பேசுபவர்கள், மட்டமான வார்த்தைகள் உபயோகிப்பவர்கள் என்று தட்டையாக கட்-அவுட் மாதிரி மட்டுமே சித்திரிக்கப் படுகின்றனர். வலுக்கட்டாயமாக திணிக்கப்பட்ட இவற்றில் சீராகக் கருத்துக்களை அமைக்க முடியாததில் மணிரத்தினத்தின் தவிப்பு வெளிப்படுகிறது. மேலும் ஹாலிவுட் பாணியில் நேர்கோடாக அமைக்கப்படும் அவருடைய கதை அமைப்புகளில் இதற்கு இடமில்லை. இந்தச் சூழலில்தான் பாடல்களையும் வெளியேற்றிவிட்டதாக ஹாலிவுட்டை முழுக்கப் பின்பற்ற முயற்சிக்கும் கமல்ஹாசனின் குருதிப்புனல் மார் தட்டிக் கொள்கிறது.

இன்று ஹாலிவுட் ரியலிசம் முழு பிரமையை (total illusion) உருவாக்கும் சக்தியைப் பெற்றுவிட்டது. ஒரு கம்பூட்டரின் உதவியோடு டிஜிடல் மோடில் (digitalmode) ஒரு அம்பை தயாரித்து ஒருவனின் உடலில் படுவேகமாக செலுத்தி அது மறுபக்கம் அவன் குடலை பிய்த்துக் கொண்டு பறப்பதைப் போல் நிஜத்தைவிட பயங்கரமாக ஒரு காட்சியை அமைக்கலாம். ஹாலிவுட்டில் உருவாகிய 'ஸ்டார் வார்ஸ்' (Star wars) 'ஏலியன்' (Alien) போன்ற படங்கள் கையாளும் யுக்திகளுக்கு இந்த அணுகுமுறை ஒரு அடித்தளம். அதாவது 'ஹாலிவுட் ரியலிசம்' என்றால் யதார்த்தமல்ல. நிஜத்தை போன்ற ஒரு பிரமை என்பதே. இந்த பிரமையை உருவாக்கும் முதல் கட்டத்தில் இன்று தமிழ் சினிமா தேர்ச்சி பெற்றுவிட்டது. அதனுடைய இரண்டாவது கட்டத்திற்கான செலவு மிகவும் அதிகமாக உள்ளதால் அந்த அளவு நம்மால் செலவு செய்ய முடியாமல் இருப்பதால் மட்டுமே அந்தக் கட்டம் இங்கு இன்னும் சாத்தியமாகாமல் இருக்கிறது.

சினிமா என்பது ஒரு கனவு தொழிற்சாலை. அதில் உண்மையைக் காண பார்வையாளர்கள் வருவதில்லை என்ற கணிப்பு ஒரு பக்கம் உண்மை. அதே சமயம் சினிமாவை ஒரு பொதுமன்றம் (Public Sphere) என்று பார்க்கும் போது அந்த மன்றத்தில் பல கருத்துக்கள்,ஏக்கங்கள், உணர்வுகள், ஆசைகள், அடையாளங்கள் ஒன்றுக்கொன்று போட்டி போடுவதைக் காணலாம். என்னதான் வியாபார தர்க்கம் எல்லாவற்றையும் சமப்படுத்தி வடித்தாலும் ஒரு கலாச்சாரத்தை விரிவடையச் செய்யக்கூடிய படங்கள் அவ்வப்போது சிறிய அல்லது பெரிய இடைவெளிகளில் வருகின்றன. இத்தருணத்தில் மேற்கூறிய பல பின்னணிகளின் விளைவாக உருவாகிய மணிரத்தின யுகமும் அதை சார்ந்த திரைப்படங்களும் தொழில்நுட்ப சாதனையில் கொடிகட்டிப் பறக்கலாம். ஆனால் ஜனநாயகத்தையும் கலாச்சாரத்தையும் விரிவடையச் செய்யக் கூடியவையாக இருக்கின்றனவா என்ற முக்கியமான கேள்விக்கு நாம் பதில் தேடவேண்டும்.

*(இது தொடர்பான விரிவான நூல் ஆசிரியரால் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது.)* ■

## நடுத்தர வர்க்க ஆசைக்கேற்ற தேசிய அடையாளம் 'பம்பாய்'



'பம்பாய்' : மறு தேசியவாத அடையாளம்

www.padippakam.com


# இதயங்கனிந்த புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## முதலீட்டாளர்களுக்கு மீண்டும் ஓர் அரிய வாய்ப்பு!

## பிரிமியர் கோட்ஸ் இந்தியா வழங்கும் கோல்டன் கோட்ஸ் பத்திர திட்டம்

&

## பொங்கல் பம்பர் பரிசு மழை

வங்கியின் உத்திரவாதத்துடன் 10-ம் ஆண்டு முடிவில் பெறுவதோ – 15,049/-



முதலீட்டுக்கு வங்கியின் உத்திரவாதம்

முதலீட்டாளர்களுக்கு இலவச விபத்து மற்றும் மருத்துவ காப்பீடு

Buy - Back Offer and Loan Facility

அதிக முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு ஈரோட்டில் அசையா சொத்தின் மேல் பாதுகாப்பு

நீங்கள் ஒரு முறை செலுத்தும் முதலீடு ரூ. 1000/- மட்டுமே

**சர்வதேச அரங்கில் எங்களது மதிப்பு தங்கத்தை விட மேலானது**
**இலாபகரமான பங்கேற்பு நிறைந்த வருவாய்,**
**ஒரு உன்னத முதலீட்டுத் திட்டம்.**

பிரிமியர் கோட்ஸ் இந்தியா வழங்கும் பொங்கல் பம்பர் பரிசு மழைத் திட்டத்தில் யூனிட்தாரர் ஒவ்வொருவருக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன.

★ முதலீட்டாளர்கள் வாங்கும் ஒவ்வொரு யூனிட்டுக்கும் ஒரு இலவச கூப்பன் வழங்கப்படும்.
★ முதலீட்டாளர்கள் வாங்கும் ஒவ்வொரு யூனிட்டுக்கும் பரிசு நிச்சயம்.
★ வீட்டுமனை, தங்கம், வெள்ளி, பட்டு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் என ஏராளமான பரிசு மழை உங்களுக்காக காத்திருக்கின்றன.

### சிறப்பம்சங்கள்:

★ வாரிசு நியமனத்தை உடனடியாக மாற்றும் வசதி அளிக்கிறது.
★ எங்கள் நிறுவனங்களின் பங்கு வெளியீட்டில் முன்னுரிமை அளிக்கிறது.
★ பிரிமியர் கோட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் தனது பண்ணைக்கும், ஆட்டுக்கும் மத்திய அரசின் உயிர்காப்பீட்டு நிறுவனத்தின் கீழ் காப்பீடு செய்துள்ளது.
★ எங்கள் நிறுவனம் இந்திய கம்பெனி சட்டம் 1956-ன் கீழ் பதிவு செய்துள்ளது. (181-6127/1995)
★ பிரிமியர் கோட்ஸ் இந்தியா பல ஏற்றுமதி வாய்ப்புகளைப் பெற்றுள்ள நிறுவனம்.

**இத்திட்டத்தின் கீழ் ரூ. 1000/- முதலீடு செய்து வங்கியின் உத்திரவாதத்துடன் 10-ம் ஆண்டு முடிவில் ரூ. 15,049-ஐ பெறுவீர்.**

Ph: 222834

## பிரிமியர் கோட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்.,

32, நாச்சியப்பா வீதி,
ஆர்.ஆர். காம்ப்ளெக்ஸ் (மூன்றாவது மாடி)
பஸ் நிலையம் அருகில் ஈரோடு—1.

ஆம் தங்கள் முதலீட்டுத் திட்டம் பற்றிய விளம்பரத்தைக் கண்டோம். மேலும் தங்களை அணுக பிரதிநிதி / சிற்றேட்டை அனுப்பி வைக்கவும்.

பெயர் ____________

முகவரி ____________

அ.எண். ______ போன்: ______

**நிச்சயமானது!** **நிலையானது!!** **நம்பகமானது!!!**


படிப்பகம்

www.padippakam.com



# பதில்கள் : கலைஞர் கருணாநிதி

## கேள்விகள் : ஞாநி

■ உங்களுடைய ஐம்பதாண்டுப் பொதுவாழ்வை நீங்கள் எண்ணிப் பார்க்கும் போது அதில் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தும் நிகழ்வு எது? வருத்தம் தருவது ஏதும் உண்டா?

**❍ ஐம்பது ஆண்டுப் பொது வாழ்வு அல்ல; இந்தப் புத்தாண்டுடன் ஐம்பத்தி எட்டு ஆண்டுகள். 1938-ம் ஆண்டிலேயே பொது வாழ்வில் அடியெடுத்து வைத்தவன் நான்! அறிஞர் அண்ணா 'திராவிட நாடு' வார இதழ் தொடங்கியபோது 1942-ம் ஆண்டு வாக்கில் அதன் இரண்டாவது இதழிலேயே திருவாரூரில் இருந்து நான் எழுதி அனுப்பிய "இளமைப் பலி" என்ற கட்டுரை வெளியிடப்பட்டதைக் கண்டு மகிழ்ந்ததும் அதன் பின்னர் அண்ணா அவர்கள் திருவாரூர் வந்த போது, அவர் தங்கியிருந்த இடத்துக்கு அழைத்து வரச் சொல்லி என்னை நன்றாகப் படிக்குமாறு அறிவுரை கூறி வாழ்த்தியதும் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தும் நிகழ்வு ஆகும்.**

**வருத்தம் தரும் நிகழ்வுகள் எத்தனையோ உண்டு. பட்டியலிட்டுக் காட்டப் பக்கங்கள் போதா!**

■ திராவிட முன்னேற்றக் கழகத்தின் பலம் எது? பலவீனம் எது?

**❍ திருச்சி செய்தியாளர்கள் சந்திப்பின் போது இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு இதே கேள்வியை முதல் கேள்வியாகக் கேட்டார்கள். நான் உடன் அளித்த பதில் இதோ:**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் பலம் - மக்கள் மன்றம். பலவீனம் - பத்திரிகைகள்.**

■ சென்ற தலைமுறைத் தமிழகத் தலைவர்களிலேயே எஞ்சியுள்ள மூத்த தலைவர் நீங்கள் ஒருவர்தான். இந்நிலையில் கட்சி அரசியலைக் கடந்து அடிப்படை சமூக மாற்றங்களுக்குப் பணியாற்றும் இயக்கத்தை இன்றைய தேவைகளுக்கு ஏற்ப, பெரியார் போல தலைமை தாங்கி உருவாக்கலாமே என்கிற மாதிரி சிந்தனை வந்ததுண்டா?

**❍ அந்தச் சிந்தனை அடிக்கடி வருவதுண்டு. எனினும் நம்மைப் போல சிலர் அரசியலில் இருந்தால்தானே பெரியாரின் அடிப்படை சமூக மாற்றக் கொள்கைகளை சட்டரீதியாக நடைமுறைப்படுத்தமுடியும். இல்லையேல் அமைச்சர்களே அங்கப்பிரதட்சணம் செய்வதும் - வேப்பஞ்சேலை கட்டி வேண்டுதல் நிறைவேற்றுவதும் - மண்சோறு சாப்பிடுவதும் - திருப்பதி மொட்டை போடுவதுமான காரியங்கள் ஆட்சி முத்திரையுடன் தொடர்ந்து நடைபெறுமே என்ற கேள்வி எழுந்து; என்னை அரசியலை விட்டு வெளியேற முடியாமல் செய்து விடுகிறது. சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டப்படி செல்லுபடியாக்கியதும், நாம் பிறந்த மண்ணுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டியதும், இரு மொழித் திட்டம் செயல்படுத்தியதும் அறிஞர் அண்ணா அரசியலில் ஈடுபட்டு ஆட்சிப்பொறுப்புக்கு வந்ததால்தானே முடிந்தது. அறுபது ஆண்டுகளுக்கு முன்பு பெரியார் நடத்திய செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானமான பெண்களுக்கும் ஆண்களைப் போல சொத்துரிமையில் சம பங்கு என்ற சட்டத்தை 1989-ல் நான் முதலமைச்சராக இருந்துதானே கொண்டு வந்து நிறைவேற்ற முடிந்தது. இப்படிப் பல சமூக மாற்றங்களை அரசியலிலும் இருப்பதால் செய்ததற்கு எத்தனையோ எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன.**

■ எழுபது ஆண்டுகளுக்கு முன்பே பெரியார் ஆண் - பெண் சமத்துவத்தை அழுத்தமாக வலியுறுத்தியிருக்கிறார். ஆனால் அவர் வழிவந்த தி.மு.கழகத்தில் உங்களுக்கும் பேராசிரியருக்கும் சமநிலையில் வைக்கத்தக்க பெண்தலைவர்கள் காணப்படாதது ஏன்? பெரியார் நிராகரித்த கண்ணகி நிலையைப் பெண்களுக்கானது என்று தி.மு.கழகம் ஏற்றதுதான் காரணமா?

**❍ பெண்கள் உரிமைக்காக தி.மு.கழகம், தொடர்ந்து பணியாற்றியும் போராடியும் வருகிறது. அவர்களுக்குச் சொத்துரிமை, கல்வி - வேலை வாய்ப்பில் - மற்றும் ஊராட்சிகள் முதல் சட்டமன்றம் வரையில் பிரதிநி**

www.padippakam.com



## இன்று உங்களைப் போல அந்த வயதில் முதல்வர் பொறுப்பை ஏற்கும் ஆற்றலுள்ளவர்கள் கழகத்தில் உருவாகவில்லை

தித்துவம் அளிப்பதற்கு தி.மு.கழகமும், தி.மு.க. ஆட்சியும் தயங்கியதே இல்லை. 1957-ல் நானும் பேராசிரியரும் அறிஞர் அண்ணா தலைமையில் முதன் முறையாக சட்டமன்றத்தில் நுழைந்தபோது திருமதி. சத்தியவாணி முத்து அம்மையாரும் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். எங்களுடன் இணைந்து பல போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்ற அவர் கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவராக இன்றளவும் இயங்கி வருகிறார். மகளிர் அணியில் திருமதி பொற்செல்வி இளமுருகு, திருமதி சற்குணம், திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் போன்ற பல முன்னணியினர் இருக்கிறார்கள்.

சமூக சீர்திருத்தக் கொள்கைகளில் தந்தை பெரியாருக்கும் தி.மு.க.வுக்கும் அடிப்படையில் ஒற்றுமையிருப்பினும், அணுகுமுறையில் சில வேறுபாடுகள் இருந்தன. அரசவைக்குச் சென்று நீதி தவறிய மன்னனை எதிர்த்துக் குரல் கொடுத்த கண்ணகியின் வீரத்தைப் போற்றுவதில் என்ன தவறு இருக்க முடியும்? கண்ணகியை வைத்துச் சொல்லப்படும் புராணக் கருத்துக்களைப் பெரியார் சாடினார். திராவிடர் இயக்கம் கண்ணகிக்கு மாறாக பாஞ்சாலியைப் பத்தினி என்று ஏற்றுக் கொண்டதில்லை. இன்றைய சமூகப் பொருளாதார அமைப்பில் பெண்களின் நிலைமாறி வருகிறது. எனவே மாறிவரும் சூழலில் தற்காலப் பெண்கள் நிலையை கண்ணகி காலத்துடன் ஒப்பிடுவது பொருத்தமாக அமையாது.

■ 'திராவிடத்தால் வீழ்ந்தோம்' என்ற நூலில், பெரியாரிய - மார்க்சிய ஆய்வாளரான பெங்களூர் பேராசிரியர் குணா, திராவிடத்தின் பெயரால் தெலுங்கரும், கன்னடரும், மலையாளியுமே தழைத்தனர். தமிழர் ஏய்க்கப்பட்டனர். ஆரியம், திராவிடம் இரண்டையும் ஆதி தமிழரான 'தலித்'துகள் இனி நிராகரிக்கவேண்டும் என்று கூறியுள்ளார். உங்கள் கருத்து என்ன?

○ தாங்கள் குறிப்பிட்டிருப்பது போல திரு. குணா அவர்கள் எங்கு பேராசிரியராகப் பணியாற்றுகிறார் என்பது எனக்குத் தெரியாது. ஆராய்ச்சி என்று கூறி வரலாற்றைத் தலைகீழாகவும் எதிர்மறையாகவும் பார்க்கும் போக்கு, நல்ல சூழ்நிலையை இன்றைய சமுதாயத்தில் ஏற்படுத்தாது. நிர்வாக வசதிக்காக ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியா பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டபோது சென்னை மாகாணம் (Madras Presidency) எனும் பகுதியில இன்றைய தமிழ்நாடு, மற்றும் கேரள, கர்நாடக, ஆந்திரப் பகுதிகள் சில இணைந்திருந்தன. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் பேசியவர்கள் நீதிக் கட்சியில் இணைந்து பிராமணரல்லாத மக்களுக்காகப் பாடுபட்டார்கள். நீதிக் கட்சி காலத்தில்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலையிலும் கல்வியிலும் பல சலுகைகள் வழங்கப்பட்டன. பெரியார், காங்கிரஸ் இயக்கத்தில் இருந்த போதே தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகப் போராடி வைக்கம் வீரரானவர். இந்தியாவில் திராவிட இயக்கம்தான் சாதி ஒழிப்பில் தீவிரம் காட்டிக் கலப்புத் திருமணங்களை ஊக்குவித்த இயக்கமாகும். ஆரியத்தையும் - திராவிடத்தையும் ஒரே தட்டில் வைத்து எடை போடுவது நல்ல அணுகுமுறையாகாது.

மேலும் 1956-ம் ஆண்டுக்குப் பிறகு மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பிறகு அந்தந்த மாநிலங்களில் அந்த மாநில மொழி பேசுகிறவர்களே முதலமைச்சர்களாக வருகிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் சில தடுமாற்றங்கள். தமிழ்நாட்டில் இந்த விஷயத்தில் தமிழர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என ஆய்வாளர் கருதினால்; அது ஒன்றைத் தவிர மற்றவைகளை; அதாவது திராவிடத்தை நிராகரிக்க வேண்டுமென்பதற்கான அவரது வாதங்களை ஏற்க இயலாது.

■ தமிழ்நாட்டின் முதல் இளம் முதலமைச்சராக 1969-ல் பொறுப்பேற்றீர்கள். அப்போது உங்களுக்கு வயது46. இன்று உங்களைப் போல அந்த வயதில் முதல்வர் பொறுப்பை ஏற்கும் ஆற்றலுள்ளவர்கள் கழகத்தில் உருவாகவில்லை என்பதால்தான் இன்னமும் உங்கள் வழிகாட்டுதலையே கட்சி எதிர்நோக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லலாமா?

○ கழகம் முறையாகக் கட்சித் தேர்தல்களை அடிமட்டத்திலிருந்து நடத்தி பல்வேறு பொறுப்புக்களையும் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுத்து நிரப்புகிறது. ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக மட்டும் ஆரம்பிக்கப்பட்ட இயக்கமல்ல இது. சட்டமன்றப் பணியையும், சமூகப் பணியையும் சமமாகக் கருதும் கட்சியாகும். தேர்தலில் தி.மு.க. பெரும்பான்மை பெறும் நேரத்தில் சட்டமன்றக் கட்சி உறுப்பினர்கள் ஜனநாயக முறைப்படி யாரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கிறார்களோ அவர்தான் முதல்வராக முடியும். அப்படித்தான் நான் 1969-லும், 1971-லும், 1989-லும் என மூன்று முறை முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். கழகத்தின் தலைவராகவும் ஜனநாயக முறைப்படித்தான் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றுகிறேன். கழகத்தில் பணியாற்றுபவர்கள் அனைவருமே ஒவ்வொரு வகையில் ஆற்றல் படைத்தவர்கள்தான். அவர்களில் யார் விரும்பினாலும் பொறுப்பு ஏற்றிட ஜனநாயக முறை; தி.மு.கழகத்தில் உயிர்த் துடிப்புடன் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com


# For safe preservation of your records

## Use always

COCK BRAND FILE

TRADE MUTHUVEL MARK

# KUMARAN INDUSTRIES,

20B, RACE COURSE ROAD,
POST BOX No. 16,
**DINDIGUL -624 001.**


படிப்பகம்

www.padippakam.com




# எடுத்துச் செல்லுங்கள் ரூ31,50,000/–த்தை !

## ஆச்சரியமே ! மிக குறுகிய காலத்தில் !

இன்றே நடுவீர் டீ.ஜே. வீரிய ஒட்டு ரக தென்னங்கன்றுகளை !

வளமான எதிர்காலம் காத்திருக்கிறது நாளை !

**நாட்டு ரக தென்னைகளின் காய்ப்புத்திறன்**

ஒரு ஏக்கருக்கு – 70 மரங்கள்
ஒரு மரத்திற்கு/ ஒரு வருடதத்திற்கு – 100 காய்கள்
1 வருடம்/ 70 மரம் X 100 காய்கள் – 7000 காய்கள்
ஒரு வருட வருமானம் – 7000 காய்கள் X ரூ3 – ரூ21,000/–
காய்ப்புக்காலம் 60 வருடம் X 7,000 காய்கள் – 4,20,000 காய்கள்

60 வருட லாபம்

ரூ3 வீதம் X 4,20,000 – ரூ12,60,000/–

**டீ.ஜே. ஒட்டுரக தென்னைகளின் காய்ப்புத்திறன்**

ஒரு ஏக்கருக்கு – 70 மரங்கள்
ஒரு மரத்திற்கு/ ஒரு வருடத்திற்கு – 250 காய்கள்
1 வருடம்/ 70 மரம் X 250 காய்கள் – 17,500 காய்கள்
ஒரு வருட வருமானம் – 17,500 காய்கள் X ரூ3 – ரூ52,500/–
காய்ப்புக்காலம் 60 வருடம் X 17,500 காய்கள் – 10,50,000 காய்கள்

60 வருடங்களில் எடுத்துச்செல்லும் லாபம்

ரூ3 வீதம் X 10,50,000 – ரூ**31,50,000**/-

**டீ.ஜே. யின் சிறப்பம்சங்கள்**

- பூக்கும் காலம் -
- காய்ப்பு ஆரம்பக் காலம் 40 -ம் மாதம் முதல்
- காய்ப்புத் திறன் - 60 வருடம்
- 250 காய்கள் அதற்கு மேலும் - வருடம்தோறும் !
- அதிக பட்ச காய்ப்பு - 7ம் வருடம் முதல் (250 காய்கள்)

**Deejay CONSULTANCY SERVICES**

Corporate Office : Deejay Enterprises Pvt. Ltd.,St. Patricks Complex, Brigade Road, Bangalore - 560 025.Ph:5585738,5586530.Fax:5597531

For Communication:

Head Office : 41-A, T.B.Road, Arasaradi, MADURAI - 625 010. Ph:603724,603394.Fax:0452-604649 ATTN:Deejay.

Branch Office :

MADRAS, 160, R.K.Mutt Road, R.A.Puram, Pin : 600 028.Ph:4938429/4937576. COIMBATORE, 1202,Trichy Road,Pin:641 018, Ph:216613. ERNAKULAM, `Anjali' North Fort Gate, Pin:682 301. Ph:777886/777976. TRIVANDRUM, Sree Nagar Paruthippara, Muttada,Pin-25, Ph:431886. HYDERABAD,Flat No. 102,Jamuna Towers,Nalgonda x Roads,Malakpet,Pin - 500 036.Ph:564920. VIJAYAWADA,40-9-48,Kalanagar,BenzCircle,Pin-520010.Ph:470127.

Recognised by Coconut Development Board-Cochin & Central Plantation Crop Research Institute - (CPCRI)

**LOW-RISK ! HIGH-RETURNS !! TAX-FREE PROFITS !!!**


படிப்பகம்

www.padippakam.com

# ராஜீவ் அரசின் பொருளாதாரக் கொள்கையை விமர்சித்த அளவுக்கு நரசிம்ம ராவ் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையை ஏன் தி.மு.கழகம் எதிர்க்கவில்லை?



■ அண்ணா அறிவாலயத்திறப்பு விழா நேரத்தில் பா.ம.க.வின் சாலை மறியலில் தி.மு.க. தொண்டர்கள் தாக்கப்பட்டார்கள். தமிழகத்தின் வடமாவட்டங்களில் தி.மு.கழகத்துக்கு இருந்து வந்த செல்வாக்கை உடைப்பதற்காகவே பாட்டாளி மக்கள் கட்சி தொடக்க காலத்தில் அன்றைய ஆட்சியின் மறைமுக ஆதரவுடன் பயன்படுத்தப்பட்டது என்று ஒரு கருத்து உண்டு. இன்று ஜெயலலிதாவை வீழ்த்த மட்டும் பா.ம.க.வுடன் தி.மு.க. உறவு கொள்வது எப்படி? மறுபடியும் பழைய முரண்பாடுகள் மேலோங்காதா?

❍ மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டுக்காக அக்கட்சியினர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் நடத்திய போராட்டத்தில் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்டிருக்கிறார்கள் என்கிறபோது அக்கட்சியினருக்கு எம்.ஜி.ஆர். ஆட்சியின் மறைமுக ஆதரவு இருந்ததாகச் சொல்வது ஆதாரமற்றதாகும். தி.மு.க.வும் - பா.ம.க.வும் ஒன்றையொன்று புரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகள் இல்லாத நேரத்தில், தாங்கள் சுட்டிக் காட்டும் சங்கடத்தை அண்ணா அறிவாலயத் திறப்பு விழாவின் போது தி.மு.க. அனுபவித்தது உண்மை என்றாலும்; இன்று ஜெயலலிதா ஆட்சியில் சமூக நீதி புறக்கணிக்கப்படுவதையும் ஊழல்களும் அராஜகங்களும் அன்றாடம் மலிந்து வருவதையும் எதிர்ப்பதற்கு இரு கட்சிகளும் இணைந்து போராடி வருகின்றன. இப்போது தி.மு.க. தோழமைக் கட்சிகளின் கூட்டணியில் பா.ம.க. நல்லுணர்வுடன் செயல்பட்டு வருகிறது. முரண்பாட்டுக்கு இடமில்லாத வகையில் தி.மு.கழகம் பாட்டாளி மக்கள் கட்சியின் உறவு திகழ்கிறது.

■ ராஜீவ் அரசின் பொருளாதாரக் கொள்கையை விமர்சித்த அளவுக்கு நரசிம்ம ராவ் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையை தி.மு.கழகம் எதிர்க்கவில்லை என்று கருதப்படுகிறது. கழக நிலை என்ன?

❍ கருதப்படவில்லை. அப்படி ஒரு கதை கட்டப்படுகிறது. குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி திட்டமிட்டு இப்படி ஒரு குற்றச்சாட்டை கழகத்தின் மீது சுமத்துகிறது. நரசிம்ம ராவ் ஆட்சியின் புதிய பொருளாதாரக் கொள்கையையும் 'காட்' ஒப்பந்தத்தையும் எதிர்த்து எங்கள் செயற்குழு பொதுக் குழுக்களில் தொடர்ந்து பல தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். அகில இந்திய அளவில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் தி.மு.க. தொழிற் சங்கப் பேரவை பங்கு பெற்றுக் கடமை ஆற்றியது. முழு அடைப்புக்கான அறிக்கையில் சி.பி.எம்., சி.பி.ஐ. கட்சிகளின் அகில இந்தியத் தலைவர்களுடன் சேர்ந்து தி.மு.க. சார்பில் நானும் கையெழுத்திட்டிருக்கிறேன். இந்த அறிக்கையில் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு நடைபெற்ற முழு அடைப்பில் தி.மு.க. கலந்து கொண்டது. மாநிலங்களவையில் கழகச் சார்பில் முரசொலி மாறன் இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையால் ஏற்படக்கூடிய பாதகங்களை விவரித்துக் கண்டித்திருக்கிறார். தி.மு.கழகக் கூட்டங்களில் புதிய பொருளாதாரக் கொள்கை பற்றிக் கடுமையான விமர்சனம் செய்யப்பட்டு வருகிறது. இந்தக் கொள்கையை மிகத் தீவிரமாக எதிர்ப்பது - மிகத் தீவிரமாக ஆதரிப்பது என்ற இரட்டை நிலை வேண்டுமானால் தி.மு.கழகத்திற்கு இல்லாமல் இருக்கலாம்.

■ ஊழல், வன்முறை, விமர்சிப்பவர்களைத் தாக்குவது எல்லாமே நீங்களும் தி.மு.கழகமும் தொடங்கி வைத்தவைதான் என்று அரசியல் விமர்சகர் 'சோ' தொடர்ந்து வலியுறுத்தி வருவது பற்றி...?

❍ ஜெயலலிதா ஆட்சியில் நடக்கும் பல்லாயிரம் கோடி ரூபாய் ஊழல்களை, அமைச்சர்களே தூண்டிவிட்டு நடைபெறும் வன்முறைகளை, சட்டவிதி மீறல்களையெல்லாம் மக்களிடமிருந்து திசை திருப்புவதற்கும் - "வாராது வந்தமாமணி" போன்று கருதும் ஜெயலலிதா ஆட்சியைக் காப்பதற்கும் வேண்டுமானால் இந்த அரசியல் விமர்சனங்கள் பயன்படலாம். எனவே தி.மு.கழகம் என்றாலே " அலர்ஜி", "ஒவ்வாமை" எனக் கருதி எழுதிப் பேசி வரும் நண்பர் ஒருவரிடமிருந்து வெளிப்படும் கருத்துக்களை நான் வெறுப்புடன் எதிர்கொள்வதில்லை. வேடிக்கையாகவே எடுத்துக் கொள்கிறேன்.

■ தி.மு.கழகத்திலிருந்து எம்.ஜி.ஆர். விலகியதும், வை.கோபால்சாமி விலகியதும் கொள்கைப் பிரச்சினைகளால் அல்ல; அன்று நீங்கள் மு.க. முத்துவையும் இன்று மு.க. ஸ்டாலினையும் கட்சியில் முன்னிலைப்படுத்த முற்பட்டதால்தான் என்று உங்கள் மீது தொடர்ந்து கூறப்பட்டு வரும் குற்றச்சாட்டு பற்றி.....?

❍ நீங்கள் குறிப்பிடும் என்னிரு மகன்களின் இன்றைய நிலையைப் பார்த்தாலே உங்களுக்குத் தெளிவாகப் புரியும். ஒருவரை முன்னுக்குக் கொண்டு வருவதும் அல்லது அவர்கள் அவர்களாகவே தமது செயல்பாடுகளால் முன்னுக்கு வருவதும் அவர்கள் கையிலே உள்ளதே தவிர வேறு யார் கையிலும் இல்லை என்பதைப் புரிந்து கொள்வீர்களென நம்புகிறேன். தி.மு.க. ஜனநாயக இயக்கம் - மன்னர் மாளிகையோ; மடாதிபதிகளின் ஆஸ்ரமமோ அல்ல; வாரிசுகளை உருவாக்குவதற்கு!

www.padippakam.com

எம்.ஜி.ஆர். ஆட்சியில் டி.ஜி.பி.யாகப் பணியாற்றிய மோகன்தாஸ் அவர்கள் எழுதியுள்ள ஆங்கிலப் புத்தகம், தமிழிலும் வெளிவந்திருக்கிறது. அதனைப் படித்தால் 1972-ல் நடந்த நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் கிடைக்கும்.

இதைத் தொடர்ந்து நீங்கள் கேட்டுள்ள கேள்விக்குப் பதில்: தலைமையைக் கைப்பற்ற தீட்டப்பட்ட சதித் திட்டம் பலிக்காமற் போகவே அதன் காரணமாக சுமத்தப்பட்ட வீண்பழியே தவிர வேறல்ல என்பது தான்!

■ ஜெயலலிதாவிடம் நீங்கள் காணும் பாராட்டத்தக்க அம்சம் ஏதும் உண்டா?

○ அவரது நூறாவது பட விழாவுக்கு என்னை அழைத்திருந்தார். அப்போது அவரது நடிப்புத் திறனைப் பாராட்டியிருக்கிறேன். இப்போதும் அந்தத் திறனைப் பாராட்டுகிறேன்.

■ சசிகலா இல்லாத ஜெயலலிதா ஆட்சி எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

○ நாணயத்தின் ஒரு பக்கத்தை எடுத்துவிட முடியுமா? போலி நாணயத்திற்குக்கூட இரு பக்கம் இருந்தால் தானே; அது கண்டுபிடிக்கப்படும் வரையில் புழக்கத்தில் விட முடியும்.

■ ஒரு வரியில் நரசிம்ம ராவ் ஆட்சி, ஜெயலலிதா ஆட்சி இரண்டையும் விமர்சியுங்கள் ?

○ இரு தலைக் கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி !

■ அரசியல் தெளிவு, கொள்கைத் திட்டம், சித்தாந்தம், கட்சி அனுபவம் ஏதுமில்லாத நிலையிலும் நடிகர் ரஜினிகாந்த் தமிழக அரசியலில் ஒரு சக்தியாக சித்தரிக்கப்படுவதை, அரசியல் அனுபவம் முதிர்ந்த நீங்கள் எப்படி சகித்துக் கொள்கிறீர்கள்? அவரைப் பற்றிக் கறாராக விமர்சிக்க, நீண்ட கால கள அனுபவமும் பெரிய அமைப்பும் உடைய, தி.மு.கழகம் தயங்குவது ஏன்?

○ நண்பர் ரஜினிகாந்த் அவர்களைப் பற்றி, உங்கள் கேள்வியின் முதல் பகுதியில் அமைந்துள்ள சொற்றொடர் முழுவதையும் நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை. அரசியல் தெளிவு அவருக்கு இருக்கிற காரணத்தினால் தான் "ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பிறகு தமிழ்நாட்டு மக்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்" என்று தனது வேதனையை வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் அதே சமயம் அவர் அரசியலுக்கு வராத இன்றைய சூழலில் - தி.மு.கழகத்துடன் மோதிடாத இன்றைய சூழலில் - அவர் தொழிலை அவர் பார்த்துக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில்; அவரைப் பற்றிக் கறாராகவோ, கடுமையாகவோ விமர்சிக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? தி.மு.க. போன்ற கட்சிகள் ரஜினியை விமர்சிக்கத் தொடங்கினால்; ஜெயா மீது உருவாகியுள்ள எதிர்ப்புகள் குறையுமே என சிலர் எதிர்பார்க்கிறார்கள். அதற்கு நாங்கள் கருவியாகிடத் தயாரில்லை. பாம்பு கூடத் தன்னை மிதித்தவரைத்தான் கடிக்கிறது. வலியச் சென்று யாரையும் தீண்டுவதில்லை. பாம்பே அப்படியென்றால் பண்பாடு மிக்க பாரம்பரியத்தில் வந்துள்ள அரசியல் இயக்கமான தி.மு.கழகம் எப்படியிருக்குமென்பதை உங்கள் முடிவுக்கே விட்டு விடுகிறேன்.

■ இந்துத்துவ அமைப்புகள் முன்பை விட தமிழகத்தில் இப்போது அதிகம் பரவி வருவதற்கு காரணம் என்ன என்று கருதுகிறீர்கள்?

○ மன்னர்கள் காலத்தில் அவர்கள் ஆதரித்த மதங்களும் சமயங்களும் பரவின என்பது வரலாறு.

■ இருபதாண்டுகளுக்கு முன்பு இல்லாத ஓர் அரசியல் போக்காக இன்று தலித் அரசியல் உருவாகியுள்ளது. 'தலித்'துகளுக்கென்றே தனிக்கட்சி வேண்டும் என்ற கருத்துள்ள நிலையில் உங்கள் நிலை என்ன?

○ திராவிட இயக்கத்தைப் பொறுத்தமட்டில் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் நல்வாழ்வையும் சமுதாய சுயமரியாதையையும் முன்வைத்தே தொடர்ந்து பணியாற்றி வந்துள்ள இயக்கமாகும். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற தி.மு.க., தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி வேலை வாய்ப்புகளில் இருந்த இட ஒதுக்கீட்டை 16 லிருந்து 19 சதவிகிதமாக்கியது. இந்தியாவிலேயே முதல் தடவையாக ஆதி திராவிட மக்களுக்கு இலவச கான்க்ரீட் வீடு கட்டித் தரும் திட்டத்தைத் தொடங்கியது கழக ஆட்சிதான். இந்தியாவிலேயே முதன் முதல் 1976-க்கும் முன்பே சென்னையில் அம்பேத்கர் பெயரில் அரசுக் கல்லூரி அமைத்ததும் கழக ஆட்சிதான். நாட்டில் வேறெங்குமில்லாத விதத்தில் வடாற்காடு அம்பேத்கர் மாவட்டம் அமைந்ததும் கழக ஆட்சிதான். பல்வேறு பிரிவாக இருக்கிற சாதிகளை தமிழ்ச்சாதி என்ற ஒரே சாதியாக ஆக்குவதற்கு கலப்புத் திருமணம் இன்றியமையாத மார்க்கம் எனக் கண்டு அதற்குக் கழகத் தலைமையே முன்னோடியாக இருந்தது என்பதை யாரும் மறக்க முடியாது. எல்லா சாலைகளும் ரோம் நோக்கியே செல்கின்றன என்பதுபோல் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்காக நடைபெறும் தூய்மையான முயற்சிகள் அனைத்தையும் தி.மு.க. வரவேற்கும்.

■ இருபதாண்டுகளுக்கு முன்பு அரசியலில் பேசப்படாத விஷயம் - சுற்றுச்சூழல். இப்போது நர்மதை அணை எதிர்ப்பு, கூடன்குளம் அணு உலை எதிர்ப்பு, நீலகிரிக் காடுகள் அழிப்பு எதிர்ப்பு, கும்மிடிப்பூண்டி டூ பாண்ட் நைலான் ரசாயன ஆலை எதிர்ப்பு, பவானி ஆறு மாசுபடச் செய்யும் ஆலைகள் எதிர்ப்பு என்று சூழல்காப்பு இயக்கங்கள் வலுப்பெற்றுள்ளன. இதில் தி.மு.கழகத்தின் கொள்கை நிலை என்ன?

○ சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில், தி.மு.க. உறுதியாக இருக்கிறது. சில ஆலைகள், தொழில்கள் இன்றியமையாதவைகளாக இருந்திடும்போது அவற்றால் மாசு கட்டுப்பாட்டை மீறிய தீய


படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவின் அடுத்த பிரதமராக யார் வர வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?



விளைவுகள் உண்டாகாதிருக்க அத்தியாவசியமான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அரசின் முயற்சியால் செய்ய வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் எனது பிறந்தநாளின்போது கண்ணொளி திட்டம், இரவலர் மறு வாழ்வு திட்டம் போன்றவைகளை ஊக்கப்படுத்தி வந்தேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக என் பிறந்தநாளையொட்டி ஜூன் மாதம் முழுதும் மரக் கன்றுகளை நடுமாறு கழகத்தினரைக் கேட்டுக் கொள்கிறேன். என் வேண்டுகோள் சிறப்பாகவே நிறைவேற்றப்படுகிறது.

■ காவிரி நீர் மறுக்கப்படுவதால் மட்டுமன்றி இறால் வளர்ப்புப் பண்ணைகளாலும் தஞ்சை நெற்களஞ்சியம் தரிசாகி வருகிறது. இதில் கழகத்தின் நிலை என்ன?

❍ தஞ்சை நமது தாயகத்தின் நெற்களஞ்சியம். அந்தக் களஞ்சியம் தரிசாக ஆகக் கூடாது என்ற கவலையுடன் தமிழகத்துக் கட்சிகள் அனைத்தும் மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தி வருகின்றன. இறால் பண்ணைகளின் ஆதிக்கத்தால் விவசாயிகள் பாதிக்கப்படாமலிருக்க அந்த ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். கடல்வளத்தின் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வளம் பெறுகிற அதே நேரத்தில் ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களின் வயிறு காயக் கூடாது என்பதில் இருவேறு கருத்துக்கு இடமேயில்லை.

■ தென் மாவட்ட சாதிக் கலவரங்களுக்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்? இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க உங்கள் ஆலோசனை என்ன?

❍ தொடக்கத்திலேயே விரைந்து சென்று அந்தப் பகுதியில் அமைதியை ஏற்படுத்த அரசு முன் வராததே முக்கியமான காரணமாகும். தென் மாவட்டங்களில் மட்டுமின்றி மொத்தத்தில் தமிழ்நாட்டில் இத்தகைய கலவர வெறி உணர்வுகள் ஏற்படாமலிருக்க அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களைக் கொண்ட அமைதிக் குழுக்களை அரசு ஆங்காங்கு அமைத்திடல் வேண்டும்.

■ தமிழ்வழிக் கல்வி வளர்ச்சி பெறாததற்குக் காரணம் உங்கள் ஆட்சியில் மேல்நிலைக் கல்வியில் தமிழை வலியுறுத்தாமல் இடைநிலையோடு விட்டு விட்டதும், நர்சரிகள் வளர்ச்சியைத் தடுக்காததும்தான் என்று சில தமிழறிஞர்கள் குற்றஞ்சாட்டியுள்ளது பற்றி?

❍ 1967ல் தி.மு.க. ஆட்சியில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் தமிழ்வழிக் கல்விக்கான உறுதியை சட்டப் பேரவையில் அறிவித்ததற்கு இணங்க; நான் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் மேல்நிலைக் கல்வியில் தமிழ் வழிக் கல்வி, கட்டாயம் எனக் கொண்டு வரப்பட்டது. அப்போது பெருந்தலைவர் காமராசர் அவர்களே அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. தூண்டி விடப்பட்ட மாணவர்கள் தமிழ்வழிக் கல்விக்கு எதிர்ப்பு தெரிவித்து பெருங் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். பின்னர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி., தவத்திரு குன்றக்குடி அடிகளார் போன்றவர் கூறிய ஆலோசனையின் பேரில் அறிஞர் ஏ.எல். முதலியார் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு; தமிழ்வழிக் கல்வி, மாணவர்களின் விருப்பத்திற்கு விடப்பட்டது. இப்போது தமிழ்வழிக் கல்விக்கான ஆர்வம் வளர்ந்திருப்பதாகக் கருதுகிறேன். நர்சரி உள்ளிட்ட எல்லா இடங்களிலும் தமிழ்வழிக் கல்விக்குக் கட்டாயமாக வழி காணக் கூடிய உணர்வைப் பெற்றாக வேண்டும்.

■ இந்தியாவின் அடுத்த பிரதமராக யார் வர வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

❍ தேசிய முன்னணியில் தி.மு.க. இடம் பெற்றில்லாத இந்த நிலையிலும்; அடுத்த பிரதமராக வி.பி. சிங் அவர்கள் வர வேண்டுமென்பதைத்தான் முதலாவதாக நான் கூறுவேன். அடுத்தது யார் என்றால்; அது அப்போது உருவாகிற சூழ்நிலையைப் பொறுத்தது!

■ நடைபெறவிருக்கும் தேர்தலில் வாக்காளர்கள் பரிசீலிக்க வேண்டிய முக்கிய அம்சம் என்ன என்று கருதுகிறீர்கள்?

❍ கடந்த தேர்தலில் எப்படி ஏமாற்றப்பட்டோம் என்பதை சிந்தித்து முடிவுக்கு வந்தால்; அதுவே போதும்.

■ இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சந்திரிகா அரசு தெரிவித்த அதிகாரப் பகிர்வு முறையில் இந்தியாவில் மாநில அரசுகளுக்கு உள்ளதை விடக் கூடுதலாக சில அம்சங்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக 356 என்பதே இல்லை. நிதி, ராணுவம், வெளியுறவு தவிர மற்றவை மாநிலத்துக்குரியவை. பொதுப் பட்டியல் கிடையாது.

www.padippakam.com



# சென்ற முறை ஈழப் போராளி இயக்கங்களுக்கு நேரடியாக நிதியுதவி அளித்த தி.மு.க. இம்முறை செஞ்சிலுவை சங்கத்திடம் அளித்தது ஏன்?

. இங்கே அத்தகைய அதிகாரப் பகிர்வும் மாநில சுயாட்சியும் தேவை என்று வருகிற தேர்தலில் முதன்மையாக தி.மு.க. வலியுறுத்துமா?

○ தி.மு. கழகம் மாநில சுயாட்சிக் கொள்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்தியாவில் முதன் முதலாக 1974 ஆம் ஆண்டு சட்டப் பேரவையிலே மாநில சுயாட்சித் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியதே கழக ஆட்சிதான்!

எதிர்காலத்தில் எத்தகைய மாநில சுயாட்சி அமைய வேண்டுமென்பதை; மாநில சுயாட்சி வழங்கிட முன்வரும் கட்டத்தில் விவாதித்து அந்த அடிப்படையில் முடிவெடுக்கும்.

■ தனி ஈழம் என்ற தீர்வை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? சென்ற முறை ஈழப் போராளி இயக்கங்களுக்கு நேரடியாக நிதியுதவி அளித்த தி.மு.க. இம்முறை செஞ்சிலுவை சங்கத்திடம் அளித்தது ஏன்? போராளி இயக்கங்கள் மீது நம்பிக்கை இழந்து விட்டதாகச் சொல்லலாமா?

○ ஈழத் தமிழர்கள் எந்த முடிவை ஏற்றுக் கொள்கிறார்களோ; அம்முடிவை தி.மு.க. ஆதரிக்குமென்று பல முறை கூறியிருக்கிறேன். ஈழத்தில் போர் நடக்கிற காலத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் நிதி வழங்கி மருந்து போன்ற அத்யாவசியப் பொருள்களை அந்த மக்களுக்கு வழங்குவதே சரியென்ற காரணத்தால் அச்சங்கத்திடம் நிதியை வழங்கினோம்.

■ நீங்கள் கலை இலக்கியத் துறையில் தீவிரமாக ஈடுபட்டிருந்த ஐம்பது-அறுபதுகளில் உங்கள் மனங்கவர்ந்த எழுத்தாளர்கள் யார்?

○ நறுமணம் கமழும் நந்தவனத்தின் நடுவே நிறுத்தி; மனங்கவர் மலர் எது என்று கேட்பது போல் இருக்கிறது.

■ இன்றைய எழுத்தாளர்களில் யாருடைய எழுத்து உங்களால் ரசிக்கத்தக்கதாக இருக்கிறது?

○ இன்றைய எழுத்துலகில் சிறந்த இளம் எழுத்தாளர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் ஊக்கப்படுத்த வேண்டியது என் போன்றோர் பொறுப்பும் கடமையும் என்பதால் குறிப்பிட்டு யார் பெயரையும் சொல்வது அழகல்ல!

■ திரைப்படங்களில் இன்று ஏராளமான வன்முறையும் பாலியல் வக்கிரங்களும் இடம் பெறுகின்றன. இதற்கு யார் பொறுப்பு என்று நினைக்கிறீர்கள்?

○ எடுப்போர்.
நடிப்போர்.
பார்ப்போர்

■ சன் டிவி. பற்றிய உங்கள் விமர்சனம் என்ன?

○ அந்த டிவி. தொடங்கப்பட்ட பிறகுதான் தமிழகத்தில் ஒளிபரப்பாகும் மத்திய அரசின் தொலைக்காட்சிகளில் தொலைந்துவிட்ட தமிழ் மீண்டும் தொடர ஆரம்பித்தது. இதை மனத்திற் கொண்டு சன் டிவி. நல்ல தமிழ் வளர்க்க நாளும் பணியாற்ற வேண்டும்.

■ உங்களால் அடையாளம் கிடைக்கப் பெற்ற கலைஞர் சிவாஜிகணேசன். இன்று 'செவாலியே' சிவாஜியின் கலை வாரிசாக யாரைச் சொல்லுவீர்கள்?

○ இந்தக் கேள்விக்கான பதிலை என் அன்பு நண்பரிடமே கேட்டுப் பெறுவது நலம். அவரே இதற்குப் பதில் அளிக்கத் தகுதியானவர்.

■ இன்றைய சேட்டிலைட் - கம்ப்யூட்டர் - செல்லுலார் உலகில், ஒரு தமிழனை அடையாளம் காட்டுவது எது?

○ தமிழ்மொழியும் - பண்பாடும்தான்.

❑



படிப்பகம்

www.padippakam.com

# Another Reason for Thanksgiving at Pongal



*Pongal - a celebration of nature's generous bounty.*

*Thank God for Mother Nature, who gives us the gift of a plentiful harvest. Who gave us the hills and the vales, the cool mountain breeze, the crystal clear springs.*

*And the wondrous beauty of ---*

**River Retreat**
**FARMLAND**

*Your very own fun farmland. For you and your family to take off whenever and as often as you please.*

*Plots of 7200 sq.ft. on a sprawling 100 acres, surrounded by the lagoon just a few minutes from Mahabalipuram.*

**NEVER BEFORE OFFER!**

- 20 Teak, 10 Coconut, 10 Mango, 5 Guava trees.
- Copious Water, Fencing
- Power, Phone, Auditorium
- Swimming Pool, Skating
- Horse-riding, Health Club
- Library, Meditation Centre
- Tennis, Indoor Games

Pay just Rs. 19 per sq.ft. and buy a plot. Take back Rs. 2,70,000 and still own it.

*Unbelievable but true. And what's more you get Govt. bonds for DOUBLE the value in 20 years*

*Wow! I can't believe it's all true! I'd like to know mo[re] about it. Could you please furnish the details?*

*Name :* ..............................

*Address :* ..............................

..............................

*Pin* .................. *Phone* ..................

**TWENTIETH CENTURY FARMS & RESORTS PRIVATE LIMITED**
7, Thyagaraya Road, T.Nagar, Madras-600 017.
Phone : 4345818 Fax : 91-44-4993624.

Calai



படிப்பகம்

www.padippakam.com

# விரல் மீட்டிய மழை

## எஸ். வைதீஸ்வரன்



படம் : வேதன்

ஆகாயப் பாதை வழி
ஏதேதோ ஊர் கடந்து
எங்கள் ஊர் தலைபார்த்து
ஊற்றுது இன்று மழை.

தலைகால் புரியாமல்
தனைமறந்து நனையச் சொல்லுது
மனக் குழந்தை

காற்றை அலங்கரிக்கும்
காக்காய் பொன்தூசுகள்...
ஊர் நடுவில் தொடங்கி
தோப்புவயல் தாண்டி
அடிவாரம் தொட்டு
ஆரவாரமாய் கொட்டுகிறது

மணித் துணிக் கைகள்
பல்லாயிரம் பிணைந்து
ஈரச் சங்கிலிகள் வெளியில்
வானுக்கும் ஊருக்குமாய்.

விலைமீறிப் போன நிலவரத்தால்
காகிதத்தைக் கப்பலாக்கிக் கவிழ்க்க
கைகளுக்கு மனசில்லை.

தவிர,
இந்நாள் வீதிவெளிகள்
கப்பலோட்டப் பொருத்தமாகவும்
நெளிவதில்லை.

கொட்டிய மழையும் துள்ளிக்
கள்ளமற்ற குழந்தைகளென
ஓடக் காணோம்.

நசநசவென்று ஓரத்துக்
கழிவு நீரோடு கைகோர்த்து
நாகரீகக் கசடாய் தேம்புகிறது,
நகர வாசனை கலந்து.

மழையை அந்தரத்திலேயே
வழிமறித்து மரங்களும், கொடிகளும்
பச்சையாய் குளிக்கையில்,
அந்தஸ்து தேய்ந்த
அழுக்கு மாளிகை சில
மேலும் நனைந்து
உள்ளுக்குள் ஓட்டால் அழுகின்றன
இறந்து போன பாஷையில்.

அவ்வப்போது
அரசாங்கத்தின் சிவந்த கரங்கள்
மைக்கில் பேர் கூவி
மழைக்கோட்டு
கொடுத்த பின்னும்,
வண்டியிழுக்கிற உடம்புகள்
வாடிக்கையாய் நனைந்து
ஒடுங்கித் தான் ஓட்டுகின்றன
காலத்தை;
எதுவும் எதையும் மறைக்க
முடியாதது போல்!

மழைவரும், போகும்
கவிதைகள் போல்
ஊர்விட்டு ஊர் கொட்டும்
கூத்துக்காரன் கூடாரம் போல்

இந்த மழையை
விரல் தொட்டு எழுத ஆசை,
இயற்கையின் ஈரம் சொட்ட
எனினும்,
தொட்ட விரல் மேகத்தில்
ஒட்டிக்கொண்டு விடுகிறது
ஓரங்கமாக
மேகம் இட்ட கையெழுத்தோவென
கவிதை காட்சி கொள்ள


படிப்பகம்

www.padippakam.com

# பூனை

ஞானக்கூத்தன்



படம் : ஜஸ்டின்

தடவிப் பார்த்து சார்லஸ் போதலேர்
அடடா என்றாராம் பூனையை.

பிரான்ஸ் நாட்டுப் பூனைகள்
இருக்கும் போலும் அப்படி என்பதற்குள்
எங்கும் பூனைகள் அப்படித் தானென்று
சொல்லக் கூடும் பூனை ரட்சகர்கள்.

நமது நாட்டுப் பூனைகள் குறித்து
போதலேருக்கோ ஹெயின்ரிஷ் ஹெயினுக்கோ
தெரிந்திருக்க நியாயமில்லை

நமது பூனைகள் தவம் செய்யும் என்றோ
முனிவன் இல்லாத நேரத்தில் இருளில்
குடிசைக்குள் காமுக வேந்தன் நுழையத்
தங்கள் வடிவை இரவல் தருமென்றோ

முன்னொரு காலத்துப் பகைவன் சந்ததியை
என்னிடம் தேடுவது போல் பார்க்கும்
பூனைகள் குறித்து லட்சம் கொடுத்தாலும்
புராணம் எழுதப் பிடிக்காத கவிஞன் நான்.

வெள்ளிக் கிரணங்களால்
புனைந்த தன் உடம்பை
இரும்புக் கம்பிகளின் ஊடே
நூல்போல் நுழைத்து
அடுக்களை போகும்
அவற்றை நான் வெறுக்கிறேன்

அப்படியானால் எதற்குப் பூனையைப் பற்றி
இப்போது எழுதுவானேன்?

சூரிய உதயம் ஆவதற்கு முன்
பசும்பால் வாங்கத் தெருவில் இறங்கினேன்
எனது வீட்டை விட்டுக் குதித்துத்
தெருவில் ஓடிய பூனையைக் குறவன்
இமைப் பொழுதுக்குள் கோணியில் பிடித்தான்
இரண்டு ரூபாய் தருகிறேன் பூனையை
விடுதலை செய்யென்று கெஞ்சிக் கேட்டேன்
தமிழ் தெரியாதவன்போல்
அவன் போய்விட்டான்
எனது வீட்டு ஜன்னல் கம்பிகளின்
இடைவெளி இன்னமும் இருண்டே உள்ளது.

www.padippakam.com

# N.S. FORMS PVT. LTD - TPA COMPRINTS

***Manufacturers of Computer Business Forms***

**D25(P) Industrial Estate, Kappalur, Madurai - 625 006**

**FAX/PHONE: (0452) 882795 Pager Dial: 9698**
**882895 Page: 150–130/131**



படிப்பகம்

www.padippakam.com

# ATTENTION HOTELIERS BAKERS & HOUSEWIVES !

Use always our famous


## SHANKAR BRAND

100 % pure and hygienic
Bengal gram flour

for

Delicious laddu, Mysore pak, savouries & namkins.

Available in 10 kg, 30 kg, & bulk 75 kg packing.








## SRI SHANKAR INDUSTRIES

254, Old Tharagupet, P B No. 7998,
BANGALORE 560 -053
Ph: (0)080-2877653 (Fac) 080-3350639



படிப்பகம்

www.padippakam.com

# ஆஷ்ட்ரே

## விக்ரமாதித்யன்



படம் : வேதன்

அடிநாளிலிருந்தே எனக்கொரு ஆசை
ஆஷ்ட்ரே பற்றி ஒரு கவிதை எழுத வேண்டும்

என்ன எழுதுவது எப்படி எழுதுவது
என் வாழ்க்கையில் ஒரு இடமுண்டு ஆஷ்ட்ரேக்கு

வீடோ அலுவலகமோ ஆஷ்ட்ரே இல்லாமல்
சிகரெட் பிடிக்கமுடியாது என்னால்

பீங்கான் ஆஷ்ட்ரேயை பத்திரமாக
வைத்துக் கொள்ள முடியாது நம்மால்

அழகழகான ஆஷ்ட்ரேக்களைப் பார்க்கையில்
ஆசை ஆசையாக இருக்கும் நமக்கு

ஆஷ்ட்ரேயை சுத்தம் செய்யும் நாளில்
அடிவயிற்றில் ஒரு பயம் கிளம்பும்

என் ஆஷ்ட்ரேயில் பீடி விழுந்தால்
எனக்கு வருத்த வருத்தமாய் இருக்கும்

ஆஷ்ட்ரேயைக் கண்டுபிடித்தவன்
அருமையான கலைஞன்தான் நிச்சயம்

ஆஷ்ட்ரேயை சமயங்களில் நான்
அழகு தமிழில் சாம்பல் கிண்ணமென்று சொல்வதுண்டு

ஆஷ்ட்ரே குறித்து எழுதமுடியுமா எழுதினால்
அது கவிதையாகுமா இப்படியொரு கேள்வி எனக்குள்

என் கோபத்தை இதுவரை ஆஷ்ட்ரேயிடம் காண்பித்ததில்லை
என்ன காரணமென்று எனக்கே தெரியாது

ஆஷ்ட்ரே பற்றிய முதல் தமிழ்க் கவிதை இதுதான்
அதிலே எனக்கு வெகு பெருமைதான்


படிப்பகம்

www.padippakam.com

# தவம்

## வைரமுத்து

முன்னோக்கி எனைநடத்தி
முதுமைசெய்யும் காலங்காள்!
பின்னோக்கி எனைநடத்திப்
பிள்ளையாக்கக் கூடாதா?

கட்டில்கண்டு கிடந்தாலும்
காதோரம் நரைத்தாலும்
தொட்டில்கண்ட மனம்என்னைத்
தொடர்ந்துவரக் கூடாதா?

சின்னஞ் சிறுவயதில்
செய்தசில பிழையெல்லாம்
கண்ணீரின் வெப்பத்தில்
கருகிவிடக் கூடாதா?

பாதி மழைபொழிந்த
பள்ளிக்கூட மேகங்கள்
மீதி மழைசிந்த
மீண்டுவரக் கூடாதா?

பருவத்தே காதலித்துப்
பறந்துபோன பைங்கிளிகள்
வருடத்தில் ஒருநாள்என்
வாசல்வரக் கூடாதா?

முன்னோர்கள் எனக்குள்ளே
மூட்டிவிட்ட தமிழ்த்தீயே!
கண்மூடும் வேளைவரை
கனன்றுவரக் கூடாதா?

உச்சக் கலவியின்பின்
உள்ளாடும் ஒரமைதி
மிச்சப் பொழுதோடும்
விளையாடக் கூடாதா?

தலைவெடிக்கும் அவசரங்கள்
தள்ளிக் களைந்துவிட்டு
நிலவடிக்கும் ஓடைகளில்
நீந்திவரக் கூடாதா?

கண்ணாடி பார்த்துமுகம்
கண்டறியக் கூடல்போல்
கண்பார்த்தே மனிதமனம்
கண்டுகொள்ளக் கூடாதா?

விதையொன்று முளைகொண்டு
விருட்சமாகி வரும்வரைக்கும்
அதனுள் நானிருந்தே
அறிவு பெறக்கூடாதா?

ஆசையற்ற மனம்வாங்கி
அழிவற்ற உடல்வாங்கி
ஓசையற்ற உலகத்தில்
ஒதுங்கிவிடக் கூடாதா?

மரணத்தில் கூடாமல்
வாழ்வோடும் சேராமல்
இரண்டுக்கும் மத்தியில்நான்
இளைப்பாறக் கூடாதா?

சாவுக்குப் பக்கத்தில்
சம்பவிக்கும் மெய்ஞ்ஞானம்
வாழ்வுக்குப் பக்கத்தில்
வந்தருளக் கூடாதா?

எனக்குத் தெரியாமல்
என்பிறப்பு நேர்ந்ததுபோல்
எனக்குத் தெரியாமல்
இறந்துவிடக் கூடாதா?

போட்டி பொறாமைகளைப்
புறந்தள்ளிச் சிரித்துவிட்டு
நீட்டிப் படுத்துமனம்
நிறைவுபெறக் கூடாதா?

வட்டங்கள் போடும்
வாழ்க்கைக்குள் சிக்காமல்
வெட்டவெளி போலேநான்
விரிந்துபடக் கூடாதா?



படம் : சம்பத்குமார்

படிப்பகம்

www.padippakam.com



மங்கையரின் மனதைக்
கொள்ளைக் கொள்ளும்
நவநாகரீக
பட்டுப் புடவைகள்
சுபமுகூர்த்தப்
பட்டுப் புடவைகள்
அசல் வெள்ளி
ஜரிகையுடன்
தேர்ந்தெடுக்க

பாண்டிச்சேரியில் புகழ்
பெற்ற நிறுவனம்

# திருபுவனம் சில்க் ஹவுஸ்

F.F. 42 முனிசிபல் காம்ப்ளக்ஸ்.
நேரு வீதி. பாண்டிச்சேரி.



படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

# பச்சைப் பாலைவனம்

த. பழமலய்

படம் : பி. மோகன்



எனக்கு நினைக்க அய்ந்து, பத்து
அப்பா, அம்மாவுக்கு ஆயிரம் இருக்கும்.

கொல்லைக் காவல்களில் -
நான் இவ்வளவு தின்று தீர்த்தும்
அம்மா கூடை நிறைய எடுக்கத்
தட்டைப் பயறு நெற்றுகள் மிஞ்சும்.

பிஞ்சுகளை முற்ற விடுவதற்காக இருக்கலாம் -
பெரியவர்கள் செய்வது.
காட்டிக் கொடுத்து விடும்
காலி இடங்களுக்கு அஞ்சிக்
கொடிகளைப் பிடுங்காமல் கடலையைக் கல்லுவேன்.
தோல் இருக்கச் சுளை விழுங்கி!

சோளக் கதிர்களோடு தரைக்குத் தாழும் கிளிகளைப்
பிடித்துவிடலாம் என்பது பகல் கனவு.

நெருக்கிய உள்ளங்கைகளில் பெருவிரல் உருட்டி
நிமிட்டி தின்னப்
பால் கதிர்களாய்ப் பார்த்துப் பார்த்து ஒடித்திருந்தும்
சாக்கு சாக்காய்க் கதிர் அறுப்பார்கள்.

ஆர்த்தி மஞ்சளாய்ப் பூக்கும்.
பறித்துச் சூட சிவபெருமான் வந்து
பார்த்தது இல்லை நான்.
நாம் கொண்டு போக வேண்டி இருக்கலாம்.
படியளப்பவன் - என்கிறார்கள்.
எங்கள் களத்து மேட்டுக்காவது வரலாம்.

நாங்கள் என்ன மறுத்தாலும்,
எங்கள் அம்மா, அப்பாவுக்கு வருகிறார்,
இன்றும் -
'பிடித்து வைத்துக் கொண்டு' பேசுகிறார்கள்.
உருக்கமாய் விழுந்து கும்பிடுகிறார்கள்.

முள்மரமாக இருந்தாலும்
இலந்தையை அப்பா விட்டு வைத்திருந்தார்.
பத்திரிநாதன், பெருமாள் -
என்பதெல்லாம் அறியாதவர் அவர்.

கைந்நிறையப் பறித்துக் கொடுத்து விட்டுத்
தான் ஒன்றிரண்டு வாயில் போடுவார்.

வன்னிமரக் கிளைகளில்,
பீர்க்குப் பூத்திருக்கும், காய்கள் தொங்கும்.
கட்டியிருக்கும் ஏனை குலுங்கும்
இப்படி நேரங்களில் -
தம்பியின் ஏனை, எனக்கு ஊஞ்சல்.

வேலை முடிந்து வீடு திரும்பும் மாலையில்,
ஏறக்குறைய இருட்டி இருக்கும் -
பண்ணைக் கீரை, புளிச்சக்கீரை
மடி கனக்கப் பறிப்பாள் அம்மா.

புளிச்சக்கீரைக்கும் வரகுச்சோற்றுக்கும்
நல்லெண்ணெயும் சேர்ந்து கொண்டால் -
உருட்டி உருட்டி - உருட்டி உருட்டி -
முழு உணவையும் கீரையில் முடிக்கலாம்.

மொச்சை அவித்து வந்து
முறம் நிறையக் கொட்டுவாள்.
தூங்கத் தொடங்குகையில் -

"பெரியவனா இருக்குமா, நடு உள்ளவனா இருக்குமா -"
அம்மா செல்லமாய்த் துப்பறிவாள்.
'நா இல்ல' என்று மூக்கைப் பிடிப்பவன்,
தானதான எனபதை ஒத்துக் கொள்பவனாம்!

பஸ்ஸை எங்களூரில் 'கார்' என்பார்கள்.
ஊரே போவது, வருவது காரில் தான்!
குறுக்கே பாலம், கரும்புச் சாலை,
டிராக்டர், டிரெய்லர்,
மின்சாரம், மோட்டார் - என்று வந்துவிட்டன.

முக்கூட்டு வயல்காடு, மணல் வயல்காடு,
பள்ளிக்குளக்காடுதான் நன்செய்யாய் இருந்தவை.
கீழைக் காட்டிலும் நெல் கரும்பு;
பச்சைப் பாலைவனமாய்
மிச்சம் இல்லாமல் போனது!

துவரம்பொட்டு, கடலைக் கொடி,
சோளத் தட்டை - மாடுகள் தின்னும்.
வறுத்த பயறு, பொரித்த சோளம்,
எள் உருண்டை - என்றெல்லாம் செய்வாள் அம்மா.
புஞ்செய்க்காடு;
மக்களுக்குப் போலவே ஆடு மாடுகளுக்கும்
சுவைகள் பயிற்றிய திறந்த வெளி அரங்கு.

'பணப்பயிர் தான்' பயிர் என்பவர்கள் -
காசை விதைக்கலாம்.
நோட்டை நடலாம்.

இன்று மனங்களைப் போலவே
எங்கள் மண்ணும் சலிக்கும்.
நெல் ஒரு பயிர்.
கரும்பு ஒரு பயிர்.
நிலம் முழுக்கவுமா இதே பயிர்! இதே பயிர்!


படிப்பகம்

www.padippakam.com

# சுவாசத்தின் சுவாரஸ்யம்

## அப்துல் ரகுமான்

சிற்பம் : ஹென்றி மூர்



செத்துப் போன
கண்டிப்பான கைகளால்
முன்பே போடப்பட்டிருக்கின்றன
இரக்கமற்ற கட்டங்கள்

இதில்தான் நாம்
விளையாடியாக வேண்டும்

உடைந்த கனவில்
சில் எறிந்து
கண் மூடிக்
காலெடுத்து வைக்கிறோம்

கோட்டை மிதிக்காமல்
தாண்டினோமா
இல்லையா என்ற
தவிப்பில்
இதயம் படபடக்கிறது

ஆனால்
குருட்டு நடையில்
எப்படியும்
கோட்டை மிதித்து
வெளியேற்றப்படுகிறோம்

அன்றாடம்
நீயும் நானும்

இருந்தாலும்
நாளையும் விளையாடுவோம்

நம்மை
ஆடவைக்கிறது
சுவாசத்தின் சுவாரஸ்யம்

படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

# பொங்கல் – உங்கள் வாழ்வை வளமுறச் செய்யும் அறுவடைத் திருநாள் – இது ஆனந்தப் பெருநாள்

CRISIL FA+

## 21 st Century's

# "Family-Deposit"

வாழையிலை தோரணங்கள், வண்ண வண்ணப் பூச்சரங்கள், வீதியெங்கும் கோலங்கள், ஊரெங்கும் கோலாகலங்கள். தித்திக்கும் செங்கரும்பு, செழுமிக்க மஞ்சள்கொத்து, தேங்காய் பழங்களுடன் வீடுகள்தோறும் கொண்டாட்டங்கள். ஆம், இது மங்கலம் பெருகும் பொங்கல் திருநாள் – பூமியின் பலனை கைமீது கண்டுகளிக்கும் பொன்னாள். பால்பொங்க, நெஞ்சமெல்லாம் மகிழ்ச்சியில் பொங்க, சொந்தங்கள் கூடிக்கொண்டாடும் இந்த நன்னாளில் உங்களை வாழ்த்துவதே எங்களுக்கு மகிழ்ச்சி.

உங்கள் நலன் கருதியே எங்கள் முதலீட்டு நிறுவனம் சேவை புரிந்து வருகிறது. **ஃபேமிலி டெபாஸிட்** – இத்திட்டம் உங்கள் பணத்தின் பாதுகாப்பிற்கும் எதிர்கால நல்வாழ்விற்கும் உறுதியளிக்கிறது. இது உங்கள் குடும்பத்தினருக்கு ஒரு செல்வக் களஞ்சியம்.

வளம்கொழிக்கும் இந்த அறுவடைத் திருநாளில், கூடுதலாகப் பெறும் வருமானத்தை மேலும் பன்மடங்காய் பெருக்க திட்டமிடுங்கள். காலத்தின் தேவை அறிந்து சேவை புரியும் எங்கள் நிறுவனத்தில் முதலீடு செய்யுங்கள். அது உங்கள் எதிர்காலத்தை பாதுகாக்கும். புன்னகை ஒளிவீசும் இந்த பொங்கல் பெருநாளில் வாழ்வில் இனிமைகள் நிறையட்டும்.

**Now 15% interest**

**ட்வெண்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மென்ட் சர்வீஸஸ் லிமிடெட்**

**நிர்வாக அலுவலகம் :**

"ஸ்ரீவித்யா" 32, டி.டி.கே. சாலை, சென்னை – 600 018.
போன் : 4995155, 4994821. ஃபேக்ஸ் : 044-4994826

**கிளைகள் :**

பம்பாய், கோயம்புத்தூர், ஐதராபாத்

உங்கள் ஃபேமிலி டெபாஸிட் பற்றி மேலும் கூறுங்கள்.

பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

போன் : ..............................

**ட்வெண்டி ஃபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மென்ட் சர்வீசஸ்**
லிமிடெட், "ஸ்ரீவித்யா", 32, டி.டி.கே. சாலை, சென்னை – 600 018.

Sens - /TCMS/950904

படிப்பகம்

www.padippakam.com

# என் கவிதை

மு. மேத்தா

படம் : எம். ஜான்பாஸ்கோ



கை கொடுக்கும்
கை குலுக்கும்
காலில் விழாது!
உடுத்திக் கொள்ளும்
போர்த்திக் கொள்ளாது!

●

உலைக் களத்தில்
உருகும்
கணையாழிகளைத்
தயாரிக்க அல்ல —
ஊன்று கோல்களை
உருவாக்கிக் கொடுக்க!

●

வானில்
வலம் வரும்
பறவைகளைக்
கவர்ந்து செல்ல
அல்ல ....
சிறகு தளர்ந்த பறவைகளை
சேருமிடத்திற்குத்
தூக்கிச் செல்ல!

●

என் கவிதை
சமதர்மம் பேசாது-
இது
கழுகுகளுக்கு - வலை
குயில்களுக்குக் - கிளை!

●


என் கவிதை
சரணமல்ல
பல்லவி!


படிப்பகம்

www.padippakam.com

# இறகு

**சிற்பி**



பார்த்ததே இல்லை
எனினும்
கேட்டதுண்டு அதன் குரல்

காலமில்லை நேரமில்லை
அந்திகளில் கருக்கிருட்டில்
நண்பகலில் மாலைகளில்
வேளை இன்னதென்றில்லை
மெய்சிலிர்க்க வைத்த குரல்...

கோடைகளில் கொப்பளித்து
மழைக்குப் பொத்தல் குடையாகும்
என் வீட்டின் மேற்குப் புறத்தில்
இன்னொருவர் நிலத்தில்
ஒரு பச்சைப் பிரளயம் போல்
நிற்கும் வேப்ப மரம்

என் கூரையின் மேல் நிழல் தூவும்
குளிர் காற்றைத் தூது விடும்
சில போது
மனதைக் கவ்வுமொரு மாயமாய்
ஏகாந்தப் புல்லாங்குழலாய்
இலையடர்த்திக் குள்ளிலிருந்து
கூவியிழுக்கும்
ஒரு குயிலின் குரல் தூண்டில்

மகளுக்குத் தலை சீவ
பேன் பார்க்க
மகனுக்குப் பாடம் சொல்ல
கதை சொல்லிச் சோறூட்ட
சிநேகிதிகளோடு
ஊர்ச் சேதி கிசுகிசுக்க
என் மனைவிக்கு
அதுதான் 'பிறந்த வீடு'

என் சுக துக்கங்களுக்கு
வெவ்வேறு அலை நீளங்களில்
ஆறுதல் முலாம் பூசும்
பாட்டுக்குக் குடியிருப்பு

மூன்று நாள் வெளியூர்ப் பயணம்
முடிந்து திரும்பினேன்
வரவேற்ற மனைவியின் குரல்
சில்லுச் சில்லாய் உடைந்திருந்தது
மகள் முகம் திருப்பிக் கொண்டாள்
விக்கி விக்கி அழுதபடி
சின்னவன் சொன்னான்;

'அப்பாப்பா... நம்ம மரத்தை
வெட்டிட்டாங்கப்பா...'

மின்னல் கீறிய முகத்தோடு
மனைவியை ஏறிட்டேன்

'நிலத்துக்காரங்க
வெட்டித் தள்ளீட்டாங்க'
என்ற அவள் குரல்
எங்கிருந்தோ கேட்டது

பதைக்கப் பதைக்க ஓடினேன்
பச்சைச் சமுத்திரம்
அலைபாய்ந்த இடத்தில்
வெட்டவெளி, வெறும் பரப்பு

என் நிழல் என் உயிர்க்காற்று
என் ஆன்ம சங்கீதம்...
சுள்ளிகள் உலர்ந்த இலைகள்
மரத் துணுக்குகள்...
வெட்டப்பட்ட அடிமரம்
பூமியின் காயமாய்
விரிசல் விட்டுக் கிடந்தது.

பாழ் வெளியில் அதன்
பக்கத்தில் உட்கார்ந்தேன்
எங்கிருந்தோ ஓடிவந்த மகள்
'இதைப் பாருங்கப்பா'
என்று கையில் கொடுத்தாள்

கருமை பளபளக்கப்
பழுப்பு அலை பாயும்
ஓர் இறகு.


www.padippakam.com

# SRI JAYALAKSHMI ENGINEERING WORKS

## MODERN RICE MILL MACHINERIES



VEJAY PADDY PAR-BOILING



VEJAY MODERN RICE MILL



VEJAY PADDY DRYER

LEADERS IN DESIGN OF MODERN AUTOMATIC PADDY PAR-BOILINGS PADDY DRYINGS AND MILLING SYSTEM.



VEJAY PAR-BOILING PLANT FOR SINGLE BOILED RICE

TO STEP UP YOUR PRODUCTION AND TO IMPROVE RICE QUALITY INSTAL OUR "VEJAY" MODERN RICE MILL EQUIPMENTS.

*MANUFACTURED & SUPPLIED By:*

**SRI JAYALAKSHMI ENGINEERING WORKS,**

**12-B, BIG MILL STREET, TIRUVARUR-610 001.**

**Phone: 04366 – 22749 (Off) 22006 (Fax) 22038 (Resi)**



படிப்பகம்

www.padippakam.com



# முழங்கை வளையல்

இன்குலாப்

(துங்கபத்திரைக் கரையில் எழுப்பப்பட்ட விஜயநகரம் இன்று சிதிலமாகிக் கிடக்கிறது. அழிவின் நினைவுகள் கவிதையாகியபோது...)

துங்கப் பத்திரையின் ஈரத் தொடர்ச்சியில்
இன்றும் உயிர்த்துப் பச்சையாய்
இருந்தவை
நதிக்கரை நாணலும்
நஞ்சையும் புஞ்சையும்
பாறைப் பாசியில்
பசியாறும் மீன்களும்.
கல்லில் மரத்துக் கிடந்தது காலம்.
முன்கால் தூக்கிய குதிரைகள்
துதிக்கை உயர்த்திய களிறுகள்
ஓங்கிய வெண்குடை
உருவிய உறைவாள்..
கனைப்பும் பிளிறும்
காற்றில் தொலைந்தன...
உறுமல்கள் கூட
விழியில் மிஞ்சியதை
நிரந்தரமாக்கும் நினைவில் முயன்று
உளியில் உயிர்த்ததைக்
கடப்பாரை கொன்றது
கலை கிடந்தது
கல்எலும்புத் துண்டுகளாய்...
சாம்பலும் தூசுமாய்
முடியும் மனிதம்போல்.
தேவடியார் தெருக்களில்
முத்துமாலைக் கீடாகப் பெற்ற
முயக்கங்களோடும்
முத்தங்களோடும்
புறப்பட்டுப் போன
குதிரை வீரனின்
சுவடுகள் மீண்டும்
திரும்பவே இல்லியோ?
உழுதவன் வியர்வையின்
நெல்மணிகளோடும்,
தேசங்கள் அழுத கப்பங்களோடும்,
வேசியர் எடுத்து வீசிய காசோடும்
கனத்துக் கிடந்த அரசுக் கருவூலம்
எங்கே கால்முளைத்துப் பத்திரமாய்த்
தொலைந்தது?
யாரோடும் விடை கூறாமல்
போரோடு போயினர்.
ஓடையாய்ச் சிறுத்த
துங்கபத்திரையின் ஒரு கரையில்...
குந்தி இருப்பவள் யார்?
லம்பாடிப் பெண்ணா?
மறுகரையில் நிமிரும்
மலைகளின் ஊடே
முட்டி முனகும் சிற்றலை நுரைகளில்
எதை வெறித்தபடி
இந்த
லம்பாடி இருக்கிறாள்?
உடைத்தெறியப்பட்ட கல்
ஒன்றிலேனும்
அவள்
கடந்த காலத்தின் நினைவுகள் இல்லை.
துங்கபத்திரை அலைகள்
சிவந்ததைச் சொல்லும்
சுவடிகள் எதிலும்
அவள் காயங்கள் இல்லை.
கறுத்த மண்டபப்
படிகளை நனைக்கும்
அலைகளில் காலூன்றி
ஆண்டவனைப் பாடிய
ஞானிகள் பாடலில்
அவள்
சொல் ஒன்றும் இல்லை.
முழுநிலா ஒளியில்
அடிவார வெளியில்
கூடாரக் கூட்டத்தில்
நடுவட்டக் கூத்தில்
அவள் இறந்தகாலம்
ஒவ்வொரு சொல்லிலும் துடித்தது.
கொள்ளை கொடுத்ததும்
கொள்ளை அடிச்சதும்...
கள்வெறிப் பாட்டில்
கானகம் சிலிர்த்தது.
படை நடந்து வந்த
மலைபடு பாதையில்
ஓட்டுக் கூடாரங்களை
யானைகள் மிதித்ததும்
குதிரைக் குளம்படிகளில்
குழந்தைகள் துடித்ததும்
குளிருக்கு மூட்டிய
கொள்ளிக் கட்டைகளோடு
குறத்தியும் லம்பாடியும்
நிர்வாணமாய் எரிந்ததும்
கள்வெறிப் பாட்டில்
கானகம் சிலிர்த்தது.
மிச்சப்பட்ட மலைகளின்
கற்குவியலுக்குள்
உடைந்து கிடக்கிறதோ
அவள் முழங்கை வளையலும்?
மலைகளை வெறிக்கும் விழிகளைத்
திருப்பி
நீலவானத்தை நிமிர்ந்து நோக்கி
முழங்கால்களை வளைக்கும் கைகளை
விலக்கி
எழுந்தாள்
திறந்த முதுகிலிருந்து ஒரு சருகு.
புறங்கை தட்டிய
பின்புறப் பாவாடையிலிருந்து
ஒரு கோரம்புல்.
உடைந்துகிடந்த தூணில் உதிர
அசைந்து நடந்தாள்
ஒரு புன்முறுவலோடு.

www.padippakam.com

# மரங்கள்

ஆல்ஃப்ரட் ஜாய்ஸ் கில்மர்

(1886-1918)

மரத்தைப் போல
ஓர் அழகான கவிதையை
நான் காணவேமாட்டேன்
என்று நினைக்கிறேன்

பூமியின்
இனிமை ததும்பும் முலையில்
பசித்த வாயைப் பொருத்திய
மரம்;


கடவுளை நோக்கித்
தன் இலைக்கரத்தால்
நாளெல்லாம்
தொழுது நிற்கும்
மரம்;
வேனிற்காலத்தில்
சிட்டுக் குருவிகளின் கூடுகளைத்
தன் கூந்தலில்
சூடி நிற்கும்
மரம்;

மழையுடன்
குடித்தனம் நடத்தும்
மரம்;

என் போன்ற
முட்டாள்கள்
கவிதை செய்கிறார்கள்.
கடவுள் மட்டுமே
படைக்க முடியும்
மரத்தை

தமிழில் : ஞாநி

படம் : என். செல்வன்





படிப்பகம்

www.padippakam.com

# ENCAR'S GOLDEN MONTH

**21.12.95 முதல் 21.1.96 வரை மட்டும்**

## 100% சொத்து உத்திரவாதம்

**24%** வருட வட்டி + ஊக்கத்தொகை **8%**



தங்க நாணயம்

+

## விசேஷ சலுகை

தங்க நாணயம் + Free Entry Coupon for Slogan Contest to win over 918 Prizes + புத்தாண்டு பரிசு



ஹீரோ ஹொண்டா

பல நிதி நிறுவனங்களுக்கு நடுவில் முதலீட்டிற்கு முதன்முதலாக அசையா சொத்துக்களை உத்திரவாதமாக அளித்து பல்லாயிரக்கணக்கான முதலீட்டாளர்களின் நம்பிக்கை பெற்ற உங்கள் என்கார் நிறுவனம் வழங்கும்

**ராயல் டெபாசிட்**

| குறைந்த பட்ச டெபாசிட் | வட்டி விகிதம் |
|---|---|
| ரூ. 10,000/- | மாதாந்திர வட்டி பின் தேதியிட்ட காசோலை மூலம் முன்னதாகவே வழங்கப்படும். |
| 24% + 8% | |

**மெகா பாண்ட்**

| குறைந்த பட்ச டெபாசிட் | முதிர்வு தொகை |
|---|---|
| ரூ. 5,000/- | ரூ. 10,000/- |
| 33 மாதங்கள் | |

**எவரெஸ்ட் பாண்ட்**

| குறைந்த பட்ச டெபாசிட் | முதிர்வு தொகை |
|---|---|
| ரூ. 10,000/- | ரூ. 30,000/- |
| 60 மாதங்கள் | |

| யூனிட் விலை | முதிர்வு தொகை |
|---|---|
| ரூ. 3,000/- | 10வது வருடம் 15,000/-<br>15வது வருடம் 30,000/-<br>20வது வருடம் 90,000/- |
| 20 வருடங்கள் | |

| யூனிட் விலை | முதிர்வு தொகை |
|---|---|
| ரூ. 1,500/- | ரூ. 1,00,000/- |
| 20 வருடங்கள் | |

We accept Deposits Strictly under RBI Regulations Section 45S Chapter III C RBI Act 1934



தங்க நெக்லஸ்

**Investments made by Depositors in ENCAR Hi-Grow Investment are reinvested by us, in our following profit making Companies**

★ ENCAR Animal Farms & Exports (P) Ltd., ★ ENCAR Cashew Gardens (P) Ltd.,
★ ENCAR Dairy Foods Ltd., ENCAR Builders (P) Ltd., ★ ENCAR Estates (P) Ltd.,

## ENCAR Hi - Grow Investments

**Head Office** – 134/2, Royapettah High Road, Near Vivek & Co, Luz Corner, Mylapore, MADRAS - 4. Ph : 8526887. Fax : 91-44-840638

**Regd. Office** – 10 & 11 Varadharaju Complex, (Easwari Complex), Near Chatram Bus Stand, TRICHY - 2. Ph : 25963 Fax : 0431 - 462750 Telex : 0455-316 ACES IN

**Regl. Office** – 1/23, Hanumanthappa Layout, Near BEML Guest House, 1/A, Ulsoor Road, BANGALORE - 42. Ph : 5598092

**Branches**
- 512-B, N.S.R. Road, Gowri Complex, Annamalai Stores Upstairs, Saibaba Colony, COIMBATORE - 11. Ph : 445062, 445065
- No. 267, Advaida Asrama Road, A.V.K. Nagar, Opp. to New Bus Stand, SALEM - 4. Ph : 448873
- No. 7, west Vadampokki street, Near Perumal Koil, MADURAI Ph : 35667
- Popular Complex, 26-A/2, West Pradhakshnam Road, KARUR - 2.

**For Safe and Secured Investments - ENCAR**



படிப்பகம்

www.padippakam.com

**நம்பிக்கை!** **நாணயம்!** **கைராசி!**

பதிவு எண் 25/85

துவக்கம் 1985

JAYAPRIYA FINANCIERS
J P F
NEYVELI - 2

# ஜெயப்பிரியா பைனான்ஸியர்ஸ்

**பதிவு & நிர்வாக அலுவலகம் - "ஜெயப்பிரியா பில்டிங்"**
**5A/80, மெயின் ரோடு, த.பெ.எண் - 18 நெய்வேலி - 607 802**
**போன் : 62393, 62392. பேக்ஸ் : 04148 62393**
**கிளைகள் 6/4, மெயின் பஜார் நெய்வேலி-3 போன் 22529, 23036**
**50, இந்து காம்ப்ளக்ஸ் ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம்.**
**எண் 134, கச்சேரி ரோடு, காட்டுமன்னார் கோயில்.**

## பிக்சட் டெப்பாசிட்

| காலம் | வட்டி விகிதம் |
|---|---|
| 12 மாதம் | 21% (மாதாந்திரம்) |
| 24 மாதம் | |
| 36 மாதம் | 21.37% (காலாண்டு) |
| 48 மாதம் | 21.94% (அரையாண்டு) |
| 60 மாதம் | |

## ஜெயநிதி டெப்பாசிட்

| காலம் | முதலீடு தொகை | முதிர்வடையும் தொகை |
|---|---|---|
| 12 | 1000 | 1227 |
| 24 | 1000 | 1505 |
| 36 | 1000 | 1847 |
| 48 | 1000 | 2265 |
| 60 | 1000 | 2782 |

## குறுகிய கால ஜெயநிதி டெப்பாசிட்

| காலம் மாதம் | முதலீடு தொகை | முதிர்வடையும் தொகை |
|---|---|---|
| 3மாதம் | 5000 | 5212.50 |
| | 10000 | 10425.00 |
| | 25000 | 26062.50 |
| | 50000 | 52125.00 |
| | 100000 | 104250.00 |

## பெனிபிட் சர்டிபிகேட்

| காலம் நாட்கள் | வட்டி | காலம் மாதங்கள் | வட்டி |
|---|---|---|---|
| 31 | 13% | 12 | 21% |
| 45 | 14% | 24 | |
| 60 | 15% | 36 | |
| 90 | 17% | 48 | |
| 180 | 18% | 60 | |

## பிக்சட் டெப்பாசிட்
(FIXED DEPOSIT)

| காலம் | வட்டி விகிதம் |
|---|---|
| 12 | 22 % (மாதாந்திரம்) |
| 24 | |
| 36 | 22.4% (காலாண்டு) |
| 48 | |
| 60 | 23.03 (அரையாண்டு) |

❖ இத்திட்டம் முதியோர், பென்ஷனர், உடல் ஊனமுற்றோர், விதவையர், ஆகியோருக்கு மட்டும் பொருந்தும்.

## தங்கநாள் டெப்பாசிட்
(GOLDEN DAY DEPOSIT)

நீங்கள் விரும்புகின்ற குறிப்பிட்ட நாளில வருடம் ஒன்றுக்கு ரூ 1000/-வீதம் தொடர்ந்து 4 வருடங்கள் செலுத்தினால், 5/வது வருடத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் நீங்கள் விரும்பின அதே குறிப்பிட்ட நாளில் ரூ 1,500 வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கும்.

❖ குறைந்த பட்சம் ஒரு ஆண்டு செலுத்தும் தொகை ரூ 1000 அதன் மடங்குகளில்

## மாதாந்திர வருமானத் திட்டம்
(MONTHLY INCOME PLAN)

மாதாமாதம் ஒரு குறிப்பிட்ட தொகையைத் தொடர்ந்து 36 மாதங்களுக்குச் செலுத்தி வந்தால் 37 வது மாதத்திலிருந்து அதே குறிப்பிட்ட தொகை வாழ்நாள் முழுவதும் மாதாமாதம் பெறலாம்.

❖குறைந்தபட்சம் மாதாந்திரம் செலுத்தும் தொகை ரூ 200, அதற்கு மேல் ரூ100, அதன் மடங்குகளில்.

## வைரம் டெப்பாசிட்
(DIAMOND DEPOSIT)

| காலம் மாதம் | முதலீடு தொகை | முதிர்வடையும் தொகை |
|---|---|---|
| 120 | 5000 | 50000 |

❖ குறைந்தபட்ச முதலீடு ரூ.5000, அதற்கு மேல் அதன் மடங்குகளில்

## லட்சாதிபதி பத்திரம்

| காலம் மாதம் | முதலீடு தொகை | முதிர்வடையும் தொகை |
|---|---|---|
| 160 | 6250 | 100000 |

## கிப்ட் சர்டிபிகேட்

| காலம் மாதம் | முதலீடு தொகை | முதிர்வடையும் தொகை |
|---|---|---|
| 24 | 3320 | 5000 |
| 36 | 2706 | |

## தங்கப்பத்திரம்

| காலம் மாதம் | முதலீடு தொகை | முதிர்வடையும் தொகை |
|---|---|---|
| 60 | 5000 | 15000 |

**ஊக்கத்தொகை அனைத்து டெப்பாசிட்களுக்கும் வழங்கப்படும்**
**எங்களிடம் சேமியுங்கள்!**
**எங்களோடு வளருங்கள்!**

## ரொக்கப்பத்திரம்

| காலம் மாதம் | முதலீடு தொகை | முதிர்வடையும் தொகை |
|---|---|---|
| 40 | 1000 | 2000 |



படிப்பகம்

www.padippakam.com



## பதின் வயசில் எரியும் தீயைத் தணிக்க பால்ய விவாகம் உதவக் கூடுமோ?

# 'கிசி'!

கி.ராஜநாராயணன்

மனுசக் குழந்தை பிறக்கிறது. மூச்சுவிடுவதுக்காக அழுகிறது. அதன் பிறகு அழுகை பசிக்காக மட்டும் (வேற விஷயங்களுக்காக என்பதும் தெரியும்)

பிறந்த மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் சரியான கண்பார்வை வருகிறது. நாய்க்குட்டிக்குக் கண்திறக்க நாள் கணக்கு: மனுசக் குழந்தைக்குக் 'கண் திறக்க' மாசக் கணக்கு. 'முகம் பார்த்துச் சிரிக்க மூணாம் மாசம்' என்பது சொலவடை.

மனித உடம்பில் இப்படி மாறுதல்கள் நடந்துகொண்டேயிருக்கும். வேலைக்குப் புறப்பட்டுவிட்ட தகப்பங்காரன் அக்கறையோடு சொல்லுவான்: "குழந்தைகளுக்கு நேரத்துக்கு சாப்பாடுபோடு" பசி என்பதின்பேரில குடும்பத் தலைவன் தலைவிக்கு அக்கறையான கவனம் உண்டு. எந்த வயிறும் பசியோடு இருக்கக் கூடாது என்பது.

பசி என்கிற தீ. பிறந்துவிழுந்த குழந்தையின் வயித்தில் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் பற்றி எரியத் தொடங்கி அதன் ஆத்துமா அணைகிறவரை எரிந்து தீர்கிறது.

இந்த வயித்துப் பசியின் விசயம் நம்முடைய பெரியாட்களின் மனதை ரொம்பவே பாதித்திருக்கிறது. வள்ளுவனின்



வாக்கும் பாரதியின் கோபமும் ஞாபகத்துக்கு வருகிறது. 'உண்டி கொடுத்தோன் உயிர் கொடுத்தோனே என்றெல்லாம் சொல்லியாகிவிட்டது. இதுக்குமேல் சொல்ல முடியாது.

பசியைப் பற்றிக் கவலைப்பட்ட நமது அறிஞர்பெருமக்கள் 'கிசி' என்றும் ஒன்று இருக்கிறதைப்பற்றிக் கவனிக்காதது போல இருக்கிறார்களே ஏன்!!

பசிவந்தால் பத்துமட்டுமே பறந்துபோகும்; 'கிசி' வந்தால் பத்துக்கும் மேல்பட்டது அனைத்துமே பறந்துபோய்விடும். மூன்று மாதத்தில் பார்வை வருகிறது போல பதின்மூன்று வயதில் புதுப் 'பார்வை' வருகிறதே.

இந்தப் பதின் வயசில் (டீன் ஏஜ்)தான் வளர்ந்த குழந்தையின் அடி வயிற்றில் இன்னொரு தீ பற்றி எரிய ஆரம்பிக்கிறது. பசித் தீ போல இதுவும் ஒரு வடவாக்கினிதான்.

தீக்கு நெய்விட்டால் கொழுந்துவிட்டுப் பிரகாசமாய் எரியும். இந்த உள்ளத் தீக்கு 'நெய்' விட்டால் தணிந்து சாந்தமாகிவிடும். நெருங்கினால்க் குளிரும். விலகினால் சுடும். என்பான் உச்சிக்கொண்டைக்காரன். அப்படி ஒரு வித்தியாச

www.padippakam.com

மான தீயிது.

பெற்றவர்கள் காட்டில் வேலைத் தலங்களில் வேலை செய்துகொண்டிருக்கும்போது வீட்டில் பிள்ளைகள் சரியாக நேரத்துக்குச் சாப்பிட்டார்களா என்று கவலைப்படுவார்கள். அதே பிள்ளைகள் வளர்ந்து கொண்டு வரும்போது அவர்களின் அடிவயிற்றில் பற்றி எரியத் தொடங்கிவிட்ட மற்றொரு பசித் தீயைப் பற்றியும் ஏன் அவ்வாறு கவலைகொள்வதில்லை?

ஆட்டம் போட்டு 'என்சொல்றே' என்று ஆடுகிற 'சாமி'க்குமட்டும் காவு கொடுக்கத் தெரிகிறதல்லவா!

இதையெல்லாம் பெரியவர்கள் கவனிக்காததுபோல் இருக்கப்போய்த்தானே சுய இன்பம், ஓரினச் சேர்க்கை போன்ற வேண்டாத 'ளொள்ளு'கள் எல்லாம் உண்டாயின.

**ப**வுர்ணமி அன்று.

'தாப்பு'வில் ஒருநாள்...

அக்காலத்திய பால்ய விவாகம் பற்றி பேச்சு வந்தது. பெரும்பாலானவர்கள் அதைக் கடுமையாக எதிர்த்து வாதிட்டார்கள்.

கூட்டம் கலைந்து வீட்டுக்கு வந்த பிறகும் அதுபற்றியே யோசனையாக இருந்தது எனக்கு.

பால்ய விவாகம் என்பது குழந்தைக் கல்யாணம்தான். அப்பாவின் மடியில் குழந்தை மணப்பெண் உட்கார்ந்திருக்க, மாப்பிள்ளைக் குழந்தை தாலி கட்டுகிறது. விளையாட்டுக் கலியாணம்தான். ஒரு கலியாண விளையாட்டைப்போல! "செல்லக் கல்யாணம்" என்றுகூட ஒரு பட்டப் பெயர் உண்டு.

சொந்தக்காரர்களெல்லாம் ஏதோ கல்யாணத்துக்கு வந்தோம். புறப்பட்டுப் போனோம் என்று கிடையாது. பரபரப்பு இல்லாத காலம் அது. விருந்தாளிகள் வந்தால் மாசக் கணக்காய்த் தங்கிவிட்டுச் செல்வார்கள். விருந்தும் மருந்தும் மூணே நாள் என்பதெல்லாம் நேத்துப்பிறந்த சொலவடை. கலியாணமாகிவிட்ட குழந்தைகள் ஒருத்தருக்கொருத்தர் பழகி சந்தோசமாக விளையாட ஆரம்பிப்பார்கள். மணவறையிலேயே விளையாட்டைத் தொடங்கி வைத்திருப்பார்கள் பெரியவர்கள். அய்ந்து நாட்களும் (அந்தக் காலத்திலெல்லாம் கலியாணங்கள் அய்ந்து நாட்கள் நடக்கும்) சாப்பிடுகிற தூங்குகிற நேரங்கள் போக பாக்கி நேரமெல்லாம் குழந்தை மணமக்களின் விளையாட்டு வேடிக்கைதான். சிரிப்பும் ஆனந்தமும் பொங்கி வழியும். இந்த ஆனந்தம் சிரிப்பு இதெல்லாம் இப்போது பழங்கதையாகிவிட்டது. மனந்திறந்து கொட்டுகிற சிரிப்பெல்லாம் இப்பொ மக்கள் மறந்து போனார்கள் என்று தோன்றுகிறது. மணவறையில் நிகழும் அக்காலத்திய குழந்தை மணமக்களின் விளையாட்டுக்களில் ஒன்றிரண்டை எனது ஒரு காதல் கதையில் பதிவுப் பண்ணியிருக்கிறேன். அதேபோல அந்தக் குழந்தைகள் சிறுவயதில் நெருக்கமாக எவ்வாறு பழகும் என்பதை கோபல்லபுரத்து மக்களில் சிட்டப்பன் -அச்சிந்த்தலு இவர்களின் குழந்தைப் பிராயத்தை வர்ணித்திருக்கிறேன்.

வீடுவிட்டு வீடு போய் புகுந்த வீட்டில் -நிலை கொள்வது என்பது குழந்தைப் பிராயத்தில் சுலபம். இந்த இடத்தில் ருஷ்ய பல்மருத்துவ விஞ்ஞானி ஒருவர் செய்து பார்த்த ஒரு பரிசோதனை ஞாபகத்துக்கு வருகிறது.

குழந்தைப் பருவத்துப் பால் பற்கள் உதிர்ந்தவுடன் அதை நாம் என்ன செய்கிறோம். சாணி உருண்டைக்குள் பொதிந்து விட்டெறிந்துவிடுகிறோம். அல்லது மண்ணில் புதைத்து விடுகிறோம். அந்த விஞ்ஞானிக்கு அதைத் தூரப்போட மனசில்லை. இப்போது நாம் கண் தானத்தில் இன்னொருவருக்குப் பொருத்தி கண்பார்வை தருவதுபோல அந்தப் பால் பல்லை பதியம்போட்டுப் பார்த்தார். ஆச்சரியமாகச் சேர்ந்து கொண்டது! வேர்விட்டு வளர்ந்து பலப்பட்டு நின்றது. நாற்றங்காலில் எடுத்த இளம்பயிரைக் கொண்டுபோய் வயலில் நடுவை செய்தால் அருமையாக வளர்ந்து பலன் தருவதுபோல இளம் பருவத்தில் புகுந்த வீட்டில் குழந்தைகளை பக்குவப்படுத்தி வளர்ப்பதும் சுலபம் என்று கண்டுகொண்டார்கள். அந்நியம் மறைந்து வீட்டாள் ஆகிவிடுகிறது.

இதே குழந்தையைப் பெரியவள் ஆனபிறகு கல்யாணமாகி அதே வீட்டுக்கு வந்தால், அங்கே உள்ள பழக்க வழக்கங்கள் ரசனை அனுபவிப்பு எல்லாமே வேற்றுமைப்பட்டு நிற்கும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இப்படி பல விசயங்கள்.

என்றாலும்...

இவை அனைததும் ரெண்டாம் பட்சம்தான். முதன்மையானது -தலையாயது -ஒன்றிருக்கிறது.

ஒருவகையில் பால்ய விவாகம் ரொம்ப தப்புதான். சந்தேகமே இல்லை.

குறுக்கு யோசனை பண்ணிப் பார்த்தபோது அதிலும் சிலது நல்லதாகத் தெரிகிறதே!

'எனது கல்லூரிப் படிப்புக் காலத்தில் மற்ற மாணவர்களைப் போல நான் மன அலைக்கழிப்புக்களுக்கு ஆளாகாமல் நிம்மதியாகப் படிப்பில் கவனம் செலுத்த முடிந்ததற்கு காரணம் அந்த வயசிலேயே எனக்குத் திருமணம் ஆகியிருந்ததுதான்' என்று சொல்லியிருக்கிறார் ராஜாஜி அவர்கள்.

என்னுடைய பால்ய அனுபவத்திலிருந்து சொல்கிறேன். நான் "கெட்டுச் குட்டிச்சுவராகிப் போனவன்.' எப்படிப் பால் வினை நோய்களிலிருந்தும் தப்பினேன் என்பது அதிசயமே. பதின்வயதில் தோன்றுகிற பாலியல் பசிக்கு முறையான வடிகால் வேண்டும்..

**பசியைப் பற்றிக் கவலைப்பட்ட நமது அறிஞர் பெருமக்கள் இதை கவனிக்காதது போலிருப்பது ஏன்?**



படிப்பகம்

www.padippakam.com

இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

## கம்ப்யூட்டர் ஜாதக நிலையம்

- ★ கம்ப்யூட்டர் மூலம் தமிழிலும், ஆங்கிலத்திலும் ஜாதகம் கணிக்க
- ★ எதிர்கால பலன்களை அறிய
- ★ திருமணப் பொருத்தம் பார்க்க
- ★ நல்ல நேரம் கணிக்க
- ★ ஜாதகங்களுக்கு விளக்கம் பெற
- ★ நியூமராலஜி முறையில் ஜாதகம் கணிக்க



## அஷ்டலக்ஷ்மி கம்ப்யூட்டர் ஜாதக மையம்

பழனியப்பா வீதி, G.H. எதிரில்,

**ஈரோடு-9.**

போன்: 79669, 216769.

---

"Prompt" Wishing you a Happy Pongal

## PROMPT®
Couriers Pvt. Ltd.

**ESTD-1987**

★ Speedy ★ Reliable ★ Punctual and ★ Economical

**That way is the Prompt Way....**
**Your Time Sensitive Business Documents gets V.I.P. Treatment in Prompt**

**Regd. Office:**
166, Muthu Velappa Street,
Erode-638 001.
Ph: 219317 & 215152.

**Southern Regional Office:**
No.1, Montieth Lane
Opp. Rajarathinam Stadium,
Madras. Ph: 8261326.

One of the Leading Couriers in India with 300 Branches and more than 700 outlets.

The First Courier offering next day delivery of your Bulk Parcels through Cargo Service.

---

*WITH BEST COMPLIMENTS FROM:-*

# M/s. MANJHULA TEXTILE PROCESSORS (P) LIMITED

BHAVANI MAIN ROAD,
RAMANATHAPURAMPUDUR POST,
ERODE -638 005

Phone : 211687, 211688
Telex : 0856-271-MANJ-IN
Fax : 0424-213071.

**A LEADING TEXTILE PROCESSING HOUSE FOR EXPORT AND DOMESTIC NEEDS**

www.padippakam.com


***WITH BEST COMPLIMENTS FROM***

# TAMIL NADU NEWSPRINT AND PAPERS LIMITED

**(A Government of Tamil Nadu Enterprise)**

Manufacturers of
high quality Newsprint
and
printing & writing papers.

***Corporate Office***
**35, Anna salai**
**Guindy,**
**Madras-600 032.**

***Works Office***
**Kagithapuram**
**Karur D C G Dist.**
**Pin-639 136.**




படிப்பகம்

www.padippakam.com



**பாலியலை 'கண நேர சிலிர்ப்பு' என்பார் காந்தியடிகள். அது எப்படி 24 மணி நேரச் சிலிர்ப்பாகப் பெருகியது?**

# பருவத்தில் பட்ட பாடு

*க. பஞ்சாங்கம்*

பேராசிரியர்

"பருவத்தின் வயதுகளில்" சிறுவர்களின் அடிவயிற்றில் புறப்பட்டு எரியத் தொடங்கும் அக்கினி நாக்குகளின் முன்னால் கருகிப் போகும் மனிதப் பிஞ்சு உயிர்களின் வாதைகள் இன்னமும் கவனிக்கப்படாத பிரச்னையாகவே உள்ளது. அந்தக் கால கட்டங்களில் இருந்து எப்படியோ ஒரு வகையில் தப்பிப் பிழைத்தவர் வரிசையில் நாமும் ஒருத்தராக வந்து விட்டோம் என்றாலும் 'அது' படுத்திய பாட்டை மறந்திட முடியுமா? பாரதி கூறுவது போல 'இருபது பேய் ஒன்றாய் வந்து பிடித்துக் கொண்டது போல, நாளொன்று போவதற்குப் பட்ட பாடனைத்தும் தாளம் படுமோ? தறிபடுமோ? யார் படுவார்? அதுவும் 'கல்வி' என்ற பேரிலே கிராமத்தில் இருந்து நகரத்திற்கு வந்து, அந்தப் பருவ காலங்களை எல்லாம் மாணவர் விடுதியில் கழிக்க நேர்ந்த என்னைப் போன்றவர்களை எல்லாம் அந்தத் தீ என்னபாடு படுத்தியது? எளிதில் மறக்கக் கூடியதா? ஒவ்வொரு 'பயலும்' ஒவ்வொரு விதமாக அதை எதிர்கொள்ள பட்டபாடு? இப்பொழுது நினைத்தாலும் உடல் பதறுகிறது.

சில 'பசங்க' விடிவதற்குள்ளாகவே காணாமல் போய் விடுவார்கள். காலையில் 4 மணிக்கே எழுந்து, சுத்தமாகக் குளித்துவிட்டு, திருநீறு பூசிக் கொண்டு முதல் வண்டியிலேயே ஏறி விடுவார்கள். அதுவும் மார்கழி மாதம் என்றால் போதும்! 'குளிர்' என்று கூடப் பார்க்காமல் விடுதியில் பாதிப் பசங்களுக்கு மேல் போய் விடுவார்கள்; மீனாட்சி கோயிலில் சாமி கும்பிடப் போகிறார்களாம்; கும்பிட்டு விட்டு நேரே காலைச் சாப்பாட்டிற்குச் செட்டு செட்டா சாப்பாட்டறைக்கு வருவார்கள். சாப்பிடும் போதே அங்கே சாமி கும்பிட்ட கதையைச் சொல்லிச் சொல்லிச் சிரிப்பார்கள். சில 'பசங்க' இன்னைக்குச் சரியாகவே சாமி கும்பிடலைடா! போயி ஒரு புண்ணியமும் கிடைக்கல"ன்னு சலித்துக் கொள்வார்கள் வெறுங்கனியா கத்தான் போச்சு! காயே கிடைக்கலடா" என்பான் ஒருவன்; "ஒனக்குக் கனியாவது கிடைச்சதே! இங்க வெறும் பாறையால போச்சு", என்பான் இன்னொருவன்! இப்படிச் சொல்லிச் சொல்லிச் சிரிப்பார்கள்; அன்று விடுமுறையாக இருந்தால், இந்தப் பேச்சு அன்றைக்குச் சாயந்தரம் திரைப்படத்திற்குப் போகிற வரை தொடரும்!

தொடர்ந்து கோயிலுக்குப் போய், சில பயல்கள் சில பெண்டுகளைத் தயார்ப்படுத்திவிடுவார்கள்! சரியாக இவர்கள் போகிற நேரத்திற்கு அதுவும் அம்மாவோடு வந்து 'தரிசனம்' கொடுத்து விட்டுப் போகும்! இத்தகைய 'தரிசனம்' கிடைக்கிற 'பசங்கள' கையில் பிடிக்க முடியாது! அவர்கள் முகத்தில் ஏற்படுகிற பெருமித உணர்வைச் சொல்லி முடியாது! வாட்ச்சு வச்சிருப்பவன் வலது கையில் கட்டிக் கொள்வான்; அன்றைக்கு இரவு முழுக்க அதற்கான தயாரிப்புகளை நோக்கியே செயல்படுவார்கள். சில பேரு கோயிலுக்குள் "தர்ம அடியும்" வாங்கிக் கொண்டு வருவார்கள். அதை மறைப்பதற்காக, மற்றக் கல்லூரிப் பசங்க வந்ததாகவும், இவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர்கள் கேட்காமல் ரெம்பவும் அட்டகாசம் பண்ணியதாகவும், அதனால் "செமையாக" வாங்கிக் கொண்டு போனதாகவும், இவர்கள் கூட நின்று தடுக்காவிட்டால் இன்னும் எவ்வளவோ பெரிய

படிப்பகம்

www.padippakam.com

விபரீதம் எல்லாம் நடந்திருக்கும் என்றும் கதை விடுவார்கள்! விவரமான 'பசங்க' விஷயத்தைப் புரிந்து நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொள்ளுவார்கள்1 சில அப்பாவிப் 'பசங்க' அவர்கள் விடுகிற கதையை வாயில் இருந்து சிரிப்பும் 'ஜொள்ளும்' ஒழுகக் கேட்டுக் கொண்டு இருப்பார்கள்.

இன்னும் சில 'பசங்க' வகுப்பு விட்டு வந்தவுடனேயே மேல்மாடிக்குப் போய் விடுவார்கள்! இது கொஞ்சம் பணக்காரக் கூட்டம்! கையில் "டெலஸ்கோப்" வைத்திருக்கும்! ஆற்றில் குளிக்கிற காட்சியை இங்கிருந்தபடியே பார்த்துப் பரவசப்படும்! இன்னும் சில 'பசங்க' காப்பி குடித்தவுடன், "படிக்கப் போகிறேன்" என்று கையில் புத்தகத்துடன் ஆற்றுக்குள்ளேயே இறங்கிவிடுவார்கள்! சில நேரங்களில் "ஒங்களுக்கு ஆத்தா அம்மா இல்லியா? அக்கா தங்கச்சியோட பிறக்கலியா?" தூ..! படிக்கிறானுகளாம்... பெரிய... படிப்பு!" என்று வாங்கிக்கட்டிக் கொண்டும் வருவார்கள்! வந்து அறையில் அதையும் சொல்லிச் சிரிப்பார்கள்.

இன்னும் சில 'பசங்க' தடை செய்யப்பட்ட 'பாலியல்' புத்தகங்களை வாங்கிக் குவித்து, நெருப்பைப் பெருக்கி மனத்தையும் மூளையையும் கருக்கிக் கொள்வார்கள்! மற்றவர்களிடம் அதைப் பற்றிப் பேசவேமாட்டார்கள். "தூய்மைவாதிகள்" போல் வேடம் போடுவார்கள்! ஆனால் இத்தகைய "பசங்க" உடுத்தியிருக்கும் வேட்டி காட்டிக் கொடுத்து விடும். இதற்கென்றே சில 'குறும்புகள்' காலையில் எழுந்தவுடன், அவர்கள் வரிசையில் இருக்கும் எல்லா அறைகளுக்கும் போய் 'என்ன இன்னைக்கு தமிழ்நாடு மேப்பா, இந்திய மேப்பா அல்லது உலக மேப்பா' என்று கேட்பதோடு மட்டுமல்லாமல் வேட்டியையும் விரித்துப் பார்த்து ஒரே சிரிப்புச் சத்தமாகக் காலைப் பொழுதை மாற்றி விடுவார்கள்.

இன்னும் சில மாணவர்கள் தெப்பக்குளத்திற்குத் தெற்குப் பக்கம் 'இரா'வெல்லாம் நடக்கும் 'ரிக்கார்டு டான்சு'' பார்த்து, மனத்தைக் காமத்தால் நிரப்பிக் கொண்டு வருவார்கள்; காலையில் அங்கே நடந்ததைச் சொல்லிச் சொல்லிச் சிரிப்பார்கள். நம்மால் நம்ப முடியாத 'ஆட்கள்' எல்லாம் அங்கே போய் வந்திருப்பார்கள்! "வாத்தியார்" யார் யாரென்று விரல் விட்டு எண்ணுவார்கள்! அடையாளம் தெரியாமல் இருக்க எப்படி வாத்தியார் 'தலைப்பாகை' கட்டிக் கொண்டு வந்தார்; எப்படி விளக்கு அணைத்த பிறகு வந்து, போடுவதற்கு முன்பே போய்விட்டார்; எப்படிக் கண்ணை அங்கங்கே ஓட விடாமல் நேரே மட்டும் பார்த்துக் கொண்டு போனார்; இதையும் தாண்டி எப்படிச் சிலக் குறும்புக்கார 'பசங்க' அவர் முன்னால் போய் "சார் வணக்கம்" என்று சொன்னார்கள்; அந்த நேரத்தில் அவர் 'முஞ்சு, எப்படிப் போச்சு... இப்படி ஒவ்வொருத்தனும் சொல்லும் போதும், அவர்கள் காட்டுகிற முக பாவமும், புனனகிற வார்த்தை வந்து விழுகிற ஜோரும், நேரம் போவதே தெரியாது!

ஏதாவது மலச் சிக்கல் ஏற்பட்டுக் கழிப்பறையில் கூடக் கொஞ்ச நேரம் இருந்து விட்டால், அவ்வளவுதான்! வெளியே வந்தவுடன் "என்ன மச்சான்!

**"என்னைப் பார்த்து அவ சிரிக்கற சிரிப்பு தனீ... சார். அது எனக்குத் தான் தெரியும்!"**



பெரிய ஒன்னுக்கா இருந்தீட்டீங்களா?" ஒரே கேலி மயம் தான்! இன்னொரு பெரிய விஷயம்! விடுதியில் நல்ல சிகப்பா, மூக்கும் முழியுமா எவனாவது 'பசங்க' இருந்திட்டா, அவ்வளவுதான்! அதுவும் அந்தப் பையன் யார் கூடவாவது தொடர்ந்து நாலைந்து நாளைக்குச் சேர்ந்து சுற்றிவிட்டால், போச்சு! இரண்டு பேரையும் விடுதி முழுவதும் சேர்த்துப் பேசி விடுவார்கள்! சமயத்தில் அது உண்மையாகவும் இருக்கும்.

சில பையன்கள், பேருந்து நிலையம், புகைவண்டி நிலையம் என்று சுற்றுவார்கள்; பிள்ளைக்குப் பால் கொடுக்கிற பெண்டுகளைப் பார்த்துச் சுகம் கண்டவர்கள் அவர்கள்!

"விடுதியில் நடமாடும் கதைகள்" - என்றே ஒரு தொகுப்பு போடலாம்! ஒவ்வொரு ஆண்டும் புதிதாக வருகிறவர்களுக்குப் பரம்பரை பரம்பரையாக அந்தக் கதைகள் சொல்லப்பட்டு வருகின்றன!

சில துணிந்த, வசதியான பசங்க 'வெளியே' தவறான வழியிலும் போய் விட்டு வருவார்கள்; சில பண்டிகை நாட்களில் போதைப் பொருட்களோடு ஆண் வேடம் பூண்ட சில பெண்களையும் விடுதிக்கே கொண்டுவந்து விடுவார்கள்.

இப்படியாகக் கல்லூரி விடுதிகளில் வீசும் காற்றில் "காமம் மிக்கக் கழிபடர் கிளவிகள்தான்" கரைந்திருந்தன! கல்லூரி விடுதி முழுக்க ஜட்டிகள் காய்வது ஒரு குறியீடாகத் தோன்றும்! தேர்வு நடக்க ஒரு மாதம் இருக்கும் காலங்களில்தான் புத்தகத்தையே திறந்து பார்ப்பார்கள்! இந்த ஜட்டிகள் காணாமல் போகும்! ஜட்டிகளைக் கூடக் கசக்கிக் காயப்போட நேரம் இல்லாமல் புத்தகமும் கையுமாய் அலைவார்கள்! பாவமாக இருக்கும்! காலமெல்லாம் காமம் குடியிருந்த மூளையில் கறுப்பு எழுத்துக்களை இடம்பெறச் செய்வதில் 100-க்கு 80 பேர் தோற்றுதான் போவார்கள்! தோற்றுப் போனாலும் பரவாயில்லை! கெட்டுப் போவது; நோயுற்றுத் துன்புறுவது; மன நோயாளியாவது; தற்கொலை பண்ணிக் கொள்வது; போதைக்கு அடிமையாவது; குற்றவாளிகளாக மாறுவது; அடியாட்களாக ஆவது! அப்பப்பா!! இன்னும் படித்து முடித்த பிறகும் இந்தப் பருவத்து மாணவர்களுக்கே வாத்தியாராகவும் '23' ஆண்டுகள் வாழ்ந்து விட்டேன்! எப்படி எல்லாம் இந்த வயதுப் பாலியல் அவர்களைப் பாழாக்குகிறது!

ஒரு மாணவன் ஒரு நாள் வந்தான் "என்னை ஒரு பெண் காதலிக்கிறாள்" என்றான், "என்னால் தூங்க முடியவில்லை" என்றான்; அந்தப் பெண்ணோடு பேசியிருக்கிறாயா? என்றேன்.

"இல்லை!

"பிறகு எப்படி அவள் விரும்புகிறாள் என்பது தெரியும்?"

"படியில் ஏறும்போதும் இறங்கும்போதும் எதிர்கொள்ளுகையில் சிரிக்கிறாள்"!

"அந்தப் பெண் எப்பொழுதும் யாரிடமும் சிரித்துதான் பேசுகிறாள்!"

"இல்ல, சார்! என்னைப் பார்த்துச் சிரிக்கிற சிரிப்பு தனீ... சார், அது எனக்குத் தான் தெரியும்" -என்றான்! இன்றைக்கு அந்தப் பையன் பைத்தியம் பிடித்து அலைகிறான்! இன்றைக்கும் தேடி வருகிறான்! வேதனையாக இருக்கிறது!

இப்படி எத்தனை எத்தனை வாலிய உள்ளங்களின் சோகக் கதைகள்! எனவே இந்தப் பருவகாலப் பசிப் பிரச்சனையைச் சமூகம் ஆழமாக பார்க்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு கொள்ள எதுவும் இல்லை! ஆனால் 'பால்யவிவாகம்' இதற்குப் பயன்படலாம் என்ற கருத்தை ஏற்க முடியாது. எதில் தான் நன்மை தீமை என்ற இரண்டு பக்கம் இல்லை? 'முத்து மீனாட்சி' நாவலில் மாதவையா, பூப்படைவதற்கு முன்பே, கணவன் என்கிற 'பந்தாவில்' கட்டாயமாகப் பூப்படைய வைக்கும் கொடூரத்தைப் பற்றிப் பதிவு செய்கிறார்! மேலும் பால்ய "விவாகம்" என்று வந்தால் பால்யகால "விதவைகளின்" பெருக்கத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும்! இது பற்றிப்

படிப்பகம்

www.padippakam.com

பாரதியார், காந்தியடிகளின் "நவஜீவன்" பத்திரிகையில் வந்த புள்ளி விவரத்தை எடுத்துக்காட்டி விதவை பற்றிய காந்திய டிகளின் பார்வையை விமர்சிக்கிறார்! அந்தப் புள்ளி விவரம்:

| வயது | மணம் புரிந்த மாதர் | கைம் பெண்கள் |
|---|---|---|
| 0 - 1 | 13212 | 1014 |
| 1 - 2 | 17753 | 856 |
| 2 - 3 | 49787 | 1807 |
| 3 - 4 | 134105 | 9273 |
| 4 - 5 | 302425 | 17703 |
| 5 - 10 | 2219778 | 94240 |
| 10 - 15 | 10087024 | 223320 |

இந்தக் கொடுமை மீண்டும் வேண் டுமா? 1881- ல் எடுத்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி 100-க்கு 19 பேர் விதவையாம்! விதவை மறுமணத்தை ஏற் றுக் கொண்டு, மணவிலக்கையும் செயல் படுத்தி விட்டால், இந்தக் கொடுமைக ளைக் குறைத்துவிட முடியும் என்பதும் சரியாகாது. "விவாகம்" என்று வந்து விட் டால், பிறகு 'விதவை' என்கிற முத்திரை முத்திரைதானே! "ஆணும் பெண்ணும் நண்பர்களாகவே பழகலாம்! பிரியலாம்! மீண்டும் சேரலாம்; விவாகம் எதற்கு? அது ஒரு வகையான அடிமை முறை தானே" என்றெல்லாம் தனிமனித உரி மைக்குரல் ஒலிக்கிற இந்தக் காலத்தில் சின்ன வயதிலேயே 'திருமணம்' என்கிற குரல் எந்த அளவுக்கு எடுபடும்?

பெரும்பாலும் மற்ற உயிரினங்கள் எல் லாவற்றிற்கும் பாலியல் உறவு பருவம் சார்ந்ததாகக் குறிப்பிட்ட நேரம், காலம் சார்ந்ததாக இருக்க, மனிதனுக்கு மட்டும் 24 மணி நேரம் 12 மாதங்களும் - எப் பொழுதும் - பாலியல் உறவே எங்கும் நிறைந்திருக்கும்படி ஆனது எப்படி? பாலியலைக் "கண நேரச் சிலிர்ப்பு" எனச் சொல்லுவார் காந்தியடிகள்! அது எப்படி 24 மணி நேரச் சிலிர்ப்பாகப் பெருகி யது? இங்கேதான் மனித உயிருக்கான - தனியான - பாலியல் சிக்கல் தொடங்குகி றது! இவன் நிமிர்ந்து நின்றதால் தான் பெற்ற பகுத்தறிவினால் இயற்கையை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் பாலி யில் உறவும் சிக்கலாகச் சிக்கிக் கொண் டது. கால்நடை வளர்ப்பு நாகரீகத்தில் பல ஆடுகளுக்கு நடுவே ஒரு கிடாய் போதும். மற்ற கிடாய்களைக் காயடித்து வளர்த்தால், அது 'கொளுகொளு' என்று மாமிசமாய்த் திரண்டு வரும் என்று என் றைக்கு விலங்குகளின் உயிரியல் நடவ டிக்கையில் 'கை' வைத்தானோ அதிலி ருந்து கற்றுக் கொண்டு தன்னுடைய ஆண் / பெண் உறவிலும் செயற்கை யான முறைகளைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டான். இப்படிப் பாலியல் உறவில் வன்முறை நுழைந்து விட்டது!

நாகரீகம் என்ற பேரில் ஆடை உடுத் திக் கொள்வது, ஒருவன் ஒருத்தி என்று குடும்பமெனும் அதிகார அமைப்பை வடிவமைப்பதற்காக உடல் ரீதியான பாலியலை ஒடுக்கியது; அதனால் ஆண், பெண் என்கிற பேதம் வளர்ந்தது; ஒருரை ஒருவர் பழக விடாமல் பிரித்து வைத்தது முதலிய ஒடுக்குமுறை நடவ டிக்கைதான் உடலில் ஒரு கணத்தில் முடிந்து விடுகிற ஒரு "விஷயத்தை" மன ரீதியாக மாற்றிப் பன்மடங்காகப் பெருக் கியது; இந்திரனுக்கு உடம்பெல்லாம் ஆயிரம் பாலியல் உறுப்பு என்கிற தொன்மம், அவன் பாலியலை ஒடுக்கிய தால், அது ஆயிரம் மடங்காகப் பெருகி யது என்பதைத் தானே இப்படிக் கூறுகி றது. இன்றைக்கும் நம்முடைய மொழி யும் கலை- இலக்கியங்களும், திரைப்ப டங்களும் இதைத்தானே செய்து கொண் டிருக்கின்றன.

எனவே ஆண் - பெண் இருவரையும் பிரிக்காமல், சகசமாகப் பழகவிட்டால், ஒருவரையொருவர் 'விவாகம்' என்ற பேரில் கட்டிப் போடாமல் விட்டால், இந்த அளவிற்கு மனிதப் பாலியல், ஆண்-பெண் உறவில் ஆக்ரமிப்பு மிக்க தாக அழிவு செய்கிற ஒன்றாக இருக் காது. பெண்கள் மட்டும் படிக்கும் கல்லூ ரியில் மூன்று ஆண்டுகள் என் நண்பர் வேலை பார்த்தார். அவர்க்கு எதிர்பால் மீது உள்ள கவர்ச்சி தனக்குப் பாலு ணர்வு இருக்கிறதா என்று ஐயம் கொள் ளுகிற அளவிற்குக் குறைந்துவிட்டதாம்.

சரி! இப்படி இயற்கையாகப் பழகவிடா மல் தடுக்கிற சக்திகள் எவை? அவை தாம் அதிகாரத்துவ அரசியல் சக்திகள்; ஒழுக்கம், பண்பாடு, கடவுள், புனிதம், கோயில் என்ற முகமூடியோடு செயல் பட்டுக் கொண்டிருக்கிற இந்தக் கொடூர மான சக்திகளைத்தான் இன்றைய பெண் ணியல் சிந்தனையாளர்கள் 'பாலுணர்வு அரசியல்' என்று அழைக்கின்றனர். ஆண் / பெண் உறவு எனப்படும் தனிப் பட்ட அந்தரங்க உறவு முறையிலும் "அரசியல்" இருக்கிறது! இதைப் புரிந்து கொண்டு, இந்த அதிகாரத்துவ அரசியல் சக்திகளைத் தூக்கி எறியாமல், எல்லா உரிமையோடும் கூடிய 'பால்யவிவாகம் மட்டும்' ஆண், பெண் இருவரையும் இயல்பாக, சகசமாகப் பழக வைத்து விடாது!



'விடுதியில் நடமாடும் கதைகள்' என்றே ஒரு தொகுப்பு போடலாம்! பரம்பரை பரம்பரையாகச் சொல்லப்படும் கதைகள் இவை

படிப்பகம்

www.padippakam.com

# உங்களுக்கு ஓர் நற்செய்தி!
# நாகப்பட்டினத்தில்

## அதிநவீன உடற்பரிசோதனை நிலையம்
## ADVANCED DIAGNOSTICS & SCANS

நாகை மாவட்ட மக்கள் தரமான உடல் பரிசோதனை என்றால் இனி வெளியூர்களுக்கு சென்று அலைய வேண்டாம். பிரத்தியேக பயிற்சி பெற்றவர்கள் மூலமாக அதி நவீன கருவிகள் கொண்டு அனைத்து பரிசோதனைகளையும் ஒரே இடத்தில் செய்துகொள்ளும் வாய்ப்பை உங்களுக்கு நாங்கள் வழங்குகின்றோம்.

**கீழ்கண்ட பரிசோதனைகள் செய்யப்படும்**

(1) அல்ட்ரா சௌண்டு ஸ்கேன்
(2) எக்ஸ்-ரே (300 MA)
(3) கம்ப்யூட்டர் இ.சி.ஜி
(4) கம்ப்யூட்டர் இரத்தப் பரிசோதனை
(5) இரைப்பை பரிசோதனை (புகை படத்துடன்)
(6) உடல் திசு பரிசோதனை
(7) முழு உடல் பரிசோதனை
(8) சிறப்பு மருத்துவர்களின் ஆலோசனையும் உண்டு.

**A.D.S. நிர்வாகம்**
24. சட்டையப்பர் கீழ வீதி
**நாகப்பட்டினம்**



படிப்பகம்

www.padippakam.com



**உடல் ரீதியான கிளர்ச்சியுடன் மீடியா ஏற்படுத்தும் உந்துதல்களால் பாலுறவு மீது அதிக மோகம் ஏற்படுகிறது**

# மூடுமந்திரம் உதவாது

நாராயண ரெட்டி

பாலியல் மருத்துவர்

இளைஞர்களின் பாலுறவுப் பிரச்சனைகளுக்குத் திருமணம் என்பது ஒரு தீர்வாகி விட முடியாது. மாணவப் பருவத்திலேயே பால்ய விவாகம் செய்து வைத்துவிட்டால் படிப்பில் ஒழுங்காக ஈடுபடுவார்கள் என்பதும் தவறு. திருமணம் என்பது மட்டுமே ஒருவனை நெறிப்படுத்தி விடும் என்றால் இவ்வளவு சின்னவீடு சமாச்சாரங்களும் இன்ன பிற விஷயங்களும் நடப்பது ஏன்?

ராஜாஜி அவர்கள் பால்ய விவாகம் பற்றிய கருத்தை எந்த அடிப்படையில் சொன்னார் என்பது தெரியவில்லை. ஆனால் பால்ய விவாகங்கள் நடந்ததற்குக் காரணம் செக்ஸ் அல்ல. குறிப்பாக ஆந்திரா போன்ற மாநிலங்களில் அந்நாட்களில் ஆண்தான் வரதட்சணை கொடுத்து திருமணம் செய்ய வேண்டும். இதில் பருவமடைந்த இளம் பெண்ணை திருமணம் செய்ய அதிக பணம் கொடுக்க வேண்டும். இதற்கும் காரணம் செக்ஸ் அல்ல. வாலிபப் பெண் வீட்டிற்கு வந்தால் எல்லா வேலைகளையும் செய்வாள் என்பதுதான். எனவே பெரும்பாலானோர் சின்னப் பெண்களை மணம் முடிக்கும் பழக்கம் இருந்தது. சின்ன வயதிலேயே இன்னொரு வீட்டுக்கு வந்துவிட்டால் அந்த வீட்டோடு எளிதில் ஒன்றி பழக முடியும் எனும் சுயநலக் காரணமும் உண்டு. சொத்து பிரிந்துவிடாமல் இருக்க. உறவு முறைகளை வலுப்படுத்த இப்படி பல்வேறு சமூக காரணங்களால்தான் பால்ய விவாகம் என்பது வழக்கத்துக்கு வந்தது. செக்ஸ் அதில் முதன்மையான காரணம் இல்லை.

டீன்-ஏஜில் என்ன கவலை இருக்கப் போகிறது என பலரும் நினைக்கிறார்கள். உண்மையில் அதிக கவலைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் மன உளைச்சல்களுக்கும் ஆளாகும் பருவம் இதுதான்.

அன்றைய இளைஞர்களைவிட இன்றைக்கு அவர்களின் அவஸ்தைகள் அதிகம். பாலுறவு பிரச்சினைகள் முன்பைவிட அதிக சிக்கல் மிகுந்தவையாக மாறிவிட்டன. மீடியாவின் உபயத்தால் இளைஞர்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என ஒரு இமேஜ் வலுவாக உருவாக்கப்பட்டு விட்டது. அதற்கேற்ப தங்களை மாற்றிக் கொள்வதில் அல்லது அதுபோல தாங்கள் இல்லையே எனும் கவலையில் இளைஞர்கள் உழல்கின்றனர். சுற்றியுள்ள நண்பர்கள் பெற்றோர் போன்றவர்களும் அவர்களுக்குப் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றனர். இன்றைய இளைஞன் காதல் பற்றி மட்டுமல்ல தனது படிப்பு வேலை சம்பாத்தியம் சமூகத்தில் தனது இமேஜ் என பல்வேறு விஷயங்களைப் பற்றி கவலைப்பட வேண்டியிருக்கிறது.

இவையெல்லாவற்றையும் மீறி பருவ உணர்வுகள் கிளர்ந்தெழும் சமயமும் இதுதான். இந்தச் சமயத்தில் சரியான வழி காட்டுதல் தேவை. அவர்களின் நேரத்தை சரியாகப் பயன்படுத்த உதவும் வழிமுறைகள் தேவை. பெரும்பாலான பள்ளிகளும் கல்லூரிகளும் ஷிப்டு முறையில் இயங்குகின்றன. மாணவர்களுக்கும் மதியம் இரண்டு மணிக்கே ஓய்வு நேரம் ஆரம்பமாகி விடுகிறது. இந்த நேரத்தைப் பயன்படுத்த சரியான திட்டங்கள் இல்லை. டி.வி. பார்க்கிறார்கள்; சினிமா பார்க்கிறார்கள். சிலர் பத்திரிகைகள் படிக்கிறார்கள். இவை எல்லாமே புதிய பாலுறவுச் சிக்கல்களுக்கு அடிகோலுகிறது.

உடல் ரீதியான கிளர்ச்சி மற்றும் மீடியா மூலம் வரும் உந்துதல்கள் எல்

படிப்பகம்

www.padippakam.com

லாம் சேர்ந்து பாலுறவின்மீது அதிக மோகத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் நிலவும் சூழலோ சமவயது ஆணும் பெண்ணும் சாதாரணமாக சந்தித்துப் பேசக்கூட தடை போடுகிறது. இதன் விளைவுகள் முறைகேடான பாலுறவுச் செய்கைகள், படிப்பில் ஆர்வமின்மை எதிலும் அசிரத்தை என பல்வேறு விதங்களில் வெளிப்படுகிறது.


டீன் ஏஜ் பையன்கள் படும் அவஸ்தைகள் அப்பருவப் பெண்களுக்கும் உண்டு. வேண்டுமானால் பெண்கள் இதுபற்றி அதிகம் வெளிகாட்டிக் கொள்ளாமலிருக்கலாம். சொல்லப் போனால் உடலியல் ரீதியாக பெண்கள்தான் பாலியல் மாறுதல்களை அதிகம் உணர்கிறார்கள். பாலியல் தொந்தரவுகளால் அதிகம் பாதிக்கப்படுவதும் அவர்கள்தான். இன்றைய சூழ்நிலையில் அவர்கள் தங்கள் உடலியக்கத்தைப் பற்றி அதிகம் தெரிந்து வைத்திருக்க வேண்டியிருக்கிறது.

இந்தப் பருவத்தில் பாலியல் சார்ந்த பிரச்சனைகள் ஏராளம் உண்டு. ஒரு சின்ன முகப்பரு, மீசை வளர்ச்சி கூட இவர்களை வெகுவாக பாதித்து விடுகிறது. தான் ஆண் மகன் இல்லையா என பையன்களுக்கும் நான் அழகில்லையா என்னை யாரும் விரும்பமாட்டார்களா என பெண்களுக்கும் குழப்பங்கள் ஏற்படுகின்றன. எந்த பரஸ்பரபுரிதல்களும் இல்லாத சந்திப்புகளும உறவுகளும காதலாகிறது. ஹார்மோன் உந்துதல் மட்டுமின்றி ஒருவரை ஒருவர் நிரூபித்துக் கொள்ளவும்கூட தீவிர உறவுகளில் இறங்குகின்றனர். இதில் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். செக்ஸில் ஈடுபடுவது என்பது எப்போதும் இன்பம் துய்க்க மட்டுமல்ல. கோபத்தின் வெளிப்பாடாககூட செக்ஸ் அமையலாம். எனவே இதைப் பற்றியெல்லாம் இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைக்கு டீன் -ஏஜர்களைப் பாதிக்கும் முக்கிய விஷயங்களில் ஒன்று விளம்பரங்கள். விளம்பரங்களின் டெக்னிக் ரொம்ப சுலபம். உன்னை சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்றால் மற்றவர்களைக் கவர வேண்டும். செக்ஸ் அப்பீல் இருந்தால்தான் மற்றவர்களைக் கவர முடியும். அதற்கு உதவுவது எங்கள் பொருட்கள் என்று சொல்லியே பொருட்களை விற்கின்றன. இதற்காக பல லட்சம் பேரில் தேர்ந்தெடுத்த ஒரு ஆணையும் பெண்ணையும் பயன்படுத்துகின்றன. இவைகளையே தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கும் இளைஞர்கள் மனதில் இந்தச் செய்தி மட்டுமல்ல உருவமும் பதிந்து விடுகிறது. தாங்களும் அது போல ஆக முயல்கின்றனர். முடிகின்ற காரியமா அது. இந்த இயலாமையே பல்வேறு பாலியல் சிக்கல்களுக்கு வழிவகுக்கிறது. அதேபோல் சினிமாவும் தன் பங்கிற்கு மனித உறவுகள் பற்றிய தவறான புரிதல்களை டீன்-ஏஜர்கள் மனதில் ஏற்படுத்துகின்றது.

இதை மீடியாவே முன்வந்து திருத்திக் கொள்ள வேண்டும். குறைந்தபட்சம் இவற்றை விமர்சனம் செய்யும் விஷயங்களுக்கு இடம் கொடுக்க வேண்டும்.

இளமையின் ஆற்றலுக்கு ஆரோக்யமான வடிகால் மட்டுமல்ல வழிகாட்டுதலும் தேவை. விளையாட்டு, இசை, ஆரோக்யமான பொழுது போக்குகள் மட்டுமின்றி அப்பருவத்தில் அவர்களுக்கு ஏற்படும் பல்வேறு சந்தேகங்களையும் நிவர்த்தி செய்து ஆண் பெண் உறவு குறித்த ஆரோக்யமான பார்வையை ஏற்படுத்த வேண்டியது அவசியம்.


படம் : ஹென்றி மூர்

அந்த அளவில் பாலியல் கல்வி என்பது மிகவும் தேவையான ஒன்றாக உள்ளது. குறிப்பாக எட்ய்ஸ் போன்றவைகள் பெருகியிருக்கும் இந்நிலையில் இக் கல்வி முக்கியமாகத் தேவை.

பலருக்கு பாலியல் கல்வி குறித்தும் பல தவறான அபிப்ராயங்கள் இருக்கின்றன. பாலியல் கல்வி மூலம் தெரியக்கூடாத விஷயங்கள் தெரிந்து போய் கெட்டு போய் விடுவார்கள் என்பதுதான் அவர்கள் வாதம். இந்த பயத்திற்கு காரணங்கள் இரண்டு. பாலியல் கல்வி என்பது செக்ஸ் விவகாரங்களை சொல்லிக் கொடுப்பது என நினைப்பது. மற்றொன்று பாலியல் பற்றி தெரிந்தவுடன் பாலுறவு விவகாரங்களுக்குள் இளைஞர்கள் இறங்கி விடுவார்கள் என நினைப்பது.

இந்த இரண்டு கருத்துக்களுமே தவறு. மாறாக பாலியல் கல்வி என்பது ஆண் பெண் எனும் இரு பாலரின் தன்மைகள், அவர்களின் சமூகப் பங்கு, மனித உறவுகள் என பல்வேறு விஷயங்களைப் பற்றிச் சொல்லும் கல்வியாகும். தன்னுள் எழும் உணர்வுகள் என்னென்ன? அவை ஏன் வருகின்றன. இன்றைய சமூகச் சூழலில் அவற்றை முறைப்படுத்துவது எப்படிப் போன்ற பல்வேறு விஷயங்கள் இதனுள் விவாதிக்கப்படுகின்றன. கூடவே உடற்கூறு பற்றியும் கற்றுத் தரப்படுகின்றது. இதன் மூலம் தன்னைப் பற்றியும் தனது உடல் பற்றியும் எதிர்பாலினர் பற்றியும் சமூக செயல்பாடுகள் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது.

உலகம் முழுவதும் இக்கல்வி எப்படி அளிக்கப்படுகிறது என்பதை ஆராய்ந்து இந்திய நிலைகளுக்கேற்ப ஒரு பாட திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். ஆனால் பாலியல் கல்வி என்று சொன்னாலே பதறியடித்துக் கொண்டு ஓடுகிறார்கள். ஆனால் இதன் தேவையை உணர்ந்த சில கல்வி நிறுவனங்கள் தொடர்ந்து அழைத்த வண்ணம் உள்ளன.

"பாலியல் கல்வி என்பது இப்படி உதிரியாக தனிப்பட்டவர்கள் நடத்துவதாக இருக்கக்கூடாது. இதை அரசு செய்யவேண்டும். எனவே மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் முழுமையான பாலியல் பாடத் திட்டத்தை சமர்ப்பித்திருக்கிறோம். தமிழக அரசு கூட சில வருடங்களுக்கு முன் பாலியல் கல்வியை அமல்படுத்தப் போகிறேன் என அறிவித்தது. ஆனால் பல்வேறு பீடங்களிலிருந்தும் வந்த எதிர்ப்பைக் கண்டு பயந்துபோய் திட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டது.

ஆனால் இன்று எய்ட்ஸ் நோய் பரவ ஆரம்பித்த பின் வேறு வழியில்லாமல் வாழ்க்கைக் கல்வி என்கிற பெயரில் பாலியல் கல்வியின் கூறுகளைத்தான் நாம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த மூடு மந்திரங்கள் எல்லாம் இல்லாமல் நேரடியாக பாலியல் கல்வியை அறிமுகப்படுத்தினால் அது இன்றைய தலைமுறைக்கு பெரிய உதவியாக இருக்கும்.

இன்று என்னை சிகிச்சைக்காக அணுகும் பலரின் பிரச்சனைகள் டீன் ஏஜ் சிக்கல்களில் தோன்றி வளர்ந்தவைதான். டீன் ஏஜர்கள் மத்தியில் நான் நடத்திய பல்வேறு ஆய்வுகளும் அவர்களுக்கு இன்றிருக்கும் நெருக்கடிகளை கூறுகின்றன.


பாலியல் துறையில் டீன் ஏஜர்களுக்கு நிச்சயம் கல்வி தேவை. இதன் ஒன்றின் மூலம்தான் இளைஞர்களை முறைப்படுத்த முடியுமேயன்றி பால்ய விவாகம் போன்ற சமாச்சாரங்களினால் அல்ல.

**சந்தித்து எழுதியவர்: சுரேஷ்பால்**


படிப்பகம்

www.padippakam.com

**SACS GEN**



**Diesel Generators 3KVA - 2000KVA**

**Powered by** KIRLOSKAR **CATERPILLAR**

**ASSOCIATES: MADURAI:** SAI ENGINEERING COMPANY 44, KAKATHOPE STREET, PH: 543351 * JEYAHAR ENGINEERING, 12 MANDAYAN ASARI LANE, PH: 24045 * **DINDIGUL:** JAFAR ENGINEERING, 45-C PALANI ROAD, PH:26282 * **CUMBUM:** SAKTHISTORES, 33 MAIN ROAD, PH: 21966 * **SIVAKASI:** SRI LALITHAMBIGAI ENTERPRISES, OLD VALLI TEX BUILDING, PH: 24302 * **RAJAPALAYAM:** SRI GOMATHI SHANKAR & CO, 670 TENKASI ROAD, PH: 20023 * **TIRUNELVELI:** THE EASTERN ELECTIC CO., 131-B/2 HIGH ROAD PH: 25705 * **TUTICORIN:** VINSTON AGENCIES, 114-D V.E. ROAD, PH: 22454 * **NAGERCOIL:** LINGAM & CO., CAPE ROAD PH: 24038 * **TRICHY:** SERVE ALL AGENCIES, 2 SRI SHANMUGAM COMPLEX, PH: 469160 * **PUDUKOTTAI:** K. BALASUBRAMANIAM & CO., 2668 EAST MAIN STREET, PH: 21474 * **PERAVOORANI:** L. MANOHARAN, ROOM NO:9, EKA LODGE, PH: 32669 * **PATTUKOTTAI:** VENKATESWARA ELECTRICALS, 19 PALANIAPPAN STREET, PH: 22471* **KUMBAKONAM:** SUGUMAR AGENCIES, 71A NAGESWARAM SOUTH STREET, PH: 22152 * **THIRUVARUR:** DEEPAN TRADERS, 88 RAILWAY STATION ROAD, PH: 23316 * **KARAIKAL:** SPARES CORNER, 231, BHARATHIYAR ROAD, KOVILPATHU, PH: 20876 * **VELLORE:** SRI DHANALAKSHMI AGENCIES, T23/4-10, ARCOT ROAD PH: 25778 * **MADRAS:** POWER POINT ENGINEERS, PLOT NO.1595, XIII MAIN ROAD, ANNA NAGAR PH: 6213478 * TECHMAN FLOW CONTROLS (P) LTD., 308, T.T.K. ROAD, PH: 8271300

# SACS GENERATORS

**Factory:**
RS. No. 3/5 Akkaraivattam Main Road,
Akkaraivattam, Karaikal-609 604.
Ph. 04368-32255.

**Administrative office:**
44, Kakathope Street, Madurai-1.
Ph. 543351,543352,540285
Tlx.:0445-368 SAI IN. Fax.:0452-543350



படிப்பகம்

www.padippakam.com


TIM **Trade-wings**

INSTITUTE • OF • MANAGEMENT

**DIP\HONS. DIPLOMO IN**

II Batch Begins 20th January 1996

The ONLY Institute in Madurai to offer



**Eligibility 10th Std., & +2 and above**

**PART TIME COURSES IN**

HOTEL MANAGEMENT

TRAVEL MANAGEMENT

AIR LINE



AFFILIATED WITH

ASTA American Society of Travel Agents

TRAVEL INSTITUTE OF THE PACIFIC HAWAII

IATA

**Application Prospectus available on payment of Rs. 50/-**

To,
The PRINCIPAL
C/O. COLLEGE OF HOTEL ADMINISTRATIONS
Bethel Nagar, Behind Vinayaga Body Building,
Bye Pass Road, Madurai - 10.

**✆ 604140 Fax: 0452-601482**



# ஆண்களுக்கும், பெண்களுக்கும்
# நூறு சதவிகிதம் வேலைவாய்ப்பு

## COLLEGE OF HOTEL ADMINISTRATION

*[Annai Fatima Educational Society Regd.] ESTD : 1992*

**ADMISSION NOTICE FOR THE YEAR 1996-97**

CHAM CHAM CHAM CHAM

*Applications are invited for Admission to the following Courses.*

1. ***Dip in Hotel Management & Catering Technology (DHM & CT)*** *Eligibility : +2 or equivalent and above, Duration 3 years.*
2. ***Dip in Hotel Operational Management (DHOM)*** *Eligibility : S.S.L.C. and above, Duration 2 years.*
3. ***One Year Craft Courses.*** *(Eligibility ; S.S.L.C. and above) (a) Food & Beverage Service, F&B Production, Housekeeping & Front Office Management*

*Applications & Prospectus available on payment of Rs. 100/- through M.O. or D.D. in favour of* **THE CORRESPONDENT** *or Meet the Principal immediately*

## COLLEGE OF HOTEL ADMINISTRATION

*Bethel Nagar, Bye Pass Road,* ***Madurai - 10***

*Phone : 604140. Fax No : 0452 - 601482*

*Franchisee : Trade wings Institute of Management (H.O. Bombay) Prospectus & Applications are also available with Kanya Engineering Construction, Thenkapattanam Road, Vettuvenni Junction, Marthandam, K.K. Dist. ✆ 70818.*




படிப்பகம்

www.padippakam.com




"எங்க அம்மா அப்பா பாத்திரம் நகை அடகு வச்சாக்கூட மூட்டுக்கறாங்க. ஆனா எங்கள மூக்கறதே இல்ல..."

# பறிக்கப்பட்ட குழந்தைப் பருவம்

ஆர்.வித்யாசாகர்

யூனிசெஃப் குழந்தைத் தொழிலாளர் நிலை ஆலோசகர்

"மிகவும் கவலைக்குரிய விஷயம் சென்னை மாகாணத்தில் பல குழந்தைகள் பீடித் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது, ஒழுங்கு நடவடிக்கை என்ற பெயரில் சிறு குழந்தைகள் கொடுமையான தண்டனைக்குட் படுத்தப்படுகிறார்கள். 5 வயது குழந்தைகள் முதல் இரண்டணா கூலிக்காக போதுமான உணவு இடைவேளை இன்றி, வாராந்திர விடுமுறை கூட இன்றி தினமும் 10 முதல் 12 மணி நேரம் வரை வேலை வாங்கப்படுகிறார்கள். இது இங்கிலாந்தில் (போன நூற்றாண்டில்) முதல் தொழிற்சாலை சட்டத்திற்கு முன்பாகத் தொழிற்சாலைகளில் இருந்த குழந்தைத் தொழிலாளர்களின் நிலையை நினைவுபடுத்துகிறது. இங்கு குழந்தைகளின் பெற்றோர் முதலாளிகளிடம் கடன்பட்டிருப்பதால் அவர்களுடைய குழந்தைகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைப் பற்றி கேள்வி கேட்க முடிவதில்லை. மாறாக ஓடிப் போய்விடும் குழந்தைகளைக் தேடிப் பிடித்து மறுபடியும் முதலாளிகளிடம் ஒப்படைக்கும் வேலையையே அவர்கள் செய்கின்றனர். நமக்கு வந்திருக்கக்கூடிய தகவலின்படியும், நாம் நேரில் சென்று பார்த்ததன் அடிப்படையிலும் சில குறிப்பிட்ட பகுதிகளில் பெரிய அளவில் இந்தக் கொடுமை நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு உடனடியான தலையீடு தேவை' (Report of the Royal commission on Labour in India 1931- Pages 96-97)

இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் இதே போன்ற கொடுமை இன்னமும் தொடர்கிறது.

மைதிலியின் வாழ்க்கையை எடுத்துக் கொள்வோம். மைதிலிக்கு வயது எட்டு. வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் ஜாஃப்ராபேட் இந்தக் குழந்தையின் கிராமம். இந்தப் பெண் ஒரு குழந்தைத் தொழிலாளி மட்டுமல்ல. ஒரு கொத்தடிமை. தன்னுடைய குடிகாரக் கணவனுக்கு வைத்தியச் செலவுக்கு பணம் தேவைப்பட்டதால் மைதிலியின் தாய் அவளை ஒரு பீடி ஏஜெண்டிடம் அடமானம் வைத்துவிட்டார். (இதுபோல் பணத் தேவைக்காக குழந்தைகளை அடமானம் வைப்பது இப்பகுதிகளில் ஒரு பொதுவான நிகழ்ச்சி) மேலும் தன் கணவனுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய பணம் தேவைப்பட்டதால் மைதிலியின் அண்ணன் மேகநாதனையும் (வயது 11) அதே ஏஜெண்டிடம் அடமானம் வைத்துவிட்டார். இரண்டு பேருக்குமாகச் சேர்த்து அடமானத் தொகை ரூ. 2500/-

மைதிலியும் மேகநாதனும் காலை எட்டு மணிக்கே ஏஜெண்ட் இடத்திற்குச் சென்று விட வேண்டும். மேக நாதன் பீடி சுற்றினால் மைதிலி அதன் முனைகளை மூட வேண்டும். (புர்ணி மூடுதல்). மைதிலி 3000 பீடிகளை மூடாமல் அந்த இடத்தை விட்டு நகர முடியாது. தினமும் இரவு 7 அல்லது 8

படிப்பகம்

www.padippakam.com



மணி வரை வேலை செய்யவேண்டும். மைதிலிக்கு ஒரு நாளைக்கு கூலி ரூ. 3/- அடமானம் வைக்கப்படாத 'சுதந்திரமான' குழந்தைத் தொழிலாளர்களுக்கு இதே வேலைக்குக் கிடைக்கும் கூலி ரூ. 7-50.

முதுகு ஒடியும் 12 மணி நேர வேலையில் சிறிது நேரம் இளைப்பாறினாலும் அடியும் உதையும் வசை மாறிகளும் கிடைக்கும். வார விடுமுறை என்றாலே என்னவென்று மைதிலிக்குத் தெரியாது. வாரம் ஆறு நாட்களில் மீத மிச்சம் இருக்கக்கூடிய வேலைகளை ஞாயிற்றுக்கிழமைகளில் செய்து முடிக்க வேண்டும். ஞாயிற்றுக்கிழமை வேலைக்கு 'காசுதுட்டு' என்று ரூ. 2 மட்டுமே கொடுக்கப்படும்.

மைதிலியைப் போன்ற மற்றொரு குழந்தை கூறுகிறது "எங்க அம்மா அப்பா பாத்திரம், நகை அடகு வைச்சாகூட மூட்டு விடுகிறார்கள், ஆனால் எங்கள மூக்கறதே இல்லை"

மைதிலியைப் போன்றும், மேகநாதன் போன்றும் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் வட ஆற்காடு மாவட்டத்தில் பீடித் தொழிலில் கொத்தடிமைகளாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

1931-லிருந்து 1995 வரை குழந்தைத் தொழிலாளர்களின் நிலையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என்பதற்கு மைதிலியின் கதையே சான்று. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கு இந்த நாட்டில் இதுவரை 12 சட்டங்களுக்கு மேல் போடப்பட்டிருக்கின்றன. இருப்பினும் ஒவ்வொரு சட்டமும் பின்பற்றப்படுவதைவிட மீறப்படுவதே வழக்கமாக இருக்கிறது. மேலும் மேலும் கீழ்த்தட்டு மக்களின் குழந்தைகள் பல்வேறு விதமான கடின உழைப்பை நோக்கி தள்ளப்படுகிறார்கள். அவர்களின் குழந்தைப்பருவம் அவர்களிடமிருந்து திருடப்படுகி

## தீப்பெட்டி-பட்டாசுத் தொழில்



தமிழகத்தில் தீப்பெட்டி, பட்டாசு தொழில்களில் குழந்தைகள் ஈடுபட்டிருப்பது உலகம் முழுவதும் 'பிரபலமான' விஷயமாகும். இதற்குக் காரணம் அடிக்கடி விபத்துக்கள் நடக்கக்கூடிய ஆபத்தான தொழிலில் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் வேலை செய்கிறார்கள் என்பதுதான். தற்சமயம் நாட்டிற்குத் தேவையான மொத்த தீப்பெட்டி உற்பத்தியில் 85 சதவிகிதம் சிவகாசிப் பகுதியில்தான் உற்பத்தியாகிறது. தொழிற்சாலை பாணியில் இயங்கக்கூடிய 400 தொழிற்சாலைகளும் ('சி' செக்டார்) குடிசைத் தொழில் ('டி' செக்டார்) அளவில் 4000 சிறு உற்பத்தி சாலைகளும் காமராஜர், வ.உ.சி. மாவட்டத்திலுள்ள 5 பஞ்சாயத்து யூனியன்களில் இயங்குகின்றன. சுமார் 20 குடும்பங்கள் தான் தீப்பெட்டி உற்பத்தியில் பெரும்பங்கை தங்கள் கைவசம் வைத்திருக்கின்றனர். தீப்பெட்டி விலையில் வெறும் 8 சதவிகிதம் மட்டுமே கூலிக்காக செலவிடப்படுகிறது. தீப்பெட்டித் தொழிலில் அதிகமாக பெண் குழந்தைகளும், பெண்களும் வேலை செய்கிறார்கள். இவர்கள் உழைப்பு மலிவான விலைக்கு வாங்கப்படுகிறது.

தீப்பெட்டி உற்பத்திக்குத் தேவையான கச்சாப் பொருட்கள் பெரும்பாலும் இப்பகுதியில் வெளியிலிருந்தே பெறப்படுகிறது என்றாலும் இத் தொழில் வெற்றிகரமாக வளர்ச்சியடைந்ததற்குக் காரணம் இங்கு கிடைக்கக்கூடிய மலிவான உழைப்புச் சக்தியே. குறிப்பாக குழந்தைகளின் உழைப்பு. சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி ஆகிய பகுதிகளுக்கு சுமார் 80 கிலோமீட்டர் சுற்று வட்டாரங்களிலிருந்து குழந்தைகளும் பெண்களும் அதிகாலை 4 மணிக்கே பேருந்தில் அழைத்துவரப்படுகின்றனர்.

பட்டாசு உற்பத்தியைப் பொறுத்த வரை நாட்டில் உற்பத்தியாகும் 90 சதவிகிதம் இந்தச் சிறு பகுதியில் தான் உற்பத்தியாகிறது. தற்சமயம் ஆண்டொன்றுக்கு சுமார் 50 கோடி ரூபாய் மதிப்புள்ள பட்டாசுகள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

பல பக்கங்களிலிலிருந்து வந்த நிர்ப்பந்தங்கள் காரணமாக பட்டாசுத் தொழிற்சாலையில் குழந்தைகளை வேலைக்கு வைத்துக் கொள்வது என்பது. தற்சமயம் குறைந்திருக்கிறது. ஆனால் சட்டத்திற்குப் புறம்பாக தொழிற்சாலைக்கு வெளியே செய்யப்படும் (சப்-காண்ட்ராக்ட்) உற்பத்தியில் குழந்தைகள் பயன்படுத்தப்படுகிறார்கள். கிராமங்களில் மிகவும் உள்ளடங்கி இருக்கக்கூடிய பட்டாசுத் தொழிறசாலைகளிலும் குழந்தைகள் பயன்படுத்தப்படுகிறார்கள். தீபாவளி சமயங்களில் இது அதிகரிக்கும்.

பட்டாசு, தீப்பெட்டி ஆகிய இரண்டு தொழில்களிலுமே தொழிலாளர்களுக்கு உற்பத்திக்கு கூலி (Piece Rate) என்றிருப்பதால் இது தொழிலாளர்களை ஓய்வு ஒழிச்சலின்றி அதிக நேரம் வேலை செய்யக்கூடிய இயந்திரங்களாக மாற்றியிருக்கிறது.

ஒவ்வொரு முறையும் விபத்துக்கள் அல்லது குழந்தைத் தொழிலாளர் நிலை குறித்து குரல் எழும்போதெல்லாம் அரசு தரப்பிலிருந்து கமிட்டிகளும், கமிஷன்களும் போடப்படுகின்றன.

1976-ல் ஹர்பன்ஸ் சிங் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. இதற்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகும் அவருடைய பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாததால் அவற்றின் காரணத்தை அறிய 1983-ல் ஹரி பாஸ்கர் தலைமையில் மற்றொரு கமிட்டி அமைக்கப்பட்டது. இவர்கள் பல பரிந்துரைகளைச் செய்திருப்பினும் அவை எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை.

எனவே மீண்டும் 10 ஆண்டுக


படிப்பகம்

www.padippakam.com



றது. அவர்கள் சிறு தானியங்கி இயந்திரம் போல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். கல்வி என்பதும் விளையாட்டு என்பதும் அவர்களுக்கு ஆடம்பரப் பொருளாகிவிட்டன.

தமிழகத்தில்... குழந்தைத் தொழிலாளர்கள் என்றாலே நமக்கு உடனடியாக நினைவுக்கு வருவது சிவகாசி தீப்பெட்டி பட்டாசு தொழிற்சாலைகள்தான்.

காலையில் எழுந்தவுடன் நம்மில் பெரும்பாலோர் பீடி, சிகரெட்டோ அல்லது அடுப்போ பற்ற வைக்க உதவும் தீப்பெட்டி; புகைத்து மகிழும் பீடி; தீபாவளி தோறும் நாடு முழுவதும், பல லட்சக்கணக்கான குழந்தைகளை மகிழ்விக்கும் பட்டாசுகள், வாண வேடிக்கைகள்; பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் நாட்களில் வசதியானவர்கள் உடுத்தும் பட்டாடையிலிருந்து அனைத்துவிதமான கைத்தறி, விசைத்தறி துணிகள்; உள்நாட்டுச் சந்தைக்கு மட்டுமல்லாமல் பெரும்பாலும் வெளிநாட்டுச் சந்தைக்காகவும் ஏற்றுமதி செய்யப்படும் பின்னல் ஆடைகள் (உள்ளாடைகள்);

நாம் அன்றாடம் பயன்படுத்தும் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பித்தளை, எவர்சில்வர் பாத்திரங்கள், வெள்ளி நகைகள், தோல் பொருட்கள் தயார் ஆடைகள் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய செயற்கை வைரங்கள் இதுபோன்ற பல தொழில்களில் பெருமளவில் குழந்தைகள் உழைப்பு பொதிந்து கிடக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக நாம் உயிர் வாழ்வதற்கு அவசியம் தேவையான உணவு தானிய உற்பத்தியில் தமிழகத்தில் பல லட்சக்கணக்கான குழந்தைகள் வேலை செய்கிறார்கள். ஆடு, மாடு மேய்ப்பதிலிருந்து விவசாய வேலைகள் பலவற்றிலும் குழந்தை உழைப்பு அடங்கியிருக்கிறது.

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பார்கள். அத்தகைய

ளுக்குப் பிறகு 1992-ல் தீப்பெட்டி-பட்டாசு தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் முறையை எப்படி ஒழிப்பது என்பது குறித்து தொழிலாளர் துறை செயலர் தலைமையில் மற்றுமொரு கமிட்டி அமைக்கப்பட்டது. இதன்கீழ் செயல்பட்ட மற்றொரு துணை கமிட்டி 1993-ல் தன்னுடைய பரிந்துரைகளை வழங்கியது.

இதுவரை குழந்தைத் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறித்து சரியான புள்ளி விவரங்கள் ஏதும் இல்லாமல் இருந்தது. எனவே காமராஜ் - வ.உ.சி மாவட்டங்களில் வீடு வீடாகச் சென்று குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை குறித்த கணக்கெடுப்பு ஒன்று யூனிசெப் உதவியுடன் சமுக நலத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்படி காமராஜர், வ.உ.சி. ஆகிய மாவட்டங்களில் 12 பஞ்சாயத்து யூனியன்களிலும், 5 நகராட்சிகளிலும் சுமார் 2 லட்சம் குடும்பங்களில் கணக்கெடுக்கப்பட்டது.

★ 6 முதல் 14 வரை உள்ள 80,221 குழந்தைகள் உழைப்பில் ஈடுபட்டிருக்கின்றனர். இதில் 56 சதவிகிதம் பெண் குழந்தைகள்.

★ இதில் 53,479 குழந்தைகள் முழு நேரமாகவும் 26,742 குழந்தைகள் பகுதி நேரமாகவும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

★ காமராஜர் மாவட்டத்தில் மொத்த உழைப்பாளர்களில் குழந்தைகளின் பங்கு 12 சதவிகிதம். வ.உ.சி.யில் இது 8 சதவிகிதம். மாநிலம் முழுவதுமாகப் பார்த்தால் மொத்த உழைப்பாளர்களில் இது 5 சதவிகிதம்.

★ தீப்பெட்டி உற்பத்தியில் மட்டும் 65,908 குழந்தைகள் ஈடுபட்டிருக்கின்றனர். இதில் 60 சதவிகிதம் பெண் குழந்தைகள். மொத்த குழந்தைகளில் 40,974 பேர் முழு நேரமாகவும், 24,934 பேர் பகுதி நேரமாகவும் வேலைசெய்கின்றனர்.

★ பட்டாசு தொழிற்சாலைகளில் 5,176 குழந்தைகள் (52 சதவிகிதம் பெண் குழந்தைகள்) வேலை செய்கின்றனர்.

★ தீப்பெட்டி உற்பத்தியில் சுமார் 8 சதவிகித தொழிலாளர்கள் பெண் களும், பெண் குழந்தைகளுமே.

1986-ஆம் ஆண்டு போடப்பட்ட குழந்தை உழைப்பு, ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஒழித்தல் சட்டத்தின்கீழ் குழந்தை உழைப்பு முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும் என்ற தொழில்களின் வரிசையில் தீப்பெட்டித் தொழிலும், பட்டாசுத் தொழிலும் இருக்கின்றன. ஆனால் இந்த சட்டம் இயற்றப்பட்டு 10 ஆண்டுகளுக்குப் பிறகும் இத் தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கிறது என்பதற்கு மேற்கூறிய புள்ளி விவரங்களே சான்று.



படிப்பகம்

www.padippakam.com



# விபத்துகள்

சிவகாசிப் பகுதியிலுள்ள தீப்பெட்டி பட்டாசுத் தொழில்கள் மிகவும் ஆபத்தானவை என்பதற்கு அங்கு அடிக்கடி நடக்கக்கூடிய விபத்துக்களே சான்றுகள். பட்டாசுத் தொழிலில் விபத்துக்கள் அடிக்கடி நடந்து வந்தாலும் பெரிய அளவில் விபத்துக்கள் ஏற்பட்டு அவற்றை மறைக்க முடியாமல் போகும் போதுதான் அவை வெளிவருகின்றன. மற்றவை பண பலத்தின்மூலம் மறைக்கப்படுகின்றன. பெரிய விபத்துகளுக்கு சில உதாரணங்கள்:

★ 1978-ஆம் ஆண்டு கிராமங்களிலிருந்து குழந்தைகளை வேலைக்கு ஏற்றிக் கொண்டுவந்த பஸ் திடீர் வெள்ளத்தில் சிக்கி அடித்துக் கொண்டு போனது. 32 குழந்தைகள் பலியானார்கள். வெள்ளம் வடிவதற்கு காத்திருக்காமல் வேலைக்கு சீக்கிரம் அழைத்துச் செல்ல வேண்டும் என்ற அவசரத்தினால் ஏற்பட்ட விபத்து இது.

★ 1981 செப்டம்பர் மாதம் மேட்டுப்பட்டி கிராமத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 32 பேர், குழந்தைகள், பெண்கள் உட்பட உயிரிழந்தனர். இந்த விபத்து அதிகாலை இரண்டு மணிக்கு நடைபெற்றது. பட்டாசு உற்



பத்தி செய்யும் இடங்களில் மின் விளக்கோ மற்றறெந்த விளக்குகளோ பயன்படுத்தக்கூடாது என்பது சட்டம். ஆனால் தீபாவளி விற்பனைக்காக பெட்ரோமாக்ஸ் லைட் உதவியுடன் தயாரிப்பில் ஈடுபட்டதால் இந்த 'விபத்து ஏற்பட்டது. அது மட்டுமின்றி லைசன்ஸ் பெறாத ஒரு கீற்றுக் கொட்டகையில் உற்பத்தி நடந்துள்ளது. அதை ஆய்வு செய்ய நாகபுரியிலிருந்து வந்த வெடிமருந்து சட்ட அதிகாரி "உற்பத்தி செய்யப்பட்ட இடம் லைசன்ஸ் வழங்கப்படாத இடம். எனவே அந்த முதலாளி ஏற்கெனவே லைசன்ஸ் பெற்றுள்ள இடத்தில் அதற்கான லைசன்சை ரத்து செய்ய அவசியமில்லை" என்று குறிப்பெழுதினார். உற்பத்தி தொடர்ந்து நடந்தது.

★ 1982 பிப்ரவரி மாதம் சங்கரன்கோவில் அருகிலுள்ள செல்லப்பத்து கிராமத்தில், வெடிக்குள் மருந்தை திணித்துக் கொண்டிருந்த ஆறு குழந்தைகள் அந்தத் தொழிற்சாலையில் நடந்த விபத்தில் கருகிச் செத்தனர்.

★ 1991 ஜூலை மீனப்பட்டியிலுள்ள டான் அமார்சஸ் பட்டாசு தொழிற்சாலையில் பெரும் விபத்தில் 40 பேர் கருகிச் செத்தனர். 73 பேர் மோசமான தீக்காயம் அடைந்தனர்.

★ 1994-ல் சிவகாசிக்கு அருகில் பாரத் பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் சுமார் 20 பேர் உயிரிழந்தனர். பலர் காயமுற்றனர்.

இவ்வளவு ஆபத்தான தொழில் என்று தெரிந்திருந்தும் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் தொடர்ந்து இங்கு வேலைக்குப் போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள். காரணம் காமராஜர் மாவட்டத்தில் எங்கும் காண்பது வறண்ட பூமிதான். விவசாயத்தில் வேலையின்றி பிழைக்க வழி தேடித்தான் மக்கள் தீப்பெட்டித் தொழிலுக்கும், பட்டாசுத் தொழிலுக்கும் படையெடுக்கின்றனர். விபத்து போன்ற விஷயங்கள் அவர்களைப் பொறுத்தவரை மரத்துப் போன ஒன்று.

துறையில் பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் வேலை செய்கிறார்கள். பெரிய ஹோட்டல்கள் முதல் சிறிய டீக்கடைவரை மேசை உயரம்கூட இல்லாத மழலைகள் மேசைகளை சுத்தம் செய்வதில் ஈடுபட்டிருப்பது நாம் அனைவரும் அன்றாடம் காணக்கூடிய ஒரு காட்சி.

மோட்டார் மெக்கானிக் ஷாப், சைக்கிள் சாமான், பலசரக்குக் கடைகள் இதுபோன்ற மற்ற வியாபாரத் தலங்கள் பெரும்பாலானவற்றில் குழந்தை உழைப்பு ஒரு முக்கிய அம்சம்.

இவற்றிற்கெல்லாம் மேலாக சென்னை, மதுரை, கோவை போன்ற பெரு நகரங்களில் வானமே கூரையென்று இருக்கக் கூடிய குடும்பம், பந்தம், பாசம் என்று எதுவுமே அற்ற தெருக்குழந்தைகள் எண்ணிக்கை ஏராளம். பிளாட்பாரம்தான் இவர்களுக்கு புகலிடம். குப்பை பொறுக்குவது, பல்வேறுவிதமான கூலி வேலை செய்வது, தங்களின் வாழ்க்கைப் போராட்டம் காரணமாக சமூக விரோத செயல்களில் ஈடுபடுவது போன்றவற்றில் இவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களில் குறிப்பாக பெண் குழந்தைகளின் நிலை மிகவும் மோசமானது. இவர்களில் பலர் வலுக்கட்டாயமாக விபச்சாரத்திலும் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

பெரு நகரங்களிலுள்ள மத்திய தர வகுப்பினர் தங்கள் குழந்தைகளை படிக்கவைத்து சிறப்பான எதிர் காலத்தை அவர்களுக்கு உருவாக்க வேண்டும் என விழைகின்றனர். ஆனால் பெரும்பாலும் வீட்டு வேலை செய்ய அவர்கள் விரும்புவது வீட்டோடு இருந்து வேலை செய்யக் கூடிய சிறிய பெண்குழந்தைகளே.

குழந்தை தொழிலாளர் முறை என்பது ஏதோ இன்று நேற்று ஏற்பட்ட பிரச்சினையல்ல. தொன்று தொட்டு விவசாயத்திலும் கைவினைப் பொருட்களிலும் குழந்தை உழைப்பு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் தொழிற்சாலைகள் ஏற்பட்டவுடன்தான் குழந்தை உழைப்பு என்பது நாளுக்கு நாள் பன்மடங்காகிக் கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக இந்தியாவில் தொழில் கட்டுமான அமைப்பின் காரணமாக அரசின் கொள்கைகள் காரணமாக உருவாகியுள்ள முறைசாரா (informal) தொழில்கள் அனைத்திலும் குழந்தை உழைப்பு கணிசமாகப் பயன்படுத்தப்படுகிறது. இத் தொழில்களில் பெரும்பாலானவை எந்த சட்டத்திற்கும் கட்டுப்படாதவை. சில தொழில்கள் பிரதானமாக மலிவான குழந்தை


படிப்பகம்

www.padippakam.com

உழைப்பையே ஆதாரமாகக் கொண்டு இயங்குபவை.

இந்த நிகழ்வுப் போக்கிற்கு தமிழ் நாடு விதிவிலக்கு அல்ல.

1981-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 15 வயதுக்குட்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 9,75,055 ஆக இருந்தது. இது மொத்த உழைப்பாளர்களின் எண்ணிக்கையில் 5 சதவீதமாகும். (1991-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் வயது வாரியாக வேலை செய்வோரின் எண்ணிக்கை இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.) மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி அதில் பயன்படுத்தப்படும் முறைகளின் காரணமாக குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைத்தே மதிப்பிடப்படுகிறது. அதே ஆண்டு பள்ளியில் சேராமல் இருந்த குழந்தைகளின் எண்ணிக்கையைப் பார்த்தால் இது விளங்கும்.

1981-ம் ஆண்டு 5 முதல் 14 வயதுவரை உள்ள குழந்தைகளில் சுமார் 40லட்சம் குழந்தைகள் (15.5 லட்சம் ஆண் மற்றும் 24.5 லட்சம் பெண் குழந்தைகள்) எந்தப் பள்ளியிலும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இதில் பெரும்பாலானோர் ஏற்கனவே வேலை செய்பவர்களாகத்தான் இருந்திருக்க வேண்டும். அதே வயதுடைய மொத்தக் குழந்தைகளில் இது 35 சத வீதமாகும்.

1986-ல் நடத்திய தேசிய மாதிரி ஆய்வின்படிகூட 10-14 வயது வரை உள்ள குழந்தைகளில் 20% வேலை செய்கிறார்கள் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

1991-ம் ஆண்டின் பள்ளி விவர கணக்குப்படி மதிப்பீடு செய்ததன் அடிப்படையில் பார்த்தால் 5-14 வயது வரை உள்ள குழந்தைகளில் சுமார் 31 லட்சம் குழந்தைகள் பள்ளிக்கு வெளியே இருக்கின்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் குழந்தைத் தொழிலாளர்களே.

மக்கள் தொகை கணக்குப்படி பார்த்தால் குழந்தைகள் அதிகமாக வேலை செயயக்கூடிய மாவட்டங்கள் வடஆற்காடு, சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களாகும். திருநெல்வேலி, ராமநாதபுரம் (காமராஜர் உட்பட) மதுரை, கோயம்புத்தூர் பெரியார் ஆகிய மாவட்டங்களில் ஆண் குழநதைகளைவிட பெண் குழந்தைகள் அதிகம் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

உண்மை என்னவெனில் தமிழ் நாடு முழுவதும் எவ்வளவு குழந்தைகள் வேலை செய்கிறார்கள் என்பது குறித்த விஞ்ஞானப் பூர்வ



## கமிட்டிகள்

கேரள தீப்பெட்டித் தொழில் பற்றி அறிய தமிழக அரசு அமைத்த கமிட்டி கீழ்க்கண்ட நிலைமைகளைக் கண்டறிந்தது.

- ★ கேரளாவில் இருக்கக்கூடிய 400க்கும் மேற்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் குழந்தைகள் வேலை செய்வதில்லை. ஆண்களும் பெண்களும் நாளொன்றுக்கு 8 மணி நேரம்தான் வேலை செய்கிறார்கள்.
- ★ தமிழகத்திலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் கொடுப்பதைவிட இரண்டு மடங்கு கூலி வாங்குகிறார்கள்.
- ★ இவையெல்லாம் இருப்பினும் தீப்பெட்டித் தொழிலும் இலாபகரமாக நடக்கிறது.
- ★ அங்குள்ள தொழிலாளர் நிலைமைக்கு அங்குள்ள வலுவான தொழிற்சங்க இயக்கம், அதிகமான கல்வியறிவு, குழந்தைகளுக்கு கண்டிப்பாகக் கல்வியறிவு கொடுக்க வேண்டுமென்ற பெற்றோர்களின் விழிப்புணர்வு ஆகியன காரணங்களாகக் கூறப்பட்டுள்ளது.

அதே கமிட்டியின் மற்றொரு அறிக்கையில் குழந்தை உழைப்பை ஒழிப்பதால் தீப்பெட்டித் தொழில் நசிந்து போகாது. குழந்தைகளுக்குப் பதிலாக வயது வந்தவர்களை வேலைக்கு வைத்துக் கொள்வதால் உற்பத்திச் செலவு சிறிதளவுதான் கூடும் என கூறப்பட்டுள்ளது.

தீப்பெட்டி, பட்டாசு ஆகிய தொழில்களில் குழந்தை வதைப்பை ஒழிக்க தமிழக அரசு அமைத்த கமிட்டியின் பரிந்துரைகள் (மார்ச் 1993):-

குழந்தை உழைப்பை ஒழிப்பதற்கு இந்தப் பிரச்சினையை பல்வேறு கோணங்களிலிருந்து அணுக வேண்டும். வயது வந்தவர்களுக்கு நியாயமான கூலி, அதிக வேலை வாய்ப்புக்கள், அப்பகுதி விவசாயத்தை அதன் பின்தங்கிய நிலையிலிருந்து முன்னேற்றுவதற்கான திட்டங்கள் தீட்டுவது போன்றவை பெற்றோர்களின் வறுமையை ஒழிக்க உதவி புரியும்.

கட்டாய ஆரம்பக் கல்வியை செயல்படுத்துவது, இதற்கேற்ப கல்விக் கட்டுமானங்களை அதிகரிப்பது, தற்போது இருப்பது போல் அல்லாமல் கல்வி கற்றல் என்பது ஒரு மகிழ்ச்சியான விஷயம் என்ற வகையில் கல்வி கற்பிக்கும் முறைகளை மாற்றுவது (வேலை செய்யும் குழந்தைகள் அனைவருமே வறுமையின் காரணமாக வேலைக்குத் தள்ளப்படுவது இல்லை. சுவாரஸ்யமற்ற கல்வி முறையும் அவர்களை வேலைக்குத் தள்ளுகிறது) போன்றவை குழந்தைகளை ஆரம்பக்கல்வி கற்க வைப்பதற்கும், தொடர்ந்து பள்ளியில் தக்க வைப்பதற்கும் உதவியாக இருக்கும்.

இவைகளைச் செய்யும் அதே நேரத்தில் சட்டத்தைக் கறாராக செயல்படுத்துவது. சட்டத்துக்கு வெளியே உள்ள தொழிற்சாலைகளைச் சட்டத்திற்குள் கொண்டு வருவது.

இது தவிர குழந்தை உழைப்பினால் ஏற்படக்கூடிய கேடுகள் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது.

மேற்கூறிய வறுமையை ஒழித்தல், கல்வியின் தரத்தை மேம்படுத்துவது, கறாராகச் சட்டங்களை செயல்படுத்துவது, மக்கள் மத்தியில் விழிப்புணர்வு போன்றவை குழந்தை உழைப்பை ஒழிப்பதன் பல கோணங்களாகும். எனவே இவையனைத்தையும் ஒருங்கிணைத்த வகையில் செயல்படுத்த வேண்டும். இதற்காக நிர்வாக அமைப்பை ஏற்படுத்தவும் மேற்கண்ட கமிட்டி பரிந்துரை செய்துள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்குள் தீப்பெட்டி - பட்டாசு தொழிலில் குழந்தை உழைப்பை எப்படி ஒழிப்பது என்பதற்கான கமிட்டி 1993 மார்ச் மாதத்தில் தன்னுடைய பரிந்துரைகளை வழங்கியது. ஆனால் இதுவரை இதில் எதுவுமே நடைமுறைபடுத்தப்படவில்லை. குழந்தைத் தொழிலாளர்கள் இன்னும் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டுமோ?

படிப்பகம்

www.padippakam.com



மான கணக்கு எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாக வேலை செய்யக் கூடிய சில மாவட்டங்களில் மட்டும் (வடஆற்காடு அம்பேத்கர், சேலம், கோயம்புத்தூர்) தற்சமயம் எவ்வளவு குழந்தைகள் வேலை செய்கிறார்கள் என்பது குறித்த கணக்கெடுப்பு நடந்து கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு வ.உ.சி., காமராஜர் ஆகிய மாவட்டங்களில் இதேபோன்ற கணக்கெடுப்பு நடந்தது.

குழந்தைத் தொழிலாளர்கள் என்று பார்த்தால் கூலிக்காக வேலை செய்பவர்கள் மட்டும் குழந்தைத் தொழிலாளர்கள் அல்ல. பல குடும்பங்களில் குறிப்பாக கிராமப்புறங்களில் அடித்தட்டு மக்கள் மத்தியில் பெற்றோர்கள் வேலைக்குச் செல்லும்போது வீட்டு வேலைகளைச் செய்யவும் வீட்டிலுள்ள சிறு குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளவும் பெரும்பாலான பெண் குழந்தைகள் பயன்படுத்தப்படுகின்றனர். இவர்களுக்கு கல்வியோ விளையாட்டோ கிடையாது. இவர்களுடைய முகங்கள் எந்தப் புள்ளி விவரங்களிலும் தெரியாது. இருப்பினும் இது போன்ற உழைப்பில் ஈடுபட்டிருக்கக்கூடிய குழந்தைகள் ஏராளம்.

இது தவிர கூலிக்காக வேலை செய்யக்கூடிய குழந்தைகளைப் பார்த்தோமேயானால் எல்லா குழந்தைகளுக்கும் உழைப்புத் தன்மை ஒரே மாதிரியானதல்ல. உடல்நலத்திற்குப் பெரிதும் கேடு விளைவிக்கக்கூடிய தொழிலில் ஈடுபட்டிருக்ககூடிய குழந்தைகள், தங்கள் சுதந்திரத்தை இழந்து கொத்தடிமைகளாக வேலை செய்யக்கூடிய குழந்தைகள். இதர வகையிலான குழந்தைத் தொழிலாளர்கள் என அடிப்படையில் மூன்றுவிதமான குழந்தை உழைப்பு இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த மூன்று வகையிலும் குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கின்றனர். பகுதி, தொழிலுக்கேற்ப இவை மாறுபடுகின்றன.

தமிழ் நாட்டில் கயிறு திரித்தல், வெள்ளி நகை வேலை, பாத்திரம் தயாரித்தல், உப்பளம், மீன்பிடித்தல், கல்குவாரிகள் போன்ற பல்வேறு தொழில்களில் குழந்தைகள் ஈடுபட்டிருக்கின்றனர். இவை எல்லாவற்றிற்கும் பொதுவான அம்சம் என்னவென்றால் குழந்தைகள் மிகக் குறைந்த கூலிக்கு சராசரியாக 12 மணி நேரம் வேலை செய்கிறார்கள் என்பதுதான்.

இருப்பதிலேயே அதிகமாக குழந்தைகள் வேலை செய்வது விவசாயத் தொர்ழிலில்தான். 1981-ம்

## பீடித் தொழில்

தமிழ்நாட்டில் சுமார் 10 லட்சம் பேர் பீடித் தொழிலில், முக்கியமாக திருநெல்வேலி, வடஆற்காடு மாவட்டங்களில், ஈடுபட்டிருப்பதாக கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இதில் சுமார் இரண்டரை லட்சம் பேர் குழந்தைகள். இதில் வடஆற்காடு மாவட்டத்தில் சுமார் நாற்பதாயிரம் குழந்தைகள் வேலை செய்கிறார்கள். குழந்தைகள் அதிகமாக பீடித் தொழிலில் வேலை செய்வது திருநெல்வேலி மாவட்டத்தில்தான் என்றாலும்கூட, மிகவும் மோசமான வடிவத்திலான அடிமை முறை வடஆற்காடு மாவட்டத்தில் நிலவுகிறது.



முதன்முறையாக தற்சமயம் வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தின் 12 பஞ்சாயத்து யூனியன்களில், எவ்வளவு குழந்தைகள் அடமானக் குழந்தைகளாக பீடித் தொழிலில் வேலை செய்கிறார்கள் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முறையை ஒழிப்பதற்கான சில திட்டங்களும் தீட்டப்பட்டிருக்கிறன. குழந்தைகளை விடுவிப்பது, கல்வி கற்கச் செய்வதுபோன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விடுவிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் பெற்றோர்களுக்கு வருமானத்தைப் பெருக்கும்வண்ணம் கடன் உதவிகள், குழந்தைகள் மகிழ்ச்சியாகக் கல்வி கற்கும்வண்ணம் சில புதிய கல்வி முறைகள், சட்ட ரீதியான நடவடிக்கைகள் போன்றவை செயல்படுத்தப்பட்டுள்ளன. தற்போது இவை சில குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே நடைமுறைக்கு வந்திருக்கிறது.

### காஞ்சிப்பட்டு

காஞ்சிப் பட்டு என்பது உலகப் பிரசித்தி பெற்றது. தமிழ்நாட்டில சுமாா 60,000 பட்டுத்தறிகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. நூல் கைத்தறி போல் அல்லாது, பட்டுப்புடவை நெய்வதற்கு ஊடுநூலை ஒவ்வொரு இழையாக கொடுத்து வாங்க வேண்டும். இதே போல் கண்கவர் சரிகை வேலைப்பாடுகளுக்கும் ஊடுநூல் ஒவ்வொரு இழையாகக் கொடுத்து வாங்க வேண்டும். இந்த வேலைக்கு முழுவதும் பயன்படுத்தப்படுவது குழந்தைகளே. எட்டு வயது குழந்தைகள் முதல் இதில் வேலை செய்கின்றனர். ஒவ்வொரு தறிக்கும் கட்டாயம் ஒரு குழந்தை வேலை செய்கிறது. சரிகை வேலைப்பாடுகள் அதிகம் இருப்பின் ஒரு தறிக்கு இரண்டு குழந்தைகள் தேவைப்படும். இது தவிர 12-13 வயதாகிவிட்டால் குழந்தைகளே தறி நெய்யத் துவங்கி விடுகிறார்கள்.

கடனுக்கு பதில் குழந்தைகளை வேலை செய்ய விடுவதால் வேலை நிலைமைகள் கடுமையானதாக இருக்கிறது. தீபாவளி பொங்கல் நேரத்தில் இரவு முழுவதும் கூட வேலை செய்ய வேண்டும். இதற்காக இவர்களுக்கு ஒரு ஜோடி புதுத் துணி மட்டும் வழங்கப்படும். தினமும் 12 மணி நேர வேலை. மாதாமாதம் அமாவாசை அன்று மட்டும்தான் விடுமுறை.

### பின்னலாடை

ரூ.2000 கோடிக்கு மேல் ஏற்றுமதி செய்யப்படும் பின்னலாடை உற்பத்தியில் பல குழந்தைகளின் எதிர்காலமும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. திருப்பூர் பகுதியில் குவிந்து கிடக்கக்கூடிய இந்தத் தொழிலில் 25,000 முதல் 30,000 குழந்தைகள் வரை வேலை செய்வதாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது..

தைப்பது, காஜா எடுப்பது, இன்டர் லாக்கிங், ஓவர்லாக்கிங் போன்ற பல்வேறு வேலைகளில் குழந்தைகள் பயன்படுத்தப்படுகின்றனர். மற்ற தொழில்களைப்போல் அல்லாமல் இத் தொழிலில் எட்டு மணி நேர ஷிப்ட் என்றாலும்கூட வேலை அதிகமாக இருக்கும் நேரங்களில் பெரியவர்களோடு குழந்தைகளும் இரண்டு மூன்று ஷிப்ட் தொடர்ந்து வேலை செய்யக்கூடிய நிலை இங்கு இருக்கிறது. இதை 'விடி நைட்' என்று கூறுகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சுமார் 4,16,000 குழந்தைகள் (2,06,000 ஆண் -2,10,000 பெண்) விவசாயத் தொழிலாளர்களாகவும், மேலும் சுமார் 45,000 குழந்தைகள் (31,000 ஆண் - 14,500 பெண்) ஆடு மாடு மேய்ப்பதில் ஈடுபட்டிருப்பதாகவும் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இக் குழந்தைகளில் பெரும்பாலானோர் கல்வி அறிவு ஏதுமின்றி பெற்றோர் பட்ட கடனுக்கு வேலை செய்யும் நிலையில் இருக்கின்றனர்.

பெரும்பாலான தொழில்களில் ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தைகளே அதிகம் வேலை செய்கின்றனர். ஒரு விதத்தில் பார்த்தால் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை என்பது பெண்கள் மீதான ஒடுக்கு முறையின் ஒரு வெளிப்பாடே.

தற்சமயம் கடைப்பிடிக்கப்பட்டு வரும் புதிய பொருளாதாரக் கொள்கைகள், உலகமயமாக்கம் ஆகியவற்றின் விளைவாக உலகத்தில் வல்லரசுகளிடமிருந்து சமூக நிபந்தனை என்ற பெயரில் குழந்தை உழைப்பை ஒழிக்க வேண்டும். குழந்தைகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்ய மாட்டோம் என்பது போன்றவை இந்தியா போன்ற நாடுகள் மீது திணிக்கப்படுகின்றன. குழந்தை உழைப்பைக் கொண்ட பொருட்களை இறக்குமதி செய்யக்கூடாது என சமீபத்தில் இயற்றிய ஹார்க்கின்ஸ் சட்டம் இதற்கு ஓர் உதாரணம். பெரும்பாலும் இவர்களின் கவலை குழந்தைத் தொழிலாளர்களை வைத்து உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் குறைவான உற்பத்திச் செலவில் சர்வதேச சந்தையில் எளிமையாக போட்டியிட முடிகிறது என்பதுதான். இதனால் அதிக உற்பத்திச் செலவில் தயாரிக்கும் நாடுகள் நஷ்டமடையும் என்பதால் இந்த சமூக நிபந்தனைகள். அவர்களின் உண்மை அக்கறை குழந்தைகள் மீது அல்ல. வர்த்தகத்தின் மீது தான்.

ஒரு மதிப்பீட்டின்படி இந்தியாவில் வேலை செய்யக்கூடிய குழந்தைகளில் ஏற்றுமதிக்கான உற்பத்தியில் ஈடுபட்டிருக்கக்கூடிய குழந்தைகள் எட்டு சதவிகிதம்தான். இதைக் கூறுவது குழந்தை உழைப்பை நியாயப்படுத்துவதற்காக அல்ல. குழந்தைகள் உழைப்பது நிச்சயமாக ஒழிக்கப்பட வேண்டும். ஆனால் அது இது போன்ற நிர்ப்பந்தங்களினால் நடக்காது. இதற்கு ஒரே உதாரணம் வங்காள தேசத்தில் தயார் ஆடை உற்

## விசைத்தறி

இந்தியாவில் கிட்டத்தட்ட 70%க்கு மேல் துணி உற்பத்தி விசைத்தறியில் நடக்கிறது. இந்தியாவிலுள்ள மொத்த 80 இலட்சம் தொழிலாளர்களில் தமிழகத்தில் 15 இலட்சம் விசைத்தறித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். விசைத்தறி உற்பத்தி பெரும்பாலும் சேலம், பெரியார், கோவை ஆகிய மாவட்டங்களில் குவிந்து கிடக்கின்றது.

விசைத்தறிக் கூடங்களில் 5 பேர் முதல் 100 பேர் வரையிலாக வேலை செய்யக்கூடிய கூடங்கள் இருக்கின்றன. ஃபேக்டரி சட்டங்கள் பொருந்தக்கூடிய எந்த ஃபேக்டரியிலும் சட்டம் கிடையாது. பெரும்பாலும் இரண்டு ஷிப்ட்டுகளில் உற்பத்தி நடக்கிறது. ஒவ்வொரு ஷிப்ட்டும் 12 மணி நேரம். ஒவ்வொரு ஷிப்ட்டும் 1 மணி முதல் 1 மணி வரை. குமாரபாளையம், பள்ளிப்பாளையம்



ஆகிய பகுதிகளில் இரவு 1 மணிக்குச் சென்று பார்த்தால் தூக்கம் கலையாத குழந்தைகளை ஃபேக்டரிக்கு இழுத்துச் செல்வதைப் பார்க்கலாம்.

10 தறி ஓடக்கூடிய ஃபேக்டரியில் ஒவ்வொரு ஷிப்ட்டுக்கும் 2 குழந்தைகள் என்ற விகிதத்தில் 4 குழந்தைகள் வேலை செய்கிறார்கள். இக் குழந்தைகளுக்கு வார விடுமுறை என்பதே கிடையாது. மாதாமாதம் அமாவாசை அன்று மட்டும்தான் விடுமுறை. தமிழகத்தில் மட்டும் விசைத்தறியில் சுமார் 1½ லட்சம் குழந்தைகள் வேலை செய்கிறார்கள்.

எட்டுமணி நேர வேலைக்காக இரத்தம் சிந்திப் போராடி உரிமை பெற்றதை நினைவு கூறும் வண்ணம் மே தினம் கொண்டாடப்படுகிறது. ஆனால் எட்டு மணி நேர வேலை என்பதே அகராதியில் இல்லாத விசைத்தறித் தொழிலில் மே தினத்துக்குக்கூட விடுமுறை கிடையாது.

சுகாதாரமற்ற, காற்று வசதியற்ற, தொடர்ந்து விசைத்தறியின் சத்தத்தில் வேலை செய்துவரும் நிறையக் குழந்தைகளுக்குக் காது கேட்கும் தன்மை மந்தப்படுகிறது.

வேலை செய்யும்போது தறி பெல்டில் அடிபட்டு சுண்டு விரல்களை இழந்த குழந்தைகள் ஏராளம்.

மேலும் வேலை செய்யக்கூடிய குழந்தைகளும், அவர்களின் பெற்றோர்களும் வேலைக்குச் சேரும்போது முதலாளியிடமிருந்து முன் பணம் பெறுவதால் இவர்கள் அடிமைகள் போல் வேலை செய்யும் நிலை உள்ளது.

இந்த விசைத்தறித் தொழிலாளர்கள் கடனிலேயே பிறந்து, கடனிலேயே வாழ்ந்து, கடனிலேயே இறக்கிறார்கள். இங்குள்ள விசைத் தறித் தொழிலாளர்கள் தங்கள் வறுமையைச் சமாளிக்க தங்களுடைய 'கிட்னி'யையே விற்ற கதை ஏராளம். ஆனால் அதைவிடக் கொடுமை பல்லாயிரக் கணக்கான குழந்தைகளின் குழந்தைப் பருவம் நசுக்கப்படுவதுதான்.

படிப்பகம்

www.padippakam.com

பத்தியில் பல்லாயிரக்கணக்கான பெண் குழந்தைகள் வேலை செய்து கொண்டிருந்தனர். அமெரிக்காவின் நிர்பந்தம் காரணாக அவர்கள் நிறுத்தப்பட்டபோது அவர்களில் பெரும்பாலானோர் விபச்சாரத்திற்குத் தள்ளப்பட்டிருப்பதாக ஒரு அறிக்கை கூறுகிறது!

ஆனால் இதுபோன்ற வல்லரசு நிர்பந்தங்களினால் ஏற்பட்ட ஒரு லாபம் இந்திய அரசாங்கமும் அதனுடைய நீண்டகால தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் கி.பி. 2000 ஆண்டுக்குள் குழந்தை உழைப்பை ஒழிப்போம் என அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

உடல் நலத்திற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய தொழில்களிலிருந்து குழந்தை உழைப்பை ஒழிப்பதற்காக ரூ. 850 கோடி செலவில் தேசிய அளவிலான திட்டம் ஒன்றை மத்தியத் தொழிலாளத் துறை அறிவித்திருக்கிறது. தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களை முக்கிய இலக்காக அறிவித்திருக்கிறது. குழந்தை உழைப்பை ஒழிப்பதற்கு அரசாங்கத்தின் திட்டம் 2,000 பிரத்யேகமான பள்ளிக்கூடங்களைத் திறப்பதாகும். இதில் கொஞ்சம், கொஞ்சமாக குழந்தைத் தொழிலாளர்களை சேர்க்க திட்டமிட்டுள்ளனர்.

இது ஒன்றும் புதியதல்ல. ஏற்கெனவே தமிழகத்தில் சிவகாசிப்பகுதி, உத்தரப்பிரதேசத்தில் கம்பளத் தொழில், கண்ணாடித்தொழில் நடக்கக்கூடிய பகுதிகள் ஆகியவற்றில் 1986 முதல் இதுபோன்ற பள்ளிக் கூடங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கையிலும் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றனர்.



குழந்தைத் தொழிலாளர்களுக்கான பிரத்யேகமான பள்ளிக்கூடம் என்ற கருத்துக்கோப்பே அடிப்படையில் தவறானது. இது படகில் ஓட்டை இருக்கும்போது, ஓட்டையை அடைக்காமல் தண்ணீரைத் தொடர்ந்து இறைத்துக் கொண்டிருப்பதற்கு ஒப்பானதாகும். குழந்தை உழைப்பை முழுமையாகத் தடை செய்யாமல் அதை ஒழிக்க முடியாது.

## குழந்தை உழைப்பை ஒழிப்பது சாத்தியமா?

குழந்தை உழைப்புக்கு முக்கியமான காரணம் என்னவென்று யாரைக் கேட்டாலும் வறுமை என்றுதான் கூறுவார்கள். ஆனால் உண்மை என்ன வெனில் குழந்தைகள் பெருவாரியாக உழைப்பில் ஈடுபடுத்தப்படும் வரை வறுமையை ஒழிக்க முடியாது. சிவகாசிப் பகுதியையே உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வோம். இங்கு தீப்பெட்டித் தொழில் சுமார் 70 ஆண்டு காலமாக நிலை பெற்றிருக்கிறது. இதில் மூன்று தலைமுறையாகக் குழந்தைகள் வேலை செய்து கொண்டிருக்கின்றனர்.

தீப்பெட்டித் தொழிலுக்குப் பிரத்யேகமான திறமை எதுவும் தேவையில்லை. அப்படியே தீப்பெட்டி உற்பத்தி செய்ய சில திறமையைப் பெற்றாலுங்கூட அதிகக் கூலிக்காக வேறெங்கும் வேலைக்குச் செல்ல முடியாது. ஏனெனில் தீப்பெட்டித் தொழில் முழுவதுமே இதே இடத்தில் குவிந்து கிடக்கிறது.

இரண்டாவதாக இத்தொழிலில் வேலை செய்யக்கூடிய குழந்தைகள் கல்வி அறிவோ வேறு பிரத்யேகமான தொழில் திறமையோ இல்லாத காரணத்தால் மறுபடியும், மறுபடியும் குறைவான கூலி கிடைக்கக்கூடிய "அன்ஸ்கில்டு" அல்லது "செமி ஸ்கில்டு" வேலைக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம். தீப்பெட்டித் தொழிலில் வேலை செய்யக்கூடிய பெண்கள் கூட இருபது வயதில் அவர்களுடைய அதிகபட்ச உற்பத்தித் திறனை எட்டிவிடுகின்றனர். அதற்கு மேல் அதிகம் கூலி பெற வாய்ப்பில்லை. இந்நிலையில் இவர்களுக்குத் திருமணமாகி குழந்தைகள் பிறக்கும்போது குடும்ப வறுமை காரணமாக மறுபடியும் அவர்களுடைய குழந்தைகளை வேலைக்கு அனுப்பும் சூழ்நிலை ஏற்படுகிறது. இது ஒரு விஷச் சூழல்.

இன்னொரு முக்கியமான அம்சம் என்னவென்றால் குழந்தைகள் அதிகமாக வேலை செய்யக்கூடிய பகுதிகளிலும், தொழில்களிலும் குழந்தை உழைப்பின் மலிவுத் தன்மை காரணமாக அங்கு பொதுவான கூலி அளவே மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே குழந்தைகள் அதிகமாக வேலை செய்யச் செய்ய பெரியவர்களின் கூலி நிலைமையும் மிகவும் மோசமாகத் தான் இருக்கும். இதனால் வறுமை என்றுமே தொடர்ந்து கொண்டிருக்கும். எனவே குழந்தை உழைப்பை முற்றிலுமாக அகற்றாமல் வறுமையை ஒழிக்க முடியாது.

குழந்தைத் தொழிலாளர்கள் பிரச்சினை என்பது இந்தச் சமூகத்திற்கே ஓர் அவமானம். அதுவும் குழந்தைகள் பிணைத் தொழிலாளர்களாகவும் பெருவாரியான தொழில்களில் வேலை செய்வது நாம் அனைவரும் வெட்கப்பட வேண்டிய விஷயம். குழந்தைகளிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கும் அவர்களது குழந்தை பருவத்தை அவர்களுக்குத் திருப்பி அளிப்பது இந்த சமூகத்தின் கடமை. ஏனெனில் நாளைய உலகத்துக்குச் சொந்தக்காரர்கள் இன்றைய குழந்தைகள்தான்.' ▲

## உடல் நல கேடுகள்

### பீடித்தொழில்

- ★ வயது ஆக ஆக கண்பார்வை மங்குவது;
- ★ ஒரே இடத்தில் மணிக்கணக்காக உட்கார்ந்து வேலை செய்வதால் முதுகு வலி, கால் வலி, மூல நோய் மற்றும் முடக்குவாத நோய்கள் வருகின்றன.
- ★ புகையிலைக் காற்றை தொடர்ந்து சுவாசிப்பதால் காச நோய், ஆஸ்துமா, தொடர்ந்து சளி இருமல், மற்றும் ஒவ்வாமை.

### தோல் பதனிடும் தொழில்:

- ★ தோல்களை பதனிடுவதற்காக, பத்தடிக்கு பத்தடி ஆழமுள்ள, சுண்ணாம்பும், உப்பும் நிரப்பிய குழிகளில் உள்ளிறங்கி குழந்தைகள் வேலை செய்ய வேண்டும். பெரிய ட்ரம்களில் குரோம் சல்பேட், அமோனியம் குளோரைடு, சோடியம் சல்பேட் ஆகிய இராசயனக்கலவை ஊற்றப்பட்டிருக்கும்.
- ★ தோல் பட்டறைகளில் வேலை செய்யும் குழந்தைகளுக்கு பலவிதமான சரும நோய்கள், கைப்புண்கள், இரத்த சோகை, அல்சர், காச நோய் போன்றவை ஏற்படுகின்றன.

### பின்னலாடை உற்பத்தி

- ★ பருத்தி துகள்கள், துணுக்குகள் தொடர்ந்து சுவாசிக்கப்படுவதால் நுரையீரல் பாதிக்கப்பட்டு காச நோய் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. திருப்பூரில் உள்ள அரசு மருத்துவமனையில் தினந்தோறும் 15 புதிய காச நோயாளிகள் அனுமதிக்கப்படுவதாக அங்குள்ள மருத்துவர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com



## அன்னிய மூலதனத்தின் தாக்குதலால் இந்திய முதலாளிகள் பின்னுக்குத் தள்ளப்பட்டனர்

# இந்தியா திவால் ஆகிறதா?

வெ.பா.ஆத்ரேயா

தலைவர், பொருளியல் துறை, பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

நமது நாடு 1947-ல் விடுதலை பெற்றபொழுது நாட்டில் ஏகாதிபத்திய எதிர்ப்பு அலை மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. மேலை நாடுகளின் உலகம் தழுவிய காலனி ஆதிக்கத்தை எதிர்த்து ஜவஹர்லால் நேரு உள்ளிட்ட தேசியத் தலைவர்கள் குரல் கொடுத்த நேரம் அது. இந்திய நாட்டுக்குள் உழைப்பாளி மக்களின் போராட்டங்களும், நிலப்பிரபுக்களுக்கு எதிரான விவசாயிகளின், விவசாயத் தொழிலாளர்களின் போராட்டங்களும் வலுவாக எழும்பிய நேரம். சர்வதேச அரங்கில் சோவியத் யூனியனின் மகத்தான திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியும், ஃபாசிசத்தை வீழ்த்தியதில் அதன் மிகப் பெரிய பங்கும் சோஷலிஸத்தின் மீது மிகுந்த மரியாதையை உருவாக்கியிருந்தன.

இப்பின்னணியில் சுதந்திர இந்தியாவின் அரசும், இந்திய தொழிலதிபர்களும், ஒரு நவீன இந்தியாவை உருவாக்க அரசு பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்பதை ஏற்றனர். டாட்டா -பிர்லா வைத்த பம்பாய் திட்டமும் நேரு அரசின் பொருளாதாரத் திட்டமும் இதை ஏற்றன. ஐந்தாண்டுத் திட்டங்களும், வலுவான பொதுத்துறையும், அன்னிய மூலதனங்களின் மீதான பலவகையான கட்டுப்பாடுகளும், இந்தியத் தொழில்களுக்குச் சாதகமான ஏற்றுமதி -இறக்குமதிக் கொள்கைகளும் அங்கீகரிக்கப்பட்ட தேசியக் கொள்கைகளாக இருந்தன. பொதுத்துறையில் செய்யப்பட்ட முதலீடுகள் -எஃகு மின்சாரம், போக்குவரத்து, தகவல் தொடர்பு, பல நோக்குப் பாசனத் திட்டங்கள் இத்யாதி -வேளாண் மற்றும் தொழில் வளர்ச்சியை வேகப்படுத்தின. காலனி ஆட்சியில் இருந்த தேக்கநிலை மாறி, சுதந்திர இந்தியாவின் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் (1950-66) நாடு குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியைக் கண்டது. ஆனால் இந்த வளர்ச்சி விரைவிலேயே அதன் வர்த்தகத்தன்மை காரணமாக, நெருக்கடிக்கு உள்ளாகியது.

பொதுத்துறையில் செய்யப்பட்ட மிகப் பெரிய முதலீடுகள், மேலும் அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்குப் பதிலாக இந்தியாவிலேயே மாற்று உற்பத்தி (Import Substitution) ஆகியவை இந்தியத் தொழில்களுக்கு வாய்ப்பளித்தன. இவற்றின் விளைவாக ஓரளவு உள்நாட்டுச் சந்தை பெருகியது. வளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் நிலப்பிரபுக்களின் ஆதிக்கம் கிராமங்களில் தொடர்ந்த நிலையில், பெரும் பகுதி நிலங்கள் ஒருசில குடும்பங்கள் கையிலேயே நீடித்த நிலையில், விவசாய உற்பத்தியைப் பெருக்குவது கடினமாகியது. பெரும் பகுதி மக்களின் ஏழ்மை தொடர்கையில், சந்தையை விஸ்தரிக்கவும், வளர்ச்சியைச் சாதிக்கவும் அரசு கூடுதல் முதலீடு செய்வது தேவையாக இருந்தது. ஆனால் கிராம, நகர்ப்புற செல்வந்தர்கள், நாட்டு வளர்ச்சியில் பெரும் பயனடைந்த தொழிலதிபர்கள் பணக்

படிப்பகம்

www.padippakam.com

கார விவசாயிகள் ஆகியோரிடமிருந்து வரி வசூல் செய்து முதலீடு செய்ய அரசு தயாராக இல்லை. அரசின் வரவு -செலவு நெருக்கடி தவிர்க்க முடியாததாகியது. நில ஏக போகத்தால் வேளாண் உற்பத்தியில் ஏற்பட்ட நெருக்கடியில் உணவு தானிய பற்றாக்குறை முற்றியது. ஏற்றுமதி தேக்கமாக இருந்த நிலையில் அன்னியச் செலாவணி நெருக்கடியும் தீவிரமடைந்தது.

உணவு தானியம், அன்னியச் செலாவணி, அரசின் நிதி ஆகிய மூன்றிலும் நெருக்கடி முற்றிய நிலையில் 1966-ல் பிரதமர் பொறுப்பேற்ற இந்திரா காந்தி அம்மையார் ரூபாயின் நாணய மதிப்பைக் குறைத்தார். ஐந்தாண்டுத்திட்ட முயற்சியை தற்காலிகமாக நிறுத்தினார். உணவு தானிய நெருக்கடியைச் சந்திக்க 'பசுமைப்புரட்சி' என்ற பெயரில் முதலாளித்துவ உறவுகளை ஊக்குவித்தார். 1966 முதல் 1969 வரை ஐந்தாண்டுத் திட்டங்களை அரசு நிறுத்தி வைத்தது. இதற்கிடையில் 1967-ல் நடைபெற்ற தேர்தலில் ஒன்பது மாநிலங்களில் காங்கிரஸ் தோல்வியடைந்தது. பின்னர் 1969ல் இரண்டாகப் பிளந்தது. மக்கள் ஆதரவைப் பெறுவதற்காக, தேர்தல் தோல்வியின் பின்னணியில், இந்திரா காந்தி "வறுமையே வெளியேறு" போன்ற சில கோஷங்கள் முன்வைத்தார். வங்கிகளை நாட்டுடமையாக்கியது போன்ற சில நடவடிக்கைகளையும் எடுத்தார். ஆனால் பல சாகசங்கள் செய்த போதிலும், அவரது முதல் சுற்று ஆட்சிக்காலத்தில் (1966-1977) இந்தியப் பொருளாதாரத்தில் முதல் மூன்று திட்ட கால வளர்ச்சி வேகத்தை மீண்டும் கொண்டுவர முடியவில்லை. 1966 முதல் 1980 இந்திரா காந்தி மீண்டும் ஆட்சிக்கு வந்த பதினான்கு ஆண்டுகளில் தொழில் துறையின் வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு 4% ஆகக் குறைந்தது. "பசுமைப்புரட்சி" மூலம் வேளாண் துறையில் முதலாளித்துவம் சில பகுதிகளில் சற்று வேகமாக வளர்ந்து வேளாண் உற்பத்தி ஓரளவிற்கு அதிகரித்த போதிலும், நில ஏகபோகமும் மூலதன ஆதரவுக் கொள்கைகளும் தொடரும் பின்னணியில் வளர்ச்சியில் ஒரு பாய்ச்சலை ஏற்படுத்த முடியவில்லை.

அதேசமயம், உலகப் பொருளாதார வளர்ச்சிப் போக்குகளும் 1970களில் இந்தியாவை பாதித்தன. 1973 அக்டோபர் -நவம்பரில் ஏற்பட்ட பெட்ரோலியம் கச்சா எண்ணெயின் விலையை பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பான 'ஒபெக்' நான்கு மடங்காக்கியது. மீண்டும் 1978ல் கிட்டத்தட்ட இரண்டு மடங்காக உயர்த்தியது போன்ற நிகழ்வுகள் நமது அந்நியச் செலாவணிப் பிரச்சினையைத் தீவிரப்படுத்தின. 1970களில் அரசு முதலீடு வளர்ச்சி குறைந்ததன் விளைவாக மின்சாரம் பாசனம், போக்குவரத்து, தகவல் தொடர்பு, எஃகு போன்ற பல அடிப்படைத் துறைகளில் உற்பத்தி வளர்ச்சி பாதிக்கப்பட்டது. திட்டமிடுதலில் சரிவும் தொடர்ந்தது! 1966 முதல் 1969 வரை ஐந்தாண்டுத் திட்டமே செயல்படவில்லை என்பதைப் பார்த்தோம். 1969-74க்கான நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 1970ல் தான் அறிமுகமானது. 1977ல் 'இடைக்கால மதிப்பீட்டில்' (Mid Term Assessment) திட்டத்தின்

## வரவு செலவு நெருக்கடி

இந்திய அரசின் வரவு -செலவு நெருக்கடி என்பது முற்றிலும் புதிய விஷயமல்ல. வளர்ச்சிக்கான முதலீடு செய்திட வளங்களைப் பெறுவதற்கு செல்வந்தர்கள் மீது வரி போடத் தயங்குவதுதான் இதற்கு அடிப்படை காரணம்.

இதற்கு ராவ் அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

(1). அரசின் செலவுகளைக் குறைக்க அத்யாவசியப் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலை / கட்டணங்களை மீண்டும் மீண்டும் அரசு உயர்த்தியுள்ளது. உணவு உர மான்யங்கள் வெட்டப்பட்டுள்ளன. இன்று ரேஷன் கடையில் தானிய விலைக்கும் வெளிச் சந்தை விலைக்கும் உள்ள இடைவெளி மிகவும் குறைந்துள்ளது. பொது விநியோக அமைப்பின் அளவும், வீச்சும் சுருக்கப்பட்டுள்ளன. பஸ், ரயில், மின்சாரம் இத்யாதிக் கட்டணங்கள் பலமுறை உயர்த்தப்பட்டுள்ளன. உரவிலை உயர்வு சிறு விவசாயிகளுக்கு வேளாண் தொழிலை எட்டாக்கனியாக்கியுள்ளது. கல்விக்கான கட்டணங்கள் கட்டுப்படியாகாத நிலை ஏற்பட்டுள்ளது. மருந்து விலையும் மருத்துவக் கட்டணங்களும் மத்தியதர மக்கள் கூட சமாளிக்க முடியாத அளவிற்கு உயர்ந்துள்ளன.

(2). அரசின் செலவு குறைப்பு என்ற பெயரில் அரசு நிறுவனங்களிலும் அரசாங்க அலுவலங்களிலும் பணிபுரிவோரின் ஊதியங்கள் வெட்டப்படாவிட்டா



லும் விலைவாசி உயர்வுக்கேற்றவாறு உயர்த்தப்படவில்லை. பணி நியமனத் தடை அமலில் உள்ளது. ஆட்குறைப்பு பொதுத்துறையிலும் அரசு அலுவலகங்களிலும் நிகழ்ந்து வருகிறது. கல்வி, ஆரோக்கியம் மற்றும் பல சமூக நலத் துறைகளுக்கும் வறுமை எதிர்ப்புத் திட்டங்களுக்கும் பண ஒதுக்கீடு பெயரளவில் பாதுகாக்கப்பட்டாலும் விலைவாசி உயர்வினால் உண்மையளவில் குறைந்துள்ளன.

(3). மிக முக்கியமாக மான்யவெட்டு, செலவு குறைப்பு என்ற பெயரில் பொதுத்துறை நிறுவனங்களுக்கான பட்ஜெட் உதவி மிகவும் குறைக்கப்பட்டு பல நிறுவனங்கள் முடக்கப்பட்டுள்ளன. மறுபுறம் நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் தேவையான பலதுறை முதலீடுகள் செய்யப்படவில்லை. இதன் காரணமாக கட்டமைப்பு -மின்சாரம், தகவல் தொடர்பு, போக்குவரத்து (Infrastructure) சீரழிந்து வருகிறது. இது எதிர்கால வளர்ச்சியைக் கடுமையாகப் பாதிக்கும். நஷ்டத்தில் ஓடுவதாக கணக்கு காட்டி பல பொதுத்துறை ஆலைகள் மூடப்பட்டுள்ளன.

(4). அரசின் வரவுகளை உயர்த்த பெரு முதலாளிகள் கிராமப்புறச் செல்வந்தர்கள் மற்றும் அன்னிய ஏகபோகங்கள் மீது வரிகளை உயர்த்தி கறாராக வசூல் செய்ய தயாராக இல்லை. அதற்குப் பதிலாக பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பதையே வரவு -செலவு இடைவெளியைச் சந்திக்க பிரதான வழி என்று அரசு கூறுகிறது. பொதுத்துறையைப் பொருத்தவரையில் நஷ்டத்தில் ஓடினால் மூடிவிடு. லாபத்தில் ஓடினால் விற்றுவிடு என்பதே அரசின் இருவரிக் கொள்கையாக உள்ளது. பொதுத்துறை பங்குகளை அடிமாட்டு விலைக்கு அரசு விற்றுள்ளது என்பதும் இதில் பல்லாயிரம் கோடி ரூபாய்கள் சுருட்டப்பட்டுள்ளது என்பதும் பாராளுமன்ற குழுக்கள் மூலமாகவும் வேறு பல ஆய்வுகள் மூலமாகவும் இன்று அம்பலமாகியுள்ளது. இந்தப் பங்குகளை யார் வாங்குவது என்பதிலும் எந்தக் கட்டுப்பாடும் இல்லாத நிலையில் சில பன்னாட்டுக் கம்பெனிகள் கையிலும் இப்பங்குகள் செல்ல வாய்ப்புள்ளது. ஏற்கெனவே அப்படி சென்றுள்ளதாகவும் தெரிகிறது.

படிப்பகம்

www.padippakam.com

இலக்குகள் பலவும் கைவிடப்பட்டன. 1974-79க்கான ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஏற்பட்டது ஒரு சோகக்கதை. 20 அம்சத்திட்டமாக நெருக்கடி காலத்தில் சுருங்கி, பின்னர் சஞ்சய்காந்தியின் 5 அம்சத் திட்டமாக உருமாறி அதற்கும் பின்னர் ஜனதா ஆட்சியில் 1978லேயே முடிக்கப்பட்டது. ஜனதா ஆட்சியின் இரண்டரை ஆண்டுகளில் 'சுழலும்' திட்டம் (Rolling Plan) என்ற பெயரில் ஐந்தாண்டுத் திட்ட முறையே கேள்விக்குறியானது.

இத்தகைய சூழலில் 1980ல் இந்திரா காந்தி மீண்டும் பிரதமரானார். 1969ல் போட்டுக்கொண்ட 'முற்போக்குப் போர்வை' தேவையில்லை என்ற முடிவுடன் இந்திய நாட்டு வளர்ச்சியை அன்னியக்கடன், அயல்நாட்டு மூலதனம், ஏற்றுமதிச் சந்தை, உள்நாட்டில் பணக்காரர்களின் நுகர்வுச் சந்தை ஆகியவற்றைக் கொண்டு சாதிக்கும் முயற்சியில் இறங்கினார். அப்பொழுது தொடங்கியதுதான் தாராளமயமாக்கலுக்கான முதற்பெரும் முயற்சி என்றே கூறலாம். இதில் முதல்படியாக 1981-ல் பன்னாட்டு நிதி நிறுவனமாகிய IMF உடன் 5400 கோடி ரூபாய்க்கான மூன்றாண்டுக் கடன் ஒப்பந்தம், பாராளுமன்றத்திற்கோ, இந்திய மக்களுக்கோ அறிவிக்கப்படாமல், ஜனநாயக ஒப்புதல் பெறாமல், போடப்பட்டது. 'ஃபிரண்ட்லைன்' இதழின் தற்போதைய ஆசிரியரான என். ராம் அவர்கள் அன்று வாஷிங்டன் நகரில் இந்து பத்திரிகையின் சிறப்பு நிருபராக இருந்து இதை அம்பலப்படுத்தியது நினைவிருக்கலாம். கடும் நிபந்தனைகள் அடங்கிய அந்த ஐ.எம்.எஃப் கடன் இந்தியாவை மேலைநாட்டுப் பொருளாதார ஆதிக்கத்தில் சிக்க வைக்கும் முயற்சியின் முதல் வெற்றியாக அமைந்தது. ஐ.எம்.எஃப். கடன் பெறுவதற்காக, 'நாங்கள் மான்யங்களை வெட்டியுள்ளோம். அரசுத்துறை சரக்குகள் மற்றும் சேவைகளின் கட்டணங்களை உயர்த்தியுள்ளோம். தொழில் அமைதியை நிலைநிறுத்த அத்யாவசியப் பணிப்பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்துள்ளோம். (ESMA 1981) இன்னும் நீங்கள் விதிக்கும் எந்த நிபந்தனையையும் ஏற்கத் தயார்...' என்று பொருள்பட, இந்திய அரசு ஐ.எம்.எஃப்க்கு அச்சமயம் கடிதங்களை எழுதியதும் அம்பலமாகியது.



## நவீன இந்தியாவை உருவாக்க பொருளாதாரத்தில் அரசு முக்கிய பங்காற்றியது நேரு காலம்

இந்திரா காந்தி அவர்களின் மறைவிற்குப் பிறகு பிரதமர் பொறுப்பேற்ற ராஜீவ்காந்தி தாராளமயமாக்கலை தீவிரப்படுத்தினார். 'புதிய' பொருளாதாரக் கொள்கை, 'புதிய' கல்விக்கொள்கை, 'புதிய' ஜவுளிக் கொள்கை என்று பல 'புதிய' கொள்கைகளை அறிவித்த ராஜீவ் அரசு, விடுதலைப் போராட்டப் பாரம்பரியத்தை முழுமையாக நிராகரித்தது. சுயசார்பை வலியுறுத்துவதற்குப் பதிலாக அன்னிய மூலதனமும் அன்னிய தொழில்நுட்பமுமே நாட்டின் வறுமையை ஒழிக்க முடியும் என்ற

## 4 ஆண்டு விளைவுகள்

புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவுகள் கடந்த 4 ஆண்டுகளில் எவ்வாறு உள்ளன?

திட்டக் கமிஷன் அமைத்த நிபுணர் குழுவின் கணக்குப்படியும், தேசிய மாதிரி ஆய்வுக் கழகம் (National Sample Survey) செய்துள்ள ஆய்வுகள் படியும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் விகிதம் இந்தக் காலகட்டத்தில் உயர்ந்துள்ளது. 1989-90-ல் 33.7 ஆக இருந்தது. 1992-ல் 40.7 ஆக உயர்ந்தது. வேறு ஒரு மதிப்பீட்டின்படி 1993-ல் 48.07 ஆகியது. (EPW, ஜூன் 1995).

வேலையற்றோர் எண்ணிக்கை இந்த நான்கு ஆண்டுகளில் கணிசமாக உயர்ந்துள்ளது. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலை கிடைக்காமல் உள்ளவர்களின் எண்ணிக்கை மட்டுமே 1995 ஜனவரியில் 3 கோடியே 67லட்சத்திற்கும் அதிகமாக இருந்தது.

பணவீக்கம் 1991 ஜூன் இறுதியில் இருந்த நிலையிலிருந்து மன்மோகன் சிங் ரூபாய் மதிப்பைக் குறைத்ததன் பின்பு 1991-ல் ஆகஸ்ட் -செப்டம்பரில் 16-17% ஆக உயர்ந்தது. அரசின் தில்லுமுல்லுக் கணக்குப்படியே கடந்த 4 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 60 சதம் உயர்ந்துள்ளது.

ரேஷன் கடையில் அரிசி விலை



இரண்டு மடங்காகியுள்ளது. இவ்வளவுக்கும் பருவமழை பொய்க்கவில்லை. அரசு சாதனை விளம்பரப்படியே 3 கோடி டன் தானியக் கையிருப்பு உள்ளது. ஆனாலும் அரிசி, கோதுமை, பருப்பு இத்யாதி விலைகள் விஷம் போல் ஏறுகின்றன.

நாட்டின் ஒட்டுமொத்த வருமான வளர்ச்சி விகிதம் 1980களின் விகிதத்தைக்கூட எட்டவில்லை. 1991-92, 92-93, 93-94, 94-95 ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் முறையே 1.8, 4.0, 4.3% மற்றும் 5.3% என்ற அளவிலேதான் உள்ளது. இதற்கெதிராக 1981-90 கால கட்டத்தில் ஆண்டு வளர்ச்சி விகிதம் 5.5% ஆக இருந்தது.

அயல் வர்த்தகத்தைப் பொறுத்த வரையில் ஏற்றுமதி -இறக்குமதி இடைவெளி தொடர்வதோடு இந்த ஆண்டு (1994-95) சென்ற ஆண்டைவிட (1993-94) இரட்டிப்பாக உயர்ந்துள்ளது.

ஆக வறுமை வேலையின்மை, பணவீக்கம், வளர்ச்சி, ஏற்றுமதி -இறக்குமதி இடைவெளி ஆகியவற்றில் நான்காண்டு வேதனைதான் மிச்சம்.

படிப்பகம்


www.padippakam.com



# இந்திரா காந்தி 1980-ல் மீண்டும் பிரதமரானதும் 1969-ல் போட்டுக்கொண்ட 'முற்போக்குப் போர்வை' தேவையில்லை என்று முடிவு செய்தார்

நிலை எடுத்தது. அரசுக்கட்டுப்பாடுகள் பொருளாதார வளர்ச்சியை ஒழுங்குபடுத்தும் விதிமுறைகள் பலவற்றையும் விலக்கியது. ஏற்றுமதிச் சந்தை மூலமும் உள்நாட்டில் வசதி படைத்தவர்களுக்கான நவீன நுகர்வுச் சந்தை மூலமும் வளர்ச்சியை ஏற்படுத்த ராஜீவ் அரசு முனைந்தது. இதற்கென ஆகும் செலவுகளையும் செல்வந்தர்கள் மீது வரி சுமத்திப் பெறத் தயாராக இல்லாத அரசு, ஏராளமாக உள்நாட்டிலும், (குறிப்பாக) வெளிநாட்டிலும் கடன் வாங்கியது. முதன்முறையாக, இந்திய நாட்டின் அன்னியக் கடனில் பன்னாட்டு வர்த்தக வங்கிக் கடன்களின் பங்கு வேகமாக உயர்ந்தது. ராஜீவ் ஆட்சிக் காலத்தில் அன்னியக் கடன் அதி விரைவில் அதிகரித்தது. உள்நாட்டிலும் மாருதி கார், பலவகை இரு சக்கர மோட்டார் வண்டிகள், வீடியோ -தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், குளிர்காற்றுப் பெட்டிகள் போன்ற நுகர்பொருள் சந்தைகளை வளர்க்கும் வண்ணம் தொழில் நிறுவனங்களுக்கும் செல்வந்தர்களுக்கும் வரிச்சலுகைகள் அளித்து அவர்கள் வருமானத்தைப் பெருக்கியது ராஜீவ் அரசு. அரசின் வரி வருமானம் பாதிக்கப்பட்டு, உள்நாட்டில் அரசின் வரவு -செலவு பிரச்சினையைச் சமாளிக்கக் கூடுதலாகக் கடன் வாங்கும் கொள்கையை அரசு பின்பற்றியது. இந்திரா ராஜீவ் அரசுகளின் தாராளமயமாக்கல் கொள்கைகளின் விளைவாக 1980-90 காலகட்டத்தில், ஒருபுறம் சில (பிரதானமாக, ஆடம்பரச் சரக்கு) உற்பத்தித்துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டாலும், ஒட்டுமொத்தமாக நாட்டின் பொருளாதார நெருக்கடி மேலும் ஆழமடைந்தது. குறிப்பாக, அந்நியக் கடனும் உள்நாட்டில் அரசுக்கடனும் பன்மடங்கு அதிகரித்தன. 1980-ல் ஏற்றுமதி மூலம் இந்திய நாடு ஈட்டிய அந்நியச் செலாவணியில் 9 சதம் ஏற்கெனவே நமக்கிருந்த அன்னியக் கடனுக்கு அசலும் வட்டியுமாகச் செலவழிந்தது. 1989-ல் இது 27 சதமாக உயர்ந்தது. (விவரங்கள்: உலக வங்கி அறிக்கை) இதுபோ

## விலை உயர்வு ஏன்?




ராஜீவ் அரசின் நான்காண்டு ஆட்சியில் விலைவாசிகள் ஏறத்தாழ 60 சதம் உயர்ந்துள்ளன. காரணம் என்ன? விலைவாசி உயர்வு அரசின் கொள்கையாகவே உள்ளது என்பதுதான்.

1. 1991 ஜூன் மாதத்தில் ஒரு அமெரிக்க டாலருக்கு ரூபாய் 18 என்று இருந்த நிலை மாறி இன்று ஒரு டாலருக்கு ரூ. 35 என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் மதிப்பு பாதியாக குறைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக நமது இறக்குமதிகளின் விலைகள் இரட்டிப்பாகியுள்ளன. இந்த விலை உயர்வு நாட்டு உற்பத்தியின் பலதுறைகளுக்கும் பரவி கடும் விலை உயர்வை ஏற்படுத்தியுள்ளது.

2. தொடர்ந்து நிர்வாக ரீதியாக நிர்ணயிக்கப்படும் விலைகளை (எஃகு நிலக்கரி, பெட்ரோல், டீசல்,) உயர்த்தியும் பொதுவிநியோக அமைப்பின் மூலம் தரப்படும் சரக்குகளின் (அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய்...) வழங்கு விலைகளை உயர்த்தியும் பல்வேறு கட்டணங்களை (ரயில், பஸ் பயண மற்றும் சரக்குக் கட்டணங்கள்) உயர்த்தியும் அரசு விலை உயர்வை ஏற்படுத்துகிறது.

3. ஒரு பக்கம் உருப்படியான உற்பத்தி முதலீடுகளை வெட்டியும், உணவு உர மானியங்களை வெட்டியும் தனது செலவைக் குறைக்கும் அரசு மறுபுறம் செல்வந்தர்கள் மீது வரிபோட்டு வசூல் செய்து வரவை உயர்த்தத் தயாராக இல்லை. மாறாக அண்மை ஆண்டுகளில் சொத்து வரியை கிட்டத்தட்ட

படிப்பகம்

www.padippakam.com

# ராஜீவ் காந்தி அரசு விடுதலைப் போராட்டப் பாரம்பரியத்தை முற்றிலும் நிராகரித்தது



லவே அரசின் வருவாயில் கணிச மான பகுதி உள்நாட்டுக் கடனுக் கான அசலும் வட்டியுமாகச் செல வாகும் நிலை ஏற்பட்டது.

1990-ல் ஏற்பட்ட "இராக் நெருக் கடி" அந்நியச் செலாவணி நெருக்க டியை மேலும் தீவிரப்படுத்தியது.

1991-ல் பொறுப்பேற்ற ராவ் அரசு 1980-ல் துவங்கிய 1985லிருந்து தீவிரப்படுத்தப்பட்ட பத்தாண்டு கால தாராளமயமாக்க லின் விளைவாக ஏற்பட்ட கடும் கடன் நெருக்கடியைச் சந்திக்க மேலும் தாராளமயமாக்கல், மேலும் கடன் வாங்குவது என் பதே வழி என்ற நிலை எடுத்தது.

அரசின் பார்வையில் 1991 பொருளாதார நெருக்கடி என்பது இரண்டு அம்சங்களைக் கொண்ட தாக இருந்தது. ஒன்று அரசின் நிதி நெருக்கடி, அதிகரித்துவரும் வரவு -செலவு இடைவெளி. மற்றொன்று அன்னியச் செலாவணி நெருக்கடி, அதாவது அந்நியக்கடன் மீதான அசல் தவணை மற்றும் வட்டிச் செலவையும் இறக்குமதிச் செலவை யும் ஈடுகட்டும் அளவிற்கு ஏற்றும தியும் மற்ற அந்நியச் செலாவணி வரத்துகளும் இல்லாதது.

இதில் நாம் முதலில் கவனிக்க வேண்டியது, மக்களின் வறு மையோ, வேலையின்மையோ, பணவீக்கமோ அரசின் நெருக்க டிப் பட்டியலில் இடம்பெற வில்லை என்பது. இதற்குக் கார ணம் உண்டு. ஒரு முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் இம் மூன்றுமே ஓரளவிற்கு அவசியம் என்று கருதப்படுபவை. வேலை யின்மை கணிசமாக இருந்தால், வேலையில் இருக்கும் தொழிலாளி கள் அடங்கி நடப்பார்கள். அதிகம் பேரம் பேசமாட்டார்கள். வறுமை நாட்டில் இருந்தால்தான் அதற்கு அடுத்த நிலையில் வாழ்வோரை அச்சுறுத்துவதும், 'பேராசை கூடாது' என்று போதிப்பதும் சாத் தியமாகும். கிடைக்கும் வருமானத் தில் திருப்தி பெறச் செய்ய, நிலவும் வறுமை உதவும். அதேபோல், உழைப்பாளி மக்கள் ஓரளவிற்குச் சங்கங்கள் அமைத்துக் கூட்டுப் பேர உரிமைகள் பெற்று ஒரு சக்தி யாகத் திரண்டுள்ள நிலையில்,

ரத்தே செய்துவிட்டது அரசு. கம்பெனி கள் வரி மற்றும் தனிநபர் வருமான வரி விகிதங்களைக் கணிசமாகக் குறைத்துள்ளது. சுங்க மற்றும் கலால் வரிகளும் குறைக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் அரசின் வரவு - செலவு பற்றாக்குறையை அதிகப்படுத் தியுள்ளன.

மறுபுறம் சுங்க மற்றும் கலால் வரிகள் குறைக்கப்பட்டும் முதலாளிகள் விலை களைக் குறைத்து நுகர்வோருக்குப் பலனை அளிக்கவில்லை. இந்தியச் சந் தையில் நிலவும் ஏகபோக நிலைமைக ளைப் பயன்படுத்தி பன்னாட்டு மற்றும் இந்தியப் பெரு முதலாளிகள் விலை களை உயர்த்திக் கொள்ளை லாபம் அடித்து வருகின்றனர். அரசும், தாராள மயமாக்கல் கொள்கையின் பகுதியாக விலை கட்டுப்பாடுகளைத் தளர்த்தியுள் ளது.

4. இவ்வாறு அரசின் வரிக் கொள் கைகள் காரணமாக ஏற்பட்டுள்ள அதிக மான வரவு - செலவு பற்றாக்குறை யைச் சந்திக்க அரசு கடன் வாங்குகி றது. தொடர்ந்து இவ்வாறு அரசு வாங்கி கடன்களின் விளைவாக அரசின் ஆண்டு வருமானத்தில் கணிசமானப குதி கடந்த கால கடனுக்கு வட்டியாக மட்டுமே செலவாகிறது. உதாரணமாக 1994-95 பட்ஜெட் மதிப்பீட்டின்படி மத் திய அரசின் வரி வருமானம் 62,742 கோடி. ஆனால் வட்டியாக மட்டும் மத் திய அரசு செலவு செய்வது ரூ. 46,000 கோடி.

அதாவது வாங்கும் வரியில் முக்கால் வாசி வரி கட்ட வேண்டிய செல்வந்தர் களுக்கு வட்டிப் பணமாக வழங்கப்படு கிறது. இவ்வாறு அரசின் பணம் (மக்க ளின் பணம்) விரயமாவதால் வளர்ச் சிக்கு ஒதுக்கீடு மறுக்கப்படுவது மட்டு மில்லாமல் அரசின் குறைந்தபட்ச செல வுகளை சந்திப்பதற்குக்கூட அரசு நோட்டு அடிக்கும் ஏற்பாடு நிலவுகிறது. இதன் விளைவாக அதிகரிக்கும் பணப் புழக்கம் விலைவாசி உயர்வுக்கு வழி வகுக்கிறது.

5. அன்னியக் கடன் மற்றும் இந்திய பங்குச் சந்தையில் விளையாட வரும் அன்னிய நிதி மூலதன வரவு போன்ற வற்றின் விளைவாக இந்தியாவிற்குள் டாலர் வரத்து அதிகரித்துள்ளதை நாம் ஏற்கெனவே குறிப்பிட்டோம். இப்படி நாணயச் சந்தையில் டாலர் வரத்து அதிகரிப்பதால் ரூபாய்க்கு எதிராக டாலர் மதிப்பு குறையும் வாய்ப்பு உண்டு.

அவ்வாறு ஏற்பட்டால் இந்தியா ஏற் றுமதி செய்யும் சரக்குகளின் டாலர் விலை உயர்ந்துவிடும். இது ஏற்றும தியை பாதிக்கும் என்று கருதி ரிசர்வ் வங்கி நாணயச் சந்தையில் புகுந்து ரூபாய்களைக் கொட்டி வருகின்ற டாலர்களையெல்லாம் கடந்த மூன்று ஆண்டுகளாக அண்மைக்காலம் வரை வாங்கி வந்துள்ளது. இதன் விளை வாக ரூபாய் பணப்புழக்கம் அதிக ரித்து அதுவும் பணவீக்கத்தை அதிகப் படுத்தியுள்ளது. ஆனால் இதை மறைத்து, 'அன்னியச் செலாவணி குவிப்பை ஒரு சாதனையாக மட்டுமே அரசு அறிவிக்கிறது! இதில் இன்னும் வேதனை என்னவென்றால் ரிசர்வ் வங்கியிடம் குவிந்துள்ள டாலர்கள் நமக்கு வட்டி வருமானம் ஈட்டித் தர வில்லை. ஆனால் டாலரை ரூபாயாக மாற்றியுள்ள அன்னிய நிதி முதலீட்டா ளர்கள் இந்தியப் பங்குச் சந்தையில் கொள்ளை லாபத்தை சுருட்டிக் கொண்டிருக்கின்றனர். எதிர்காலத்தில் பிற நாடுகளில் பங்கு சந்தையோ பணச் சந்தையோ கூடுதல்லாபம் தரும்பொழுது ரூபாயை மீண்டும் டாலராக்கி இந்தப் பறவைகள் பறந்து விடும்.

படிப்பகம்

www.padippakam.com

பணக்கூலியை வெட்டுவது என்பது சாத்தியமல்ல. ஆகவே சம்பளமாகவோ கூலியாகவோ வருமானம் பெறும் உழைப்பாளி மக்கள், ஓய்வு ஊதியம் உள்ளிட்ட வேறு பல வகையிலான நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறுவோர் ஆகியோர்களது உண்மை வருமானத்தைக் கட்டுப்படுத்தி லாபத்தை அதிகரிக்க பணவீக்கம் -தொடரும் விலைவாசி உயர்வு -அவசியமாகிறது. இப்பணவீக்கம் அமைப்பு ரீதியாகத் திரட்டப்படாத உழைப்பாளிகளை இன்னும் கடுமையாகத் தாக்குகிறது. இதையெல்லாம் சொல்லும் பொழுது இன்னொன்றையும் கூற வேண்டும். வறுமை, வேலையின்மை, பணவீக்கம் ஆகியவை 'அளவுக்கு' மீறிப்போனாலும் ஆட்சியாளர்களுக்கு ஆபத்து. அது பொருளாதாரச் சீர்குலைவுக்கும் கடும் அரசியல் எதிர்விளைவுகளுக்கும் இட்டுச் செல்லும். ஆனால் ஒரு எல்லைக்கு உட்பட்டு இவை மூன்றுமே ஒரு முதலாளித்துவ அமைப்புக்குத் தேவை.

அந்நியச் செலாவணி மற்றும் அரசு வரவு -செலவு பற்றாக்குறை ஆகிய பொருளாதார நெருக்கடியின் இரு முக்கிய அம்சங்களைச் சந்திக்க ராவ் அரசு மேற்கொண்ட வழிமுறைதான் புதிய பொருளாதாரக் கொள்கை.

முதல் வேலையாக ஆட்சிக்கு வந்தவுடன் ஒரு மிகப் பெரிய தொகையைக் கடன் வாங்குவதற்காக அரசு ஐ.எம்.எஃப்ஐ அணுகியது. இந்தக் கடனைப் பெறுவதற்காக உலக வங்கியும் ஐ.எம்.எஃப்பும் முன்வைத்த, இந்த இரு அமைப்புகளும் மூன்றாம் உலக நாடுகள் பலவற்றிலும் நிர்ப்பந்திக்கின்ற நிபந்தனைகளை முன்கூட்டியே எதிர்நோக்கி மன்மோகன் - நரசிம்மராவ் செயல்பட்டனர். நிதி அமைச்சர் பொறுப்பு ஏற்றதுமே ரூபாய் மதிப்பை இரண்டு தவணைகளில் (கிட்டத்தட்ட உலக வங்கி தனது 1990 அக்டோபர் அறிக்கையில் கேட்பது போலவே) 22 சதம் குறைத்தார் மன்மோகன் சிங். ரூ. 31-32க்கு ஒரு டாலர் என்ற அளவுக்கு அரசு குறைத்தது. ரூபாய் மதிப்பைக் குறைத்ததற்குக் காரணமாகச் சொல்லப்பட்டது அதனால் இந்திய சரக்குகள் வெளிநாட்டில் மலிவாகும். ஆகவே ஏற்றுமதி கூடும் என்று. ஆனால் உண்மையில் நிகழ்ந்தது கடும் பணவீக்கமே.

அந்நியச் செலாவணி சிக்கலைச் சந்திக்க ஏற்றுமதி ஊக்குவிப்புடன், நேரடியாக அன்னியச் செலாவணியை இந்தியாவிற்குள் கொண்டு வர அயல்நாட்டு மூலதனங்களுக்கு ஏராளமான சலுகைகளை அரசு அறிவித்தது. ஏற்கெனவே நடப்பில் இருந்த அன்னியச் செலாவணி ஒழுங்குபடுத்தும் சட்டத்தைத் (FERA - ஃபெரா) தளர்த்தியது. ஒரு கம்பெனியில் அன்னிய மூலதனங்களின் பங்கு 50 சதத்துக்கு மேற்பட்டாலும் அதை இந்திய கம்பெனிக்

## மாற்று வழி உண்டா?

நாம் முன்வைக்கும் மாற்றுக் கொள்கைகள் வருமாறு:

அன்னியக் கடன் சுமையைக் குறைக்க ஏற்றுமதி மதிப்பை அதிகப்படுத்துவதோடு, இறக்குமதி கட்டுப்பாடுகளையும் வலுப்படுத்த வேண்டும். அனாவசிய இறக்குமதியைக் குறைக்க முடியும்; குறைக்க வேண்டும். தனிநபர்களுக்கான சொகுசுகார்களையும் பெட்ரோல் குடிக்கும் இதர வாகனங்களையும் ஊக்குவிப்பதற்குப் பதில் பொது மக்கள் போக்குவரத்தை ஊக்குவிப்பது. மேலும் பல வகைகளில் பெட்ரோலியம் உள்ளிட்ட எரிசக்திப் பொருட்களை சிக்கனமாக உபயோகிப்பது. நமது எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியைப் பெருக்குவது போன்ற பல நடவடிக்கைகள் இறக்குமதியைக் குறைக்க உதவும். உள்நாட்டுத் தொழில் நுணுக்கப் பயன்பாட்டை ஊக்குவித்து அன்னியத் தொழில் நுணுக்கத்தை மிகவும் கவனமாகத் தேர்வு செய்து அத்யாவசியமான இடங்களில் மட்டும் பயன்படுத்துவது. அவ்வாறு இறக்குமதியாகும் தொழில் நுணுக்கத்தையும் திட்டமிட்டு இந்தியமயமாக்கி மேலும் மேம்படுத்துவது போன்ற தொழில் நுணுக்கத் தேர்வு தொடர்பான கொள்கைகள் மிக அவசியம். இவ்வாறு சரக்கு மற்றும் தொழில்நுணுக்க இறக்குமதியை கட்டுப்படுத்துவது எதிர்காலத்தில் அன்னியக் கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்தங்களைத் தவிர்க்க உதவும்.

நம்மிடம் நிதி ஆதாரம் இல்லை என்றுகூறி அன்னிய மூலதனத்தை வரை முறையின்றி நாட்டுக்குள் அனுமதிப்பதும், பொதுத்துறை மற்றும் இதர இந்திய நிறுவனங்களின் பங்குகளில் கணிசமான பகுதியை அன்னிய மூலதனங்களுக்கு விற்பதும், எதிர்காலத்தில் அன்னிய மூலதனத்தின் இந்திய லாபங்கள் வெளியே எடுத்துக்கொண்டு செல்லப்படும் பொழுது நமக்கு கடும் அந்நியச் செலாவணி பிரச்சினையை ஏற்படுத்தும். மேலும் தகவல் -தொடர்பு, போக்குவரத்து, மின்சாரம், எரிசக்தி, நிதித்துறை போன்ற முக்கியமான துறைகளில் அன்னிய கம்பெனிகளுக்கு முக்கிய பங்கு அளிப்பது நாட்டின் இறையாண்மையையே ஆபத்துக்குள்ளாக்கும். ஆகவே, இன்றைய, விமர்சனமற்ற அன்னிய மூலதன வரவேற்புக் கொள்கை கைவிடப்பட வேண்டும். இதற்கு மாறாக மிகவும் அவசியமான தேவைகளையொட்டி கவனமாகத் தேர்வு செய்து, நமக்கு பாதிப்பற்ற நிபந்தனைகளுடன் மட்டுமே அன்னிய மூல தனம் பயன்படுத்தப்பட வேண்டும்.

உள்நாட்டுக் கடன் சுமைக்குக் காரணம் அரசின் வரவு -செலவுக் கொள்கைகளே. இன்று செல்வந்தர்கள் மீதும் கம்பெனிகள் மீதும் மிகக் குறைவான அளவிலேயே வரி விதிக்கப்படுகிறது. அதிலும் ஒரு பகுதியே வசூலாகிறது. இது மாற வேண்டும். இந்தியாவில் மொத்த (தனிநபர், மற்றும் கம்பெனிகள் உள்ளிட்ட வருமானவரி) நாட்டு வருமானத்தில் மிகக் குறைவான விகிதமாகவே உள்ளது. முதலாளிகளிடமிருந்தும் வேளாண்துறை செல்வந்தர்களிடமிருந்தும் கூடுதலாக வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படவும் வேண்டும். இதன்மூலம் அரசின் வருமானம் அதிகரித்து. கூடுதலாக வளர்ச்சிக்கான முதலீடுகளைச் செய்ய இயலும். வரவு -செலவு இடைவெளியைக் குறைக்க இத்தகைய நடவடிக்கை மிக அவசியம்.

பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்று அதை அரசின் வரவு என்று கணக்கு காட்டும் ஏற்பாடு மிகவும் தவறானது. இவ்வாறு ஒரு தனி மனிதன் செய்தால் சொத்தை அழித்து வாழ்பவன் என்று தான் பார்க்கப்படுவான். இதற்கு நேர்மாறாக, பொதுத்துறையின் நிர்வாக -மேலாண்மை முறையை ஜனநாயகப்படுத்தி, அதில் பணியாற்றும் விஞ்ஞானிகள், வல்லுநர்கள், தொழிலாளிகள் அனைவரின் பங்கேற்பையும் பெற்று பொதுத் துறையின் செயல்பாட்டை மேம்படுத்த முடியும். இவ்வாறு சீர்படுத்தி அவற்றின் மூலம் உபரிகளைப் பெற்று அதை வளர்ச்சிக்கும் உள்நாட்டுக் கடனைக் குறைப்பதற்கும் பயன்படுத்த வேண்டும்.

அரசின் அநாவசியச் செலவுகள் குறைக்கப்பட வேண்டும். அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும். வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடு தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் மூலமே பிரதானமாக செலவிடப்பட வேண்டும். மாநில அரசுகளும், அதில் கணிசமான பகுதியை தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மூலமே செலவிட வேண்டும். வலுவான மக்கள் அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செய்யப்படும் வளர்ச்சிப் பணிகளைக் கண் காணிப்பதன் மூலம் விரயச் செலவுகளைக் குறைக்க முடியும். வரவு-செலவு இடைவெளியையும் குறைக்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com

குச் சமமாக நடத்த அரசு வழி வகுத்தது. பல கூட்டுக்கம்பெனிகளில் அந்நிய மூலதனம் தனது பங்கைக் குறுக்கு வழிகளில் உயர்த்திக் கொண்டது. மூலதனம், சரக்கு மற்றும் தொழில் நுணுக்கங்கள் தொடர்பான இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. அன்னிய கம்பெனிகளுக்கு ரத்தினக்கம்பளம் விரிக்கப்பட்டது. இதுவரை பொதுத்துறைக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த பலதுறைகளில் -மின்சாரம் தொலை தொடர்பு விமானப் போக்குவரத்து பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் எரிவாயு இத்யாதி -தனியார் துறையை, குறிப்பாக அன்னிய மூலதனத்தை அரசு அனுமதித்தது மட்டுமின்றி அறைகூவி அழைத்தது. பல இந்திய முதலாளிகளே தங்களுக்கு சமமாகப் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்று கோரும் அளவிற்கு (உதாரணம்: 'பம்பாய் கோஷ்டி') அரசு அன்னிய மூலதனத்திற்கு ஆதரவு அளித்தது. எடுத்துக்காட்டாக தொலைதொடர்பு துறையில் இந்திய தனியார் மற்றும் பொதுத்துறை போட்டியிடக்கூட அனுமதிக்கப்படவில்லை. மேலும் அன்னிய மூலதனம் இந்தியாவிற்குள்ளே கொண்டு வரும் முதலீட்டை கொள்ளை லாபத்துடன் எந்தப் பிரச்சினையுமின்றி மீண்டும் வெளியே எடுத்துச் செல்லவும் அரசு வழிசெய்தது. கிட்டத்தட்ட எந்தவித அரசு கட்டுப்பாடுமின்றி ரூபாயை அன்னியச் செலாவணியாக மாற்றிக்கொள்ள வழி செய்யப்பட்டது. இந்திய பங்குச் சந்தைகளில் அன்னிய மூலதனம் கட்டுப்பாடின்றிச் சூதாட்டம் நடத்திக் கொள்ள அனுமதி தரப்பட்டது.

தாராளமயமாக்கல் மூலம் தாங்கள் அதிகப் பயனடைய முடியும் என்று எதிர்பார்த்த பல இந்திய முதலாளிகள் அன்னிய மூலதனத்தின் தாக்குதலில் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். டாட்டாவின் 'டாம்கோ' (Tata Oil Mill Co.,) வை பன்னாட்டுக் கம்பெனியான இந்துஸ்தான் லீவர் கபளீகரம் செய்தது. இதுபோலவே 'பார்லே' குளிர்பான முதலாளி சௌஹான் தனது கம்பெனியை 'கோகோ கோலா' என்ற பன்னாட்டு கம்பெனியிடம் ஒப்படைத்தார். 'காட்ரேஜ்' கம்பெனி, 'ப்ராக்டர் அண்ட் கேம்பிள்' (Proctor and Gamble) என்ற அமெரிக்க கம்பெனியிடம் அடிபணிந்தது. சவரப் பொருட்கள் தயாரிக்கும் மல்ஹோத்ரா என்ற இந்திய முதலாளியை கில்லட் (Gileette) என்ற பன்னாட்டுக்கம்பெனி பின்னுக்குத் தள்ளியது. இவைபோல இன்னும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

இன்று இன்னொரு போக்கும் வந்துள்ளது. இந்தியாவில் ஏற்கெனவே தங்களுக்கு உள்ள கூட்டுக் கம்பெனிகளைப் புறக்கணித்து விட்டு, பன்னாட்டுக் கம்பெனிகள் 100 சதமும் தங்கள் பங்கையே கொண்ட கிளை கம்பெனிகளை

இன்று அரசு ஒருபுறம் வரவு-செலவு பிரச்சினை, நிதி நெருக்கடி என்று சொல்லிக் கொண்டே மறுபுறம் நல்ல லாபம் ஈட்டுகின்ற பொதுத்துறை நிறுவனங்களையும் வாய்ப்புள்ள துறைகளையும் தனியாருக்கு, குறிப்பாக பன்னாட்டு கம்பெனிகளுக்கு ஒதுக்கிக் கொடுக்கிறது. உதாரணம், டெலிகாம், பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் எரிவாயு, மின்சாரம், ரயில்வே போன்றவை. இன்று பன்னாட்டுக் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. இது உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும். ஆக, அனாவசிய செலவு குறைப்பு, செல்வந்தர்கள், முதலாளிகள் மீது கூடுதல் வரி விதிப்பு, இறக்குமதி கட்டுப்பாடு, அன்னிய மூலதனச் செயல்பாடுகள் மீது கட்டுப்பாடுகளும் கண்காணிப்பும், பொதுத்துறை சீரமைப்பு, கண்மூடித்தனமான தனியார்மயமாக்கல் எதிர்ப்பு, உற்பத்தி நிர்வாகத்தை ஜனநாயகப்படுத்தி உழைப்போர் பங்கேற்பை உறுதிப்படுத்துதல், அதிகாரங்களைப் பரவலாக்கி உள்ளாட்சி அமைப்புகள் மூலம் திட்டங்களை அமுலாக்கல், ஆகியவை உடனடி தேவையான மாற்றுக் கொள்கையின் முக்கிய அம்சங்கள்.

ஆனால் நிரந்தரத் தீர்வு நிலக்குவியலையும் தொழில் ஏகபோகத்தையும் தகர்ப்பதைச் சார்ந்துதான் உள்ளது.



**இன்று வரை கிராம மக்களில் 75 சதவிகிதத்தினர் நிலம் இல்லாதவர்களாகவே உள்ளனர்**

இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான முட்டுக்கட்டையாக உள்ளது இங்கு நிலவும் நில உடமை உறவுகள்தான். பெரும்பகுதி மக்கள் ஏழையாக உள்ள நிலையில் உள்நாட்டுச் சந்தையை விரிவடையச் செய்து வளர்ச்சியை சாதிப்பது நடைமுறை சாத்தியமற்று உள்ளது. 90 கோடி இந்திய மக்களில் முக்கால்வாசி மக்கள் கிராமங்களில் வசிக்கின்றனர். இவர்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு நிலமே கிடையாது. நிலம் வைத்திருப்பவர்களை எடுத்துக் கொண்டால் 100 நில உடைமையாளர்களில் 70 பேருக்கு 1 ஹெக்டேருக்கும் (அதாவது 2.47 ஏக்கருக்கும்) குறைவாகத்தான் நிலம் உள்ளது. மொத்த சாகுபடி நிலத்தில் 20லிருந்து 40 சதத்துக்குள் தான் இவர்களிடம் உள்ளது. மறுபுறம் அதிக நிலம் உள்ள 5% நில உடைமையாளர்களிடம் 35 -40 சதம் நிலம் உள்ளது. நாட்டின் மொத்த சாகுபடி பரப்பான 40 கோடி ஏக்கரில் 1960களில் அமைக்கப்பட்ட பேராசிரியர் மஹலனோபிஸ் (Mahalanobis) குழு அறிக்கையின் படி 6.3 கோடி ஏக்கர் உச்சவரம்புக்கதிகமான 'உபரி' என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்று (1995 செப்டம்பர்) வரை 80 லட்சம் ஏக்கருக்கும் குறைவாகத்தான் உபரி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு கையகப்படுத்தி விநியோகித்துள்ள நிலபரப்பு இதைவிட மிகவும் குறைவு. ஆக, இன்றுவரை கிராம மக்களில் 75 சதத்தினர் நிலமற்றவர்களாகவோ அல்லது 2.5 ஏக்கருக்கும் குறைவான நிலம் உள்ளவர்களாகவோ தான் உள்ளனர். இந்த நிலையை மாற்றாமல் ஒரு விரிவான வளர்ச்சியை இந்தியா சாதிக்க முடியாது.

தொழில் துறையிலும் ஏகபோக ஆதிக்கம் நிலவுகிறது. இந்திய நாட்டின் தனியார் தொழில் சொத்தில் கணிசமான பகுதி நூறு மிகப் பெரிய கம்பெனிகள் கையில் உள்ளது. இதில் அன்னிய ஏகபோக கம்பெனிகளும் அடங்கும். நில ஏகபோகத்தைத் தகர்ப்பதும், தொழில் ஏகபோகத்தைக் கட்டுப்படுத்துவதும் நாட்டின் சீரிய, அனைவருக்கும் பயனளிக்கின்ற வளர்ச்சிக்குச் செய்யப்பட வேண்டிய அடிப்படை மாற்றங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# பட்டினி ஒரு சாதனையா?



மூன்று கோடி டன்னுக்கும் அதிகமாக தானியக் கையிருப்பு உள்ளது என்பதை அரசு 'சாதனை'யாகத் தம்பட்டம் அடித்துக் கொள்கிறது. இதில் நாம் முதலில் கூற வேண்டியது. தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாகப் பருவமழை பொய்க்காமல் இருப்பதால் வேளாண் உற்பத்தியும் குறிப்பாக தானிய உற்பத்தியும் உயர்ந்துள்ளன என்பது.

ராவ் - மன்மோகன் சிங் ஜோடியும் தங்களுக்கு "தண்ணீர் ராசி" இருப்பதாக வேண்டுமானால் கூறிக் கொள்ளலாம். ஆனால் பருவமழை பொய்க்காமலிருந்தது நிச்சயம் புதிய பொருளாதாரக் கொள்கையின் சாதனை அல்ல. அடுத்து நாம் கவனிக்க வேண்டியது. அரசு கையில் 3 கோடி டன்னுக்கும் மேலாக அதாவது நாட்டின் தானிய உற்பத்தியில் கிட்டத்தட்ட ஆறில் ஒரு பங்கு சேர்ந்துள்ளது என்றால் இந்திய மக்கள் அனைவரும் சுகமாக உண்டுகளித்தபின் மிஞ்சிய தானியம் அல்ல இக் கையிருப்பு என்பதே. ஒருபுறம் ரேஷன் கடைகளை மூடியும், பொது விநியோக அளவைக் குறைத்தும் மறுபுறம் உணவுமான்யத்தை வெட்டி தானியங்களின் விலையை உயர்த்தியும் ஏழை மக்களுக்கு தானியம் எட்டாக்கனியாக ஆக்கப்பட்டு வருவதே இக் கையிருப்பு அதிகரித்துள்ளதற்கு முக்கிய காரணம். நாட்டில் வறுமை அதிகரித்துள்ளது இதைத்தான் கோடிட்டுக் காட்டுகிறது

ராவ் அரசிடம் மக்கள் கேட்க வேண்டிய கேள்வி இதுதான்: 3கோடி டன்னுக்கும் அதிகமாகத் தானியக் கையிருப்பு உள்ள நிலையில் ஏன் நாடு முழுவதும் ஒரு பயனுள்ள வேலைக்கு உணவு திட்டத்தை அரசு அமுலாக்க முன்வரவில்லை? கிராமங்களிலும் நகரங்களிலும் உருவாக்கப்பட வேண்டிய வசதிகள் பள்ளிகள் மருத்துவமனைகள். நல்லசாலைகள் இத்யாதி ஏராளமாக நம் முன் தேவையாக உள்ளனவே!

ஏழை மக்களைப் பட்டினிபோட்டு தானியக் கையிருப்பை அதிகப்படுத்தியுள்ளது சாதனையா, வேதனையா என்பதுதான் கேள்வி!

(Branches / Fully Owned Subsidiaries) உருவாக்கி வருகின்றனர். இது இந்திய முதலாளிகளுக்கே அதிர்ச்சி அளித்துள்ளது. பல ஆண்டுகாலம் செயல்பட்டு கூட்டுக் கம்பெனிகள் உருவாக்கி வைத்துள்ள சந்தைகளை, இந்திய கூட்டு இல்லாமல் தாங்களே தட்டிக் கொண்டு போகும் முயற்சியாக இத்தகைய கம்பெனிகள் உருவாக்கப்படுகின்றன. உதாரணமாக பிரபலமாகிவிட்ட "சர்ஃப்", "ரின்", போன்ற பல நுகர்ப் பொருள்களை இன்று இந்திய பங்கீடும் கொண்ட இந்துஸ்தான் லீவர் விற்கிறது. அதனால் இந்திய பங்குதாரர்களுக்கும் லாபம் கிடைக்கிறது. இனி இந்த விற்பனை புதிதாகத் துவக்கப்பட்ட 100 சதம் அந்நியக் கம்பெனியின் மூலம் நடைபெற்றால், அந்நிய முதலாளி லீவர் முழு லாபத்தையும் எடுத்துக் கொள்ள முடியும். இதுவே அவர்கள் நோக்கமும் கூட.

தற்போது 20 பில்லியன் டாலர் (60,000 கோடி ரூபாய்) அன்னியச் செலாவணி கையிருப்பில் உள்ளது சாதனையாகக் கூறப்படுகிறது. இதில் பெரும் பகுதி அன்னியக் கடன் மற்றும் அன்னிய முதலீட்டாளர்களின் பங்குச் சந்தை முதலீடு. இதில் வெளிநாட்டு மூலதனச் சந்தைகளில் இந்திய நிறுவனங்கள் வாங்கி வந்துள்ள கடன் இந்திய அரசு ஐ.எம்.எப்., உலகவங்கி மற்றும் பிற பன்னாட்டு அமைப்புகள், நாடுகளிடமிருந்து வாங்கியுள்ள கடன் கையிருப்பு, இந்திய பங்குச் சந்தைகளில் சூதாடுவதற்காக அன்னிய நிறுவன (நிதி) முதலீட்டாளர்கள் (FII -Foreisgn Institutional Investors) கொண்டு வந்துள்ள தொகை ஆகியவை அடங்கும். இன்று வரவாக வந்துள்ள கடன் நாளை வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். மேலும் பன்னாட்டு வங்கிகளிடம் இந்திய அரசு நிறுவனங்களும் முதலாளிகளும் வாங்கியுள்ள கடன்கள் உயர்ந்த வட்டி விகிதம் கொண்டவை. அன்னிய நிறுவன முதலீட்டாளர்கள் இந்திய பங்கு சந்தைகளில் போட்டுள்ள பணத்தைப் பொறுத்தவரையில் இது "சூடான பணம்" (Hot money flows) உலகில் பிற நாணயச் சந்தைகளிலோ அல்லது பங்குச் சந்தைகளிலோ கூடுதல் வட்டி விகிதமோ லாப வாய்ப்போ இருந்தால் இவை உடனே முதலீட்டாளர்களால் அங்கு கொண்டு செல்லப்படும். இதற்கு வழி செய்யும் வகையில் இந்திய அரசும் ரூபாயை அன்னிய செலாவணியாக மாற்றி வெளிக்கொண்டு செல்ல (Convertibility) தாராளமாக அனுமதி அளித்துள்ளது.

உண்மையில் கடந்த நான்கு ஆண்டுகளில் இந்தியாவிற்கு உள்ளே வந்துள்ள அன்னிய மூலதனத்தில் மிகக் குறைவான பகுதிதான் (சுமார் 2 பில்லியன் டாலர்) உற்பத்தியில் தொழிலில் மூதலீடு செய்யப்பட்டுள்ளது. அத்தகைய முதலீடும் வேலை வாய்ப்புகளைப் பெருமளவிற்கு உருவாக்கும் தன்மையுடவை அல்ல.

அதுமட்டுமல்ல, இன்று கொண்டுவரும் முதலீட்டைப் போல் பல மடங்கு மதிப்பை எதிர்காலத்தில் லாபமாகப் பன்னாட்டுக் கம்பெனிகள் வெளியே கொண்டு செல்லும்.

இந்த நிலையில் இன்றுள்ள அன்னியச் செலாவணி கையிருப்பை ஒரு 'சாதனையாக' அரசு முன்வைப்பது மக்களை ஏமாற்றும் வேலையாகும். இக் கையிருப்பில் பெரும் பகுதி கடன்தொகை என்பதும், வந்துள்ள மூலதனத்தில் ஒரு சிறு பகுதியே தொழில் முதலீட்டுக்குச் செல்கிறது என்பதும் ஒருபுறம் இருக்க, மறுபுறம் இந்தியாவின் ஒட்டுமொத்த அன்னியக் கடன் நிலமை இந்த நான்கு ஆண்டுகளில் மேலும் மோசமடைந்துள்ளது குறிப்பிடப்பட வேண்டும். 1994-ம் ஆண்டு கணக்குப்படி அன்னியக் கடனுக்கு அசலும் வட்டியுமாக நமது நாடு கடும் உழைப்பில் உற்பத்தியாகி ஏற்றுமதி செய்து கிடைக்கின்ற ஏற்றுமதி மதிப்பில் 30 சதவீதத்தை இழக்கும் நிலை உள்ளது என்று உலக வங்கி கணக்கே சொல்கிறது. நமது மொத்த அன்னியக் கடன் நமது நாட்டு உற்பத்தி மதிப்பில் 40% ஐ எட்டும் நிலையில் உள்ளது.

ஏற்கெனவே உள்ள கடன் நெருக்கடியை இன்னும் தீவிரமாக்கி நாட்டையே ஏறத்தாழ திவாலாக்கும் நிலைக்கு கொண்டு போய்விட்டதுதான் புதிய பொருளாதாரக் கொள்கையின் 'சாதனை'! ■

படிப்பகம்

www.padippakam.com



## ஆரம்பக் கல்வி முதல் உயர்நிலைக் கல்வி வரை அனைத்தும் தமிழில் கற்பிக்கப்பட ஓர் ஐந்தாண்டுத் திட்டம்

# ஐந்தில் வளைக்கலாம்

*தமிழண்ணல்*

தன் பிள்ளையை ஐயாயிரம், ஏழாயிரம் கடன் வாங்கிக் கட்டி, நர்சரி பள்ளியில் சேர்ப்பவன், தமிழுக்குப் பகையாக அதைச் செய்யவில்லை. தன் பிள்ளை நாளைக்கு டாக்டராக வேண்டும், எஞ்சினியராக வேண்டும் என்பதே அவனது வேணவா. அதற்கு ஆங்கிலம் உதவும் என அவன் எண்ணுகின்றான். தமிழ் எதற்கும் பயன் படாதென்பதும் அவனறிந்ததே.

ஆங்கிலவழி மெட்ரிகுலேசன் பள்ளி நடத்துபவனும் தமிழுக்குப் பகையாக அதைச் செய்யவில்லை. ஓர் ஆங்கில வழி மெட்ரிகுலேசன் பள்ளி மூலம் பல இலட்சம் கொள்ளை அடிக்க முடிகிறது, அஃது ஓர் இலாபகரமான தொழிலாகி விட்டது என்பது உலகறிந்த உண்மை. மக்கள் அனைவரும் பெற்றோரனைவரும் எவ்வளவும் கொடுக்க ஆயத்தமாவது அவர்கட்கு விளங்குகிறது.

## இந்த நிலைமை ஏன்?

கலைஞர் கொணர்ந்த திட்டம் வெற்றி பெறாதது ஏன்? பி.ஏ. பாடத்தை தமிழில் தொடங்கும் போது, எம்.ஏ.யும், அதன் மேற்படிப்பும் ஆங்கிலமே. எனவே, மேலே மேலே போகவிரும்பும் இளையோர் உள்ளம், இடையில் மாட்டிக் கொள்ள மறுக்கிறது. வேலைவாய்ப்பிலும் மறைமுகமாகக் கூட முன்னுரிமை இல்லை. வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்தோமா? முன்னுரிமை தந்தோமா? நீதிமன்றம் போய்த் தடுத்தாலும் அவ்வப் பதவிக்கான, தமிழ்நாடு தேர்வாணையத் தேர்வுகள் தமிழிலேயே நடைபெறச் செய்தோமா? தமிழே ஆட்சி மொழி என்பதற்கும் தமிழ்நாடு தேர்வாணையத்தேர்வுகள் பலவும் ஆங்கிலத்தில் நடைபெறுவதற்கும் நேர் முரண் இருப்பதை இன்றளவும் சிந்தித்தோமா? எந்த ஓர் அரசுப் பணிக்கும் ஆளெடுக்கும் நேர் காணலில், அந்தந்தப் பதவியடிப்படையிலான சிறு தமிழ்வழி எழுத்துத் தேர்வும் உண்டென, மரபு வழியாகக் கடைபிடித்திருந்தாலே போதுமே?

எந்த அரசும் முழு மனத்தோடு கொள்கை வகுத்துச் செயற்படுத்தினால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை. இங்கு தமிழுக்குச் சார்பாக முழுமையான மனமாற்றம் இல்லை.

இந்தி மொழி ஓர் அலுவல் மொழி, தொடர்பு மொழி என்பதே (Official Language) அரசியல் சாசனம். தமிழ் உள்ளிட்ட பதினான்கு மொழிகள் இந்திய தேசிய மொழிகள் ஆனால் நடப்பதென்ன? இந்தி ஒன்றே இந்திய தேசிய மொழி என்ற போக்கையல்லவா காண்கிறோம். இங்கு தமிழுக்குச் சார்பாக மனம் மாறாத வரை உதட்டளவில் பேசிப் பயனில்லை.

'கல்விமொழி மாற்றம்' என்பது மேலே இருந்து கீழே வர வேண்டும். அல்லது அனைத்து நிலைகளிலும் ஒரே சமயத்தில் இந்த மாற்றம் ஏற்படவேண்டும். அதனைக் கீழேயிருந்து, மேலே கொண்டு செல்வது வெற்றி பெறாது. உலக உயர் கல்வியாளர்கள் பலர் இதை நன்கு எடுத்து மொழிந்துள்ளனர்.

முதலில், அடுத்த கல்வியாண்டு முதலே ஒரு பொறியியற் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, வேளாண் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆட்சியியற் கல்லூரி ஐந்து கல்லூரிகளைத் தமிழ் மொழி வழி கற்பிக்கும் கல்லூரிகளாக அரசு தொடங்கட்டும். நிலைமை படிப்படியாகச் சீர் படுவதை அப்போது காணலாம்.

www.padippakam.com

இவை தொழிற்கல்விகளாக இருப்பதால் இவை சுய வேலை வாய்ப்புக்கும் உரியவையாக இருப்பதால், இதன்வழி உயர் கல்வியைப் பெறலாமென வழியை திறந்துவிட்டால், மாணவர்கட்கும், பெற்றவர்கட்கும் ஈடுபாடு ஏற்படுதல் உறுதி.

தமிழ்வழியே மேனிலை வரை படித்த மாணவர்கட்கு. இக் கல்லூரிகளில் முன்னுரிமை இயல்பாக வாய்க்குமாதலால், கீழேயுள்ள அனைத்து நிலைகளிலும் ஏழை எளிய மக்கள்- கிராம மக்கள்- பிற்படுத்தப்பட்டோர் அனைவரும் தமிழ் வழிக் கல்வியை நாட முற்படுவர். தமிழை ஒரு பாடமாகக் கூடக் கற்பிக்காத பள்ளிகள் கூட தமிழில் அக்கறை காட்டத் தொடங்கும்.

சத்தியமாய்ச் சொல்லுகிறேன்- தமிழின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்.இன்று தமிழுக்குள்ள இழிவனைத்தும் போக, உயர்வனைத்தும் உண்டாக, உடனடியாக உயர்கல்வியனைத்திலும் தமிழ்வழிக் கல்வியைத் தொடங்குவதே முறையான நெறியாகும்.

மற்ற சிறப்பெல்லாம், ஒன்றன்பின் ஒன்றாகப் பின் தொடரும்.

## முதலாண்டில் செய்ய வேண்டியவை

1996-97 இல், தமிழ் பயிற்று மொழித் தொடர்பாகச் செய்ய வேண்டியவை கீழே தரப்படுகின்றன. இதைத் தொடர்ந்து, அடுத்த ஐந்தாண்டுகளில் செய்ய வேண்டியனவும் அடுத்தடுத்துத் தரப்படுகின்றன.

1. மழலையர் பள்ளிகள் மூன்று நிலையின. முன் மழலையர் வகுப்பு, இளம் மழலையர் வகுப்பு, மழலையர் வகுப்பு. இவை முழுவதும் தமிழைத் தவிர வேறு எம்மொழியும் கற்பிக்கப் படுதல் கூடாது. மதுவிலக்கிற்கு அவசரச் சட்டம் போடுவது போல, ஓர் அவசரச் சட்டம் மூலம் இச் சின்னஞ்சிறிய பிள்ளைகளுக்கு நல்வாழ்வு தர, தமிழ்வழிக் கல்வியைத் தொடங்க வேண்டும்.

தனியார் தொடங்குவன, சுயநிதியில் நடப்பன என விடக் கூடாது. தனிப் படிப்பின் வழி படித்து, எட்டாம் வகுப்பில் சேர்க்கலாம் என்பதால், அங்கீகாரம் பெறாமலே நடத்துவதாகக் காரணம் கூறக் கூடாது, எவர் எந்த நீதி மன்றம் சென்றாலும், நீதிக்கு வாதாட வேண்டும். எந்த வகையிலும் விட்டுவிடுதல் கூடாது.

மழலையர் பள்ளிகளை எல்லாம் நாட்டுடைமை ஆக்கிச் சுயநிதி- தன்னுதவிப் பள்ளிகளாகவே நடத்தலாம். மறுமலர்ச்சி மழலையர் பள்ளிகளை அரசு நகரந்தோறும், மாவட்டந் தோறும் தொடங்கலாம். தனியார் அங்கனம் நடத்த வருவோர்க்கு, ஊக்க உதவிகள் சலுகைகள் காட்டலாம்.

மழலையர் பள்ளிகட்கான தமிழ்வழிப் புதிய பாடத்திட்டம், பாடநூல்களை அரசு தயாரித்து உதவ வேண்டும். சிங்கப்பூரைப் போல 'கல்விக் கழகம்' ஒன்று, இப்பள்ளிகட்கான பாடநூல்கள், கருவிகள், புதிய நெறிமுறைகள், ஆசிரிய வழிகாட்டிகள் உருவாக்குவதிலேயே காலமெல்லாம் வேலை செய்யச் சொல்ல வேண்டும் ஒரு தொழிற்சாலை போல. 'இம் மழலையர் கல்விக் கழகம்' நாளும் இயங்க வேண்டும்.

2. உடனடியாக தமிழ்வழி பயிற்றும் ஒரு மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி, வேளாண் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆட்சியர் கல்லூரி இவற்றை அரசு தொடங்க வேண்டும்.

இங்கு கட்டாயமாக- ஆங்கில மொழிப் பாடம், மிக வலுவாக- ஒரு தொடர்பு மொழியாகுமாறு அதற்கேற்ற பாடத்திட்டம், பாடநூல்களுடன் கற்பிக்க வகை

## ஆந்திரா, கேரளாவில் பி.எச்.டி. வரை எந்தப் பாடத்துக்கும் தாய்மொழியில் பதிலெழுதத் தடையில்லை

காணவேண்டும்.

இத்தகைய தொழிற்கல்லூரிகளில், மாணவர்கள் வெளி மாநிலம்- வெளி நாடுகளுக்கு செல்ல நினைக்கும் இடங்களுக்கு தோதாக, அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப . ஒன்றிரண்டு மொழிகளை விருப்பப் பாடமாகக் கற்கவும் வழி வகை செய்யலாம்.

3. இனித் தொடங்கும் சுயநிதிக் கல்லூரிகள் எல்லாம் தமிழ்வழி பயிற்றுவனவாகவே அமைதல் வேண்டும். பிறவற்றுக்கு அரசு அனுமதியளித்தல் கூடாது அரசு தமிழ்வழிக் கல்வி நிலையங்கட்குக் காட்டும் சலுகை, உதவி, கடைக் கண் பார்வையே போதும். அத்தகைய கல்லூரிகள் உடனே வரத் தொடங்கிவிடும்.

4. மலேசியாவைப் போல உயர் கல்வி அனைத்தையும் தமிழ்வழி பயிற்றுவிக்கும் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவத் திட்டமிட வேண்டும்.

5. அண்ணா பல்கலைக் கழகம், மருத்துவப் பல்கலைக் கழகம் போலும் அனைத்திலும் தமிழ்வழிப் பிரிவுகள் தொடங்கப் பட்டு ஆண்டு தோறும் அப் பிரிவுகள் கூடுதலாக்கப்பட வேண்டும் வெறும் கண் துடைப்பிற்காக அல்லாமல், எல்லா உயர் கல்வியிலுமே சம பங்கு தமிழ் வழிக்கு ஒதுக்குமாறு திட்டமிட்டு, ஆண்டு தோறும் படிப் படியாக இம் மாற்றம் நிகழ வேண்டும்.

6. தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் நடத்தும் அஞ்சல்வழி தொலை தூரப் பாடமனைத்தும் தமிழ்வழியிலேயே நடத்தப்பட வேண்டும். இந்திரா காந்தி தேசியத் திறந்தநிலைப் பல்கலைக் கழக அடிப்படை விதியே, எந்த ஓர் உயர் கல்விப் பாடத்தையும் இந்தியிலும் ஆங்கிலத்திலுமாகத் தொடங்கவேண்டும் என்பது தான். ஆந்திர பிரதேசத் திறந்த நிலைப் பல்கலைக் கழக விதியும், எந்த ஒரு பாடத்தையும் தெலுங்கிலும் ஆங்கிலத்திலும் தொடங்க வேண்டும் என்பது தான். அதே நெறி முறையை நாமும் இங்குள்ள அஞ்சல்வழிக் கல்வி அனைத்திலும் பின் பற்றுமாறு வற்புறுத்த வேண்டும். சில பாடங்களைத் தமிழிலும் நடத்துகிறோம் என்று தப்பிக்க முயலக் கூடாது. அனைத்துப் பாடங்களும் தமிழிலும் தரப்படுமென்பதை, ஒரு சட்டவிதிபோலாக்கி, அத்துறைகள் செயற்பட அரசு வலியுறுத்த வேண்டும்.

தேவைப்பட்டால் இந்திராகாந்தி பல்கலைக் கழகம் போல், அரசே ஒரு தனிப் பல்கலைக் கழகத்தை இதற்கெனத் தொடங்கவேண்டும். இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக் கழகம், இலண்டனிலுள்ள இதுபோன்ற பல்கலைக் கழகத்தை முன் மாதிரியாகக் கொண்டு, நடுவணரசின் பல கோடி ரூபாய்ச் செலவில் நடத்தப்படுகிறது. தமிழக அரசும் அது போல் முயலலாம்தானே?

7. தமிழகத்தில் எந்த ஒரு பாடததையும்-உயர்கல்வி, தொழிற்கல்வி எதையும்-எந்தமொழிமூலம் படித்தாலும் தமிழிலும் விடையெழுதலாம்-அங்ஙனம் தமிழில் எழுதப்படும் பிஎச்.டி. ஆய்வேடு முதல், விடைத்தாள் யாதாயினும் உரிய முறைப்படிதிருத்தி, மதிப்பெண் அளிக்கப்படும் என அரசு அறிவிக்கவேண்டும். அண்மையிலுள்ள ஆந்திரா, கேரளாவிற்கூட எம்.எஸ்சி; எம்.ஏ; உட்பட, பிஎச்.டி ஆய்வேடுவரை எதனையும்- அதை ஆங்கில மொழிமூலமே அவர் கற்றிருந்தாலும்-அவர் அதைத்தம் தாய் மொழியாம் தெலுங்கிலோ, மலையாளத்திலோ தர அங்குத் தடையில்லை. இதனால் அங்கு ஆங்கில வழியில் எம்.எஸ்சி. படிக்கும் பத்துப்பேரில் ஆறு பேர், தத்தம் தாய்மொழியில் விடையெழுதும் நிலை வந்துவிட்டது.

8. தமிழகத் தேர்வாணையத் தேர்வுகட்கான பாடத்திட்டம், தேர்வு வினாத்தாள் பற்றி ஆராய ஒரு குழு அமைக்கவேண்டும். அனைத்து நிலையிலும் தமிழே ஆட்சிமொழி என அறிவித்து, நூற்றுக்கணக்கான ஆணைகள் பிறப்பித்துவிட்ட தமிழக அரசு இதில் நேர்முரணாதல் கூடாது. ஆங்கிலம் ஒரு கட்டாய மொழித்தேர்வாகச் சில நிலைகளில் மட்டும் அமையலாம். பிற அனைத்திலும் தமிழ்வழிக் கல்வித் தேர்வுகளாகவே


படிப்பகம்

www.padippakam.com


# Jc COMPUTER ACADEMY

**WISHES YOU & A PROSPEROUS 1996**

**A START FOR YOUR COMPUTER CAREER**

**HAPPY PONGAL**

**S.S.L.C., +2., மற்றும் டிகிரி தேறிய /தவறிய மாணவ/மாணவியர்களுக்கு வேலைக்கான கம்ப்யூட்டர் பயிற்சி.**

**New Batch Starts on: 19.01.96**

Special Concession offer upto 17.01.1996

**Unlimited Practicals**

**Separate Classes For Girls**

Special Concession offer upto 17.01.1996

We Work at:

## Jc COMPUTER ACADEMY

**278-A, Goods Shed Street, Madurai - 1.**

**Our Other Courses:**

1. Diploma in Software Technology
2. Diploma in Computer Applications
3. Advanced Computer Programming
4. Short Term Courses



ESTD 1962

☎ 22517

# Senthamarai Press

**Fine Colour Photo Offset Printers**

**15-1-96**

| தை | ஜனவரி திங்கள் | ஷாபான் |
|---|---|---|
| 1 | JAN - MON | 23 |

பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது
பணமில்லாவிட்டால் யாருக்கும் உன்னைத் தெரியாது

ஸ்ரீயுவவருஷம் சகவருஷம் 1917 புஷ்ய மீ 25
நவமி காலை 7.50, தசமி இரவு 4.55 சுவாதி பகல் 10.48,
அமிர்த-மரண; தைப்பொங்கல், திருவையாறு
ஸங்கிராந்தி பூஜை அரசினர் விடுமுறை, கொடிய நகசு.
ரா 7.30 - 9 நல்நேரம் கா 9.30 - 10.30 மா 3 - 4 எ 10.30 - 12

**MFRS. OF**

**DAILY CALENDARS**

644, Malai Nagar

**RAJAPALAYAM - 626 117**

PROP : S. BALUSAMY

**We are Manufacturing the Daily Calendars in TAMIL, TELUGU, MALAYALAM AND ENGLISH**

www.padippakam.com

நல்ல நெறிமுறைப்படி நடத்தப்பட வேண்டும். இதற்கென ஆராய்ந்து. பிற மாநில நிலைகளையும் நேரிற்கண்டறிந்து. குழுவின் அறிக்கை பெற்று. ஐந்தாண்டுக ளில் இவற்றைத் தமிழ்வழிக்குப் படிப்படி யாக மாற்றும் முயற்சியை உடனே தொடங்கவேண்டும்.

9. தமிழகத்திற்கு வரும் பிறமொழி உயர் அதிகாரிகள் (ஐ.ஏ.எஸ்; ஐ.பி.எஸ் போல் பலவை) ஓராண்டு. செறிவான பயனுள்ள தமிழ்மொழிப் பயிற்சிபெற ஆவன செய் யவேண்டும். இவர்கட்டு அகச்சுட்டு. புறச் சுட்டைவிடத் தமிழை ஒரு தொடர்பு மொழியாகக் கற்பிக்கத் தேவையான பாடத்திட்டமும்-பாடநூல்களும்-பயிற்சி யும் வேண்டும். இன்று இப் பயிற்சிகள் வெறும் கண் துடைப்பாக. ஏனோதானோ என்று தான் நடைபெறுகின்றன.

10. தமிழக அரசுப் பணிகட்கு. ஆள் எடுக்கும்போதும் உயர்பதவியில் அமர்த் தும் போதும்-துறைத்தலைமை தரும்போ தும்-பதவி உயர்வு அளிக்கும்போதும். நேர்காணல் வைத்து. அவர்தம் தமிழ் நிலையைச் சோதிக்க வேண்டும். அவ் வப்பதவிக்கேற்ற வினாக்களடங்கிய தமிழ்த் தேர்வு ஒன்றை எழுதச்செய்து மதிப்பிட வேண்டும்.

இதில் தேர்ச்சி பெறாதவர்கட்குப் பதவி உயர்வு. தராது. அத் தகுதி பெறும் வரை நிறுத்தி வைக்கவேண்டும்.

11. ஏழாம் வகுப்பு வரை தனியே படித்து. எட்டாம் வகுப்பில் சேரலாம் என்பதை நீக்கிவிடவேண்டும். அல்லது. அத்தகைய தனிப்படிப்பு தமிழ்வழி கற்று வருவோர்க்கே எனக்கூறி. இசைவளிக்க வேண்டும். அல்லது. அத்தகைய தனிப்ப டிப்பு எனப் பள்ளி நடத்தி. அங்கீகாரம் பெறாமலே ஆங்கில வழியைப் புகுத்த எண்ணுபவர்களைக் கண்டுபிடித்து. தண் டிக்கவேண்டும்.

12. மருத்துவம். பொறியியல் முதலான வற்றிற்குப் பாடநூல் வரட்டும்-சொற்க ளஞ்சியம் தொகுக்கப்படட்டும்-தரப்படுத் தப்படட்டும் என்பார் காலத்தாழ்வு செய் யவும். தமிழ்வழி வாராது தடுக்கவுமே அவ்வாறு பேசுகின்றனர்.

ஆறுமாதம் முன்னதாக இவை இவை தமிழ் வழி வருமெனத்திட்டமிட்டாலே போதும். இவை மூன்றும் உடனிகழும்.

முதலில் அத்துறையைத் தொடங்கிவி டுதலே. இவை படிப்படியாய்ப் படிதற்குத் துணைசெய்யும்.

நீந்தப் பழகுவான் நீரினுள் புகாமல். பயிற்சி பெற்றபின் புகலாம் என்பது எவ் வளவு பொருந்தாதோ. அத்துணை இது வும் பொருந்தாது.

எவ்வளவு விரைவில் முடியுமோ அவ் வளவு விரைவில் தொடங்கினால். சில ஆண்டுகளில் 'அறிவியல் தமிழ்' நல்ல வளர்ச்சி பெற்றுவிடும்.

## இரண்டாம் ஆண்டுத் திட்டம்

1. முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப் புவரை தமிழே பாடமொழியாகவும். பயிற்றுமொழியாகவும் சட்டமியற்றி. பாடத்திட்டம் வகுத்து. செயற்படுத்த வேண்டும்.

அரசுப்பள்ளி. உள்ளாட்சிப் பள்ளி களை முதலில் தரமுள்ள பள்ளிகளாக்க. அவற்றைச் சுயநிதி-தன்னுதவிப் பள்ளி கள் ஆக்கவேண்டும்.

தனியார் பள்ளிகளைக் கட்டாயப்ப டுத்தி தமிழ்வழிக்கு மாற்ற முயல வேண் டும்.

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இவ்வாறு மாற மறுப்பின் அவற்றை பலவிதமான வற்புறுத்தல் நடவடிக்கை மூலமும் -சட் டம் ஆணைமூலமும்-இசைவுகள் அளிக் காமல் நீடித்தல் மூலமும் எனப் பல நட வடிக்கை எடுத்து மாற்றவேண்டும்.

## தமிழகத்தில் தமிழ் அறியா அதிகாரிகள் எந்நிலையிலும் இல்லாமல் மாற்ற வேண்டும்

2. ஆறாம், ஏழாம் வகுப்பில் ஆங்கி லத்தை அறிமுகப் படுத்தலாம்.

3. எட்டாம் வகுப்பு முதல். ஆங்கி லத்தை இரண்டாம் மொழியாக ஒரு தொடர்புமொழி. பேச்சுமொழி. நடைமு றைப் பயன்பாட்டுமொழி எனும் வகை யில், தக்க பாடத்திட்டம் அமைத்துச் செயற்படுத்த வேண்டும்.

4. இதற்கும் தமிழ்வழிக் கல்விக்கழ கம் அமைத்து. பாடத்திட்டம். பாடநூல். கருவிநூல். கருவிகள். ஆசிரிய வழி காட்டிகள் உருவாக்கிப் பயன்படுத்த வேண்டும்.

5. தமிழகத்தில் வாழும் தனியார் தத் தம் தாய்மொழியைக் கற்க, எட்டாம் வகுப்புமுதல். விருப்பமொழிப்பாடம் ஒன்றை நடத்தவேண்டும். இதனை இரண்டாம் மொழிப்பாடம் என்ற இரண் டாம் பிரிவில் அ. ஆ என இரண்டு பிரி வுபடுத்தி அ பிரிவில் ஆங்கிலமும் ஆ பிரிவில் அவரவர் தாய்மொழியும் கற் பிக்க வேண்டும். தமிழைத் தாய்மொழி யாகக் கொண்டவர்கள் ஆ பிரிவில் கூடுதல் தமிழ் படிக்க ஆவன செய்ய வேண்டும்.

பிறமொழிச் சிறுபான்மையினர்க்கு. விருப்ப மொழிப்பாடம். கற்பிப்பதால். மும்மொழித்திட்டம் ஆகாது. தமிழர் கட்கு-தமிழைத் தாய்மொழியாக கொண் டவர்கட்கு இருமொழித்திட்டமே இருப் பதால். இது முரணாகாது. இதைக் கார ணம் காட்டி. தமிழைப்புறக்கணிக்கச் செய்தல் தகாது. சிறுபான்மையினர் நலன்கருதிப் பெரும்பான்மையினர் மொழியைப் பலியிடல் தகாது. அண்டை மாநிலமான கர்நாடகம் இதற்கு வழிகாட்டுவதால். நாம் அங்கு பாடம் கற்றுக் கொள்ளலாம்!.

6. தமிழகத்திலுள்ள அரசு. உள்ளாட் சிப் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியி டையே. முதல் ஒன்று. இரண்டு. மூன்று பிரிவுகளை ஆங்கிலவழி எனச் செய்தி ருப்பதை உடனே கைவிடவேண்டும். அங்கு தமிழ்வழி என்றால் முற்றிலும் தமிழ்வழிப் பிரிவுகளே அமையவேண் டும். இப்போதுள்ள நிலை. தமிழ்வழி கற் பவர்கட்குத் தாழ்வு மனப்பான்மையை உண்டாக்குவதாகும். இதை அறவே ஒழிக்கவேண்டும்.

7. மெட்ரிகுலேசன் பள்ளிகளும் இம் முறைக்கு மாறிவிட வற்புறுத்தவேண்டும். அங்குதான் முதல் ஒன்று. அல்லது இரண்டாம் பிரிவுகள் தமிழ்வழியாக இருக்கவேண்டும். இதுமிகமிக அவசி யம். தமிழுக்குச்சம இடம் அளிக்க வேண்டும் என்ற விதி வகுத்து இந்த மெட்ரிகுலேசன் பள்ளிகளைச் சீர்திருத்த வேண்டும்.

8. மொழிநீதி. மொழிச்சமநீதி இரண் டும் அரசின் கொள்கைகளாக வேண்டும். தமிழ்மாநிலத்தில். தமிழே ஒரு கட்டாய மொழிப்பாடம் ஆவது-தமிழே பயிற்று மொழி ஆவது-தமிழே உயர்கல்வி மொழியாவது மொழிநீதி வழங்குவதா கும்.

தமிழில் படித்தவர்கட்கு வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு முன்னுரிமை. சலுகை. இசைவு. உதவிகள் தருவது. ஆங்கிலத்திற்கு நிகரான இடத்திற்குத் தமிழை உயர்த்தும் ஆகையால். மொழிச் சமநீதியாகும். இந்திக்கான எல்லைகளை யும் இது வரையறுக்கும்.

எனவே தமிழக அரசு மொழிநீதி. மொழிச்சமநீதி ஆகிய கொள்கைகளை மேற்கொண்டு. அறிவித்துச் செயற்பட வேண்டும். தமிழ்மக்கள் மொழிநீதி மாநாடு. மொழிச்சமநீதிக் கருத்தரங்கு போல்வனவற்றை நடத்தி. அரசு இதன் வழி நடக்கத் துணைநிற்கவும் வேண் டும்.

## மூன்றாம் ஆண்டுத் திட்டம்

1. தமிழகக் கல்லூரிகள். பல்கலைக் கழ கங்கள் அனைத்திலும் தமிழ்வழிக் கல் விக்குச் சமநீதி வழங்கும் நடவடிக்கை களை மேற்கொள்ளவேண்டும்.


2. குறிப்பிட்ட காலம் வரை ஆங்கில வழியும் இருக்குமாக பின் ஆங்கிலவழி பட்டப்படிப்புப் படிப்பவர்க்குத் தமிழ் மொழிக் கல்வியையும். தமிழ்வழி பட் டப்படிப்புப் படிப்பவர்க்கு ஆங்கில மொழிக்கல்வியையும் கட்டாயமாக்கிச்


படிப்பகம்


www.padippakam.com


# உன்னத உழைப்பில் முன்னணியில் நிற்பவை


RMP




கம்ப்ரஸ்டு ஏர் டிரையர்



போர்வெல் கம்ப்ரஸ்ஸர்



மோனோபிளாக் கம்ப்ரஸ்ஸர்



ஹை பிரஸ்ஸர் ஏர் கம்ப்ரஸ்ஸர்

# ஆர்.எம்.பி. இண்டஸ்ட்ரீஸ்

என்.எஸ்.ஆர். ரோடு, சாய்பாபா மிஷன் -P.O, கோவை - 641 011. போன் : 430072

கிளைகள் :

51, நன்மை தருவார் கோவில் வீதி, நேதாஜி ரோடு, மதுரை - 625 001. போன் : 36955
111, அங்கப்ப நாயக்கன் வீதி, சென்னை - 600 001. போன் : 5231468
4/41 A, பாரதி வீதி, சுவர்ணாபுரி, சேலம் - 636 004. போன் : 446072

டீலர் :

ரமேஷ் எலக்ட்ரிக்கல்ஸ்
72, மேற்கு பொலிவார்டு ரோடு, திருச்சி - 620 008. போன் : 24527

SUGUNA




படிப்பகம்

www.padippakam.com

செயற்படுத்தவேண்டும்.

3. பல்கலைக் கழகங்கள், கல்லூரிக ளில் ஒரே பாடத்தில் இரு வழிக்கும் இரு பிரிவுகள் அமையலாம். சிறப்பான, ஆர்வத்தைத்தூண்டும், பயன்மிக்க துறை களில் எல்லாம் தமிழ்வழிப் பாடப்பிரிவு கள் அமைதல் வேண்டும்.

4. முற்கூறியவாறு தொழிற்படிப்பு எனத்தகும் பாடங்களுக்கும் பிற உயர்க லைப் பாடங்களுக்கும் தனித்தனிக் கல் லூரிகள்-முற்றிலும் தமிழ்வழியிலான கல் லூரிகள் என இங்ஙனம் தமிழ்வழிக் கல்வி வளர்ச்சிநிலை நோக்குமாறு அர சின் கட்டுப்பாடும் செயல்திட்டங்களும் உறுதிப்பட வேண்டும்.

5. சட்டக்கல்லூரிகள், சட்டத்துறைப் பல்கலைக்கழகம் யாவும் தமிழ்வழிக்குப் பேரிடம் நல்கவேண்டும். படிப்படியாகத் தமிழக நீதிமன்றங்கள் வாதம், தீர்ப்பு வரை தமிழ்மொழிக்கு மாறிவிட வேண் டும்.

இத்துறையைப் பொறுத்தவரை, இரு மொழிப் பயன்பாடும்-மொழி பெயர்ப்புப் பணியும் பேரிடம் பெறும்.

இங்கு 'மொழிச் சமநீதி' பேணப்பட வேண்டும்.

ஏழை எளிய மக்களும் சட்டங்களை விளங்கிக் கொள்ளுமளவு, வழக்குக ளைத் தெரிந்துகொள்ளுமளவு, தாமே வாதிடுமளவு அறிந்துகொள்ள வாய்ப்பு வேண்டும். இதற்குத் தகத் தமிழை 'நீதி மன்ற மொழி'யாக்க, உரிய நடவடிக்கை கள் எடுக்கப்பட வேண்டும்.

6. தமிழை ஓர் அறிவியல்மொழி ஆக் குவதற்கான அனைத்து முயற்சிகளை யும் அரசும் தனியாரும் கொடங்கவேண் டும். இதற்கான பணிகளை வகைப்ப டுத்தி, பல்கலைக் கழகத்திற்கு ஒரு பணி யாக ஒதுக்கலாம். தனிப்பட்ட வள்ளல் களை நாடிச் சிலவற்றை நிறைவேற்ற லாம்.

7. தமிழ்மொழி, இலக்கியக் கல்வியை யும் தரப்படுத்த வேண்டும்.

8. தமிழோடு தொடர்புடையதும் தமிழ் மொழிப் பயன்பாட்டை மிகுவிப்பதுமான மக்கள் தகவலியல், இதழியல், தொல் பொருளாய்வியல் , சித்த மருத்துவ இயல், நாட்டுப்புறவியல் போன்றவற்றை வளர்க்கவும் தரப்படுத்தவும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண் டும்.

9. இதழ்கள், வானொலி, தொலைக் காட்சி-இங்கெல்லாம் நன்கு தமிழில்-தமிழ்வழியில் தேர்ச்சிபெற்றோரே அமர்த்தப்பட வேண்டும்.

10. அரசு அலுவல்களில் தமிழும் தமிழ்வழிக் கல்வியிலும் பயிற்சி பெற்ற வர், அதிக இடம் பெற்றால்தான், தமிழ் ஆட்சிமொழி என்பது வெற்றி பெறும். இவற்றிற்கான வழிநெறிகளைக் கண்டறி யவேண்டுமே தவிர, 'அது எவ்வாறு இய லும்! இதற்கு எதிர்ப்பு வருமே? நீதிமன் றம் போவரே!' எனச் சாக்குப்போக்குச் சொல்லும் மனநிலை ஒழிதல் வேண்டும்.

கொள்கை வகுத்துவிட்டால், எப்படி யும் நிறைவேற்றிடலாம். மனம் இருந் தால், வழிகள் தாமே திறக்கும்.

## நான்காம் ஆண்டுத் திட்டம்

கடைசி இரண்டு ஆண்டுகளிலும் தமிழ்வழியிலான கல்வியையும், தமிழ் மொழி, இலக்கியக் கல்வியையும் முழு மைபெறத் தரப்படுத்தும் முயற்சிகள் அமைதல்வேண்டும்.

நான்காம் ஆண்டில், கீழ்க்கண்டவை முழுமைபெறத் தரப்படுத்தப்பட வேண் டும்.

1. மழலையர் பள்ளிகளில் தமிழும்,

**கல்வி மொழி மாற்றம் என்பது மேலே இருந்து கீழே வரவேண்டும்**

தமிழ்வழியில் பிற பாடங்களும் மிகத் தரமாகக் கற்பிக்கப்படும் நிலையை எய்த வேண்டும்.

இங்கு தமிழர் பண்பாடு, நாகரிகம்-பார தப் பண்பாடு, நாகரிகம் இவை சிதை யாத வகையில், புதுமையையும் போற்றி, நாடுதழுவிய நிலையில் சீருடை, கல்வி முறை, விளையாட்டு, விழாக்கள், ஆடல் பாடல்கள் யாவும் அமையுமாறு வரன்மு றைப்படுத்தலாம்.

2. சுயநிதிமுறை, தன்னுதவிமுறை-இவற்றை அரசே செயற்படுத்தலாம்.

3. உயர்கல்விகள் அனைத்தும் ஆண் டுதோறும் மேன்மேலும் தமிழ்வழிக்கு மாறி, முற்றுப்பெறும் வகையில் வழிகா ணவேண்டும். உயர்கல்வி அனைத்திலும் ஆய்வுகள் பெருகவும், பிஎச்.டி-முதலிய ஆய்வுக்கல்விகள் வளரவும் புதிய கண் டுபிடிப்புகள் தோன்றவும், புதிய தொழில் முனைவுகள் உண்டாகவும் அரசு திட்டம் வகுத்துச் செயற்படுத்தி, வழிகாட்டி, ஊக் கம் கொடுத்து உதவவேண்டும்.

4. தமிழில் பார்வைநூல்கள், பல்துறைக் கலைக்களஞ்சியங்கள், பல்துறைக்கலைச் சொல் அகராதிகள் போல்வன தோன்றப் பணியாற்றவேண்டும்.

5. அச்சகந்தோறும் தமிழ்படித்த ஒரு வன் வேலைக்கு அமர்த்தப்பட வேண் டும். இதழ்கள் தோறும் தமிழ்மொழி கற்ற வர்கள் பலர் இடம்பெறவேண்டும். வானொலி, தொலைக்காட்சிக்குத் தமிழை யும் நன்கு கற்றவர்களே வேலையில் அமர்த்தப்பட வேண்டும். அரசுப் பணிக ளில் தமிழ்கற்றவரும்-தமிழ்வழி கற்றவ ரும் நிரம்ப இடம்பெற வேண்டும். மழ லையர் பள்ளிமுதல், தமிழை ஒரு மொழிப்பாடமாகக் கற்றவரே-தமிழாசிரி யரே தமிழைக் கற்பிக்கக் கட்டாயமாக நியமிக்கப்பட வேண்டும்.

தமிழ்மொழி வளர்ச்சியில் கருத்துச் செலுத்த, ஒரு தனி அமைச்சகம் தொடங்கவேண்டும்.

இன்னபிறவற்றால் தமிழ்ப் பயிற்றுமொ ழித்திட்டம் பயன்படும்-வேலைவாய்ப் பும்-சுயசிந்தனையும்-சுயதொழில் வாய்ப் பும்-அரசு ஆதரவும் உடையதாக, முழு மைபெற ஆக்கப்பெறுதல் வேண்டும்.

## ஐந்தாம் ஆண்டுத் திட்டம்

1. தமிழின் நுட்பங்கள் உணரப்பட்டு, தமிழுக்குப் புதிய இலக்கணம் எழுதப் பட வேண்டும்.

2. தமிழ் இலக்கணம் புதிய முறையில் கற்பிக்கப்பட, பல்வேறு நெறிமுறைகள் கண்டுகொள்ளப்பட்டுப் பாடநூல்கள், பயிற்சிநூல்கள் ஆயத்தமாகவேண்டும்.

3. இன்று ரஷிய மொழிகற்று, அங்கு போய் மருத்துவம், பொறியியல் கற்பது போல், வெளிநாட்டவரும் தமிழ்கற்று-இங்குவந்து அறிவியல் கற்குமாறு வளர வேண்டும்.

4. மழலையர் பள்ளி முதல், பல்கலை உயர்கல்வி வரை தமிழுக்குச் சிறப்பிட மும்-முழு இடமும் தரவேண்டும்; தவிர்க்க முடியாத இடங்களில் தமிழுக் குச் சமஇடம் தர வேண்டும்.

5. அனைத்து நிலைகளிலும் மீள் பார்வை இட்டுச் செயலாக்கப்படுத்த வேண்டும்.

6. உலகளாவிய நிலையில், பல நாடுக ளிலும் வாழும் தமிழர்களும், இவற்றில் பங்குகொள்ளுமாறும் இவற்றால் பயன்ப டுமாறும் திட்டங்கள் தீட்டிச் செயற்ப டுத்த வேண்டும்.

இவை பலவும் முதலிருந்தே திட்டமி டப்பட்டுப் படிப்படியாகச் செயற்படுத்தப் பட வேண்டியவை.

இவற்றைத் தமிழக அரசு தனது 'மொழிக்கொள்கையாக' ஏற்கவேண்டும்; ஏற்கச் செய்யவேண்டும்.

மாற்றம் வரும்போது சிலர் எதிர்க்க வும் முற்படுவர். அரசு நினைத்தால் ஆகாததில்லை. எவ்வகையிலும் நிறை வேற்றுவதென உறுதிபூண்டால், வழிவ கைகள் தாமே புலப்படும்.


முதலில் வேண்டியது மனமாற்றம்; மனமிருந்தால் வழிபிறக்கும்.

தமிழ்மக்கள் இக் கருத்துக்களில் ஒன் றுபட வேண்டும்; இவற்றை நிறைவேற் றத் துள்ளி எழவேண்டும்.

போராட்டம்தான் வழியெனில் பொங்கி எழ வேண்டும். பிறமொழி எதிர்ப்பில் காணும் போர்க்குணத்தை, இனித்தமிழ் மொழி வளர்ச்சியில் காட்டுவோமாக. அனைவரும் ஓரணியாய்த் திரள்வோ மாக! ■


படிப்பகம்

www.padippakam.com



**தாய் மொழியில் கல்வி கற்பிப்பது பற்றிய முயற்சிகள், சென்ற நூற்றாண்டின் முதல் பாதிப் பகுதியிலேயே இந்தியத் துணைக் கண்டத்தில் தொடங்கப்பட்டன.**

# கலைச் சொல் வங்கி

*வா.செ. குழந்தைசாமி*

கல்வியறிவுத் துறைகளில் இது வரை உலகு கண்ட வளர்ச்சி முழுவதும் நமது மொழியில் இடம் பெற வேண்டும்; எதிர் கால வளர்ச்சியில் நாம் முன்னேறிய நாடுகளோடு தோளொடு தோள் சேர்ந்து நடை போட வேண்டும் என்பது நமது அவா: நமது நோக்கம் இதற்கும் தடைகள் பல: பயணம் நெடியது:பாதை கடினமானது. இதை மனத்திற்கொண்டு முறையாக முயல்வதும், எண்ணியதை இயன்ற அளவில் முடிப்பதும் இன்றைய முக்கியமான குறிக்கோள்கள். இது ஒரு சிலராலோ, அல்லது குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தாலோ மட்டும் செய்து முடிக்கப்படக் கூடிய பணி அன்று நிபுணர்களின் ஈடுபாடு தேவை. ஓர் இயக்கம் போன்ற அணுகுமுறை தேவை.

அறிவியல், தொழில் நுட்பம், மற்றும் பிற துறைகளில் தமிழில் நூல்கள் எழுதுவதற்கு அந்தந்தத் துறைகளில் பலர் முன்வரலாம். ஆனால், எல்லோரும் கலைச் சொற்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுவார்கள் என்று கூறுவதற்கில்லை. எனவே, பல்வகைத் துறைகளில் இலக்கியம் உருவாவதற்குக் கலைச் சொற்கள் தேவை என்பது நாம் அறிந்த ஒன்று. அவை கட்டடம் அமைவதற்குச் செங்கல் போன்றவை. கதவு, பலகணி போன்றவை.

கலைச் சொல்லாக்கத்தில் தமிழ் மொழி பாராட்டத்தக்க வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்பது நமக்கு மகிழ்ச்சி தரும் நிலை. தமிழில் கலைச் சொல்லாக்கம் இன்று நேற்றுத் தோன்றியது அல்ல. அதற்கு ஏறத்தாழ குறைந்தது ஒன்றரை நூற்றாண்டு வரலாறு உண்டு தஞ்சை தமிழ் பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் இராம சுந்தரம் கலைச் சொல்லாக்கப் பின்னணியைச் சற்று விரிவாக ஆய்ந்திருக்கிறார். அவர் சேகரித்துள்ள தகவல்கள் பயனுடையன.

தாய் மொழியில் கல்வி கற்பிப்பது பற்றிய முயற்சிகள், சென்ற நூற்றாண்டின் முதல் பாதிப் பகுதியிலேயே இந்தியத் துணைக் கண்டத்தில் தொடங்கப்பட்டன. முதல் வகுப்பு முதல் எட்டாவது வரை பல பள்ளிகளில் தாய் மொழியில் பாடல்கள் கற்பிக்கப்பட்டன. தமிழில் அறிவியல் நூல்கள் பள்ளி மாணவர்கட்குப் பயன்படும் வகையில் எழுதப்பட்டன. அன்று தொடங்கிய பயிற்று மொழி யாத்திரை இன்றும் தளர் நடை போடுவதும், தவழ்ந்து செல்வதும், நமது மெத்தனப் போக்குக்கும், வினை செய்யாது விவாதத்திலேயே காலத்தைச் செலவிடும் 'வேடிக்கை மனிதர்' பண்பாட்டுக்கும் சான்றாகும்.

கலைச் சொல்லாக்கம், தமிழில் பயிற்றுதல் போன்றவற்றில் இலங்கையின் பங்களிப்புக் கணிசமானது. இன்றைய நிலைக்கு வருமுன் முந்தைய முயற்சிகளைச் சுருக்கமாக நினைவு கூர்வது பொருத்தமாகும். அவற்றுள் குறிப்பிடத் தக்கன பின்வருமாறு:

1831-இல் ரேனியுஸ் (Rhenius) பாதிரியார் எழுதிய 'பூமி சாஸ்திரம்' 1849-இல் இலங்கையில் வெளியான பால கணிதம்; 1855-ல் டாக்டர் கரோல் (Dr. Carrol) என்பவர் எழுதிய குறியீட்டுக் கணிதம் Algebra)இலங்கையில் வாழ்ந்த அமெரிக்கரான டாக்டர் சாமுவேல் கிரீன் 1850 –1855 காலப் பகுதியில் மருத்துவத் துறையில் தமிழாக்கம் செய்த நூல்கள் ஆகியன குறிப்பிடத் தக்கன. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களின் நூற்றொகை விளக்கத்தையும் (1888) குறிப்

படிப்பகம்

www.padippakam.com

பிட வேண்டும்.

இந்த நூற்றாண்டின் முயற்சிகளில் முதலாவதாக, இராஜாஜி, வெங்கடசுப்பையர் என்பவருடன் சேர்ந்து 1916-ல் சேலத்தில் கொண்டுவந்த "தமிழ் சாஸ்திர பரிபாஷைச் சங்கத்தாரின் பத்திரிகை" என்ற இதழைக் குறிப்பிட வேண்டும். 1937-ல் டி.வி. சாம்பசிவம் பிள்ளை அறிவியல் கலைச் சொற்களைக் கொண்ட அகராதி ஒன்றை மூன்று தொகுதிகளாக வெளியிட்டார்.

1932-ல் சென்னை அரசு கலைச் சொல்லாக்கக் குழு ஒன்றை அமைத்தது. 1936-ல் கலைச் சொல்லாக்க மாநாடும் நடந்தது. 1940-ல் சென்னை அரசு மீண்டும் ஒரு கலைச் சொல்லாக்கக் குழுவை அமைத்தது. விடுதலைக்குப் பின்னர், 1947-ல் சென்னை அரசு பல்வேறு பாடங்களாகக் கலைச் சொல் அகராதிகளை வெளியிட்டது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் துறைச் சொற்களைக் கொண்ட பதின்மூன்று சிறு தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறது.

அரசு முயற்சி ஒரு புறம் இருக்க, தனிப்பட்ட தன்னாட்சி நிறுவனங்கள்,

## கலைச் சொற்கள் அனைத்தையும் கணிப் பொறியில் தேக்கி, ஒரு கலைச் சொல் வங்கி அமைக்க வேண்டும்

தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் பங்களிப்பும் முக்கியமானது. 1947-ல் இருந்து பணியாற்றி வரும் தமிழ் வளர்ச்சிக் கழகம். பொதுவான கலைக் களஞ்சியத் தொகுப்புகள் 10; குழந்தைகள் கலைக் களஞ்சியத் தொகுப்புகள் 10; இன்னும் சில நூல்களை வெளியிட்டிருக்கிறது. இப்பொழுது 10 தொகுதிகள் கொண்ட மருத்துவக் கலைச் களஞ்சியம் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. இவற்றில் ஏராளமான கலைச் சொற்கள் இடம் பெற்றிருக்கின்றன. சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பகம், திரு. ஜி.ஆர். தாமோதரன் தொடங்கிய 'கலைக் கதிர்' பத்திரிகை ஆகியவற்றின் பங்களிப்பு குறிப்பிடப்பட வேண்டும்.

விஞ்ஞானச் சுடர், வளரும் வேளாண்மை, திரு மணவை முஸ்தபா ஆசிரியராகக் கொண்ட UNESCO நிறுவனத்தின் COURIER ஆகியனவும் குறிப்பிடத் தக்கவை.

இலங்கை அரசு 1955-ல் அமைத்த 'தன்மொழி அலுவலகம்' என்ற அமைப்பும், மற்ற சில நிறுவனங்களும் ஐம்பதுக்கும் மேற்பட்ட கலைச் சொல் தொகுதிகளை வெளியிட்டிருக்கின்றன.

1983- வரை உருவாக்கப்பட்ட கலைச் சொல் தொகுப்புகளை ஆய்ந்த டாக்டர் இராதா செல்லப்பன் இருநூறுக்குப் பக்கமான கலைச் சொல் தொகுப்புகள், பல இடங்களிலிருந்து, பலர் முயற்சியால் வெளிவந்திருப்பதாகக் கூறுகிறார். அதற்குப் பின்னும் கடந்த 10 -15 ஆண்டுகளில் பல கலைச் சொல் அகராதிகள் துறைவாரியாகவும், தொகுப்பாகவும் வந்திருக்கின்றன. உருவாக்கப்பட்ட கலைச் சொற்களைத் தொகுப்பதில் முறையாக ஈடுபட்ட தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம், மறித்துவரும் சொற்களை நீக்கிவிட்டால் இதுவரை மொத்தம் 1,50,000 கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டிருப்பதாகவும், அவற்றில் 80,000 சொற்களைத் தஞ்சைப் பல்கலைக் கழகம் தரப்படுத்தியிருப்பதாகவும் டாக்டர் இராமசுந்தரம் கூறுகிறார். டாக்டர் இராதா செல்லப்பன் 1983-லேயே 2,00, 000 கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார். செய்த பணியைத் தொடர்ந்து, இன்றைய நிலை வரை உருவாக்கப்பட்ட சொற்களைத் தொகுக்க வேண்டும். அத்துடன் இந்தக் காலகட்டத்தில் நாம் செய்ய வேண்டிய முக்கியமான பணிகள் பின்வருமாறு:

கல்வி அறிவுத் துறைகளில் நூல் எழுதுவோர் ஒவ்வொருவருக்கும் இதுவரை உருவாக்கப்பட்ட கலைச் சொற்கள் எட்டுவனவாக இருக்க வேண்டும்.

புதிதாகக் கலைச் சொற்கள் தமிழில் எங்கு எந்தத் துறையில் உருவாக்கப்பட்டாலும், கலைச் சொல் அகராதித் தொகுப்புகள் உருவானாலும், அவற்றைப் பற்றிய விவரம் நம்மால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அனுப்பப்படுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இது, இந்தியாவில் வெளியிடப்படும் நூல்களின் படிகள் கல்கத்தாவிலுள்ள தேசிய நூலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்பது போன்ற ஏற்பாடு ஆகும். முன்பே பகுக்கப்பட்ட துறைவாரியாக அவை அங்கு பதிவு செய்யப்பட வேண்டும்.

தொகுக்கப்பட்ட சொற்கள் தொடர்ந்து தரப்படுத்தப்பட வேண்டும். கலைச் சொல் விவரம் கேட்பவர்கட்கு, தரப்படுத்தப்பட்ட சொற்கள், தரப்படுத்தப்படாத சொற்கள் என்ற பாகுபாட்டுடன் சொற்களைப் பற்றிய விவரம் தெரிவிக்கப்பட வேண்டும்.

கலைச் சொல் துறையில் நமது தேவை பற்றியும், நாம் செய்ய வேண்டுவது பற்றியும் கூறினோம். செயல்படுத்தும் முறை பற்றி எண்ணுவது பொருத்தமாகும்.

இதுவரை வந்த கலைச் சொற்களைத் தொகுத்து வெளியிடவும், தொடர்ந்து இப்பணியை மேற்கொள்ளவும் ஒரு தன்னாட்சி அமைப்பை அரசு உருவாக்க வேண்டும். கொள்கை வகுக்கவும், திட்டமிடவும், தேவையான நிதி ஒதுக்கவும் வசதியைக் கொண்டதாக அந்த ஆட்சிக் குழு அமைய வேண்டும். இப்பணிக்குத் தொடர்புள்ள தலையாய நிபுணர்களை உறுப்பினர்களாகக் கொண்டதாக அது இருக்க வேண்டும். பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், தொழில் துறைகள், அரசுத் துறைகள் போன்ற தொகுதிகள் வரையறுக்கப்பட்டு, அந்தந்தத் தொகுதியிலிருந்து பொருத்தமான ஒருவர், இருவர் பொறுக்கி எடுக்கப்பட்டு, ஆட்சிக் குழுவிற்கு நியமிக்கப்பட வேண்டும். கட்சிச் சார்பு இல்லாத வகையில் இந்தக் குழுவைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிவகைகளைப் பற்றிச் சிந்திக்கலாம். இந்த அமைப்பின் தலைமையகம் ஏதாவது ஒரு பல்கலைக் கழகத்தின் வளாகத்தில் அமையலாம். அதற்கு ஒரு அலுவலகம், இயக்குநர் அல்லது நெறியாளர் அல்லது பதிப்பாசிரியர் (Editor) போன்ற தலைமை அலுவலரும், அவருக்குத் தேவையான துணை அலுவலர்களும், சிப்பந்திகளும் நியமிக்கப்பட வேண்டும். இந்த அலுவலகம் ஆட்சிக் குழுவின் முடிவுகளை, அதன் தீர்மானங்களின்படி. செயல்படுத்தும் நடவடிக்கைகளை எடுப்பதற்காக மட்டுமே. மற்றபடி ஒவ்வொரு பணிக்கும் தனித் தனியே நிபுணர்களோ, நிபுணர் குழுவோ அல்லது குறிப்பிட்ட ஒரு நிறுவனமோ ஆட்சிக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்படும். இந்த அமைப்பு முதற் பணியாக.

இதுவரை இந்தியத் துணைக் கண்டத்திலேயும், வெளியிலேயும், நிறுவனங்கள், தனி அலுவலர்கள், குழுக்கள் ஆகியவை தொகுத்துள்ள எல்லாக் கலைச் சொற்களையும் திரட்டிச் சேர்க்க வேண்டும். கலைச் சொற்களைத் தொகுப்பதில் ஏற்கெனவே செய்துள்ளதை முழுமைப்படுத்த வேண்டும்.

தொடர்ந்து உருவாக்கப்படும் கலைச் சொற்கள், கலைச் சொல் அகராதிகள் இந்த அமைப்பை வந்து அடைவதற்கான வழிவகைகளைக் காண வேண்டும்.

'கலைச் சொல் களஞ்சியம்' அல்லது 'கலைச் சொல் அகராதி என்ற தலைப்பில் இதுவரை உருவாக்கப்பட்ட கலைச் சொற்களைப் பல தொகுதிகளாகப் பதிப்

www.padippakam.com


வாடிக்கையாளர் அனைவருக்கும் எங்களது
இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

இல்லந்தோறும் ஏற்றும் ஒரே விளக்கு




# அரிஸ்டோ

திரி விளக்கு
டீலக்ஸ் விளக்கு
வெண்கல விள்க்கு

தயாரிப்பாளர்கள்:

## அரிஸ்டோ லாம்ப் இண்டஸ்ட்ரீஸ்

P.B.No. 266, மதுரை - 9. போன்:36410

உளங்கனிந்த
புத்தாண்டு
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்

'ORIENT' தனது 6-வது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் இத்தருணத்தில் கடந்த காலங்களில் எங்களோடு கைகோர்த்து எமது அனைத்து செயல்திட்டங்களுக்கும் ஊக்கமளித்து எங்களை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கும் அனைத்து களப் பணியாளர்களுக்கும் பொது மக்களுக்கும் எங்களின் இதயங்கனிந்த புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களை சமர்ப்பிக்கின்றோம். மென்மேலும் ஊக்கமளித்து எங்களோடு பணிபுரிய எமது களப் பணியாளர்களையும், இத்துறையில் அனுபவமும், ஆர்வமும் உள்ளவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நிறுவனத்தின் செயல்பாட்டினைக் குறித்து அறிய விரும்புவோர் தங்களது அருகாமையில் உள்ள எமது கிளை அலுவலகத்தை அணுகவும்

**பதிவு அலுவலகம்**
NO.2 ராஜராஜேஸ்வரி நகர்
பாண்டிச்சேரி-2.

**நிர்வாக அலுவலகம்**
38, காலேஜ் ரோடு,
நுங்கம்பாக்கம்,
சென்னை-6.

**தமிழ்நாட்டின் மற்ற கிளைகள்**

சென்னை: நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், திருச்சி & மார்த்தாண்டம் மற்றும் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் கிளைகள் உள்ளன.

**கிளை அலுவலகம்**

**ORIENT TRUST OF INDIA LIMITED**
3rd Floor, R.R. Complex,
32, Narchiappa Street, Erode-638 001.

*10% ON SWEC & 15% ON F.D. Scheme*
(இந்திய ரிசர்வ் வங்கியின் வரைமுறைக்கு உட்பட்டது)

கூடி மகிழும் குதுகலமான நன்னாளில்
என்றும் உங்களோடு ஆர்.கே.ஏ.

*USE ALWAYS*
RKA
*BRAND AND*
**ROHINI KRISHNA BRAND**
**AGMARK GHEE**

Available in 200 & 500 gms Pet Jars and 50 gms, 100 gms, 200 gms & 500 gms POUCHES




Also available in
15, 5, 2 & 1 kgs, 500 gms
& 200 gms Tins & Packs

*Dealers / Distributors / Agencies Enquiries Solicited*

CONTACT:
**M/s R.K. ARIYAPPA CHETTIAR**
Sree Murugan Butter & Ghee Stores
452-453 Mettur Road, ERODE-9.
Ph: 216910, 220910
Grams: BUTTER




படிப்பகம்

www.padippakam.com

பித்து உடனடியாக வெளியிட வேண்டும். எந்தெந்தத் தலைப்புகளில் வெளியிடப்படலாம் என்பதைப் பின்னர் ஆய்வோம்.


தொகுப்புகள் வெளியான பின், ஆண்டுக்கொரு முறை, புதிதாக உருவாக்கப்பட்ட கலைச் சொற்கட்கு பிற்சேர்க்கை (Appendix) வெளியிடப்பட வேண்டும்.

இத்தொகுப்புகள் முழுமையாகவோ, அல்லது துறைவாரியாகவோ, பல்கலைக் கழகங்கள், முக்கியமான நூல் நிலையங்கள், அரசு அலுவலகங்கள், பத்திரிகை அலுவலகங்களிலுள்ள நூல் நிலையங்கள், வானொலி, தொலைக்காட்சி அலுவலக நூல் நிலையங்கள் ஆகியவற்றிலும், மற்றும் முக்கியமான பிற இடங்களிலும் இடம் பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

முதலாவதாகக் கலைச் சொற்களைத் திரட்டுவதற்காக அமைக்கப்பட்ட தலைமையகத்தில் சேர்ந்த கலைச் சொற்கள் அனைத்தையும் கணிப் பொறியில் தேக்கி, ஒரு கலைச் சொல் வங்கி அமைக்க வேண்டும். புதிதாக வரும் சொற்கள் இவ்வங்கியில் முறையாகச் சேர்க்கப்பட வேண்டும். இவ்வாறு சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் கலைச் சொற்கள், தரப்படுத்தப்பட்டவை, தரப்படுத்தப்படாதவை என்ற இரு பிரிவிற்குள் வரலாம். தலைமையகத்தில் இருக்கும் கணிப் பொறியை தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்கள், ஆய்வு நிலையங்கள், முக்கியமான நூலகங்கள், அரசு அலுவலகங்கள் போன்றவற்றில் உள்ள கணிப்பொறிச் சாதனங்களோடு இணைத்து, கலைச் சொல் வங்கி பரவலாகப் பலருக்கும் எட்டும் தூரத்தில் உள்ளதாகச் செய்யலாம். இது கல்வியறிவுத் துறைகளில் நூல் எழுத முன்வருபவர்கட்குப் பெரிய உதவியாக இருக்கும். நூல்கள் எழுதுவது பரவலாக்கப்படும். பலருடைய பங்களிப்பும் இடம் பெறும்.

'கலைச் சொல் களஞ்சியத்' தொகுப்புகளை அச்சிடுவது பற்றிச் சிந்திப்போம். கலைச் சொற் தொகுப்புகளை இரு அடிப்படைப் பிரிவுகளாக நெறிப்படுத்தலாம்.

பகுதி (1) அறிவியல் (Basic Sciences); தொழில் நுட்பம் (Engineering & Technology); மருத்துவம் (Medicine); வேளாண்மை (Agriculture); சமுதாய இயல்கள் (Social Sciences); கலை, மொழி, இலக்கியம் (Arts & Humanities); சட்டம், ஆட்சி (Law and Administration) போன்ற பெரும் பிரிவுகளை எடுத்து, இவை ஒவ்வொன்றுக்கும் பொதுவான சொற்களைத் தனித் தனித் தொகுதியாக, அல்லது தொகுதிகளாகத் தயார் செய்யலாம்.




பகுதி (2): பகுதி (1)-ல் உள்ள பெரும் பிரிவுகள் ஒவ்வொன்றின் கீழ் வரும் கிளைப் பிரிவுக்கான கலைச் சொற்கள் இப்பிரிவில் இடம் பெறும். சான்றாக, பொறியியல், தொழில் நுட்பத்தை எடுத்துக்கொண்டால், அனைத்துப் பொறியியல், தொழில் நுட்பங்கட்கும் பொதுவான சொற்கள் பகுதி (1)-லும், குடிமைப் பொறியியல் (Civil Engineering); மின்சக்திப் பொறியியல் (Electrical Engineering) எந்திரப் பொறியியல் (Mechanical Engineering) போன்ற தனித் தனிப் பிரிவுகட்கான கலைச் சொற்கள் அந்தத் தலைப்புகளில் பகுதி (2)-லும் இடம் பெறலாம்.

பொதுவாக, அறிவியல் துறைகளை (Basic Sciences) எடுத்துக்கொண்டால், கணிதம், இயற்பியல், வேதியல், உயிரியல் போன்ற அனைத்திற்கும் பொதுவான கலைச் சொற்கள் பகுதி (1)-ல் வந்துவிடும். பின்னர், கணிதத்துக்கு மட்டும் உரித்தான சொற்கள் பகுதி (2)-ல் "கணிதக் கலைச் சொற்கள்" என்ற தலைப்பிலும், இயற்பியலுக்கு மட்டும் உரித்தான சொற்கள் பகுதி (2)ல் "இயற்பியல் கலைச் சொற்கள்" எந்ற தலைப்பிலும், இது போன்ற மற்ற அறிவியல் துறைகட்கும் வெளிவரலாம். இந்த அணுகுமுறை மருத்துவம், வேளாண்மை போன்ற மற்ற துறைகட்கும் பொருந்தும். மேலே கொடுத்துள்ள வரைபடம் நாம் கூறும் கருத்தைத் தெளிவுப்படுத்த உதவும்.

அறிவியல் (Basic Sciences) கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் அனைத்திற்கும் பொதுவான கலைச் சொற்கள்.

பகுதி -2 (பகுதி 1-ல் இடம் பெற்ற பொதுச் சொற்கள் நீங்கலாக) கணிதக் கலைச் சொற்கள், இயற்பியல் கலைச் சொற்கள், வேதியியல் கலைச் சொற்கள், உயிரியல் கலைச் சொற்கள்.

இவ்வாறு தொகுப்பது, எல்லாத் தொகுப்புகளையும் விலை கொடுத்து வாங்காது, இனம் பிரித்துத் தங்கட்குத் தேவையானவற்றை மட்டும் வாங்குபவர்க்குத் துணை புரியும். சான்றாக, இயற்பியல் கலைச் சொற்களில் மட்டும் ஆர்வமுள்ளவர்கள் அறிவியல் கலைச் சொற்கள் என்ற பகுதி (1)-ல் வரும் தொகுப்பையும், இயற்பியல் கலைச் சொற்கள் என்ற தலைப்பில் பகுதி -2-ல் வரும் தொகுப்பு அல்லது தொகுப்புகளை மட்டும் வாங்கினால் போதுமானது. அதே போன்று, எந்திரவியல் கலைச் சொற்களில் மட்டும் ஆர்மமுள்ளவர்கள் பொறியியல், தொழில் நுட்பக் கலைச் சொற்கள் எனப் பகுதி (1)-ல் வரும் பொதுவான கலைச் சொல் தொகுப்பையும், எந்திரவியல் கலைச் சொற்கள் எனப் பகுதி (2)-ல் வரும் கலைச் சொல் தொகுப்பையும் வாங்கினால் போதுமானது.

பொதுவான அகராதி போல, அகர வரிசையில் தொகுப்போமானால் எல்லோரும் எல்லாத் தொகுதிகளையும் வாங்க வேண்டும். மேலும் பல சொற்களுக்கு துறைக்கேற்பப் பொருள் வேறுபடும். பொதுவாக, கலைச் சொல் தொகுப்புகளை கலைச்சொல் அகராதி என்ற தலைப்பிலோ "கலைச் சொல் களஞ்சியம்" என்ற தலைப்பிலோ வெளியிடும்பொழுது, முதலில் அறிவுத் துறைகளின் பெரும் பிரிவுகள், பின்னர் ஒவ்வொரு பெரும் பிரிவின் கீழும் உட்பிரிவுகள் என வகைப்படுத்தி, அவற்றை வரிசைப்படுத்தி, எண்ணிட்டு வெளியிடுவது தேவையாகும். இம்முயற்சி ஒரு பொதுக் குழுவின் தலைமையின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டுப் பின்னர் துறை வல்லுநர்களைக் கொண்ட குழுக்களிடம் பிரித்து ஒப்படைக்கப்பட வேண்டும். இருக்கின்ற கலைச் சொற்கள் அச்சேறிய பின்னர், தொடர்ந்து தரப்படுத்தும் பணியையும் துவங்கலாம். பொதுவாகக் கலைச் சொற்களை முன்பு கூறியவாறு, தொகுத்து, பகுத்து, பலரும் பயன்படுத்தும் வகையில் வெளியிடுவதும், கலைச் சொல் வங்கியை அமைப்பதும், இன்றைய முக்கியமான பணிகளாகும். இருபதாவது நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் நம் முன் விரியும் எண்ணற்ற கலைகள் அனைத்தையும் தன்னுள் கொண்ட நிறைமொழியாகத் தமிழ் மலர்வதற்காக நாம் மேற்கொள்ளும் தவத்தின், வேள்வியின் நீண்ட பயணத்தில் முக்கியமான படிகள்: கலைச் சொல் களஞ்சியப் பதிப்பு: கலைச் சொல் வங்கி அமைப்பு.

■


படிப்பகம்

www.padippakam.com


# ஸ்ரீ மாரியாஸ் பைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

H.O. : No. A-20, S.V.V. காம்ப்ளக்ஸ், (சிப்பி தியேட்டர் எதிரில்), சாஸ்திரி ரோடு, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி - 620 018.

B.O. : No. 27 சாந்திவிஹார் காம்ப்ளக்ஸ், 140, ராயப்பேட்டை ஹை ரோடு, லஸ் கார்னர், மைலாப்பூர், சென்னை - 600 004. போன் : 8526806.
B.O. :No. 162/A, A.A.S. காம்ப்ளக்ஸ், நாவல்பட்டு ரோடு, திருவெறும்பூர்.

## சிறப்பு டெபாசிட் திட்டம்

காலம் ஒரு வருடம்
ரு. 10,000 டெபாசிட் செய்பவர்களுக்கு

**2 கிராம் தங்க நாணயம் இலவசம்**

**25%** வருட வட்டி

**+ 3% ஊக்கத் தொகை**

**குமுலேடிவ் டெபாசிட் :-** 31 மாதத்தில் இரட்டிப்பு

## உங்களின் செல்வக்குழந்தைக்கான முத்தான மூன்று திட்டங்கள்

| கோல்டன் பேபி சேமிப்புத் திட்டம் | | |
|---|---|---|
| உங்கள் முதலீடு | காலம் | முதிர்வுத் தொகை |
| Rs. 1000/- | 21 வருடம் | 1 லட்சம் |

| குழந்தைகள் கல்வி நல திட்டம் | | | |
|---|---|---|---|
| குறைந்த முதலீடு | மாதம் பெறும் தொகை | வருடம் | முதிர்வு தொகை |
| ரு. 10,000/- | ரு. 200/- | 5 | ரு. 15,000/- |

| திருமணச் சேமிப்புத் திட்டம் | | |
|---|---|---|
| குறைந்த முதலீடு | வருடம் | முதிர்வு தொகை |
| ரு. 10,000/- | 10 | ரு.1,00,000/- |

**அனைத்து டெபாசிட்டுகளுக்கும்**

- வட்டிக்கான பின் தேதியிட்ட காசோலை
- முதிர்வு தொகைக்கான பின் தேதியிட்ட காசோலை
- உத்திரவாதம், பாதுகாப்பு, உடனடி சேவை

| முதியோருக்கான சேமிப்புத் திட்டம் | | | |
|---|---|---|---|
| குறைந்த முதலீடு | மாதம் பெறும் தொகை | வருடம் | முதிர்வு தொகை |
| ரு. 20,000/- | ரு. 400/- | 5 | ரு. 25,000/- |

ரு. **50,000/-** மற்றும் அதற்கு மேலும் டெபாசிட் செய்பவர்களுக்கு அசையா சொத்து உத்திரவாத பத்திரம் உங்கள் பெயரில் பதிவு செய்து தரப்படும். செலுத்தும் தொகைக்கு உத்திரவாதம் பின் தேதியிட்ட காசோலைகளாக வழங்கப்படும்.

# ஸ்ரீ மாரியாஸ் சிட்ஸ் (பி) லிட்.,

| மாதங்கள் | செலுத்தும் தொகை | முன்பதிவுத் தொகை | சீட்டுத் தொகை | பரிசு விபரம் |
|---|---|---|---|---|
| 40 | 250 | 25 | 10,000 | V.I.P. பேக் |
| 20 | 500 | 25 | 10,000 | டிபன் பாக்ஸ் |
| 20 | 1,250 | 50 | 25,000 | பிளாஸ்க் |
| 20 | 2,500 | 60 | 50,000 | ஹாட் பேக் |
| 50 | 2,000 | 125 | 1,00,000 | டிபன் கேரியர் |
| 20 | 5,000 | 125 | 1,00,000 | 1 கிராம் தங்க நாணயம் |
| 40 | 7,500 | 400 | 3,00,000 | 2 கிராம் தங்க நாணயம் |




படிப்பகம்

www.padippakam.com

# PONNAIYAH RAMAJAYAM COLLEGE,

NATARAJAPURAM SOUTH,
**THANJAVUR-613 007.**
PHONE: 24707, 22847

## COURSES OFFERED FOR 1996-'97

01. B.Sc (COMPUTER SCIENCE)
02. B.Sc (BIO-CHEMISTRY)
03. B.Sc (LEATHER SCIENCE)
04. B.Com.
05. B.B.A.
06. M.C.A.
07. P.G.D.C.A. (RAM INSTITUTE)

## பாரபின் மெழுகு உபயோகிப்பாளர்கள் தேவைக்கு

இப்பொழுது உலகப் பிரசித்தி பெற்ற **ஜப்பான் புகழ் நிப்பான் சீரோ** கம்பெனியினால் தயாரிக்கப்பட்ட பாரபின் மெழுகு வகைகள் இந்தியாவில் உங்கள் தேவைக்கேற்ப மெழுகு தீப்பெட்டி, மெழுகு வர்த்தி, மருந்து வகைகளுக்கு, அழகு சாதனங்கள், ரொட்டி மற்றும் பிஸ்கட் ராப்பர் கோட்டிங் வகைகளுக்கு அணுகவும்.

தேவைக்கு அணுகவும்

**பயோனியர் ஆசியா இண்டர்நேஷனல்,**
பூபதி பில்டிங்,
சிவகாசி. © 22422
Fax No. 04562-22655 & 22056
26, கார்பண்டர் தெரு, நெல்லிதோப்பு,
பாண்டிச்சேரி. © 31827

PIONEER ASIA





படிப்பகம்

www.padippakam.com



# உடன்பிறவா சகோதரிகள்

சரித்திரத்தில் பல பெண்கள் உடன் பிறவா சகோதரிகளாக இருந்தார்கள். எங்கெங்கோ இருந்த அவர்களை ஒன்று சேர்த்தது போராட்டம்தான். மனிதர்களின் உரிமைக்காக சமூக அரசியல் இயக்கங்களில் இணைந்து போராடிய அந்தப் பெண்களில் பலர் குடும்பங்களை உதறி எறிந்தார்கள். இயக்கம்தான் குடும்பம் என்று வாழ்ந்தார்கள். சிவப்பு இயக்கம் என்று வர்ணிக்கப்படும் இடதுசாரி இயக்கமும் கறுப்பு இயக்கம் என்று அழைக் கப்படும் திராவிடர் இயக்கத்தின் முன்னோடியான சுயமரியாதை இயக்கமும் அப்படிப் போராட்டத்தில் சகோதரிகளாக இருந்த பல பெண்களை உருவாக்கின. இந்த வரலாற்றிலிருந்து சில பக்கங்கள் வரும் பக்கங்களில் விவரிக்கப்படுகின்றன.

# சிவப்புப் பெண்கள்

## மைதிலி சிவராமன்

ஆட்டோவில் சவாரி செய்து கொண்டிருக்கும் போது நாட்டுநடப்புகள், விலைவாசி, கொலைக் குற்றம் அதிகரிப்பு போன்றவை பற்றி ஓட்டுனருடன் அல சிக் கொண்டிருக்கையில் அவர் திடீ ரென்று ஒரு குண்டை போட்டார். "பொம்பளெங்க நீங்கெல்லாம் சேர்ந்து தானே அந்தம்மாவுக்கு ஓட்டுப் போட் டீங்க, இப்ப நல்லா அனுபவியுங்க" என் றார்.

தமிழகத்தில் ஊழலும், சர்வாதிகாரமும் கொடி கட்டிப் பறப்பது உண்மை. ஆனால், அதற்குப் பொறுப்பு முதல்வர் பெண் என்பதும் பெண்கள் போட்ட ஓட் டுமா? இந்திரா காந்தி ஆட்சியில் ஜனநா யகம் முடக்கப்பட்டதற்கும் 'பொம்பளெ' ஆட்சியைக் குறை சொன்னவர்களுக்கு குறைவில்லை. பொதுவாக, பெண் அரசி யல் தலைவர்கள் என்றாலே இங்கிலாந் தின் 'உருக்குப் பெண்மணி' மார்கரெட் தாட்சர், 'எமர்ஜென்சி' புகழ் இந்திரா காந்தி, 'இதய தெய்வம்' வழிபாடு மூலம் புதிய சிகரங்களைத் தொட வைத்த ஜெயலலிதா போன்றவர்களே மக்கள் நினைவுக்கு வருகிறார்கள். காரணம், அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகளே மக்களுக்குத் தெரிந்தவர்கள். அரசு பதவி ஏதும் வகிக்காத, ஆனால், அர சியலில் தீவிரமாக ஈடுபட்டு, நேர்மையா கவும் இலட்சியபூர்வமாகவும் வாழ்ந்து, அதற்காகவே இன்னுயிர் நீத்த பெண் களை மக்கள் அறிய வாய்ப்பில்லை. அதிகாரப்பூர்வ வரலாற்றில் இவர்கள் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளனர். ஏழாண்டுகளுக்கு முன் இந்தியா வந்த ஒரு தென்னாப்பிரிக்க இந்தியர் சென் னையில் தில்லையாடி வள்ளியம்மைக்கு அஞ்சலி செலுத்த ஏதாவது நினைவுச் சின்னம் இருக்கிறதா என்று கேட்க, ஜவு ளிக்கடை இருக்கிறது என்று சொல்ல லாமா வேண்டாமா என யோசிக்க வேண்டியிருந்தது! தேசப் பணியில் தீவி ரமாக ஈடுபட தனக்கு உத்வேகம் அளித் தவர்களில் ஒருவராக காந்தியடிகளால் குறிப்பிடப்பட்ட வள்ளியம்மைக்கு நமது பாடப் புத்தகங்களில் கூட சமீப காலத் தில்தான் சிறிது இடமளிக்கப்பட்டுள்ளது.

பெண் அரசியல்வாதிகள் பற்றி நினைவு கூறுமுன் அரசியலின் வியாக்கி யானத்தை பற்றி தெளிவு பெற வேண்டி யுள்ளது. அரசியல் கட்சிப் பணி மட்டும் அரசியல் அல்ல. ஒரு சமூகத்தில் மக்க ளிடையே உள்ள உறவுகளை மாற்றுவ தற்கோ அப்படியே தக்க வைத்துக் கொள்வதற்கோ மேற்கொள்ளப்படும் நட வடிக்கைகள் யாவும் அரசியலில் அடங் கும். ஆகவே ஏழை விவசாயிகளும் நகர்ப்புற தொழிலாளர்களும் பங்கேற்கும் வர்க்கப் போராட்டங்களும், சமூகத்தின் மிதியடிகளான பெண்கள், தாழ்த்தப்பட்ட சாதியினர், பழங்குடியினர் ஆகியோரின் சம உரிமைக்கான இயக்கங்களும் அரசி யல் வரையறைக்குட்பட்டவை.

இத்தகைய பரந்த புரிதலின்படி ஏராள மான பெண்கள் அரசியலில் ஈடுபட்டவர் கள். இவர்களில் பல வரலாற்றுக் கதாநா யகிகளை மாணவர்கள் அறிந்துகொள்ள வாய்ப்பில்லாதது பெரும் இழப்பு. இந் திய சுதந்திரப் போராட்டத்தில், ஏகாதிபத் தியத்தை எதிர்த்து காங்கிரஸ், கம்யூ னிஸ்டு, சோஷலிஸ்டு ஆகிய கட்சி உறுப்பினர்களாக, பெண்கள் ஆயுதம் தாங்கிய போராளிகளாக, சிலர் தனி நபர் களாகக்கூட ஈடுபட்டுள்ளனர். ஒத்துழை யாமை இயக்கத்தில் பெண்களின் பங்கு மகத்தானது. இருபதுகளின் துவக்கத்தில்

படிப்பகம்

www.padippakam.com

பம்பாய் போன்ற தொழில் வளர்ச்சிய டைந்த நகரங்களில் பெண்களும் பங்கேற்ற வேலை நிறுத்தங்கள் நடைபெற் றன. நாற்பதுகளில், இரண்டாம் உலகப் போர் பின்னணியில், மக்களின் அதிருப்தி, எதிர்பார்ப்புகள், எழுச்சி ஆகிய வற்றின் பிரதிபலிப்பாக பல போராட்டங் கள் வெடித்தன. கப்பற்படை (RIN) கிளர்ச்சிக்கு ஆதரவான மக்கள் இயக்கத் தில் ஏராளமான பெண்கள் பங்கேற்றனர். ஒருவர் அமரரானார். வங்கத்தில் குத்த கைதாரர்களின் தெபாகா இயக்கம், ஆந் திராவில் தெலுங்கானா போராட்டம், புன் னப்பரவயலார் (திருவிதாங்கூர்) விவசா யிகளின் எழுச்சி, வோர்லி பழங்குடியின ரின் கிளர்ச்சி, தமிழ்நாட்டில் ரயில்வே தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் ஆகியவற்றில் பெண்களின் பாத்திரம் குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில், கணிச மான உழைப்பாளிகளைக் கொண்ட பெண்களின் வெகுஜன அமைப்பு, கம்யூ னிஸ்டு கட்சியின் வழிகாட்டுதலில் இயங் கிற்று. சுதந்திர இந்தியாவில் இடதுசாரி இயக்கத் தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள் மாணவர்கள் ஆகிய அமைப்புகளிலும் வறுமை, விலைவாசி உயர்வு, நலிந்த பகுதி மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் போன்ற வற்றை எதிர்த்த போராட்டங்களிலும் பெண்கள் திரட்டப்பட்டனர்.

இடதுசாரி இயக்கத்தைச் சார்ந்த பெண் களுக்கு ஒரு தனிச் சிறப்புண்டு. உறுதி யான கொள்கைப் பிடிப்பு, அரசை எதிர்த்து நின்று சிறைவாசம் உட்பட பல கஷ்டங்களை சகித்துக் கொள்ளும் மன உறுதி. கட்சிக் கட்டுப்பாட்டை ஏற்கும் பக்குவம், பொது அறிவையும், சித்தாந்த தெளிவையும் பெறுவதற்கான சுய முயற்சி, ஊக்கம் ஆகியவற்றை கொண்ட பெண்கள்தான் இவ்வியக்கத் தில் நிலைத்திருக்க இயலும். இங்கு வாழ்க்கையில் முன்னேற கட்சியை ஏணிப்படியாக்க முடியாது. தியாக உணர் வில்லாதவர்களுக்கு இடமில்லை. இவ்வி யக்கத்தில் 'கட்அவுட்' கலாச்சாரம், காலில் விழும் சுயமரியாதையின்மை, 'புரட்சித் தலைவி' துதி பாடல்கள் போன்ற எடுபிடித்தனங்கள் வெறுக்கப்ப டுகின்றன. மாபெரும் தலைவர்களையும் விமர்சிக்கத்தடையில்லை.

இத்தகைய இடதுசாரி இயக்கத்தில் தங் களை அர்ப்பணித்துக் கொண்டவர்களில் ஒரு சிலரை சுருக்கமாக நினைவு கூர் வது எழுச்சியான அனுபவமாகும்.

இக்கட்டுரையில் இடம்பெறாத இடது சாரி இயக்கப் போராளிகள் ஏராளமா னோர். இந்திய கம்யூனிஸ்டு கட்சி வர லாற்றில் தங்கள் முத்திரையைப் பதித்த வர்களில் பார்வதிகிருஷ்ணன், விமலா ஃபரூகி, ரேணு சக்கரவர்த்தி, விமலா தாங், கீதா முகர்ஜி தமிழகத்தில் தையல் நாயகி அம்மாள், மீனாட்சி சுந்தரத்தம் மாள், ஜனகம் இஸ்மாயில், மீனாகிருஷ் ணசாமி போன்ற பலர் உள்ளர். மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் (எம்.எல்) கட்சி அல் லது நக்ஸல்பாரி என்று அழைக்கப்பட்ட பல குழுக்களில் ஈடுபட்டு போலீஸோடு மோதல் என்ற பெயரில் சுட்டுக் கொல் லப்பட்ட பெண்கள் பலர்.

சாமானியர்களாக இருந்த மேற்கண்ட அனைத்துப் பெண்களையும் போராளிக ளாக மாற்றியது அவர்களின் சித்தாந்தப் பிடிப்பே. தெலுங்கானா வீராங்கனை சாலம்மா தன்னை பேட்டி கண்டவர்களி டம் கூறியது இக்கட்டுரைக்குப் பொருத்த மான முடிவுரையாக இருக்கும்: "கட்சிக் காக நான் காடுகளிலும் கிராமங்களிலும் அலைந்து திரிந்தேன். அப்போது நீ என்ன செய்தாய் என்று கேட்டீர்கள். 'அக் காலத்தின் சொல்லில் வாரா சோகங்களில் என் பதிலை நீங்கள் காண லாம், என்றே சொல்வேன்... என் வீடு சூறையாடப்பட்டது. என் வாழ்க்கை வெறிச்சோடியிருக்கும்... ஒரு கம்யூ னிஸ்டு தன் தோளின் பலத்தில்தான் வாழ்கிறாள் என்ற நம்பிக்கையிலும் வலி மையிலும்தான் நான் வாழ்ந்து வந்தேன். கூழுக்காகவும், தண்ணீருக்காகவும் பட்ட பாடு -இதற்கான போராட்டம் அளித்த பலத்திலும் உறுதியிலும் நான் வாழ்ந் தேன்..." ('நாங்கள் வரலாறு படைத்தோம் என்ற ஸ்திரீ சக்தி சங்கடனாவின் நூலிலி ருந்து-1989.)

# சயனைட் – அந்தமான் சிறை

இந்திய விடுதலைப் போராட்ட களத் தில் ஆயுதமேந்திய போராட்டத் தில் நம்பிக்கை கொண்டு சிறு குழுக்க ளாக செயல்பட்ட புரட்சியாளர்களிலும் பெண்கள் அமரர்களானார்கள். இதில் முன்னணியில் நின்ற பூமி வங்கம். இப்'புண்ணிய' பூமியில் வீரமகள்கள் பலர் இந்திய சுதந்திரப் போராட்டத் திற்கு தங்கள் உயிரை உரமாக்கியவர் கள். ப்ரீதிலதா என்னும் இளம்பெண் சிட்டகாங்கில் ஐரோப்பியர்களின் கிளப் ஒன்றில் கேளிக்கையில் ஈடுபட்ட வெள்ளையரைச் சுட்டபின், கைதாகா மல் தப்ப சயனடை விழுங்கி இறந் தாள்.' ப்ரீதியின் ஷர்ட் பாக்கெட்டில் இருந்த ஒரு சிறு கடிதத்தில் அவள் எழுதியிருந்தது "இந்திய சகோதரிகள் தாங்கள் பலவீனமானவர்கள் இல்லை என்பதை உணருவார்கள் என நம்புகி றேன். இந்த நம்பிக்கையோடு நான் என் உயிரை மாய்த்துக் கொள்கிறேன்." பெண்களும் தாய்நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்வார்கள் என்பதை உணர்த்த விரும்பியதாக ப்ரீதி சக புரட் சியாளர்களிடம் கூறினாளாம்.



ப்ரீதி

சமீபத்தில் உயிர் நீத்த கல்பனா தத் (ஜோஷி) ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கத் தில், தாரகையாகத் திகழ்ந்தவர். காந்திய டிகள் சிட்டகாங் சென்றபோது ஏழு வயதான சிறுமி கல்பனா தனது தங்க வளையலை அவிழ்த்துக் கொடுத்தாள்! 'பதினாறு வயதினிலே' நம் இன்றைய சினிமா கதாநாயகிகளைப் போல் டூயட் பாடி ஆடிக் கொண்டிருக்காமல், வீர சுதந்திரம் வேண்டி, சூர்ய சென் என் னும் புரட்சியாளரின் இயக்கத்தில் சேர்ந்து துப்பாக்கி ஏந்தி வெள்ளைய ரோடு போராடியவர். சிட்டகாங் ஆயு தக் கிடங்கை தாக்கிய குழுவின் உறுப் பினர். பலமுறை தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தவர். பத்தொன்பது வயதில் நாடு கடத்தப்பட்டு அந்தமான் சிறைக்கு அனுப்பப்பட்டார். இளம் பெண் என்பதால் மரண தண்டனையி லிருந்து தப்பினார். மக்கள் போராட்டங் களினால் காலனி அரசு பெண் கைதி களை மட்டும் விடுவித்தபோது, கல் பனா விடுதலையானார். பின்னால் பல தீவிரவாதிகளைப் போல் மார்க்ஸிய தத் துவத்தால் ஈர்க்கப்பட்டு கம்யூனிஸ்டு கட்சியில் சேர்ந்தார். இந்தியக் கம்யூ னிஸ்டு கட்சியின் செயலாளர் பி.சி. ஜோஷியை மணந்தார். கம்யூனிஸ்டுக் குடும்பங்களில் எண்ணற்ற குழந்தைக ளுக்கு கல்பனா என பெயர் சூட்டப்பட் டதில் ஆச்சர்யமில்லை. அவருடைய நெஞ்சுறுதியும் தேசப்பற்றும் மக்களுக் குப் பெரும் உத்வேகத்தை அளித்து வந்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

## கண்ணை கவரும் பஞ்சலோக சிலைகள்



- கோவில்களுக்கான பஞ்ச லோக தெய்வச்சிலைகள்
- கலசங்கள், ரதங்கள், கிரீடம், திருவாஷிகள்
- வெள்ளி, செம்பு, பித்தளை தகடுகளில் நகாஷ் வேலைப் பாடுகள் கொண்ட கவசங் கள்
- பல வகையான குத்து விளக் குகள்.
- வீட்டு அலங்கார பொருட் கள்

மற்றும் அனைத்து சிற்பங்களும் சிறந்த வேலைபாடுகளுடன் செய்து தருகி றோம்.

**ஏற்றுமதி ஆர்டர்கள் வரவேற்கிறோம்**

விபரங்களுக்கு

**ஸ்தபதி L.ராதா கிருஷ்ணன்**

உலோக சிற்ப வார்ப்பட தொழிலகம்
உற்பத்தியாளர் & ஏற்றுமதியாளர்,
45 -ஜீவானந்தம் வீதி, ஈரோடு-638 002.

72X31 **எங்களது புதிய தொலைபேசி : 222631**

---

தாய்மார்களே மறந்துடாதீங்க !
ருசியான சமையலுக்கு !

# சக்தி மசாலா பொடிகள்



**மூன்று முறை தமிழ்நாடு அரசின் சிறுதொழில் விருது, ஜம்னாலால் பஜாஜ் விருது, மற்றும் 1994-ம் ஆண்டின் சிறந்த தரத்திற்கான தேசிய விருது பெற்றது.**

QUALITY PRODUCTS


## சக்தி டிரேடிங் கம்பெனி

6, மாமரத்துப் பாலம்,
ஈரோடு -638 004.
போன்: 0424-533601 To 533606

---

*"Wish you a Happy New Year and Pongal Greetings to All"*

# WE DELIVER IN TIME. EVERYTIME.



## THE FRANCH EXPRESS GLOBAL COURIER

| ERODE OFFICE | MADRAS OFFICE | BANGALORE OFFICE | BOMBAY OFFICE |
|---|---|---|---|
| 528, Vivekananda Road, Narayanavalasu, **Erode-638 011. Tel: 215901 Fax:0424-215902.** | 867C, Poonamallee High Road, Kilpauk, **Madras-600 010. Tel: 6414809. Fax:044-6412245.** | Krishna Krupa, 77/I, II Floor, 2nd Main Road, Seshadripuram, **Bangalore-560 020. Tel:3348117.** | Mulji Mistry Building, Flat No.I/A-C, Tejpal Road, Opp. Parle Glucose Factory, Vile Parle (East) **Bombay-400 057. Phone:8346142.** |

www.padippakam.com



When You buy a Computer from TOPLINE, You buy a Total solution

Our systemes are manufactured to meet the needs of the customer.

We also develop and offer suitable application softwares for the customers.

We read your need and fill the gap.

We offer 386 DX, 486 DXs, Pentium and Lan, UNIX and TCP/IP solutions

## Ganesh Computers

# TOPLINE COMPUTERS LTD.,

ADMN Office : 941, East Main Street, Thanjavur - 613 001. ☎:(04362) 22761.
Factory & Regd : Office. 184, North Main Street, Thanjavur - 613 009. ☎:(04362) 23761.
Branch Office : A/1/3 Gemini Parsan Apartments, Mount Road, Madras - 6 ☎: 8268384
629, Melur Road, K.K. Nagar, Madurai - 20 ☎:(0452) 45427

# NAGAI SIVA SAKTHI BENEFIT FUND LIMITED

## நாகை சிவசக்தி பெனிபிட் பண்ட் லிமிடெட்

SIVASAKTHI (இந்திய அரசு 1956ன் கம்பெனிகள் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டது)

**பிக்சட் டெபாசிட் 22% 45 மாதங்களில் இரட்டிப்பு தொகை**

## நகைக் கடன் கிராம் ஒன்றுக்கு ரூ 325 வீதம் பெறலாம்

*சிவசக்தி ரியல் எஸ்டேட் பிரைவேட் லிமிடெட்*
*(இந்திய அரசு 1956ன் கம்பெனிகள் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டது)*

சிறப்பு
தரும்
சிவசக்தி

**வீட்டுக்காரன் முதலீட்டுத் திட்டம் !**
**ரூ 5000 முதலீடு செய்து 20வது மாத முடிவில்**
**ரூ 10000 மதிப்புள்ள வீட்டுமனைப் பெற வருக**

**22 Ct தங்க நகைகள், வெள்ளி பாத்திரங்கள், கொலுசுகள் வாங்க**

# சிவசக்தி துர்கா ஜுவல்லர்ஸ்

*சிவசக்தி குரூப் நிறுவனங்கள்*

பதிவு அலுவலகம் 81 கே. டி பி. பில்டிங் கடைத்தெரு, **நாகப்பட்டினம் 611001**
*போன் :- 22754, 22629, 22453*

*தலைமை ஆலோசகர்*
**Ln. V. பக்கிரிசாமி** B.Sc, F.C.A.

*நிர்வாக இயக்குனர்*
**Rtn. சிவசக்தி ஆர். கே. ரவி** M.A.

**சிவசக்தியுடன் இணைவோம் ! சிறப்பாக வாழ்வோம்**

www.padippakam.com

அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# A NEVER BEFORE - NEVER AGAIN OPPORTUNITY

**Rs.2,000**
**GIVES YOU**

**Rs.6,000**
after 6th Year
+
**Rs.50,000**
after 12th Year

ARCHANA'S



**AGRO GOLD**
GOAT FARM UNITS

**Rs.3,000** GIVES YOU

Upto **Rs.750**
EVERY YEAR
+
**Rs.3,000**
back after 6th Year
+
**Rs.50,000** after 12th Year

*INCOME ASSURED THROUGH ADVANCED POST DATED CHEQUES*
*YOUR INCOME IS 200% SECURED BY GOAT FARM AND*
*TEAK, MANGIUM & ORCHARD PLANTATIONS*
*★ FREE ACCIDENT INSURANCE COVER FOR Rs. 50000*
*★ HEALTH CARD FACILITY ★ 3 DAYS FREE STAY AT COURTALLUM*

## ARCHANA PLANTATIONS LTD

***Corp. Off: 16, Sarojini Street,***
***Ramnagar, Coimbatore-641009 Tel: 236565 236575***

Madurai Office: 155/1, NORTH VELI STREET,
MADURAI -625 001. PHONE: 621912
***TRICHY OFFICE: 10-A, TANJORE ROAD, TRICHY-620003***

Yes, I am Interested in Your Agro Gold units.
Please send Your Representative / Your Brochure
Name ------------------------------------------
Address ------------------------------------------

*WINNER OF CHIEF MINISTER "Dr. PURATCHI THALAIVI AWARD"*
*FOR BEST PLANTATION COMPANY*

---

# அருள்மிகு வேதாரண்யேசுவர சுவாமி திருக்கோயில் வேதாரண்யம்



★ சிவபெருமான் அகத்தியருக்கு திருமணகோலத்தில் காட்சியளித்தது
★ அப்பர் -சம்பந்தரால் -மூடிக்கிடந்த திருக்கதவை -திறக்க -அடைக்க பாடியது.
★ தொகை அடியார்கள் 10 பேர் சேர்ந்து 73 நாயன்மார்கள் அமர்ந்துள்ளது.
★ தெற்கு முகம் பார்த்து 8 கைகளுடன் சாந்த பார்வையுடன் துர்கையம்மன்
★ ஒன்பது நவக்கிரகங்களும் ஒரே திசையில் அமர்ந்து திருமண கோலத்தினை பார்ப்பது.
★ வீணை இல்லாத சரஸ்வதி தவம் இருப்பது.
★ ஆடி அமாவாசை, தை அமாவாசை, மாளய அமாவாசை, சர்தோதயம், மஹோதய புண்ணிய காலத்தில் கடல் நீராடல்
★ வேதாரண்யம் விளக்கழகு என்ற பெருமைபெற்றது
★ ஸ்ரீராமபிரானுக்கு பிரமகத்தி தோஷம் நிவர்த்தி செய்த ஸ்ரீ வீரகத்தி விநாயகர் அருள்பாலித்தது

இவ்வளவு சிறப்பு வாய்ந்த புண்ணிய ஸ்தலத்திற்கு வாருங்கள்-

அருள் பெறுங்கள்

**ஸ்ரீலஸ்ரீ க. செவ்வந்தி நாத பண்டார சந்நிதி**
யாழ்பாணம் கருணவாய் வரணி ஆதீனம்
**மேலவீதி - வேதாரண்யம்**

---

## HAPPY PONGAL GREETINGS

## FOR BEST WHITE SALT AND IODISED SALT.



GRAMS : MURALI
PHONE : 50276
STD CODE 04369

TRADE MARK
"MSW"


# MURALI SALT WORKS

**SALT MANUFACTURERS AND MERCHANT**
70. SOUTH STREET,
***VEDARANIYAM-614 810***
TAMILNADU

படிப்பகம்

www.padippakam.com

ராணி ஜான்சி ராணுவப் பிரிவின் தலைவராக பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக போர் தொடுத்த கேப்டன் லட்சுமி மக்களிடையே பிரபலமானவர். மருத்துவம் படித்தபின் தந்தையின் விருப்பப்படி மேல் படிப்புக்கு இங்கிலாந்து செல்லாமல் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டார். லட்சுமி. சிங்கப்பூரில் மருத்துவராக செயலாற்றிய போது நேதாஜியோடு அறிமுகம் ஏற்பட்டு இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்தார். பர்மா காடுகளில் பிரிட்டிஷ் அரசால் கைது செய்யப்பட்டு சிறைவாசியானார். விடுதலையான பிறகு கான்பூரில் மருத்துவராக பணியாற்றும் லட்சுமி மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியில் சேர்ந்து தொழிற்சங்க வாதியாகவும், மாதர் இயக்கத் தலைவராகவும் இன்றும் செயல்படுகிறார். 81 வயதில் அவருடைய கம்பீரமான நடையும், எழுச்சியான கோஷங்களும், உணர்ச்சி வசப்பட்ட சொற்பொழிவுகளும், ஊழியர்கள் மீதுள்ள அக்கறையும், பாசமும், வயது, உடல் சம்பந்தப்பட்டதல்ல, உணர்வு பற்றியதே என்று நினைக்க வைக்கிறது. அவருடைய மகள் சுபாஷினி அலி உ.பி.யில் தொழிலாளர்களிடையே பெரும் செல்வாக்குடைய, சி.ஐ.டி.யு.வைச் சார்ந்த தொழிற்சங்கவாதி. ஓராண்டு காலம் எம்.பி.யாக இருந்தார். தேசிய பெண்கள் நலக் கமிஷனில் உறுப்பினராக இருந்தார். மத நல்லிணக்கப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருபவர்.




கேப்டன் லட்சுமி

# மனைவியை அடிப்பதை நிறுத்தினார்கள்

ஐதராபாத் நிஜாம் மன்னராட்சியில் நிலப் பிரபுக்களின் ஒடுக்கு முறையை எதிர்த்து வெடித்த ஏழை விவசாயிகளின் தெலுங்கானா புரட்சி நமது வரலாற்றுப் புத்தகங்களில் இருட்டடிப்பு செய்யப்பட்ட ஒரு மகத்தான அத்தியாயம். 1946-ல் துவங்கிய இப் போராட்டம் 1951 வரை நேருவின் ஆட்சியிலும் தொடர்ந்தது. கம்யூனிஸ்டு கட்சி தலைமை தாங்கிய இவ்வியக்கம் 300 கிராமங்களையும் சுமார் 30 லட்சம் விவசாயிகளையும் நிலப்பிரபுத்துவக் கொடுமையிலிருந்து விடுவித்தது. 'நிலம் உழுபவனுக்கே' என்று காங்கிரஸ் கட்சியின் லாகூர் மாநாட்டில் (1931) நிறைவேற்றப்பட்டு வெறும் கனவாக இருந்த கோஷம் கம்யூனிஸ்டுகளால் தெலுங்கானாவில் நனவாகியது. இதற்கு இவர்கள் கொடுக்க வேண்டியிருந்த விலை, 10,000 பேர் சிறையிலடைக்கப்பட்டதும் 4000 பேர் உயிரிழந்ததுமேயாகும். இன்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உத்வேகம் அளித்துவரும் இப் புரட்சியில், பெண்களின் பங்கு மகத்தானது. இப் போராட்டத்தில் பெண்கள் போராளிகளாகவும், போராளிகளைப் பாதுகாத்தும் தலைமறைவான போராளிகளுக்கும் வெளியிலிருந்தவர்களுக்கும் இணைப்புப் பாலமாகவும் செயல்பட்டனர். விடுவிக்கப்பட்ட கிராமங்களை நிர்வகித்தனர். அரசியல் மற்றும் சமூக சீர்திருத்த பிரச்சாரத்திலும் தீவிரமாக ஈடுபட்டனர். அமரர்களான பெண்கள் பலர். நம்மை மெய் சிலிர்க்க வைக்கும் இந்த வீர காவியங்களின் ஒரு கதாநாயகி மல்லு ஸ்வராஜ்யம். இன்று ஆந்திரா மகிளா சங்கத்தின் தலைவராகவும் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் துணைத் தலைவராகவும் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலக் குழு உறுப்பினராகவும் உள்ளார்.

ஈக்வாலிடி என்ற ஆங்கில ஏட்டிற்கு (அக். டிச. 1990) அளித்த பேட்டியில் ஸ்வராஜ்யம் தனது தெலுங்கானா நாட்களை நினைவு கூர்கிறார். "கெரில்லாப் படையிலும் பெண்களும் ஆண்களுடைய பயிற்சியையே பெற்றனர். 20 கிராமங்களுக்கு நான் தலைவியாக்கப்பட்டேன்... பெண்கள் சேதிகொண்டு செல்பவர்களாய் கெரில்லாப் படைத் தலைவர்களாய் கிராம பாதுகாப்பாளராய் வளர்ந்தனர். அடிமைகளாய் தேவதாசிகளாய் நடத்தப்பட்ட பெண்கள்... இந்த 20 கிராமங்களில் அடக்கு முறையை எதிர்க்கவும் தங்கள் உரிமைகளை உயர்த்திக் கொள்ளவும் தலைப்பட்டனர். மனைவியை அடிப்பது நின்றது... நேரு பிரதமரான பின்னரும் நிலப்பிரபுக்கள் கையே ஓங்கின நிலை தொடர்ந்தது. நாங்கள் காடு வாழ் பழங்குடியினரை ஒன்றுபடுத்தினோம். இப் பெண்கள் நிலத்தை உழவும்ஆயுதம் தாங்கிப் போராடவும் பயின்றார்கள். இப் போராட்டத்தின் மாபெரும் லாபம் சமுதாயம் பெண்களை ஆண்களுக்கு சமமாகக் கருதத் துவங்கியதுதான்... " என்றார் ஸ்வராஜ்யம்.


மல்லு ஸ்வராஜ்யம்

தெலுங்கானா போராட்டம் முடிவுற்ற பிறகு ஸ்வராஜ்யம் விவசாய சங்கத் தாலுகா செயலாளரானார். சக போராளியை திருமணம் செய்து கொண்டார். சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றினார். ஆந்திர மகிளா சங்கத்தை 2.5 லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட வலுவானப் பெண்கள் இயக்கமாக இன்று உருவாக்கியுள்ளதில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு. இன்றும் ஒரு சாதாரண கிராமப்புற பெண்ணின் தோற்றத்தையே கொண்டவர்.

"அரசியல் ஞானத்தை நான் பிரதானமாக மக்களிடமிருந்தே பெற்றேன். நான் படித்து அறிந்ததைவிட அனுபவங்கள் மூலம் படித்ததே அதிகம். மக்களை விட்டு விலகிச் சென்றால் இந்த அனுபவங்களை இழந்து மனத் தடைகளை உருவாக்கிக் கொண்டு விடுவோம்." இது வெறும் வாய்ப்பேச்சல்ல என்பதை அவர் இன்றும் நிரூபித்து வருகிறார்.

தெலுங்கானா இயக்கத்தில் ஈடுபட்ட ஏழை விவசாயப் பெண்களின் அரசியல் பக்குவம், துணிச்சலாக தலைமையை விமர்சிக்கும் போக்கு, ஆகியவை நம்மைத் திகைக்க வைக்கின்றன. இருபது வயதான விவசாயப் பெண் **நரசம்மா** கெரில்லாக் குழுவில் சேர்ந்து கட்சியிலும் தீவிர உறுப்பினரானார். செயல்வீரர்கள் கூட்டத்தில் அவர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி -


"நிஜாம் - ரஜாக்கர் காலத்தில் நாமே ஒவ்வொன்றையும் செய்ய முயன்றோம்; மக்கள் பெருமளவில் கிளர்ந்தெழுந்த போதிலும் அவர்களாகவே செயல்படுவதற்கான முன்முயற்சியை நாம் வளர்க்கவில்லை. பெண்கள் என்றால் கீழானவர்கள் என்ற பழைய கண்ணோட்டம் நீடிக்கிறது ... எங்களுக்கு வழிகாட்ட வேண்டும், எங்களை முன்னேற்ற வேண்டும், ஏளனம் செய்யக்கூடாது. நாங்கள் சற்று சுதந்திரமாக நடமாடினால் கூட சந்தேகக் கண்ணோடு பார்க்கிறார்கள். எதிரி மீது நடைபெறும் கெரில்லாத் தாக்குதல்களில் பெண்கள் யாரும் நேரடியாகப் பங்கெடுத்துக் கொள்ள ஏன் நீங்கள் அனுமதிப்பதில்லை?"



படிப்பகம்

www.padippakam.com

Ideal



BEST WICK STOVE

✷ISI Quality ✷Fuel Economy ✷High Efficency

Manufacturers

PRINCE ENGINEERING CO

221, Nethaji Main Road,
BIBIKULAM, MADURAI - 625 002.

படிப்பகம்

www.padippakam.com

# சாகித்ய அகாடமி விருது பெற்ற விவசாயத் தலைவி



"இந்த மனிதர்கள் விழித்துக்கொண்ட போது" (ஆங்கிலத்தில் ஆதிவாசி ரிவோல்ட்) என்ற சாகித்ய அகாடமி விருது பெற்ற நூலின் ஆசிரியர் கோதாவரி பாருலேகர் எழுத்தாளர் அல்ல! இது அவர் எழுதிய ஒரே நூலாகும். அவருக்கு கிடைத்த விருதுபற்றி கேட்டபோது. பழங்குடி மக்களின் துன்ப துயரங்கள், எதிர்பார்ப்புகள், ஆசைகள், அவர்களுடைய சத்திய ஆவேசம், போராட்ட உணர்வு, ஆகியவற்றை உள்ளபடியே எழுதினேன். அவ்வளவுதான்" என்றார். 40-களின் துவக்கத்தில் கம்யூனிஸ்டு கட்சியில் சேர்ந்த அவர், பம்பாய் மாகாணத்தின் முதல் பெண் வழக்கறிஞராவார். பம்பாயில் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் இயங்கிய பஞ்சாலைகளின் போராட்டம் கோதாவரியை இவ்வியக்கத்தின் பால் ஈர்த்தது. பிறகு கோதாவரியும் அவர் கணவர் பாருலேகரும் விவசாய சங்கத்தைக் கட்டத் தொடங்கினர். தாணே மாவட்டத்தில் கொடுமையாக சுரண்டப்பட்ட வோர்லி பழங்குடியினரோடு, காட்டில் அவர்களில் ஒருவராக வாழ்ந்து, அம்மக்களின் பேரன்பை பெற்றார் கோதாவரி. கூலியற்ற கட்டாய வேலை முறையை ஒழிக்கவும் கூலி உயர்வு பெறவும் வோர்லிகள் போராட்டத்திற்கு அவர் தலைமை தாங்கினார். போராட்டத்தில் அரசின் துப்பாக்கிப் பிரயோகத்தில் 5 பேர் மாண்டனர். கோதாவரி கைது செய்யப்பட்டு 1953 வரை தாணே போக முடியாமல் தடுக்கப்பட்டார். கோதாவரிக்கு பழங்குடியினரிடம் செல்வாக்கில்லை என்ற பிரச்சாரத்தை அரசு தீவிரமாகச் செய்து கொண்டிருக்கும்போது, அவர் அப்பகுதிக்கு திரும்பிப் போய் பேசிய முதல் கூட்டத்திற்கு 20,000 வோர்லிகள் திரண்டுவந்து அரசின் முகத்தில் கரியைப் பூசினர்! பழங்குடிப் பெண்கள் கணவனால் அடிபடுவதை தடுக்க அவர் கையாண்ட யுக்தி என்ன தெரியுமா? "பாருலேகர் என்னை அடிப்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?" என்று அவரிடம் அபாரமான மரியாதை வைத்திருந்த ஆண்களைக் கேட்பாராம்! கோதாவரி அகில இந்திய விவசாய சங்கத்தின் தலைவராக நீண்ட காலம் செயல்பட்டார். தற்சமயம் உடல் தளர்ந்து விட்டாலும் உள்ளம் தளராமல் இளைய தலைமுறையினருக்கு உற்சாகமும், நம்பிக்கை ஊட்டுபவருமாக இருந்து வருகிறார்.

# 'கேரோ' புகழ் அஹல்யா



அஹல்யா

அஹல்யா ரங்கனேகர் என்றவுடன் முதலில் நம் நினைவுக்கு வருவது பம்பாயில் அவ்வப்போது நடைபெறும் மிகப் பெரும் அளவிலான பெண்களின் விலைவாசி உயர்வு எதிர்ப்பியக்கங்களும் இதையொட்டி மந்திரிகளும் முதல்வர்களும் 'கேரோ' செய்யப்படுவதும்தான். பல ஆண்டு காலம் பம்பாய் நகர கவுன்சிலராக செயல்பட்ட அவருக்கு ஆசியாவின் மிகப்பெரிய குடிசை பகுதியான தாராவியில் இன்றும் நல்ல வரவேற்புண்டு. அவசர காலப் பிரகடனத்தின்போது சிறைக் கொடுமைகளை அனுபவித்தவர். 'தலித் மித்ர' (தலித்துகளின் நண்பர்) என்ற பட்டம் இவருக்கு சமீபத்தில் வழங்கப்பட்டது. கண்பார்வை மிகவும் குன்றியுள்ள போதும் அவருடைய அரசியல் பார்வையும் உணர்வுகளும் மிகக் கூர்மையாகவே உள்ளன. இவர் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர்.

அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் தலைவர் சுசீலா கோபாலன் கேரளத்தின் முக்கிய தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவர். சி.பி.எம். கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர். நாடாளுமன்றத்தில் இவர் பேசும்போது



சுசீலா

கீழ்மட்ட உழைப்பாளர்களின் பிரச்சினைகளை நேரடி ஞானத்திலிருந்து பேசுவதால் உள்ளத்தை தொடுவதாக இருக்கும். அவர் கணவர், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி தலைவர் மட்டுமல்ல, மக்கள் தலைவருமான ஏ.கே.கோபாலனோடு இணைந்து நீண்டகாலம் செயல்பட்டு அரசியல் முதிர்ச்சி பெற்றவர்.

# இளைய தலைமுறை




பிருந்தா

இளைய தலைமுறையினரைப் பற்றி ஒரு சில வார்த்தைகள்: ஜனநாயக மாதர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பிருந்தாகாரத் தொழிற்சங்கம், கட்சி ஆகியவற்றை உருவாக்கும் பணியை பல ஆண்டுகள் செய்துவிட்டு தற்சமயம் நாடெங்கும் புரட்சிகரமான மாதர் இயக்கத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார். இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து நடந்த பாரத் பந்தில் தில்லியில் நடந்த போலீஸ் தாக்குதலில் லத்தியால் அடிபட்டு பிருந்தா காரத்துக்கு கை எலும்பு முறிந்துவிட்டது. எப்போதும் போலீஸ் தாக்குதலின்போது முன்னணியில் இருப்பவர். அறிவு ஜீவிகள் தொழிலாளர்கள் என பல பகுதி பெண்களிடையே பணியாற்றும் திறமை பெற்றவர். பெண்ணின் பிரச்சினைகள் பற்றி ஆழ்ந்த புரிதல் உடையவர்.


படிப்பகம்

www.padippakam.com


# முழுமையான பாதுகாப்பு






# நினைவில் நிற்பது எல்ஜி

ஒரு முதலீட்டாளர் கவணிப்பது அவர் பாடுபட்டு சேர்த்த முதலுக்குரிய உத்திரவாதம் உள்ளதா என்பதைத்தான். இதை நன்றாக உணர்ந்துள்ளது எல்ஜி. அதனால் உங்கள் முதலீட்டிற்கு முழு உத்திரவாதமும், கூடுதல் இலாபமும், பூரண பாதுகாப்பும் அளிக்க முடிகின்றது.

பாதுகாப்பு என்றாலே நினைவில் நிற்பது எல்ஜி.

***எல்ஜி பைனான்ஸின் சேவை, 75 வருட அனுபவமும், ரூ. 500 கோடி மதிப்பும் கொண்ட எல்ஜி குழுமத்தின் பாரம்பரியத்துடன் இணைந்து வருகிறது.***

***இணைந்திடுவீர் எம்மோடு, வளர்ந்திடு வோம் வளமோடு.***

**ELGI**
**FINANCE**

## எல்ஜி பைனான்ஸ் லிமிடெட்

கார்போரேட் அலுவலகம்
4-வது மாடி, J.V.L. பிளாஸா, 501, மவுண்ட்
ரோடு, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
போன்: (044] 4348266,4348896, 4348897

**உங்கள் நம்பிக்கையே எங்கள் நற்பெயர்**

**தலைமை அலுவலகம்:** எல்ஜி ஹவுஸ், திருச்சி ரோடு, **கோயமுத்தூர்** 641 045. போன் (0422) 211740, 216132, 214571

**கிளைகள்: தமிழ்நாடு:** ● **சென்னை** : சிந்தூர் டவர்ஸ், 95 லஸ் சர்ச் ரோடு, ஆழ்வார்பேட்டை சிக்னல் - 600 004. 4995439 ● **திருச்சி:** காவேரி காம்ப்ளக்ஸ், 107-A சாலை ரோடு, உறையூர் - 620003. போன்: 23775 ● **சேலம்** : 4/21, முதல் மாடி, பிபிஎஸ் பிள்டிங்ஸ், ஓமலூார் மெயின் ரோடு, ஸ்வர்ணபுரி - 636 004. போன்: 449558. ● **மதுரை** : ராஜகணபதி காம்ப்ளக்ஸ், 1 & 2 தெற்கு மாசி வீதி - 625 001. போன்: 33784 ● **கரூர்** : C/o L.G. பாலகிருஷ்ணன்& பிரதர்ஸ் லிட், டிரான்ஸ்போர்ட் ஹவுஸ், கோயமுத்தூர் ரோடு - 639 001. போன் : 21444 ● **திருப்பூர்** : கிரீன் ஹவுஸ், L.R.G. காம்பவுண்ட், 2/7, கொங்கு நகர் மெயின் ரோடு - 638 607. போன்: 720191 ● KCP காம்ப்ளெக்ஸ், 153, மேட்டூர் ரோடு, ஈரோடு - 638 011. போன்: 75602 ● **கமல் காம்ப்ளெக்ஸ்,** 114/1D இண்பண்ட்ரி ரோடு, வெல்கடேஸ்வரா உயர்நிலைப் பள்ளிக்கு எதிரில், வெல்லூர் - 632 001 போன்: 20529 ● **ஆந்திரா** : செகந்தராபாத் : 9-1-95/6 சரோஜினி தேவி ரோடு - 500 003. போன்: 7703335 ● **விசாகப்பட்டினம்** : எண் 47-9-29 III லைன், துவாரகா நகர் - 530 016. போன்: 548073 ● **கேரளா** : **திருச்சூர்** : ரீஜன்ஸி ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், குருப்பம் ரோடு - 680 001. போன் : 25774 ● **கர்நாடகா** : **பெங்களூர்** : 205, இரண்டாவது மாடி, ராயல் கார்னர் ரோடு - 560 027. போன்: 2270271.

**● FIXED DEPOSITS ● HIRE PURCHASE ● LEASING ● BILL DISCOUNTING ● MERCHANT BANKING**




படிப்பகம்

www.padippakam.com



## கொலை விழுந்த இடத்தில் நாடகம்

"எந்த நாடகத்தை மக்கள் பார்க்கக் கூடாதென்பதற்காக சஃப்தர் கொலை செய்யப்பட்டாரோ, அதே இடத்தில் அதே நாடகத்தை நடத்திக் காட்டுவோம்" என்றார் அன்று காஜியாபாத்தில் காங்கிரஸ் குண்டர்களால் கொலை செய்யப்பட்ட சஃப்தர்ஹஸ்மியின் மனைவியும் சக நடிகையுமான மாலாஸ்ரீ. சொன்னபடி கொலை நடந்த இரு தினங்களுக்குள் அதே இடத்தில் அந்தத் தெரு நாடகத்தை நடத்திக் காட்டினார். அவர்களுடைய முற்போக்கு கலைக்குழு ஜனநாட்டிய மஞ்ச் மக்களிடையே ஜனநாயக மதச்சார்பற்ற கருத்துக்களை பரப்பி வந்துள்ளது. மாலாஸ்ரீ, சஃப்தர் இருவருடைய குடும்பங்களும் கம்யூனிஸ்டு இயக்கத்தோடு நெருக்கமான தொடர்புடையவை. சஃப்தரின் மறைவால் ஏற்பட்ட இழப்பும் துயரமும் மாலாஸ்ரீயின் கொள்கைப் பிடிப்பை மேலும் வலுப்படுத்தியுள்ளது. சஹ்மத் என்ற அமைப்பின் பெயரில் அவர்களுடைய நடவடிக்கைகள் விரிவடைந்து நாடெங்கும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. பெண்கள் பத்திரிகை ஒன்றிற்கு பேட்டியளித்த மாலாஸ்ரீ கூறியது: "சஃப்தரை கணவர் என்பதைவிட நண்பராகவே நான் கருதினேன். அனைத்தையும் நாங்கள் பகிர்ந்து கொண்டோம். என்னுடையது அவருடையது என்று எதுவும் இல்லை. பிரச்சினைகள், கருத்துக்கள் எல்லாமே எங்களுக்கு பொதுச் சொத்தாக இருந்தது. அதே சமயம் எங்கள் சுதந்திரத்தையோ தனித்துவத்தையோ நாங்கள் இழக்கவில்லை."

## உரிமைக்காக அடிபட்டு செத்த பெண்கள்

அந்தமான் சிறைக்குச் சென்று முன்னாள் கைதிகளின் பெயர்களைப் பார்க்கும்போது பல தமிழர்களுக்கு ஓர் ஆதங்கம் ஏற்படுவதுண்டு. தமிழ்ப் பெயர்களைப் பார்க்க பூதக்கண்ணாடி தேவைப்படுகிறதே என்று. ஆனால் தமிழக இடதுசாரி இயக்கத்தில் தேச விடுதலைக்காக, உழைப்பாளர்களின் உரிமைக்காக உயிர்நீத்தவர்கள், பேரிழப்பிற்கு உள்ளானவர் ஆகியோரைக் குறிப்பாக, பெண்களை நினைக்கும்போது ஆறுதல் மட்டுமல்ல, பெருமிதமும் ஏற்படுகிறது. 1946-ம் ஆண்டு தென்னக ரயில்வே தொழிலாளர் போராட்டம் இந்திய தொழிற்சங்க இயக்கத்தில் ஒரு மைல்கல்லாகும். [illegible] தொழிற்சங்கத் தலைவர்களில் ஏ.பாலசுப்பிரமணியமும் ஒருவர். இதை அறிந்து ஆத்திரமடைந்த திண்டுக்கல் தோல்பதனிடும் தொழிலாளர்கள் காவல் நிலையத்திலிருந்து தங்கள் தலைவர் பாலசுப்பிரமணியத்தை விடுவித்ததை ஒட்டி தொழிலாளர் குடியிருப்புத் தாக்கப்பட்டது. 8 பெண்கள் உட்பட பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். போலீஸ் தாக்குதலில் காயமுற்ற ஆக்னெஸ் மேரி மருத்துவ சிகிச்சையின்றி சிறையில் இறந்தார். தனிக் கொட்டடியில் இறந்த அவருடைய சடலம் திறந்த வெளியில் கொட்டும் மழையில் போடப்பட்டது. சிறையில் இரு குழந்தைகள் இறந்துவிட்டன. விடுதலையாகி ஊர் திரும்பிய அன்றே அம்மணியம்மாள் தனது 4 வயது பாலகனை அணைத்தவாறே உயிர் நீத்தார்.

அதே ஆண்டு (1946) நவம்பர் 11 அன்று கோவையில் இடதுசாரிகளின் தலைமையில் நடந்த ஸ்டேன்ஸ் மில் போராட்டத்தில் ஆலை வாயிலில் படுத்து மறியல் செய்த பெண்களை கருங்காலிகள் மிதித்து நடந்து சென்றதையடுத்து ஏற்பட்ட ரகளையில் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது துப்பாக்கியை பறிக்க முயன்ற அம்மு அத்துப்பாக்கியாலேயே அடிக்கப்பட்டு பலியானார். பாப்பம்மா என்ற இன்னொரு பெண்ணும் துப்பாக்கிச் சூட்டிற்கு இரையானார். பாலின சமத்துவம் போன்ற வார்த்தைகளை இத் தொழிலாளப் பெண்கள் கேட்டிருப்பார்களா என்பதே சந்தேகம். ஆனால் லத்தியும் துப்பாக்கியும் ஆண்களை பதம் பார்த்தபோது இப் பெண்கள் பின்வாங்கவில்லை. சமத்துவத்தை வாழ்ந்து காட்டியவர்கள் இவர்கள்.

## கட்சி அலுவலகத்திலேயே உயிர் நீத்தார்

என்.எஸ்.ஆர். என்று அழைக்கப்பட்ட ருக்மணி அம்மாள் தஞ்சை மாவட்டத்தில் கணபதி அக்ரஹாரத்தில் பிராமண மிராசுதார் குடும்பத்தில் கடைசி குழந்தையாகப் பிறந்தவர். ஆனால், சுமார் 85 ஆண்டுகளுக்குப் பின்பு அவர் சடலம் செங்கொடியால் போர்த்தப்பட்டு கட்சி ஊழியர்களால் ஊர்வலமாக இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. கட்சித் தலைவர்களில் ஒருவர் சிதைக்கு தீ மூட்டினார். இருண்ட மரபுகளைத் தகர்த்து புதிய விடியலை உருவாக்கிக் கொண்டவர் அவர். குடும்பத்திற்கு தெரியாமல் இரண்டாம் வகுப்பு வரை படித்தவர். மரணத்திற்குப் பின் அவருடைய சிறு அறையில் விட்டுச் சென்ற ஆஸ்தி பல மார்க்ஸீய தத்துவார்த்த நூல்கள்தான்! அந்த அளவுக்கு சொந்த முயற்சியால் படித்து அரசியல் பக்குவம் பெற்றவர். சுதந்திரப் போராட்டத்தால் ஈர்க்கப்பட்டு, குடும்ப ஆதிக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியில் இணைந்து,



ருக்மிணி

இறுதியில் கம்யூனிஸ்டானார். ராஜாஜி, பிரகாசம் போன்ற காங்கிரஸ் தலைவர்கள் தடுத்தும், காந்திக்கு நேரடியாகக் கடிதம் எழுதி அவர் ஒப்புதலோடு தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்துகொண்டு சிறை சென்றார். கட்சி பிரசுரம் விற்பதில் கைதேர்ந்தவர். சென்னை மாவட்ட ஜனநாயக மாதர் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றியவர். ஒரு கமிட்டி கூட்டத்தில் கலந்துகொள்ள முடியவில்லையென்றாலும் மிகவும் ஆதங்கப்படும் அளவுக்குக் கடமையுணர்ச்சி கொண்டவர். சுதந்திரப் போராட்டத் தியாகிகள் பென்ஷன் பெற்று, மிகச் சிக்கனமாக வாழ்ந்து, தன் சேமிப்பைக் கட்சிக் கட்டிடம் கட்டக்கொடுத்துவிட்டார். கட்சி அலுவலகத்திலேயே உயிர் நீத்தார். அவருக்கு இருந்த அசைக்க முடியாத தன்னம்பிக்கை எல்லோருக்கும் தெம்பூட்டியது. சாவதற்கு சில மாதங்கள் முன்புகூட படுத்தப்படுக்கையாய் இருந்தும், "என் பஸ் பாஸை புதுப்பிக்கவில்லை. கால் சரியானதும் நான் கூட்டங்களுக்குப் போக வேண்டும்" என்றார். அவருக்கென்று ஒரு குடும்பம் இல்லாததை அவர் குறையாக நினைக்காத அளவுக்கு கட்சியோடு இரண்டறக் கலந்துவிட்டார். நோயில் அரை நினைவோடு அவர் பேசியது தொழிற்சங்க, கட்சி விவகாரங்களைப் பற்றியே இருந்தது.


படிப்பகம்

www.padippakam.com


# YES, THE CHICKEN WAS PREPARED HOURS AGO.
# NO, THE PHOTO ISN'T RETOUCHED



Sampoornaa hotel -meets your taste everyday with irresistable Dishes. **Always hot and fresh**

★ Delicious variety of Chicken, Mutton & Fish
★ Hygienic Preparation ★ Salubrious atmosphere

# Sampoornaa hotel

12, Arts College Road, Coimbatore-18. Ph: 217077

**We also take up out-door catering**




படிப்பகம்

www.padippakam.com

# மிராசுகளை எதிர்த்த 'செம்பிடாரி'

மதுரை மாவட்ட கிராமங்களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியை 'அம்மா கட்சி' என்று விவசாயிகள் அழைத்த காலம் உண்டு. அப்படிப்பட்ட கே.பி. ஜானகியம்மா 1992-ல் இறந்தபோது மதுரைப் பதிப்பு பத்திரிகைகளைத் தவிர மற்றவை அதிகம் அலட்டிக் கொள்ளாதது பெரும் குறையாக இருந்தாலும், ஒரு விதத்தில் பொருத்தமாக இருந்தது என்று கூட சொல்லலாம். காரணம், தன்னைப் பற்றி எந்த விளம்பரத்தையும் உணர்வுபூர்வமாக வெறுத்தவர் அவர். கட்சி ஊர்வலங்களில் தலைவர்களோடு வண்டியில் வருவதைவிட மற்றவர்களோடு நடந்து வருவதையே விரும்புவார். அவர் சாவிற்கு முன் மதுரையில் நடந்த ஜனநாயக மாதர் சங்க மாநில மாநாட்டில், இது அவர் கலந்து கொள்ளும் இறுதி மாநாடாக இருக்கலாம் என்ற ஆதங்கத்தில் ஊழியர்கள் அவருடைய கட்-அவுட் வைத்திருந்தனர். இதைப் பார்த்த அம்மா கோபத்தோடு கூறியது — "நான் சாகும்வரை காத்திருக்கக்கூடாதா?" என்பதே.



ஜானகி அம்மாள்

சிறுமியாக இருந்தபோதே வறுமையின் காரணமாக அம்மா நாடகத்தில் நடிக்கத் தொடங்கினார். அவரது கம்பீரமான, வளமான குரல் அவருக்குப் பிரதான பாத்திரங்களையும் ஏராளமான செல்வத்தையும் அளித்தது. ஆனால், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தால் அரசியலுக்கு ஈர்க்கப்பட்ட அவர் விரைவில் நாடக உலகிலிருந்து விடுபட்டு சுதந்திரப் போராட்டத்திற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். மேடையில் பலரை பரவசப்படுத்திய அவர் குரல் அரசியல் மேடையில் ஒலித்தபோது மக்களிடம் விடுதலை வேட்கையையும் சத்திய ஆவேசத்தையும் ஏற்படுத்தியது.

1938-ல் சுபாஷ் சந்திரபோஸ் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மதுரை வந்தபோது காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் டவுன் கமிட்டி செயலாளரான 23 வயது ஜானகியும் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரும் அவரோடு நகரெங்கும் பிரச்சாரம் செய்தனர். காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பலரைப்போல் அம்மாவும் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். 1939-ல் யுத்த எதிர்ப்பு பிரச்சாரம் செய்ததற்காக தென்னிந்தியாவில் கைது செய்யப்பட்ட முதல் பெண் இவரே! அம்மா ஏழு ஆண்டு கால சிறைவாசத்தை அனுபவித்தார். மிக மென்மையானவராக தோன்றினாலும் கொடுமையைக் கண்டு வெகுண்டெழுவார். பெண் ஹிட்லர் என்று அழைக்கப்பட்ட ஒரு சிறை வார்டனை பார்த்ததும் அம்மா எழுந்து நின்று சல்யூட் அடிக்காததால் கோபமுற்ற வார்டன் அம்மாவை செருப்பால் அடிப்பேன் என்று மிரட்ட, மறுநாள் காலை வார்டன் சிறைக்கு வந்ததும் அம்மா எழுந்துபோய் அவரை செருப்பால் ஒன்று கொடுக்க, மற்ற கைதிகளுக்கெல்லாம் ஒரே குஷியாம்! இத்தகைய துணிச்சலுக்குத் தண்டனையாக அம்மா பலமுறை தனிக் கொட்டடியில் அடைக்கப்பட்டு இருக்கிறார். அம்மாவிற்கு 'செம்பிடாரி' என்று பட்டமும் கிடைத்தது.

மதுரை கோட்ஸ்மில், ஹார்வி மில் போன்ற ஆலைகளில் பெண்கள் கணிசமாக வேலை செய்த காலத்தில் அவர்களுடைய வேலை நிறுத்தத்தில் அம்மாவின் பங்கு சிறப்பானது. நாற்பதுகளில் விவசாயிகளை சங்கம் திரட்டும் பணியில் ஈடுபட்டார். துவரிமான் கிராமத்தில் மிராசுகளால் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட குத்தகைதாரர்களின் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய அம்மா நிலத்தில் இறங்கி ஏரைப் பிடித்து உழவும் செய்தார். அம்மா மதுரை நகர்மன்ற உறுப்பினராகவும், சட்டப் பேரவை உறுப்பினராகவும் 1967-ல் செயலாற்றினார். அம்மாவின் எளிமையான உடை மட்டுமல்ல, வாழ்க்கை பாணியை பார்த்த யாரும் அவரை எம்.எல்.ஏ. என்றால் நம்பமாட்டார்கள். கைத்தறிப் புடவை மட்டுமே கட்டி, மதுரை கட்சி அலுவலகத்தில் ஒரு சின்னஞ்சிறு அறையில் புத்தகங்களால் சூழப்பட்ட அம்மாவிற்கு ஒரு காலத்தில் மதுரையில் பல வீடுகளும் பல சவரன் நகைகளும் சொந்தமாயிருந்திருக்கின்றன என்பதை கற்பனை கூட செய்ய முடியாது. ஆஸ்துமா நோய் அவருடைய உடலை உருக்குலைத்த போதும், மன உறுதியைக் குலைக்கவில்லை. இரவெல்லாம் மூச்சு திணறி, காலையில் மிக இயல்பாக பத்திரிகையும் கையுமாக குறிப்பெடுத்துக் கொண்டிருப்பார். ஜனநாயக மாதர் சங்கம் துவங்கிய காலத்திலிருந்து அவர் மரணம் வரை அதன் தலைவராக இருந்து எண்ணற்ற ஊழியர்களுக்கு வழிகாட்டியாகவும் முன்னுதாரணமாகவும் இருந்தார். அவருடைய இறுதிச்சடங்கில் இரங்கல் கூட்டம் முடிந்து எல்லோரும் போன பிறகும், அங்கிருந்து போகமனமின்றி ஏழை விவசாயிகள் பலர் கண்ணீரோடு நின்று கொண்டிருந்த காட்சியே அம்மாவிற்கு உரிய அஞ்சலியாக இருந்தது.

# தலைமறைவு வாழ்க்கை - கலப்புத் திருமணம்

தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கத்தில் தந்தையும் சகோதரிகளும் உறுப்பினர்களாக இருந்தது இளம்பெண் ஷாஜாதியை இடதுசாரி இயக்கத்திற்கு ஈர்த்தது.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முஸ்லிம் குடும்பத்தை சார்ந்த ஷாஜாதியின் வாழ்க்கை அதிசயமானது. ரயில்வே வேலை நிறுத்தத்தின் போது உண்டியல் குலுக்குவது, பிரசுரம் விற்பது, தெரு முனைப் பிரச்சாரம் செய்வது தலைமறைவானவர்களுக்கு தகவல் அளிப்பது போன்ற பல அபாயகரமான வேலைகளில் ஈடுபட்டார். கட்சி தடை செய்யப்பட்டபோது தலைமறைவாக இருந்துகொண்டே 1949-ல் கல்கத்தாவில் நடந்த அகில இந்திய சமாதான மாநாட்டில் கலந்து கொண்டார். தமிழ்நாட்டில் ஏக பிரதிநிதியாக அரசிற்கு விரோதமாக மக்களை தூண்டியதற்காக இவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையில் வசதிகள் கோரி நடந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் 14-ம் நாள் ஷாஜாதி மயக்கமுற்றார். சிறையில் மாற்றுத் துணிகூட கொடுக்காமல் கிழிந்த ஆடையோடு நீதி மன்ற விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இன்றும் நினைத்துக்கூட பார்க்க முடியாத முஸ்லீம் இந்து கலப்புத் திருமணத்தை ஷாஜாதியும் தொழிற்சங்கத் தலைவருமான சி.கோவிந்தராசனும் நடத்திக் காட்டினர்.

தற்சமயம் நோயால் பாதிக்கப்பட்டும் தான் வாழ்ந்து வரும் நெல்லிக்குப்பத்தில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சிப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.

படிப்பகம்

www.padippakam.com


பதிவு ஆரம்பம்

நகரின் இரைச்சலில் இருந்து விடுபட்டு...
எழில் கொஞ்சும் இயற்கை சூழலில்...
அழகானதொரு வீட்டை உமதாக்கி கொள்வீர்!



# இடம்: J.N. சாலை, S.S. காலனி, மதுரை.

***சிறப்பம்சங்கள்:-***

★ 640 சதுர அடி முதல் 950 சதுர அடி வரையிலான பரப்பளவுடைய, ஒன்று மற்றும் இரு படுக்கையறைகள் கொண்ட வீடுகள்.

★ பெரியார் பேருந்து நிலையமும், இரயில் நிலையமும் நடந்து செல்லும் தொலைவில்.

★ வீட்டருகே அமையப்பெற்ற கல்விக் கூடங்கள்.

★ லிப்ட் மற்றும் ஜெனரேட்டர் வசதி.

★ விசாலமான கார் நிறுத்தும் இடம்.

★ எழிலான குழந்தைகள் பூங்கா.

★ போதுமான தண்ணீர் வசதி.

★ டிஷ் ஆன்டெனா மற்றும் பொது தொலைபேசி வசதி.

★ எக்ஸாஸ்ட் ஃபேன் பொருத்தப்பட்ட சமையலறை.

★ CANFIN மற்றும் இந்தியன் வங்கியின் கடன் வசதி திட்டம்.

GB

***For further details contact:***

GEORGE BRO'S
FLAT PROMOTERS
**VELLANKANNI ILLAM**
**25, J.N. ROAD,**
**S.S. COLONY, MADURAI. Phone: 601303**

***WE DON'T COMPROMISE ON QUALITY***

**ARCHITECT**
**S. MANOHARAN,** M.Arch.,m.c.a.ilia.
**165, KODAMBAKKAM HIGH ROAD,**
**NUNGAMBAKKAM, MADRAS.**

-MURUGAN




படிப்பகம்

www.padippakam.com

## வீரமரணத்துக்கு ஏங்கிய அத்தை

1946-ம் ஆண்டு செப்டம்பர் 5-ம் தேதியன்று பொன்மலையில் (திருச்சி) ரயில்வே தொழிலாளர் மீது நடத்தப்பட்ட வெறித்தனமான துப்பாக்கிச் சூட்டில் உயர்நீத்த ஐவரில் ஒருவர் 22 வயது இளைஞன் கிருஷ்ணமூர்த்தி. இவனது தாய் பங்காரம்மாள் கணவனின் ஆதரவின்றி ஓடாய் உழைத்து மகனைப் படிக்க வைத்து அவனுக்கு வேலை கிடைத்த இரண்டாண்டுக்குள் அவன் கொலையுண்டான்.

தொழிற்சங்கம் தன் மகனை போராட்டத்தில் ஈடுபடுத்தியதால்தானே அவன் இறந்துபோனான் என்று அத்தாய் சங்கத்தின் மீது வெறுப்பு கொள்ளவில்லை. மாறாக டி.ஆர்.ஈ.யு. சங்க அலுவலகத்தையே தன் குடியிருப்பாக மாற்றிக் கொண்டு அதன் உறுப்பினர்களையே குடும்பமாக்கிக் கொண்டார். அனைவருக்கும் 'அத்தை' அவர். மார்க்சிஸ்டு கட்சியின் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் பங்கு கொள்ளத் தவறாதவர். 1984-ல் சங்க அலுவலகத்திலேயே உயிர் நீத்தார். அவருடைய நிறைவேறாத ஒரே ஆசை, தன் மகனைப்போல தனக்கும் வீர மரணம் கிடைக்கவில்லையே என்பதுதான்.

## தாய் மகளிடம் கேட்ட கேள்வி

இந்தியாவில் உண்ணாவிரதமிருந்து சிறையில் உயிர் நீத்த முதல் பெண் அன்னை லட்சுமி என்று சொல்லப்படுகிறது. இளம் வயதில் கணவனை இழந்து மறுநாளே மூன்று சிறு குழந்தைகளோடு பொன்மலை வந்து அங்குள்ள தொழிற்சங்கம் மற்றும் கட்சியோடு தொடர்பு ஏற்பட்ட பிறகு அக்குடும்பமே கட்சிக் குடும்பமாக மாறியது. 1948-ல் கம்யூனிஸ்டு கட்சி தடை செய்யப்பட்டபிறகு அன்னை லட்சுமி உட்பட பலர் தலை மறைவாயினர். 1950-பிப்ரவரி 5-ம் தேதி போலீஸ் அவரையும் அவர் மகள் பாப்பா உமாநாத் உட்பட பலரையும் கைது செய்தது. பரங்கிமலை காவல் நிலையத்தில் தாய்க்கும் மகளுக்கும் பலத்த அடி. பிறகு அவர்கள் சந்தித்தபோது தாய் மகளிடம் கேட்ட முதல் கேள்வி: "அடி பொறுக்க முடியாமல் போலீசிடம் தகவல் ஏதும் கூறினாயா?" என்பதே! சைதாப்பேட்டைச் ஜெயிலில் கம்யூனிஸ்ட் கைதிகள் மீது மலபார் போலீஸ் நடத்திய தாக்குதலைக் கண்டித்து சில கோரிக்கைகள் வைத்து அன்னை லட்சுமி உட்பட பலர் உண்ணாவிரதப் போராட்டத்தைத் துவக்கினர். இந்த 28-நாள் போராட்டத்தில் 23-ம் நாள் தனியாக வைக்கப்பட்டிருந்த லட்சுமி இறந்துவிட்டார். தாயின் சடலத்தைப் பார்ப்பதற்கு மகளுக்கு குமாரசாமி ராஜா அரசு அளித்த நிபந்தனை, அவர் கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து ராஜினாமா செய்ய வேண்டும் என்பதே. காங்கிரஸ் கட்சியின் மனிதாபிமானம் பற்றி இப்படி எவ்வளவு உண்மைகள் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளனவோ? இவருடைய வீர மரணம் கம்யூனிஸ்டுகளிடையே ஒரு எழுச்சியையும் மக்களிடையே அனுதாபத்தையும் ஏற்படுத்திவிடக் கூடாதே என்பதற்காக போலீஸ் தனது வழக்கமான புளுகை அவிழ்த்துவிட்டது. தற்கொலை செய்து கொண்டு பெண் கைதி இறந்தார் என அறிவிக்கப்பட்டது.

## சொந்த வீடு இல்லாத எம்.எல்.ஏ.

இருபத்தோராண்டுகள் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் பொதுச் செயலாளராக செயல்பட்டு இவ்வமைப்பை மாநில அளவில் பெண்ணுரிமை காக்கும் கேடயமாக உருவாக்கிய பாப்பா உமாநாத் அவர்கள் தமிழ்நாட்டின் அரசியல், சமூக வாழ்க்கையில் பிரபலமானவர். தமிழக இடதுசாரி இயக்கத்தில் தங்கள் முத்திரையைப் பதித்த பலரைப் போல் இவரும் ஏழை தொழிலாளர் குடும்பத்தில் பிறந்தவர். பொன்மலை ரயில்வே தொழிற்சங்க இயக்கமே இவருடைய பொது வாழ்விற்கு அஸ்திவாரமானதால் 'பொன்மலை பாப்பா' என்றே அழைக்கப்பட்டார். சோவியத் யூனியன் பாசிஸத்தால் தாக்கப்பட்ட போது தாயகத்தைக் காத்த கெரில்லா வீராங்கனை தான்யா இவருடைய இளவயது ஹீரோயின். ரயில்வே சங்க நடவடிக்கைகளிலிருந்து அரசியல் பயின்ற இவர் இளவயதிலேயே கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினராகி 1948-50 ஆண்டு ஒடுக்குமுறைக் காலத்தில் தாயோடு தலைமறைவு வாழ்க்கை நடத்தினார். பிறகு இருவரும் சிறைப்படுத்தப்பட்ட போது தாய் இறந்து, அவர் சடலத்தை பார்ப்பதற்குக் கூட காங்கிரஸ் அரசு பேரம் பேசியது. இளவயது பாப்பா உணர்ச்சிவயப்படாமல் கட்சியில் உறுதியாக இருந்தார். வெள்ளையன் ஆட்சியிலும் நம்மவர் ஆட்சியிலும் சுமார் ஏழாண்டு காலம், சிறு குழந்தைகளை விட்டுவிட்டு சிறைக் கொடுமைகளை அனுபவித்தார். எதற்கும் மனம்தளராதவர். பெண்களைக் கட்சிக்குள் கொண்டுவருவது, அவர்களுடைய அரசியல் ஞானத்தை வளர்ப்பது, தலைமைப் பொறுப்பேற்க



பாப்பா உமாநாத்

தயார் செய்வதுபோன்ற விஷயங்களில் விசேட அக்கறை செலுத்துபவர். இருமுறை எலும்பு முறிவு ஏற்பட்டும் கூட ஊன்று கோலோடு மாவட்டங்களுக்குச் சென்று விடுவார். அரசியல், பொருளாதாரப் பிரச்னைகளை மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் மிக ஜனரஞ்சகமாகப் பேசக் கூடியவர். காவல்துறையின் அத்துமீறல்களை தயக்கமின்றித் தட்டிக் கேட்பவர். 1989-91 வரை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது ஆட்சியாளர்களோடு தேர்தல் உறவு இருந்த போதிலும் தேவைப்படும் போது விமர்சனம் செய்யத் தவறியதில்லை. இன்றுள்ள 33 பெண் சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து பெண்கள் பிரச்னைகளைக் கடந்து நாலரை ஆண்டு காலத்தில் பேசியதை விட பாப்பா உமாநாத் 2 ஆண்டுகளில் எழுப்பிய பெண்ணுரிமைப் பிரச்னைகள் அதிகம் என்பது மிகைப்படுத்துவதாகாது. தொகுதிப் பிரச்சனை, அரசு கொள்கைகள் என பலவகைப்பட்ட விஷயங்களில் அவர் ஆணித்தரமாக கருத்துக்களை வைத்துள்ளார். அவருடைய கணவர் ஆர். உமாநாத் சிபிஐ எம்-ன் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர். இருமுறை எம்.பி.யாகவும், எம்.எல்.ஏ.வாகவும் இருந்தும் இத்தம்பதிக்குக் குடியிருக்க ஒரு சிறு சொந்த வீடு கூட கிடையாது. மிகவும் சிரமப்பட்டுதான் மூன்று குழந்தைகளையும் படிக்க வைத்தார்கள். தங்கள் உழைப்பால் உருவாக்கப்பட்ட இயக்கங்கள் மட்டுமே இவர்கள் பேணிப்பாதுகாக்கும் பொக்கிஷமாக உள்ளன.


படிப்பகம்

www.padippakam.com



# உடன்பிறவா சகோதரிகள்

**பெண் விடுதலையாளர்கள் என்று வெளியே சொல்லிக்கொள்ளும் அறிஞர்கள் வீட்டுக்குள் தங்கள் சகோதரிகளையும், மனைவிகளையும் அலங்காரப் பதுமையாக வைத்திருப்பதை பெரியார் கண்டிக்கத் தயங்கவில்லை.**

# கறுப்புப் பெண்கள்

*ஆனந்தி*

தமிழர் சமூகத்தை 'ஜனநாயக'ப் படுத்த பெரியார் உருவாக்கிய சுயமரியாதை இயக்கம் பற்றி மார்க்சிய, மார்க்சியம் சாராத அறிஞர்கள் வரலாற்று ஆய்வுகளை நிகழ்த்தியிருக்கிறார்கள். சுயமரியாதை இயக்கம்பற்றி அது திரிபுவாத இயக்கம், பிரிட்டிஷ் ஆதரவு இயக்கம், பிரிவினை இயக்கம், பிராமண எதிர்ப்பு இயக்கம் என்றெல்லாம் கருத்துக்கள் முன் வைக்கப் பட்டுள்ளன. ஆனால், அந்த இயக்கம் பெண்கள் விடுதலைக்காக தொய்வில்லாமல் நடத்திய போராட்டம் பற்றியோ, தமிழர் சமுதாயம் முழுதும் பரவிக்கிடந்த ஆண் ஆதிக்க அமைப்பைத் தகர்த்தெறிய மேற்கொண்ட முயற்சிகள் பற்றியோ, இந்த ஆய்வாளர்கள் மவுனம் சாதித்திருப்பது குறிப்பிடத் தக்க ஓர் அதிசயமே!

1924-ம் ஆண்டு காங்கிரசிலிருந்து விலகி, தனது விலகலை உறுதிப்படுத்திக்கொண்ட பெரியார், தமிழர் சமுதாயத்தில் நிறுவனமாகி விட்ட மதம், சாதி அமைப்பு, ஆண் ஆதிக்கம் ஆகியவற்றுக்கு எதிராக -தனது கடுமையான பிரச்சாரத்தைத் துவக்கினார். தனது சமகாலத்தவரான காந்தியார் மற்றும் அதற்கு முந்தைய சித்தர். ராமானுஜர் போன்றவர்களின் சீர்திருத்தக் கோட்பாடுகளை அவர் எதிர்த்த




தோடு, கடந்தகால பிற்போக்குத் தனங்களை சீர்திருத்திக் கொண்டிருக்காமல், முழுமையாக அவற்றிலிருந்து விடுபட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பெரியார் மேம்போக்கான சீர்திருத்தத்தை ஏற்காதவர்; முழுமையான மாற்றத்தை வலியுறுத்தியவர். தலைகீழ் மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்ற அவரது கண்ணோட்டமே பெண்ணுரிமைப் பிரச்சினையிலும் காணப்பட்டது. சம்பிரதாயமாக -வலியுறுத்தப்படும் விதவைத் திருமணம், பெண் கல்வி போன்ற பிரச்சினைகளை எடுத்துக் கொள்வதோடு, சுயமரியாதை இயக்கத்தின் பணி முடிந்துவிட்டதாக அவர் கருதிவிடாமல், மேற்கண்ட பிரச்சினைகளில் வெற்றிபெற்றாலும் ஆண் ஆதிக்க அமைப்பைத் தகர்த்து விட முடியாது என்பதால், ஆண் ஆதிக்கத்துக்குக் காரணமான அடிப்படைகளைத் தகர்க்க அவர் குரல் கொடுத்தார். ஆண் ஆதிக்கத்தைத் தூக்கிப் பிடிக்கும் நிறுவனங்களான குடும்ப அமைப்பு, கற்பு போன்ற -பெண்கள் மீது திணிக்கப்பட்ட "நெறி முறைகளை"க் கேள்விகளுக்கு உட்படுத்தினார்.

திருமணம் என்பது ஒரு பெண்ணை அடிமையாக்கி ஆணின் உடைமையாக அவளை மாற்றிவிடுவதால் திருமணம் என்ற முறையே ஒழிக்கப்பட வேண்டும் என்று பெரியார் கூறினார்.

திருமணம் ஒரு நிறுவனமயமாக்கப்பட்ட அமைப்பாக இருப்பதை பெரியார் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், பழமை சம்பிரதாயங்களிலிருந்து விடுபட்ட திருமணங்களை அவர் அங்கீகரித்தார். திரும

படிப்பகம்

www.padippakam.com



ணத்தோடு தொடர்புடைய சடங்குகள் அனைத்தையும் அவர் எதிர்த்தார். குறிப்பாக மாப்பிள்ளை - பெண் கழுத்தில் கட்டும் தாலியை அவர் எதிர்த்தார். தாலியைக் கட்டிவிட்டால் -பெண், கணவனுக்கு அடங்கிப்போக வேண்டும் என்பது சம்பிரதாயம். பெற்றோர்கள் பார்த்து ஏற்பாடு செய்யும் திருமணங்களை அவர் எதிர்த்ததோடு, ஆண்களும், பெண்களும் தங்கள் வாழ்க்கைத் துணைவர்களை அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார்.

'ஒருவனுக்கு ஒருத்தி' எனும் குடும்ப அமைப்பில் மிகப் புனிதமாகப் போற்றப்படும் 'கற்பு' எனும் கோட்பாட்டையும் அவர் குறை கூறினார். அவர் எழுதிய 'பெண் ஏன் அடிமையானாள்?' எனும் நூலில் அவர் கூறுகிறார்.

"கற்பு என்பதற்குப் பதிவிரதம்' என்று எழுதி விட்டதன் பலனாலும் பெண்களைவிட ஆண்கள் செல்வம், வருவாய், உடல் வலிவு கொண்டவர்களாக ஆக்கப்பட்டு விட்டதனாலும், பெண்கள் அடிமையாவதற்கும் -புருஷர்கள் மூர்க்கர்களாகிக் கற்பு என்பது தங்களுக்கு இல்லை என்று நினைப்பதற்கும் அனுகூலம் ஏற்பட்டதே தவிர




# நான்கே ஆண்டில் 8000 புரட்சித் திருமணங்கள்

சுயமரியாதை இயக்கத்தின் புரட்சிகர செயல்பாடுகளில் ஒன்று சம்பிரதாய இந்து திருமண முறைக்கு எதிராக, சுயமரியாதை திருமணத்தை அறிமுகப்படுத்தியதாகும். 1928-ம் ஆண்டிலிருந்து பிராமணர் அல்லாதாரிடையே சுயமரியாதை திருமணங்களை இந்த இயக்கம் நடத்தி வந்திருக்கிறது. குக்கிராமங்களிலேகூட இந்தத் திருமணம் நடத்தப்பட்டிருக்கிறது.

அதுபற்றிய செய்திகள் விடாமல் குடிஅரசு பத்திரிகையில் வெளியிடப்பட்டு வந்துள்ளன. சுயமரியாதை திருமணங்களைத் தவிர சாதி மறுப்பு திருமணம், விதவை மறுமணம் - ஆண் பெண் சம்மதத்தோடு நடந்த திருமணம் பற்றிய செய்திகளையும் தேடிக் கண்டுபிடித்து 'குடிஅரசு' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

சுயமரியாதைத் திருமணத்தின் முக்கியமான நோக்கம் இந்து திருமண சடங்குகளை எதிர்ப்பதாக இருந்திருக்கிறது. 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற இந்துமத சம்பிரதாயங்களையும் 'கற்பு' எனும் பெண்ணடிமைக் கோட்பாட்டையும் எதிர்ப்பதோடு பிராமண புரோகிதர்களோ, வேத மந்திரங்களோ இல்லாமல் இந்தத் திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளன.

இன்னும் குறிப்பாக சுட்டிக்காட்டப்பட வேண்டியது என்னவென்றால், தாலி இல்லாமல் இந்தத் திருமணங்கள் நடைபெற்றதுதான். சுயமரியாதை இயக்கத்தின் பகுத்தறிவுக் கொள்கை அடிப்படையில் 'ராகு' காலத்தில் பல திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளன. சில திருமணங்கள் நள்ளிரவிலே நடத்தப்பட்டுள்ளன. அப்படி நடத்துவது 'அபசகுனம்' என்று இந்துமத சம்பிரதாயத்தில் கூறப்படுகிறது. திருமணம் என்ற அமைப்பில் நிலை நிறுத்தப்பட்ட பிறபோக்குத்தனங்களுக்கு சவால் விடுவதே இந்தத் திருமணங்களின் நோக்கம்.

திருமணம் என்பது ஏதோ, ஒரு தனிப்பட்ட சொந்த நிகழ்வு மட்டும் அல்ல என்பதோடு, அதற்கு அரசியல் சமுதாய முக்கியத்துவம் உண்டு என்ற கண்ணோட்டத்தோடு நடத்தப்பட்டிருக்கின்றன. பல திருமண நிகழ்ச்சிகளில் இப்படி நடந்த மூன்று திருமண நிகழ்ச்சிகளை மட்டும் இங்கே சுட்டிக்காட்டுகிறோம். சம்பிரதாய ரீதியாக நிலைநிறுத்தப்பட்டிருந்த ஆண் ஆதிக்கக் கோட்பாடுகளுக்கு எதிராக இவைகள் நடத்தப்பட்டவைகளாகும்.

1. தஞ்சை மாவட்டத்தில் வைதீகத்தில் ஊறிப்போன குடும்பத்தில் பிறந்த இளமையிலே 'விதவை'யாகிவிட்ட சிவகாமி அவர்களுக்கும், சுயமரியாதை இயக்கத்தில் தீவிரப் பங்கெடுத்து செயல்பட்டவரும், தமிழ் அறிஞருமான சாமி. சிதம்பரனாருக்கும் 1930-ல் திருமணம் நடந்தது. சிவகாமி அவர்கள் இந்தத் திருமணத்துக்கு முழு சம்மதம் தெரிவித்தாலும் இருதரப்பு குடும்பத்தாரும் கடுமையாக எதிர்த்தனர். இதனால் கும்பகோணத்தில் நடக்க இருந்த இந்தத் திருமணத்தை பெரியார் தனது சொந்த ஊரான ஈரோட்டிலே நடத்த முடிவு செய்தார். நாகம்மையார் தலைமையில் நடந்த இந்தத் திருமணத்தில் எந்த மதச்சடங்குகளும் இடம் பெறவில்லை. தாலியும் கட்டப்படவில்லை. திருமணத்துக்குத் தலைமை ஏற்றுப் பேசிய நாகம்மையார் தாலியும், இந்துமத சடங்குகளும் - எப்படி பெண்களை ஆண்களுக்கு அடிமைப்படுத்துவதாக இருக்கிறது என்பதை விளக்கினார். மணமக்கள் இருவரும் மோதிரம் மாற்றிக்கொண்டு வாழ்வில் இருவரும் உற்ற நண்பர்களாகவும், சம உரிமை படைத்தவர்களாகவும் வாழ்வோம் என்று உறுதி எடுத்தனர். மணமக்கள் தங்களை கணவன் - மனைவி என்று வழக்கமாக சம்பிரதாயப்படி கூறாமல் - தோழர் என்றும் நண்பர் என்றும் ஒருவரை ஒருவர் அழைத்தனர். இந்தத் திருமணத்தின் சமூக முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக - இரண்டாவது சுயமரியாதை மாநாட்டு மேடையிலேயே இது நடத்தப்பட்டது.

2. அதே ஆண்டில் கன்னியாகுமரிக்கு அருகே உள்ள நாகர்கோயிலில் கமலாம்பாள் - நல்லசிவம் ஆகியோர் திருமணம் நடந்தது. இந்தத் திருமணம் - நெசவாளர் சமூகமாகிய சாலியார் சமூகத்தில் கடுமையான பதட்டத்தை உருவாக்கியது. இதில் மணமகள் விதவை; மணமகன் - விதவன்... இருவருக்குமே ஏற்கெனவே நடந்த திருமணத்தின் மூலம் ஒரு குழந்தை உண்டு. இந்தத் திருமணத்தை பெரியாரும், நாகை காளியப்பனும் ஒரு திரை அரங்கில் நடத்தி வைத்தனர். திருமண நிகழ்ச்சியில் - மணமகன், தன்னுடைய ரூ. 5,000 மதிப்புள்ள சொத்துக்களை - மணமகள் பெயருக்கு மாற்றிக் கொடுத்தார். ஆண்களைப் போலவே - பெண்களுக்கும் சமமான சொத்துரிமை வேண்டும் என்ற சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைப்படி இது நடந்தது. வழமைக்கு மாறான இந்தத் திருமணத்தைப் பார்க்க, அரங்கில் 2,500 பேர் கூடியிருந்தனர். பெரியார் - இதுபோன்ற திருமணங்கள் ஏராளமாக நடக்கவேண்டும் என்று பேசினார். ஏ. பொன்னம்பலனார் மற்றும் எம். மரகதவள்ளி ஆகிய இருவரும், சுயமரியாதை இயக்கத்தைப் பற்றிய பாடல்களைப் பாடினர். (ஏ. பொன்னம்பலனார் சிறந்த அறிஞர். 'குடிஅரசு' பத்திரிகையில் தொடர்ந்து கட்டுரைகளை எழுதியவர். எம். மரகதவள்ளி, 'மாதர் மறுமணம்' என்ற பத்திரிகையின் ஆசிரியர். இந்தப் பத்திரிகை 1930-ல் காரைக்குடியிலிருந்து வெளிவந்தது).

3. சுயமரியாதை இயக்கத்தின் செயல் வீரர்களாக இருந்த எஸ். நீலாவதி - ராம



படிப்பகம்

www.padippakam.com

வேறில்லை. தவிர, புருஷர்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க நமது மொழிகளில் தனி வார்த்தைகளே காணாமல் மறைபட்டுக் கிடப்பதற்குக் காரணம், ஆண்களின் ஆதிக்கமே தவிர வேறில்லை."

கற்பு, பெண்களுக்குத் தேவையான குண நலன் என்று கூறும் தமிழ் இலக்கியங்களான சிலப்பதிகாரம், திருக்குறளைக்கூட அவர் சாடினார். அதற்குப் பதிலாக - பெண்களுக்கு விவாகரத்து உரிமையும் -பலதாரத் திருமண முறையும் தேவை என்று அவர் வலியுறுத்தினார். பெண்கள் மீதான ஒடுக்குமுறைபற்றி அவர் தனது பேச்சுகளிலும், எழுத்துக்களிலும் குறிப்பிடும்போது 'விதவை' என்ற சொல்லுக்கு நிகரான ஆண்பால் சொல் உண்டா என்று கேட்கிறார். தமிழ் மொழியில் இதற்கு ஏன் சொல் இல்லை என்று கேட்டு கண்டித்துள்ளார். ஆண்களுக்கும் 'விதவன்', 'விபச்சாரன்' என்ற சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்று யோசனையும் கூறியிருக்கிறார்.

'ஆண்மை' என்ற சொல்லே பெண்களை இழிவுபடுத்துவதாகும் என்று கூறுகிறார். அவர் எழுதுகிறார். "ஆண்மை என்னும் பதமே பெண்களை இழிவுபடுத்தும் முறையில் உலக வழக்கில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது என்பதைப் பெண்கள் மறந்துவிடக்கூடாது. அந்த "ஆண்மை" உலகில் உள்ள வரையிலும் பெண்மைக்கு மதிப்பு இல்லை என்பதைப் பெண்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். உலகத்தில் "ஆண்மை" நிற்கும் வரையில் பெண்கள் அடிமையும் வளர்ந்துவரும். பெண்களால் "ஆண்மை" என்ற தத்துவம் அழிக்கப்பட்டால் அல்லாது பெண்மை விடுதலை இல்லை என்பது உறுதி."

தமிழ் மொழியில் பெண்களுக்கு மதிப்பைத் தரக்கூடிய சொற்கள் இல்லை என்பதால் அதைக் காட்டுமிராண்டி மொழி என்று கூறவும் அவர் தயங்கவில்லை. 1946-ம் ஆண்டு திருப்பத்தூரில் அவர்

---

சுப்ரமணியம் ஆகியோர் திருமணம் - ராமநாதபுரம் மாவட்டம் பள்ளத்தூரில் 1930-ல் நடந்தது. இந்தத் திருமணத்தில் சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த 2000 ஆண்களும், 500 பெண்களும் கலந்து கொண்டனர். இதுதவிர, உள்ளூர் மக்கள் சுமார் 100 பேரும் வந்திருந்தனர்.

இந்தத் திருமணத்தின்போது ஆண் பெண் உறவு, திருமணம், பெண் விடுதலை போன்ற பிரச்சினைகள் பற்றி பார்வையாளர்கள் கேள்வி கேட்கலாம் என்று அறிவித்தனர். கேள்விகளைக் கேட்குமாறு பார்வையாளர்களை ஊக்கப்படுத்தினார்கள்.

பலரும் கேள்விகளைக் கேட்டனர். ஒருவர் சுயமரியாதை இயக்கம் இரண்டாவது திருமணங்களை எப்படி நடத்தலாம் என்று பெரியாரிடம் கேட்டார். அதற்கு பெரியார் திருமணம் என்பது கணவன் மனைவிக்கு இடையே ஏற்படுகிற ஒரு ஒப்பந்தம்தான். இருவருக்கும் கருத்து வேறுபாடு வந்துவிட்டால் பிரிந்துசெல்ல உரிமை உண்டு. காலாகாலத்துக்கும் எந்த நிலையிலும் சேர்ந்து தான் வாழவேண்டும் என்ற கட்டாயம் கூடாது என்று பதிலளித்தார். ஒரு ஆணும் பெண்ணும் தங்களது வாழ்க்கைத் துணைவியைத் தேர்ந்தெடுக்க உரிமை பெற்றவர்கள். இருவருக்குமே இதில் சம உரிமை உண்டு. முதல் திருமணம் செய்துகொண்டாலும்கூட சேர்ந்து வாழ முடியவில்லை என்றால் விவாகரத்து செய்துகொள்ளவும், மறுமணம் செய்துகொள்ளவும் இருவருக்கும் உரிமை உண்டு என்றும் பெரியார் வலியுறுத்தினார்.

மிகமிகச் சாமான்யர் வீட்டுத் திருமணமானாலும் சரி; சமுதாயத்தில் மிகப் பெரும் நிலையில் உள்ளவர் வீட்டுத் திருமணமானாலும் சரி; சுயமரியாதை திருமணம் எங்கே நடந்தாலும் வேறுபாடு - வித்தியாசம் காட்டாமல் சுயமரியாதை இயக்கத்தினர், அந்தத் திருமணங்களுக்குச் செல்வதைத் தங்களது கடமையாகவே கொண்டிருந்தனர். செருப்பு தைக்கும் தொழிலாளியான மாரிமுத்து வீட்டில் - நடந்த திருமணமானாலும் (மாரிமுத்து தாயம்மாள் சுயமரியாதை திருமணம் கோவையில் 1930 ஏப்ரல் 20-ம் தேதி நடந்தது.) அரசியலில் செல்வாக்கான தலைவராக இருந்த சவுந்தரபாண்டியன் வீட்டுத் திருமணமானாலும் சரி சுயமரியாதை இயக்கத்தினர் குறிப்பாக - இந்த இயக்கத்தைச் சார்ந்த பெண்கள் இதில் கலந்துகொள்வதை தங்களது கொள்கைக் கடமையாகவே கருதினர். (1930-களில் சுயமரியாதை இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவர் சவுந்திரபாண்டியன். நாடார் சமூகத்தில் ஏராளமான சாதி மறுப்பு திருமணங்களையும், விதவை மறுமணங்களையும் நடத்தியவர்). அந்தத் திருமணங்களில் பெண்ணுரிமை பற்றிப் பேசியதோடு பெண்ணுரிமைக்கான சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.


30 ஆண்டுகால வரலாற்றில் சுயமரியாதை இயக்கம் பல்லாயிரக் கணக்கான சுயமரியாதை திருமணங்களை நடத்தியது. உதாரணமாக 1929 முதல் 1932 வரையில் சுமார் 8000 சுயமரியாதை திருமணங்களை இந்த இயக்கம் நடத்தியது. 1931-ம் ஆண்டு திருமண நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பெரியார், 'ஒவ்வொரு புரோகித மறுப்பு - சடங்கு மறுப்பு திருமணங்களையும் - சுயமரியாதைத் திருமணம் என்று கூறாதீர்கள். காலப்போக்கில் திருமணத்தையே ஒழிக்கவேண்டும் என்பதே சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையாக இருக்கும்' என்றார். ஆனால், மதச் சடங்குகள் இல்லாமல் திருமணம் நடத்துவதே - அந்தக் காலகட்டத்தில் ஒரு புரட்சி என்பதில் சந்தேகம் இல்லை.




படிப்பகம்

எமது
வாடிக்கையாளர்களுக்கு
புத்தாண்டு மற்றும்
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்

மைலாப்பூர் உங்கள்
ஸ்ரீமதி மாலதி
தங்கமாளிகை
வழங்கும்



அதிர்ஷ்டகரமான வாய்ப்பு

பொன்னான வாழ்வு தரும்
# தங்க(ள்) மனைத்திட்டம்

இத்திட்டத்தில் உங்கள் முதலீட்டிற்கு முழுமையான உத்திரவாதம் அளிக்கப்படுகிறது.

உங்கள் முதலீடு ரூ.25,000/- 36 மாதங்களில் ரூ.50,000/- ஆகிறது.

* உங்கள் முதலீட்டிற்கு சென்னை மாநகர எல்லைக்குள் 2 மடங்கு விலை உயரும் மனையை தங்கள் பெயருக்கு பதிவு செய்து தரப்படும்.
* வட்டியில்லாத சுலபத் தவணையில் 38 மாதங்கள் செலுத்தி 2 மடங்கு மதிப்புள்ள மனையும் 2 மடங்கு டெபாசிட் தொகையையும் திரும்ப பெறலாம்.
* குறைந்த மனைகளே உள்ளதால் உடனே முந்துங்கள்.

பிக்சட் டெபாசிட்களுக்கு ரூ. 5 ஆயிரம் மடங்குகளில் **28%** வட்டி **+ 5%** ஊக்கத்தொகை

மற்றும் 30 கிராம் காமாட்சி விளக்கு, ரூ. 10,000/- க்கு 1 கிராம் தங்க காசு அன்பளிப்பு வழங்கப்படும்.

★ வட்டிக்கு பின் தேதியிட்ட காசோலைகள் வழங்கப்படும்.

SMT மைலாப்பூர்
ஸ்ரீமதி மாலதி தங்கமாளிகை
8, செங்கழுநீர் பிள்ளையார் கோவில் தெரு, (மயிலை கபாலீஸ்வரர் கோவில் அருகில்)
மைலாப்பூர், சென்னை-600 004. போன் : 4934713


Komala Ads



www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com





PEEKAY MEDIEQUIP LIMITED

(MANUFACTURERS OF MEDICAL DISPOSABLES)

**Office:**
16, V.N.S. Garden,
Ramakrishnapuram,
**Tanjore - 613 007.**
Phone: 04362 - 20795, 25489
Fax: 91-44-25863

**Works:**
131, Sengipatti Village,
Trichy - Tanjore Main Road,
Thirumalaisamudram (Post)
**Tanjore - 613 402.**

படிப்பகம்

www.padippakam.com

பேசும்போது -பெண்களின் உடல் அமைப்பைப் பற்றித்தான் தமிழ் இலக்கியங்களில் விரிவாக எழுதியிருக்கிறார்களே தவிர, அவர்களுடைய அறிவுத் திறன்பற்றி இப்படி சித்தரிக்கப்படுவதை பெண்கள் எதிர்த்துப் போராடாதவரை, இலக்கியங்களின் போக்கோ, பெண்களின் நிலையோ மாறாது என்று அவர் வாதிடுகிறார்.

சொத்துரிமைக்கும், பெண்கள் விடுதலைக்கும் உள்ள தொடர்பையும் பெரியார் சுட்டிக்காட்டினார். சொத்து சேர்க்கும் உரிமை மட்டும் இல்லாமல் இருந்தால் குடும்பத்துக்கு வாரிசை உண்டாக்க வேண்டும் என்ற கட்டாயமே இருந்திருக்காது என்றும், எப்போது ஒரு பெண், ஆணின் சொத்துக்குப் பாதுகாப்பாக ஆக்கப்பட்டாளோ, பிறகு அவளே கணவனுக்கு உரிமைப் பொருளாகி குடும்பத்துக்கு வாரிசை உற்பத்தி செய்ய வேண்டியவளாகிவிடுகிறாள்; அதன் பிறகு, அவளுக்கு கடவுளை வணங்கும் உரிமைக்கூட இல்லாமல் கணவனையே கடவுளாக வணங்க வேண்டியிருக்கிறது என்று கூறும் பெரியார், தனியுடைமையை ஒழிப்பதில் தான் பெண்ணின் முழுமையான விடுதலை அடங்கி இருக்கிறது என்று வலியுறுத்துகிறார்.

"கர்ப்பத் தடையின் அவசியத்தைப் பற்றி நாம் கருதும் காரணங்களுக்கும் மற்றவர்கள் கருதும் காரணங்களுக்கும் அடிப்படையான வித்தியாசம் இருக்கின்றன. அதாவது பெண்கள் விடுதலை அடையவும், சுயேச்சை பெறவும் கர்ப்பத் தடை அவசியம் என்று நாம் கூறுகிறோம். மற்றவர்கள் பெண்கள் உடல் நலத்தை உத்தேசித்தும், பிள்ளைகளின் தாஷ்டிகத்தை உத்தேசித்தும், நாட்டின் தரித்திர திசையை உத்தேசித்தும் குடும்பச் சொத்து குலையாமல் இருக்க வேண்டும் என்பதை உத்தேசித்தும் கர்ப்பத்தடை அவசியமென்று கருதுகிறார்கள். இதை மேல்நாட்டினர் பலர்கூட ஆதரிக்கிறார்கள். ஆனால், நமது கருத்தோ இவைகள் எதையும் பிரதானமாய்க் கருதியது அல்ல. மற்றெதைக் கருதி என்றால், முன் சொன்னதுபோல், பொதுவாக பெண்களின் விடுதலைக்கும், சுயேச்சைக்குமே கர்ப்பம் விரோதியாய் இருப்பதால், சாதாரணமாய் பெண்கள் பிள்ளை பெறுவது என்பதையே அடியோடு நிறுத்தி விட வேண்டும் என்கிறோம்".

ஆண் ஆதிக்கத்துக்கு சாஸ்திர ரீதியாக அங்கீகாரம் வழங்கியதால் -பெரியார், இந்து மதத்தைக் கடுமையாக சாடினார். அவர் பெண்களிடையே பேசும்போது -வர்ணாஸ்ரமும் -இந்து மதமும் -உங்களை கடவுளின் 'தாசி'களாக்குவதோடு இந்து மதம் -பெண்களுக்குத்தான் கற்பை வலியுறுத்துகிறதே தவிர ஆண்களுக்கு அல்ல என்று கூறினார்.

பெண் விடுதலையாளர்கள் என்று வெளியே சொல்லிக்கொள்ளும் அறிஞர்கள் -வீட்டுக்குள் தங்கள் சகோதரிகளையும், மனைவிகளையும் அலங்காரப் பதுமையாக வைத்திருப்பதை அவர் கண்டிக்கத் தயங்கவில்லை. நீதிக்கட்சிக்கு ஆதரவு தந்தாலும் -பெண்கள் பிரச்சினையில் நீதிக்கட்சி அமைச்சரவையை அவர் விமரிசித்ததோடு பால்யவிவாகத் தடுப்பு சட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்தத் தவறிவிட்டது என்றும் கண்டித்தார். பெண்கள் முன்னேற்றத்துக்கான சட்டங்களைக் கொண்டுவரத் தவ

## சிறையில் குழந்தைக்குப் பால் கிடைக்கும் என வந்தீர்களா?

சுயமரியாதை இயக்கத்தின் மற்றொரு முக்கிய அம்சம் - அந்த இயக்கம் நடத்திய மாநாடுகள் ஆகும். பெண்கள் பிரச்சினையில் தொடர்ந்து பிரச்சாரம் செய்யவும் - பெண்களை பொதுவாழ்வில் பங்கெடுக்க ஊக்கப்படுத்தவும் - இந்த மாநாடுகளை சுயமரியாதை இயக்கம் தொடர்ந்து பயன்படுத்தி வந்திருக்கிறது. பெண்கள் விடுதலைக்குப் பெண்களே முன்வர வேண்டும் என்பது பெரியாரின் கொள்கை; அந்த அடிப்படையில் தான் பெண்களுக்கான தனி மாநாடு நடத்தப்பட்டது. பெண்கள் உரிமைக்காக - ஆண்கள் போராட வரமாட்டார்கள் என்பது பெரியாரின் உறுதியான கருத்து. அந்த மாநாட்டை பெண்களே முழுமையாக முன்னின்று நடத்தினர். 16 வயதுவரை பெண்களுக்கு கட்டாயக்கல்வி தர வேண்டும்; 'பால்ய விவாக' தடுப்பு சட்டத்தைத் தீவிரமாகவும், உடனடியாகவும் அமுல்படுத்த வேண்டும்; பெண்களுக்கு ஆண்களைப்போல சம சொத்துரிமை வேண்டும்; பெண்களைக் கோயிலுக்குப் பொட்டுக்கட்டிவிட்டு 'விபச்சாரி'களாக்கும் இழிவுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்ற தீர்மானங்கள் அதிலே நிறைவேற்றப்பட்டன. பொது மாநாட்டில் குறுக்கிடாமல் - இந்தப் பெண்கள் மாநாடு தனியாகவே நடத்தப்பட்டது; இளைஞர்கள் மாநாட்டிலும் பெண்ணுரிமைக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இளைஞர்கள் - 'விதவை'களையும், தேவதாசிப் பெண்களையும் திருமணம் செய்ய முன்வர வேண்டும் என்று அந்த




மாநாடு அறைகூவல் விடுத்தது.

சுயமரியாதை இயக்கத்தின் பெண் தொண்டர்களைக் கொண்டு தனியாக பெண்கள் மாநாடுகள் நடத்தப்பட்டாலும், பொது மாநாட்டிலும் பெண்களின் பங்கெடுப்பு கணிசமாகவே இருந்தது. அதாவது, பெண்கள் இயக்கத்தோடு மட்டும் பெண்களை முடக்கி விட நினைக்கவில்லை.

இந்தப் பெண்கள் -தங்களின் துவக்க உரைகளில் பெண்ணுரிமை தொடர்பான பல்வேறு கருத்தோட்டங்களை முன்வைத்துப் பேசினர். பெண்களின் 'மவுனக் கலாச்சாரத்தைத்' தகர்த்தெறிய பெரியார் மேற்கொண்ட முயற்சி இது. இந்த நடவடிக்கைகளால் - சுயமரியாதை இயக்கத்தின் பெண் தொண்டர்கள் உற்சாகமடைந்து - ஆர்வத்துடன் செயல்பட முன்வந்தனர். பேசவே தெரியாத பெண்களாக இருந்தாலும் - சில வார்த்தைகளையாவது மாநாட்டு மேடையில் பேசவேண்டும் என்று பெரியார் வலியுறுத்தினார்.

சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த பெண்கள் -இப்படி மாநாடு, பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டதோடு இல்லாமல், போராட்டங்களிலும் தீவிரமாகப் பங்கெடுத்தனர். மிகவும் குறிப்பிடத் தகுந்தது இந்தி எதிர்ப்பு போராட்டமாகும். 1937-ஆம் ஆண்டு இறுதியில் துவங்கி 1940 துவக்கம் வரை சுமார் இரண்டு ஆண்டு காலம் இந்தப் போராட்டம் நடந்தது. இந்தியைத் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கி - அன்றைய காங்கிரஸ் அமைச்சரவையின்


படிப்பகம்

www.padippakam.com

றிவிட்டார்கள் என்று குற்றம் சாட்டி -நீதிக்கட்சி அமைச்சரவை யில் இடம் பெற்றிருந்த ஏ.பி. பாத்ரோ மற்றும் நீதிக்கட்சி அமைச்சர்கள், கட்சியிலிருந்து ராஜினாமா செய்ய வேண்டும் என் றும் அவர் வலியுறுத்தினார்.

பெரியார் இந்தப் பிரச்சினையில் தன்னையும் விமர்சனத்துக்கு உட்ப டுத்தத் தயங்கவில்லை. தனது துணைவியார் நாகம்மையார் முடி வெய்தியபோது அவர் எழுதிய இரங்கல் உரையில் தனது சொந்த வாழ்க்கையில் தான் எழுதிய கருத் துக்களில் நூறில் ஒன்றையாவது பின்பற்றாதவனாக இருந்ததற்கு வெட்கப்படுகிறேன் என்று எழுதி னார்.

பெரியாரின் இந்த பெண்ணுரி மைக் கோட்பாடுகள் பேச்சள வோடு இல்லாமல் சுயமரியாதை இயக்கத்தில் செயல்திட்டமாகவும் நடந்தது.

பெண்ணுரிமை பிரச்சினையில் சுயமரியாதை இயக்கத்தின் புரட்சி கர உள்ளடக்கத்தை அதே காலத் தில் இருந்த ஏனைய இயக்கங்க ளின் அணுகு முறையோடு ஒப்பிட் டுப் பார்த்தால்தான் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். சுயமரி யாதை இயக்கக் காலத்தில் இருந்த மற்றொரு முக்கியமான இயக்கம் - தேசிய இயக்கம்தான். பெண்கள் பிரச்சினையை தேசிய இயக்கம் எப்படித் தீர்க்க விரும்பியது என் பதை சுருக்கமாகக் குறிப்பிடுவோம். பாந்தா சாட்டர்ஜி என்பவர் அண்



மையில் எழுதியுள்ள ஒரு ஆய்வுக் கட்டுரையில் தேசிய இயக்கம் ஏற் கெனவே நிலை பெற்றுள்ள ஆண் ஆதிக்க கூட்டமைப்பு உடைந்துவி டாமல் அதற்குள்ளேயே பெண்க ளுக்குச் சலுகைகள் கிடைப்பதற் கான மாற்றங்களை முன்வைத்தது என்று கூறுகிறார். மேற்கத்திய பொருளிய கலாச்சாரத்தை ஏற்றுக் கொண்ட தேசியவாதிகள், அதைத் தவிர வேறு ஆன்மீகம் மற்றும் வேறு பிரச்சினை தொடர்பாக மேலை நாட்டுக் கலாச்சாரத்தை ஏற்கக்கூடாது என்றும் - அது தேசிய கலாச்சாரத்தின் தனித்தன் மையை அழித்துவிடும் என்றும் வாதிட்டனர். இதே சிந்தனையை மேலும் விரிவாக்கி வீடுதான் ஆன் மீக உணர்வுகளையும் - இந்தியக் கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கும் இடம் என்றதோடு - அந்த வீட்டை நிர்வகிக்க வேண்டியது பெண்ணின் கடமை என்றனர். ஒரு பெண் கற்புடையவளாக, அடங் கிப் போகிறவளாக, தியாகம் செய் கிறவளாக, அன்புள்ளவளாக, பொறுமைசாலியாக இருந்து தேசி யக் கலாச்சாரத்தின் ஆன்மாவைக் காப்பாற்றுவதன் மூலம் தங்கள் கடமையைச் செய்யவேண்டும் என் றனர். இந்தப் புதிய ஆண் ஆதிக்க எல்லைக்குட்பட்டுத்தான் தேசிய இயக்கம் பெண்களுக்கான சீர்தி ருத்தத்தைப் பேசியது. மேற்குறிப் பிட்ட பெண்களுக்கான நல்லொ ழுக்க குணாம்சங்களைக் காப்பாற் றிக்கொண்டு தான் அவர்கள் படிக் கவும் பேருந்து ரயில்களில் பயணம் செய்யவும், சினிமா நாடகங்களைப் பார்க்கவும், வீட்டுக்கு வெளியே வேலைக்குப் போகவும் அனுமதிக் கப்பட்டனர்.

முதல்வர் சி. ராஜகோபாலாச்சாரி உத்த ரவு பிறப்பித்திருந்தார். இந்தப் போராட் டம்தான் - சி. ராஜகோபாலாச்சாரியின் உத்தரவைப் பின்வாங்கச் செய்தது.

போராட்டத்தின் துவக்கக் கட்டத்தில் - சுயமரியாதை இயக்கத்தின் பெண் தொண்டர்கள் ஊர்வலங்களிலும், கூட் டங்களிலும் பங்கெடுத்தார்கள். அந்தப் பெண்கள் தங்கள் சேலைகளில் தமிழ்க் கொடியின் படத்தை அச்சிட்டுக் கொண்டு - இந்தி எதிர்ப்பு - தமிழ் வாழ்த்து முழக்கங்களை எழுப்பிக் கொண்டு வந்தது ஊர்வலத்தின் தனிச் சிறப்பு. கூட்டங்களிலும் பெண்கள் பேசினார்கள். சென்னை திருவல்லிக்கே ணியில் 1938 செப்டம்பர் 11-ஆம் தேதி நடந்த இந்தி எதிர்ப்புப் படை வர வேற்புக் கூட்டத்தில் - ராமாமிர்தம் அம்மையார், நாராயனி அம்மையார், வா.பா. தாமரைக்கனி அம்மையார், முன்னாகர அழகியார் உட்பட பல பெண்கள் பேசினார்கள். இந்தியை எதிர்த்து -திருச்சியிலிருந்து புறப்பட்டு - நடந்தே சென்னைவரை - பிரச்சாரம் செய்துவந்த இந்தி எதிர்ப்புப் படையை வரவேற்க - இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

பின்னர் போராட்டம் தீவிரமான போது, பெண்களே நேரடியாக போராட் டக் களத்தில் குதித்து கைதானார்கள். பெண்களின் முதல் போராட்ட அணி 1938 நவம்பர் 14-ஆம் தேதி சென் னையில் கைதானது: அதில் டாக்டர் தர் மாம்பாள், ராமாமிர்தம் அம்மையார், பட்டம்மாள், சீதம்மாள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

அவர்களுக்கு நீதிபதி 6 வார சிறைத் தண்டனை விதித்தார்: அபராதம் கட்டி விடுதலை ஆகிறீர்களா? அல்லது சிறைக்குப் போகிறீர்களா என்று நீதிபதி கேட்டபோது - அவர்கள் சிறைக்கு போவதையே விரும்பி ஏற்றனர்.

அதுமுதல் - அவ்வப்போது பெண் கள் போராட்ட அணிகள் களத்தில் வந் துகொண்டே இருந்தன. 1934 செப்டம் பர் 5-ல் கடைசி பெண்கள் அணி கைதானது. மொத்தம் 73 பெண்கள் இந் தியை எதிர்த்து மறியல் களத்தில் இறங்கி கைது செய்யப்பட்டு பிறகு, சிறையில் அடைக்கப்பட்டார்கள். இதிலே, மிகவும் குறிப்பிடப்பட வேண் டியது - பல பெண்கள் தங்கள் கைக் குழந்தைகளுடன் சிறை புகுந்ததாகும். மொத்தம் 32 குழந்தைகள், தங்கள் தாய்மார்களுடன் சிறையில் இருந்தனர். போராட்டத்தைக் கண்டு நிலை குலைந்து 'விரக்தி அடைந்த ஒரு காங் கிரஸ் அமைச்சர், இப்படி குழந்தைகளு டன் பெண்கள் சிறை புகுவதை கேலி பேசினார். தங்கள் குழந்தைகளுக்கு சிறையில் பால் கிடைக்கும் என்பதால் தான், இவர்கள் குழந்தைகளுடன் சிறைக்குப் போகிறார்கள் என்றார். சுய மரியாதை இயக்கப் பெண்கள் இந்தப் பேச்சை கேட்டு கொதிப்படைந்தனர். 1938-ல் வேலூரில் நடந்த சென்னை மாகாண பெண்கள் மாநாட்டில் அமைச் சர் தனது கூற்றைத் திரும்பப் பெறுவ தோடு, நிபந்தனையற்ற மன்னிப்பு, கேட்க வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது. இந்தப் போராட்டத்தில் பெரி யார் கைது செய்யப்பட்டதற்குக்கூட பெண்களை தூண்டிவிட்டு சிறைக்கு அனுப்பினார் என்றே குற்றம் சாட்டப் பட்டது. நீதிமன்றத்தில் அரசு வழக்கறி ஞருக்கும் ஒரு பெண்ணுக்கும் நடந்த உரையாடலைக் கீழே தருகிறோம்.

**அரசு வழக்கறிஞர்:** நீங்கள் கைக்கு ழந்தைகளுடன் இருக்கிறீர்கள்: சிறை யிலே இருப்பது மிகவும் அவதியானது; உங்கள் கணவரும் இதனால் பாதிக்கப் படுவார். நன்றாக யோசியுங்கள்: இனி மேல், இப்படி எதிர்காலத்தில் செய்ய மாட்டேன் என்று கூறிவிட்டால், நாங் கள் மன்னித்துவிடுகிறோம்.

**கைதான பெண்:** எங்கள் மொழியின் வளர்ச்சிக்கும், நாட்டின் உயர்வுக்கும், எந்த சங்கடத்தையும் நாங்கள் தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். இதிலே தலையிடுவதற்கு எங்கள் கண வர்களுக்கு எந்த உரிமையும் கிடை யாது. அதற்காக அவர்கள் கவலைப்ப டுபவர்களும் அல்ல.


படிப்பகம்

www.padippakam.com


பொங்கல் வாழ்த்துக்கள்

ஸ்டெர்லைட்

தூத்துக்குடியில் ஒரு முத்தாரம்



ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரீஸ்

(இந்தியா) லிமிடெட்

சிப்காட் காம்ப்ளக்ஸ், தூத்துக்குடி.




படிப்பகம்

www.padippakam.com

புத்தாண்டு பொங்கல் வாழ்த்துக்கள்

தொடக்கம்: 1992 போன்: 22152 தந்தி: "சேம்பர்"

சேம்பர் ஆப் காமர்ஸ்

## ஆதித்தனார் தொழிற் பயிற்சி நிலையம் (ஐ.டி.ஐ.)

59, எம்.கே. மூப்பனார் ரோடு

**தஞ்சாவூர் - 613 001.**

தந்தி: "சேம்பர்" போன் : 22152 22875

சேம்பர் ஆப் காமர்ஸ்

## மணலி இராமகிருஷ்ணா பாலிடெக்னிக்

குருவாடி

**தஞ்சாவூர் — 613 003.**

தஞ்சைக்கு பெருமையளிப்பது பெரிய கோவில்

தாம்பூலத்திற்கு சிறப்பு சேர்ப்பது

## லெக்ஷ்மி சீவல்




தயாரிப்பாளர்கள்

**சுப்ரமணியம் & கோ.,**

**P.B.No 222, தஞ்சாவூர்.**

# ஸ்ரீ தாயார் பெனி∴பிட் பண்ட் லிட்.,

**189, காந்தி ரோடு, மன்னார்குடி, ☎ : 50367**

3.75 லட்சம் மதிப்புள்ள

**தாயார் பரிசு மழை திட்டம்**

1015 பரிசுகள்





* தாயார் பரிசு மழை திட்டத்தில் ஒவ்வொரு ரூ 1000/ – முதலீட்டுக்கும் ஒரு சிறப்பு பாண்ட் வழங்கப்படுகிறது.
* 50 வது மாதம் ரூ 2000/ – பெறுவதுடன் 14-04-96 நடைபெறும் பரிசு குலுக்கலில் மாருதி வேன் அல்லது 50 பவுன் தங்க நகை மற்றும் கலர் டிவி, ரெப்ஜிரேட்டர், தையல் மிஷின், சைக்கிள்.

STBF

அதிகபட்ச நம்பிக்கைக்கும் அதிஷ்டத்துக்கும்

சேர்மன் :
D.G.C. ராதாகிருஷ்ணன்
(D.G.C. குருப் நிறுவனங்கள்)

மேலாண் இயக்குநர் :
V. சந்திர சேகரன்
(N. வெங்கட்ராமய்யர் & சன்ஸ் நிறுவனங்கள்)

இயக்குநர்கள் :

Dr. C. அசோக்குமார்
(CAK பாலிகிளினிக்)

திருமதி : கிருபர்
w/o V. ராஜகோபால்
(இன்டேன் கேஸ் டீலர்)

திருமதி. ரேவதி
w/o Prof. S. வெங்கட்ராஜீலு
(இந்தியன் ஆயில் டீலர்)

திருமதி ரேவதி
W / O M.K.R.M. ரவீந்திரன்
(MKRM மளிகை)

S. ராமசந்திரன்
(ஸ்ரீனிவாசா மெடிக்கல்ஸ்)



படிப்பகம்

www.padippakam.com

# மண்டையை உடைப்பதாக மிரட்டல்

சுயமரியாதை இயக்கத்தில் தீவிரப் பங்கெடுத்து செயல்பட்ட ஒரு வித்தியாசமான சிறப்பு வாய்ந்த பெண்மணி மூவலூர் ராமாமிர்தம் அம்மையார். தஞ்சை மாவட்டத்தில் உள்ள மூவலூர் எனும் கிராமத்தில் இசை வேளாளர் சாதியில் பிறந்தவர். இந்த சாதியைச் சார்ந்த பெண்கள்தான் தேவதாசிகளாக்கப் பட்டனர். எனவே, இளம் வயதிலேயே அவரும் 'தேவதாசி'யாக்கப்பட்டார். (இந்து சம்பிரதாயப்படி ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறக்கும் இந்தப் பெண்கள் கோயில்களில் கடவுளுக்காக பொட்டு கட்டி விடப்படுபவர்கள். கடவுளுக்குத் திருமணம் செய்துவைக்கப்பட்டவர்கள் என்பது அதற்குப் பொருள். நடைமுறையில் இந்தப் பெண்கள் இசை மற்றும் நடனத்தில் பயிற்சி பெற்றவர்களாக இருப்பார்கள். இவர்களை பிராமணர் மற்றும் உயர்சாதியினர் தங்களின் வைப்பாட்டிகளாக்கிக் கொள்வார்கள். நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் இந்தக் கொடுமை சட்டத்தின் மூலம் ஒழிக்கப்பட்டது).

1925-ல் 'குடிஅரசு' பத்திரிகையில் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் இவ்வாறு எழுதினார்.

''நான் பிறந்தது இசை வேளாளர் சாதியில்தான். ஆனாலும் எனது பரம்பரையினர் 'தேவதாசி'களாவது இல்லை. என்னுடைய மாமாவும் அத்தையும் எனது தந்தையாரிடம் கூறி, 'தேவதாசியாக மாறி என்னை விபச்சாரத் தொழிலில் ஈடுபடுமாறு கட்டாயப் படுத்தினார்கள். எனக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டாம். கோயிலில் தேவதாசியாக்கி பிறகு விபச்சாரத்தில் ஈடுபடுத்தினால் குடும்பத்துக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்று எனது தந்தையிடம் அவர்கள் வலியுறுத்தியதை, எனது பெற்றோரும் ஏற்றுக்கொண்டு என்னைக் கட்டாயப்படுத்தினர். எனக்கு நடனம் மற்றும் இசையில் நல்ல தேர்ச்சி இருந்தது. அந்தக் காலக்கட்டத்தில்தான் நான் இந்த தேவதாசி முறையின் இழிவை உணர்ந்தேன்! இது ஒழிக்கப்பட வேண்டும் என்று விரும்பினேன். இந்த தேவதாசி முறையை வலியுறுத்தும் மத நூல்களைப் படித்தேன். பெண்களை கேவலப்படுத்தக்கூடிய இந்தத் தொழிலில் சில ஆண்கள்தான் அவர்களின் காம இச்சைக்கும், சுயநலத்துக்கும் பெண்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்




காலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் குறிப்பாக 1920 முதல் தேசிய இயக்கம் பெண்களைத் திரட்டியது மேற்குறிப்பிட்ட புதிய ஆண் ஆதிக்க வரம்புக்கு உட்பட்டுத்தான். பெண்கள்மீது பாரம்பர்யமாக சுமத்தப்பட்ட குணங்களான -குழந்தையைப் பராமரிக்கும் தாய், பெற்றோர்க்குக் கீழ்ப் படிந்த மகள்; கடவுளுக்குப் பயந்த கணவன் சொல்லைத் தட்டாத கற்புடைய மனைவி ஆகிய குணங்களுடன்தான் தேசிய இயக்கம் பெண்களை மேடையில் பேசவும் பொதுவாழ்வில் ஈடுபடவும் அனுமதித்தது.

கல்கத்தாவில் அலாதிபானுபேகம் என்பவர் மேடையில் -ஒரு தாய் என்று அறிவித்துத்தான் மேடையிலே பேச அனுமதிக்கப்பட்டார். ஒத்துழையாமை இயக்கத்துக்கு கல்கத்தா விலை மாதர்கள் ஆதரவு தர முன்வந்தபோது தேசிய இயக்கத் தலைவர்கள் பலர் அதைக் கடுமையாக எதிர்த்தனர். தமிழ் பேசும் பகுதியில் தேசியவாதிகள் பெண்கள் பிரச்சினையை எப்படிப் பார்த்தார்கள் என்பதற்கு தேசிய இயக்கத்தில் தீவிரம் காட்டிய திரு. வி. கல்யாணசுந்தரனாரின் கருத்தை எடுத்துக்கொள்ளலாம். அவர், தேசிய அரசியலில் தீவிரம் காட்டினாலும், பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி எழுதிப் புகழ்பெற்றவர். அவரது பிரபலமான 'பெண்ணின் பெருமை' நூலில் (1927-ல் வெளிவந்தது) பெண்மை என்பது பொறுமை. அடக்கம், தியாகம், தன்னலமறுப்பு, அழகு, காதல், தாய்மை ஆகியவற்றில்தான் அடங்கி இருக்கிறது என்கிறார். எல்லா பெண்களும் தாயாவதற்காக படைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் சந்ததியை உருவாக்குகிறவர்களாக இருப்பதால், வணங்கத்தக்கவர்கள். புதிய தலைமுறையினரான குழந்தைகளுக்கு ஒழுக்கத்தைப் போதிப்பவர்கள் என்பதே பெண்களைப் பற்றிய திரு.வி.க.வின் கண்ணோட்டம். மேலை நாட்டுக் கல்வி முறையை அவர் எதிர்த்ததோடு, பாரம்பரிய 'ஒழுக்கத்தையும்' மத நெறிகளையும் கொண்ட கல்வித் திட்டமே தேவை என்று அவர் கூறினார். பெண்கள், வீட்டுக் கடமைகளை ஒழுங்காகச் செய்வது எப்படி என்பதற்கான பயிற்சிக் களமாக கல்வி இருக்க வேண்டும் என்றார் அவர். பெண்களின் "கடமையான" சோறு சமைப்பது, தையல் வேலை போன்றவற்றில் அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்றார்.

தேசிய இயக்கத்தில் -பெண்கள் பிரச்சினைக்கு பாடுபட்டவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி. இந்திய பெண்கள் சங்கம் (Women's India Association) என்ற அமைப்பின் மூலமாக தேவதாசி முறையை எதிர்த்து இயக்கம் நடத்திவந்தார். ஆனால், அவர் தேவதாசி முறையை ஏன் எதிர்த்தார் என்பது முக்கியமானது! கற்புடைய மனைவியாக ஒரு பெண் இருப்பதை இந்த முறை தடுக்கிறது என்பதற்காகத்தான் அவர் தேவதாசி முறையை எதிர்த்தாரே, தவிர, மதம், கடவுளின் பெயரால் பெண்கள் -இப்படி அடிமைகளாக்கப்படுகிறார்களே என்பதற்காக அல்ல. அதேபோல் அவர் ஒரு டாக்டராக இருந்தாலும் கர்ப்பத்தடையில் பிற்போக்குத்தனமான கொள்கையையே கொண்டிருந்தார். கர்ப்பத்தடைக்கும் பெண் விடுதலைக்கும் உள்ள தொடர்பை அவர் (பெரியாரைப் போல) ஆராயவில்லை. கர்ப்பத் தடையைக் கூட அவர் அழுத்தமாக வலியுறுத்தாமல் -தேவைப்படுமானால் சுயகட்டுப்பாடு, பிரம்மச்சாரியம் மூலம் பிள்ளை பெறுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்றார்.

படிப்பகம்

www.padippakam.com

கிறார்கள் என்பது எனக்குப் புரிந்தது' என்று எழுதியுள்ளார்.

இந்த விழிப்புணர்வு காரணமாக - அவர் 'தேவதாசி' அமைப்பிலிருந்து வெளியேறி - சுயம்பு பிள்ளை என்ற இசைக் கலைஞரை தனது விருப்பப்படி திருமணம் செய்துகொண்டார். இந்தத் திருமணம் அவரது சமூகத்தில் கடும் எதிர்ப்பை உருவாக்கியது. அதன் காரணமாக அவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டனர்.

ராமாமிர்தம் அம்மையாரின் அரசியல் வாழ்க்கை இந்திய தேசிய காங்கிரசில் தான் துவங்கியது. ஒரு தீவிர காங்கிரஸ் தொண்டராக தமிழ்நாட்டில் பெண்கள் முன்னேற்றத்துக்கும், குறிப்பாக தேவதாசி' பெண்களின் முன்னேற்றத்துக்கும் பாடுபட்டார். அவர் எழுதுகிறார்:

"தேவதாசி முறையை ஒழிப்பதற்காக கடந்த ஏழு அல்லது எட்டு ஆண்டுகளாக நான் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கிறேன். நமது பெண்களை சீர்திருத்துவதற்கும், 'தேவதாசி' முறையையே ஒழித்துக்கட்டுவதற்கும் பல மாநாடுகளை நடத்தியுள்ளேன். பல திருமண வீடுகளில் நானே அழைப்பிதழ் இல்லாமலே நுழைந்து, எளிமையாக திருமணம் நடத்தவேண்டும் என்றும், தேவதாசி முறையிலிருந்து விடுபடவேண்டும் என்றும் பேசுவேன். அதன் கேவலங்களை அம்பலப்படுத்துவேன். சக பெண்களை - 'தேவதாசிகளாக வேண்டாம்' என்று வற்புறுத்துங்கள் என்று கட்டாயப்படுத்துவேன். இதனால் சில ஆண்கள் என் மீது கடுமையாக ஆத்திரப்பட்டார்கள். எனக்கு எதிராக இடைவிடாத பிரச்சாரத்தை நடத்தினார்கள். என்னை அச்சுறுத்தினார்கள். திருமணங்களில் தேவதாசி முறையை நான் எதிர்த்துப் பேசினால் எனது மண்டையை உடைத்துவிடுவதாக மிரட்டினார்கள்".

பின்னர் அவர் காங்கிரசிலிருந்து விலகி சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து விட்டார்.

தான் சுயமரியாதை இயக்கத்தில் தொண்டாற்றியது பற்றி நினைவு கூர்ந்து 1956-ல் அவர் எழுதும்போது:

"நான் தேவதாசி முறையை ஒழிப்பதற்குப் போராடி வருவதைப் பாராட்டி ஒருமுறை காந்தி எனக்கு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தை நான் வழிபடுவது வழக்கம். நான் காங்கிரசை விட்டு வெளியேறியவுடன், அந்தக் கடிதம் மட்டுமல்ல; காந்தியையும் எனது சிந்தனையிலிருந்து துடைத்து எறிந்து விட்டேன் என்றார்.

சுயமரியாதை இயக்கத்தில் அவர் முழு நேரத் தொண்டராகச் செயல்பட்டார். பெண்ணடிமையை எதிர்த்து இடைவிடாமல் போராடினார். அவரால் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணம்தான் விதவை மறுமணமான சிவகாமி சிதம்பரனார் திருமணம்!

'குடிஅரசு' பத்திரிகையிலும் ராமாமிர்தம் அம்மையார் தொடர்ந்து பெண்களின் நிலை குறித்து கட்டுரைகளை எழுதினார். ராமாமிர்தம் அம்மையார் 3-ம் வகுப்பு வரைதான் படித்தவர் என்பது இங்கே மிகவும் குறிப்பிடத்தக்கது. 1936-ல் '303 பக்கங்கள் கொண்ட ஒரு நாவலை அவர் எழுதி வெளியிட்டார். அதன் பெயர் 'தாசிகளின் மோசவலை' அல்லது மதிபெற்ற மைனர்' என்பதாகும். தமிழ் இலக்கியத்தின் பாரம்பரிய நடையில் இந்த நாவல் இல்லை என்று சொல்லப்பட்டாலும், தாசியாக தான் இருந்த காலத்தில் பெற்ற சொந்த அனுபவங்களை அதிலே விவரித்திருந்தார்.

பணக்காரர் ஒருவரால் ஏமாற்றப்பட்ட இரண்டு தேவதாசிப் பெண்கள் அந்தத் தொழிலை விட்டு வெளியேறி தேவதாசிகள் முன்னேற்ற சங்கம்' என்ற ஒரு அமைப்பைத் துவங்கி தேவதாசி முறையை எதிர்த்துப் போராடியதை அந்த நாவல் விவரிக்கிறது.

1945-ல் திராவிட நாடு பத்திரிகையில் தமயந்தி என்ற தொடர்கதையை அவர் எழுதினார். அதுவும் தேவதாசி முறைக்கு எதிர்ப்பாக எழுதப்பட்டதுதான்.

ராமாமிர்தம் அம்மையார் 1949-ல் தி.மு.க. பிரிந்தபோது - அவர் தி.மு.க.வில் சேர்ந்துவிட்டார்.

இதே கருத்தைத்தான் சி. ராஜகோபாலாச்சாரி, எஸ். சத்யமூர்த்தி போன்ற தலைவர்கள் தீவிரமாகக் கொண்டிருந்தனர். தேவதாசி முறை ஒழிப்பு பற்றி முத்துலட்சுமி ரெட்டி பிரச்சினையை எழுப்பியபோது -தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்த சி. ராஜகோபாலாச்சாரி, அந்தப் பிரச்சினையை காங்கிரஸ் கமிட்டியில் எழுப்புவதற்கே எதிர்ப்பு தெரிவித்தார். சத்தியமூர்த்தி இன்னும் ஒருபடி மேலே போய், "தேவதாசி முறை -தேசியக் கலையையும், கலாச்சாரத்தையும் பிரதிபலிப்பது என்பதால், அந்த முறை தொடர்ந்து நீடிக்கவேண்டும்; ஒவ்வொரு தேவதாசியும் குறைந்தது இன்னொரு பெண்ணை எதிர்கால தேவதாசியாக்க வேண்டும்" என்றார்.




அதேபோல் -குழந்தைகள் திருமண தடுப்பு சட்டத்தையும் -அது இந்து மதத்துக்கு விரோதமானது என்று கூறி சத்தியமூர்த்தி எதிர்த்தார். (சுதேசமித்திரன் -1928 நவம்பர் 28) காங்கிரஸ் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான சேலம் சி. விஜயராகவாச்சாரியார் -குழந்தைகள் மண தடுப்புச் சட்டம் அமுலாவதற்குள் -அவசர அவசரமாக வயதுக்கே வராத தனது மகளுக்கு திருமணம் செய்து வைத்தார்.

தேசியவாதிகள் -ஆண் ஆதிக்க அமைப்பு முறையை எதிர்க்க முன்வரவில்லை; மாறாக அது அவசியத் தேவை என்று வலியுறுத்தினார்கள். எனவே, சுயமரியாதை இயக்கத்தின் பெண்கள் முன்னேற்றத்துக்கான கொள்கைகள் -தேசிய இயக்கத்தின் கொள்கைகளோடு முற்றிலும் வேறுபட்டது. ஆண் ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் நிறுவனங்களான குடும்பம், திருமணம், கற்பு என்பவைகளையே பெரியார் கேள்விக்கு உட்படுத்திய போது, தேசியவாதிகள் இந்த அமைப்புகளை ஆதரித்தனர். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் -தேசியவாதிகள் ஆண் ஆதிக்கத்தை நிலைப்படுத்திக் கொண்டு, பெண்களை அரசியலுக்கு இழுத்தனர்; சுயமரியாதை இயக்கம் ஆண் ஆதிக்கத்தை எதிர்க்கவே - பெண்களை அரசியலுக்கு இழுத்தது. ■

படிப்பகம்

www.padippakam.com

வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் எங்களது இதயம் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

# ஸ்வஸ்திக் வேதாரண்யம் புகையிலை.

போன்: 50422.
Reg. 111866
ஸ்தாபிதம். 1944



# ஸ்வஸ்திக் வாசனை பாக்கு

# ஸ்வஸ்திக் சீவல்.

# ஸ்வஸ்திக் கிளீனிங் பவுடர்

# ஸ்வஸ்திக் வாஷிங் பவுடர்

# ஸ்வஸ்திக் அயோடின் கலந்த உப்பு.

விநியோகஸ்தர்கள்:

**ஸ்வஸ்திக் புகையிலை ஏஜன்சீஸ்**
1115, பூந்தமல்லி ஹைரோடு சென்னை 600 003.
போன்: ஆபீஸ்: 58591 வீடு: 422403.

மற்றும்

**ஸ்வஸ்திக் டிரேடர்ஸ்,**
சேதுரஸ்தா-வேதாரண்யம் 614 810
போன்: 50422.

---

இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

**50ம் ஆண்டு பொன் விழாவை நோக்கி**

**ஹல்வா சக்கரவர்த்தி**

# பிரேமா விலாஸ்




உரிமையாளர்:
**G.கெங்காபாய் பர்ம்**

84, டவுன்ஹால் ரோடு,
மதுரை - 625 001.

எங்கள் ஸ்தாபனத்திற்கு வேறு கிளைகள் இல்லை

லாலா ஸ்வீட்ஸ்

SHAFI

FLAASH


படிப்பகம்

www.padippakam.com


அழகில் சிறந்தது
அன்பில் உருவானது
அணிவதில் நிறைவானது
அனைவரும் விரும்புவது
'அவதாரின்' ஆபரணங்களே
அணிந்து மகிழ்வீர்!
"அவதாரில்" வாங்கி மகிழ்வீர்!!

**அன்பு வாடிக்கையாளர்களுக்கு "ஸ்ரீ அவதார் ஜுவெல்லர்ஸ்"-ன் இதயங்கனிந்த "புத்தாண்டு" மற்றும் "பொங்கல்" நல்வாழ்த்துக்கள்**

★ புத்தாண்டின் முதல் மூன்று தினங்களுக்கு கூலி, சேதாரம் இல்லை. கல். முத்து, பவளம் இலவசம்.

★ ★ புத்தாண்டில் எமது புதிய கிளை "தஞ்சையில்" துவக்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## ஸ்ரீ அவதார் குடும்பத்தினர்

ஈரோடு

**ஸ்ரீ அவதார் ஜுவெல்லர்ஸ்**
3, முத்துரங்கம் வீதி
ஈரோடு -638 001
Ph: 211466, 214366 Shop
221157 (Res.)
Tel: அவதார்

**ஸ்ரீ அவதார் ஜுவெல்லர்ஸ்**
63, காந்திஜி ரோடு,
தஞ்சாவூர்
Ph: 25907
22413 (Res.)
Tel: அவதார்





சமூக நீதி காத்த வீராங்கனை இதயதெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு
டாக்டர்
# புரட்சித்தலைவி
அவர்களே

மகத்தினில் பிறந்து ஜகத்தினை ஆளுகின்ற மங்காத ஒளிவிளக்கே
தங்கள் பார்வை பட்ட இடம் தொழில் தழைத்தோங்கி,
தங்கள் பாதம் பட்ட இடமெல்லாம் வான்மழை பொழிகிறது!
தன்னிகர் இல்லா தங்கத்தலைவியின் புகழைத் தரணியெல்லாம்
என்னென்றும் போற்றிக் கொண்டிருக்கும்

**தங்கள் விசுவாசி**



# ஆர்.என். கிட்டுசாமி

மாவட்ட செயலாளர், டாக்டர் புரட்சித்தலைவி பேரவை, பெரியார் மாவட்டம்.
தலைவர், பெரியார் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, பெரியார் மாவட்டம்.


படிப்பகம்

www.padippakam.com


# REGIONAL ENGINEERING COLLEGE

TIRUCHIRAPPALLI-620 015. ☎ 552281, 552282, 552283

நாடு செழிக்க தொழில் பெருக வேண்டும்.
தொழில் பெருக பொறியியற் கல்வி உயர வேண்டும்.
பொறியியற் கல்வி தருவதில் தலைசிறந்தது.

## மண்டலப் பொறியியல் கல்லூரி

திருச்சிராப்பள்ளி

கண் கவரும் தூய வெண்மை !
அதுவே "லில்லி கோட் செம்" தன்மை !!



உங்கள் கட்டிட சுவர்களுக்கு
அழகூட்ட பூசுங்கள்




LILY COAT

சதிஷ் லைம் இண்டஸ்ட்ரீஸ், விருதுநகர் - 626001.

✆ Fact : 8566 Resi : 3727

Administration office :
SATHISH LIME INDUSTRIES, Post Box No. 56, Bodinayakanur - 626 513. ✆ 20288, 20328

www.padippakam.com



**தமிழக மக்களிடையே தற்போது சுற்றுச்சூழல் குறித்து விழிப்புணர்வு அதிகமாகி வருவது ஒரு ஆறுதலான செய்தி. ஆனால் இது போதாது.**

# நாளை நமதே?

நெடுஞ்செழியன்

சங்க காலத்தில் தமிழகத்தை வகைப்படுத்தும் பொழுது நிலங்களையொட்டி பிரித்தனர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலையென. ஆனால் தற்பொழுது தமிழகம் முழுமையும் பாலைவனமாகிவிடுமோ எனும் அச்சத்தில் தமிழக மக்கள் வாழ வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர். புதிது புதிதாய் பெரிய தொழிற்சாலைகள் வருவதாலும், இயங்கும் தொழிற்சாலைகள் இரசாயனக் கழிவுகளை வெளியேற்றுவதாலும் வனங்கள் அழிக்கப்படுவதாலும் அபரிமிதமான நகர்மயமாதலாலும் தமிழகத்தின் நீர், நிலம், காற்று எல்லாமே அசுத்தமாகியுள்ளன.

வெளியே செல்லும்பொழுது 'மினரல் வாட்டர்'-ஐ கையில் எடுத்துச் செல்ல வேண்டி இருக்கிறது. தண்ணீர்போல் பணத்தை செலவழிக்காதே' என்ற பழமொழி இருந்தது. ஆனால் இப்பொழுது தண்ணீருக்காக பணத்தை செலழிக்க வேண்டிய நிலையுள்ளது. மேலை நாடுகளில் தூக்கியெறிப்பட்ட தொழில் நுட்பங்கள், தொழிற்சாலைகள் இந்தியாவில் வந்து குவிகின்றன. இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்து தூக்கியெறிப்பட்ட, துரத்தியடிக்கப்பட்ட தொழிற்சாலைகள் தமிழகத்தில் தஞ்சம் புகுகின்றன.

பொதுவாகக் கூறப்போனால் தமிழகம் இந்தியாவின் குப்பைத் தொட்டியாகி வருகிறது. 10,000 கி.மீ. நீளமுள்ள தமிழக கடற்கரை கூறுபோட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சுற்றுலா வளர்ச்சி எனும் பெயரில் மலைப் பகுதிகளில் மரங்கள் வெட்டப்படுவதால், நிலச் சரிவு என்பது வாடிக்கையாகிவிட்டது. மக்கள் தொகை பெருக்கம், நகர்மயமாதல் போன்ற பல காரணங்களினால் தமிழக சுற்றுச்சூழலின் மீது பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. நிலத்தடி நீர் வெகுவாய்க் குறைந்துகொண்டு வருகிறது. இயற்கை வளங்கள் சூறையாடப்படுகின்றன.

தற்பொழுது தமிழகம் எதிர்கொள்ளும் பெரிய பிரச்சினை இறால் பண்ணைகளால் ஏற்பட்டதாகும். இப் பண்ணைகள் தமிழக கடற்கரைகளில், தமிழக நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டப் பகுதிகளில் பெருமளவில் வந்து கொண்டிருக்கின்றன. விலை நிலங்கள், இறால் பண்ணைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இறால் பண்ணைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரினாலும் இறால் பண்ணைகளுக்கு உபயோகிக்கப்படும் உப்புநீர் மற்றும் ரசாயனப் பொருட்களாலும் இதனையொட்டியுள்ள விளைநிலங்கள் தரிசு நிலங்களாகின்றன. தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகள் மாடுகள் வாங்குவதற்குப் பதிலாக ஒட்டகம் வாங்க வேண்டிய நிலை ஏற்படப் போகிறது.

விளை நிலங்கள் இறால் பண்ணைகளாக மாற்றப்படுவதால் உணவு உற்பத்தி குறைகிறது. இதே நிலை நீடித்தால் உணவு உற்பத்தியில் தற்சார்புடைய தமிழக்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படக்

படிப்பகம்

www.padippakam.com

உங்கள்
சமையல் ருசிக்க
உபயோகியுங்கள்

Ruchi

கூட்டு பெருங்காயம்
பவுடர்



RUCHI FOOD PRODUCTS

No. 50, Giriappa Road, T. Nagar,
Madras - 600 017.
Phone: 8269290, 8269438, 8275048.

கூடிய நிலை ஏற்படும். இறால் பண்ணைகளிலிருந்து வெளியேறும் இரசாயனக் கழிவுநீர் கடலுக்குள் செலுத்தப்படும்பொழுது அங்குள்ள மீன்கள் இறந்துவிடுகின்றன. இதனால் இப்பகுதியில் மீன்வளம் குறைந்து விடுகிறது. இதனை நம்பியுள்ள மீனவர்களின் தொழில் பாதிப்படைகிறது. கடற்கரைப் பகுதியில் பெரிய இறால் பண்ணைகளை அமைக்கும்பொழுது அப்பண்ணைகள் தங்கள் பண்ணைகளைச் சுற்றி உயரமான சுவர்களை கட்டி விடுகின்றன. இதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்லும் வழி அடைக்கப்படுகிறது. இறால் பண்ணைகள் அமைப்பதற்காக சதுப்பு நிலக் காடுகள் வெட்டப்படுகின்றன. புயலைத் தடுக்கும் இயற்கை அரணாக இருக்கும் இக்காடுகள் அழிக்கப்படுவதால், இப்பகுதியிலுள்ள மக்கள் இயற்கை சீற்றத்தை எதிர்கொள்ள வேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது. விளைநிலங்களில் இறால் பண்ணைகள் வருவதால் விவசாயத் தொழிலை நம்பியுள்ள கூலி விவசாயத் தொழிலாளர்கள் அக்கிராமங்களிலிருந்து தூக்கியெறியப்படுகின்றனர். அவர்கள் நகரங்களுக்கு வந்து என்ன தொழில் செய்வது எனத் தெரியாமல் அல்லாடுகின்றனர்.

இறால் பண்ணைகளை எதிர்த்து மக்கள் போராட்டம் தீவிரமடைந்து வருகிறது. இப்போராட்டத்தை திசை திருப்புவதற்காக தமிழக அரசு

**எல்லா மக்களுக்கும்**
**பொதுவான கடற்கரை,**
**தற்பொழுது தனியாருக்கு**
**தாரை வார்க்கப்பட்டுவிட்டது**

அவசர அவசரமாக எவ்வித விவாதமும் இல்லாமல் சட்டசபையில் இறால் பண்ணைகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தை நிறைவேற்றியது. இறால் பண்ணைகளுக்கு எதிராக உயர்நீதி மன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றம் ஒரு இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனாலும் பல அத்துமீறல்கள் நடைபெற்று வருகின்றன.

உச்ச நீதிமன்றத்திலும் பரிந்துரையின் பேரில் அமைக்கப்பட்ட NEERI குழு தமிழகம் ஆந்திரப் பகுதிகளை பார்வையிட்டு ஒரு அறிக்கை சமர்ப்பித்தது. அதன்படி இறால் பண்ணையால் முதலாளிகளுக்கு ரூ. 159 கோடி லாபம் கிடைக்குமென்றும் இறால் பண்ணைகளால் ஏற்படும் பாதிப்பினால் தமிழக மக்களுக்கு ரூ. 50 கோடி இழப்பு ஏற்படும் என்றும் கூறியுள்ளது.

இறால் பண்ணைகளால் கிராமங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு, தூத்துக்குடி அருகேயுள்ள பட்ண மருதூர் என்ற கிராமம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. பட்ணமருதூரைச் சுற்றியுள்ள இறால் பண்ணைகளுக்கு உபயோகிக்கப்படும் உப்பு நீரினால், அக்கிராமமே அழியும் நிலையில் உள்ளது. அக்கிராமத்திலுள்ள கிணறுகளும், குளமும் உப்பு நீராகிவிட்டன. உப்பு நீர், வீடுகளின் மண் சுவர்களுக்குள் செல்வதால், அவர்களது வீடுகள் இடிந்து

படிப்பகம்

www.padippakam.com

போயுள்ளன. குழந்தைகள் வெளியில் விளையாட முடிவதில்லை. வீடுகளின் தரைகள் வழியே உப்பு நீர் கசிகிறது. மக்கள் தூங்கச் செல்லுமுன் சாக்கு களை தரையில் பரப்பி அதன்மீது பாய்போட்டு தூங்குகிறார்கள். இதில் மிகவும் மோசமானதென்னவென்றால், இறந்தவர்களின் உடலை புதைக்க முடியாமல் போவதுதான். கால் அடி தோண்டியதுமே நீர் வந்து விடுகிறது. வறட்சி காலத்தில், மற்ற கிராமங்களுக்கு தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்த இக் குக்கிராமம், தற்பொழுது குடி நீர் லாரிக்காக தினமும் காத்துக் கொண்டிருக்க வேண்டிய அவல நிலையில் உள்ளது.

கடற்கரைப் பகுதிகளில் பெரிய தொழில் வளாகங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. கடலூர், தூத்துக்குடி, சென்னைக்கு அருகில் மணலி எனும் இடங்களில் பெரிய இரசாயன தொழிற்சாலைகள் வந்துள்ளன. இங்கு வெளியேறும் இரசாயனக் கழிவுகளால் நிலத்தடி நீர் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. கடலூர், சிதம்பரம் சாலையில் பயணம் செய்பவர்கள், சிப்காட் வளாகத்தை கடக்கும்போது மூக்கைப்பிடித்துக் கொண்டு செல்லும் காட்சி, அன்றாட நிகழ்ச்சியாகும். இங்கு வெளியேற்றப்படும் கழிவுகள் ஆறு போல் சென்று கடலை அடைகின்றன. இப்பகுதியிலுள்ள கிராமங்களின் நிலங்கள் பாழடைந்துவிட்டன. இக்கழிவுகள் கலந்த நீரைக் குடிக்கும் கால்நடைகள் இறந்து போகின்றன. இப்பகுதியிலுள்ள மக்கள், தோல் மற்றும் மூச்சிறைப்புப் போன்ற நோய்களால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு நிலம், நீர், காற்று அனைத்தும் மாசுபாடு அடைந்துள்ளன.

தமிழகத்தில் ராமேஸ்வரத்திலிருந்து தூத்துக்குடி வரை 140 கி.மீ. தூரத்திற்கு கடற்கரைப் பகுதிகளில் பவளப் பாறைகள் உள்ளன. இங்குள்ள பாறைகளை வெட்டி சுண்ணாம்பு தயாரிப்பதற்கு, பெரிய தொழிற்சாலைகளுக்கு விற்றுவந்தனர். இப்பவளப் பாறைகளை அழித்து வந்ததால், இப்பகுதியில் சில சிறிய தீவுகள் கடலில் மூழ்கிவிட்டன. கடலரிப்புக்கு எதிரான இயற்கை அரணாக இருந்த இப்பாறைகளை வெட்டியெடுப்பதால், கடல் நீர், கடற்கரையையொட்டியுள்ள மீனவக் கிராமங்களுக்குள் சென்றுவிட்டது. தற்பொழுது பவளப் பாறைகளை வெட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்த போதிலும், பவளப் பாறைகள் தொடர்ந்து வெட்டியெடுக்கப்பட்டுதான் வருகின்றன.

கடற்கரையை ஒட்டிய 500 மீட்டர் தொலைவிற்கு எவ்வித வணிக நடவடிக்கைகளும் இருக்கக் கூடாது என்று சட்டம் இருந்தும், சுற்றுலா வளர்ச்சி எனும் பெயரில் ஐந்து நட்சத்திர ஓட்டல்களும், விடுமுறை ஓய்வில்லங்களும், கேளிக்கை விடுதிகளும் கட்டப்பட்டு வருகின்றன. எல்லா மக்களுக்கும் பொதுவான கடற்கரை, தற்பொழுது தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டு விட்டது.

ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து கடன் வாங்கி, கடற்கரையோரமாக சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு 737 கி.மீ. தூரத்திற்கு கிழக்கு கடற்கரை நெடுஞ்சாலை போடப்பட்டு வருகிறது. இதன் முதல் கட்டமாக சென்னையிலிருந்து கடலூர் வரை இச்சாலை போடப்பட்டுள்ளது. இச்சாலை அமைக்க பல்லாண்டுகளாக இருந்துவந்த பல பெரிய மரங்கள் கணக்கின்றி வெட்டப்பட்டன. நிழல் தரும் மரங்களை கொண்டிருந்த மரக்காணம் சாலைப் பகுதி தற்பொழுது பொட்டல்

Ruchi

ருசி ஊறுகாய்கள்
வீட்டில் தயாரித்தது போன்ற
19 ருசிகரமான வகைகளில்

RUCHI FOOD PRODUCTS

50, GIRIAPPA ROAD, T.NAGAR
MADRAS - 600 017.
PHONE : 826 9290, 826 9438.




படிப்பகம்

www.padippakam.com


வெளியாக உள்ளது. சில இடங்களில் கடற்கரையிலிருந்து 200 மீ. தொலைவில் இந்நெடுஞ்சாலை செல்கிறது. சென்னைக்கருகில் எண்ணூர் பகுதியில் உள்ள சாலை, கடல் அரிப்பின் காரணமாக போக்குவரத்திற்கு பெரும் அபாயத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில் தமிழக கடற்கரையோரமாக இந்நெடுஞ்சாலை வந்தால் என்னவாகும் என்பதை நினைத்துப் பார்க்கத் தேவையில்லை. பல கிராமங்களின் ஊடாக, இந்நெடுஞ்சாலை செல்லும்பொழுது, கிராமங்கள் துண்டாகின்றன. இதற்கு எதிராக மக்கள் போராட்டம் எழுந்துள்ளது.

மகாபலிபுரம் அருகில் கல்பாக்கத்தில், அணுமின் நிலையம் தட்டுத் தடுமாறி இயங்கி வருகிறது. 1984ல் இங்குள்ள மேப் -1 என்கின்ற ரியாக்டரில் விபத்து ஏற்பட்டது. கனநீர் கசிவு என்பது வாடிக்கையாக உள்ளது. அணு உலையின் கழிவு கடலில் கலப்பதால், மீனினங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனை நம்பியுள்ள மீனவக் குடும்பங்களுக்கு அதிக இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஒரு தொழிற்சாலையில், தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் ஏற்பட்ட பிரச்சினையில், அங்குள்ள சிலர், கதிர்வீச்சு கருவியொன்றை, 1993ல் கூவம் ஆற்றில் வீசினர். அதனை மும்முரமாக தேடிய நிகழ்ச்சி பற்றி நாம் மறந்திருக்கலாம். ஆனால், இதனால் ஏற்படும் கதிர்வீச்சு அபாயம் பெரிய ஒன்றாகும்.

இந்நிலையில், திருநெல்வேலி மாவட்டத்தில், கூடங்குளம் எனுமிடத்தில் அணு உலை அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. வெளிநாடுகளில், அணு உலையின் பாதிப்பை உணர்ந்து, மூடு விழா நடத்தும் இவ்வேளையில், நாம் திறப்பு விழா நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற மலைப் பகுதிகளில் சுற்றுலா வளர்ச்சிக்காக பெரிய ஹோட்டல்கள் கட்டப்பட்டு வருகின்றன. இயற்கை வளங்கள் தற்பொழுது கான்க்கிரிட் காடுகளாக ஆகிவிட்டன. பெருமளவில் மரங்கள் வெட்டப்பட்டு, வனப் பயிர்களும், தோட்டப் பயிர்களும் பயிரிடப்பட்டு வருகிறது. இதனால் இங்குள்ள அரிய மூலிகைகள் மறைந்து போய்விட்டன. பல்லுயிர்களுக்குப் பிரசித்திப் பெற்ற இம்மலைப் பகுதிகளில், ஓரினப் பயிர்கள் வளர்க்கப்படுகின்றன. மரங்கள் வெட்டப்பட்டுவதால், தற்பொழுது மலைப் பகுதிகளில் நிலச்சரிவு வாடிக்கையாகிவிட்டது. 1993ம் ஆண்டு நீலகிரியில் மிகப்பெரிய நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 60க்கும் மேற்பட்டோர் உயிர் இழந்திருக்கக்கூடும். பாறைகள் உருண்டு விழுந்ததால்,



இங்கும் இந்நிலை வருமோ?

சாலைப் போக்குவரத்து முற்றிலுமாக பாதிப்படைந்தது. பல வீடுகள் இடிபாடுகளுக்கு உள்ளாயின. 1983ல் நீலகிரி மாவட்டம் உயிரியல் மண்டலமாக அறிவிக்கப்பட்டது. எனினும் வன அழிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மண் அரிப்பு ஏற்பட்டு அவைகள் ஆற்றில் செல்வதால், ஆற்றுநீர் மாசுபாடு அடைந்துள்ளது. இம்மண் நேரடியாக, அணைகளுக்கு செல்லும்பொழுது, அணைகளின் ஆழம் குறைந்து விடுகிறது.

1992 நவம்பரில்; மழைக் காலத்தின்போது, மதுரை மாவட்டம் மேகமலையில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது. பல வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. 18 பேர் உயிரிழந்தனர். 1993களில் மழை காலத்தின் போது பழனி மலைப் பகுதிகளில் 59 இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டன. ஒட்டன்சத்திரம் பாய்ச்சலூர் மலையிலும், திண்டுக்கல் சிறுமலைப் பகுதிகளில் 15 இடங்களிலும், கொடைக்கானல் பன்றிமலையிலும் நிலச்சரிவுகள் ஏற்பட்டன. பன்றி மலையில் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் பல வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. 9 பேர் உயிர் இழந்தனர். பெருமாள் மலை எனும் பகுதியில் பெரிய நிலப்பிளவு ஏற்பட்டது.

கொடைக்கானல் மற்றும் ஊட்டி ஏரிகளில் கழிவுநீர் வந்து விழுவதால் அந்த ஏரிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த ஏரிகளில் திடக்கழிவுகள் சேருவதால் ஆழம் குறைந்து வருகிறது. இந்த ஏரிகளில் உள்ள நீரை பரிசோதித்தபொழுது, நீரில் கரைந்துள்ள ஆக்சிஜன் அளவு குறைவாகவும், கார்பன்டை ஆக்சைடு அளவு அதிகமாகவும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆக்சிஜன் அளவு குறைவாக இருப்பதால் சிறு மீனினங்களும், தாவர வகைகளும் இறந்து விடுகின்றன.

சுற்றுச்சூழல் விதிகள் மீறப்படுகின்றன என்பதற்கு, கொடைக்கானலில் கட்டப்பட்டுவந்த Plesant Stay Hotel சிறந்த எடுத்துக்காட்டாகும். மலைப் பகுதிகளில் 2 அடுக்குகளுக்குமேல் அல்லது பத்து மீட்டர் உயரத்துக்கு மேல் கட்டிடம் கட்டக் கூடாது என்ற விதியுள்ளது. ஆனால் இதையும் மீறி இந்த ஹோட்டல் 7 மாடிகள் கட்டியது. இதனை எதிர்த்து தமிழக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அப்பொழுது, எல்லாச் சட்டங்களும், விதிகளும் தூக்கியெறியப்பட்டு, தனிநபருக்காக, புதிய அரசாணை வெளியிடப்பட்டது. ஆனால், தீர்ப்பின்போது உயர் நீதிமன்ற நீதிபதி, இந்த ஹோட்டலை இடிக்க உத்தரவிட்டதுமன்றி, இதற்கு துணைபோன அமைச்சரையும், தமிழக முதல்வரையும் கண்டித்து தீர்ப்பு அளித்தது. இதனை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையிட்டபோது, உச்ச நீதிமன்றம், தமிழக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆமோதித்து மட்டுமில்லாமல், தமிழக அரசையும் வன்மையாக கண்டித்தது.


மேற்குத் தொடர்ச்சி மலையில் கள்ளக்கடவு எனும் பகுதியில் சட்ட விரோதமாக மரங்கள் வெட்டப்படுகின்றன. அபூர்வ மர வகையான ரோஸ், தேக்கு, வெண்

படிப்பகம்

www.padippakam.com

## எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

# பிரிவிலேஜ் ரிசார்ட்ஸின் உல்லாச பயண முதலீட்டுதிட்டம்




ஒரே ஒருமுறை மட்டுமே முதலீடு செய்து ஆண்டு தோறும் உங்கள் சுற்றுலாவை

| | | |
|---|---|---|
| ஏலகிரி | : | PREVILAGE MINI PARADISE |
| கோடைக்கானல் | : | PREVILAGE LAKE VIEW |
| குற்றாலம் | : | PREVILAGE SAARAL VILLAS |
| திருப்பதி | : | PREVILAGE PILGRIMAGE |
| அந்தமான் | : | PREVILAGE SEASIDE RESORT |

ஆகிய சுற்றுலா இடங்களில் அமையப்பெற்ற நவீனவசதிகள் கொண்ட எங்கள் உல்லாச மாளிகையில் தங்கி பல சுகபோக வசதிகளை அனுபவியுங்கள்.

## பிரிவிலேஜ் சிறப்பு வசதிகள்





★ நகரும் ல்டார் காட்டேஜ்கள்
★ மரக்குடில்கள்
★ நவீன வசதிகள் கொண்ட உல்லாச பேருந்து,
★ தவணைமுறையில் செலுத்தும் திட்டம்
★ தனித்தனி உல்லாச விடுதிகள்
★ பலவிதமான கேளிக்கை வசதிகள்
★ முதலீட்டிற்கான சுலப தவணைத் திட்டம்
★ மேற்படி சீசன், வார முடிவு, வார தொடக்கம் என்று கட்டணச் சலுகைகள்
★ மாணவர்களுக்கான ராயல் இன் காட்டேஜ்
★ விடுமுறைக்கான இடத்தை மாற்றிக்கொள்ளும் வசதிகள்
★ வாடிக்கையாளர்கள் புதிய அறிமுகத்திட்டம் (member to member scheme)

இவ்வசதிகள் நிறைந்த எமது உல்லாச பயண முதலீட்டு திட்டத்தில் உடனே பதிவு செய்து உங்கள் குடும்பத்தினருக்கு நிரந்தர மகிழ்ச்சியை வழங்குங்கள்.

## முதலீட்டுப் பட்டியல்

| விடுதி தங்கும் வசதி | சிறப்புக் காலம் | வாரக் கடைசி நாட்கள் | வார முதல் நாட்கள் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ராயல் இன் (ஆறு நபர்கள்) | 60,000/- | 37,500/- | 18,750/- |
| எக்சலண்ட் (நான்கு நபர்கள்) | 45,000/- | 25,750/- | 13,125/- |
| எலிகண்ட் (இரண்டு நபர்கள்) | 30,000/- | 15,000/- | 7500/- |

மேலும் விவரங்களுக்கு

**PREVILAGE RESORTS AND HOTELS LTD**

CORPORATE OFFICE : NO. 1, CO-OPERATIVE COLONY ROAD,
SRIRAM NAGAR, ALWARPET, MADRAS 600018
PHONE: 4995759. FAX: 91-044-4990262.

PREVILAGE PROPERTY TimeShare

**BRANCHES**

ROOM NO. 16, 89 WEST AVANI MOOLA STREET,
**MADURAI 625 001**
PHONE: 36984/27358

NO.34. 1789 TRICHY ROAD, OLYMBUS,
**RAMANATHAPURAM COIMBATORE**
Pin: 641045, PH–No. 211196

S-108 SOUTH BLOCK
MANIPAL CENTRE
47 DICKENSON ROAD
**BANGALORE 560 042.**

S-1362 IRWIN ROAD,
3RD FLOOR, **MYSORE 570 001.**

–VINOD


படிப்பகம்

www.padippakam.com

தேக்கு மரங்கள் வெட்டப்பட்டு மலைப்பகுதி மொட்டையடிக்கப் பட்டு வருகிறது. இந்தப் பகுதியின் நீர் நிலைகளில் உள்ள வீல் எனப்படும் அபூர்வ மீன் இனம் அழிந்து வருகிறது. போடிநாயக்கனூரில் மலைப் பகுதிகளில் காற்று தடுப்பு மரங்களை வெட்டியதால் 7,000 ஹெக்டேர் விளைநிலங்கள் மணல் மழையில் பாதிக்கப்பட்டு பாலைவனமாக மாறிகொண்டு வருகின்றன.

இதைப்போலவே ஏலகிரி, ஜவ்வாது மலைத் தொடர், கல்வராயன் மலை போன்ற பிரதேசங்களில் மரங்கள் கணக்கின்றி வெட்டப்படுகின்றன.

கொல்லிமலையில் 6 அணைகளை கட்ட தமிழக மின்சார வாரியம் முயன்று வருகிறது. இவ்வணைகளை கட்டினால் பல ஹெக்டேர் காடுகள் அழியும் அபாயத்தில் உள்ளன. இங்குள்ள மலைவாழ் பழங் குடியினரை வெளியேற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**க**ன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சுசீந்தரம் மற்றும் தெரூர் பகுதிகளிலுள்ள நஞ்சை பகுதிகளில் உள்ள தாவரங்களுக்கும் விலங்கினங்களுக்கும் மாசுக் கழிவுகளால் அபாயம் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இம்மாவட்டத்திலுள்ள அனந்த விக்டோரியா மார்த்தாண்ட வர்மா (எம்.வி.எம்.) கால்வாய் நீர் வழிப் போக்குவரத்திற்காக அமைக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது இக் கால்வாய் அழியும் சூழ்நிலையில் உள்ளது. நாரிழைகள் பெறுவதற்காக தென்னை நெற்றுகளை ஊற வைப்பதற்காக இக்கால்வாயை மக்கள் பயன்படுத்துகின்றனர். அப்பொழுது வெளிவரும் ஹைடிரஜன் ஸல்பைடு வாயுக்களால் மீனினங்கள் இறந்துபோகின்றன. இதில் வளரும் சிலவகை நீர்த்தாவரங்கள் வெகுவாகப் பெருகுவதால் போக்குவரத்து தடைபடுகிறது.

பொதிகை மலையில் உற்பத்தியாகும் தாமிரபரணியாற்றில் ஆலைக் கழிவுகளும் மற்ற கழிவுகளும் நேரடியாகக் கல்க்கின்றன. இதனால் இந்த ஆறு தூய்மைக் கேடடைந்துள்ளது. இந்த ஆறு உற்பத்தியாகும் இடத்தில் உள்ள நீரினை பரிசோதித்தபொழுது நீர் தூய்மையானதாக இருப்பதைக் காட்டின. ஆனால் தொழிற்சாலைகள் இருக்கும் இடத்தில் உள்ள நீரினை சோதித்தபொழுது நீர் மாசுபாடு அடைந்துள்ளதை கண்டுபிடிக்க முடிந்தது.

இதேபோன்று தமிழகத்திலுள்ள அனைத்து ஆறுகளும் சூழல் கேட்டிற்கு ஆளாகியுள்ளன. பொதுவாக தொழிற்சைலைகளுக்கு ஆற்று நீர் தேவைப்படுவதால் தொழிற்சாலைகளை ஆற்றங் கரைகளிலும் கடற்கரைப் பகுதிகளிலும் கட்டுகின்றனர். இத் தொழிற்சாலைகள் அதிக அளவில் நீரை உறிஞ்சுவதால் அப்பகுதியுள்ள நிலத்தடி நீர் வெகுவாக குறைகிறது. குறிப்பாக கடற்கரைப் பிரதேசங்களில் அதிக அளவில் நிலத்தடி நீர் உறிஞ்சப்படும்பொழுது அழுத்தத்தின் காரணமாக கடல்நீர் அப்பகுதியிலுள்ள நீரில் கலந்து விடுகிறது. இதனால் அப்பகுதியில் உள்ள அனைத்து நீர்நிலைகளும் உப்புநீராக மாறிவிடுகின்றன. முன்பு நதிக் கரைகள் நாகரீகத்தின்



தொட்டில்களாக இருந்தன. ஆனால் இவைகள் தற்பொழுது சுடுகாடாக மாறி வருகின்றன.

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை வழியே செல்லும் காவிரியின் நிலை என்ன? மேட்டூரிலிருந்து திருச்சிவரை பல தொழிற்சாலைக் கழிவுகளை காவிரியில் கலக்கின்றன. சாயப்பட்டறை, சிமெண்ட் தொழிற்சாலை, பேப்பர் தொழிற்சாலை, தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகள் நகராட்சிக் கழிவுகள் என பலவித இரசாயன கழிவுகள் வந்து சேருகின்றன. அம்மாபேட்டைக்கு அருகில் காவிரியில் ப்ளோரைட் எனும் இரசாயனம் அதிகம் கலந்திருந்ததால் ப்ளோரிசிஸ் எனும் நோய் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. காவிரியின் கிளை நதிகளான பவானி, அமராவதி, நொய்யல் போன்ற நதிகளும் சுற்றுச் சூழல் சீர்கேட்டினால் பாதிப்படைந்துள்ளன. மேட்டுப்பாளைய நகரக் கழிவுகளும் இந் நதிகளில் சேருவதால் அதிகம் பாதிப்படைந்துள்ளது. இதனால் நீர்பாசன வசதி அடைந்த மூன்று லட்சம் ஏக்கர் நிலம் தரிசாக ஆகக்கூடிய சூழ்நிலையில் உள்ளது. பவானி நதிநீர் அதிக அமிலத்தன்மையுடன் உள்ளது.

காவிரியின் மற்றொரு கிளை நதியான நொய்யல் ஆறு திருப்பூர் வழியே செல்கிறது. அங்குள்ள தொழிற்சாலைக் கழிவுகள் குறிப்பாக சாயக் கழிவுகள் இந் நதியில் கலக்கின்றன. இதனால் திருப்பூரை சுற்றியுள்ள பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. திருப்பூருக்கு குடிநீர் வெளியிடங்களிலிருந்து கொண்டு வரப்படுகின்றது. இவ்வாறு நொய்யல், பவானி, அமராவதி ஆகிய நதிகள் செத்துக் கொண்டிருக்கின்றன. பாலாறும் தேனாறும் தமிழகத்தில் ஓடியதாக சங்ககாலப் பாடல்கள் கூறுகின்றன. ஆனால் தற்சமயம் ஆறுகளில் தொழிற்சாலைக் கழிவுகள் தான் ஓடுகின்றன என்பது நிதர்சனமான உண்மை.

**வி**ளைநிலங்களிலும் 'பசுமைப் புரட்சி" எனும் பெயரில் அதிக இரசாயன உரங்கள், இரசாயனக் களைக் கொல்லிகள் இரசாயன பூச்சிக்கொல்லிகள் என்று இரசாயனப் பொருட்களை கொட்டியதால் நிலங்கள் உயிர்ச்சத்தை இழந்து விட்டன. மற்ற இடங்களில் இல்லாத அளவுக்கு மலேரியா, மூளைக்காய்ச்சல், யானைக்கால் வியாதி போன்றவை தமிழகம் முழுவதும் பரவுகின்றன.

வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்ட மக்கள் மும்முனைத் தாக்குதலால் நிலைகுலைந்துள்ளனர். தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகள் மனிதனின் வாழ்வாதாரமான நிலம், நீர், காற்று மூன்றையும் மாசுபடுத்தியுள்ளது. இதனால் இங்குள்ளவர்களின் வாழ்க்கையே கேள்விக்குறியாக உள்ளது. இப்பகுதிகளில் உள்ள நீர் நிலைகளெல்லாம் மாசுபட்டு கருங்கடலாய் தென்படுகின்றன. இதனருகில் ஒரு புல், பூண்டு கூட முளைப்பதில்லை. எல்லாம் கருகிப் போய் விட்டன. ஏரிகளில் இருந்த மீன்கள் செத்துப் போய்விட்டன. இங்குள்ள தண்டலம் ஏரி, ஓட்டேரி, பார்த்தாங்கல் ஏரி என எல்லா ஏரிகளும் நாசமாகிவிட்டன. இங்குள்ள நிலத்தடி நீரும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயத்திற்கோ, வீட்டு உபயோகத்திற்கோ நீர் உபயோகப்படுவதில்லை. சமீபத்தில் தண்டலம் ஏரி நீரைக் குடித்த 11 எருமை மாடுகள் அந்த இடத்திலேயே செத்துவிட்டன. இப்பகுதியில் உள்ள இளநீரில் கூட கன உலோகம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு கிட்டத்தட்ட 8,000 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

படிப்பகம்

www.padippakam.com


# நீங்கள் எங்கேயிருந்தால் என்ன? 'தினமணி' உங்களுடன் இருக்கிறது... சூடு ஆறாமலும் சுவை மாறாமலும் தேடிவந்து தருகிறது செய்திகளை!



சென்னை, மதுரை, கோவை, பெங்களூர் பதிப்புகள்

## அன்றாடம் மலர்கிறது புத்தம்புதுக் காலை... தினமணியோடு...

உங்களுக்குக் கிடைப்பது வெறும் செய்திகள் மட்டும் அல்ல. சிறப்புக் கட்டுரைகள், ராசி பலன்கள், ஆலோசனைகள், முதலீட்டு யோசனைகள், உடல்நலக் குறிப்புகள், சுவைமிகு கதைகள், பொழுதுபோக்கு அம்சங்கள். இப்போது இன்னும் ஒரு சிறப்பு–உங்களுக்காக!

## குறித்த நேரத்தில்–தினம்தினம் ஏழு தினங்களிலும்!

உங்கள் நகரில் அச்சாகி, வெளிவரும் தினமணி இனி தினமும் குறித்த நேரத்தில் சுடச்சுட வந்துசேரும். காலை காப்பியை வாய் பருகும்போதே, உங்கள் கைகளில் தவழ்கிறது தினமணி. இனி ஒவ்வொரு நாள் காலையிலும் உங்களைத் துயிலெழுப்பப் போவதே தினமணிதான்.

## வெற்று அரட்டைகளுக்கு அனுமதியில்லை

வீண் வம்புகளுக்கும் வதந்திகளுக்கும் தினமணி இடம் கொடுப்பதில்லை. சாரமுள்ள செய்திகளையே பதிவு செய்யும். செய்தியாய்த் திகழ்வோரைத் தெரிவு செய்யும், பாரபட்சமற்ற தகவல்கள், கலப்படமற்ற உண்மைகளைச் சுமந்து தினந்தோறும் உங்களைத் திருப்திப்படுத்துகிறது தினமணி.

## தினமணியின் சிறப்புப் பரிசு:

தினமணிக்கு மூன்று மாதச் சந்தா செலுத்தினால் கூட 'சினிமா எக்ஸ்பிரஸ்' இதழ்கள் இலவசமாகக் கிடைக்கும். உள்ளூரிலும் உலகம் முழுவதிலும் உள்ள சினிமாச் செய்திகளை மாதமிரு முறை அளிக்கிறது சினிமா எக்ஸ்பிரஸ். உங்கள் அபிமான நட்சத்திரங்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. இது மட்டுமல்ல – உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் மேலும் பல ஆச்சரியமான பரிசுகளை விரைவில் தரவிருக்கிறது தினமணி.



இன்றே தினமணிக்கு சந்தா செலுத்துங்கள்...
அன்றாட வாழ்க்கைக்கு அர்த்தம் புகட்டுங்கள்!

## தினமணி

சென்னை: எக்ஸ்பிரஸ் எஸ்டேட், அண்ணாசாலை, சென்னை–600 002 போன் 8520751
மதுரை: 'எக்ஸ்பிரஸ் தோட்டம்' 137, காமராஜர் சாலை, பி.பாக்ஸ் 164, மதுரை–625009 போன் 23221
கோவை: 152, பங்கஜாமில் ரோடு, ராமநாதபுரம், கோவை–641 045 போன் 217851
பெங்களூர்: எக்ஸ்பிரஸ் பில்டிங், 1 குயின்ஸ் ரோடு, பெங்களூர்–560 001 போன் 2256893




படிப்பகம்

www.padippakam.com

இப்பகுதியிலுள்ள மக்களுக்கு வயிற்றுப்போக்கு, முடி உதிர்தல், மஞ்சள்காமாலை என்பது அதிக அளவில் உள்ளன. இதில் அதிக மாக பாதிக்கப்படுவது குழந்தைகள் தான். இங்குள்ள கிணறுகளில் நீர் பாதிக்கப்பட்டதால், குடிநீருக்காக பெண்கள் அதிக தூரம் செல்ல வேண்டியுள்ளது. இதற்கு எதிராக மக்கள் பல போராட்டங்களை நடத்தினார்கள். *1995*, செப்டம்பர் *8*ம் தேதி, உச்ச நீதிமன்றம் *162* தோல் பதனிடும் தொழிற்சாலை களை மூட உத்தரவிட்டது. இங் குள்ள மக்கள் விளைநிலமும் பாழாச்சு, குடிநீரும் நஞ்சாச்சு, ஆலையையும் மூடியாச்சு, வேலை யும் போயாச்சு என்று வருத்தப்பட் டுக் கொண்டிருக்கிறார்கள்.

இதேபோல் திண்டுக்கல்லைச் சுற்றியும் அனேக தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ளன. இதனால் திண்டுக்கல்லை சுற்றி யுள்ள முப்பது கிராமங்களுக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களும் பாதிப்படைந் துள்ளனர். தற்பொழுது மக்கள் போராட்டங்களின் விளைவாய், தோல் பதனிடும் ஆலைக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக் கப்பட்டு வருகின்றன. ஆனால் இவை எவ்வளவு நாள் இயங்கும் என்பதுதான் இங்குள்ள மக்களின் கேள்வி!



தமிழகத்தின் தலைநகராம் சிங் காரச் சென்னையில் ஓடும் கூவம் ஆற்றைப் பற்றிக் கூற வேண்டிய தேயில்லை. ஒரு காலத்தில் நீர் வழிப் போக்குவரத்துக்கு உபயோ கப்பட்ட, கூவம் ஆறு, பக்கிங் ஹாம் கால்வாய், ஓட்டேரி நல்லா, அடையாறு ஆறு போன்றவை எல்லாம் தற்பொழுது சாக்கடை யாகத் தான் உள்ளது. மணலி தொழிற்பேட்டைக் கழிவுகளும், நகரக் கழிவுகளும் நேரடியாக இந்த ஆறுகளில் கலக்கின்றன. கழி வுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இருந்தும், அவைகள் சரியாக வேலை செய்வதில்லை. இதே போல், மதுரையில் உள்ள வைகை ஆறும், கூவமாக மாறும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

இவையெல்லாம் தவிர பொது வாக, கோடைகாலம் வந்தால், வறட்சி, மழைகாலம் வந்தால் வெள்ளம் எனும் நிலை தமிழகத் தில் உள்ளது. அனேக குளங்களை யும், ஏரிகளையும் கொண்டிருந்த தமிழகத்தில், அவற்றின் எண் ணிக்கை பெருமளவு குறைந்து வரு கிறது. குளங்களும், ஏரிகளும் தற் பொழுது அடுக்குமாடிக் கட்டிடங் கள் ஆகிவிட்டன. குளங்கள் தூர்ந் துவிட்டன. அவற்றை தூர் எடுப்ப தில்லை. இதனால் இதன் ஆழம் குறைந்து விடுகிறது. எனவே சிறித ளவு மழை வந்தாலும், தேக்கி வைக்க இடமில்லாததால், நகரத் திற்குள் வெள்ளமாக வந்து விடுகின்றது. எனவே, கோடை காலத்தில் குடிப்பதற்குகூட தண் ணீர் கிடைப்பதில்லை. குளங்களி லும், ஏரிகளிலும் தண்ணீரை தேக்கி வைக்காததால், அதனருகில் உள்ள நிலத்தடி நீரின் அளவும் குறைந்து வருகிறது. மரங்களை வெட்டியதால், மழையின் அளவு குறைந்து விடுகிறது. சிறிதளவு மழை பெய்தாலும் மலைகளில் நிலச்சரிவு ஏற்படுகிறது. மழைநீர் ஆறுகளின் வழியே வரும்பொழுது மாசுபாடு அடைந்து, நகர்புறங்க ளில் வெள்ளமாக மாறி, ஆழமில் லாத குளங்களின் வழியாக ஓடி கடலை சென்றடைகின்றன. இயற் கைக்கு எதிராக எல்லா நடவடிக் கைகளையும், செய்துவிட்டு, இயற் கையின்மீது பழிபோட்டு விடுகின் றனர்.

மேலே கூறியவை எல்லாம் சில நிகழ்ச்சிகள்தான். இதேபோல், தமி ழகம் முழுமையும் பல்வேறு சுற் றுச்சூழல் கேடுகளால் பாதிப்புக் குள்ளாகி இருக்கின்றது. தமிழக மாசு கட்டுப்பாடு வாரியம் துரித நடவடிக்கைகள் எடுக்காத கார ணத்தினால், மக்கள், நீதிமன்றங்க ளுக்கு செல்ல வேண்டிய கட்டா யத்திற்கு உள்ளாகின்றனர்.

தற்பொழுது ஒரு புதியபோக்கு தமிழகத்தில் நிலவி வருகிறது. வெளிமாநிலங்களில், சுற்றுச்சூழ லுக்கு கேடு வரும் எனக் கருதி, அங்குள்ள மக்களால் துரத்தியடிக் கப்பட்ட தொழிற்சாலைகள் தமி ழக அரசால் வரவேற்கப்படுகின் றன. மகாராஷ்டிர மாநிலம், ரத்ன கிரியிலிருந்து மக்களால் தூக்கியெ றியப்பட்ட ஸ்டெர்லைட் எனும் *1300* கோடி முதலீடு உடைய தாமிர உருக்காலை தற்பொழுது தூத்துக்குடியில் தனது தொழிற்சா லையை கட்டி வருகிறது. கோவா மக்களால் விரட்டப்பட்ட, தாப்பர் -டுபாண்ட் எனும் நைலான் *6, 6* தயாரிக்கும் தொழிற்சாலை தற் பொழுது சென்னைக்கு அருகில் கும்மிடிப்பூண்டிக்கு "வேண்டாத விருந்தாளி"யாக வந்துள்ளது. திரு வள்ளூருக்கருகில் ப்யூச்சரா எனும் நிறுவனம் பிளாஸ்டிக் பொருட் களை மறு சுழற்சி மூலம் உற்பத்தி செய்து வருகிறது. பெப்ஸி கம் பெனி, வெளிநாட்டிலிருந்து வரும் பிளாஸ்டிக் குப்பைகளை மறு சுழற்சி மூலம், நல்ல பிளாஸ்டிக் பொருட்களாக செய்து அவற்றை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து வருகிறது. பிளாஸ்டிக் குப்பைகள் நமக்கு. நல்ல உயர்தர பொருட்கள் மேலை நாடுகளுக்கு. இவ்வாறு வந் தாரை வரவேற்று, தான் வாழாமல் இருக்கிறது தமிழகம்.

தமிழக மக்களிடையே தற்போது சுற்றுச்சூழல் குறித்து விழிப்புணர்வு அதிகமாகி வருவது ஒரு ஆறுத லான செய்தி. அப்பகுதி மக்களுக்கு ஊறு விளையும்போதுமட்டும் மக் கள் போராட்டத்தில் இறங்குகிறார் கள். இவ்வாறு இல்லாமல் சூழ லுக்கு ஊறு விளையும் நிகழ்ச்சிகள் நடைபெறுமுன்பே விழித்துக் கொண்டால் நலம்.

தமிழக மக்கள் தற்பொழுது விழித்துக் கொண்டால், தமிழகம் விரைவில் பாலைவனமாவதை தடுக்க முடியும். நமது வருங்கால சந்ததியினருக்கு எதை விட்டுச் செல்லவில்லையென்றாலும் குறைந்தபட்சம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலங்களை யாவது விட்டுச் செல்வோம். ■

படிப்பகம்

www.padippakam.com

பொங்கல்
நல் வாழ்த்துக்கள்!



**முதலீட்டிற்கு பெருமை சேர்க்கும் முதன்மையான வட்டி விகிதம்.**

உங்கள் முதலீட்டிற்கு

# 28% + 6% + 1%

வட்டி — ஊக்கத் தொகை — கிளைகள் தொடக்க விழா சிறப்பு ஊக்கத் தொகை

15.1.96 வரை இச்சலுகை எமது எல்லா கிளைகளுக்கும் பொருந்தும்.

# தேவி கோல்டு ஹவுஸ்

தங்க நகை மற்றும் டெபாசிட் பிரிவு

★ நெ. 59, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை - 600 017. போன் : **4341717, 4341919.**

★ நெ. 65, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, புரசைவாக்கம், சென்னை - 600 007. போன் : **5324477,5324499.**

❑ 34, முதல் அவென்யூ (பாங்க் ஆப் மகாராஷ்ட்ராவிற்கு அடுத்து) அசோக் நகர், சென்னை - 83. (சொந்தக் கட்டிடம்)

❑ 7, குட்ஸ் ஷெட் தெரு, முதல் மாடி, மதுரை - 625 001.

டெபாசிட் பிரிவு

❑ ஷா காம்ப்ளெக்ஸ், 59, எல்.பி. சாலை, அடையாறு, சென்னை - 600 020. போன் : **417144**

❑ ஓம்ஸ் லக்ஷ்னா பில்டிங், 146, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, முதல் மாடி, லஸ், மைலாப்பூர், சென்னை - 600 004. போன் :**4995579**

❑ தேஜா டவர்ஸ், ப்ளாட் 4909, ஏஎி - 2, இரண்டாவது நிழற் சாலை, அண்ணா நகர், சென்னை - 600 040. போன் : **6281152.**

❑ R.P.சென்டர் கீழ் தளம் N.S.R.ரோடு, சாய்பாபா மிஷன், ஸ்ரீவள்ளி பஸ்டாப் (அருகில்) கோயம்புத்தூர்- 641 011.

● 1-B, ஓப்னி டவர்ஸ், 594, D.B. ரோடு, ஆர்.எஸ். புரம், கோயம்புத்தூர் - 641 001. போன் : 447269.

**உங்கள் மகிழ்ச்சியே... எங்கள் வளர்ச்சி.**

---

Phone : 20491 Resi : 23748

# ராஜா டிம்பர் டிப்போ

*மணிக்கூண்டு ரோடு,*
**தஞ்சாவூர் - 1.**

**எங்களிடம் கட்டிட வேலைக்கு தேவையான**
*மரம், ஓடு, டால்மியா சிமெண்ட், ராம்கோ AC ஷீட்ஸ், லைட்ரூபிங் சீட்டுகள், பிர்லா 53 கிரேடு சிமெண்ட், சானிட்டரி வேர்ஸ், பிளைவுட், சன் மைக்கா, கடப்பை, கிரானைட், செராமிக் டைல்ஸ் கிடைக்கும்.*

---

*நவீன வசதிகளுடன் ரூம்கள் வாடகைக்கு கிடைக்கும்*

Ph : 21908
21712

# KASI LODGE (A/C)

**1494, South Rampart, THANJAVUR.**
(opp. Raja Rajan Shopping Complex)

DISTANCE

| | | |
|---|---|---|
| 1. Bus Terminus | : | 2 Minutes Walk |
| 2. Rly Station | : | 10 Minutes Walk |
| 3. Airport (Trichy) | : | 45 Minutes Drive |
| Accommodation | : | A/c Non A/c Trible Bedded |
| Restaurant Annex | | |

**Facilities :**

Everday house keeping works, Common T.V., 24 hours Room Services. Doctor on Call,
Express Laundary Service, Spacious car Park

**Check Out Time 24 Hours**
*Stay once Please : Cordial Welcome*
**பஸ் நிலையம் அருகில் உள்ளது**



படிப்பகம்

www.padippakam.com

ANAND

அனைவருக்கும் எமது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# அணிந்து மகிழுங்கள்



# ஆ
# ன
# ந்
# த்


பனியன்கள்
&
ஜட்டிகள்

மொத்த விற்பனையாளர் :

# கரீம் ஸ்டோர்ஸ்

## திருச்சி-8.

Ph: 23742, 469258, 25958





படிப்பகம்

www.padippakam.com

# 1900  1995

# இந்த நூற்றாண்டின் கதை

இருபதாம் நூற்றாண்டை இருபதே பக்கங்களில் அடக்கிவிட இயலுமா என்ன? ஆனாலும் முயன்றிருக்கிறோம்.

ஏன் இந்த முயற்சி? காரணம் உண்டு. எதிர்காலம் பற்றிய எந்தத் திட்டமிடுதலுக்கும் கடந்த காலம் பற்றிய அறிவு வேண்டும். அந்த அறிவின் பயனாக நிகழ்காலத்தில் மேற்கொள்ளும் முயற்சிகளே பயன்தருபவை.

1895ல் கண்டறியப்பட்டு இப்போது நூற்றாண்டு விழா காணும் வானொலியை விஞ்ஞானி மார்கோனி உருவாக்க உதவியது -அவனுக்கு முன்பு பல காலமாக பல விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டறிந்த மின் காந்த அலைகள். விஞ்ஞானத்துக்கு மட்டுமல்ல, அரசியல், கலைகள், இலக்கியம், சமூகவியல், தனிமனித வாழ்க்கை எல்லாவற்றுக்குமே வரலாற்று உணர்வு தேவை. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மனிதனின் அறிவுத் தொடர்ச்சியாகவே இன்று நமது வளர்ச்சி இருக்கிறது.





ஆனால் வரலாற்றைத் தேடிப் போகும்போது தான் தெரிகிறது. பலவற்றுக்கு சரியான பதிவுகள் இல்லை. முரண்பட்ட தகவல்கள் நிரம்பியிருக்கின்றன. நூறாண்டு உலக வரலாற்றைப் பார்க்கும் போதே நிறைய சிக்கல்கள். தமிழ்நாட்டு நிலையோ, சொல்லவே வேண்டாம். நமக்கு கடந்த காலம் பற்றிய பெருமை இருக்குமளவுக்கு அறியாமையும் இருக்கிறது. நேர்மையான வரலாறு எழுதும் முயற்சிகள் மிகக் குறைவு.

எனினும் கிடைத்த அளவு நம்பத்தகுந்த மூல நூல்களின் துணையோடு இங்கே இருபதாம் நூற்றாண்டின் பல நிகழ்வுகளை தொகுத்திருக்கிறோம்.

ஒருபுறம் ஏராளமான போர்களும் அழிவுகளும். மறுபுறம் மனித வரலாற்றிலேயே இருந்திராத ஒரு வேகத்துடன் நமது அன்றாட வாழ்க்கையைப் புரட்டிப் போடுகிற புதிய கண்டுபிடிப்புகள் என்று ஆக்க வேலைகளுமாய் நிரம்பியிருக்கிறது இருபதாம் நூற்றாண்டு.


இதில் கிடைக்கும் தகவல்கள் பலவும், அவை பற்றி மேலும் அறியத் தேடிச் செல்லும் ஆவலை உங்களுக்குத் தூண்டினால் இந்தத் தொகுப்பின் நோக்கம் நிறைவேறி விட்டதென்று சொல்லலாம்.

படிப்பகம்

www.padippakam.com



பாக்சர் கலவரம் : தலைசீவல்



1900-ம் வருட வாகனம்



ராய்ட்



பெண்கள் வாக்குரிமைப் போர்

**1900** உலக மக்கள் தொகை 170 கோடி. இரண்டாவது ஒலிம்பிக்ஸ் போட்டிகள். சீனாவில் பாக்ஸர் கலவரம். பிரிட்டனில் தரைக் கடியில் ரயில். உளவியல் அறிஞர் ஃப்ராய்டின் கனவுகளின் விளக்கம் நூல் வெளியீடு. ஆஸ்கர் வைல்ட் மரணம். ஐன்ஸ்டினின் சார்பியல் தத்துவத்திற்கு அடிப்படையான க்வாண்டம் தியரி மேக்ஸ் பிளாங்கால் அறிவிக்கப்பட்டது.

**1901** பிகாஸோவின் ஓவியக் கண்காட்சி. வேக்வம் க்ளீனர் கண்டுபிடிப்பு. நோபல் பரிசுகள் வழக்கத்திற்கு வந்தன. மார்கோனியால் கடல் கடந்த வானொலி பரிமாற்றம் நிகழ்த்திக் காட்டப்பட்டது. மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை பாண்டித்துரை தேவர் தொடங்கினார். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அதிபதியான விக்டோரியா மகாராணியின் மரணம். மோட்டார் சைக்கிள் உபயோகத்திற்கு வந்தது.

சுவரொட்டிக் கலையை உருவாக்கிய பாரிசை சேர்ந்த துலோஸ் -லாட்ரெக் மரணம். ஆஸ்திரேலியா உருவானது. முதல் இந்திய டாக்குமெண்டரி படம் எச்.எஸ்.பட்வடேகரால் உருவாக்கப்படுகிறது.

**1902** சிறிய பாதங்கள் வேண்டுமென பெண்களின் கால்களைக் குழந்தைப் பருவத்திலிருந்தே கட்டிவைக்கும் மூடப் பழக்கம் சீனாவில் ஒழிக்கப்பட்டது. க்யூபா விடுதலையாகிறது.

எகிப்தில் உலகப் புகழ்பெற்ற அஸ்வான் அணை திட்டம். போயர் போர் முடிவுக்கு வருகிறது.

**1903** ரைட் சகோதரர்கள் தங்கள் முதல் ஆகாய விமானத்தை வெள்ளோட்டம் விட்டனர். பதினைந்து அடி உயரத்தில் விமானம் பறந்த சாதனையை மூன்று செய்தித்தாள்கள் மட்டுமே வெளியிட்டன.



படிப்பகம்

www.padippakam.com



மேரி க்யூரிக்கும் அவரது கணவருக்கும் இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

கடுமையான சட்ட திட்டங்களை அமல்படுத்தியதால் செர்பியாவின் அரசனும், அரசியும் கொல்லப்பட்டனர். காங்கிரஸின் பத்தொன்பதாவது மாநாடு தமிழகத்தில் நடைபெற்றது.

**1904** மூன்றாவது ஒலிம்பிக் பந்தயம். பார்க்க பேச கேட்க முடியாத ஹெலன் கெல்லர் பட்டப்படிப்பு முடித்து சாதனை நிகழ்த்தினார். ரஷியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே போர். ரஷ்ய நாவலாசிரியரான அந்தான் செகாவ் மரணம்.

**1905** ஷெர்லாக் ஹோம்ஸ் எனும் துப்பறிவாளன் கதாபாத்திரம் கானன் டாயில் எனும் எழுத்தாளரால் உருவாக்கப்பட்டது.

இந்தியாவில் லாகூரில் பூகம்பத்தால் சுமார் 10.000 பேர் இறந்தனர்.

ஐன்ஸ்டைன் தனது சார்பியல் தத்துவத்தை வெளியிட்டார்.

ரஷியாவில் ஜார் மன்னனுக்கெதிரான புரட்சி. பொட்டோம்கின் கப்பலில் மாலுமிகள் கிளர்ச்சி.

காசநோய் கிருமிகளை கண்டறிந்ததற்காக ராபர்ட் கோட்டுக்கு நோபல் பரிசு. வங்காளப் பிரிவினை.

**1906** பிரான்சிலும் விமானம் வெள்ளோட்டம். புகழ்பெற்ற நாடக ஆசிரியரான இப்சென் மரணம். வ.உ.சி.யின் சுந்திர கப்பல் போக்குவரத்து. முஸ்லீம் லீக் உதயம்.

**1907** மகாத்மா காந்தி தென்ஆப்பிரிக்காவில் சத்யாகிரகப் போராட்டத்தை தொடங்குகிறார்.

இந்தியாவை விட்டு ஒருபோதும் விலக மாட்டோம் என பிரிட்டிஷ் அரசு அறிவிப்பு.

இந்தியாவில் செய்தித்தாள் சட்டம். முதல் கிராமபோன் கம்பெனியான கிராம போன் கம்பெனி ஆப் இந்தியா தொடங்கப்பட்டது.

**1908** அமெரிக்காவில் ஜார்ஜியா மாநிலத்தில் மதுவிலக்கு அமல்.

பிரிட்டிஷ் தொழிலாளர் கட்சி சோஷலிசத்தை தங்கள் கொள்கையாக அறிவிக்கிறது.

கொலைக்குற்றம் சாட்டப்பட்ட ஆறு கறுப்பினத்தவர் அடித்தே கொல்லப்படுகின்றனர்.

புகழ் பெற்ற போர்ட் கார்கள் அறிமுகம்.

சீனாவில் இரு வயது குழந்தைக்கு மன்னராக முடிசூட்டப்பட்டது.

லண்டனில் ஒலிம்பிக்ஸ்.

தூத்துக்குடி பஞ்சாலை போராட்டம்.

வ.உ.சி. சுப்ரமணிய சிவாவுக்கு 40 ஆண்டு கடுங்காவல் தண்டனை. 'இந்தியா' பத்திரிகை துவக்கம். பாரதியின் ஸ்வதேச கீதங்கள் வெளியீடு.

**1909** கல்கத்தாவில் இந்து -முஸ்லீம் கலவரம். மதுவிலக்கு அமல்படுத்தப்படுகிறது.


பெண்கள் வாக்குரிமை கேட்டு போராடுகிறார்கள்.

சென்னை திராவிட சங்கம் உதயம்.

மிண்டோ - மார்லி சீர்திருத்தம்


இப்சன்


வ.உ.சி.


ரைட் விமானம்


குழந்தை மன்னர்

படிப்பகம்

www.padippakam.com

# 1910-1919



பெரியார்


முதல் உலகப் போர்


ஜாலியன் வாலாபாக்



லீக் உதயம்


டால்ஸ்டாய்

**1910** சீனா, திபேத் மீது ஆக்கிரமிப்பு. தலாய்லாமா வெளியேற்றம்.

D.H. கிரிபித் முதல் ஹாலிவுட் படத்தை தயாரிக்கிறார். (ஒரு தேசத்தின் உதயம்)

மேரி க்யூரியால் ரேடியம் பிரித்தெடுக்கப்படுகிறது. பிரான்சில் முதல் முறையாக பெண்களுக்கு எட்டு வார பிரசவ கால விடுப்பு கொடுக்கப்படுகிறது.

ராமநாதபுரம் எனும் புதிய மாவட்டம் உதயம்.

டால்ஸ்டாய் மரணம். இந்திய பத்திரிகை சட்டம்.

**1911** பிரிட்டனில் தொழிலாளர் கட்சி ஆட்சிக்கு வருகிறது.

வாஞ்சிநாதன் கலெக்டர் ஆஷ் என்பவரை சுட்டுத் தானும் தற்கொலை செய்து கொள்கிறார்.

சட்டமன்ற பேரவை மண்டபம் சென்னையில் கட்டப்பட்டது.

இரண்டாவது வங்காளப் பிரிவினை அறிவிப்பு.

இந்திய தலைநகர் வங்காளத்திலிருந்து தில்லிக்கு மாற்றப்படுகிறது.

**1912** ரஷியாவில் பிராவ்தா பத்திரிகை துவக்கம்.

பாரதியின் கண்ணன் பாட்டு, குயில் பாட்டு.

தமிழகத்தில் பல்கலை கழகப் பட்டங்களில் வேந்தருக்குப் பதில் துணைவேந்தர் கையெழுத்திடுகிறார்.

சீனா குடியரசாகியது.

**1913** செர்பிய படைகள் முஸ்லிம்களை கொல்கின்றன.

பெண்களுக்கு வாக்குரிமை வேண்டி நடத்தப்பட்டுவரும் போராட்டத்தில் முதல் பலி எமிலி டேவிஸன்.

உலகின் மிகப்பெரிய ரயில் நிலையமான

www.padippakam.com



கிராண்ட் சென்ட்ரல் ஸ்டேஷன் அமெரிக்கா வில் நியுயார்க் நகரில் திறப்பு. தாதா சாகேப் பால்கே ராஜா ஹரிசந்திரா படத்தை தயாரிக்கி றார்.

**1914** ஆஸ்திரிய டியூக்கான பிரான்ஸ் பெர்டினான்ட் கொலை செய்யப்படுகிறார்.

ஜெர்மனி லக்சம்பர்கை கைப்பற்றுகிது பிரான்ஸ் மீது போர் தொடுக்கிறது.

பிரிட்டன் ஜெர்மனி மீது யுத்தத்தை பிரகட னம் செய்கிறது.

முதல் உலகப்போர் துவக்கம். ஏர்னஸ்ட் ஸ்வின்ஸ்ட்டனால் டாங்கி கண்டுபிடிக்கப்படுகி றது.

காங்கிரஸின் 29வது மாநாடு தமிழகத்தில் நடைபெறுகிறது.

மகாத்மா காந்தி இந்தியா திரும்புகிறார்.

**1915** இந்திய ராணுவச் சட்டம்.

ஜெர்மனி போரில் விஷவாயுவை பயன்படுத் துகிறது.

பிரிட்டனில் தொழிற்சாலைகளில் பெண்கள் பணிபுரிய தொடங்குகின்றனர்.

**1916** அமெரிக்க இனக் கலவரத்தில் நூற்றுக்கணக்கானவர் இறக்கின்றனர்.

அன்னிபெசண்டின் ஹோம் ரூல் இயக்கம்.

வ.உ.சி., சிவா ஆகியோருக்கு விடுதலை

நீதிக்கட்சி உதயமாகிறது.

**1917** ரஷிய புரட்சி. லெனின் தலைமை யில் உலகின் முதல் சோசலிச நாடு உதயம்.

சென்னை மாநில சங்கம் தோற்றம்.

'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' ஆகிய பத்திரிகைகள் துவக்கப்படுகின்றன. உமனஸ் இந்தியா அசோ சியேஷன் தோன்றுகிறது. அன்னிபெசண்ட் கைது.

**1918** அமெரிக்க அதிபர் உட்ரோ வில் சனின் 14 அம்ச சமாதான திட்டம்.

ஆஸ்த்ரியா -ஹங்கேரியிடமிருந்து யுகோஸ் லேவியா தனி நாடாக பிரிகிறது. லாரன்ஸ் ஆப் அரேபியா துருக்கியைக் கைப்பற்றினார். பெரியார் ஈரோடு நகர் மன்ற தலைவராகிறார். பாரதியார் கைது. அவர் புது வையிலிருந்து தமிழகம் வருகிறார்.

**1919** உலகப் போர் முடிவு.

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை. லீக் ஆப் நேஷன்ஸ் எனும் சபை நிறுவப்பட்டது.

முசோலினி இத்தாலியில் பாசிஸ்ட் கட்சி யைத் துவக்குகிறார். ஜெர்மனியின் காலனிக ளாக இருந்த நாடுகளை பிற நாடுகள் பங்கு போட்டுக்கொள்கின்றன. ஜெர்மனி மீது கடுமை யான தடைகள் விதிக்கப்படுகின்றன.

சிகாகோவில் இனக் கலவரம்.

இந்தியாவில் ரௌலட் சட்டம். ஜாலியன்வா லாபாக் படுகொலை. கிலாபத் இயக்கம் துவக் கம். மாண்டேகு சேம்ஸ்போர்ட் சீர்திருத்தங்கள்.

பிரிட்டனில் தொழிலாளர் போராட்டம்.

ராஜாஜி - காந்தி சந்திப்பு.

பாரதி - காந்தி சந்திப்பு

எல்வுட் ஹேனசினால் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கண்டுபிடிக்கப்படுகிறது.



ரயில் நிலையம்



லாரன்ஸ் ஆப் அரேபியா



குண்டு தயாரிக்கும் பெண்கள்




ஜெர்மன் போர்

படிப்பகம்

www.padippakam.com

# 1920-1929



ப்ளெமிங்



ஜப்பான் நில நடுக்கம்



பெர்னாட் ஷா



மேரி ஸ்டாப்

**1920** ஒத்துழையாமை இயக்கம். பிரிட்டிஷ் துணிகள் எரிப்பு. மாணவர்கள் வகுப்புகளையும் வழக்குரைஞர்கள் நீதிமன்றங்களையும் புறக்கணித்தனர். அமெரிக்கா சர்வதேச வானொலி அமைப்பை உருவாக்குகிறது. பெரியார் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகிறார். முதல் பொதுத் தேர்தல். சுப்பராயலு ரெட்டியார் முதல்வராகிறார். பின் பதவி விலகுகிறார். ஜெர்மனியில் நாசிக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்குரிமை. அமெரிக்காவில் மதுவிலக்கு. இந்தியாவில் திரைப்பட தணிக்கை முறை அமலுக்கு வந்தது.

**1921** முதல் வகுப்புரிமை ஆணை. முதல் மாநில சட்டசபை கூட்டம். இந்தியாவில் இந்து அறநிலைய சட்டம். பெண்களுக்கு வாக்குரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமை. பாரதியார் மறைவு. வேல்ஸ் இளவரசர் இந்தியா வருகை. இந்தியா முழுவதும் ஹர்த்தால். லெனின் புதிய பொருளாதார கொள்கையை அறிமுகப்படுத்துகிறார். பெண்கள் கருத்தடை உரிமைகளுக்காக லண்டனில் முதல் மருத்துவ நிலையத்தை தொடங்குகிறார் மேரி ஸ்டாப். இந்தியாவில் முதல் வானொலி ஒலிபரப்பு பம்பாயில் நடத்திப் பார்க்கப்பட்டது. சார்லி சாப்ளின் படங்களுக்கு அமோக வரவேற்பு.

**1922** ஹேகில் சர்வதேச நீதிமன்றம் அமைக்கப்பட்டது. முசோலினி இத்தாலிய பிரதமராகிறார். வாஷிங்டனில் லிங்கன் நினைவுக் கூடம் கட்டப்பட்டது. ஜேம்ஸ் ஜாயஸின உலக கப்புகழ் பெற்ற நாவலான யுலிசெஸ் வெளியானது. ரீடர்ஸ் டைஜஸ்ட் பத்திரிகை துவக்கம்.

**1922** சட்ட மறுப்பு இயக்கம். பர்தோலி சத்யாகிரகம். சௌரி சௌரா கலவரம். இரண்டாவது வகுப்புரிமை ஆணை. காந்திக்கு ஆறாண்டு சிறை. பி.பி.ஸி. துவக்கம்.

**1923** தமிழகத்தில் இரண்டாவது தேர்தல். மீண்டும் நீதிக்கட்சியின் ஆட்சி. பணியாளர் இழப்பீட்டுச் சட்டம். திருமண வயது சட்டம். இடை நிலை கல்வி கழகங்கள் மாவட்டங்களில் அமைக்கப்பட்டன. சி.ஆர். தாஸும் மோதிலால் நேருவும் சேர்ந்து 'சுயராஜ்யா' கட்சியை துவக்குகின்றனர். ரஷ்யாவில் கட்டாய கடின உழைப்பு முகாம்கள் ஏற்படுத்தப்படுகின்றன. ஜப்பானில் கடுமையான பூகம்பம். ஒரு லட்சம் பேருக்கு மேல் மரணம். துருக்கி குடியரசாகிறது. முஸ்தபா கமால் அதன் குடியரசு தலைவராகிறார். பர்தா போன்றவைகளை ஒழித்து துருக்கியை நவீன நாடாக்கும் முயற்சிகளில் ஈடுபடுகிறார் அவர். ஜெர்மனியில் நாஜிக்கட்சி செல்வாக்கு பெறுகிறது. ஹிட்லர் பிரபலமடைய தொடங்குகிறார். கலீல் கிப்ரான் தீர்க்கதரிசி எனும் நூலை எழுதுகிறார்.

**1924** தனது 53-ம் வயதில் லெனின் மரணமடைகிறார். பெட்ரோ கிராட் நகரம் லெனின் கிராடாக பெயர் மாற்றம் பெறுகிறது. 'சர்ரியலிஸ



படிப்பகம்

www.padippakam.com



அறிக்கை வெளியானது. இ.எம். பாஸ்டர் தி பாஸேஜ் டு இந்தியா நாவலை எழுதினார். வைக்கம் போராட்டம், குடியரசு பத்திரிகை பெரியாரால் துவக்கப்பட்டது.

**1925** சி.ஆர். தாஸ் மரணம். தியாகராயர் மரணம் தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாடு. பெரியார் காங்கிரஸை விட்டு வெளியேறுகிறார். சன் -யாட் சென் மறைவு. பிரிட்டிஷ் பொருட்களை சீன மக்கள் பகிஷ்காரம் செய்தனர். சியாங் கே ஷேக், சீனாவை ஒரு குடையின் கீழ் கொண்டு வரும் முயற்சிகளில் ஈடுபடுகிறார். முதன் முறையாக ஆகாய விமானத்தில் திரைப்படம் காட்டப்படுகிறது. டெட்டனஸுக்கு எதிரான மருந்து கண்டுபிடிக்கப்படுகிறது.

**1926** லெபனான் தனி குடியரசாகிறது. ட்ராட்ஸ்கி கட்சியிலிருந்து வெளியேற்றப்படுகிறார். டிஇ. லாரன்ஸின் அறிவின் ஏழு தூண்கள் நூல் வெளியீடு. மந்திர வித்தை நிபுணர் ஹவுடினி மரணம். பெரியாரின் சுயமரியாதைக் கட்சித் துவக்கம். மூன்றாவது பொதுத்தேர்தல். டாக்டர் பி. சுப்பாராயன் முதல்வர். ப. ஜீவானந்தம் சிராவயலில் காந்தி ஆஸ்ரமம் தொடங்குகிறார். முத்துலட்சுமி முதல் பெண் சட்டசபை உறுப்பினர். பாய்ட் தனது கண்டுபிடிப்பான தொலைகாட்சியை அறிமுகப்படுத்துகிறார்.

**1927** நீல் சிலையை அகற்றும் போராட்டம். ஆயுதச் சட்ட எதிர்ப்புப் போராட்டம். பெர்னாட் ஷாவுக்கு நோபல் பரிசு. சைமன் கமிஷன் அமைக்கப்பட்டது. இந்திய கப்பற்படை சட்டம். பான் ஆம் முதல் சர்வதேச விமான போக்குவரத்தை துவங்குகிறது. பம்பாயிலும் கல்கத்தாவிலும் வானொலி நிலையங்கள் துவக்கம்.

**1928** பிரிட்டனில் பெண்கள் ஓட்டளிக்கும் வயது முப்பதிலிருந்து 21ஆக குறைகிறது. சியாங் கே ஷேக் பீஜிங்கை கைப்பற்றி சீனாவின் அதிபராகிறார். இந்தியாவில் சைமன் கமிஷன் வருகை இந்திய கட்சிகள் அதை புறக்கணிக்கின்றன.

பனகல் அரசர் மறைவு. பென்சிலினை அலெக்சாண்டர் பிளேமிங் கண்டுபிடிக்கிறார். டிவி. செட்டுகள் விற்பனைக்கு வந்தன. டிஸ்னி முதல் பேசும் கார்ட்டூன் தயாரித்தார்.


**1929** இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து தர வைஸ்ராய் இர்விங் பிரபு சம்மதிக்கிறார். காங்கிரஸின் லாகூர் மாநாடு பூரண சுதந்திரம் கோரி தீர்மானம் நிறைவேற்றுகிறது. டிச. 31ல் டில்லியில் நேரு தேசியக் கொடியை ஏற்றுகிறார்.

அண்ணாமலை பல்கலைகழக சட்டங்கள். தேவதாசி முறை ஒழிப்புச் சட்டங்கள். ட்ராட்ஸ்கி ரஷ்யாவிலிருந்து வெளியேற்றப்படுகிறார். வாடிகனில் போப்பிற்கான உரிமைகள் இத்தாலிய பாராளுமன்றத்தால் உறுதிப்படுத்தப்படுகின்றன.


செர்பியா குரேஷியா சால்வேனியா இவை இணைந்து யுகாஸ்லேவியாவாக மாறுகிறது. 580 வருடங்களாக பிரேகில் கட்டப்பட்ட தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டது. ஆஸ்கர் விருதுகள் அறிமுகம்.



சாப்ளின்



ஸ்டாலின்



டிஸ்னி படம்

படிப்பகம்

www.padippakam.com

# 1930-1939



கிங்காங் கையில் கதாநாயகி

**1930** பிராங்க் விட்டில் என்பவரால் ஜெட் எஞ்சின் கண்டுபிடிக்கப்படுகிறது. ஜெர்மனியில் தேர்தல். நாஜிக் கட்சிக்கு முன்பை விட அதிக ஓட்டுகள் கிடைக்கின்றன. ஹிட்லரிடம் ஜெர்மன் குடியுரிமை இல்லாததால் அவருக்கு சீட் மறுக்கப்படுகிறது. தமிழகத்தில் சட்டசபை தேர்தல். மீண்டும் நீதிக் கட்சி வெற்றி. பி.முனிசாமி முதல்வர். ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் உப்பு சத்யாகிரகம். இந்தியாவில் ஜனவரி 26 சுதந்திர தினமாக கொண்டாடப்பட்டது. சட்ட மறுப்பு போராட்டமும் உப்பு சத்யாகிரகமும் தொடர்ந்தன. முதல் வட்ட மேஜை மாநாடு. புளூட்டோ எனும் புதிய கிரகம் கண்டுபிடிக்கப்படுகிறது. டிஎச்லாரன்ஸ் மரணம். காந்தி கைது. தனியாரிடமிருந்து வானொலி இந்திய அரசிடம் செல்கிறது.

**1931** காந்தி இர்வின் ஒப்பந்தம். இரண்டாம் வட்ட மேசை மாநாடு. தமிழகத்தில் முதலமைச்சர் முனிசாமி பதவி விலகுகிறார். வால்ட் டிஸ்னி மிக்கி மௌஸை உருவாக்குகிறார். ஜெர்மனியில் டானாட் வங்கி முழ்கியதை தொடர்ந்து அனைத்து வங்கிகளும் கிட்டதட்ட ஒரு மாத காலம் மூடப்படுகின்றன. சியாங் கே-ஷேக்கின் ஆட்சியை எதிர்த்து மாவோவின் தலைமையில் கம்யூனிட்ஸ் கட்சி போராடுகிறது. ஜப்பான் சீனாவின் சில பகுதிகளை ஆக்ரமிக்கின்றது. தாமஸ் ஆல்வா எடிசன் மரணம். உலகிலேயே உயரமான கட்டிடமாக இருந்த எம்பயர் ஸ்டேட் கட்டிடம் திறக்கப்பட்டது. இந்தியாவின் முதல் பேசும் படமான ஆலம் ஆரா வெளியாகிறது.

**1932** பஹ்ரெய்னில் எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்படுகிறது. காந்தியின் உண்ணாவிரதம். சீனமக்கள் ஜப்பானிய பொருட்களை புறக்கணிக்கின்றனர். ஜெர்மனியின் பொதுத் தேர்தலில் நாஜிக் கட்சி அதிக எண்ணிக்கையில் வெற்றி பெற்றாலும் பெரும்பான்மை இடத்தை பெற முடியவில்லை. பி.பி.சி.யின் உலக சேவை நிகழ்ச்சிகள் துவக்கம். பொப்பிலி அரசர் தமிழகத்தில் முதல்வர். திருப்பூர் குமரன் மறியலில் ஈடுபட்டு மரணம். ஒத்துழையாமை இயக்கம். மூன்றாம் வட்ட மேசை மாநாடு. பிரிட்டனில் வேலையில்லா திண்டாட்டம். ஊர் வலங்கள்.

**1933** பெரியாரின் 'புரட்சி' வார இதழ் துவக்கம். ஜெர்மனியில் பல்வேறு ஆட்சிக் குழப்பங்களுக்குப் பின் ஹிட்லர் அதிபர் ஆகிறார். ஜெர்மனியின் பாராளுமன்றம் தீக்கிரையாகின்றது. இதற்கு காரணம் கம்யூனிஸ்ட்டுகள் என குற்றம் சாட்டப்பட்டு அவர்கள் வேட்டையாடப்படுகின்றனர். ஆஸ்திரிய அதிபர் டோல் புஸ் தன்னை அந்நாட்டு சர்வாதிகாரியாக முடி சூட்டிக் கொள்கிறார். ஜெர்மனியும் ஜப்பானும் லீக் ஆப் நேஷன்ஸ் அமைப்பிலிருந்து கொஞ்ச நாளில் விலகிக் கொள்ளப் போவதாக அறிவிக்கின்றன. ஜெர்மனியில் முதல் சித்ர வதை முகாம் அமைக்கப்படுகிறது. அமெரிக்கா முதன் முறையாக சோஷலிஸ்ட் ரஷ்யாவுடன் தூதரக உறவுகளை ஏற்படுத்துகின்றது. அமெரிக்காவில் மதுவிலக்கு ரத்து செய்யப்படுகிறது. ஸ்பெஷல் எஃபெக்ட்சினை முன்னோடியான கிங்காங் படம் வெளியீடு. (குரங்கு கையில் கதாநாயகி).

**1934** இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தடை. சட்ட மறுப்பு இயக்கம் வாபஸ் பெறப்படுகிறது. நிகாராகுவாவில் ராணுவ ஜெனரல் சோமாசா கூட்டிய கூட்டத்தில் சான்டினோ படுகொலை செய்யப்படுகின்றார். பத்திர மோசடியால் பிரான்சில் உள்நாட்டு கலவரம். ஜெர்மனியில் மக்கள் மத்தியில் நடத்தப்பட்ட நேரடி வாக்கெடுப்பில் 88 சதவீதம் பேர் ஹிட்லருக்கு ஆதரவாக வாக்களிக்கின்றனர். ஹிட்லர் தந்தை என பொருள்படும் ஜெர்மனியின் ஃப்யூரர் ஆகிறார். யுகோஸ்லோவியாவை சேர்ந்த அரசர் அலெக்சாண்டர் கொல்லப்படுகிறார். நாஜி கட்சியினர் ஆஸ்திரிய அதிபரை கொல்கின்றனர். தினமணி செய்தித்தாள் துவக்கம். சுமார் 9.600 கிலோ மீட்டர்கள் கொண்ட மாவோவின் நீண்ட பயணம். இப்பயணம் 90,000 பேர்களுடன் தொடங்கப்பட்டது முடியும் போது 20,000 பேர்களே எஞ்சினர்.

**1935** ராஜாஜி தமிழக காங்கிரஸ் கட்சி தலைவராகிறார். தமிழக சட்டசபையில் இரண்டு சபைகள் உதயம். இந்திய அரசு சட்டம். பூமிய திர்ச்சியின் அளவை கண்டறியும் ரிரெக்டர் அளவு கோல் சார்லஸ் ரிச்டர் என்பவரால் கண்டறியப்படுகிறது. ஹிட்லர் வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்திற்கு கட்டுப்படமாட்டேன் என அறிவிக்கிறார். இத்தாலி, எத்தியோப்பியா மீது படையெடுக்கிறது. ஜாஸ் இசைக்கும் ஜெர்மனிய - யூதர்

www.padippakam.com



கலப்பு திருமணத்திற்கும் ஜெர்மனியில் தடை. வாலஸ் கரோதர்ஸ் நைலானை கண்டுபிடிக்கிறார். ரடார், ராபர்ட் வாட்சன் வாட்டால் கண்டுபிடிக்கப்படுகிறது.

**1936** தனக்கெதிரானவர்களை கொன்றழிக்கும் மகத்தான களையெடுப்பு ஸ்டாலினால் தொடங்கப்பட்டது. நிகாராகுவாவில் தளபதி சோமாசாவால் ராணவப் புரட்சி நடத்தப்படுகிறது. ஜப்பானிலும் ராணுவப் புரட்சி தொடங்கப்பட்டு முறியடிக்கப்படுகிறது. பிரசித்தி பெற்ற கான் வித்தி விண்ட் நாவல் மார்க்ரெட் மிச்சலால் எழுதப்பட்டது.

தமிழகத்தில் பொப்பிலியும் பின்னர் பி.டி.ராஜனும் முதல்வராகிறார்கள். எட்டு வயது ஷெர்லி டெம்பிள் ஹாலிவுட்டின் பிரபலமான குழந்தை நட்சத்திரமாகிறார். ஆல் இந்தியா ரேடியோ துவக்கம்.

**1937** தமிழகத்தில் வெங்கட ரெட்டி முதல்வர். பின் ராஜாஜி முதல்வர். முதலாவது இந்தி எதிர்ப்புப் போராட்டம். முதன் முறையாக தமிழகத்தில் விற்பனை வரி அறிமுகம். ஸ்பானிய உள்நாட்டுப் போர். பிராங்கோ கை ஓங்குகிறது. கெர்னிகா மீது தாக்குதலில் ஆயிரம் பொதுமக்கள் சாவு. இது பற்றி பிகாசோ தீட்டிய ஓவியம் உலகப்புகழ் பெற்றது.

**1938** உலகின் முதல் வண்ண தொலைகாட்சி அறிமுகம். குவெய்த்தில் எண்ணெய் வளங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஜப்பானிய படைகள் சீனாவில் முன்னேறுகின்றன. ஹிட்லர் ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன் இணைத்துக் கொள்கிறார். 17 வயது யூத இளைஞன் ஜெர்மானிய அதிகாரி ஒருவரைக் கொன்றதை அடுத்து யூத மக்கள் மேல் தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. சுமார் 30,000 யூதர்கள் முகாம்களில் அடைக்கப்படுகின்றனர். ஒட்டோ ஹான் எனும் ஜெர்மனிய விஞ்ஞானி யுரேனிய அணுவை பிளப்பதன் மூலம் ஆற்றலை வெளிக் கொணர முடியும் என கண்டுபிடித்தார்.

தமிழகத்தில் முதல் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்பு வரை இந்தி கட்டாய பாடமாக்கப்பட்டது. தமிழ்நாடு தமிழருக்கே எனும் கோஷம். நீதிக் கட்சியின் தலைவராக பெரியார் தேர்வு. இந்தியாவில் காங்கிரஸ் அமைச்சரவைகள் ராஜினாமா.

**1939** பெரியார் - கிரிப்ஸ் சந்திப்பு. ராஜாஜி பதவி விலகல். நீதிக் கட்சி மாநாட்டில் தனிக் தமிழ்நாடு கோரிக்கை. தமிழகத்தில் ஆளுநராட்சி பிரகடனம். ஸ்பானிய உள்நாட்டு போர் முடிவடைகிறது. பிராங்கோவின் படைகள் வெற்றி பெறுகின்றன. ஐரோப்பிய போரில் ஸ்பெயின் கலந்து கொள்ளாது என அறிவிக்கின்றது.

ஜெர்மனி போலந்தை முற்றுகையிடுகின்றது. பிரிட்டனும் பிரான்சும் ஜெர்மனி மீது போர் பிரகடனம் செய்கின்றன. ரஷ்யா போலந்தினுள் நுழைகிறது. விளைவு ஜெர்மனியும் ரஷ்யாவும் போலந்தை பங்கு போட்டுக் கொள்கின்றன. ஹென்றி மில்லரின் டிராபிக் ஆப் காப்ரிகான் வெளியாகிறது. எலக்ட்ரான் மைக்ராஸ் கோப் கண்டுபிடிக்கப்படுகிறது.

ஷெர்லி





உயர்ந்த கட்டடம்



பிகாஸோ ஓவியம்





பட்டினி ஊர்வலங்கள்

படிப்பகம்

www.padippakam.com






காங்கிரஸ் தலைவர் : காமராஜ்

**1940** ஜெர்மனி நார்வேயையும் டென் மார்க்கையும் கைப்பற்றுகின்றது. பிரிட்டனில் சர்ச்சில் பிரதமராகிறார். இத்தாலி பிரான்ஸ் மீது போர் தொடுக்கிறது. ஜெர்மன் படைகள் பிரான் சினுள் நுழைகின்றன. சோவியத் படைகள் ருமேனியாவை கைப்பற்றுகின்றன. ட்ராட்ஸ்கி உளவாளி ஒருவனால் மெக்ஸிகோவில் கொல் லப்படுகிறார். ஜெர்மனி பிரிட்டனை கைப்பற்ற முழுமூச்சாய் போரில் இறங்குகிறது. ஹெமிங் வேயின் பார் ஹூம் தி பெல் டோல்ஸ் நாவல் வெளியாகிறது. தமிழ்நாட்டில் தனிநபர் அறப் போர். இந்திக் கட்டாயப் பாடம் என்ற அறி விப்பு ரத்து செய்யப்படுகிறது. தமிழ்நாடு காங்கி ரஸ் தலைவராக காமராஜ். தமிழிசை இயக்கம் தொடங்கப்படுகிறது. லாகூர் மாநாட்டில் முஸ் லீம் லீக் இந்தியாவைப் பங்கிட வேண்டும் என தீர்மானம் இயற்றுகிறது.

**1941** இதுவரை ரயில் நிலையங்களிலும் உணவு விடுதிகளிலும் பிராமணர்களுக்கு என தனி இடம் அளிக்கப்பட்டு வந்தது ரத்து செய் யப்பட்டது. யுகோஸ்லாவியாவில் புரட்சி. ஜெர் மனி யுகோஸ்லாவியாவையும் கிரீஸையும் கைப்பற்றுகிறது. ஜெர்மனி, சோவியத் ரஷ்யாவி னுள் ஊடுருவுகிறது. லெனின் கிராடை முற்று கையிடுகிறது. சுமார் ஒரு லட்சம் ரஷ்யர்கள் கொல்லப்படுகின்றனர். ஜப்பானிய போர் விமா னங்கள் பேர்ல் துறைமுகத்தை தாக்குகின்றன. இதில் சுமார் 2,344 அமெரிக்க வீரர்கள் கொல் லப்பட்டனர். ஐந்து போர்க் கப்பல்கள் முழ்கடிக் கப்பட்டன. அமெரிக்கா ஜப்பான் மீது யுத் தத்தை பிரகடனம் செய்தது. நாவலாசிரியை வர் ஜீனியா உல்ஃப் தற்கொலை செய்து கொள்கி றார்.



காந்தி மரணம்

**1942** ஜப்பானியர்களை எதிர்க்க சீனா விற்கு அமெரிக்கா உதவி செய்கிறது. இந்தியா வழியாக தளவாடங்களை அனுப்புவதற்காக 770 கி.மீ. நீளமுள்ள சாலை அமைக்கப்படுகி றது. ஜப்பானியர்கள் மணிலாவை கைப்பற்று கின்றனர். ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஆகாய யுத்தம் தொடங்குகிறது. 25,000 பிரிட்டிஷ் போர் வீரர்கள் ஜெர்மானிய படைகளால் சிறைபிடிக்கப்படுகின்றனர். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்த ராக ஏ.எல். முதலியார் நியமனம். வெள்ளை யனே வெளியேறு இயக்கம். கோவை விமான நிலையம் தீவைப்பு. கிரிப்ஸ் தூதுக் குழு இந் தியா வருகை. காங்கிரஸ் தலைவர்கள் கைது. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஜப்பானின் உத வியுடன் இந்திய தேசிய ராணுவத்தை உருவாக் குகிறார். சிங்கப்பூரில் இருந்தபடி சுதந்திர இந் திய அரசை பிரகடனம் செய்கிறார். ஆல்பர்ட் காமுவின் அந்நியன் நாவல். அண்ணாவின் திராவிட நாடு இதழ் துவக்கம்.



சித்ரவதைக் கூடத்தில் யூதர்கள்



ஹிரோஷிமா அணுகுண்டு விளைவு

**1943** சர்ச்சில், ரூஸ்வெல்ட் ஸ்டாலின் ஆகியோர் சந்திப்பு. பம்பாயில் பெரியார் - ஜின்னா சந்திப்பு. ஜெர்மனி ரஷ்யாவிடம் தோல்வியுறுகிறது. லட்சக்கணக்கான ஜெர்மா னிய வீரர்கள் மரணம். அமெரிக்கா பிரிட்டன் ஆகிய நேச நாடுகள் படை ஜெர்மானியப் படைகளை தாக்குகின்றன. உலகிலேயே மிகப் பெரிய அரசு அலுவலகமான அமெரிக்க ராணு வத் துறை அலுவலகமான பெண்டகன் கட்டப்



படிப்பகம்

www.padippakam.com



படுகிறது.

**1944** நேச நாடுகளுக்கும் அச்சு நாடுகளுக்கும் இடையே பல்வேறு முனைகளில் கடுமையான போர். ஜஸ்டிஸ் கட்சி திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் பெறுகிறது. உடல்நிலை கடுமையாக பாதிக்கப்பட்டதால் காந்தி சிறையிலிருந்து விடுதலை. லெனின் கிராட் முற்றுகை முடிகிறது. அமெரிக்க ராணுவம் ஜெர்மனிக்குள் நுழைகிறது.

**1945** ராஜாஜி காங்கிரஸில் மீண்டும் இணைகிறார். நேதாஜியின் இந்திய தேசிய ராணுவம் பிரிட்டிஷ் படைகளுடன் மோதி தோல்வியுறுகிறது. ஜெர்மனியின் சித்ரவதை முகாம்களில் லட்சக்கணக்கான யூதர்கள் கொன்று குவிப்பு. அரபு நாடுகளின் லீக் தோற்றுவிக்கப்படுகிறது. அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட்டின் மரணம். ஜெர்மானிய படைகள் சரணடைகின்றன. ஹிட்லர் தற்கொலை செய்து கொள்கிறார். முசோலினியும் அவரது கூட்டாளிகள் 12 பேரும் தூக்கிலிடப்படுகின்றனர். கோயபெல்ஸ் தனது குடும்பத்தாரை கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொள்கிறார். ஜெர்மனி முழுமையாக சரணடைகிறது. அமெரிக்கா ஜப்பானில் அணுகுண்டு வீசுகிறது. இரண்டு லட்சத்திற்கும் அதிகமான ஜப்பானியர்கள் கொல்லப்படுகின்றனர். பல லட்சக்கணக்கானோர், தலைமுறை தலைமுறையாக பாதிக்கப்படுகின்றனர். ஜப்பான் சரணடைகிறது.

**1946** ஐ.நா. சபையின் துவக்கம். அதன் பொதுக் குழு கூட்டம் லண்டனில் தொடங்குகிறது. யுகோஸ்லாவியா சோஷலிஸ அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்கிறது. சீனாவில் மாசே துங் தலைமையிலான கம்யூனிஸ்ட்டுகளின் செம்படை ஆளும் தேசியவாதிகளோடு போர் தொடுக்கிறது. இந்திய கப்பற் படை மாலுமிகள் கிளர்ச்சி. காபினெட் மிஷன் இந்தியா வருகை. இடைக்கால அரசு அமைக்க காங்கிரஸ் சம்மதம். முஸ்லீம் லீக் எதிர்ப்பு. முஸ்லீம் லீக்கின் தனிநாடு கோரிக்கை. இந்து முஸ்லீம் கலவரம். காந்தியின் கடைசி தமிழக வருகை. மறைமலையடிகள் மறைவு பொதுத் தேர்தல். ஒன்றுபட்ட சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக பிரகாசம் பதவி ஏற்பு. எலக்ட்ரானிக் கம்ப்யூட்டர் ஜே.பி. எக்கர்ட்டினால் கண்டுபிடிக்கப்படுகிறது. நியூயார்க்கில் ஐ.நா. சபையின் நிரந்தர அலுவலகம் அமைக்கப்படுகிறது.

**1947** இந்திய சுதந்திரம். தமிழகத்தில் பிரகாசம் பதவி விலக ஓமந்தூரார் முதல்வராகிறார். பாகிஸ்தான் சுதந்திரம். பிரிவினையை ஒட்டி இந்து முஸ்லீம் படுகொலைகள். பாகிஸ்தான் காஷ்மீரின் சில பகுதிகளை ஆக்ரமித்தது. காஷ்மீர் மன்னர் இந்திய உதவியை நாட காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்தது. பொருட்களின் வயதை கண்டறிய உதவும். கார்பன் டேட்டிங் என்ற முறை கண்டுபிடிக்கப்பட்டது. பாலஸ்தீனத்தை பிரித்து யூதர்களுக்கான நாடமைக்க ஐ.நா. தீர்மானிக்கிறது. அரபு நாடுகள் இதை எதிர்க்கின்றன.

**1948** டிரான்ஸிஸ்டர் கண்டுபிடிக்கப்படுகிறது. பர்மா சுதந்திரமடைகிறது. யூதர்களுக்கான தனி நாடாக இஸ்ரேல் உதயம். காந்தி தனது 78-வது வயதில் படுகொலை செய்யப்படுகிறார். சோவியத் ஆளுகைக்குட்பட்டிருந்த பெர்லின் தனிப் பிரதேசமாகிறது. ஹைதராபாத் நிஜாம் இந்தியாவுடன் இணைகிறார். இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ்.ஸுக்குத் தடை. ராஜாஜி முதல் கவர்னர் ஜெனரலாக பதவி ஏற்பு. ஜன கண மன இந்தியாவின் தேசீய கீதமாகிறது. இனாம் நிலங்கள், ஜமீன்தாரி முறை ஒழிப்பு. தேவதாசி முறை ஒழிப்பு. நாமக்கல் ராமலிங்கர் அரசவை கவிஞராகிறார். இந்தி கட்டாயப் பாடம். சென்னையில் இந்தி எதிர்ப்பு மாநாடு. வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஒதுக்கீட்டுக்குப் புதிய முறை. ராஜாஜிக்கு கறுப்புக் கொடி. பெரியார் -அண்ணாதுரை கைது. இந்துஸ்தான் சமாச்சார் செய்தி நிறுவனம் உதயம்.



தூக்கில் முசோலினியும் கூட்டாளிகளும்

**1949** சீனா. மா.சே. துங் தலைமையில் கம்யூனிஸ்ட் நாடாக மாறுகிறது. வட அட்லாண்டிக் நாடுகளின் ராணுவ கூட்டமைப்பான நேட்டோ உதயம். சயாம் தாய்லாந்தாக புதுப் பெயர் கொள்கிறது. மேற்கு ஜெர்மனி அரசு அமைக்கப்படுகிறது. கம்யூனிஸ்டுகள் ஆளும் கிழக்கு ஜெர்மனியும் அமைக்கப்படுகிறது. இந்தோனேசியாவின் அதிபராக சுகர்னோ பொறுப்பேற்கிறார். பெரியார் -மணியம்மை திருமணம். திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றம். தமிழக அரசுச் சின்னமாக ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. கட்டாயக் கல்வித் திட்டம். வயது வந்தோர் பள்ளிகள் தொடக்கம். காஷ்மீரில் இந்தியா - பாகிஸ்தான் துப்பாக்கிச் சண்டை நிறுத்தம். காந்தியை கொலை செய்த வழக்கில் கோட்சேக்கும் ஆப்தேக்கும் மரண தண்டனை. காமென்வெல்த் நாடுகளில் சுதந்திர இந்தியா சேர அரசியல் நிர்ணய சபை முடிவு. பஞ்சாயத்து ராஜ் அமலுக்கு வந்தது. இந்தி ஆட்சி மொழியானது. அயர்லாந்து குடியரசாகிறது. அமெரிக்காவில் வண்ண டிவி. ஒளிபரப்பு பரிசோதனைகள். பி.டி.ஐ. செய்தி நிறுவனம் துவங்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com


# 1950-1959



பிடல் காஸ்ட்ரோ

**1950** இந்தியா குடியரசாகியது. இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தது. பம்பாயின் பரப்பு அதிகரிக்கப்பட்டு கிரேட்டர் பம்பாய் என பெயர்மாற்றம் செய்யப்பட்டது. சர்தார் வல்லபாய் பட்டேல் மரணம். தென்னாப்பிரிக்காவில் அறிவிக்கப்பட்ட புதிய இனவெறி சட்டத்தை எதிர்த்து கறுப்பினத்தவர் ஆர்ப்பாட்டம். கம்யூனிஸ்ட்களின் ஆளுகைக்குட்பட்ட வட கொரியா, தென் கொரியா மீது படையெடுத்தது. சீன ராணுவம் திபெத்தை முற்றுகையிட்டது. தென்கொரியாவில் போரிடும் ஐ.நா. படைகளுக்கு ஜெனரல் மெக் ஆர்த்தர் தலைமை ஏற்கிறார். சீனா திபெத்தை ஆக்ரமிக்கிறது. பெர்னார்ட் ஷா மரணம். ஜார்ஜ் ஆர்வெல் மரணம்.

**1951** இந்தியாவில் தாழ்த்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு. தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி தோற்றம். தமிழக அரசு சமூக நலத்துறை தோற்றம். முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு. அரசியல் சட்டத்தின் முதல் சட்டத்திருத்தம். பாரதிய ஜன சங்கம் தோற்றம். முதல் பொதுத் தேர்தல். கொரியாவில் கடும் போர். சீன நகரங்கள் மீது குண்டு வீச வேண்டும் என கூறியதால் அமெரிக்க ராணுவ தளபதி மெக் ஆர்த்தர் பதவி நீக்கப்பட்டார். ஈரான் தனது எண்ணெய் வளங்களை தேசியமயமாக்கியது. அதற்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் பிரிட்டனால் வழக்குத் தொடரப்பட்டது. ஈரானுக்கு எதிராக தீர்ப்பளித்தது சர்வதேச நீதிமன்றம். அமெரிக்கா நெவேடா பாலைவனத்தில் அணு சோதனையை நடத்தியது.



சூயஸ் கால்வாய்

**1952** முதல் பொதுத் தேர்தல். நேரு வெற்றி பெறுகிறார். ஐக்கிய ஜனநாயக கட்சி எனும் கூட்டணிக் கட்சி தோற்றம். ராஜாஜி முதல்வராகிறார். சென்னை சட்டமன்றம் கலைவாணர் அரங்கத்தில் நடத்தப்பட்டது. பணியாளர் வைப்பு நிதி சட்டம் நிறைவேற்றப்பட்டது. முதல் குடியரசு தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத். பாராளுமன்றத்தின் முதல் கூட்டம். பத்திரிகை கழகம் உருவாக்கம். பிரிட்டனில் ஆறாம் ஜார்ஜ் மரணமடைந்ததை தொடர்ந்து எலிசபெத் மகாராணியாகிறார். கென்யாவில் மாமா கறுப்பின தீவிரவாதிகள் கென்யாட்டா தலைமையில் வெள்ளையர்களை எதிர்த்து போராடத் துவங்குகின்றனர். பிரிட்டன் அணு குண்டு சோதனை நடத்துகிறது.



ஐன்ஸ்டைன்



எவரெஸ்ட்

**1953** கனடாவின் ஒன்டேரியாவில் மிகப் பெரிய அளவு யுரேனியம் இருப்பது கண்டறியப்பட்டது. ஸ்டாலின் தனது எழுபத்திமூன்றாவது வயதில் மரணம். கென்யாவில் கென்யாட்டா கைது செய்யப்படுகிறார். அமெரிக்க விமானங்கள் வடகொரிய அணைகளை குண்டு வீசி தாக்கி அழித்ததில் வெள்ளம் ஏற்பட்டு பயிர்கள் நாசம் அடைந்தன. இந்த மூன்று வருட போரில் சுமார் 20 லட்சம் பேர் இறந்தனர். தமிழறிஞர் திரு.வி.க. மறைவு. கீழ்பவானி, மணிமுத்தாறு, மழம்புழா மேட்டூர் கால்வாய் திட்டங்கள். சட்ட படிப்பிற்கென தனித் திட்டம். ராஜாஜியின் புதிய கல்வி திட்டம். அகில இந்திய காதிபோர்ட் உருவாக்கம். எட்மண்ட் ஹிலாரியும் ஷெர்பா டென்சிங்கும் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தனர். இந்தியாவின் முதல் வண்ணப் படமான ஜான்சி கி ராணி வெளியானது.


படிப்பகம்

www.padippakam.com




**1954** அல்ஜீரிய கலவரங்கள். அலாகாபாத் கும்பமேளா நெரிசலில் 500 பேர் மரணம் 2000 பேர் காயம். சாகித்ய அகாதமி உருவாக்கப்பட்டது. பாண்டிச்சேரி, காரைக்கால் மாஹி ஏணாம் போன்ற பகுதிகள் இந்திய யூனியனில் இணைந்தன. தமிழகத்தில் ராஜாஜி பதவி விலக காமராஜர் முதல்வராகிறார். காங்கிரஸிலிருந்து ராஜாஜி விலகுகிறார். குமரி மாவட்டத்தை தமிழகத்தோடு இணைக்க போராட்டம். கல்கி கிருஷ்ணமூர்த்தி மறைவு. அமெரிக்கா முதல் ஹைட்ரஜன் குண்டை வெடித்து சோதனை செய்தது. அமெரிக்காவில் செனட்டர் மெகார்த்தி கம்யூனிஸ்ட்களுக்கு எதிரான விசாரணைகளை தொடங்கினர்.. ஜெனிவா மாநாட்டில் வட வியட்நாம் தென் வியட்நாம் எல்லைகள் வகுக்கப் பட்டன. ஹோசிமின் வட வியட்நாமின் தலைவராகிறார். சூயஸ் கால்வாய் பிரதேசத்திலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் விலக வேண்டுமென எகிப்தின்அதிபர் நாஸர் அறிவிக்கிறார். சத்யஜித் ரேயின் பதேர் பாஞ்சாலி திரைப்படம் வெளியானது.

**1955** குத்தகைகாரர் பாதுகாப்புச் சட்டம். காங்கிரஸ் கட்சியின் ஆவடி காங்கிரஸ் சோசலிசத்தை ஒரு கொள்கையாக ஏற்றது. அண்ணாமலை பல்கலைகழக வெள்ளி விழா. மாநில மறுசீரமைப்பு கமிஷன் அறிக்கை வெளியாகிறது. வின்ஸ்டன் சர்ச்சில் பதவி விலகுகிறார். ஐன்ஸ்டைன் மரணம். டிஸ்னி உலகம் திறப்பு. சைப்ரஸ் கலவரங்கள்.

**1956** சூடான் மொரோக்கா, டுனுஷியா முதலியவை சுதந்திர நாடாகின்றன. எகிப்திய அதிபர் நாஸர் சூயஸ் கால்வாயைக் கைப்பற்ற கட்டளையிடுகிறார். வழக்கு ஐ.நா. சபைக்கு போகிறது. எகிப்தின் மீது தாக்குதல் தொடங்குகிறது. ஹங்கேரியில் கலவரம். சோவியத் ராணுவம் ஹங்கேரிக்குள் நுழைகிறது. அதிபர் நாகி கைது செய்யப்படுகிறார். ஐ.நா. சபை இந்த ஆக்ரமிப்பை கண்டிக்கிறது. சூயஸ் கால்வாய் சிக்கலை தீர்க்க ஐ.நா. படைகள் வருகின்றன. ஆட்சி காலத்தில் ஸ்டாலின் செய்த குற்றங்களை குருச்சேவ் வெளியிடுகிறார். ஜப்பான் ஐ.நா. சபையில் சேர்கிறது. தமிழ்நாடு என பெயர் சூட்டக் கோரி உண்ணாவிரதமிருந்த சங்கரலிங்கனார் மரணம். தமிழகத்துடன் குமரி மாவட்டம் இணைப்பு. கேரள கர்நாடக பகுதிகள் தமிழகத்திலிருந்து பிரிந்தன. விபச்சார தடைச் சட்டம். மாநில சீரமைப்பு கமிஷன் அறிக்கையைத் தொடர்ந்து பம்பாயில் கலவரம் 860 பேர் மரணம். வினோபாவே திருவள்ளூரில் பூதான இயக்கத்தை தொடங்கினார். அம்பேக்கரும் இரண்டு லட்சம் தலித்துகளும் புத்த மதத்தில் சேர்ந்தனர். கிரிகோரியின் நாள்காட்டி முறை அறிமுகம். அம்பேத்கர் மறைவு. இலங்கையில் தனி சிங்களச் சட்டம்.

**1957** சீனாவில் மாசேதுங்கின் நீண்ட பாய்ச்சல் திட்டம். சுமார் 50 கோடி விவசாயிகள் கம்யூன் முறைக்கு மாற்றப்படுகின்றனர். இஸ்ரேல் தனது காஸா முற்றுகையை விலக்கிக் கொள்கிறது. சோவியத் ரஷ்யா ஸ்புட்னிக் 1 எனும் விண்கலத்தை வானில் ஏவுகிறது. ஸ்புட்னிக் 2 ஒரு நாயுடன் விண்ணில் செலுத்தப்படுகிறது. ஒரு ரூபாய்க்கு நூறு பைசா எனும் தசம நாணய முறை இந்தியாவில் அமல். இரண்டாவது பொதுத் தேர்தல். காமராஜ் தலைமையில் தமிழக அமைச்சரவை. சட்டப் பேரவை அரசினர் தோட்டத்திலிருந்து புனித ஜார்ஜ் கோட்டைக்கு மாற்றம். கானா சுதந்திரமடைகிறது. 104 வாரங்கள் ஓடி பெரும் வெற்றி பெற்ற மதர் இந்தியா திரைப்படம் வெளியானது. வர்த்தக வானொலியான விவித்பாரதி தொடங்கப்பட்டது. பிரஸ் கவுன்சில் உருவாக்கப்பட்டது.



ஹைட்ரஜன் குண்டு

**1958** தஞ்சை மாவட்டம் நங்கவரத்தில் உழவர் போராட்டம். இந்திய காப்பிரைட் சட்டம் அமலுக்கு வந்தது. டாக்டர் சி.வி. ராமனுக்கு லெனின் அமைதி பரிசு. எடைகளும் • அளவுகளும் மெட்ரிக் முறைக்கு மாற்றம். அணு ஆயுத சோதனைகள், அதி உயர ஜெட்கள் போன்றவை ஓஸோன் படலத்தை பாதிக்கின்றன என விஞ்ஞானிகள் அறிவிப்பு. டிகால் பிரெஞ்சு அதிபராக பொறுப்பேற்கிறார். பிரிட்டன், சோவியத் ரஷ்யா, அமெரிக்கா அணு ஆயுத சோதனைகளை தொடரப்போவதில்லை என அறிவிப்பு. இலங்கையில் அவசர நிலை பிரகடனம். முதல் இனக் கலவரம் அணு ஆயுதங்களை எதிர்த்து ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள்.

**1959** கியூபா புரட்சியில் ஃபிடல் காஸ்ட்ரோ வெற்றி பெற்று அதிபதியாகிறார். சிங்கப்பூர் சுதந்திர குடியரசாகிறது. திபெத்தின் தலாய் லாமா இந்தியாவில் அரசியல் புகலிடம். இந்தியாவில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஆரம்பம். சென்னை மாநகராட்சித் தேர்தலில் தி.மு.க. வெற்றி. நாவலர் சோமசுந்தர பாரதி மறைவு.

பிரான்சின் அதிபராக டிகால். அமெரிக்காவின் ஐம்பதாவது மாநிலமாக ஹவாய் மாறுகிறது. ஐ.நா. சபை சீனாவை சேர்த்துக்கொள்ள மறுக்கிறது. பென்-ஹர் படம் திரைக்கு வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com

# 1960-1969



**1960** திருத்தணி தமிழகத்தோடு இணைப்பு. அகில இந்திய பார் அசோசியேஷன் துவக்கம். பல்வேறு ஆப்ரிக்க காலனி நாடுகள் சுதந்திரமடைந்தன. பிரான்ஸ் சகாரா பாலைவனத்தில் அணு ஆயுத சோதனையை நடத்தியது. தென்னாப்பிரிக்காவில் இனக்கலவரம். போலீஸ் சுட்டதில் 72 பேர் மரணம். அமெரிக்க உளவு விமானம் ரஷ்யாவில் சுட்டு வீழ்த்தப்பட்டது. கென்னடி அமெரிக்க அதிபராகிறார். அமெரிக்காவில் கறுப்பினத்தவர் தங்கள் உரிமைகளுக்காக போராட துவங்குகின்றனர்.

**1961** க்யூபாவுடனான தூதரக உறவுகளை அமெரிக்கா கத்தரித்துக்கொண்டது. க்யூபாவில் ஊடுருவும் அமெரிக்க முயற்சி தோல்வி. தென்னாப்பிரிக்கா காமென் வெல்த் சபையிலிருந்து விலகியது. பெர்லின் சுவர் கட்டப்பட்டது. சீனாவுக்கும் சோவியத் ரஷ்யாவுக்கும் இடையே உறவு முறிந்தது. ஜோசப் கெல்லரின் காட்ச் 22 நூல் வெளியீடு. கோவிந்த வல்லப பந்த் மரணம். யுனைடெட் நியுஸ் ஆப் இந்தியா செய்தி நிறுவனம் துவக்கம். சபையை அவமதித்த குற்றத்திற்காக பிளிட்ஸ் பத்திரிகை ஆசிரியர் கரஞ்சியாவிற்கு மக்களவை தண்டனை விதித்தது. பள்ளி தொலைகாட்சி நிகழ்ச்சிகள் துவக்கம். இந்திய ராணுவம் கோவா, டையு, டாமனை கைப்பற்றியது. தமிழகத்தில் பெண்கள் நலத்துறை உருவானது. யூரி காகரின் விண்வெளி கலம் மூலம் பூமியை வலம் வந்தார். இலங்கையில் கலவரங்கள். தென் ஆப்பிரிக்கா குடியரசாகியது. முதல் கருத்தடை மாத்திரை விற்பனைக்கு வந்தது.

**1962** மெட்ரிக் எடைகள் இந்தியாவில் கட்டாயமாக்கப்பட்டன. பிரபல பொறியியலாளர் விஸ்வேஸ்வரையா மரணம். அமெரிக்காவின் பி.எல். 480 திட்டத்தின் கீழ் கோதுமை வாங்க இந்தியா முடிவு. இந்திய - சீன எல்லையில் போர். நெருக்கடி நிலை பிரகடனம். அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது 55லிருந்து 58 ஆக உயர்த்தப்பட்டது. மூன்றாவது பொதுத் தேர்தல். காங்கிரஸ் வெற்றி. காமராஜர் முதல்வர். அண்ணாதுரை தோல்வி. நிலச் சீர்திருத்த உச்ச வரம்புச் சட்டம் வந்தது. க்யூபாவில் ரகசிய ஏவுகணை தளங்கள் இருப்பதாக தகவல் வந்ததை அடுத்து பிராந்திய பதற்றம். அல்ஜீரியாவிற்கு விடுதலை. மார்லின் மன்றோ மரணம். அணு விஞ்ஞானி நிக்கோலஸ் போர் மரணம்.

**1963** கட்சியை வலுப்படுத்த மூத்த தலைவர்கள் அரசிலிருந்து விலகும். காமராஜர் திட்டம். காமராஜர் முதல்வர் பதவியிலிருந்து விலகல். பக்தவத்சலம் முதல்வர். அண்ணாதுரை தலைமையில் இந்தி எதிர்ப்பு மாநாடு. தங்கக் கட்டுப்பாடு விதிகள் அறிவிப்பு. இந்திய தேசிய பறவையாக மயில். காஷ்மீரில் ஸதர் - ரியாஸத் என்பது கவர்னர் எனவும் முதலமைச்சர் என்பது பிரதமர் என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டன. ஸ்ரீநகரில் ஹஸ்ரத்பாலில் 300 வருடங்களாக பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த முகமது நபியின் புனித முடி தொலைந்து போனது. லிங்கன் சதுக்கத்தில் மார்ட்டின் லூதரின் புகழ் பெற்ற பேச்சு. கென்னடி படுகொலை. கென்யா சுதந்திரமடைகிறது. கென்யாட்டா அதன் அதிபராகிறார். வியட்நாமில் ராணுவப் புரட்சி. மலேசியா உதயம். நைஜீரியா குடியரசாகிறது.

**1964** மார்டின் லூதர் கிங்கிற்கு நோபல் பரிசு. கென்யா குடியரசாகிறது. மாலவி. ஜாம்பியா, டான்சானியா மால்டா முதலிய ஆப்ரிக்க காலனி நாடுகள் சுதந்திரமடைந்தன. நேரு தனது 74ம் வயதில் மரணம். சைப்ரஸில் உள்நாட்டு போர். ஐ.நா. சபை தலையீடு. புனித முடி மீட்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாக பிளவுபட்டது. மார்க்ஸிட் கட்சி உதயம். நயாபைசா பைசாவாக பெயர் மாற்றம் அடைந்தது. லால்பகதூர் சாஸ்திரி தலைமையில் மந்திரி சபை. நெல்சன் மண்டேலா சிறையில் அடைக்கப்பட்டார்.

**1965** திருச்சியில் ராஜாஜி கலந்துகொண்ட இந்தி எதிர்ப்பு மாநாடு. சப்-இன்ஸ்பெக்டர்கள் காவலர்கள் உயிரோடு கொளுத்தப்பட்டனர். தமிழகம் முழுவதும் வன்முறை. இராணுவம் வருகை. மதுரையில் புதிய பல்கலை கழகம். கல்லூரிகளில் முதல் பயிற்று மொழி தமிழ் ஆகிறது. சேலத்திலிருந்து தருமபுரி மாவட்டம் தனியே பிரிந்தது. ஆட்சி மொழியாக ஹிந்தி. சீன பாகிஸ்தான் ஒப்பந்தப்படி 2000 சதுர மைல் இந்திய நிலப்பரப்பை பாகிஸ்தான் சீனாவுக்கு கைமாற்றியது. இந்தியாவின் சில பகுதிகளை பாகிஸ்தான் ஆக்ரமித்தது. பாகிஸ்தான் போர் துவக்கம். ஐ.நா. சபை ஆலோசனையின் பேரில் போர் நிறுத்தம். டெல்லியில் தினசரி தொலைகாட்சி ஒளிபரப்புத் தொடங்கியது. அமெரிக்கா வியட்நாம் யுத்தத்தில் இறங்குகிறது. இந்தோனேஷியாவில் கம்யூனிஸ்ட்களுக்கு எதிரான களையெடுப்பில் நாலு லட்சம் பேர் கொல்லப்பட்டனர். ஹோலோகிராபி காபர் என்பவரால் கண்டுபிடிக்கப்படுகிறது. டி.எஸ். எலியட் மரணம். சர்ச்சில் மரணம். பிலிப்பைன்ஸில்


படிப்பகம்

www.padippakam.com



மார்கோஸ் அதிபராகிறார். வியட்நாம் யுத்தத்தை எதிர்த்து அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் ஆர்ப்பாட்டங்கள்.

**1966** லால் பகதூர் சாஸ்திரி மரணம். இந்திரா காந்தி பிரதமராகிறார். பிரான்ஸ் நேட்டோவிலிருந்து விலகுவதாக அறிவிப்பு. தென்னாப்பிரிக்காவின் பிரதமர் ஒரு வெள்ளையனால் கொல்லப்படுகிறார். இஸ்ரேல் பி.எல்.ஓவுக்கு எதிரான தாக்குதல்களை தொடர்கிறது. மிஹிர் சிங் எனும் இந்தியர் பாக் ஜலசந்தியை முதன் முதலாக நீந்திக் கடக்கிறார். ரூபாயின் மதிப்பு 36.5 சதவீதமாக குறைக்கப்பட்டது. ஆவடியில் டாங்க் தொழிற்சாலை துவக்கம். பஞ்சாப், ஹரியானா, பஞ்சாப் என இரு மாநிலங்களாக பிரிக்கப்பட்டது. பிரிட்டனில் தொழிலாளர் கட்சி வெற்றி. ஸ்பானிய கடற்கரையில் ஹைட்ரஜன் குண்டு அமெரிக்காவால் தவறுதலாக போடப்படுகிறது. சீனாவில் மாவோவின் கலாச்சார புரட்சி தொடக்கம்.


கென்னடி


இந்திரா காந்தி

**1967** பொதுத்தேர்தலில் தி.மு.க. கூட்டணி வெற்றி. அண்ணா தமிழக முதல்வராக பொறுப்பேற்பு. சுயமரியாதைத் திருமணச் செல்லுபடிச் சட்டம். கோவா, டையு, டாமன் மக்கள் இந்தியாவுடன் இணைய சம்மதிக்கிறார்கள். ராம் மனோகர் லோகியா இறப்பு. மார்ட்டின் லூதர் கிங் வியட்நாமில் அமெரிக்கத் தலையீட்டை கடுமையாக கண்டிக்கிறார். அமெரிக்க மக்களும் அமெரிக்காவின் போக்கைக் கண்டிக்கின்றனர். அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே ஆறு நாள் போர். சீனா அணுகுண்டு சோதனை. காபிரியேல் மார்க்யூசின் ஒன் ஹண்ரட் இயர்ஸ் ஆப் சாலிட்டிட்யூட் நூல் வெளிவருகிறது. புரட்சியாளர் சேகுவேரா பொலிவியாவில் கொல்லப்படுகிறார். உலகின் முதல் இதய மாற்று சிகிச்சை. சமாச்சார் பாரதி செய்தி நிறுவனம் துவக்கம்.


மார்ட்டின் லூதர் கிங்


சே குவேரா

**1968** அலாஸ்காவில் பெட்ரோலிய எண்ணெய் வளங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. வியட்நாமில் டெட் பயங்கரம், மைலாய் படுகொலைகள் போன்ற கொடுமையான சம்பவங்கள் தொடர்கின்றன. ஏராளமான ராணுவ வீரர்கள் கொல்லப்படுகின்றனர். மார்ட்டின் லூதர் கிங் சுட்டுக் கொல்லப்படுகிறார். இந்தியாவில் மன்னர் மான்யம் ஒழிப்பு. தமிழகத்தில் தமிழும் ஆங்கிலமும் மட்டுமான இருமொழித் திட்டம் அமல். இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடந்தது. கலப்பு மணத் தம்பதிகளுக்கு தங்கப்பதக்கம். பிற்பட்டோர் நலக்குழு நியமனம். விதவை மறுமணத் திட்டம். அமெரிக்காவில் நிக்சன் அதிபராகிறார். அமெரிக்க மக்களவைக்கு முதன் முறையாக ஒரு கறுப்பின பெண் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பாரிசில் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் கிளர்ச்சி.


அண்ணாதுரை


நிலவில் மனிதன்

**1969** தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம். அண்ணா மறைவு. கருணாநிதி தமிழக முதல்வர். அனைவருக்கும் இலவசக் கல்வி. தலைமை அலுவலகங்கள் அனைத்திலும் தமிழிலேயே கடிதப் போக்குவரத்து ஆணை. பிற்பட்டோர் நலத்துறை உருவாக்கம். ஆந்திராவில் தெலுங்கானா போராட்டம். பதினான்கு வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. குடியரசுத் தலைவர் தேர்தலில் வி.வி.கிரி வெற்றி பெற்றார். காங்கிரஸ் கட்சி இந்திரா காந்தியை வெளியேற்றியது. காங்கிரஸ் இரண்டாகப் பிளந்தது. நிலவில் மனிதனின் கால் பதிந்தது. நீல் ஆர்ம்ஸ்ட்ராங் நிலவில் நடந்தார். பி.எல். ஓவின் தலைவராக யாசர் அராபத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கோல்டா மேயர் இஸ்ரேலின் பிரதமரானார். ஹோசிமினின் மரணம்.


படிப்பகம்

www.padippakam.com

# 1970-1979

**1970** லிபியாவில் முகமது கடாபி பதவி யேற்கிறார். சமாதான திட்டங்கள் அறிவிக்கப் பட்டாலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர் கின்றன. எகிப்திய அதிபர் நாசர் மறைவு. அன் வர் சதாத் அதிபராக தேர்வு. சிலியின் அதிப ராக அலண்டே பதவி ஏற்கிறார். டாக்டர் சி.வி. ராமன் மரணம். ஓ.பி. ராமசாமி மறைவு. தமிழ் நாடு பாட நூல் நிறுவனம் துவக்கம். அஸ்வான் அணை கட்டி முடிக்கப்பட்டது. வட அயர்லாந் தில் கலவரங்கள். பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் மரணம்.

**1971** சட்டசபை கலைப்பு. தேர்தலில் தி.முக. வெற்றி. கருணாநிதி முதல்வர். மைய மாநில உறவு குறித்த ராஜமன்னார் குழு அறிக்கை. பாகிஸ்தான் இந்தியா போர். பாகிஸ் தானின் பகுதியான கிழக்கு வங்காளம் இந்தியா வின் உதவியால் வங்காள தேசம் எனும் சுதந் திர நாடாக மாறியது. உகாண்டாவில் இடி அமீன் ஆட்சியை கைப்பற்றுகிறார். காங்கோ தனது பெயரை ஜாரே என மாற்றிக் கொண்டது. பங்களாதேஷ் போரைத் தொடர்ந்து லட்சக்க ணக்கான அகதிகள் இந்தியாவிற்குள் வந்தனர்.


முஜிபூர் ரகுமான்

**1972** அமெரிக்க விமானப் படைகள் ஹனாயைத் தாக்கின. சீனாவில் நிக்சனும் மாவோவும் சூ என் லாயும் சந்தித்துப் பேசி இரு நாடுகளுக்கிடையே இருக்கும் பகை மையை முடிவுக்குக் கொண்டு வர முயல்கிறார் கள். அமெரிக்காவில் வாட்டர் கேட் விவகாரம் அம்பலம். இந்திய தபால் துறையில் பின்கோட் முறை அமலுக்கு வருகிறது. பம்பாயில் தொலை காட்சி நிலையம் திறக்கப்பட்டது. சென்னையில் எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.க. எனும் புதிய கட் சியை துவக்குகிறார். ராஜாஜி மரணம். காயிதே மில்லத் இஸ்மாயில் மரணம். எம்.ஜி.ஆருக்கு பாரத் விருது. இந்திய இலங்கை ஒப்பந்தப்படி கச்சத்தீவு இழப்பு. முஜிபூர் ரஹ்மான் வங்காள தேசத்தின் பிரதமராகிறார்.


ஜெயப்பிரகாஷ் நாராயணன்


மொரார்ஜி தேசாய்

**1973** ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைமையில் மாணவர் இயக்கம் வலுவடைகிறது. பெரியார் மறைவு. தமிழகத் தில் பெண் காவலர்கள் முதன் முறையாக அறி முகம். இந்தியாவின் மிக உயர்ந்த 45 மாடி கட் டிடமான ஒபராய் ஹோட்டல் பம்பாயில் திறக் கப்பட்டது. பிரபல பாடல் ஆசிரியர் பாபநாசம் சிவன் மரணம். மைசூர் மாகாணத்தின் பெயர் கர்நாடகம் எனவும் லேக்கதீவ் மினிக்காய் என் பவைகளின் பெயர்கள் லட்சத்தீவு எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டன. பாண்டிச்சேரி யில் அரவிந்தர் ஆஸ்ரமத்தின் 'அம்மா' மர ணம். பாப்லோ பிகாஸோ மரணம். அரபு - இஸ் ரேல் நாடுகளுக்கிடையே கடுமையான போர். வாட்டர் கேட் விவகாரம் விஸ்வ ரூபம் எடுக்கி றது. சிகாகோவில் 110 மாடிகள் கொண்ட உல கின் அதி உயரமான சியர்ஸ் கோபுரம் கட்டப்ப டுகிறது. வியட்நாம் அமைதி ஒப்பந்தம். பெட் ரோல் விலை எழுபது சதவீதம் உயர்வு. சிலி யில் அதிபர் அலண்டே கொலை.


கருணாநிதி


எம்.ஜி.ஆர்.

**1974** வாட்டர் கேட் ஊழலைத் தொடர்ந்து நிக்சன் பதவி விலகல். பங்களா தேஷ் பஞ்சத்தில் பல்லாயிரக்கணக்கானோர் மரணம். பெட்ரோல் எண்ணெய் விலையேற்றத் தால் வளரும் நாடுகளில் பொருளாதார பாதிப்பு

படிப்பகம்

www.padippakam.com


கள். இந்தியா போரானில் அணு ஆயுத சோதனையை வெற்றிகரமாக நடத்துகின்றது. ஊழல் காரணமாக ஜப்பானிய பிரதமரான காக்குயி தனகா பதவி விலகல். தமிழகத்தில் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம். ரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தம். வி.கே. கிருஷ்ண மேனன் மரணம். அரசியல் கட்சிகளுக்கு கம்பெனிகள் நிதியுதவி அளிப்பதற்கு தடை. எழுத்தாளர் சோல்செனிட்ஸின் ரஷ்யாவிலிருந்து வெளியேற்றம்.

**1975** சூயஸ் கால்வாய் மறுபடி திறப்பு. எத்தியோப்பியா பஞ்சம். பங்களாதேஷில் பட்டினிச்சாவுகள். சென்னைத் தொலைகாட்சி நிலையம் திறப்பு. அவசர நிலை பிரகடனம். காமராஜர் மரணம். சிக்கிம் இந்தியாவின் மற்றொரு மாநிலமாக இணைந்தது. முதல் இந்திய செயற்கைக் கோளான ஆர்ய பட்டா விண்ணில் செலுத்தப்பட்டது. பத்திரிகைகள் மீது தணிக்கை முறை அமல். 20 அம்ச திட்டம் அறிவிப்பு. ஆர்.எஸ்.எஸ்., ஜமா அத் இஸ்லாமி உட்பட 27 இயக்கங்களுக்கு தடை விதிக்கப்பட்டது. சௌதி அரேபிய மன்னர் பெய்சல் கொல்லப்பட்டார். தென் வியட்நாம் அதிபர் நீயு ராஜினாமா. நாட்டை விட்டு வெளியேற்றம். இதைத் தொடர்ந்து வியட்நாம் போர் முடிவு. இதில் சுமார் 56,000 அமெரிக்க வீரர்களும் பதிமூன்று லட்சம் வியட்நாமியர்களும் இறந்தனர். ஸ்பெயின் சர்வாதிகாரி பிராங்கோ மரணம்.

**1976** தி.மு.க. ஆட்சி கலைப்பு. சூ.என்.லாய் மரணம். அகதா கிரிஸ்டி மரணம். கம்போடியாவில் கேமர் ரோக் கட்சித் தலைவர் போல் பாட். பிரதமராகிறார். பி.எல்.ஓ. கடத்திய விமானம் இஸ்ரேலால் அதிரடி மீட்பு. மாசேதுங் மறைவு. இந்திய தொலைகாட்சியில் விளம்பர நிகழ்ச்சிகள் ஆரம்பம். வானொலியிலிருந்து தொலைகாட்சி தனியாக பிரிந்தது. தூர்தர்ஷன் உருவானது.

**1977** மொரார்ஜியை தலைவராக கொண்டு ஜனதா கட்சி உருவானது. நெருக்கடி நிலை ரத்து. தேர்தலில் ஜனதா கட்சி வெற்றி. நெருக்கடி நிலை அத்துமீறல்களை விசாரிக்க ஷா கமிஷன் அமைக்கப்பட்டது. இந்திரா காந்தி கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். எம்.ஜி. ராமச்சந்திரன் தமிழகத்தின் 16வது முதல்வராகிறார். அனைத்திந்திய அண்ணா தி.மு.க. எனக் கட்சிப் பெயர் மாற்றம். சீனாவில் டெங் பதவிக்கு வருகிறார். பாகிஸ்தானில் ராணுவ புரட்சி ஏற்பட்டு தளபதி ஜியா பதவிக்கு வருகிறார். ஏற்கெனவே பதவியில் இருந்து வந்த பூட்டோ கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார். ஜிம்மி கார்ட்டர் அமெரிக்க அதிபர். சுமார் எட்டு லட்சம் பேர் கம்யுனிஸ்ட் வியட்நாமிலிருந்து அகதிகளாக படகுகளில் வெளியேறி சென்றனர்.

**1978** ஈரானில் மன்னர் ஷாவுக்கு எதிராக கலகங்கள் போராட்டங்கள். ஆப்கானிஸ்தானில் சோவியத் ஆதரவாளர்கள் அதிபர் தாவுதை துரத்திவிட்டு அந்த இடத்தில் மூர் முகமது



அமெரிக்காவில்வியட்நாம் போர் எதிர்ப்பு

துரத்திவிட்டு அந்த இடத்தில் மூர் முகமது தராக்கியை அமர்த்துகின்றனர். ஆறாவது போப் பால் இறந்ததை அடுத்து ஜான் பால் I புதிய போப் ஆகிறார். பாகிஸ்தானில் ஜியா வுல் ஹக் புதிய அதிபராக வருகிறார். கேம்ப் டேவிட் உடன்படிக்கை கையழுத்தாகிறது. பதவியேற்ற 34 நாட்களில் ஜான் பால் ஐ மரணமடைகிறார். தொடர்ந்து முதன் முறையாக இத்தாலியர் அல்லாத போலந்தை சேர்ந்த ஜான் பால் ஐஐ பதவியேற்கிறார். ஜான் இர்விங்கின் தி வோர்ல்ட் அக் கார்டிங் டு கார்ப் வெளியாகிறது. தமிழகத்தில் 10 + 2 + 3 எனும் கல்வி முறை அறிமுகம். இந்திரா காந்தி சிக்மகளூர் தேர்தலில் வெற்றி. ஆனால் சபையில் அனுமதிக்கப்படவில்லை. மானுடவியலாளர் மார்கரெட் மீட் மரணம். பிஜோர்ன் போர்க் மூன்றாவது முறையாக விம்பிள்டன் கோப்பையை தட்டிச் செல்கிறார்.



வியட்நாம் குண்டுவீச்சுக்குத் தப்பி மக்கள் ஓட்டம்

**1979** ஜனதா அரசுக்கெதிராக காங்கிரஸின் நம்பிக்கையில்லாத் தீர்மானம். மொரார்ஜி பிரதமர் பதவியை ராஜினாமா செய்கிறார். சரண்சிங் புதிய பிரதமர். இந்தியாவின் செயற்கைக்கோள் எஸ்.எல்.வி. 3 கடலில் மூழ்கியது. ஜெயப்பிரகாஷ் நாராயணன் மரணம். லோக்சபை கலைக்கப்பட்டது. ரொடிஷியா ஜிம்பா பாவே என பெயர் மாற்றம். பூட்டோ தூக்கிலிடப்பட்டார். இடி அமீன் உகாண்டாவிலிருந்து தப்பி ஓட்டம். மவுண்ட்பேட்டன் பிரபு ஐரிஷ் குடியரசு ராணுவத்தின் வெடிகுண்டினால் கொல்லப்பட்டார். ரஷ்ய ராணுவம் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமிப்பு செய்தது. ஈரானில் கலவரங்கள். ஷா அமெரிக்கா செல்கிறார். மதத் தலைவர் கோமேனி அதிபராகிறார்.


படிப்பகம்

www.padippakam.com


பிரபாகரன்


ராஜீவ் காந்தி


சார்லஸ் – டயானா திருமணக் காட்சி

**1980** எல் சால்வடாரில் மனித உரிமை வாதியான ஆர்ச்பிஷப் ஆஸ்கர் ரொமிரோ கொலை செய்யப்படுகிறார். ஜிம்பாப்வேயில் ராபர்ட் முகாபே தலைமையிலான அரசு அமைகிறது. யுகோஸ்லாவிய அதிபர் டிட்டோ மரணம். உள்நாட்டு கலவரங்கள் தொடங்குகின்றன. போலந்தில் தொழிலாளர் போராட்டம் பரவுகிறது. லீச் வாலேசா தலைமை தாங்குகிறார். பாப் பாடகர் ஜான் லென்னன் கொல்லப்படுகிறார். அதிமுக அரசு கலைப்பு. தி.மு.க. இ. காங்கிரஸ் கூட்டணி வெற்றி. சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி. எம்.ஜி.ஆர். முதல்வர். மத்தியில் இ. காங்கிரஸ் ஆட்சி இந்திரா காந்தி முதல்வர். பாரதிய ஜனதா கட்சி உதயம். விமான விபத்தில் சஞ்சய் காந்தி மரணம். வி.வி. கிரி மரணம். சென்னை மாநில முதல் தாழ்த்தப்பட்ட உச்சநீதிமன்ற நீதிபதியாக வரதராசன் நியமனம். ஹென்றி மில்லர் மரணம். ஆப்கானிஸ்தானில் சோவியத் ராணுவம். ஈரானில் அமெரிக்க தூதரகம் கைப்பற்றப்பட்டது. 53 அமெரிக்கர்கள் பிணைக்கைதிகளாக்கப்படுகின்றனர். மர்மக் கதை இயக்குநர் ஹிட்ச்காக் மரணம்.

**1981** ஷேக் அப்துல்லா தனது மகன் பருக்கை அரசியல் வாரிசாக அறிவித்தார். மதுரையில் உலகத் தமிழ் மாநாடு. சி.பா. ஆதித்தனார் மறைவு. தமிழ் பல்கலைக்கழகம் அமைப்பு. இலங்கையில் தமிழர்கள் தாக்கப்பட்டதை கண்டித்து தொடர் மறியல். கண்ணதாசன் மரணம். எய்ட்ஸ் நோய் இருப்பது அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்படுகிறது. ஈரான் அமெரிக்கப் பணயக் கைதிகளை விடுவிக்கிறது. போப் ஜான் பால் II கொலை முயற்சியில் தப்பிக்கிறார். எகிப்தில் அன்வர் சதாத் கொல்லப்படுகிறார். முபாரக் பதவி ஏற்கிறார். ஈரானில் தலைமை நீதிபதி, அதிபர் பிரதமர் ஆகியோர் கொல்லப்படுகின்றனர். விண்வெளி கலம் கொலம்பியா தனது பயணத்தை தொடங்கியது. யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்டது. பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸ்–டயானா திருமணம்.

**1982** பாக்லாந்து போர். பிரஷ்னேவ் மரணம். அவரையடுத்து 'யூரி' ஆன்ட்ரபோவ் பதவி ஏற்கிறார். தமிழ்நாட்டில் முதலமைச்சரின் சத்துணவு சட்டம். சிவாஜி நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக நியமனம். காவிரி நீர் பிரச்சினைக்காக அனைத்து கட்சிகளின் பந்த். 114 வருடங்கள் வெளிவந்த தி மெயில் நாளிதழ் நின்று போனது. முதல் இந்திய விஞ்ஞானிகள் குழு அண்டார்டிகா பயணம். குடியரசுத் தலைவராக ஜெயில் சிங். வினோபாவே மரணம். தில்லியில் ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள். ஈரான் – ஈராக் போர். ஜெர்மன் இயக்குநர் பாஸ் பைண்டர் மரணம். இந்தியாவில் வண்ணத் தொலைக்காட்சி அறிமுகம்.

**1983** கங்கை நீர் பகிர்வு தொடர்பாக இந்தியா பங்களாதேஷ் ஒப்பந்தம். ஆந்திராவில் என்.டி.ஆர். தலைமையில் தெலுங்கு தேசம் கட்சி ஆட்சிக்கு வந்தது. ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதல் முறையாக உலகக் கோப்பையை வென்றது. ஜம்மு காஷ்மீர் தேர்தலில் தேசிய மாநாட்டு கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை. பருக் அப்துல்லா முதல்வர். கல்பாக்கம் அணு மின் நிலையம் துவக்கப்பட்டது. ரீகன் ஸ்டார் வார்ஸ் திட்டத்தை அமலாக்க முனைகிறார். அமெரிக்கா க்ரெனடாவை ஊடுருவியது. பெய்ரூட்டில் அமெரிக்க தூதரகம் தாக்கப்பட்டது. ஆர்தர் கோஸ்ட்லர் மரணம். இலங்கையில் இனக் கலவரம்.

**1984** எத்தியோப்பியாவில் பஞ்சம். யூரி ஆன்ட்ரபோவ் மரணம். சீக்கிய தீவிரவாதிகள் பொற்கோவிலை முற்றுகையிடுகின்றனர். ஆபரேஷன் ப்ளூஸ்டார் மூலம் ராணுவம் அவர்களை வெளியேற்றுகிறது. இதில் சுமார் 1,200 தீவிரவாதிகள் கொல்லப்படுகின்றனர். ஹாங்காங் நகரை சீனாவிடம் 1997ல் திரும்பி ஒப்படைக்கும் ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. ஜெயலலிதா நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகிறார். சிவாஜிக்கு டாக்டர் பட்டம். எம்.ஜி.ஆருக்கு பக்கவாத நோய் மற்றும் சிறுநீரக பாதிப்பு. சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக வெற்றி. ராகேஷ் சர்மா விண்வெளிப் பயணம். பிந்தரன் வாலே கொல்லப்படுகிறார். பிரதமர் இந்திரா காந்தி தனது பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்படுகிறார். தில்லியில் கலவரம். சீக்கியர்கள் மீது வன்முறை. போபால் யூனியன் கார்பைடு விஷ வாயு கசிவால் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் மரணம். லட்சக்கணக்கானோர் பாதிப்பு. ராஜீவ் காந்தி காங்கிரஸ் தலைவராகிறார்.

**1985** கணவனால் கைவிடப்படும் முஸ்லீம் பெண்களுக்கு உதவித்தொகை வழங்க வேண்டும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு. ஏர் இந்தியாவின் கனிஷ்கா விமான விபத்தில் 329 பேர் பலி. கீத் சேத்தி உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன். பஞ்சாப் உடன்பாட்டில் ராஜீவ் காந்தியும் லோங்கோவாலும் கையெழுத்திட்டனர். லோங்கோவால் சுட்டுக் கொலை. காங்கிரஸின் நூறாம் ஆண்டு விழா பம்பாயில் கொண்டாடப்பட்டது. எம்.ஜி.ஆர். தமிழக முதல்வர். பசும்பொன்


படிப்பகம்

www.padippakam.com



தேவர் திருமகன், காமராஜர் மாவட்டங்கள் தோற்றம். இலங்கைத் தமிழர் நலனுக்காக எம்.ஜி.ஆர். ஒருநாள் உண்ணாவிரதம். ஓஸோன் ஓட்டை பெரிதாகி வருவதாக விஞ்ஞானிகள் கணிப்பு. கோர்பசேவ் பதவிக்கு வருகிறார். காண்ட்ராக்களுக்கு அமெரிக்கா ஆயுதங்கள் கொடுப்பதை அமெரிக்க செனட் தடை செய்தது. மெக்ஸிகோ பூகம்பத்தில் 5000 பேர் மரணம். கொலம்பியா எரிமலை பொங்கியதில் 25,000 பேர் மரணம். இலங்கையில் இனக் கலவரம்.

**1986** இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் உடன்பாடு. மதுரையில் டெசோ மாநாடு. காவிரி நீர் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை. மேலவை ஒழிப்பு. அரசியல் சட்ட நகல் எரிப்புக்காக கருணாநிதி எம்.எல்.ஏ. பதவி இழப்பு. இந்தியாவின் முதல் பேஜிங் சர்வீஸ் துவக்கம். பம்பாயில் முதல் எயிட்ஸ் பலி. சார்க் உச்சி மாநாடு பெங்களூரில் துவங்கியது. அமெரிக்க விண்வெளிக் கலமான சேலஞ்சர் கிளம்பும் போது வெடித்துச் சிதறியது. கடாபியின் தலைமையகத்தை அமெரிக்க விமானங்கள் தாக்கின. செர்னோபில் அணு உலை விபத்து. பிலிப்பைன்ஸில் கோரி அகினோ அதிபராகிறார். செர்னோபில் அணு ஆலை விபத்து. பிரபல சிற்பியான ஹென்றி மூர் மரணம். பிரான்ஸைச் சேர்ந்த பெண்ணியல் வாதியான சிமோன் தி போவோ மரணம்.

**1987** தாட்சர் மூன்றாவது முறையாக இங்கிலாந்தின் பிரதமராகிறார். மார்டினா நவரத்திலோவா ஆறாவது முறையாக தொடர்ந்து விம்பிள்டன் கோப்பையை பெறுகிறார். ஈரான்கேட் விசாரணை முடிவு. ரீகனும் கோர்பச்சேவும் ஆயுத உடன்படிக்கையில் கையெழுத்திடுகின்றனர். ஈரான் -ஈராக் போர்.

பக்தவத்சலம் மறைவு. ஆனந்தவிகடன் ஆசிரியருக்கு சட்டமன்ற அவமதிப்புக் குற்றத்திற்காக தமிழக சட்டப் பேரவை மூன்று மாத கால சிறைத் தண்டனை விதித்தது. பின்னர் இரண்டரை நாளில் அவர் விடுதலை செய்யப்பட்டார். கல்லூரி ஆசிரியர் போராட்டம். வன்னியர் சங்க சாலை மறியல். ராஜீவ் காந்தி – ஜெயவர்த்தனா இலங்கை உடன்படிக்கை. விடுதலைப் புலிகள் அமைப்பு ஒப்பந்தத்தை நிராகரித்தது. இந்திய அமைதிப் படை இலங்கைக்குச் சென்றது. எம்.ஜி.ஆர். மரணம். இந்தியாவின் 24வது மாநிலமாக அருணாச்சலப் பிரதேசம். சுனில் கவாஸ்கர் 10,000 ரன்கள் எடுத்து சாதனை. விஸ்வநாதன் ஆனந்த் உலக யூனியன் செஸ் சாம்பியன். ரூப்கன்வர் உடன்கட்டை ஏறிய சம்பவம். எல்லை காந்திக்கு பாரத் ரத்னா.

**1988** ஜனதா தளம் கட்சி உருவானது. ஏழு அரசியல் கட்சிகள் இணைந்த தேசிய முன்னணி உதயம். வாக்களிக்கும் வயது 21லிருந்து 18 ஆக குறைப்பு. ஜானகி ராமச்சந்திரன் தமிழக முதல்வர். பின் சட்டப் பேரவை கலைப்பு. ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் துருப்புகள் வாபஸ். ஈரான் -ஈராக் போர் நிறுத்தம். பாகிஸ்தான் அதிபர் ஜியா விமான விபத்தில் மரணம். பெனாசிர் பூட்டோ பாகிஸ்தான் தேர்தலில் வெற்றி. யூகோஸ்லோவிய அரசு விலகல். பிரிட்டனில் லாக்கர்பையில் நடந்த விமான விபத்தில் 270 பேர் மரணம்.


வி.பி. சிங்


பெனாசிர்


ஜான் லெனான்


ஹிட்ச்காக்

**1989** சீனாவில் தியானன்மென் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டம். ராணுவம் சுட்டதில் சுமார் 2000 பேர் மரணம். பனாமா அதிபர் நொரிகா அமெரிக் படைகளால் பதவியிலிருந்து துரத்தியடிக்கப்படுகிறார். கிழக்கு ஐரோப்பாவில் பல நாடுகள் சோஷலிசத்தைக் கைவிட்டன. ரஷ்யாவில் பெரிஸ்த்ரோயிக்கா அமல். ஜார்ஜ் புஷ் அமெரிக்க அதிபராகிறார். சால்மன் ருஷ்டி எழுதிய சாத்தானின் கவிதைகள் என்ற நூலை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள். கோமேனி அவருக்கு மரண தண்டனை விதிக்கிறார். பிரேம் நசீர் தனது 59 வயதில் மரணம். உச்சநீதி மன்றத்தின் முதல் பெண் நீதிபதியாக பாத்திமா பீவி நியமனம். நாடாளுமன்ற தேர்தல். வி.பி. சிங் பிரதமர். தமிழகத்தில் கருணாநிதி முதல்வர். பெண்களுக்குச் சொத்துரிமை சட்டம். சட்டசபைக்குள் ஜெயலலிதாமீது தாக்குதல்.

படிப்பகம்

# 1990-1995

www.padippakam.com


மண்டேலா


சிவாஜி கணேசன்

**1990** இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து திரும்பியது. மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்த வி.பி. சிங் முடிவு. ஆட்சி கவிழ்ந்தது. சந்திரசேகர் அடுத்த பிரதமரானார். 71 வயதான நெல்சன் மாண்டேலா 27 வருட சிறைவாசத்திற்குப் பின் விடுதலை. குவெய்த்மீது ஈராக் ஆக்ரமிப்பு. இரு ஜெர்மனிகளும் ஒன்றிணைந்தன. சோவியத் யூனியனில் பொருளாதார சுதந்திரம். போலந்தின் அதிபராக வாலேசா பதவி ஏற்பு. சென்னை விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தில் கலவரம். துப்பாக்கிச்சூடு. பாவேந்தர் பாரதிதாசன் பாடல்கள் நாட்டுடமை.

**1991** ஸ்ரீபெரும்புதூரில் தேர்தல் பிரச்சாரத்தின்போது ராஜீவ் காந்தி படுகொலை. அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சு படைகளைச் சேர்ந்த சுமார் மூன்று லட்சம் துருப்புக்கள் ஈராக்கை எதிர்த்து போரில் இறங்கின. குவெய்த் விடுவிக்கப்பட்டது. அமெரிக்காவில் ரோட்னி கிங் விவகாரம். பங்களாதேஷ் சூறாவளிக்கு ஒரு லட்சத்து முப்பத்தெட்டாயிரம் பேர் பலி - யுகோஸ்லோவியா தனித்தனி நாடுகளாக சிதறியது. சோவியத் ரஷ்யா உடைந்தது. தி.மு.க. ஆட்சி கலைப்பு. சந்திரசேகர் ராஜினாமா. இந்திய மக்கள் தொகை 84.4 கோடி. லோகச் சபா தேர்தல் – பி.வி. நரசிம்மராவ் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி. வட இந்தியாவில் நில நடுக்கத்தால் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர் மரணம். தமிழகத்தில் ஜெயலலிதா முதல்வர். நாகை காயிதே மில்லத் மாவட்டம் உதயம். பிரிட்டனில் ஜான் மேஜர் பதவி ஏற்பு.

**1992** கூடங்குளம் அணுமின் நிலைய திட்டம் ரத்து. கும்பகோண மகாமக நெரிசலில் சுமார் 50 பேர் மரணம். கோவை மாலை முரசு ஆசிரியர் சுந்தர், கே.பி. சுனில், முரசொலி ஆசிரியர் செல்வம் ஆகியோரை கண்டனம் செய்ய சட்டசபை உரிமைக்குழு பரிந்துரை. சிதம்பரம் காவல் நிலையத்தில் பத்மினி பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்படுகிறார். சென்னை மிலாது நபி ஊர்வலத்தில் கலவரம். பஞ்சாப் முதல்வராக பியாந்சிங். இயக்குநர் சத்யஜித்ரேக்கு பாரத ரத்னா, சிறப்பு ஆஸ்கர் விருது. சத்யஜித்ரே மரணம். பிருதிவி ஏவுகணை பரிசோதனை வெற்றி. விடுதலை புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடை. பங்கு மார்கெட் ஊழல். ஹர்ஷத் மேத்தா கைது. ஸ்டார் டி.வி.யின் இந்திய ஒளிபரப்பு. அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. உ.பி. அரசு கலைக்கப்பட்டது. உலகின் ஜனத்தொகை 540 கோடி. போஸ்னியாவில் உள்நாட்டுப் போர்.

**1993** பில் கிளிண்டன் அமெரிக்க அதிபர். பிரேமதாசா படுகொலை. அராபத் - ராபின் சமாதான உடன்படிக்கை. காட் உடன்பாட்டை தொடர்ந்து உலக வர்த்தக அமைப்பு துவக்கம். பிரிட்டனுக்கும் ஐரிஷ் குடியரசுக்கும் இடையே சமாதான ஒப்பந்தம். படுகொலை. அராபத் - ராபின் சமாதான உடன்படிக்கை. காட் உடன்பாட்டை தொடர்ந்து உலக வர்த்தக அமைப்பு துவக்கம். பிரிட்டனுக்கும் ஐரிஷ் குடியரசுக்கும் இடையே சமாதான ஒப்பந்தம். பம்பாய் குண்டு வெடிப்பு. 200க்கும் அதிகமானோர் மரணம். சஞ்சய் தத் கைது. ஏ.கே. ராமானுஜன் மரணம். கர்நாடக - மஹாராஷ்டிர எல்லையில் ஏற்பட்ட பூகம்பத்தில் 50,000 பேர் மரணம். செயற்கை கோள் மூலமாக பிராந்திய ஒளிபரப்புத் துவக்கம். ஹஸ்ரத்பால் சம்பவம். இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி பத்திரிகை நிறுத்தப்பட்டது. ஜே.ஆர்.டி. டாட்டா மரணம். தி.மு.க.விலிருந்து வை.கோ. நீக்கம். உலக வர்த்தக மையத்தில் குண்டு வெடிப்பு.

**1994** லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் பூமியதிர்ச்சி. போஸ்னியா போர் தொடர்கிறது. ருவாண்டா மற்றும் புருண்டி அதிபர்கள் விமான விபத்தில் மரணம். தொடர்ந்து ருவாண்டாவில் இனக் கலவரம். நெல்சன் மாண்டேலா தென்னாப்பிரிக்க அதிபரானார். ஹெய்தியில் அமெரிக்க ராணுவம். ஓ.ஜே.சிம்சன் வழக்கு. மண்டல் கமிஷன் சிபாரிசுகள் அமலுக்கு வந்தன. டங்கல் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள். இலங்கையில் சந்திரிகா பதவி ஏற்பு. சுஷ்மிதா சென்னும் ஐஸ்வரியா ராயும் உலக அழகிகளாக தேர்வு. கி. ஆ. பெ. விசுவநாதம் மரணம். புலிகளுடன் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகள்.

**1995** பிரான்சில் 20,000 வருடங்களுக்கு முந்தைய குகை ஓவியங்கள் கண்டு பிடிப்பு. ஐ.நா சபையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு. கென்யாவில் போர். எட்டாவது உலகத் தமிழ் மாநாடு. மதுலிமாயி மரணம். மொரார்ஜி தேசாய் மரணம் சிவாஜி கணேசனுக்கு செவாலியே விருது வழங்கப்பட்டது. சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வு திட்டம். சமாதான பேச்சுவார்த்தை முறிந்தது. இலங்கை ராணுவம் முன்னேறிச் சென்று யாழ் நகரை கைப்பற்றியது. ஐந்து லட்சம் தமிழர்கள் அகதிகளானார்கள். என்ரான் மின் திட்டம் ரத்து. பஞ்சாப் முதல்வர் பியாந்சிங் படுகொலை. மா.பொ.சி.மரணம். முழு சூரிய கிரணம். இஸ்ரேலிய அதிபர் ராபின் படுகொலை. பர்மாவில் சூ கி விடுதலை. தடா சட்டம் நீக்கப்பட்டது. போஸ்னிய உடன்பாடு.

20-ம் நூற்றாண்டு இன்னும் முடியவில்லை. நான்காண்டுகள் எஞ்சியுள்ளன. இந்தத் தொகுப்பும் முழுமையானது என்று கூறமுடியாது. இன்னும் நான்கு தொகுப்புகள் வெளியிட விஷயம் உண்டு. இந்த நூற்றாண்டின் தமிழ் இலக்கியம், உலக இலக்கியம், விளையாட்டு, அறிவியல், மருத்துவம், சட்டங்கள், யுத்தங்கள், தலைவர்கள், தொழிலாளர்கள் என்று விதவிதமான தலைப்புகளில் தொகுக்கலாம். எமது தொகுப்பு பல தொகுப்புகளைத் தொடங்கி வைக்கும் என்று நம்புகிறோம்.

தொகுப்பு : சுரேஷ் பால்



படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com



The Bank
that transacts
business the
modern way.

PLATINUM
JUBILEE
1921 - 1996

*TMB - The Bank having
75 years of professional
Banking expertise
celebrates*

PLATINUM JUBILEE

*Dedicate fully
computerised operations
in our commitment
towards better service*



139 Branches all over the country.

(Authorised Dealers in Foreign Exchange).


படிப்பகம்